# TAMIL VARALARU

BY

BHASHA KAVISEKHARA MAHAVIDVAN

R. RAGHAVA AYYANGAR,

(SETHUSAMASTANA VIDVAN, RAMNAD)

RESEARCH LECTURER IN TAMIL

ANNAMALAI UNIVERSITY

WITH COURAGE AND FAITH

ANNAMALAI UNIVERSITY,

ANNAMALAI NAGAR

1952

Rs 4/-

Copy Right Reserved.]

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

First Impression 1941.
Second Impression 1952.

Printed at
THAPOVANAM PRESS
Tirupparaithurai.

# தமிழ் வரலாறு

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சியாளர்
இராமநாதபுரம் ஸம்ஸ்தான மஹா வித்வான்
பாஷா கவிசேகரர்

**ரா. இராகவையங்கார்**

எழுதியது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஸீனியர் தமிழ்ப்பண்டிதர்

**E. S.** வரதராஜய்யர், B. A. அவர்களால்

பார்வையிடப்பட்டது.

WITH COURAGE AND FAITH

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

அண்ணாமலைநகர்

1952

இரண்டாம் பதிப்பு.

திருப்பராய்த்துறை
தபோவனம் அச்சுக்கூடத்தில்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | தமிழென்னும் பெயர் | 4 |
| 3. | தமிழ்மொழியின் றனிநிலை | 13 |
| 4. | தமிழ்நாடு | 23 |
| 5. | கடல் கோள் | 28 |
| 6. | சங்கம் | 45 |
| 7. | தமிழர் அசுரராகாரென்பது | 61 |
| 8. | தமிழர் கந்தருவ வழக்கினர் என்பது | 70 |
| 9. | தமிழர் கொள்கைகள் | 85 |
| 10. | தாயக் கொள்கை | 133 |
| 11. | அகத்தியர் | 192 |
| 12. | அகத்தியச் சூத்திரங்கள் | 218 |
| 13. | மாபுராணம் | 224 |
| 14. | தலையாயஒத்து | 229 |
| 15. | தொல்காப்பியம் | 258 |
| 16. | தொல்காப்பியனார் சமயம் | 277 |
| 17. | தொல்காப்பியத்திற்கு முந்துநூலுண்மை | 284 |
| 18. | தொல்காப்பியங் கூறும் நூல் வகைமை | 297 |
| 19. | தொல்காப்பியர் காலத்து வேந்தர் | 325 |
| 20. | தொல்காப்பியப் பழைமை | 351 |
| 21. | அநுபந்தம் | 355 |

## இரண்டாம் பதிப்பின்
# முன்னுரை

இவ்வாராய்ச்சி நூல் மகாவித்வான் ரா. இராகவையங்கார் இப் பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவராகவும் நான் அவர்க்கு உதவி யாசிரியராகவும் பணியாற்றியபோது எழுதப்பட்டது. 21 பிரிவாகப் பகுக்கப்பட்டுள்ள இந்நூற்கண் தமிழ்மொழி, தமிழ்நாடு, தமிழ் மன்னர் இவற்றைப்பற்றிய பல அரிய செய்திகளும், கடல்கோள், முச்சங்கம் இவற்றைப் பற்றிய வரலாறுகளும் கூறப்பட்டுள்ளன. தமிழர் கந்தருவ வழக்கினர் என்பதும் நன்கு விளக்கப்பட்டுள்ளது. தமிழர் கொள்கைகள் என்ற பிரிவில் அவர்கள் வழிபட்ட கடவுளரைப் பற்றியும், அவர்கள் மேற்கொண்ட களவு கற்பொழுக்கங்களைப் பற்றியும், பல அரிய செய்திகள் காணலாம். பழந்தமிழரது தாயக்கொள்கையில், சங்க காலத்தில் முத்தமிழ் நாட்டிலும் வழங்கியது மக்கட்டாயமே என்பது ஆசிரியர் கொள்கை. இதனைப் பல அகச் சான்றுகள் காட்டி அப் பேரறிஞர் நிறுவியுள்ளார். அகத்தியர் வரலாறு நன்கு ஆராயப்பட்டுள்ளது. மற்றும் தலையாய ஓத்து என்ற பகுதியில் சில அரிய சங்கப் பாடல்கள் நன்கு விளக்கப்பட்டுள்ளன. தொல்காப்பியனார் சமயத்தைப் பற்றியும் அவர் காலத்து வேந்தரைப்பற்றியும் கூறப்பட்ட செய்திகள் அறிஞர் ஆராய்ந்து மகிழ்தற்குரியவை. இதன் முதற் பதிப்புப் பிரதிகள் செலவாகிவிட்டமையின், இப்பொழுது இது இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ளது. காய்தல் உவத்தல் அகற்றி ஆராய்ந்து வரையப்பற்ற இவ்வரலாற்று நூல் அறிஞர்கள் மேன்மேலும் தமிழர் பண்பாட்டைப்பற்றி ஆராய்தற்கு ஓர் சிறந்த அடிப்படையாகும் என்பது என் துணிவு. அறிஞர் கற்று மகிழ்வாராக.

**E. S. வரதராஜய்யர், பி. ஏ.**

## தற்சிறப்புப் பாயிரம்

### வாழ்த்து

வாழியநீ டண்ணு மலைப்பல் கலைக்கழகம்
வாழியவேந் தண்ணு மலைவள்ளல்—வாழியநன்
மீக்கோர் புகழ்சங்க மெய்ப்புலவர் வாழியவே
தக்கோர் பரவுந் தமிழ்.

### வணக்கமும் வருபொருளும்

வெள்ளைக் கமல விழுத்தெய்வ மெய்ந்நிலைவன்
னுள்ளத் திருள்சீத் தொளிர்தலால்—ஒள்ளியவின்
பாலேய்ந்த செந்தமிழின் பண்டைவர லாறுரைப்பல்
நூலேய்ந்த வாறே நுழைந்து.

---

# தமிழ் வரலாறு

## முன்னுரை

எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாற் படைக்கப்பெற்று எத்துணையோ பல்கோடியாகப் பரந்துள்ள உயிர்வகைகள் யாவும் தத்தமக்கு இயன்றவளவில் வாயின் ஒலி வேறுபாட்டால் உள்ளத்தெழுங் கருத்துக்களை ஒருவாறு புலப்படுத்த முயல்கின்றன; ஆயினும், மக்கட்டொகுதியிடைமட்டுமே இம்முயற்சி முழுதுஞ் சிறந்து பெரும்பயனை அளித்துவருவது யாவருங் கண்கூடாகத் தெளிந்ததொன்று. இவ்வரிய முயற்சித்திறம், ஒருவர்க்கொருவர் உள்ளக்கலப்பின் வழியால், மக்கட்குப் பொதுவாக அறிவைப் பெருக்குதற்குத் தக்க கருவியாய் நின்று மற்றெவ்வகையுயிரினும் எவ்விதத்துஞ் சீரியதாய் மக்களுயிர் மேம்பட்டு வாழும்படித் தனிச் சிறப்பையளிக்க வல்லதாகின்றது. எவ்வகைப் பிறவியினும் மக்கட் பிறவியே அரியதென்பதற்கும் இதுவே காரணமாகும். உலகத்தே தோன்றி வாழும் பிறவுயிர்களெல்லாம், தம் உள்ளக்கருத்தைப் புலப்படுத்தும் இவ்வொலி முயற்சியில் இயன்றவளவிற்றலைப்பட்டு, ஒருவாறு பயனெய்துகின்றனவென்பதும் நாம் அறிந்ததேயாம். அவை தத்தம் இனத்துக்கேற்றபடி இம்முயற்சியைப் பெருக்கியுஞ் சுருக்கியுங் கையாண்டு வருகின்றன. உயிர் வாழ்விற்குக் காற்று, ஒளி, உணவு, நீர் என்பவை யெத்துணை யின்றியமையாதனவோ, அத்துணை பசி, தாகம், இன்பம், துன்பம், காமம், கோபம் முதலிய உள்ளே நிகழும் நிகழ்ச்சிகளைப் புறத்தே யறிவிக்குமாற்றலும் இன்றியமையாதாகலின், எல்லா வுயிர்களிடத்தும் இம்முயற்சியுண்மை புலப்படுவது. உலகிற்றோன்றிய நாள்முதல் உள்ளக்கருத்தை வெளிப்படுக்கும் இம்முயற்சி நிகழ்வதையும், அஃது இனம்பற்றியும் வலிமைபற்றியும் வேறுவேறாய்ச் சுருங்கியும் பெருகியும் அவ்வவ்வுயிர்கட்குச் சிறுமையையும் பெருமையையும் அளிப்பதையும் அறிகின்றோம். இச்சீரிய முயற்சி முற்றப்பெற்ற வுயிர்ப்பொருள்களை உயர்நிலையினும், இம்முயற்சி குறைந்தளவும் இல்லாதனவு

மாகிய பொருள்களைத் தாழ்ந்த நிலையினும் வைத்துப் பாகுபடுத்து வழங்குதற் குரிய பெயர் வேறுபாடுகள் ஒரு மொழியில் உளவாயின், அவை அந்நாட்டாரின் பகுத்துணர்வின் மேம்பாட்டிற்குச் சிறந்த அறி குறியாகும். இங்ஙனம் மனவுணர்வும், அதனை வெளிப்படுக்குஞ் சொல்வன்மையும் உண்மை கருதி மக்களை (உயர்திணை) உயர் குலமாகவும், மக்களல்லாத மனவுணர்வு குறைந்து சொல் வன்மையில்லாத பிறவுயிர்களையும், உயிரில் பொருள்களையும் (அஃறிணை) தாழ்ந்த குலமாகவும் பாகுபாடு செய்வது அறிவு முதிர்ச்சியின் விளைவேயன்றி வேறன்று.

இச்சீரிய முயற்சியும், அதற்கேற்ற கருவிகளும், அவற்றை யியக்குதற்குரிய மனவுணர்வும் முற்றப்பெற்றவர் மக்களேயென்பது திண்ணம். இம்மக்கட்குக் கிடைத்துள்ள எல்லா நன்மையினும் மனவுணர்வை வெளிப்படுக்கும் மொழிவன்மையே இறைவன் அருளிய பெரும்பேறாகும். "வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் . . . . . தந்த தலைவன்" என்று பெரியோர் பணிப்பர். இதன்கண் மனவுணர்வையும், சொல்வன்மையையும் தெய்வம் அருளிய பேறாக நன்கு பாராட்டுதல் காணலாம். கம்பநாடரும்:-

"இம்முதலைச் சொல்லுதற், கேன்றுருவமைந்தவும்" (கிட்கிந்தா காண்டம், காப்பு)

என்பதனால் மக்கட் பிறப்பின் சிறப்பினைச் சொல்வன்மை பற்றிப் பாராட்டினார். ஆதலால் உலகியற் பொருள்கள் தொடங்கித் தெய்வமீறாகவுள்ள எல்லாப் பொருள்களையும் அறிதற்கு மனவுணர்வு காரணமாயிருத்தல்போலவே, அவ்வறிவைப் புலப்படுத்திப் பெருக்குதற்குச் சொல்வன்மையும் இன்றியமையாத தென்பது இதனால் விளங்கும். சிறந்த உண்மைப்பொருள்களைத் தக்க சொற்களால் நன்கு விரிக்கவல்ல மொழிகளே உலகிற் பெருமையுற்று விளங்குவனவாம். ஆயினும் உலகத்தியங்கும் மொழிகள் யாவும் உயர் பொருளைச் சீரிய சொற்களாற் றெரிக்குந் திறத்தில் ஒரே தன்மையனவாகா. மக்களறிவின் சீர்மைக்கேற்ப மொழிகளும் பலதிறப்பட்டுக் கிடக்கின்றன. மக்கள் இவ்வுலகத்துத் தோன்றிய நாண்முதற் பலமொழிகள் இவ்வாறு பிறந்து செழித்துத் தத்தம் நாடுகட்குப் பெருமை யளித்து வந்திருத்தலை

முதிராத நாட்டில் வழங்கிய பல மொழிகள் ஒளிபெருது மழுங்கி யொழிந்தன. அறிவும், நாகரிகமும், செல்வவளமும் முதிர்ந்த நாட்டினர் வழங்கிய சில பண்டைமொழிகளும், அந்நாட்டினர் தம் செல்வாக்கிழந்து குறைந்த காலத்துத் தம் பெருமை குன்றிப் பேச்சு வழக்கற்று, நூல் வழக்கின் மட்டுஞ் நிலவி வருகின்றன. பண்டைக்காலந்தொட்டே பல்வகை நலனுங்கொண்டு இறவாது மக்களால் வழங்கப்பட்டுவரு மொழிகள் மிகச்சிலவே. அவற்றுள் தமிழ்மொழியும் ஒன்றென்பது தமிழ் நாட்டுப் பண்டைச் சரித்திரவாராய்ச்சியானும், இம்மொழியிற் றென்றுதொட்டே எண்ணிறந்து பரந்து விளங்கிய இலக்கிய விலக்கண நூலறிவானும் இனிது விளங்கும். இம்மொழி எத்துணைப் பெருமை வாய்ந்ததென்பதும், இதனை வழங்கிய பண்டையோர் எவ்வளவு நாகரிகத்தால் மேம்பட்டனரென்பதும், இதனை வளர்த்த புலவர் பெருமக்கள் செய்யுட்டிறத்தில் எவ்வளவு திட்பநுட்பஞ் செறிந்து விளங்கினரென்பதும், இவரைப் போற்றிய வள்ளல்கள் இவர் என்பதும் உள்ளவாறறிந்து இனியது இஃதென்று உள்ளம் பருகி மகிழவும் அப்பெருமக்கள்போல நன்னெறியிலொழுகவும் வேண்டி இத்தமிழ் வரலாறு தொடங்கப் பெறுகின்றது.

# தமிழென்னும் பெயர்

இனிமை என்னும் பொருள்படும் தமிழ் என்னுஞ் சொல்லே நம் நாட்டு மொழிகளுள், தொன்மையும் முதன்மையும் பெற்ற இத்தென்னாட்டுத் தாய்மொழிக்குப் பெயராய்ப் பண்டைக்காலந் தொடங்கி வழங்கிவந்ததென்பதற்கு, அகச்சான்றுகளும் புறச் சான்றுகளும் பலவுள்ளன. தமிழ் என்னுஞ்சொல் இம்மொழிக்கு வழங்கி வந்ததைக் குறித்த வரலாறுகள் இனி ஆராயப்படும்.

தமிழ் என்னும் இயற்சொல்லான் வழங்கும் இம்மொழியின் பெயர்க் காரணத்தைப் பலர் பலவாறாக வெளியிட்டு வருகின்றனர். தமிழரல்லாத வடமொழியாளரும், பிறநாட்டுக் கல்வி வல்லார் சிலரும் தமிழ் என்னுஞ்சொல், "த்ரமிளம்" என்னும் வடமொழியின் சிதைவெனக்கொண்டு தம் கொள்கையை நிறுத்தப் பல காரணங் காட்டுவர். மூந்நூறாண்டுகட்கு முன் தோன்றிய சுப்பிரமணிய தீக்ஷிதர், தாமியற்றிய தமிழ்ப்பிரயோக விவேக நூலிலே முதன்முதல் இக்கருத்தைப் புகவிட்டனர். இவ்வாறு அவர் துணிதற்குத் தலையாய காரணம் தமிழரையும் தமிழையும் த்ரமிள சப்தத்தால் வடநூல்கள் வழங்கிக் காட்டலேயாகும். த்ரவிடம் என்னுஞ் சொல் த்ரமிடம், த்ரமிளம், தமிளம் எனச் சிறிதுசிறிதாக மாறி முடிவிலே, தமிழ் என வழங்கலாயிற்றென்பது இக்கொள்கையோர் கருத்தாகும். இதன் உண்மையை இனி ஆராய்வாம்.

வடமொழியாளர், த்ரமிளர் எனத்தமிழ்மொழியாளரையும், த்ரமிளம், த்ராவிடம் என அவர் நாட்டினையும், மொழியையுங் குறித்தனர் என்பது உண்மை. இக்குறியீடுகளால் தமிழரையும் தமிழையும் அவர் வழங்கியதன் காரணமின்னதென்று தெளிய வேண்டுவது ஈண்டைக்கின்றியமையாததாம். வடநூலார் பெயரிடுவதற்குமுன் தமிழர்க்கும், தமிழுக்கும் பெயரேயில்லை யெனல் சிறிதும் பொருந்தாது. வடமொழியாளர் தமிழரையும், தமிழையுங் கண்டு அவருடன் பயின்று, அவர் மொழிப்பெயரை

னைத் தமிழர் தம் வழங்கிய மொழிக்குப் பெயரிடா மல் வடமொழித் தொன்னூல்களுஞ் சிறந்து விளங்கிய பட்டினர் ஒருவர் இருவரால் இருந்தனர் என்பது ஆராய்ச்சிக்கிசைவதன்று. அன்றியும், தமிழ் என்னுஞ் சொல் இயற்றமிழ்ச் சொல் என்பதே பண்டைத் தமிழாசிரியர் துணிபு ஆகும். இதனைத் "தமிழென் கிளவியும் அதனோ ரற்றே" (தொல். எழுத். சூ. 385) என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தான் அறியலாகும். தொல்காப்பிய னார் தமிழ்ச்சொற்களுக்கே புணர்ச்சி விதி கூறுகின்றாரல்லது பிறமொழிச் சொற்களுக்கில்லை யென்பதை இவ்விலக்கணங் கற்றோர் அறிகுவர். ஆதலால் இது தமிழியற் சொல்லேயாதல் ஒருதலை.

இனி வடமொழியாளர், "த்ராவிடம்" என்னுஞ் சொல்லுக் குக் கூறும் பொருட்கும் தமிழ்மொழியாளர் தமிழென்னுஞ் சொல்லுக்குக் கூறும் பொருட்கும் இயைபுளதா என்றாராய்ந்தால் இதன் உண்மையறிதல் கூடும். துரத்து எனப் பொருள்படும் "த்ரு" என்னும் வடமொழி வினைப்பகுதியினடியாகத் தோன் றிய த்ராவிடம் என்னும் வடசொல் துரத்தப்பட்டதென்று பொருள்படும். தமிழர், தம்மொழிக்கு இட்டுவந்த "தமிழ்" என்னுஞ் சொல்லுக்குப் பொருள் அவ்வாறன்றி வேறுதலே. "இனிமையு நீர்மையுந் தமிழெனலாகும்" என்னும் பிங்கலந் தைச் சூத்திரத்தானறியலாம். வடமொழியாளர் வழங்கிய "த்ராவிடம்" என்னுஞ் சொல்லுக்குக் கொண்ட "துரத்தப் பட்டது" என்னும் பொருளும், தமிழ்மொழியாளர் வழங்கிய "தமிழ்" என்னும் இயற்றமிழ்ச் சொல்லுக்குக் கொண்ட இனிமை, நீர்மை என்னும் பொருளும், தமக்குள் ஒரு சிறிதும் ஒவ்வாமை உணரலாகும். மிகவும் அழகாய்ச் சிறந்த பொருள் பெற்று வழங்கிய "தமிழ்" என்னுஞ் சொல் இதனின் வேறுபட்ட இழிபொருள் குறிக்கும் "த்ராவிடம்" என்னும் வடமொழியின் சிதைவெனக் கோடல் எங்ஙனம் பொருந்தும்? பொருளொற் றுமையுடைய இரு வேறு மொழிகளுள் சிற்சில ஒலி யொற் றுமையைக்கண்டு அவற்றுள் ஒன்றை மற்றதன் சிதைவென்றும் திரிபென்றும் மொழிவல்லார் கொள்வர். வெவ்வேறு பொருள் படும் இரு வேறு சொற்களுட் சில ஒலியொற்றுமைகண்டு ஒன்று மற்றதன் சிதைவெனக் கொள்ளத் துணியும் மொழியாராய்ச்சி யாளர் எங்குமில்லை யென்பது தெளிந்ததொன்று.

தமிழ் என்னுஞ்சொல் இனிமைப் பொருளில் வருதலைத்:— ' தமிழ் தழீஇய சாயலவர் (சீவக. 2026) எனத்திருத்தக்க தேவரும் " தமிழ்ப் பாட்டிசைக்குந் தாமரையே " (இராமா. பம்பைப் 29) எனக் கம்பநாடரும் கூறுவது கொண்டு எளிதிற்றெளியலாகும். சிந்தாமணியில் திருத்தக்க தேவர் சாயல் (மென்மை) தமிழ் தழீஇயதாகக் கூறினார். அங்கே பெண்பாலார் உடம்பின் மென்மை தமிழ்மொழி தழீஇயதாகக் கூறுதல் இயலாது. சாயல், கண்டார்க்கு இனிமை செய்தலான் இனிமை தழீஇய சாயலென்று நச்சினார்க்கினியர் அங்கே உரைத்தார். இவ்வாறே இராமாயணத்திற் கம்பநாடர், வண்டுகள் தாமரையிற் றமிழ்ப் பாட்டிசைப்பது கூறினார். வண்டுகள் தமிழ் மொழியாலாகிய பாட்டை இசைப்பதாகக் கூறுதல் இயலாது. கேட்டார்க்கு இனிமை செய்தலால் இனிமையுடைய பாட்டை வண்டுகள் இசைப்பனவாகக் கூறுவதே பொருந்துவதாகும். இவ்வீரிடங்களிலும் கண்ணுக்கினிமையும் செவிக்கினிமையும் தமிழ் மொழியினால் வழங்கப்பட்டவாறு காணலாம். பிங்கல நிகண்டுகாரர்:— " இனிமையு நீர்மையுந் தமிழெனலாகும் " எனக் கூறுதலால் இனிமையேயன்றி நீர்மையும் இத்தமிழ் என்னுஞ் சொற்குப் பொருளாதல் காணலாம். இதற்கேற்ப இனிமையையே இம் மொழிக்கு அடையாக வைத்து " இன்றமிழ் " எனவழங்குதல் பலவிடங்களிலும் காணலாம்.

" இன்றமிழியற்கையின்பம் " (சீவக. 2063) எனச் சிந்தாமணியினும் வந்தது. இவ்வாறு இச்சொற்குப் பொருள் கூறுமிடத்து, இதனைத் தாய்மொழியாகப் பெற்ற நன்மக்கள், தம் மொழியிலுள்ள பேரன்பினால், தம்மொழி தமக்குப் பயிற்சி வயத்தால் இனிமை தருவது கருதி, அப்பொருளை இச்சொல்லிற்கு வழங்கினரோவெனப் பிறர் நினைத்தல் கூடும். தெலுங்கு மொழியைத் தமக்குத் தாய்மொழியாகக் கொண்ட பலரும் ' தெலுகு தேனு ' (தெலுங்கு இனித்தலால் தேனுவது) என்று சிறப்பித்தல்போல இதனையுஞ் சிறப்பித்தபடியென்று கொள்ளலாமெனக் கூறலுமாகும். இவ்வாறு நினைத்துக்கொள்ளுதல் இம் மொழியைப் பொறுத்த மட்டில் பொருந்தாதென்று காட்டி இம் மொழிக்கு இனிமையென்னும் பொருளுண்மை தெரியச் சில கூற

வேண்

தமிழ் என்பது இனிமையையுடைய-வற்றிற்கு அடையாயடுத்து வருதல் காணலாம். மிகவும் பழைய நூலாகிய பரிபாடலின் கண், "தமிழ் வையைத் தண்ணம் புனல்" (பரிபா. 6, 60) என வந்தது. இதற்குப் பரிமேலழகர் என்னும் பேருரையாளர் "தமிழையுடைய வையைப்புனல்" என உரைத்தார். இங்கே வையையாற்றின் கரையிலுள்ள நான்மாடக் கூடற்பதியிற் றமிழ் மொழி வளர்ந்த சிறப்புப்பற்றித் தமிழ் மொழியையுடைய வையைப் புனல் என்று உபசரித்துக் கூறியதாகக் கொண்டனர் எனக் கருதுதற் கிடனுண்டாயினும், இனிமையை யுடைய வையைப் புனல் என்று கொள்வது நேரே பொருந்தியதாகும். காவிரியைத் தமிழ் நாட்டினொருபகுதிக்குப் பெருவளஞ்சுரப்பது பற்றித் "தண்டமிழ்ப் பாவை" என மணிமேகலைப் பதிகத்துட் கொள்ளவைத்ததுபோல, இங்கும் தமிழ் நாட்டு வையையெனக் கொள்ள வைத்தாரென்றுது தமிழையுடைய வையையென்று அவர் உரை கூறியதனையும் நோக்கிக்கொள்க. இவ்வுண்மையைப் பிறிதொரு வழியானுந் துணிந்து கொள்ளலாம்.

வான்மீகி முனிவர் சுந்தர காண்டத்தில் அநுமன் சீதா பிராட்டியாருடன் இன்ன மொழியில் உரையாடுவதென்று நன்கு தனக்குள் ஆராய்ந்தானென்றும், இருபிறப்பாளரொப்ப ஸம்ஸ்கிருத மொழியில் உரை தருவேனாயின் என்னை இராவணனாகக் கருதிச் சீதை அச்சமுறுவாளென்றும், அவளஞ்சாது செவி கொடுத்துத் தூதுரை கேட்க இணங்கும் பொருட்டு மக்கள் மொழியே பேசவேண்டுமென்று துணிபுகொண்டனனென்றும் இங்ஙனந் துணிந்ததன் பயனாகத் தூதுக்குரிய எல்லாவற்றையும் மதுரமான மொழியில் வைத்துக் கேட்பிப்பலென்று புகுந்தானென்றுங் கூறியிருத்தல் காணலாம்.* இங்கு இன்னமொழியிற் பேசுவதென்பதே அநுமான் தனக்குட்செய்த ஆராய்ச்சியாமென்பது தெள்ளிது. வடமொழியிற் பேசின் சிறிது பொழுதுக்கு முன் வடமொழியே பேசிய இராவணன் வேற்றுருக் கொண்டு வந்து பேசுகின்றானெனத் தன்னை நினைத்துச் சீதை அஞ்சுவள் என்று கொண்டு, மக்கள் மொழியே பேசவேண்டுமென்று தன்னுள் முடிபு செய்து, மதுரமான மொழியை (பாஷையை) எடுத்

---

* श्रावयिष्यामि सर्वाणि मधुरां प्रब्रुवन् गिरम्
ஸுந்தரகாண்டம், ஸர்க்கம் 30, ச்லோகம் 43.

துக்கொண்டாரென்று வால்மீகியார் வெளியிட்டுள்ளனர். இதனால் விந்தியமலைக்குத் தெற்கணுள்ளவனான அனுமான் வடமொழி தென்மொழியும் (மக்கள் மொழியும்) வல்லுநன் எனவும், விந்திய மலைக்கு வடக்கணுள்ள சீதை அவ்விருமொழியும் வல்லுநளெனவும் கொள்ளல் இன்றியமையாததாகும். சொல்வோரும் கேட்போரும் தெரிந்த மொழியன்றே உரையாடுதற்குரியதென்பது பலரும் அறிந்தது. விந்திய மலைக்குத் தெற்கணுள்ள காடுகளிற் பலவாண்டுகள் தங்குதலாற் சீதைக்கு அத் தெற்கண் மொழிப் பயிற்சி உண்டாயிருத்தலில் ஐயமில்லை. அனுமன் வடமொழி வன்மை, அவன் ஸ்ரீ ராமபிரானுடன் உரையாடியதனால் நன்கறிந்ததேயாம். அன்றியும் விந்திய மலைக்குத் தெற்கேயுள்ள நாட்டைப் "பஞ்சத்ராவிடம்" என்று வடநூலார் வழங்குதல் நூல்களிற் கண்டது. ஐவகைத் திராவிடத்தினும் வேறாய்த் தெற்கே தலைசிறந்தது தமிழேயென்பதும், அதுவே அகத்தியர் கண்ட இலக்கண வரம்புடையதென்பதும், மற்றைத் தென்மொழிகட்கெல்லாம் தாயென்பதும் நன்கு துணியப்பட்டனவேயாம். அநுமன்றாயாகிய அஞ்சனை பிறந்த காரணத்தால் "1 அஞ்சன களம்" என்றும், அதுவே குரங்கின் பெயரால் "மூசுஸ்ரீநகரம்" என்றும் "குரங்கினூர்" என்றும் கொடுங்கோளூர்க்கு வழங்கும் வரலாறுகளாலும், பல்கலையும் பகுத்துணர்ந்த அநுமன் தென்னாட்டவனாதல் தெளியலாம்.

இத்துணையுங் கூறியவாற்றால் வான்மீக முனிவர் ஈண்டு மக்கள் மொழியாகக்கொண்ட இனிமை வாக்கு (மதுராங்கிரம்) தமிழ் என்னும் இனிய மொழியேயாமென்று துணியப்படும். நன்கு பேசுமிடத்தெல்லாம் இம்முனிவர் மதுரம் என்ற சொல்லை வழங்கல் மிகுத்துள்ளதேனும், அவ்விடமெல்லாம் போலாது இவ்விடத்தில் இன்ன பாஷையிற் பேசுவதென்று துணிந்து அம் மதுர மொழியிற் றாதுசொல்லப் புகுந்தானென்றே கொள்ளக்

---

* यदिवाचं प्रदास्यामि द्विजातिरिव संस्कृताम् ।
रावणं मन्यमानामां सीता भीता भविष्यति ॥
वानरस्य विशेषण कथं स्यादभिभाषणम् ।
अवश्यमेव वक्तव्यं मानुषं वाक्यमर्थवत् ॥
(வான்மீகி. கிஷ்கிந்தா. ஸர்க்கம் 30, ஸ்லோ 18, 19)

1 கோகில சந்தேசம் பார்க்க.

கிடக்கின்றது காண்க. அவர், மேல், "பேரறிவாளனாகிய அனுமான் தன்னுள்ளே பலவகையாகச் சிந்தித்து விதேக புத்திரிக்கு மதுர வாக்கியத்தைக் கேட்பிக்கத் தொடங்கினான்" (ஸுந்-ஸர். 31-1) * என்று விளங்க வுரைத்ததுங் காண்க. இம்மதுர வாக்கியம் மாநுஷ வாக்கியம் என்பதும் பொருள் நிறைந்ததென்பதும் முன் ஸர்க்கத்திற் (29) கூறியதே யாதல் தெளிக. இடத்திற்கேற்ற பொருட் பொருத்தமே உரைகாரர் வேண்டுவதென்பது பல்லோர்க்கும் உடன்பாடாம். இக் கருத்திற் கிணங்கவே தமிழ் நிலைத்து வளர்ந்த பாண்டியர் தலைநகரை "மதுரை" எனப் பெயரிட்டனரென்றுய்த் துணரலாகும். சிறுபாணாற்றுப் படையில்,

தமிழ் நிலைபெற்ற தாங்கருமரபின், மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே" (வரி. 66, 67)

என வருதலையும் இதற்குப் பொருந்தவே நோக்கிக் கொள்க. இங்கு கூடல் என்ற தமிழ்ப் பெயரை விடுத்து மதுரை என்ற வடமொழிப் பெயரையாண்டது தமிழ் நிலைபெற்ற காரணத்தைக் குறித்தது என்று ஊகிப்பது பொருத்தமேயாம். "மதுரை" என்பது மதுரம் என்பதன் அடியாக வந்த பெயரென்பது தெள்ளிது.

இனித் தமிழ் நாடொழிந்த ஏனைய நாடுகளிலும் இச் சொல்லுக்குப் பெரிதும் ஒற்றுமை யுடையனவெனக் கருதலாகுஞ் சொற்கள் வழங்கி வருதலைக் காண்கின்றோம். இவற்றுள் "ஸான்ஸிபார்" நாட்டில் வழங்கிவரும் 'ஸ்வாஹிலி' என்னு மொழியில் "தமு" என்னுஞ் சொல் இனிமையெனப் பொருள்படுதலை யறிகிறோம். பாரசீக மொழியில் அறிவு, பகுத்தறிவு என்னும் அழகிய பொருள்களில் பயின்றுவரும் "தமிஸ்" என்னுஞ் சொல்லொன்று வழங்குகின்றது. தமிழ் என்னும் சொல்லுக்குத் தமிழரும், தமு என்னும் தம்மொழிச் சொல்லுக்குப் பிறமொழியாளரும் கூறிவரும் இனிமைப் பொருளொற்றுமை மிகவும் பாராட்டத்தக்கது. தமிழ் நாடும் ஆப்பிரிக்காக் கண்டத்துப் பல நாடுகளும் "லெமூரியா" என்னும் பெருங்கண்டத்துப்

---

* मधुरमवितथं वाक्यम्

பகுதிகளேயெனக் கோடற்கு, இக்காலத்துக் கடலிற் புகுந்து அளந்து கண்ட சான்றுகள் பலவற்றுடன் இம்மொழி வழக்கும் ஒரு துணைச் சான்றாகும். பேரூழியிற் கடல் கொள்ளப்பட்டன வற்றுள் எஞ்சியுள்ள நாடுகளாகிய ஸான்ஸிபார், ஸோமாலி, அபிஸீனியா, ஈகிப்து என்னும் கடற்கரை நாடுகளிலே தமிழ் மொழிகள் பல இன்னும் வழங்கி வருகின்றன. மேற்காட்டிய ஸான்ஸிபாரிலே "தமூ" என்பது இனிமையென வழங்குவதற்கும் இந்நாட்டிலே தமிழ் என்பது இனிமையென வழங்குவதற்கும் பெரும்பாலும் ஒலியும் பொருளும் ஒத்தலால் ஒரியைபு கூறியே தீரவேண்டும். வேற்று மொழிகளிலும், இம்மொழி இனிமை, அறிவு, பகுத்தறிவு என்னும் விழுமியப் பொருளைக் கொண்டதேயன்றிக் குறைக்கப்பட்ட பொருளைதையுங் குறித்த தில்லை.

மேலும், வடமொழியாளர் தமிழிற்கு வழங்கிவந்த "த்ராவிடம்" என்னும் வேறு சொல்லுக்கு அவர் கூறும் பொருளை மறுத்து அவர் சொல்லுந் தாதுவையே அடியாக வைத்து நன் பொருளுரைத்து இடித்து அறிவுறுத்துவாரைப்போல:—

"எவ்வினையு மோப்புதலாற் றிராவிட மென்றியல் பாடை"
(காஞ்சிப்பு. நாட்டுப்.)

என விளக்கிய நல்லறிவாளரும் இம்மொழியிலுண்டு. இதன் உயர்வெல்லாஞ் சுவைத்தறிந்த தெய்வக்கவியாகிய சடகோபரும்,

"பாலேய் தமிழர்" என (திருவாய் மொழி 1, 5, 11)

இனிமைப் பொருளையே உவமை கூறி விளக்ினர். வேதந் தமிழ் செய்த இவர் தமிழரையும், தமிழையும் உயர்த்துக் கூறியதனுண்மை பாராட்டத் தக்கது. கலிகன்றியார் பெரிய திருமடற்கண்,

"புல்லாணித் தென்னன் தமிழை" (கண்ணி. 131.)

என்று தெய்வத்தையே இம்மொழி வடிவாகக் கூறினர். "திருப்புல்லாணிப்பதியிற் பாண்டியர் தமிழ்வடிவாயுள்ளவனை" என்பது இதற்குப் பொருள். தேவாரத் திருமுறையினும் "தமிழன் கண்டாய்" எனப் பணிப்பர். பண்டை நாளில் வழங்கிய அஸிரிய மொழியில் தமூஸ் (Tamauz)என்பது பிதுர்லோகத்திற்கும் ஜீவலோகத்திற்கும் தெய்வம்; மரங்களை வளர்விப்பதும்

பூமியைச் செடிகளால் உடுத்துவதும் அதுவே என வழங்குதல் கேட்கப்படுகின்றது. இதனால் இப்பெயரை அவர் பயிர்க் கடவுளுக்கிட்டு வழிபட்டனரென்று தெரியலாம். திங்களஞ் செல்வன் இனியனாதல் உலகறிந்தது. இவனை அமிர்தமய னென்ப. இவ்வாறு சந்திரனைக் கொள்ளலும், வழிபடலும் தமிழர்க்கு ஒத்ததென்று நூல்வல்லார் அறிவர். ஈண்டுக் கூறிய சந்திரனாகிய தண்மதி இனிதாகிய அமிழ்துடையனாதலும் இனியனாதலுந் தமிழ் நூல்களிற் கண்டனவேயாம். இவனை வழிபடுதல் தமிழர்க்குச் சிறப்பாக வுண்டென்பது,

"பிறை தொழு கென்றல்" என்னுந் துறையானும்,

"ஒள்ளிழை மகளிர் உயர்பிறை தொழூஉம்
புல்லென் மாலை" (அகம். 239)

என்னும் அடிகளானும் அறியலாம்.

"பலர் தொழச்,
செவ்வாய் வானத் தையெனத் தோன்றி
யின்னம் பிறந்தன்று பிறையே" (குறுந்தொ. 307.)

என வருதலானும் இவ்வுண்மையுணர்க. இவ்வழிபாடு இத்தமிழர்க்கு இடையினுண்டாயதெனலாகாது. அநாதியே நிகழ்வதென்பது மதுரைக் காஞ்சியில்,

"தொன்று தொழு பிறை" (மதுரைக்கா. 193).

என்னும் பகுதியால் விளங்கும்.

மற்று வடமொழியாளர் தமிழ் என்னும் பெயரையே தம் மொழிக்கிணங்கிய இன்னோசை கருதியும், தம்மெழுத்திற்கியைவது கொண்டும் "த்ரமிள" என ரேபங் (ரகாரம்) கொடுத்து முதற்கண் வழங்கினரென்றும், நாளடைவில் அதுவே திரவிட, திராவிட என மாறிற்றென்றும், அங்ஙன மாறிய சொல்லைத் தம் மொழியாகவே நினைந்து "த்ரு" என்பதனடியாகப் பிறந்ததென்று வைத்து, அதற்கு இனியதல்லாததோர் பொருளை ஏறிட்டன ரென்றும் நன்கு துணிதலேதக்கது. இவ்வாறு ரேபங்கொடுத்துத் தமிழ்ச் சொல்லையே வடமொழியாக ஆளுதற்குக் "கமுகு" என்பதை "க்ரமுகம்" என அவர் வழங்கியவாற்றானறியலாம். இவ்வாறே வடமொழியிற் றிராவிடச் சொற்கள் சில புகுந்தன வென்பது மீமாம்ஸா உரையாளர் குமாரிலபட்டர்க் குடன்பாடு, இங்

னமாகவும் சேனாவரையர் தமிழ்ச் சொற்கள் வடமொழியுட் புகாவென்று கூறுவர். நீர் என்பது புனல், ஈரம், அன்பு, இயல்பு, தகுதி முதலிய பல்வேறு பொருள்களின் மிக்கு வழங்குஞ் சிறப்பு தமிழ் மொழிக்கண்ணே உண்டு. இது நீரம் என வடமொழிக்கட்புக்கு வழங்குவது, சேனாவரையர் நீரம் என்பது நீராயிற்றெனக் கொள்வர். இத்துணையுங் கூறியவாற்றால், தமிழ் என்னும் பெயரின் இனிய பொருள் உணரலாம்.

# தமிழ்மொழியின்றனி நிலை.

இத்தமிழ் மொழியை வடமொழிச் சிதைவென்றும், அங்ஙனமன்றி அவ்வடமொழிக்கு முன்னிலையென்று பிறர் கருதுகின்ற ஒரு பிராகிருதச் சிதைவென்றும், இவையெல்லாமில்லை, காஸ்பியன் கடற்குத் தென்மேல்பாலுள்ள சிதியாநாட்டு மொழிவகையைச் சேர்ந்ததென்றும், மற்றும் பிறர் சீனதேயப் புறத்து மங்கோலிய மொழியைச் சார்ந்ததென்றும் பலபல கூறுவாருளர். இவரெல்லாம் அப்பலமொழிகளிலும் இத்தமிழ்ச் சொல்லில் மிகச்சிலவும், சிறுபான்மை சிற்சில இலக்கண வொற்றுமையுந் தமிழ்மொழியோடொப்ப வுளவாதல் கண்டு அங்ஙனந் துணிந்தனராவர். இவ்வாராய்ச்சி செய்யப் புகின், மேல், அவர் கூறிய தேயமொழிகளில் மட்டுமல்லாமல் பால்வி (Pahlvi) அக்காடியா (Accadia) அஸ்ஸீரியா (Assyria) ஈகிப்து (Egypt) ஆபிஸீனியா (Abyssinia) (அமெரிக்) ஸோமாலி, ஸ்வாஹிலி (Zanzibar) முதலிய பிறதேய மொழிகளிலும், பின்லந்து (Finish) (Finnish) முதலிய நெடுஞ்சேய்மையான மொழிகளிலும் ஆங்கில மொழியிலும் இத்தமிழ்ச் சொல்வழக்குப் பெரிதும் ஒற்றுமைப்பட்டு ஒலிவடிவில் நிற்பதை இத்தமிழ்ச் சொல்லோடு அப்பிறமொழிகளும் வல்லவர்கள் எளிதில் தெரிந்து கொள்ளலாம் *

இவற்றைத் தனியே ஒற்றுமை காட்டித் தொகுத்து ஒரு பெரு நூலாக வெளியிடுதல் மொழியாராய்ச்சிக்கு வேண்டுவதொன்றாதலின் ஈண்டு விரிக்கக்கூடவில்லை, இதனால் இத் தமிழ்மொழி, படைப்புக் காலந்தொட்டு நெடுங்கால வழக்குப் பெற்றதென்றும், காலவளவிற் பல நாட்டு மொழித்தொடர்பு பெற்றுப் பரந்ததென்றும் நினைப்பதன்றி அவ்வம்மொழியினின்று இம்மொழியுண்டாயிற்றென்று துணிந்தால், இம்மொழிக்குத் தாய்மொழி ஒன்றல்லாமற் பலவாக முடியும். இங்ஙனம் இப்பல மொழிகளின் வழியாகவே இம்மொழி உண்டாயிற்றென்றால்

---

* Vide Appendix for a list of words common to several languages.

இதற்கு இயல்பாகக் காணப்படும் நெடிய பழமையுளதாக நினைப்பதற்கும் இடமில்லையாகும். இம்மொழி நூல்களும் அவைகளின் கருத்துக்களும், அக்கருத்துக்களை வளர்த்த நாகரிகங்களும் ஒருவர் உள்ளவாறு ஆராயின் இம்மொழி மிகப்பழையதாகத் தோன்றுமல்லது, இக்காலத்து வளர்ந்துள்ள புதுமொழிகள் போல்வதன்றென்பது புலனாகும். நெடுங்காலமான தனிமொழியொன்று, தான் தனிமொழியாய் நின்றநிலையிலே நெடுங்காலஞ் சென்றபின், பற்பல தேயத்தவர் கலப்பால் பிறமொழிகளையுந் தன்னுட்கொண்டு கலந்துவளர்வதியல்பேயாயினும், அம்மொழிக்குத் தனிநிலையேயில்லாது கலந்துதிரிந்த நிலையே முதற்றொட்டு உள்ளதென்பது சிறிதும் பொருந்தாது. இத்தமிழில் இவையெல்லாம் நன்குணர்ந்த இலக்கண நல்லாசிரியர்கள் தமிழின் பழைய நிலையையும் தொன்னூலுடைமையையும் ஆராய்ந்து; இந்நாட்டு இயற்சொல் திரிசொல் இவையென்று சிறப்பித்துக் காட்டிப் பிறசொற்கள் இதன்கட் புகுதலை உடன்பட்டு, வடசொல், திசைச்சொற்கள் புகுதற்கும் விதி வகுத்தனர். இதனால் தமிழ்மொழிக்குக் கலப்பற்றுத் தனி நின்ற இயற்சொல் நிலை முன்பே யுண்டென்பதும், அது பல்வகையானுந் தன்னோடொத்த ஆரியமாகிய வடதிசைச் சொல்லையும், பிறதிசைகளில் வழங்கிய பழஞ்சொற்களையும் தன்னிடங்கொண்டு வளர்ந்ததென்பதும்,

> ' இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலன்
> றனைத்தே செய்யுளீட்டச்சொல்லே "
>
> (தொல். சொல். எச்ச, 1.)

எனவும்,

> " மரபேதானும்,
> நாற்சொல்லியலான் யாப்புவழிப் பட்டன."
>
> (தொல். செய். 80)

எனவுந் தொல்காப்பியனார் கூறுதல்கொண்டு துணியலாம். இச்சூத்திரங்களிற் கூறப்பட்ட திசைச்சொற்கள் வழங்கும் நாடுகள் தமிழ் நாட்டிற்கு வரையறைகூறிய வடவேங்கடம், தென் குமரி, குணகுடல், குடகடல் என்னும் இந்நான்கெல்லைக்கு அகத்தனவேயாகாது புறத்தனவும் நெடுந்தூரத்தனவுமாமென்பது தமிழ் நூலாசிரியர் உரையாசிரியர்கட்கு உடன்பாடாம்.

இதனை, நன்னூல், திசைச்சொற்கு இலக்கணங்கூறிய சூத்திர வுரையில் (பெயரியல். 16) "ஒன்பதிற் றிரண்டினிற்றமி ழொழி நிலத்தினும்" என்புழி மயிலைநாதரென்னும் பழைய வுரைகாரர் தமிழொழி பதினேழ் நிலமாவன —

"சிங்களஞ் சோனகஞ் சாவகஞ் சீனந்துளுக்குடகம்
கொங்கணங் கன்னடங் கொல்லந் தெலுங்கம்
கலிங்கம் வங்கம்
கங்க மகதங் கடாரங் கவுடங் கடுங்குசலம்
தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதி னேழ்நிலந் தாமிவையே"

எனவும்,

"அருமணம், காம்போசம், ஈழம், கூவகம், பல்லவம், அங்கம் என்பன முதலானவை இவற்றின் பரியாயமும் இவற்றின் பேதமுமாய் இவற்றுள்ளே யடங்கும்; இவற்றின் மொழிகளும் வந்தவழி அறிந்துகொள்க" எனவுங் கூறிய சேனாவரையர்தாம்;

"கன்னித் தென்கரை கடற்பழந் தீவம்
கொல்லங் கூவகஞ் சிங்களமென்னும்
எல்லையின் புறத்தவும் ஈழம் பல்லவங்
கன்னடம் வடுகு கலிங்கந் தெலுங்கம்
கொங்கணந் துளுவங் குடகங் குன்றம்
என்பன குடபா லிருபுறச் சையத்
துடனுறைபு பழகுந் தமிழ்திரி நிலங்களும்
முடியுடை மூவரு மிடுநில வாட்சி
யரசு மேம்பட்ட குறுநிலக் குடிகள்
பதின்மரும் உடனிருப் பிருவரும் படைத்த
பன்னிரு திசையிற் சொன்னய முடையவும்

என்றார் அகத்தியனார்."

என மேற்கோள் காட்டியிருத்தலாலும் இதனுண்மை நன்குணரலாம். இவற்றுள், அருமணம் என்பது இப்போது பர்மா என்று வழங்கப்படுகின்ற நாட்டின் பழம் பெயராகிய ரமணம் என்பதைத் திரித்துக்கொண்டதாகும். ரமணம் அரமணம் என்றாகி அதுவே அருமணமெனத் திரிந்ததென்று ஊகித்துக்

கொள்ளல் பொருத்தமேயாகும். இதற்கு அக்காலத்துத் தலைநகரம் கடாரம் என்பர்.[1] காம்போதி என்பது, இப்போது கம்போடியா என வழங்குவதாகும். இது ரமணதேசத்துக்கு அப்பாலுள்ளது. ஈழம் சிங்களத்தீவு. கூவகங் கொல்லமென்பன கடல்கொண்ட நாடுகள். "இதனைக் கூவகமுங் கொல்லமுங் கடல் கொள்ளப்படுதலின் குமரியாற்றின் வடகரையைக் கொல்லமெனக் குடியேறினர்போலும். பஞ்சத்ராவிட மெனவும் வடநாட்டார் உரைப்பவாகலான் அவையைந்தும் வேங்கடத்தின் தெற்காதல் கூடாமை யுணர்க." எனத் தெய்வச்சிலையார் கூறுமாற்றானுணர்க (தொல். சொல். 395). பல்லவமென்பது பஃலவ என்ற பாரசீகமாகும். பல்லவம் என்ற பெயரின் வடநாட்டில் ஓர் பகுதியுண்மை வியாச பாரதத்தினும் தமிழ்ச் சிந்தாமணியினுங் காணலாம். (சீவக. 1185). இந்நாட்டவர் திரையப் பல்லவரென வழங்கப்படுதல் சாஸனங்களிற் காணலாம். இப்பாரசீகப் பஃலவர் தம் நாட்டு முன் வழங்கிய மொழி 'பால்வி' எனப்பெயர் பெற்றதாகும். அம்மொழியகராதியில் தமிழ்மொழி மிகுதியாக வுண்மை காண்க. வங்கம் என்பது இப்போதுள்ள வங்காளமாகும். இதனைக் கங்கைநாடு எனவும் வழங்குவர். சிங்களம் என்பது ஈழத்தீவாகும். இதனை அரபியர் சேரம் தீவென்று வழங்குவர். சேரம் - சிங்கம் (2) சோனகம் என்பது யவனர் நாடு (கிரேக்கநாடு). சாவகம் என்பது மணிமேகலையிற் கூறிய சாவகநாடு. (மணிமே. 10. அடி. 74. - 103). இதன் தலைநகரம் நாகபுரம். சீனம் என்பது, இமயத்துக்கு வடக்கணுள்ள சீனதேயம். துளு, கோசர் துளு நாடென்று வழங்கப்பெற்றது; நம் தென்னாட்டு மேல்கடற் பக்கத்துக் கன்னடப் பகுதியிலுள்ளது. குடகம் என்பது இப்போது கூர்க்கு (Coorg) என வழங்குவது. கொங்கணம், கொண்கானம் என்

(1) "சாவகமெறிந்தரு மனம்பொருது சிந்தத் தகர்த்துமலையூடு
முருவப்புரிசை தள்ளிக் கோவக நெகிழ்ந்து குலையுப்பாடி
கடாரங் கொள்ளுமொரு சோழன் மருகா"

(குலோத். பிள்ளைத்தமிழ். 93)

(2) இக்காலத்தார் அரபியரைச் சோனகர் என வழங்குவர். யவனரைச் சோனகர் என்பர். (பெரும்பாண். 316)

பது; கடலோரத்துக் கானகநாடாதலின் இப்பெயர் பெற்றது. கன்னடம் "கொடுங்கருநாடர்" என்ச் சிலப்பதிகாரம் வழங்கிய மக்கள் வதிந்த இடம். கொல்லம் கடல்கொண்டது போக எஞ்சிய கொல்லமாகும். தெலுங்கம் இப்போது ஆந்திர தேசமென வழங்குவது. கலிங்கம், ஒரியா நாட்டுக் கடகத்தைத் தலைநகராகக்கொண்ட ஏழ்கலிங்கமாகும். கங்கம், கங்கபாடி எழுநூற்றிலக்கம். இதன் தலைநகரம் தலைக்காடு, தலவனபுரம் எனப்படும், மகதநாடு ராஜக்ருஹத்தைத் தலைநகராக்கொண்டு கங்கைக் கரையிலிருந்து பாலிமொழி வழங்கிய பழைய நாடு. கடாரம், ரமணதேசத்துத் தலைநகர். இங்கே அதைச் சூழ்ந்த நாட்டைக் குறித்தார். கவுடம், வங்காளத்தின் ஓர் பகுதியாகும், கன்னித்தென்கரைக்கட் பழந்தீவம், லக்கத்திவுகள் முதலியன வாகும். வடுகு என்பது வேங்கடத்தை அடுத்த வடவெல்லை நாடு. இது வடகு என்றிருந்து வடுகு எனத்திரிந்ததாகக் கொள்ளலாம். இந்நாட்டார் படகர் (வடகர்) என இக்காலத்தும் வழங்கப்படுகின்றனர். குன்றம், குன்றநாடு, இது கடல் கொண்ட நாட்டிலொன்றாகும். குட்டபரிருபுறச் சையத்துத் தமிழ்திரிநிலங்கள், மேற்கண்ணுள்ள சையமலையின் இருபுறத்து முள்ள தமிழ்திரிந்து வழங்கிய நாடுகள் என்றவாறும், பதின்மரோடு இருவர், செந்தமிழ் நாட்டைச் சூழ்ந்த கொடுந்தமிழ் நாடென வைத்துப் பெயர் பகுத்திட்ட* தென்பாண்டி முதலிய பன்னிரு நாட்டாராவர்.

இத்துணையுங் கூறியவதனால் தமிழ்மொழி தனக்கடுத்துள்ள கொடுந்தமிழ் நாட்டு மொழியேயல்லாது மிகவும் சேய்மைய வாகிய சோனகம், சீனமுதலிய பல பிறநாட்டு மொழிகளையும் திசைச்சொல்லாகத் தன்பாற்கொண்டு வழங்கிய பெரு நோக்குடையதென்பது எளிதிலுணரலாகும். இவ்வாறு நெடுந்தூரத் தவரான பல பிறநாட்டாரும் இந்நாட்டின் வளம்பற்றியேனும், அறிவுபற்றியேனும், வீரம்பற்றியேனும், கொடைபற்றியேனும், வாணிகம்பற்றியேனும், இத்தமிழ் நாட்டிற் பண்டே புகுந்து

* "தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி
பன்றி யருவா வதன்வடக்கு—நன்றாய
சீத மலாடு புனனாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண்."

கலந்து பயின்ற காரணத்தால் அப்பிறர் சொற்கள் இம்மொழியில் வழங்கலாயினவென்று உய்த்துணர்தல் தக்கது.

இத்தமிழ் நாட்டிற் சோனகர், சீனர் முதலிய வேறு வேறு பலபாடை மாக்களும் பதிபழகிக்கலந்து இனிதுறைந்தாரென்பதும், அவர்கட்கெல்லாம் இத்தமிழ்மக்கள் இடந் தந்து உதவியாதரித்தனரென்பதும் பழைய நூல்களில் நன்கு அறியக்கிடப்பனவாம். இவ்வுண்மையைப் பட்டினப்பாலையென்னும் பழைய நூலில் கடியலூர் உருத்திரங் கண்ணனாரென்னும் நல்லிசைப் புலவர்,

"பல்லாயமொடு பதிபழகி
வேறுவே றுயர்ந்த முதுவா யொக்கற்
சாறயர் மூதூர் சென்று தொக்காங்கு
மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்
....................மறுகு"

(அடி. 213-17)

எனப்பாடுதலானும், அதற்கு நச்சினார்க்கினியர்,

"பல பல சாதிகளாயுயர்ந்த தத்தம் நிலத்தைக் கைவிட்டுப் போந்த பலபாடை மிக்க மாக்கள் பலதிரளோடே இவ்வூரிடத்தே பழகி ஈண்டை நன்மக்களோடே கூடி நன்றாக விருக்கு மறுகு"

எனவுரைகூறி "மாக்களென்றார் ஐயறிவேயுடையராதலின் என்றது சோனகர், சீனர் முதலியோரை" என விளக்கலானும் நன்கு தெளியலாம்.

இவ்வாறன்றி இத்தமிழ் நாட்டாரே கலத்தினும், காலினும் பிறநாடுகளையடைந்து பழகிய காரணத்தால், திசைமொழியாட்சி இத்தமிழ் நாட்டிற்கு உண்டாயிற்றென்று துணிவதும் பொருந்தும். ஆரியச்சொற்களும் திசைச்சொற்களும் இவ்விருதகையானும் தமிழியற் சொல்லோடு இந்நாட்டிற் கலந்து பயின்றவென்பது துணிந்த முடிபாகும்.

இவற்றால் இத்தமிழ் மிகவுந் தொன்மைக்காலத்தே தனிமொழியாய் விளங்கிப் பிற்காலத்தில் வடசொல்லுந் திசைச்சொல்

ஞர் தன்றுட் கொண்ட கலப்பு மொழியாயுள்ளதென்றும் சொல்லிலக்கணப் பகுப்பு முறையால் நன்கு துணியலாகும். ஆரியமும் ஒரு திசைச் சொல்லேயாக அதனை வட சொல்லென வேண்டாது இதனுடனொத்த தன்மை கருதியென்று முடிப்பர் பல நல்லுரையாசிரியர். தொல்காப்பியனார் நூல் வழி கூறிய விடத்துப் பாயிரத்துள் (97)

"மொழிபெயர்த் ததர்ப்படயாத்தலோடனை மரபினவே"

எனக் கூறுதலாற் பிறமொழியேயன்றிப் பிறமொழி நூற் பொருள்களையும் இத்தமிழ் மொழியில் மொழிபெயர்த்துக் கோடற்கு உடன்பட்டனரென்பதுந் தெளியலாம். இம்முறையே ஒரு தேயத் தாய்மொழியை வளர்க்க நினைக்கும் நல்லறிவாளர் மேற்கொள்ளத் தக்கதென்க. எத்துணையோ காலத்துக்கு முன்னரே திசைச்சொல்லும் மொழிபெயர்ப்பும் உடன்பட்ட தொல்லாசிரியர் நெறியே யாவரும் போற்றத்தக்கது என்பது உணரலாம்.

இத்தமிழ் மொழி, இயற்சொல்லே பயின்ற அந்தப் பழங்காலத்தே பல பிறமொழிகளுக்குத்தானே தாய்மொழியாக நின்று விளங்கிற்றென்பதற்குக்காரணங்கள் பலவுள. இத்தமிழியற் சொற்கள் பலவற்றை முதலாகக்கொண்டு கிளைத்த நாட்டினியல் பிற்கேற்பவேனும், ஒலிக்குஞ் சிறப்பியல்பு பற்றியேனும் தம் அருகிலுள்ள வடமொழி முதலிய பிறமொழிகளின் தொடர்பு பற்றியேனும், சிறித்து சிறிதாக ஒலியொற்றுமை பிறந்து முறையே தெலுங்கு, கன்னடம், மலையாள முதலிய பிறதுணை மொழிகளாக வழங்கலாயின. அம்மொழிக்கெல்லாந் தமிழே தாய்மொழியென்பது ஆராய்ச்சியாளர் துணிந்ததொன்று.

இனித் தமிழ்மொழியுள் ஆரியச் சொற்கள் நேரேயும் திரிந்தும் சிதைந்தும் மற்றைத் திசைச் சொற்களினு மிகுதியாக வழங்கியதற்குக் காரணங்கள் அடுத்துப் பயின்ற திசைத் தொடர்புமட்டுமல்லாது, அறிவு ஒற்றுமையும், மனக்கோட்பாட்டிற்குப் பெரிதும் ஏற்றபெற்றியும், எம்மொழியாயினும் அதன் கணுள்ள நல்லனவெல்லாவற்றையுங் கொள்ளுஞ் சிறந்த பெரு நோக்கமும் ஆகுமென்று துணிவது தகும். இக்காலத்தும் பிற மொழியிலுள்ள நல்ல நூல் ஒன்றைக்கண்டு அதனை மொழி

பெயர்க்கப்புகுவார் அந்நூற் சொல்லையும் பொன்னேபோற் போற்றி வணங்குதல் காணலாம். இவ்வழக்கந்தான் பண்டுமிருந்திருத்தல் வேண்டும். ஆரியரது வேதத்தையும், ஆகமத்தையும் மொழிபெயர்க்கப்புக்கு அவ்வாறு புரிந்த பெருந்தமிழர், அந்நூல்கட்குரிய ஆரியச் சொற்களையும் எடுத்தாண்டு தம்மொழியைப் பொருளானுஞ் சொல்லானும் வளம்படுத்தினரென்று கூறுவது பொருந்தும். இவ்வாறு மொழிபெயர்த்தலைப்பற்றித் தொல்காப்பிய மரபியற் சூத்திரத்து (97)

''மொழிபெயர்த்தெனவே பொருள் பிறழாமை பெற்றாம். வழக்கு நூலுள்ளும் மொழிபெயர்த்தியாக்கப்படுவன வுளவோ எனின் அற்றன்று. அது வேண்டுமே; வேதப் பொருண்மையும், ஆகமப் பொருண்மையும் நியாயநூற் பொருண்மையும் பற்றித் தமிழ்ப்படுக்குங்கால் அவற்றிற்கும் இதுவே இலக்கணமென்றற்கு மொழிபெயர்த்தலையும் இவற்றுக்கட் கூறினானென்பது.''

எனப் பேராசிரியர் கூறியவுரையால் வடமொழியில் வேதம் ஆகமம், நியாயம் எனப்பட்ட பெருநூற்பொருளையும் தமிழ் எளிதில் மொழிபெயர்த்துக்கொள்ளக்கூடிய ஆற்றலுடையதென்றும் அதற்கேற்ற பெற்றியாகக் கருத்துக்கள் முன்னமே வளர்ந்திருந்தனவென்றும் அவர்க்குடன்பாடாக உணரத்தகும்.* உரையாளர் பலரும் தமிழ் மொழியோடொத்த தன்மைபற்றிப் பிறதிசைச் சொற்களைப் பிரித்து வடமொழியெனத் தனியே ஒன்றை வேண்டினரென்க. இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல், என வேறுபடுத்துச் சூத்திரங்கள் கூறுதல் காண்க. வடமொழி, வடக்கணின்று விந்தியமலையையுங் கடந்து தென்றிசைக்கண் தமிழெல்லையாகிய வடவேங்கடம்வரை பயின்று நின்றதென்றும் இப்பால் தென்றிசையில் தமிழ் தன்னோடொத்த வளர்ச்சி யொருவாறு பெற்று நிலைநிற்றலால் அதன்கண் மிகுதி

---

* 'अजायमानो बहुधा विजायते' என்பது 'பிறப்பில் பல்பிறவிப் பெருமான்' எனவும், 'चक्षुर्देवानामुत मर्त्यानां' என்பது ''கண்ணாவான் விண்ணோர் மண்ணோர்க்கு'' எனவும் வேதத்தொடர்களைப் பெரியார் மொழி பெயர்த்தல் போன்ற பலவற்றாலிதனுண்மையுணரலாம்.

யாகப் புகாது அருகி வழங்கிற்றென்றும், இதுபற்றியே வேங்கடத்தை "வடசொற்குந் தென்சொற்கும் வரம்பிற்றாய்" (கிட்கிந்தா. நாட. 26.) என்று கம்பநாடர் பாடிவைத்தனரென்றுந் தெரியலாம்.

வடமொழியைத் தெலுங்கும் கன்னடமும் மலையாளமும் வழங்குகின்றவளவில் தமிழ் வழங்காமையானும், அங்ஙனந் தமிழ் வழங்காமைக்குக் காரணம் எப்பொருளையுந் தன் சொல்லால் வழங்கற்குரிய சொல்லாற்றலுடைமையென்று தெரியலாம். விந்தியமலைக்குத் தெற்குள்ள மற்ற மொழிகளுக்கில்லாமல் இத்தமிழிற்கேயுரியதாகிய சொல்லாற்றற் சிறப்பு இதனைவினிது

குறிப்பு:— செந்தமிழ் வால்யம் 7, பக். 132 ராவ்சாஹிப், பண்டித ஸ்ரீமத். மு. இராகவையங்காரவர்கள் எழுதிய "தென்றும் வான்மீகரும்" என்னுங் கட்டுரையின் கீழ்க்குறிப்பைக் காண்க. வால்மீகி முனிவரது ஆசிரமம் சித்திரகூடம். இது மத்திய இந்தியாவில் "பண்டில் கண்டு" பிரதேசத்தில் உள்ள தென்பர். இவ்விடங்களில் தமிழ்ப் பாஷை முன்னளில் வழங்கியிருக்கக் கூடுமென்பதற்கேற்ப இம் மத்திய இந்தியாவிலே பெரும்பான்மையான இடங்களிலும், மத்திய மாகாணங்களிலும் அதன் வடபால் சூடிய நாகப்புரிப் பிரதேசங்களிலும், அதற்கு வடக்கேயுள்ள "ராஜ் மஹால்" மலைப்பக்கத்துமுள்ள அரவணரும் (Oraons) மலையரும் (Malars) பாணியரும் (Panians) தமிழ்ச்சாதியின் சரியான அச்சாக விருக்கிறார் எனப்படுகின்றது. இவரை மத்திய மாகாணத்தும் சூடிய நாகபுரியிலுமுள்ள பழைய திராவிட ஜனத்தொகை 1901 ம் ஆண்டு ஜனக் கணிதத்தின்படி 5,92,351 என்றும்; இவர் மொழி திராவிட பாஷைகளில் ஏனையவற்றினும் தமிழ் கன்னடங்களுடன் மிக நெருங்கிய சம்பந்தமுடைய தென்றுந் தெரியவருகிறது. இனிக் கங்கைக் கரையின்கண்ணுள்ள "ராஜ் மஹால்" மலைப் பிரதேசங்களில் வசிக்கும் தமிழ்ச் சாதியார் மலையரெனவும் அவர் பாஷை மலாடு எனவும் வழங்கப்பெறுமென்றும், இம்மக்களின் தொகை அக்கணிதப்படி 60,777 என்றும் இவர் மேற்கூறிய 'அரவர்'களுடன் தொடர்புடைய ஜாதியாரே எனவும் சொல்லப்படுகின்றனர்.

Imperial Gazetteer of India Vol. I. New Edition 1907 pp. 296 க்கு 181—82.

உணரப்படும். இவ்வருந்தமிழாற்றலே நாயன்மாரும் ஆழ்வார்களுமாகிய தெய்வப்பெரியாரை உண்டாக்கி இத்தென்னாட்டை மேம்படுத்தியது தெளிக.

வடநாட்டில் ஆரியவர்த்தம் எனப்படும் ஒரு பகுதியிடத்தில் வழங்கிய ஆரியமொழி வேங்கடம்வரை நாளடைவிற் பெருகி வந்ததுபோல, இவ்வாரிய வழக்கிற்குமுன்னே இத்தென்னாட்டிலிருந்த வடவேங்கடத்தின் தென்பாலுள்ள ஒரு பகுதியிடத்தில் விளங்கிய தமிழ்மொழி பெருகி விந்தியத்திற்கப்பாலும் வழங்கிற்றென்று கூறுதற்குச் சான்றுகள் பலவுள்ளன. இதனுண்மையை விந்திய மலைக்குத் தெற்கிலும் வடக்கிலுமுள்ள பலபல நாடுகளில் அரவர் எனக் (அருவர்—தமிழர்) கூறப்படுவார் இன்றுமிருத்தலை ஜனகணித அறிக்கையாற் (Census Report) றெரியலாம்.

ஆரியமொழி தனக்கு நிலைக்களனாக நூல்கள் கூறிய ஆரியாவர்த்தத்தில் பேசும் வழக்கொழிந்து திரிந்து வேறாகியவிக்காலத்தும், தமிழ்மொழி தனக்கு நிலைக்களனாக நூல்கள் கூறிய தென்னாட்டில் நிலைபெற்றுப் பேச்சு வழக்கினுமிருந்து சிறத்தலானும் இதனழியாத்தன்மை நன்கு உணரலாம். இதுகொண்டே கம்பநாடர்,

"என்றுமுள தென்றமி ழியம்பியிசை கொண்டான்"

(இராமா. அகத்திய. 47)

என்னுமடியில் தென்றமிழென்று இதனையே சிறப்பித்தார். தென்றிசையென்றுமுள்ளதுபோல அதன் மொழியும் என்றுமுண்டென்பதை யறியத் தென்தமிழென்று காட்டினர். இவற்றால் இத்தமிழின் அழியாப் பெருநிலை ஒருவாறுணரலாம்.

# தமிழ்நாடு

இனி இம்மொழி தனக்குப் பண்டைக்காலத்தொட்டு வழங்கிய தாய்நாடு, யாதாமென ஆராயப்புக்கார் பலபலவாறுகக் கூறுதல் அவரவர் ஆராய்ச்சிகளிற் காணலாம். காகஸ் (Caucus) பீடபூமி முதலிடமென்றும், அபிசீனியன் பிடபூமியும் ஆமென்றுங் கூறுவர். உடம்புகளின் கூறுபாடுகளில் சுமேரியரும், திராவிடர்களும் ஐயமற ஒருதன்மையராவரென்று சொல்லி அவர்கள் சூரிய (அசிரிய) நாட்டினரென்று கூறுவாருமுண்டு. * பின்னுஞ் சிலர் மத்தியதரைக்கடலிலுள்ள க்ரீட் (Crete) த்ரிமிலி என்ற பெயராற் பழையோர் வழங்குதல்பற்றியும் பழமையான அடையாளப் பண்டங்கள் அங்கே கிடைப்பதுபற்றியும் அதுவே தாயிடமென்று துணிந்தாருமுண்டு. மற்றுஞ் சிலர் சீன தேசத்தை இத்தமிழர்க்குத் தாயகமென்பர். இங்ஙனம் பலதிறப்பட்டு வாதிக்கப்படும் தாய்நாட்டு வழக்கில் தமிழிற்கு உண்மையான தாயகம் இஃதென்று தீர்மானிப்பது இன்றியமையாததேயாகும். பழந்தமிழ் நூல்களும் தமிழருக்குத் தாயகம் வடவேங்கடம் தென்குமரி ஆயிடைப்பட்ட தென்னாடேயென்று கூறுதல் தெளிந்ததொன்று. இதனை,

"வடவேங்கடந் தென்குமரி ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகம்"

எனத் தொல்காப்பியத்திற்குப் பாயிரம் பாடிய பனம்பாரனார் கூற்றாலறியலாம். வடநூலாரும் திரமிளதேசம் இத்தென்

* The survival of a Dravidian language in Baluchistan must indicate that the Dravidians came into India through Baluchistan in prehistoric times. Whether they are ultimately to be traced to a Central Asian or to a Western Asian origin cannot at present be decided with absolute certainty but the latter hypothesis receives very strong support from the undoubted similarity of the Sumerian and Dravidian Ethnic types. (Camb. Hist. of Indian 1 p. 43.)

ளுடென்றே உடன்படுவர். இங்ஙனம் தமிழ் கூறும் நல்லுலகம் என்று பழந்தமிழ் நூலாசிரியர் துணிதற்குப் படைப்புக்காலந் தொட்டு அடிப்பட்டு வழங்கியதோர் உண்மைக் கோட்பாடு இருந்திருக்கவேண்டுமென்று எளிதில் நினைத்தலாகும். தமிழ் கூறும் நாடுகள் பலவுளவேனும் அவற்றுக்கெல்லாம் இதுவே தாயகமென்று சிறப்பித்தல் கருதியே "நல்லுலகம்" என்று வெளியிட்டனர் போலும். இனி அவரே "நிலத்தொடு முந்து நூல் கண்டு................புலந் தொகுத்தோன்" என்று தொல் காப்பியனாரைக் குறித்தலால் அம்மொழி வழக்கை அதன் தாய்-நில வழக்கொடு வைத்து ஆராய்ந்து மொழியுண்மை தெரிந்து இலக்கண நூல் தொகுத்தானென்று அறியவைத்தலுங் காண்க. இதனால் இங்ஙனம் தொல்லாசிரியர் துணிந்த உண்மையைச் சில கூறி உறுதிப்படுத்த விரும்புகின்றேன்.

தமிழர் நாற்றிசையினையும் கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு என வழங்கினர். ஒரு நாட்டின் சொல்லில் திசைபற்றிய பெயர் மிகவும் பழமையை அடைந்திருக்க வேண்டுமென்பது பல்லோர்க்கும் உடன்பாடாகும். ஞாயிறு தோன்றும் திசை முதலாகப் பல திசைக்கும் அடையாளங் குறித்த பெயர் வழக்கே யில்லாது ஒரு நாட்டார் அறிவின் வளர்ந்தனர் என்று நினைப்பது ஒருக்காலும் பொருந்தாது. இவர்கள் காணப்பட்ட திசைகட்குப் பல பெயர்கள் உடையராதலேயன்றி, அத்திசைகளினின்று வீசும்காற்றுக்களுக்கும் தனித்தனிப் பெயரிட்டு வழங்குதலானும் இவர்களுடைய திசையுணர்ச்சி நன்கறியத்தகும். கீழ்காற்றைக் கொண்டலென்பதும், "கொண்டலொடு புகுந்து" (சிலப். 14, 110), தென்காற்றைத் தென்றல் என்பதும், "தென்னவன் பொதியிற் றென்றல்" (சிலப். 24, 115), மேல் காற்றைக் கோடை என்பதும், "கோடையொடு புகுந்து" (சிலப். 14, 123), வடகாற்றை வாடை வடந்தையென்பதும், "காரரசாளன் வாடையொடு வருஉம்" (சிலப். 14, 93) இந்நாட்டு அடிப்பட்ட வழக்காம். இங்ஙனம் திசையை ஆளும் பெயர்களுள் ஞாயிறு தோன்றுந் திசைக்குக் கீழ் என்பதும், கிழக்கு என்பதும் இத் தமிழ் மொழியிற் பள்ளத்திற்குப் பெயராகவும் வழங்குதலுண்டு. ஞாயிறு மறையுந் திசைக்கு வழங்கிய மேல் என்பதும், மேற்கு என்பதும், மேக்கு என்பதும் மேட்டிற்குப் பெயராக வழங்கு

தலுமுண்டு. இவற்றுள் பள்ளம் மேடுகள் நேரே கண்ணிற்குப் புலனாவன என்பதும், கீழ்த்திசையும், மேற்றிசையும் ஞாயிறு தோன்றி மறைவதைக் கண்டு மனத்தால் உய்த்தே உணரத் தக்கனவென்பதும் அறியலாகும். கண்ணிற்குப் புலனாகிய ஒன்றின் பெயரைத்தான் அதைத் துணையாகக் கொண்டு மனத்தான் உய்த்து உணர்ந்தவொன்றிற்கு இட்டு வழங்கினரென்று நினைப்பதே பொருத்தமாகும். இதனால் கீழ், கிழக்கு எனவும், மேல், மேற்கு எனவும் இருபடியாக வழங்கிய பள்ளம் மேடுகளின் பெயர்களையே ஞாயிறு தோன்றும் திசைக்கும், மறையுந் திசைக்கும் இட்டனரென்று துணியலாகும். அங்ஙனம் இடுதற்கு இத்தமிழர் வதிந்த நிலம் இயல்பாகவே மேல்பக்கம் மேடாகவும், கீழ்ப்பக்கம் பள்ளமாகவும் இருப்பதே காரணமல்லது வேறு துணியலாகாது.

இங்ஙனம் இவரிட்ட திசைப் பெயர்க்கேற்ப உள்ளநாடு, வேங்கடங் குமரி ஆயிடைத் தென்னாடேயல்லது வேறு நாடாகா தென்பது பூகோள நூல்வல்லார் நன்கு அறிவர். ஞாயிறு தோன்றி யெழுந் திசையை உயர்ந்ததாகவும், அது வீழ்ந்து மறையுந்திசையைப் பள்ளமாகவும் கூறின் அது பொருத்த முடையதேயாகும். அதற்கேற்ற பெயர்களை இட்டு வழங்காது மாறி வழங்கியதன் காரணம் அவர் வதிந்த நிலத்தியல்பாலல்லது வேறொன்றாலன்றென யாரும் தெளியலாம். இப்பொழுதுள்ள மேற்குத்தொடர்ச்சி மலைக்கும், அப்பால் மேற்பாற் கடலிற்கும் இடைப்பட்ட நாடு இவ்வழக்கிற்கு மாறாகக் கீழ்பால் மேடும், மேல்பாற் பள்ளமுமாக இருந்தும், அந்நாட்டார் இத்திசை வழக்கைத் தம் நாட்டியல்பிற்கேற்ப மாற்றாது செந்தமிழ் நாட்டியல்பிற்கேற்பவே வழங்குதலான், தமிழ் ஆங்கு முதற்கட் டோன்றியதாகாமையுங் காண்க. அது பரசுராமனால் இடையிற் படைக்கப்பெற்றதென்பது பௌராணிகர் கொள்கை.

"பரசுபெறு மாதவ முனிவன்
பரசிராமன் பெறு நாடு"

(பெரியபுரா· விறன்மிண்ட. 1-ம் பாட்டு)

என்பது காண்க.

இவ்வாறு கிழக்கு மேற்கு முறையே பள்ளம் மேடாக உள்ள நாடு பிறர் கூறிய எந்த நாடும் ஆகாமை நன்று நோக்கிக்

கொள்க. சினதேயம் ஒருவாறு இயையுமேனும் ஆண்டுந்திசைப் பெயர் நிலத்தோடு பொருந்தாமை கேட்டறிக.

வடமொழியாளர் தாம் வதிந்த வடதிசையைப் புண்ணிய திக்கென்றும் ஆண்டுள்ளாரே சுவர்க்கம் புகுதற்குரியரென்றும் பாராட்டித் தென்றிசையை "அவாக்" என்றும் சாவைப்புரியுங் கூற்றுவன் திசை (யமதிக்) யென்றும் இழித்துக்கூறுவர். இதைக் கண்டு தமிழர் சுவர்க்கம், நரகம் இவற்றிற் புகுதற்குத் திசை நிலங் காரணமாகாதென்றும், அவரவர் வினையே காரண மென்றும், தென்னாட்டவரும் சுவர்க்கம் புகுவரென்றும், வட நாட்டிலும் நரகம் புகும் வீணர் பலருளரென்றும், சொல்லி அவர்க்கறிவுறுத்திய தமிழ்ப்பாடலும் கீழ்க்கணக்கில் உண்டு. அப்பாடல் வருமாறு:—

"எந்நிலத்து வித்திடினுங் காஞ்சிரங்காய் தெங்காகா
தென்னாட்டவரும் சுவர்க்கம் புகுதலால்
தன்னாற்றா னாகும் மறுமை வடதிசையுங்
கொன்னாளர் சாலப்பலர்" (நாலடி. 243.)

மற்று, அவர் தென்றிசையை அவாக்கென்றது, தங்கள் வாக்கு அல்லாத வாக்கு (வாய்மொழி) உடைமையான் என்று எளிதில் உணரலாம். தமிழல்லாத வாய்மொழியுடைமையால் தமிழருக்கு வடக்கும் அவாக்காகுமென்க. ஆசிரியர் கூறுந் தமிழை நகைச்சுவைக்கு மெய்ப்பாட்டியலிற் (சூத். 1 உரை) பேராசிரியர் எடுத்துக்காட்டலான் இதனுண்மை யுணரலாம். தமிழர் தாம் வதிந்த தென்றிசைக்குரிய "தென்" என்னும் மொழியை எந்த இழிபொருளிலேயும் வழங்காது, அழகு, கற்பு, இசை, இனிமை முதலிய உயர் பொருளிலே வழங்கி அந்நன் பெருமை பாராட்டிக் காட்டுதல் நன்கறியலாம்.

"மதனன் தன் தென்னீருருவம்" (தேவாரம். 1155)
என்றுமிடத்துத் தென் அழகுக்கு வந்தது.
"தென்னிசை பாடும் பாணன்"
(திருவால. திருவிளை. 567)

என்புழி இனிமைக்கு வந்தது. இசைபாடும்போதெல்லாம் இத்தமிழர் "தென்ன தென்னா தெனா" எனப்பாடிவந்தனரென் பதும் ஈண்டைக்கேற்ப நோக்கத்தகும். தென்னன் என்பது தென்றிசையாண்ட பாண்டியன் பெயராதலானும், அவன் இசை

வளர்த்தவன் ஆதலானும் அவன் பெயரையே விளித்து இசையினமைத்துப் பாடும் வழக்கம் இந்நாட்டில் உண்டாயிற்றென்று கருதுவது பொருந்தும். யமனை யழைத்துப் பாடியதென்பது பொருந்தாமை நோக்கிக் கொள்க.

''நிகரிலாத்,
தென்னா தெனாவென்று பாடுவரே லாளத்தி
மன்னுவிச் சொல்லின் வகை.''

(சிலப். அடியார்—உரை)

''மதுவை யுண்டு வரைதோறும்,
பன்னு சார லவையெங்கும்
பற்றி யார்க்கும் வகையே போல்,
முன்ன மோசை பலவாகி
முழுதும் வேறாய் மிடறொன்றாய்த்,
தென்ன வென்னு மிசைவளர்த்துப்
பண்ணா மாறு தேன்போல''

(சிலப். வேனிற்கா. உரை.)

இவற்றாலும் இத்தென்றிசை நிலத்தையே தமிழர் தம் நாடாகக்கொண்டனரென்பது விளங்கும். தென்றமிழ் என்ற பெரு வழக்கும் இதனையே வலியுறுத்தும்.

# கடல்கோள்

இவ்வளவென்று அளக்கமுடியாத பல்லாயிரம் ஆண்டு கட்கு முன்னே தமிழ்ப் பெருநிலம் ஆப்பிரிக்கா கண்டத்தோ டொட்டியதாயிருந்ததென்றும், பேரூழியிற் கடல்கொண்ட பல்லாயிரம் ஆண்டுகட்கப்பால் மின்னுங் கடலாற் கொள்ளப் பட்டதனால் இப்பொழுது இத்தமிழ் கூறு நல்லுலகம் தன்னள விற் சுருங்கிச் சிறியதாயதென்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர். நிலத்தியல்புங் கடலியல்பும் நன்கறிந்த மேற்றிசைக் கலைவல் லோரும், இவ்வாறு தமிழ் நாட்டிற்கும் ஆப்பிரிக்கா கண்டத்திற் குமிடையே ஒரு பெரு நாடு கடலில் அமிழ்ந்தது உண்மையென்று கூறுதலை இன்றுங் கேட்கின்றோம். முதற்கண்ட இப்பெரிய கடல்கொண்ட பேரூழியைப்பற்றித் தமிழ் நூல்களிலறியக்கிடப் பதொன்றுமில்லை. இக்கடல் கோளில் அழிந்த நிலப்பரப்பினை லிமோரியா அல்லது லிமிரிக் கண்டமென்பர். இது மச்சாவதாரக் கடல்கோளோ வேறோ துணிதற்கில்லை. பிற்பட்ட கடல் கோளையே பழந்தமிழ் நூல்கள் விரிவாயெடுத்துரைத்தலைப் பலருந் தெளியலாம்.

''மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
புலியொடு வின்னீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த்தென்னவன்''

(கலித். 104. 1—4)

''வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங்.கொடுங்கடல் கொள்ள''

(சிலப். காடுகாண். 18, 20)

என்றது, ''அங்ஙனமாகிய நிலக்குறைக்குச் சோழநாட் டெல்லையிலே முத்தூர்க்கூற்றமும் சேரமானாட்டுக் குண்டூர்க் கூற்றமும் என்னும் இவற்றை யிழந்தநாட்டிற்காக வாண்ட தென்னவன்'' (ஷை ஷை விசேடவுரை), இப்பின்னர் நிகழ்ந்த கடல் கோளுக்கு முன்னர் இத்தமிழ் நாடு தென்பக்கத்துக் கடலோரத் துக்கப்பால் அதிக நிலப்பரப்புடையதாயிருந்ததென்றும், அந் நிலப்பரப்பையடுத்துப் பஃறுளியென்னும் யாறு ஓடியதென்றும்,

அதற்கப்பால் பன்மலையடுக்கம் உண்டென்றும், அதற்கிப்பால் குமரியாற்றின் கரையிருந்ததென்றும் நூல்களாலும் உரைகளாலுந் தெரிகின்றேம்.

"வடிவே லெறிந்த கடல் கொள்ள"

எனச் சிலப்பதிகாரத்து வருதலானும்,

"நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும்"

(சிலப். 8, 1)

என்னுஞ் சிலப்பதிகாரத்து அடிக்கு அடியார்க்கு நல்லார் "தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளியென்னு மாற்றிற்கும் குமரியாற்றிற்குமிடையே எழுநூற்றுக் காவதவாறும், இவற்றின் நீர்மலிவானென மலிந்த ஏழ்தெங்கநாடும், ஏழ்மதுரை நாடும், ஏழ்முன்பாலைநாடும், ஏழ்பின்பாலைநாடும், ஏழ்குன்றநாடும், ஏழ்குணகாரைநாடும், ஏழ்குறும்பனைநாடுமென்னும் இந்த நாற்பத்தொன்பது நாடும், குமரி கொல்ல முதலிய பன்மலை நாடும் காடும் நதியும் பதியும் தடநீர்க்குமரி வடபெருங்கோட்டின் காறும் கடல்கொண்டது" என உரைத்தலானும் அறியலாம். பஃறுளியாறு குமரியாற்றிற்குத் தெற்கண் ஓடியதென்பது "குமரி வடபெருங் கோட்டின் காறும் கடல்கொண்டது" என்பதன்கண் பஃறுளியாற்றுடன் கடல்கொண்டதென்று கூறியதனால் நன்கு தெளியப்பட்டதாம். குமரியாற்றிற்கு வடக்கண் ஓடியதாயின் கடல், குமரியின் வடபெருங்கோட்டின் காறுமே கொண்டது என்றலின் பஃறுளியழியாது உளதாதல் வேண்டுமென்க. குமரியாறு ஓடிய நிலன் கடல்கொள்ளப்பட்டும் அது குமரிக்கரையெனவும், அதன் கடற்றுறை குமரித்துறையெனவும் வழங்குதலானும், அது பஃறுளிப் பெயரான் வழங்காமையானும் உண்மையுணர்க. உரையாசிரியர்,

"வடவேங்கடந் தென்குமரியாயிடை"

என்புழிக் "கடல்கொள்வதன் முன்பு பிறநாடும் உண்மையிற் றெற்கும் எல்லைகூறப்பட்டது" என்றாராலெனிற் கூறுவேன். ஈண்டு பிறநாடு என்றது தெற்கட்டமிழ்திரிமொழி வழங்கிய பிறநிலத்தையெனக் கொள்க. தெற்கட்டமிழ்திரிநிலனெனக் குமரிக்கு அப்பால் உள்ளநாடும் பாண்டியரதே என்பது அடியார்க்கு நல்லார் "அக்காலத்து அவர் நாட்டுத் தென்பாலி முகத்து வடவெல்லையாகிய பஃறுளியாறு" எனக் கூறியதனால்

அறியலாம். குமரிக்குத் தெற்கட் பஃறுளியை வைத்து அதற்குந் தெற்கே தென்பாலி முகத்தைவைத்து, அத்தென்பாலிமுகத்தை அவர் நாட்டுத் தென்பாலிமுகம் என்று விளக்கியதனால் இத னுண்மையறிக. தன்னாடாகி ஆறில்லாத இடனாதலின் ஆண்டு வடிம்பலம்ப நின்ற பாண்டியனாகிய நெடியோன் வளம்படுத்திப் பஃறுளியாற்றை உண்டாக்கினன் என அறிக. இதனை

"நெடியோனா லுளதாக்கப்பட்ட பஃறுளி"

எனப்புறப்பாட்டுரைகாரர் "முந்நீர் விழவினெடியோன் ..............பஃறுளி" என்புழி உரைத்ததுகொண்டு தெளிக. இவனே குமரியாற்றிற்கப்பால் முத்தங்கொழிக்கு முதுநீர்க் கடற்கு விழவெடுத்தனன் (புறம். 9) என்றும், நிலனுங்கடலுங் குமரியாற்றிற்கப்பாலும் இவனே உடையனென்று மறிக. பிற நாடென்றது தமிழ் கூறு நல்லுலகத்தின் வேறாய்ப் பிறதிசை மொழி வழங்கிய நாடென்று கொள்க.

இக்கடல்கோளிற் பஃறுளியாறும் பன்மலையடுக்கமும் குமரியின் வடபெருங்கரைவரையும் மூழ்கியழிந்தனவென்று நன்கு தெரியலாம். குமரியாறு முழுதுமழிந்ததென்றற்குக்

"குமரியின் வடபெருங்கோட்டின் காறும்"
என விளக்கினார்.

குமரியாறு ஒழிந்து அது கடலாகியபின் அக்கடற்றுறை குமரித்துறையெனத் தன் பழம்பெயரே பெயராய் வழங்கலாயிற் றெனத் துணியலாம். இதனால் மேலே இந்நூலுள் எடுத்தாளப் படும் பஃறுளியாற்றைப் பற்றியனவும் குமரியாற்றைப்பற்றி யனவுமாகிய செய்திப்பாடல்கள் கடல்கோளுக்கு முற்பட்ட காலத்தனவென்று தெரிந்துகொள்ளலாம். இக்கடல்கோட் காலத்தை வைத்து இதற்கு முன்னும் பின்னும் பன்னூல்கள் உண்மை கேட்கப்படுதலான் இக்கடல்கோள் நிகழ்ந்தகாலம் இஃதெனத் துணியவேண்டுவது இன்றியமையாததாகின்றது. தமிழ் நூல்களால் இக்கடல்கோள் நிகழ்ந்தது என்பதுமட்டில் துணியப்படுவதல்லது அதன் காலமிதுவென்று துணிவது அரி தாகவுள்ளது. ஆயினும், இறையனார் களவியலுரைக்கண்,

"முதற் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடல்கொள்ளப் பட்ட மதுரை" எனக்கூறுதலால் முதற்சங்கமென்றுண்டென்றும், அச்சங்கமுடிந்தது ஓர் கடல்கோளால் என்று மறிகின்றோம். அக்களவியலுரைகாரரே, இடைச்சங்கத்தைப்பற்றிக் கூறியவிடத்து "அகத்தியனார் தொல்காப்பியனார் முதலிய்யோர் அச்சங்கமிருந்தார் என்றும், அவரைச் சங்கமிரீஇயினார் வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறனீறாக ஐம்பத்தொன் பதின்மர் என்ப என்றும் அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்தென்ப, அக்காலத்துப்போலும் பாண்டிய நாட்டைக் கடல்கொண்டதென்றும் உரைத்தார். இதனால் முதற் சங்க வரலாற்றிற்குறித்த கடல்கோள் நிகழ்ந்தகாலம் இடைச் சங்கத் திறுதியிலென்று காட்டியவாறு தெளியலாம். இக்கடல் கோளையே அடியார்க்கு நல்லார்,

"நிலந்தரு திருவிற்பாண்டியன் தொல்காப்பியம் புலப்படுத் திரீஇயினன்; அக்காலத்து அவர் நாட்டுக்குமரியின் வடபெருங் கோட்டின் காறும் கடல் கொண்டது"

(சிலப். வேனில்—**உரை**).

என்றதனாற் றெளிய விளக்கினார். களவியலுரைகாரர் கடைச்சங்க வரலாற்றில்,

"கடைச்சங்கமிரீஇயினார் கடல்கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதியீறாக நாற்பத்தொன்பதின்மர் என்ப" எனவுரைத்தார்.

இதனால் இடைச்சங்கமிருந்த கபாடபுரமும், முதற்சங்கமிருந்த தென் மதுரையும் கடல்கோளால் அழிய அக் கபாடபுரத்திருந்த முடத்திருமாறன் எவ்வாறோ உயிர் தப்பிக் கடல் கொள்ளப்படாது போந்து, தன்னாட்டு வடக்கண் மதுரையைக் கண்டு, அதன்கட் சங்கத்தைத் தான் முன் இரீஇய முறையே இரீஇயினனென்று துணியத்தகும். கடைச்சங்கந் தொடங்கிய மதுரையை வடமதுரையென்றது அதற்கு மிகத் தெற்கே கடல் கோளால் முதற்கட் சங்கமிருந்தழிந்த தென் மதுரையை நோக்கியெனவுய்த்துணரலாம். இதனால் கடைச்சங்கத் தொடக்கத்தின் முன்னுக்கும் இடைச்சங்க விறுதிக்குமிடையே, முடத்திருமாறனென்னும் பாண்டியன் கபாடபுரத்திருந்த காலத்தே

பாண்டிநாட்டின் ஒருபகுதி கடல் கொள்ளப்பட்டதென்று நன்கு துணியப்படும். கபாடபுரத்திருந்த இடைச் சங்கத்துக்கும், வடமதுரையிலுண்டாகிய கடைச்சங்கத்துக்கும் இலக்கண நூலாயிற்றுத் தொல்காப்பியமென்பது நக்கீரனார், பேராசிரியர் முதலிய நல்லோர் துணிபாகும். இதனை "நக்கீரர் இடைச்சங்கத்தார்க்குங் கடைச்சங்கத்தார்க்கும் நூலாயிற்றுத் தொல்காப்பியம் என்றார்" என்று பேராசிரியர் "வினையினீங்கி" (மரபி. 94) என்னுந் தொல்காப்பிய மரபியற் சூத்திரவுரையிற் கூறுதலானுணர்க. இதனால் தொல்காப்பியர் கடல்கோளுக்கு முன்னரே இடைச்சங்கமிருந்த கபாடபுரத்துப் பழகியவராயிருத்தல் வேண்டுமென்று ஊகித்தல் பொருந்தும்.

அடியார்க்கு நல்லார், முதற்சங்க காலத்தினை முதலூழியிறுதி (ஆதியுகத்தின் முடிவு) என்று கொள்வர். அவர் "நெடியோன் குன்றமும்" (சிலப். 8) என்புழி,

"முதலூழியிறுதிக்கண் தென்மதுரையகத்திருந்த தலைச் சங்கத்து",

என உரைத்தலான் இஃதறியலாம். அவர் சிலப்பதிகார உரைப்பாயிரத்தில் "இரண்டாம் ஊழியதாகிய கபாடபுரத்தின் இடைச்சங்கத்துத் தொல்காப்பியம் புலப்படுத்திய சயமா கீர்த்தியனாகிய நிலந்தருதிருவிற் பாண்டியன் அவைக்களத்து" எனவுரைத்து, ஈண்டு வேனிற் காதைக்கண் தொல்காப்பியம் புலப்படுத்திரீஇயினவன் சயமா கீர்த்தியனாகிய நிலந்தருதிருவிற் பாண்டியன் என்றும், அக்காலத்து அவர் நாட்டு நாற்பத்தொன்பது நாடு கடல் கொண்டதென்றும் விளங்கவைத்தார். களவியலுரைகாரர் இடைச்சங்கவரலாற்றில் "அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமு மாபுராணமும் இசை நுணுக்கமும் பூதபுராணமுமென இவையென்ப, அவர் மூவாயிரத்தெழுநூறு யாண்டு சங்க மிருந்தாரென்ப, அவரைச் சங்கமிரீஇயினார் வெண்டேர்ச்செழியன் முதலாக முடத்திருமாறனீறாக ஐம்பத்தொன்பதின்மரென்ப, அவருட் கவியரங்கேறினார் ஐவர் பாண்டியரென்ப, அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்தென்ப: அக்காலத்துப்போலும் பாண்டியனாட்டைக் கடல்கொண்டது" எனக் கூறுதல் காண்க.

இவற்றுள் உலகியற்கியையாதன பல காணப்படுமேனும் இவ்வீருரைகாரரும் பாண்டிநாட்டைக் கடல்கொண்டது நிலந்தரு திருவிற் பாண்டியன் காலத்தெனவும்' முடத்திருமாறன் காலத்தெனவுங் கூறுதலை நன்கறிந்துகொள்ளலாம். இவ்வீருரையானும் இரண்டு கடல்கோள் உணரப்படாமல் ஒரே கடல்கோள் தான் உணரப்படுவது. அடியார்க்கு நல்லார் கடைச்சங்கத்தைப் பற்றியும், அஃதிருந்த வடமதுரையைப்பற்றியும் ஒன்றுங் கூறு தொழியினும் தங்கூற்றுக்கு ஆதரவாகக் "கணக்காயனார் மகனார் நக்கீரனாருரைத்த இறையனார் பொருளுரையானும், உரையாசிரியராகிய இளம்பூரணவடிகள் முகவுரையானும், பிறவாற்றானும் பெறுதும்" என வெடுத்துக்காட்டியதன்கண் நக்கீரனார் உரைத்த இறையனார் பொருளுரையை உடன்படுதலால், இக் கடல்கோளில் நக்கீரனார் கருத்தே அவ்வடியார்க்கு நல்லார் துணிபாதல் எளிதிலறியலாம். ஈண்டு அவர் உரையும் கடல் கோளைப்பற்றியேயெழுந்து விளக்கப்புகுந்ததாதல் "தொடி யோள் பௌவமும்" என்ற சிலப்பதிகாரத் தொடர்நோக்கி யறிக. இதனால், பாண்டிநாடு கடல்கொண்டது கபாடபுரத்து இடைச்சங்கத் திறுதிக்கண்ணென்று நன்கு துணியலாம்.

மற்று, அடியார்க்கு நல்லார் கடல் கோணிகழ்ந்தது நிலந்தரு திருவிற் பாண்டியன் காலத்தென்றும், களவியலுரைகாரர் முடத் திருமாறன் காலத்தென்றும் வேறு வேறு பெயர் கூறினாரா லெனிற் கூறுவேன். இவ் வீருரைகாரரும் ஒரு கடல்கோளையே குறித்தனரென்று முன்னரே தெளிவித்தேன். இவ்வுரையாளர்கள் குறித்த மேற்காட்டிய இருபெயரும் ஒரு பாண்டியற்கே யாமென்று கொள்ளாக்கால், இவ்விரு பாண்டியர் காலத்தும் இரு கடல்கோள்கள் நிகழ்ந்தனவென்று துணியவேண்டி வரு மென்க. "கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திரு மாறன்" என்ற களவியலுரையால் கடல்கோளுக்கு முன் இவனே கபாடபுரத்தில் இடைச் சங்கத்திறுதியில் இருந்தான் என்பது ஒருதலையாகத் தெளியப்பட்டதாகும். கடல்கோளுக்கு முன்னர் இவன் கபாடபுரத்திலிருந்தது உண்மையாயின், இக் கபாடபுரம் இவனினும் வேறெனப் பிறர் நினைக்கும் நிலந்தரு திருவிற் பாண்டியன் காலத்தே கடல்கொள்ளப்பட்டதென்பது பொருந்தாதாம். அன்றியும், முடத்திருமாறனும், நிலந்தரு

திருவிற் பாண்டியனும் வேறல்ல ரென்பது அப்பெயர்களானுந் துணியலாம். முடத்திருமாறன் என்புழித் திருமாறனென்பது அவன் இயற்பெயரெனவும், ஏதோ தன்னுடம்பு முடமாகிய காரணத்தால் முடத்திருமாறன் எனப்பட்டான் எனவும் எளிதில் ஊகித்தலாகும். நிலந்தருதிருவிற் பாண்டியன் என்புழித் திருவிற் பாண்டியன் என்பது இவன் இயற்பெயரெனவும், நிலந்தருதல் என்னும் அடை அவன் பகைவர் நிலத்தை வென்றுகொண்டதனால் உண்டாயதெனவும் உணரலாம். இவனே முன்னிலையில் நெடியோனாகிப் பின்னிலையில் முடமாயினனென்று நினைத்தல் பொருந்திற்றுகும். இவன் வழியினரிற் பிற்காலத்து வழுதியொருவன் கூன் பாண்டியன் எனவும், நெடுமாறனெனவும் அழைக்கப்படும் வரலாறுபோன்றது இஃதொன்றெனஅறிக. முடத்திருமாறன் என்புழித் திருமாறனென்னும் பெயரும், நிலந்தருதிருவிற் பாண்டியன் என்புழித் திருவிற் பாண்டியன் என்னும் பெயரும் அவன் குடிப்பெயர்பற்றிப் போந்த ஒரு பெயர்க்கே யிரு வழக்காமென்பது துணியலாகும். முன்னே நெடியோனுயினேன் கடல்கோட்பட்டுத் தப்பியபோது இவனுடல் ஏதோவொரு காரணத்தால் முடம்பட்டதெனின் நன்கு பொருந்தும். பெரிய வுரைகாரர்கள் பழையதோர் பெருநிகழ்ச்சியைக் குறித்துத் தம்முண் மாறுபடாவண்ணம் அவர் கூற்றை இயைத்துக் கொள்வதே நூனெறி முறையாமென்க. இவற்றால் இடைச் சங்கத் திறுதிக் காலத்துக்குச் சிறிது முன்னேட்டுத் தொல்காப்பியம் தமிழ்க் கிலக்கணமாயிற்றென்று நன்கு துணியலாம். கபாடபுரம் அழிந்ததன் பின்னர்ப் பாண்டிநாட்டில் ஓர் கடல்கோள் நிகழ்ந்ததாகப் பழைய நூல்களிற் கூறப்படாமையால் அந்நாட்டின்கண் இதுவே கடையாக நிகழ்ந்த கடல்கோளாகத் தெளியத்தகும். இதன் பின் சோணுட்டில் கிள்ளிவளவன் காலத்தே புகார்ப்பட்டினத்தைக் கடல்கொண்டது மணிமேகலை நூலால் (காதை. 28) தெரியலாம். அந்நூலிற் பாண்டிநாட்டுக்கு அக்கடல்கோளால் இடையூறென்றும் கூறப்படாமை காண்க. இம்முடிவு இன்னும் ஓராற்றுனுந் துணியப்படும். தொல்காப்பியம் செய்யுளியல் ''மாத்திரை எழுத்தியல்'' என்னும் முதற் சூத்திரவுரையில் ''இணை நூன்முடிபு தன்னூன் மேற்றே'' என்பதனுற் காக்கைபாடினியார் ஓதியதனையிலக்கணம் ஈண்டுங்கோடல் வேண்டுமெனின், அஃதே கருத்தாயின் இவர்க்கும் அவர் முடிபே பற்றித்

தலைதலையல்வேண்டும். அல்லதூஉம், அவர்க்கு இளையரான காக்கைபாடினியார் தலைகொண்டிலரென்பது இதனாற் பெற்றாம். தலைவேண்டினார் பிற்காலத்தோ ராசிரியரென்பது, என்னை?

"வடக்குந் தெற்குங் குணக்குங் குடக்கும்
வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்
றிந்நான் கெல்லை யகவயிற் கிடந்த
நூலதி னுண்மை வாலிதின் விரிப்பின்

எனக்கூறி வடவேங்கடந் தென்குமரியெனப் பனம்பாரனார் கூறியவாற்றானே எல்லைகொண்டார் காக்கைபாடினியார். ஒழிந்த காக்கைபாடினியத்து,

"வடதிசை மருங்கின் வடுகுவரம் பாகத்
தென்றிசையுள்ளிட் டெஞ்சிய மூன்றும்

எனத் தென்றிசையுங் கடலெல்லையாகக் கூறப்பட்டதாகலால் அவர் குமரியாறுள்ள காலத்தா ரல்லரென்பதூஉம், குறும்பனைநாடு அவர்க்கு நீக்கல் வேண்டுவ தன்றென்பதூம் பெற்றாம். பெறவே அவர் இவரோடு ஒரு சாலை மாணாக்கர் அல்லரென்பது எல்லார்க்கும் உணரல் வேண்டுமென்பது" எனப் பேராசிரியர் உரைத்த உரைத்திறத்தால் பெருங்காக்கை பாடினியார் தமிழகத்திற்குத் தென்னெல்லை குமரியாறென்று கூறினாரெனவும், அவர்க்கிளையரான காக்கை பாடினியாரென்றதனால் பெருங்காக்கை பாடினியாரும் சிறுகாக்கை பாடினியாரும் வேறுவர் எனவும், சிறு காக்கை பாடினியார் கடல்கோளுக்குப் பின்னுள்ளவரெனவுந் தெளியலாம். பெருங்காக்கை பாடினியார் தொல்காப்பியனாரோடு ஒருசாலை மாணாக்கரென்பது இவ்வுரையால் தெரியப்படுதலால் அவர் காலத்துக் கடல்கோள் நிகழாது அவர்க்குப்பின் அவர் பெயருடையார் காலத்து நிகழ்ந்ததென்பது பேராசிரியர் கருத்தாதல் துணிந்துகொள்க. இதனாலும் தொல்காப்பியனாரும் பெருங் காக்கை பாடினியாரும் நூல் செய்த காலத்தையடுத்தே யிக்கடல்கோள் நிகழ்ந்திருக்க வேண்டுமென்பது தெளிவாதல் காண்க. காக்கை பாடினியார் தொல்காப்பியனாரோடொரு சாலை மாணாக்கரென்பது நச்சினார்க்கினியருரையினுங் கண்டது. நச்சினார்க்கினியர் சிறுகாக்கை பாடினியாரைப் "பின்றோன்றிய காக்கை பாடினியார்" என்று கூறுவர்.

இனி, வான்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்துச் சுக்கிரீவன் தன் சேனையைச் சீதையைத் தேடவிட்ட சமயத்தில் தென்னாட்டிற் பல நாடுகளைக் குறித்ததன் பின்,

ततो हेममयं दिव्यं मुक्तामणिविभूषितं ।
युक्तं कवाटं पाण्ड्यानां ॥

(கிஷ்கிந்தா. 42; 13)

"வானரர்களே! அப்பால் பொன்மயமானதும், முத்து மணிகளால் அலங்கரிக்கப்பெற்றதும், திப்பியமானதும், தகுதியோடு கூடியதுமாகிய பாண்டியர் கபாடத்தைப் பார்ப்பீர்"

எனவருதல் காணலாம். இதனால் இவ்விராமாயண காலத்துக் கபாடபுரம் கடல்கோளால் அழியாது மிகவுஞ் சிறந்த நிலையிற் பாண்டியர் தலைநகராக விளங்குதல் துணியப்படும். வியாச பாரதம் துரோண பருவத்தில் ஸம்சத்தகவதச் சருக்கத்து (23 வது அத்தியாயம்)

"கேசவனாலே அரசனை தன் பிதாவும் யுத்தத்திற் கொல்லப்பட்டுப் பிறகு பாண்டியர்களுடைய கபாடபுரமும் பிளக்கப்பட்டு, உறவினர்களும் தங்கள் தங்கள் ஸ்தானத்தைவிட்டு ஓடிப்போன அமயத்தில், பீஷ்மரிடத்திலிருந்தும் அவ்வாறே துரோணரிடத்தினின்றும் பரசுராமரிடத்தினின்றும், கிருபாசாரியரிடத்தினின்றும், அஸ்திரங்களைப் பெற்று அந்த அஸ்திரங்களாலே ருக்மிகர்ணன், அர்ஜுனன், அச்சுதன் இவர்களோடு ஒப்புமையைப் பெற்றுத் துவாரகையை நாசம்பண்ணுவதற்கும் பூமி முழுதையுஞ் ஜயிப்பதற்கும் விரும்பினவனும், கற்றறிந்தவர்களான ஸ்நேகிதர்களால் நன்மையைக்கருதி அவ்வித முயற்சியிலிருந்து தடுக்கப்பட்டுத் தொடர்ச்சியான வைரத்தை விட்டுத் தன் இராஜ்யத்தை ஆண்டுவருகிறவனும், பலசாலியுமான ஸாகரத்வஜ பாண்டியன், சந்திர கிரணங்கள் போன்ற நிறமுள்ளவைகளும், வைடூர்ய மிழைத்த விரிப்புக்களால் மூடப்பட்டவைகளுமான குதிரைகளோடு பராக்கிரமமென்கிற பொருளைக் கைப்பற்றித் திவ்யமான தனுஸை நாணொலி செய்துகொண்டு துரோணரை எதிர்த்து வந்தான். பித்தளைபோன்ற நிறமுடைய குதிரைகள் பாண்டியனைப் பின்றொடர்ந்து வருகின்ற லக்ஷத்து நாற்பதினாயிரம் சிறந்த தேராளிகளைத் தாங்கின (ம. வீ. இரா.

மொழிபெயர்ப்பு) எனவருதலான் இக்கபாடபுரமும் பாண்டியரும் ஸ்ரீராமமூர்த்தி காலமுதற் பஞ்சபாண்டவர் காலத்துஞ் சிறந்து உயர்நிலையில் விளங்கியவாறு தெரியலாம். தமிழுரையாளர்கள் குறித்த பாண்டியர் பழைய தலைநகராகிய கபாடபுரம் என்பது உண்மையில் இருந்ததென்பதற்கு இவ்விரண்டு பெரிய இதிகாசங்களும் தக்க சான்றாதல் நன்கறியலாம். வியாசபாரதம் பலபல இடைச் செருகல் பெற்று இப்போதுள்ள முறையில் நிறைவேறியது கி. பி. மூன்றாம் நூற்றாண்டென்று இக்காலவாராய்ச்சியாளர் (Winternitz) துணிவர். கிறிஸ்து பிறந்ததன் பின் பாண்டிநாட்டுக் கடல்கோள் எந்நூலானுங் கேட்கப்படாமையின் கடல்கோளா லழிந்ததென்று உரைகாரர் கூறிய கபாடபுரம் நன்னிலையில் இருந்த காலம் கிறிஸ்து பிறத்தற்கு முற்பட்டதேயாமென்று துணியலாம். கபாடபுரம் அழிதற்குக் காரணமான கடல்கோளைப்பற்றிப் பின்னர்க் கூறப்படுதலான் இதனுண்மை உணரலாம். இராமாயண காலத்தை டாக்டர் பந்தர்கர் கி. மு. எழுநூறுக்குப்பின் ஆகாதென்றும் டாக்டர் விண்டர்னிட்ஸ் கி. மு. மூந்நூறுக்குப் பின்னாகாதென்றுங் கூறுவர். இவருள் டாக்டர் விண்டர்னிட்ஸ் என்பவர் டாக்டர் பந்தர்கர் தீர்மானத்தை நன்கு ஆராய்ந்த பின்னரும் இம்முடிபுக்கு வருதலால் அவர் துணிபே தேர்ந்து வரையறுத்ததாக வைத்துக்கொள்ளலாம். இங்ஙனம் வைத்துக்கொண்டால் பாண்டியர் கபாடபுரம் கடல்கோளாலழிந்தது கி. மு. மூந்நூறுக்குப் பின்பேயாமென்று தெளியலாம். இஃது இன்னும் ஒரு வகையானுந் துணியப்படும். அலெக்ஸாந்தருக்குப்பின் செல்யூகஸ் நிகேடர் என்னும் யவனவேந்தனாற் றூதுபோந்து, பாடலியிலிருந்த சந்திரகுப்த சக்கரவர்த்தியினிடம் நெடுங்காலந் தங்கியிருந்த மெகாஸ்தனீஸ் என்பவர், கி. மு முந்நூற்றைந்தாம் ஆண்டினராவர். அவர் காலத்துக்கு முன்பே சந்திரகுப்தனை அரியணையேற்றியவர் அர்த்த சாஸ்திரஞ் செய்த கௌடில்யரெனப் பெயரிய சாணக்கியராவர். அவர் கி. மு முந்நூற்றைந்துக்குப் பிற்பட்டவரேயாகாரென்பது நன்கு துணியப்படுவதாகும். அவர் தம் அர்த்த சாஸ்திரத்தில் (Book II Chap. 76) முத்துக்களின் பெயர்கள் கூறுமிடத்துப் பாண்டிய கவாடகம் எனவோர் முத்தின் வகையை எடுத்துக்காட்டுகின்றார். இம் முத்துத் "தென்கடல் முத்து" எனப்பழந்தமிழ் நூல்கள்

கூறும் பாண்டியர் கபாடபுரத்துக் கடலிலெடுத்துள்ள முத்தே யாமென்பது தெள்ளிது. பாண்டியர் தென்கடலில் முத்தெடுக்கப் பட்டு அக்கடற் கரையை அடுத்துள்ள கபாடபுரத்தே விலை கொள்ளப்படுமாதலாற் **பாண்டிய கவாடகம்** எனப்பெயர் பெற்றதென்று தெரியலாம். "தன் கடற்பிறந்த முத்தினாரம்" எனப்பாண்டியனை அகப்பாட்டிற் கூறுதலானிம்முத்துப் பாண் டியர் முத்தேயாதல் தெள்ளிது. இம்முத்துக் கபாடமுள்ள காலத்து முத்தாயினல்லது அவ்வூரில்லையாயழிந்த காலத்துக் கவாடமென வழங்கப் பெறுதல் அத்துணைப் பொருத்தமுடைத் தாகாது. கபாடமழிந்த பின்னர் வட மதுரையிற் கோயில் கொண்ட பாண்டியர் தம்முத்திற்குக் கவாடகம் என்ற பெயரே யிட்டு வழங்கினர் என்பதும் இயையாது. கொள்வாரும் மதுரை யிற்கொண்டு அழிந்த கவாடப் பெயரையிட்டனர் என்பதும் பொருந்தாமை காண்க. கவாடமழிந்த பின்னருள்ள தமிழ்ப் பெரும் புலவர் பலரும் பாண்டியர் கொற்கைத் துறையே முத் துடையதாகக் கூறுதல் காண்க. இதனை,

> "பாண்டியன், புகழ்மலி சிறப்பிற் கொற்கை முன்றுறை
> அவிர்கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து"
>
> (அகம். 201)

எனவும்,

> "இவர்திரை தந்த ஈர்ங்கதிர் முத்தம்
> கவர்நடைப் புரவி கால்வடுத் தபுக்கும்
> நற்றேர் வழுதி கொற்கை முன்றுறை" (அகம். 130)

எனவும்,

> "மறப்போர்ப் பாண்டிய ரறத்திற் காக்குங்
> கொற்கையம் பெருந்துறை முத்தின்" (அகம். 27)

எனவும் வருவன கொண்டு நன்குணர்க. கபாடபுரம் அழிந்த பின்னர்ப் பாண்டியர் கொற்கை முத்துடையராய காலத்து வட மதுரையைத் தமக்குத் தலைமையூராகக் கோயில்கொண்டிருந்த னர் என்பது,

> "பன்மீன் கொள்பவர் முகந்த விப்பி,
> நாரரி நறவின் மகிழ்நொடைக் கூட்டும்
> பேரிசைக் கொற்கைப் பொருநன் வென்வேற்
> கரும்பகட் டியானை நெடுந்தேர்ச் செழியன்
> மலைபுரை நெடுநகர்க் கூடல்" (அகம். 296)

என வருதலான் றியப்படும். இதன் கண்ணே,

"வலேருர் முகந்த முத்துச்சிப்பிகளைக் கள்விலைக்குத் தொகுக்குங் கொற்கைத் தலைவனுகிய பாண்டியனுடைய மலை போல் நெடிய மாளிகையுடைய கூடற்பதி"

என முத்துச்சிப்பிகளையுடைய கோற்கைத் துறையுங் கூடற்பதியும் (வடமதுரையும்) பாண்டியனுடையவாகக் கூறல் காணலாம். கபாடபுரம் அழிந்த பின்னர் உண்டாயது வட மதுரையென்பது பல்லுரையாளரும் எழுதியது.

"தென் பௌவத்து முத்து" (புறம். 380)
தென் கடல் முத்து" (பட்டினப்பாலை. 189)

"தத்துநீர் வரைப்பிற் கொற்கைக் கோமான்

தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை" (சிறுபாண். 62—67)

என இவற்றிற்கேற்ப வருதலுங் காண்க. இவற்ருற் கபாட புரம் அழிந்ததும், முடத்திருமாறன் வடமதுரையிற் போந்து கடைச் சங்க நிறுவியதும் கி. மு. 305-க்குப் பின் ஏதோவொரு காலமேயாகும் என்றும், அதற்கு நெடிது முன்னதாகாவென்றும் நன்கு துணியப்பட்டதாகும்.

இனி இலங்கைப் பௌத்த சரிதமான இராஜாவளியென்னு நூலில், கி. மு. 205-க்கும் 161-க்கும் இடையில் இலங்கையை வென்றுகொண்ட தமிழ் நாட்டரசனுகிய ஏலேலன் ஆட்சியில் கல்யாணியில் அரசுபுரிந்த திஸ்ஸா என்பவன் காலத்து ஒரு பெரிய கடல்கோள் உண்டாயிற்றென்பது கேட்கப்படுகின்றது. இலங்கைத் தீவிற்கும், இந்நாவலந் தீவிற் பாண்டியநாட்டிற் கோடிக்கரைக்கும் இருகாவத தூரமே யுண்மையால் அக்கடல் கோள் பாண்டிய நாட்டில் ஒருபகுதியை அழித்ததென்று நினைப் பது பொருந்திற்றே யாகும். இராஜாவளியில் இச்செய்தி வருமாறு :—

"திஸ்ஸா ராஜா கல்யாணியில் அரசுபுரியும்போது கடல் 7 லீக் தூரம் கல்யாணிக்கப்பாலிருந்தது. திஸ்ஸா ராஜா தன் மனைவிபால் முறைபிறழ்ந்த நட்புடையனென்று ஐயுற்று, திரு நான் ஸீன் என்னும் பௌத்தாசிரியனைக் காய்ச்சிய எண்ணெய்க்

கொப்பரையிலிட்டுக் கொன்ருனக, இலங்கைத் தீவைக் காத்த தேவர் வெகுண்டு பூமிமேற் கடல்பொங்கியெழச் செய்தனர். துவாபரயுகத்து இராவணன் கொடுமையால் அவனுடைய 25 அரண்மனைகளும் அடங்கிய மன்னூர்ப்புறத்து நிலம் கடலால் விழுங்கப்பட்டதுபோல இப்போதும் கல்யாணியாண்ட திஸ்ஸா ராஜாவிற்குரிய ஒரு லக்ஷம் ஊர்களும், 970 மீன் வலைஞர் சிற்றூர்களும், 400 முத்துக்குளிப்பார் கிராமங்களும் ஆக அவன் நிலத்து முக்காலேயரைக்காற் பாகமழிந்தது. அப்போது பலர் அக்கடல்கோளுக்குத் தப்பியோடியதுமுண்டு. மாதம்பை முதலிய சிலவூர்கள் இக்கடல்கோளிற்றப்பின" என்பது. இக் கடல்கோள் நிகழ்ந்தபோது கல்யாணியரசனுகிய திஸ்ஸா, தமிழ் வேந்தனுக்குத் திறையிடுதல் (ராஜாவளி. பக். 188) கூறப்படுதலால் இது ஏலேலர் காலத்தே நிகழ்ந்த கடல்கோளேயாதல் தெளிக.

இக்கடல் கோள், மகாவமிசம் என்னும் இலங்கைப்பெளத்த சரிதநூலில் இலங்கையிற் பெளத்த மதத்தொண்டு அளவிறந்து புரிந்த, "துத்தகாமினி" என்னும் அரசன் சரிதத்தில், கல்யாணியை ஆண்ட திஸ்ஸா ராஜா, பிக்ஷுவேஷம் பூண்ட ஒருவனை, அவனுடன் வந்தவனோடு தன் மனைவிபால் முறைபிறழ்ந்த காரியத்தில் தூதுபுக்கதாக நினைந்து, அவரைக் கொன்று கடலிலெறியச் செய்தனன் என்றும், கடற்றெய்வங்கள் இதற்குச் சினந்து கடலை நிலத்திற் பொங்கியெழச் செய்தனவென்றுங் கூறப்பட்டுள்ளது.*

டாக்டர் வில்ஹெல்ம் கீகர் என்பவர், ஏலேலா வேந்தன் காலத்தை கி. மு. 145-க்கும், கி. மு. 107-க்கு மிடையே நிறுவுவர்.* இராஜாவளியில் கி. மு. 205-க்கும் கி. மு. 161-க்கு மிடையே நிகழ்ந்ததென்று கருதப்படும் இக்கடல்கோள், சற்றே

---

*புத்தர் நிர்வாண காலத்தை யொட்டிக் கணக்கிட்டு வரும் இந்நூல்களின் கால அளவை தம்முள் ஒத்தில்லாமல் 60 ஆண்டு வேற்றுமைப்பட்டே கிடப்பது காண்க. இந்து, சீன, சிங்கள நூல்கள் புத்த நிர்வாண காலம் கி. மு. 543 என்றும், சரித்திர ஆராய்ச்சியாளர் 483 என்றுங் கூறுதலும் சண்டைக்கு நோக்கிக் கொள்க.

றக்குறைய 60 ஆண்டுகட்குப் பின்னதாக மகாவமிசத்தாற் றுணியப்படுதல் காணலாம். இவ்விரண்டனுள் முன்னதாகிய, கி. மு. 205-க்கும் கி. மு. 161-க்கும் இடைப்பட்டதென்னிற் கடல்கொள்ளப்பட்டுப் போந்த முடத்திருமாறன் கடைச்சங்கந் தொடங்கிய காலம் இற்றைக்கு 2139 ஆண்டுகட்கும், 2095 ஆண்டுகட்கும் இடைப்பட்டதேயாமென்று கருதலாம். இதனாற் கடைச்சங்கத் தொடக்கம் கி. மு. இரண்டாம் நூற்றாண்டின் உண்டாயதென்று தெளியத்தகும். கடைச் சங்கத்திருந்த பெரும் புலவரான மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் காலத்தவரான இளங்கோவடிகள் காலமும், இலங்கை மகாவமிச சரித்திரத்திற் கண்ட கஜபாகு மன்னன் காலமும் ஒன்றென்பது சிலப்பதிகாரத்தால் நன்கு துணியப்படுதலின், அச்சாத்தனார் அக்கஜபாகுவின் காலமாகிய கி. பி. 111 முதல் கி. பி. 133 வரை ஒன்றியிருந்தவராவர். இதனால், கடைச்சங்கம் கி. பி. 133 ஆம் ஆண்டினை யடுத்துமிருந்ததென்று தெளியலாம். இச்சங்கம் மேற்கண்ட கடல்கோட்படி கி. மு. இரண்டாம் நூற்றாண்டிற் றொடங்கப் பெற்றதாயின் அது சற்றேறக்குறைய 350 ஆண்டுகள் தழைத்திருந்ததென்று துணியலாம். இடைச்சங்க முடிவும், கடைச் சங்கத்தொடக்கமும் முடத்திருமாறன் என்ற ஒரு பாண்டியன் காலத்தே நிகழ்ந்ததென்று முன்னோர் வழி வழியாய்த் தேர்ந்து கூறிய செய்திக்கு இதுவே நன்கியைவதாகும். நமக்குக் கிடைத்துள்ள நல்லிசைப் புலவர் பழம்பாடல்களிற் சில, இக்கடல்கோளுக்கு முற்பட்டனவென்பதற்குத்தக்க காரணம் பலவுளவாதலானும், தொகை நூல்களிற் காணப்படும் புலவர்கள் ஒரு காலத்தவராகாது இறப்ப முந்தியவரும் பிந்தியவரும், இடைப்பட்டவருமாய்ப் பலதிறப்படுதல் நன்கு தெளியப்படுதலானும், அப்புலவர்கள் தொகை சிறிதேறக்குறைய ஐந்நூறாக எட்டுதலானும், இவரெல்லாம் ஒரு காலத்தவரென்று துணியக் கூடாமையான், இக்கடைச் சங்கத் தொடக்கக் காலம் இவ்வாறு கொள்ளவேண்டிற்றே யாகும்.

இனி, இக்கடல்கோளைப்பற்றிப் பண்டைத் தமிழ் நூல்களாற் கொள்ளக்கிடப்பன சிலவற்றை ஈண்டைக்கேற்ப ஆராய்ந்து துணிதல் இன்றியமையாததே யாகும். கலித்தொகையில்,

''மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
புலியொடு வின்னீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்''

என வருதலால், தன்னாட்டின் ஒரு பகுதியைக் கடல் கொண்டபின் பாண்டியன், சேரநாட்டிலுஞ் சோணாட்டிலுஞ் சில பகுதிகளை வலியினால் வணக்கிக் கொண்டான் என்று கூறுதல் காணலாம். இதனையே,

''பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையு மிமயமுங் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன்.''

(சிலப். 11, காடுகாண்.)

எனச் சிலப்பதிகாரத்துங் காணலாம். இதற்கு அடியார்க்கு நல்லார்,

''அங்ஙனமாகிய நிலக்குறைக்குச் சோழநாட்டெல்லையிலே *முத்தூர்க் கூற்றமும், சேரமானாட்டுக் குண்டூர்க் கூற்றமும் என்னுமிவற்றை யிழந்த நாட்டிற்காக ஆண்ட தென்னவன்.''

என வுரைத்தார்.

கலித்தொகைக்கண்,

''புலியொடு வின்னீக்கி......கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்,''

என்று கூறியதல்லாமல் சோணாட்டிலும், சேரநாட்டிலும் ஏதோ சில பகுதிகளைப் புலியும், வில்லும் நீக்கித் தன்கயற்கொடி பொறித்து வலியால் வணக்கிக்கொண்டான் என்று கூறியதல்லது இன்ன இன்ன பகுதிகளைக் கொண்டான் என்று கூறிற்றில்லை. அடியார்க்கு நல்லார் ''சேரநாட்டிற் குண்டூர்க் கூற்றத்தையும், சோணாட்டில் முத்தூர்க் கூற்றத்தையும் கடல்கோளில் இழந்த நாட்டிற்காகக் கொண்டு ஆண்டான்'' என்று கூறினர். இதற்குக் கூறிய மேற்கோள் சங்க நூல்களில் எம்மனோர்க்கு அகப்பட்டிலது. புறநானூற்றில் (24)

* '' முத்தாற்றுக் கூற்றமும் '' என்றிருத்தல் பொருந்தும். புறம் 24 பார்க்க.

"எவ்வி மிழலையொடு......................
பொன்னணி யானைத் தொன்முதிர் வேளிர்
குப்பை நெல்லின் முத்தூறு தந்த
கொற்ற நீள்குடைக் கொடித்தேர்ச் செழிய"

என மாங்குடி கிழார், தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாடியதன்கண், அவன் எவ்வியின் மிழலைக் கூற்றத்தோடு முத்தூற்றுக் கூற்றத்தையும் தன்னாட்டுக்குத் தந்த வெற்றியைப் பாராட்டுகின்றார். இது கடல்கோளுக்கு அடுத்து நிகழ்ந்த செய்தியாகத் துணிதற்கு இயலாது. கடல்கோள் நிகழ்ந்த பின்னர் அக்கடல்கோட்குத் தப்பிப்போந்த முடத்திருமாறனே, அல்லது அவனை அடுத்து அரசெய்திய பாண்டியனே கடல்கோளில் இழந்த நாட்டின் குறையைப் பிற நாடுகளினின்று வலியாற்கொண்டு நிரப்பினான் என்பதே பொருந்தும். இதனால் முத்தூற்றுக் கூற்றம் கடல்கோட்கப்பால் சோழர்கணின்று பாண்டியரால் வலிந்துகொள்ளப்பட்டது. ஏதோ ஒரு காரணத்தால் இழந்ததாக அதனை எவ்விமிழலைக் கூற்றத்தோடு தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் வென்று தந்தான் என்று கொள்வதே பொருந்திற்றாகும். இங்ஙனங் கொள்ளாக்கால் கடல்கோள் எவ்வி காலத்தை யடுத்து நிகழ்ந்ததாகத் துணிய வேண்டிவருமென்க.

இனி, இக்கடல்கோள் நிகழ்ந்தது, தொல்காப்பியம் அரங்கேறிய காலத்தது ஆதலால் தொல்காப்பியனார்க்கு "வடவேங்கடந் தென்குமரியாயிடை" எனப் பாயிரம் பாடிய பனம்பாரனார் காலத்ததும் ஆம் என்று துணிவது தகுவதாகும். அப்பனம்பாரனார் பாடிய குறுந்தொகைப் பாட்டில்,

"ஆர்கலி மிதித்த நீர்திகழ் சிலம்பிற்
கூரைசைந் தனையையாய் நடுங்கல் கண்டே" (52)

எனவருவதன்கண், கடல் எழுந்து மிகுத்தலால் நீரில் விளங்குகின்ற மலை அசைந்து நடுங்குதல் கண்டு எனக் கூறுவது, இவர்தாம் கண்கூடாகக் கண்ட பெருங் கடல்கோணிகழ்ச்சியை உவமை முகத்தாற் கூறினாரென்று துணிவது இயைபுடையதே யாகும். கடல் அலை மிகுத்துப் பெருமலைகளையும் நடுங்கச் செய்த செய்தி இவர்க்கு அடுத்து நிகழ்ந்து இவர் கண்கூடாகக் கண்டதொன்றாதலின் அதனையே எடுத்தாண்டனர் என்று

நினைக்கத்தகும். இத்தொல்காப்பியனார், பனம்பாரனார் என்னு மிருவருடன் ஒரு சாலை மாணாக்கராகிய இசை நுணுக்கம் செய்த சிகண்டியார், தமிழ் நாட்டெல்லை கூறுமிடத்து,

"வேங்கடங் குமரித் தீம்புனல் பௌவமென்
றிந்நான் கெல்லை தமிழது வழக்கே"

எனத் தெற்கெல்லையைக் கடலாகக் கூறாமல், குமரித் தீம் புனல் என்பதனால் தீம்புனற் குமரியாற்றை யழித்து அகப்படுத் திய கடல்கோளுக்கு முன்னரே அவர் இசை நுணுக்கஞ் செய் தனர் என்று துணியப்படும். தொல்காப்பியனாரோடு ஒருங்கு கற்றவரென்று கேட்கப்படுதற்கும் இஃதே இயைவதாகும்.

இனி மலையமான் திருமுடிக்காரியைக் கபிலர் பாடிய (122-ஆம்) புறப்பாட்டில்,

"கடல்கொளப் படாஅ துடலுந ருக்கார்
கழல்புனை திருந்தடிக் காரிநின் னாடே"

என வருதல் காணலாம். மலையமான் திருமுடிக்காரி நாடு, திருக் கோவலூரையும் முள்ளூர் மலையையும் உடைய நடு நாடென்பது பலரும் அறிந்தது. அந்நாட்டைக் கபிலர் "கடல் கொளப்படாஅ துடலுந ருக்கார்" என்று சிறப்பித்தார். இதன்கண் கடல் கொளப்படாஅ தென்பது -முடிவேந்தர் சேரபாண்டிய சோழர் என்னும் மூவர் நாட்டிற்கும் கடல்கொள்ளப்படும் எளிமையும், இக் காரி நாட்டிற்கு மட்டும் அக்கடல் கொள்ளப்படா அருமை யுங் குறித்ததென்று எளிதில் அறியலாம். இப்பெரும் புலவர் கடல்கொளப்படாமை ஒரு நாட்டிற்குச் சிறப்பாக வைக்கத் துணிந்தது, கடலடுத்த நாடு கடல்கோளால் இழந்த பேரிழவைத் தாம் கேட்டறிந்ததுபற்றியென்று உய்த்துணரலாகும். கட லுடைமையால் உண்டாகும் பெருநன்மையெல்லாம் பாராட்டாது அஃதில்லாமையாற் கடல்கொள்ளப்படாமையே இந்நாட்டிற்கு ஒரு சிறப்பென்று இவர் துணிவராயின், அது, கடல்கோளால் உண்டாகிய பெருங்கேடுகளைக் கேள்வியுற்று அக்கடல் இல்லா மையே நலமென்று துணிந்ததன் பயனென்று நினைக்கத் தகும். இதுவும் பாண்டி நாட்டுப் பண்டு நிகழ்ந்த கடல்கோள் வர லாற்றை வழி வழியாகக் கேள்வியுற்று அதனாற் பின்னருந் துணிந்து பாடினர் என்று தெளியலாகும். இவையெல்லாம் கடைச் சங்கத் தொடக்கத்து ஒரு கடல்கோள் பாண்டிநாட்டுத் தென்பகுதியில் நிகழ்ந்தது என்பதனை நன்கு வலியுறுத்துமென்க.

# சங்கம்

இனி இவர் இயலுடன் இசையையும் நாடகத்தையுஞ் சேர்த்து வளர்த்தவாறு கூறப்புக்கு முதற்கண் அங்ஙனம் வளர்த்த ஒரு பெருங்கலைக் கழகம் உண்டு என்பதுபற்றி ஆராயப் படும்.

இக்காலத்துச் சரித்திர வாராய்ச்சியாளர்க்கும், பாண்டியர் தமிழ்ப் பெரும் புலவர்களைத் தொகுத்து ஒரு பெரிய கல்விச் சங்கம் நிறுவியது உண்டோவென்று ஐயம் நிகழ்ந்து உரைத்த வற்றையும் காண்கின்றோம். இதுபற்றி நூல்கள் கூறுவன வற்றை எடுத்துக்காட்டி விளக்குவது இங்கு வேண்டுவதேயா கும். தேவாரத்துத் திருநாவுக்கரசு நாயனார் பாடிய திருப்புத் தூர்ப் பதிகத்து,

"நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி
நற்கனகக் கிழிதருமிக் கருளினோன் காண்"

எனப் பாடுதலால் இப்போதைக்கு 1300 ஆண்டுகளுக்கு முன் னம் இருந்தவராக நன்கு தெளியப்பட்ட அந்நாயனார் காலத்தே சங்கம் இருந்தது கேட்கப்பட்டுக் கூறப்பட்டுள்ளதென்று தெரிய லாம். இதனைச் "சங்கத்தமிழ்" (திருப். 30) என்று இவரோ டொத்த காலத்தவரென்று தெளியப்பட்ட பெரியாழ்வார் திரு மகளாகிய கோதையார் கூறியதிலும் 'சங்க முகத்தமிழ்' (பெரிய திருமொழி-3, 4, 10.) எனத் திருமங்கையாழ்வார் கூறியதிலுங் காணலாம். இதற்குப் பின் சுந்தர மூர்த்திகள் "பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன்" எனத் திருத்தொண்டத்தொகை யிற் கூறினார். மாணிக்கவாசகராகிய வாதவூரடிகளும் தாம் பாடிய திருக்கோவையாரில், (20)

"...........................................................
உறைவா னுயர்மதிற் கூடலி னாய்ந்தவொண் டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோவன்றி யேழிசைச்
சூழல்புக்கோ"

என்பதனால் கூடலில் இயற்றமிழ் ஆய்ந்ததும் இசைத்தமிழ் ஆய்ந்ததும் கூறுதல் காணலாம்.

இங்ஙனம் பெரிய சமயத் தலைவர்கள் துணிந்தது உண்மை யடியாக நெடுங்காலம் போந்த வழக்குப்பற்றியதென்று எளிதில் உணரலாம். இங்ஙனம் உண்டாகிய பெருவழக்கிற்குச் சங்கநூல் களில் மேற்கோளுளவாவென்று வினவியறிவது ஈண்டைக்கு வேண்டுவதேயாகும். மதுரைக் காஞ்சியில்,

"தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவி னெடியோன்" (761-63)

என வந்துள்ள அடிகளைக் கற்றோர் அறிவர். இதன்கண் "நல் லாசிரியர் புணர்கூட்டுண்ட புகழ்", என்பது நல்லாசிரியர் பலர் தம்முண் மனமொத்தியைந்த கூட்டத்தில் அவர்களோடு கல்வி இன்பம் துய்த்த புகழ் என்று கொள்க. நல்லாசிரியர் புணர்-நல் லாசிரியர் புணர்ப்பு (சங்கம்) என்றது ஆசிரியர் தம்முளொத் துப் புணர்ந்த கலப்பினையுடைய அவையென்றபடி. பசுங் கூட் டென்பது பசிய பல பொருள்கள் கலந்ததற்கு வருவதுபோலப் புணர்கூட்டு-புணர்ந்த கூட்டம் எனினும் இயையும். கூட்டுண்ட என்பது அவரோடு கலந்து துய்த்த எனினும் பொருந்தும். எங் ஙனமாயினும் இது பல்லாசிரியர் கூடியிருந்த நல்லவையையே குறிக்குமென்று துணிந்துகொள்க. உண்டவென்னும் வினையால் அக் கூட்டத்துள் இன்பந் துய்த்தவாறு கூறியதாம். இதற் கேற்பவே பனம்பாரனார் தொல்காப்பியப்பாயிரத்தில் "நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து" எனக் கூறுதலும் நோக்கிக் கொள்க. இவ்வவைக்கண் தொல்காப்பியம் அரங்கேற்றியது கூறியவாற்றால் இவ்வவை கற்ற பல பெரியார் குழுவிய நல்லவை யாதல் தெள்ளிது. தமிழ்க்குத் தலைசிறந்த இலக்கணமாகிய இப்பெருநூலைக் கேட்டு அதன் நலந்தேர்ந்து காணவல்ல தமி ழறிந்த பெரியார் இல்லாதது அவையுமாகாது அரங்கேற்றத்திற் குரியது மாகாதென்பது கண்டு உண்மையுணர்க. இதனாற் பாண்டியர் கல்வி அவையம் நெடுங்காலத்துக்கு முன்னரே உளதாதலறியலாம்.

இனிச் சிறுபாணாற்றுப் படையில்,

'தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை" (66-67)

என வருவது காணலாம். இதன்கண் நச்சினார்க்கினியர் "தமிழ் நிலை பெற்ற மறுகின் மதுரை" எனக் கூட்டித் தமிழ் வீற்றிருந்த தெருவினையுடைய மதுரை என உரை கூறினார். தமிழ் வீற்றிருத்தல் தனியே நிகழாதென்பது யாம் கூறியறிவிக்க வேண்டியதன்று. இது தமிழ்ப் புலவர் வீற்றிருந்த தெருவையே குறிக்குமென்பது தெள்ளிது. வீற்றிருந்த என்பது வீறுடன் இருந்த என்றவாறு. இவர் இங்ஙனம் கொண்டாராயினும் தமிழ் நிலை பெற்ற மதுரையென்று நின்றபடியே இயைத்துக் கூறினும் இவ்வுண்மையே புலப்படுவதாகும். தமிழ் நிலைபெறுதல்,

"வடவேங்கடந் தென்குமரியாயிடைத் தமிழ் கூறு நல்லுலகத்திற்குப்" (பனம்பாரனார்) பொதுமையேயாகவும் ஈண்டு, தமிழ் நிலை பெற்ற மதுரை என அவ்வெல்லைக் குட்பட்ட பாண்டியர் தலைநகரைத் தனியே சிறப்பித்ததற்கொரு காரணம் வேண்டும். ஈண்டு, நிலைபெற்றவென்னுஞ் சொற்கு நிலைபெறுதலையெய்திய வென்று பொருள் கூறின் அது தமிழ் கூறும் நல்லுலகத்திற்கே பொதுவாதலின் இத் தலைநகர்க்கே சிறந்ததாகாது.

"பாண்டிய நின்னாட்டுடைத்து நல்ல தமிழ்"
(முருகாற்றுப்படை நச்-உரை மேற்கோள்)

என்று ஔவையார் பாடலில் வருதல்பற்றி நல்ல தமிழுடைமை யாற் கூறினாரெனின் அதற்கேற்றபடி தமிழை நன்மையால் விசேடிப்பர். ஈண்டுத் தமிழைச் சிறப்பித்து ஓரடையுமில்லாமை நோக்கிக் கொள்க. இதனால் நிலைபெற்றவென்பது ஒரு சொல்லெனக் கொள்வது ஆசிரியர் கருத்தன்றெனத் துணிக. மற்றென்னோ பொருளெனிற் கூறுவேன். தமிழ் நிலை என்பது தமிழ் நிலையை(த் தன்கட்பெற்ற) மறுகின் மதுரை என்க. தமிழ் நிலை என்பது தமிழ் நிலை நின்றவிடம்.

"ஆனிலை.........உமிழ்வோ டிருபுலனுஞ்
சேரார்" (ஆசாரக். 33)

இவ்விடத்து ஆனிலை-பசு(பசு நிற்குமிடம், பசுக்கொட்டில்) தேர் நிலை, நீர் நிலை, படை நிலை (பதிற். 78) என்பனபோல இத் தமிழ் நிலையையும் இடமாகக் கொள்வதே ஆசிரியர் கருத்துக்

கியையும். இவ்வாறு பிற ஊர்கள் பெருமையுங் காண்க. சேர சோழரும், தமிழுடையரேனும், அவரைத் தமிழாற் சிறப்பிக்காது பாண்டியரையே சிறப்பித்தல் நூல்களிற் கண்டுகொள்க.

"வில்லுடையான் வானவன் வியாத் தமிழுடையான்
பல்வேற் கடற்றுனைப் பாண்டியன் - சொல்லிகவா
வில்லுடையான் பாலை யிளஞ்சாத்தன் வேட்டனே
நெல்லுடையான் நீர் நாடர் கோ"

(யாப். விருத். மேற்கோள். ப. 229)

என்ற பழம் பாடலையுங் காண்க.

இனி 76-ஆம் புறப்பாட்டில் தலையாலங் கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன்,

"ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் றலைவ னாக
வுலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை"

என வஞ்சினங் கூறுதலான் அவனைச் சார்ந்து பலர்புகழ் சிறப்பிற் புலவர் நிறைந்திருந்தனர் என்பதும், அவர்க்கெல்லாம் மாங்குடி மருதன் தலைவனாயினன் என்பதும் கூறுதல் காணலாம். பலர்புகழ் சிறப்பிற் புலவர்—நல்லிசைப் புலவர் என்பது அறியத்தகும். இவர் பலராதலானன்றே ஒருவன் தலைமை யெய்தவேண்டிற்றென்பது. இதனால் ஒரு பேரரசன் போற்றி யாதரிக்கப் புலவர் பலர் ஒரு பெரியோன் தலைமையில் இயைந்து வாழ்ந்தனரென்று உணரப்படும். கலித்தொகை 68-ஆம் பாட்டில்,

"மதிமொழி யிடல்மாலை வினைவர்போல் வல்லவர்
செதுமொழி சீத்த செவிசெறு வாக
முதுமொழி நீராப் புலனா வுழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர."

என்னும் அடிகட்கு, "பிறர்க்கும் இம்மண்ணுலகம் பொதுவென்னும் மொழியின்றாக மண்ணுலகம் முழுவதும் ஆளும் சக்கரவர்த்திகளுக்கு அறிவாகிய சொல்லைச் சொல்லுதலை இயல்பாகவுடைய அமைச்சரைப்போல நூல்வல்ல ஆசிரியராலே பொல்லாவாகிய சொற்கள் இடையிற் புகுதாமற் போக்கப்பட்ட தஞ்செவிகள்

செய்யாக, முன்னுள்ள சான்றோர்கள் கூறிய செய்யுட்கள் தம் சொல்லை வளர்க்கும் நீராக, அறிவினையுடைய நாவாகிய ஏரால் உழுதுண்ணும் புலவருடைய புதிய கவிகளைக் கொள்ளை கொண்டு உண்ணும் மதில்சூழ்ந்த புனலையுடைத்தாகிய மதுரையை உடையவனே."

என நச்சினார்க்கினியர் உரைத்தது காணலாம். இதன்கண் பேரரசனுக்கு அமைச்சனைப்போல, நூல்வல்ல ஆசிரியர்கள் பலர் மதுரைக்கண்ணிருந்தனர் என்றும், பேரரசனாகிய பாண்டியற்கு அவர்தம் செவி செய்யாகவும், சான்றோர் செய்யுட்கள் நீராகவும், அவர்தம் நா ஏராகவும் கொண்டு புலமுழுதுண்ணும் புலவரென்றும், அவர் புதிய புதிய கவிகளை மிகுதியாக உண்டாக்குபவரென்றும், அச்செய்யுள் வளத்தைக் கொள்ளைகொண்டுண்டது மதுரை என்றுங் கூறியது காணலாம். மதுரையை இவ்வாறு விசேடித்தது பாண்டியற்கு அவன் அமைச்சரை யொத்துப் பல்வகை யறிவினையும் இனிய செய்யுளாலூட்டும் புலவர் பலர் அவ்விடத்திலிருந்தனர் என்பதை நன்கு புலப்படுத்தற் கென்க. தமிழ்வேந்தர் மூவர்க்கும் பொதுவாமெனின் இவ்வாறு சேரர் வஞ்சியையும், சோழர் உறையூரையும், புலநாவுழவர் புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூராகக் கூறாமையால் இது கூடற்கே சிறந்த புலவர் குழுவினைத் தெளியக் காட்டும் என்று ஆராய்ந்துகொள்க.

கலித்தொகை 35-ஆம் பாட்டில்,

"நிலனாவிற் றிரிதரூஉ நீண்மாடக் கூடலார்
புலனாவிற் பிறந்தசொற் புதிதுண்ணும் பொழுதன்றோ"

என வருதலுங் காண்க. இதன்கண் கூடலார் புலனாவிற் சொற் புதிதென்றது மதுரையின்கண் உள்ள சான்றோர்தம் அறிவுடை நாவின்கண், தோன்றும் சொற்புதுமை என்றவாறு. இது கூடலிற் குழாங்கொண்ட சான்றோரையும், அவர் அறிவுடை நாவன்மையையும், அவர் புதிது புதிதாகப் பாடும் செய்யுட்டிறத்தையும், குறித்ததென்று எளிதில் அறியத்தகும். இது கூடற்கே சிறந்தது; அல்லாக்கால்,

"கூடலார் புலனாவிற் பிறந்தசொற் புதிது"

என வேண்டாதாகும். இக்கருத்தானன்றே கரிக்கண்ணனார் என்பவர் மதுரையைத் "தமிழ்கெழு கூடல்" (புறம் 58) என்றார் என்க. தென்றமிழ் நாடுமுழுதும் தமிழ் பொருந்திய ஊர்களே உடையதாகவும் அவற்றைப் பிரித்து வேறே "தமிழ் கெழு கூடல்" என்றது இங்கே தமிழ் கெழுமுதல் பற்றி என்று எளிதிற் றுணியலாம்.

"இமிழ்குரன் முரச மூன்றுட னாளுந்
தமிழ்கெழு கூடற் றண்கோல் வேந்தே"

என அவர் உரைப்பர். இதன் பழையவுரைகாரர் "ஒலிக்குங் குரலையுடைய முரசு மூன்றுடனே ஆளும் தமிழ் பொருந்திய மதுரைக்கட் குளிர்ந்த செங்கோல் வேந்து" என உரைத்தார். ஈண்டு மூன்று முரசுடன் ஆளப்படுகின்ற தமிழ் பொருந்திய மதுரை என்றது, மூன்றுமுரசுடன் முத்தமிழும் ஆளப்படுகின்ற சிறப்புப்பற்றியென்று எளிதில் அறியலாம். மூன்று முரசுடன் ஆளும் மூன்று தமிழ் பொருந்திய மதுரை என்க. தமிழ் ஆளப் படுதல் என்றது நாடுபோற் குற்றங் களைந்து, நல்லன கண்டு, தமிழ் போற்றப்படுஞ் சிறப்பானென்று கொள்க. இங்ஙனம் கொள்ளாக்கால், தமிழ்கெழீய தன்மை, மற்றை இருவர் தலை நகர்க்கும் பிறவூர்க்கும் ஒக்குமென்க.

"பொத்தி யாண்ட பெருஞ் சோழனையும்
வித்தை யாண்ட விளம்பழையன் மாறனையும்
வைத்த வஞ்சினம் வாய்ப்ப வென்று"

(பதிற்று. 90 பதிகம்)

என வருவதன்கண் வித்தையாண்டவன் என்று பாண்டியன் கூறப்படுதலையும் ஈண்டைக்கேற்ப நோக்கிக் கொள்க. "ஆளுந் தமிழ் கெழுகூடல்" "வித்தையாண்ட மாறன்" இத்தொடர் களின் கருத்தொற்றுமை எளிதில் விளங்கலாம். சோழனைப் * "பொத்தியாண்ட" என்று ஒரு புலவனை ஆண்ட அளவே கூறிப் பாண்டியனை "வித்தையாண்ட" என்பதனாற் கல்வி முழுதும்

* பொத்தியார்—கோப்பெருஞ் சோழற்கு உயிர்த்துணையாகிய பெரும்புலவர் (புறம்—223)

"பொத்தில் நண்பிற் பொத்தியொடு கெழீஇ" (புறம்—212)

ஆண்டது கூறுதல் உணர்ந்து கொள்க. கோப்பெருஞ் சோழன் பொத்தியாண்ட வரலாறு புறப்பாட்டிற் காண்க. இப்பழையன் மாறன் ஒரு சிற்றரசன் என்றெழுதினாரும் உண்டு.

''நெடுந்தே, ரிழையணி யானைப் பழையன் மாறன்
மாடமலி மறுகிற் கூடலாங்கண்''

(அகம். 346)

என வருதலான் கூடலையாண்ட பேரரசனேயாதல் தெளியலாம். சோழனையும் மாறனையும் ''வைத்த வஞ்சினம் வாய்ப்ப வென்று'' என்ற எண்ணும்மையாலும் ஒத்த பேரரசர் இருவரை வென்றது குறித்தல் காண்க.

''பழுதில் கொள்கை வழுதிய ரவைக்க
ணறிவுவீற் றிருந்த செறிவுடை மனத்து
வான்றோய் நல்லிசைச் சான்றோர் குழீஇ
யருந்தமிழ் மூன்றுந் தெரிந்த காலை''

என இடையள நாட்டு மணக்குடியான் பால்வண்ணதேவனை வில்லவதரையன் அகநானூற்று உரைப்பாயிரத்துக் கூறுதலும் காண்க. இக்கருத்தானன்றே பாண்டியர் நாட்டைத் தென்றமிழ் நாடென்றும் அவர் தலைநகரைத் தமிழ் மதுரையென்றும் இளங் கோவடிகளும், சாத்தனாரும் வழங்கிக் காட்டுவாராயினர் என்க.

''தென்றமிழ் நாட்டுத் தீது தீர் மதுரை''

(சிலப். 10, 58)

''தென்றமிழ் மதுரைச் செழுங்கலப்பாவாய்''

(மணிமே. 25, 139)

என வருவன காண்க.

இளங்கோவடிகள்,

''புலவர் செந்நாப் பொருந்திய நிவப்பிற்
பொதியிற் றென்றல் போலா தீங்கு
மதுரைத் தென்றல் வந்தது காணீர்''

(சிலப். புறஞ்சேரி. 130-32)

என்பதனால், பொதியத் தென்றலினும் மதுரைத் தென்றற் குள்ள சிறப்பு, புலவர் செந்நாப் பொருந்திய ஏற்றமென்று தெரியக் கூறுதல் காணலாம், பொதியச் சந்தன மணங் கமழ் தென்

றலினும் மதுரையிற் தமிழ் மணங் கமழ் தென்றல் வீழிய தென்பதே அடிகள் கருத்தாதல் காண்க. ஈண்டு அடியார்க்கு நல்லாரும் "சங்கப் புலவரது செந்நாவாலே புகழப்பட்ட இச் சிறப்புக்களை யுடைத்தாகலிற் பொதியத் தென்றல் தன்னை ஒவ்வாமைக்குக் காரணமாகி இந்த மதுரைத் தென்றல் வந்தது" எனக் கூறுதல் காண்க;

தென்ற லசைவரூஉஞ் செம்மற்றே யம்மநின்
குன்றத்தாற் கூடல் வரவு"

என்ற பரிபாடலையும் (8, 27—28)

அதற்குப் பரிமேலழகர்,

"தென்றலசையுந் தலைமைத்து நின்,
குன்றத்தோடு கூடல் இடைவழி"

எனவுரைத்ததனையும் ஈண்டைக்கேற்ப நோக்கிக் கொள்க. பாண்டியர் கலைவளர்த்ததற்கேற்பச் செழுங்கலை நியமமாகிய சிந்தாதேவி கோயில் மதுரையினுண்மை மணிமேகலையா னுணரப் படும். இதனை ஆபுத்திரன் றிறமறிவித்த காதையில் "தக்கண மதுரை தான்சென் றெய்திச், சிந்தா விளக்கின் செழுங்கலை நியமத், தந்தின் முன்றி லம்பலப் பீடிகைத் தங்கினன்" (105—108)

என வருதலானறிக.

இங்ஙனம் தமிழ் வளர்த்த பெருஞ் சிறப்புக் கூடற்கே உண்மையான், பரிபாடலுடையார் "புலத்தினும் போரினும் போர்தோலாக் கூடல்" (19) என்றார். இதற்குப் பரிமேலழகர் "அறிவினும் வீரத்தினும் பிறரைப் போர்வெல்லுங் கூடல்;' என வுரைத்தல் காண்க. இன்னும்

"தண்டமிழ் வேலித் தமிழ்நாட் டகமெல்லாம்
நின்று நிலைஇப் புகழ்பூத்த லல்லது
குன்றுத லுண்டோ மதுரை" (பரிபாடல் திரட்டு. 8)

என எடுத்தோதலுந் தெரிக. இதன்கண் தண்டமிழ் வேலி என்பது அடுத்து வந்த தமிழ்நாட்டகத்தோடியையின் கூறியது கூறலாகவே முடியும். தமிழ் நாடு—தமிழ் நிறைந்த நாடென்பதும், தமிழ் வேலி என்பது தமிழ்க்குக் காவல் என்பதும் நன்கு தெளியலாம். இதனால் தமிழ் நாட்டகமெல்லாம் தண்டமிழ்க்கு வேலியாய் நின்று நிலைஇ மதுரை புகழ் பூத்தலல்லது குன்றுதல்

உண்டோ என்று கொள்வதே பொருந்திற்றுதல் காண்க. மதுரையைத் தண்டமிழ் வேலியென்றது தமிழ்நாட்டுத் தமிழ்ப் பயிர் வளரத் தான் வேலியாதற் சிறப்பால் என்று எளிதி லுணரத்தகும். ஆண்டுத் தமிழ் மொழிக்குப் பெருங்காப்பாக நிலவிய பெருங்குழு ஒன்று இருந்ததென்பதை இத்தொடர் குறிக்காமலிராது.

> "ஆரிய நன்று தமிழ் தீது"
>
> "முரணில் பொதியின் முதற்புத்தேள் வாழி"
>
> (தொல். செய். 178 உரை)

இவை "தெற்கண் வாயில் திறவாத பட்டி மண்டபத்தார் பொருட்டு நக்கீரர் ஒருவன் வாழவுஞ் சாவவும் பாடி இன்னவாறாகவெனச் சபித்தற்பொருட்டு வந்த மந்திரம் பாட்டாய் வருதலின் அங்கதமாயின" என்றார் பேராசிரியர். இதனால், கூடலில் வடமொழிப் பட்டிமண்டபம் ஒன்றிருந்ததென்றும் அதன் கணிருந்த குயக்கோடன் "ஆரிய நன்று தமிழ் தீது" எனக் கூறினன் என்றும், அதுகேட்டு நக்கீரர் தமிழவையின் சார்பாக அவனைச் சபித்தனர் என்றும், பின் பலர் வேண்ட உயிர்ப்பித்தனர் என்றும் தெரியலாம். இக்கதையும் கூடலில் இருமொழி நல்லவையுமிருந்தனவென்று காட்டும். மதுரைப் பெயரான் பல பல புலவர் பெயர் சிறத்தலும் ஈண்டைக்கேற்ப நோக்கிக் கொள்க. "பட்டிமன் தென்னன்" எனத் தேவாரத்தும் வந்தது. "மதுரைத் தொகையாக்கினானும்" எனத் தேவாரம் பணித்தற்கும் இதுவே காரணமென்க. மதுரைத் தொகை, கூடலிற்றொகுத்த தொகை நூல்கள் என்றேனும் கூடலிற்றொகுப்புண்ட குழு என்றேனும் பொருள்படுதல் நோக்கிக் கொள்க. 'பட்டிமண்டப மேற்றினை' என ஆளுடைய அடிகளும் பாடுதல் காண்க. இங்ஙனம் வடமொழியுடன் தமிழ்க் கல்வியைப் பல்வகையானும் வளர்த்த செல்வப்பாண்டியர் நான்மாடக் கூடலின் பண்டைப் பெருஞ் சிறப்பின் தொடர்பினானே ஆளுடைய பிள்ளையாரும் தம் திருப்பாட்டில், "மனவஞ்சர் மற்றோட முன்மாதராரும் மதிகூர் திருக்கூடலில்" (க்ஷேத்திரக். 6) என அருளிச் செய்தனர் என்க. மைந்தர் மதிகூர்தலைத் தழுவியே மாதராரும் மதிகூர் திருக்கூடல் என்றது நோக்கிக் கொள்க.

இவ்வுண்மையானன்றே தொல்காப்பியத்துக்குரையிட்ட நல்லுரையாளர் பலரும் கூடலிற் சங்க முண்மைக்கு உடன்பட்டனரென்று தெளியலாம். பாண்டி நாடு பஞ்சம் பட்டபோது புலவர் பலர் கூடலை விட்டுப் போய்ச் சோணாட்டு (தொல். அகத். 30. உரை) ஆலஞ்சேரி "அயிந்தன்" என்பவனால் ஆதரிக்கப் பெற்றுப் பின் நாடு நாடாயினபோது கூடற்கு மீண்டு வந்தாராக, அவரைக் கண்டு பாண்டியன் கண்ணீர் வார்ந்தது நோக்கி,

"காலை ஞாயிறு கடுங்கதிர் பரப்பி
வேலையுங் குளனும் வெடிபடச் சுவறித்
தந்தையர் மக்கண் முகம்பா ராமல்
வெந்த சாகம் வேறுவே றருந்திக்.
குணனுள தனையுங் கொடுத்து வாழ்ந்த
கணவனை மகளிர் கண்பா ராமல்
விழித்தவிழி யெல்லாம் வேற்றுவிழி யாகி
யறவுரை யின்றி மறவுரை பெருகி
யுறைமறந் தொழிந்த வூழிக் காலத்துத்
தாயில் லவர்க்குத் தாயே யாகவுந்
தந்தையில் லவர்க்குத் தந்தையே யாகவும்
இந்த ஞாலத் திடுக்கண் டீர
வந்து தோன்றினன் மாநிதிக் கிழவ
னீலஞ் சேரு நெடுமால் போல்வா
னாலஞ் சேரி அயிந்த னென்போன்
ஊருண் கேணி நீரொப் போனே
தன்குறை சொல்லான் பிறர்பழி யுரையான்
மறந்தும் பொய்யான் வாய்மையுங் குன்றான்
இறந்து போகா தெம்மைக் காத்தான்
வருந்த வேண்டா வழுதி
யிருந்தன விருந்தன விடர்கடிந் தனமே"

(தொல். அகத். 30. நச். உரை)

எனப் பாடியதும் உண்மை கண்டுகொள்க. இது நச்சினார்க்கினியர் தொல்காப்பிய வுரைக்கண் எடுத்தாண்ட பாடற் பகுதியாகும். இப்பாடல் தமிழ் நாவலர் சரிதையில் உள்ளவாறு காண்க. களவியலுரைக்கண் நக்கீரனாரும் அவர் வழியினரும்

மூன்று வகைச் சங்கமும் பகுத்து விரித்தல் காணலாம். அதன் கண் சிறிதேனும் உண்மையில்லையென்று சொல்லல் இயலாது. இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் முதலிய பலரும் கூறுதல்காண்க. பரிமேலழகர்,

"தமிழ் வையைத் தண்ணம்புனல்"

என்னும் பரிபாடலில் தமிழுடைய வையைக்குத் தமிழ் வையை என்று கூறினர். இஃது அதன் கரையின்கண் உள்ள தமிழ் நிலயத்தைக் குறித்ததல்லது வேறு வகையால் தமிழுடையது குறித்ததாகாதென்று உய்த்துணர்ந்து கொள்க.*

இத்துணையுங் கூறியவாற்றான் நஞ்செந்தமிழ்ப் பெரியார் உடன்பட்ட தமிழ்க் கல்விச் சங்கம் ஆகிய 'பாண்டியனவையம்' தொல்காப்பிய நூல் அரங்கேறிய காலத்துக்கு முன்புதொட்டு உண்டாகிப் பின்னே நெடுங்காலம் இருந்தது உண்மையென்று மேற்காட்டிய முன்னூல் பின்னூல் மேற்கோள்களால் உணர்ந்து கொள்க. தமிழ் நாட்டிற் பல் ஊர்களினும் "எட்டுவகை நுதலிய அவையத்தானும்" என்னுந் தொல்காப்பிய சூத்திரநெறி பற்றிய நல்லவை இருத்தலுண்மை கேட்கப்படுவதேயாக, அவற்றின் வேறுயதோர் தமிழவையால் மதுரையைத் தனியே சிறப்பித்து எடுத்துக் காட்டுவதெல்லாம் அதன் உண்மைபற்றியே யாமென்று துணிக. ஔவையார்,

"சோமன் வழிவந்த பாண்டிய நின்
னாட்டுடைத்து நல்ல தமிழ்"

(முருகாறு. நச். மேற்கோள்)

எனக் கூறியதும் இக்கருத்தை வலியுறுத்துமென்க.

கம்பநாடரும்,

"இனிய தென்றமிழ் நாடுசென் றெய்தினர்"

"அத்தி ருத்தகு நாட்டினை யண்டர்நா
டொத்தி ருக்குமென் றுரை யொக்குமோ
வெத்தி றத்தினு மேழுல கும்புகழ்
முத்து முத்தமி ழுந்தந்து முற்றலால்"

(ஆறுசெல். 52-3)

---

* இது பரிமேலழகர் கருத்தாற் கூறியது.

எனச் செந்தமிழ்ப் பாண்டி நாட்டை இனிய தென்றமிழ் நாடென்றுகூறி, அஃது சிறப்பாக மூத்தும் முத்தமிழுடைமையுங் கூறுதல் காண்க. அதற்கேற்பவே நாடவிட்ட படலத்தில்,

"தென்றமிழ்நாட் டகன்பொதியிற்
றிருமுனிவன் றமிழ்ச்சங்கஞ் சேர்கிற் பீரேல்" (30)

எனவுங் கூறுதல் காண்க. இதன்கண்ணே தென்றமிழ் நாட்டின் கண் பொதியிற்றிருமுனிவன் தலைமையிலுள்ள தமிழ்ச் சங்கம் எனப் பொருள் கொள்ள வைத்தது காண்க.

இனித் திருவள்ளுவர் திருக்குறளுக்குப் பாயிரமாகவுள்ள பல பழைய பாடல்களினிடையே,

"வாளார் நெடுமாற வள்ளுவர் தம்வாயாற்
கேளா தனவெல்லாங் கேட்டு"

என வருவதனைக் காணலாம். இவ்வடிகள் பாண்டியனை விளித்து வள்ளுவர் திருவாயாலேயே தாம் நேரே கேட்டறிந்த உறுதிப் பொருள் நான்கையும் வகுத்து விளக்குகின்றதென்பது திண்ணம். இது ஒரு பொய்யே கட்டிப் பேசியதாகக்கூறுதல் இயையாது. இதனால் திருக்குறள் அரங்கேறியது பாண்டியன் அவையகத்தென்றும் ஆண்டுப் பல புலவரும் உடனிருந்து கேட்டனரென்றும் கேட்டார் பலர் பாயிரஞ் சொற்றாரென்றும் தெரியலாகும். இத்திருவள்ளுவ மாலையை எடுத்தாண்டது நேமிநாத நாலுரை ஆகிய வயிரமேக விருத்தியாகும்.*

அதன்கண் "உப்பக் கநோக்கி" என்னும் பாட்டை (திருவள். மாலை) எடுத்தாண்டு உபகேசியார் நப்பின்னைப் பிராட்டியார் என உரைத்ததுகாண்க. இவர் உரை வன்மையும் பழைமையு நன்கறிக. திருவள்ளுவரைத் தேவரென்று நச்சினார்க்கினியர் முதலிய நல்லுரையாளர் வழங்கற்கும், பரிமேலழகர் சேனாவரையர் முதலியோர் தெய்வப்புலமைத் திருவள்ளுவர், தெய்வப் புலவன் திருவள்ளுவன் என்றற்கும், இத் திருவள்ளுவமாலையே மேற்கோளாதல் உணர்க. இக்கருத்திற்கியையவே "இயம்பின இன்றிவரின்குறள்வெண்பா" என்பதனால் இன்று இவர் இயம்பின எனக்

---

* இவ்வுரை வயிரமேக விருத்தி என்பது ராவ் ஸாஹிப் பண்டித மு. இராகவையங்காரவர்களால் வெளிவந்தது.

கூறுதல்கண்டுண்மையுணர்க, "தேவர் திருவள்ளுவர்" எனவும், "வைவைத்த கூர்வேல் வழுதி மனமகிழத், தெய்வத் திருவள்ளுவர்" எனவும் இந்நூலுள் வழங்குதலே உரைகாரர் ஆட்சிக்கு மேற்கோளாகுமென்க. வேறு மேற்கோள் காட்டற்கில்லாமையு நோக்கிக் கொள்க.

இதனானுஞ் சங்கமுண்மை அறியலாகும். இந்நூல் அரங்கேறிய வரலாற்றை முற்காலத்துக் கல்லாட நூல் செய்த ஆசிரியர் உடம்படுதலுங் காண்க. இவற்றிற்கெல்லாம் இயைபவே லண்டன் பொருட்காட்சிச் சாலையிலுள்ள சின்னமனூர்ச் செப்பேட்டுச் சாசனத்தில்,

> "மகாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்"

எனப் பாண்டியர் மெய்க்கீர்த்தி கூறப்படுதல் காண்க.

இனிச் சீன தேசச் சரித்திரத்து, தமிழ் மூவேந்தரோடு பலவகையினுமொத்த ஆதிமூன்றரசர்கள் கூறப்படுகின்றனர். அவருள் முதல்வன் பூஹி (Fuhi) (பூழியன்) என்பான் என்றும், அவன் தன் வில்வலியால் வேட்டமாடி உயிர்வாழ்ந்து தன் நாட்டார்க்குத் தலைமை யெய்தினனென்றும், அதன்பின் ஷோஹா-ஷென்னி (சோழன்) உண்டானான் என்றும், அவன் நீர்நிலை கண்டு நிலங்களைத் திருத்திப் பயிர்களை வளர்த்துத் தன் நாட்டை உணவால் வளம்படுத்தினவன் என்றும், தன்னாட்டார் நீடுவாழ்வதை விரும்பி மருந்து முறைகளை மேம்படுத்தினனென்றும், இதன்பின் ஹாண்டி (பாண்டியன்) உண்டாயினனென்றும், அவன் தேர் முதலியவை ஆக்கினன் என்றும், அரண் பல வகுத்தனன் என்றும், உலக வரலாறறிந்த பலவறிஞரைத் திரட்டி நூலாராய்ச்சி செய்தனன் என்றும், இசையளவு கண்டானென்றும் கேட்கப்படுவது. இங்குக் கூறியுள்ளன தமிழ் மூவேந்தர் வரலாற்றுக்குப் பெரும்பாலும் ஒத்தலால் இக்கதை தென்னாட்டினின்று இமயத்துக்கு அப்பாற் புகுந்ததோவென்று ஐயுறுதற்கு இடந்தருகின்றது. இதன்கண் ஹாண்டி என்பது பாண்டியன் என்பதன் மரூஉ என்பது எளிதில் உணரத்தகும். பாண்டியன் நாடு பாண்டிநாடு என வருதல் அறிக. தமிழில் பள்ளி என்பது கன்னடத்தில் ஹள்ளி என்பதுபோல, பாண்டி ஹாண்டியா

யிற்று என நினைக்கத்தகும். ஷோஆங் என்பது சோழன் என்னுஞ் சொல்லை அவர்கள் ஒலித்த முறையாகும். பூஹறி என்பது பூழியன் என்னுஞ் சேரன் பெயராகும். (இவற்றைப்பற்றி சமயம் நேர்ந்துழி விவரிக்கப்படும்.)

ஈண்டு பலர் அறிஞரை ஒரு திரளாகச் சேர்த்த செய்தி ஹாண்டி என்னும் வேந்தனிடத்தில் கேட்கப்படுதற்கும், இத் தமிழ்நாட்டுப் பாண்டியனிடத்தே கேட்கப்படுதற்கும், உள்ள ஒற்றுமையை ஆராய்ந்துகொள்க. இப்பழைய வழக்கின்கண் ஏதோ ஒருண்மை இருப்பதென்று இஃது தெளிவிக்காதிராது. சீனர் இந்நாட்டுக் குடியேறியிருந்ததுபற்றி முன்னரே கூறினேம்.

வில்லவர் சேரர் எனப்படுவார். நெல்லுடைய நீர்நாடுடையர் சோழரெனப்படுவார்; இசையளவு கண்டாரும், இசையாராய்ந்தாரும் சங்கம் நிறீஇயினரும் பாண்டியர் எனப்படுவார். சேரனைப் பதிற்றுப்பத்திற் பல்லிடத்தும் சான்றோர் மெய்ம்மறை -வீரம் அமைந்தோர்க்குக் கவசமாக உள்ளவன் எனவும், "வில்லோர் மெய்ம்மறை" எனவும், "மழவர் மெய்ம்மறை" எனவும் கூறுதலான் இவர் படைஞரைத் தொகுத்துச் சிறப்பாகப் போற்றிய தன்மை உணரலாம். இதனால் இவர் புகழை,

"மறம் விங்கு பல்புகழ்" (பதிற். 12)

எனச் சிறப்பிப்பர். மறம் விங்கு புகழ் என்பது பல் புகழினும் விங்கிய மறப்புகழ் என்பர். சேரர் தலைநகரைப் பண்டைப் புலவர் "பெருவிறன் மூதூர்" (பதிற். பதி.) எனவும் "விறல் வஞ்சி" (புறம்.11) எனவும் "பழவிறன் மூதூர்" (சிலப். வஞ்சிக். இறுதிக் கட்டுரை) எனவும் பாடுதல்கொண்டு உய்த்துணர்க.

புறத்திரட்டிற் கோக்கப்பட்டுள்ள ஆசிரியமாலை என்னும் பழைய நூற்செய்யுளில்,

"சிறுசெவி யன்னே பெருங்கேள்வி யன்னே
குறுங்கண் ணினனே நெடுங்காட்சியனே
இளைய னாயினு மறிவுமூத் தனனே
மகளி ரூடினும் பொய்யறி யலனே
கீழோர் கீழ்மை செய்யினுந் தான்றன்
வாய்மை வழுக்க மறுத்த லஞ்சி
மேனெறி படரும் பேரா ளன்னே

யீண்டு நலந் தருதல் வேண்டிப் பாண்டியர்
பாடுதமிழ் வளர்த்த கூடலின் வடாஅது
பல்குடி துவன்றிய கள்ளியம் பெரும்பதிச்
சால்புமேந் தோன்றிய தாழி காதலின்
மேவலன் பிறர்பிறர்க் கீயுந்
தானு முண்ணும் விருந்துண்டு மிகினே.''

(புறத்திரட்டு. புகழ்)

இவ்வாசிரிய மாலைச் செய்யுளில் தாழியெனப் பெயரிய வள்ளல் இருந்த கள்ளியம் பெரும்பதியைப் (கள்ளிக்குடி) பாண்டியர் பாடுதமிழ் வளர்த்த கூடலின் வடாஅது என்று கூறுதல் காணலாம். ஆசிரிய மாலையின் பழைமை அதன் செய்யுள் நடையால் கற்றோர் எளிதில் அறியலாம். இந்நூல் சங்கத்தை அடுத்ததேயாகும். இந்நூலாசிரியர் பாண்டியர் பாடுதமிழ் வளர்த்த கூடலென்று, ஓர் பொய்க்கதை கூறினரென்பதற்கு எம்மனோர் உடன்படார் என்க.

இனி, அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரைப்பாயிரத்து உதயணன் கதையைச் சிறப்பித்துக் கூறப் புக்கவிடத்து,

''கூத்தியரிருக்கையுஞ் சுற்றியதாகக்
காப்பிய வரசனைக் கலந்தவை சொல்லி''

''என இரண்டாம் ஊழியதாகிய கபாட புரத்தின் இடைச் சங்கத்துத் தொல்காப்பியம் புலப்படுத்திய மாகீர்த்தியாகிய நிலந்தரு திருவிற் பாண்டியன் அவைக்களத்து அகத்தியனாரும், தொல்காப்பியனாரும், இருந்தையூர்க் கருங்கோழி மோசியாரும், வெள்ளூர்க்காப்பியனாரும், சிறுபாண்டரங்கனாரும், மதுரையாசிரியன் மாறனாரும், துவரைக் கோமானும், கீரந்தையாரும் என்றித் தொடக்கத்தார் ஐம்பதின் மருளிட்ட மூவாயிரத்து எழுநூற்றுவர் தம்மாற் பாடப்பட்ட குருகும், வெண்டாளியும் முதலிய செய்யுளிலக்கியம் ஆராய்ந்து செய்த உதயனன் கதையுள்ளும்'' எனக் கூறுதலால் அவர் கபாடபுரத்திருந்த இடைச்சங்கத்தைப் பற்றி வழிவழியாகக் கேட்டறிந்த சில வரலாறுகளைக் குறித்துள்ளாரென்று துணியலாம். அவர் கலியும், குருகும், வெண்டாளியும் என்பன அவ்விடைச் சங்க நூல்கள் எனப் பெயர் கூறுதலுங் காணலாம்.

"மூன்றுவகைச் சங்கத்து நான்கு வருணத்தொடுபட்ட சான்றோரும் அது கூறுரென்பது" (தொல். மரபி. 94 உரை) என்றலால் பேராசிரியர் மூன்று சங்கங்களும் உடம்பட்டமை உணரலாம். பரிபாடலில் (19) "புலத்தினும் போரினும் போர்தோலாக் கூடல்" என வருதலையும் அதற்குப் பரிமேலழகர் "அறிவினும் வீரத்தினும் பிறரைப் போர்வெல்லுங் கூடல்" என உரைத்ததனையும் ஈண்டைக்கு நோக்கிக்கொள்க. கூடலிற் போரிற் றோலாதாருளராதல் போலப் புலத்திற் றோலாதார் பலர் நிறைந்துளராதலை இது நன்கு விளக்குதல் கண்டுகொள்க. இருவர் வாதத்தில் நடுநின்று தோலாமை, தோல்வி இவற்றை உள்ளவாறு கூறவல்ல புலவரவை இந்நிகழ்ச்சிக்கு இன்றியமையாமை காண்க. போர்தோலாமைக்குப் போரவையுமுண்டாதல் இப்பரிபாடலின் உய்த்துணரலாம். ஆமூர் மல்லனை மற்போரில் அட்டுவென்ற பெருநற்கிள்ளி என்பவன் போரவை காணப்பொருதனன் என்பது,

"ஆடாதென்ப வொருசாரோரே
ஆடென்றென்ப வொருசாரோரே" (85)

எனப் புறப்பாட்டுக் கூறுதலான் அறியலாம். இதனால் இவ்வரசன் போரவை ஒன்று புரந்தனன் என்பதும் போரவைக்கோப் பெருநற்கிள்ளி எனப் பெயர் சிறந்தனன் என்பதும் புலனாகும்.

இனி வியாசபாரதத்துக் கபாடபுரமாகிய தன் தலைநகரை அழித்துச் சென்ற கண்ணபிரானைச் சினந்து அவன் உள்ள துவாரகையை அழித்தற்குப் படையெடுத்த பப்ருவாகனன் என்னும் பாண்டியனை அவன் சூழவிருந்த நல்லறிஞர் தடுத்தலாற் படையெடாது நின்றனன் என்று கேட்கப்படுதலான் பாண்டியற்கு அறிவாளர் சூழல் பாரதகாலத்துமுள்ளதென்று துணியக் கிடப்பது காண்க. இதனால் இப்பாண்டியர் தமிழ் அவையின் பழைமை உணரப்படும்.

---

# தமிழர் அசுரராகாரென்பது

இனி இருக்குவேதத்தில் தெக்கண பதத்தையெய்தினர் எனக்கேட்கப்படுதலால் அசுரரே வடதிசையினின்று தென்றிசை நிலத்திலொதுங்கினரென்றுங் கூறுவாறுமுண்டு. தென்னாட்டினரை அசுரர் வழியினரென்பார் தங்கொள்கைக்கு இயைந்ததாகக் காட்டுவதொன்றுண்டு. அஃதாவது அசுரரை இருக்குவேதம் பலவிடத்தும் " अनासा दस्युः " என வழங்கும். अनासा என்பது மூக்கில்லாதவர் என்னும் பொருளையுடையது. இவரை மூக்கில்லாதவரென்றது ஆரியர்போல் எழுந்த மூக்கில்லாது அழுந்திய மூக்குடைமையால் என்று அவர் கூறுவர் என்பதாம். ஆரிய நூலினுந் தமிழ் நூலினும் மூக்கிற்கு உவமையாகக் கொள்வது குமிழம்பூ, திலககுஸுமம் (எள்ளின் பூ) என்பன. இவை இருவர் மூக்கிற்கும் ஒக்கும். இருவரும் மூக்கால் வேற்றுமைப்பட்டனர் என்று துணிவது பொருந்தாதாம். இக்காலத்தும் இருவர் மூக்கும் ஒருபடியாக இருத்தல் கண்டுகொள்க. ஆரியரொப்ப மதிமுகமும், தளிர் நிறமும், கருவிழியும், முத்தவெண்பல்லும், நறுநாற்றமும், வேய்த்தோளும், செவ்வாம்பலிதழும், இனிதுடைமை பண்டைத்தமிழ் நூலுள்ளும் மகளிர் வருணனையில் நன்குணரலாம்.

"முறிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு" (குறள். 1113)

"காணிற் குவளை கவிழ்ந்து நிலநோக்கும்
மாணிழை கண்ணொவ்வே மென்று" (1114)

"மதியு மடந்தை முகனு மறியா
பதியிற் கலங்கிய மீன்." (1116)

என வருந் திருக்குறள்களான் உண்மையுணர்க.

அசுரரைப் பிறைபோன்ற கோணிய பல்லுள்ளவர், செம்பங்கியர், நிறங்கரியர் என நூல்கள் கூறல் காணலாம். இவ்வாறு ஓர் தமிழனுமில்லாமை கண்கூடாகக் கண்டது. அன்றியும், வேதம் கூறிய இவ்வசுரர் பெயர்களெல்லாம் ஆரியமொழியேயல்

லாமல் வேறு மொழியாகாமையுந் தேர்ந்துகொள்ளலாம். ஆரியர்க்குப் பகைமை பூண்டவரென்று கொண்டு நூனெறியே புகுந்து சிறிதும் ஆராயாது தமிழரை அசுரரென்று சொல்லப் புகுமிடத்து உண்டாகும் இடர்ப்பாடுகள் பலவாமென்றுணர்க. அசுரரெல்லாம் ஆரியம் வல்லவராகவேயிருத்தல் நூல்களிற் காண்க. வெள்ளியாகிய சுக்கிரனைத் தமக்குக் குருவாகக்கொண்ட அசுரர்க்கும் அவனை அவ்வாறுகொள்ளாத தமிழர்க்கும், இயைபு யாண்டுளதோ அறிகிலேம். அசுரரும் தேவரும் பொருத தேவாசுர யுத்தத்தில் இடைப்புகுந்து பாண்டியனொருவன் ஒருவீர் ஒருவீர் ஒறுப்பலென்று கூறிச் சந்து செய்வித்தான் என்றன்றோ இவர் தொன்மைக் கதை கூறுவது (இறையனார் களவியலுரை). அன்றியும், தமிழர் அசுரர்க்கு இட்டு வழங்கிய பெயர் அவுணர் (சிலப்.காதை 7) என்பது. அப்பெயர் தமிழர்க்கு யாண்டும் வழங்காமை நூல்களினோக்கிக்கொள்க. வடநூலார் யாண்டுந் திராவிடரை அசுரராகக் கூறாமையுங்கொள்க. இருக்குவேதம்

" सुरत्वदानदक्षिणा परावण्
नतानुक्रमवशान्यो जग्मुरे" (10—61—8)

எனக் கூறிய விடத்துச் சாயநர், ஐத்ரேய ப்ராஹ்மணத்தின் மேற்கோளைக்கொண்டு *பசுக்களாகிய தக்கிணை என்றே பொருள் கூறினார். அவர் தென்றிசைக்குப் பொருள் கொள்ளாமையும் நோக்கிக்கொள்க. இருக்குவேதத்து (7—6—3) அக்கினி பகவான் அவர்களை மேற்கே துரத்தி ஓட்டினார் என்பதனால் அசுரர் அங்கியஞ் செல்வனால் மேற்றிசையில் துரத்தப்பட்டனரென்று தெளியவுரைத்ததுங் காண்க. அசுரர் ஆரியமொழியன்றி வேற்றுமொழியினரல்லரென்பது வான்மீகத்தில் இல்வலன் என்னும் அசுரன் ஸம்ஸ்கிருதம் பேசினனென்றும் அவ்வடமொழியாலே பார்ப்பாரை அமைத்தனனென்றுங் கூறியவாற்றான் அறிக.

(வால்மீகிராமா: ஆரணிய: ஸர்க். 11. சுலோகம் 5)

இனி அவ்வசுரரையே, "மிருத்ர வசா :" (குழறுபடையான சொல்லுடையவர்), "மிலேச்ச" (வடமொழியொழிந்த வேறுமொழி பேசுவார்) எனவும், "தாஸா." (அடிமையின் விற்றற்குரியர்— அடியர்), 'தஸ்யு' (கள்வர்) எனவும் வடநூல்வேதம்

வழங்குவதுகொண்டு இவரைத் தமிழர் என்றுங் கருதுவார் இக்காலத்துச் சிலர் உளராலெனிற் கூறுவேன். ஆரியர் தம் கொள்கைக்குப் பகைமை பூண்ட பிறரையெல்லாம் இப்பெயர்களால்,

धारयन् ब्रह्माणं रूपसिल्वलस्संस्कृतं वदन्
आमन्त्रविप्रान् स्म श्राद्धमुद्दिश्य निर्घृणः

வழங்கினரென்று துணிவதல்லது தமிழரைத் தனியே பிரித்து இவ்வாறு கூறினர் என்று நினைத்தற்கு அவ்வேதத்திற் சிறிதும் இடனேயில்லை. இப்பெயர்களின் வழக்கு அவ்வாரியர்களுள் இழிசனர்க்குமாகும். மேற்கூறியபடியே இத்தமிழர் தமக்கு ஒத்து ஒழுகாது தம் நாட்டிற் பல்லிடத்தும் அலைகொலை செய்து ஆறலைத்து வாழுங் கள்வருண்டென்றும், அவர் தலைவன் அறனில் வேந்தனென்றும், அவர் வாழ்க்கை களவேர் வாழ்க்கையென்றும், அவர் இழிசனரென்றும் பெயரென்றும் கருதி வழங்கிய ஒரு தொகுதி மாக்கள் வடநூலுட் கண்டதுபோலப் பழந்தமிழ் நூல்களினுங் காணப்படுதல் கற்றோர் தெரிந்ததே. இலக்கண நூல்களில் இழிசனர் கூறுவரென்றும், அவர் பிணந்தின்பார் (பிசிதாசனர்) என்று கூறியபடி ஈண்டும் பிணந்தின் மாக்கள் பிணந்தின் பேய்மகள் உண்டென்றும் அவர்க்கு அசுர வேந்தன்போல ஈண்டும் அறனில்வேந்தனுண்டென்றும், அவன் ஆறுசெல்வோருயிர் மாய்க்காதுவிட்ட தவற்றிற்கு யானைக்கொம்பும் வேங்கைத் தோலும் தண்டமாக இறுக்கும்படி தன் படையாளர்க்கு விதிப்பனென்றும், இத்தகைய கொடிய வாழ்க்கையுடைய இழிசினர் இத்தமிழ்நாட்டும் உண்டென்றும், அவரைப் பண்டைத் தமிழர் வெறுத்தேயுரைத்தனரென்றும் நன்கு அறிந்துகொள்ளலாம். வேதநூலினுந் தமிழ் நூலினும் வெறுத்து இழிக்கப்பெற்ற ஓர் அநாகரீக இழிசனக் குழுவினர், இந்நாவலந் தீவிற் பண்டேயுண்டென்றும் இதனாற்றுணியலாம். மொழிவேற்றுமைபற்றி இக்குழுவினராக ஒருவரையொருவர் இழித்தற்குச் சிறிதும் ஏதுவேயில்லை. இருதிறத்தார்க்குள் வேற்றுமை ஒற்றுமை துணிவது அவரவர் மனப்பாங்குக்கு நிலைபெற்ற சிறப்பியல்புகளான கொள்கைகள்பற்றியே என்பதும் இழிசினர் வழக்கு எனக் குறித்தது குழறுபடைச் சொல்லென்பதும் எளிதில் உணரலாகும். இக்கொடியரைத் தமிழர் தம்மவராகவேனும், தமக்குத் துணைவராகவேனும் நினைத்துப் பாடிய பகுதிகள் நூல்களிற் கிடையா.

இவர்களிலுங் கற்றூர் சிலர் உளராதல் அவர் பெயரால் அறியப் படுமாலெனின், வடநூலுள்ளும் த்ராஸ தஸ்யு, பைஜவனன், ப்ருங்கலாதன், விபீஷணன் முதலிய அசுரரை ஆரியர் சேர்த்துக் கொண்டாற்போல ஒழுக்கந் திருந்திக் கல்வியறிவு மேம்பட்ட இவருள் நல்லோரைத் தமிழர் தம் குழுவிற் கூட்டி ஒருங்கு சேர்த்து வாழ்ந்த பெருநோக்கத்தையே அது குறிக்குமென்று கொள்க.

''அத்தஞ் செல்வோ ரலறத் தாக்கிக்
கைப்பொருள் வௌவுங் களவேர் வாழ்க்கைக்
கொடியோ ரின்றவன் கடியுடை வியன்புலம்
உருமு முரரு தரவுந் தப்பா
காட்டு மாவு முறுகண் செய்யா.'' (பெரும்பாண். 39-43)

''அற்றம்பார்த் தல்குங் கடுங்கண் மறவர்தாங்
கொள்ளும் பொருளில ராயினும் வம்பலர்
துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்துயிர் வௌவலிற்
புள்ளும் வழங்காப் புலம்புகொ ளாரிடை.'' (கலித். 4)

''அன்ன தன்மையு மறிந்தீயார்
நின்னது தாவென நிலைதளர
மரம் பிறங்கிய நளிச் சிலம்பிற்
குரங் கன்னபுன் குறுங் கூளியர்
பரந் தலைக்கும் பகை.'' (புறம். 136, 10-14)

''வழங்குநர் மடிந்த வத்த மிறந்தோர்
கைப்பொரு ளில்லை யாயினு மெய்க்கொண்
டின்னுயிர் செகாவிட் டகன்ற தப்பற்குப்
பெருங்களிற்று மருப்பொடு வரியத ளிறுக்கும்
அறனில் வேந்த னாளும்
வறனுறு குன்றம் பலவிலங் கினவே.'' (அகம். 109)

''பிணந்தின் மாக்கள்'' (மணிமேகலை. 6, 90.)

''கருந்தலை வாங்கிக் கையகத் தேந்தி
யிரும்பே ருவகையி னெழுந்தோர் பேய்மகள்
புயலோ குழலோ கயலோ கண்ணே
குமிழோ மூக்கோ விதழோ கவிரோ

பல்லோ ரூழ்த்தோ வென்று திரங்காது
கண்டொட் டுண்டு கவையடி பெயர்த்துத்
தண்டாக் களிப்பி னாடுங் கூத்துக்
கண்டனன் வெரீஇக் கடுநவை யெய்தி."

(மணிமே. 6. 120-7)

ஈண்டுப் பேய்மகள் கண்தொட்டுண்ட பிணம் தமிழ்ப் பிணம் என்றுணர்க.

அடியோர் பாங்கினும் வினைவல பாங்கினும்"

(தொல். அகம். 23)

"எற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து."

(குறள். 1080)

"இகழ்ந்தன வாயினு மிடம்பார்த்துப் பகைவர்
ஓம்பினர் றுறையும்."

(அகம். 113)

"நெறிசெல் வம்பலர்க் கொன்ற தெவ்வர்" (அகம். 113)

இவற்றால்,* தஸ்யுக்கள் எனப்படும் கொடிய ஆறலை கள்வர் இத்தமிழ் நாட்டும் உள்ளனரென்றும், அவரை ஆரியர் கூறினாற்போல இவரைப் பகைவர் என்றும், தெவ்வரென்றும், கள்வேர் வாழ்நரென்றும் தமிழ்ப் பெருமக்கள் கூறி வந்தன ரென்பதும், இவரும் வேறு நிலம் மொழி உடையரில்லை யென்ப தும் நல்லறிவாளர்க் கெல்லாம் உடம்பாடாம்.

இந்நாவலந் தீவில் நிலவேற்றுமையும் மொழி வேற்றுமையு முடைய பலதிறமக்களும் ஒரே கொள்கையுடையராய் வடவிமய

* The term Dasas or Dasus as the aborigines were repeatedly called are applied indifferently to the human enemies of the Aryans and to the fiends, and no criterion exists by which references to real foes can be distinguished in every case from allusions to Demoniacal powers. The root-meaning of both words is most probably merely foe, but in the Rig Veda it has been specialised to refer at least as a rule to such human foes as were of the aboriginal race.

(Cambridge History of India. Rapson vol. I. page 84.)

முதல் தென்குமரி வரை வேதவழக்கொடுபட்ட ஒரு நாட்டா ரென்று சொல்லும்படி வாழ்ந்தனரென்றலே பொருந்தியதாகும். இதனானன்றே நல்லிசைப் புலவர் தமிழ்ப் பெருமுடியரசரைத் "தென்குமரி வடபெருங்கற், குணகுடகடலா வெல்லைத், தொன்றுமொழிந்து தொழில்கேட்ப, வெற்றமொடு வெறுத் தொழுகிய, கொற்றவர்"(மதுரைக்காஞ்சி 70-74) எனப்பாடுவா ராயினரென்க: இதன் கண்ணே தொன்று மொழிதல் என்பது பழமை தொட்டேயுள்ள நட்பினைமொழிதல் என்றவாறும். மற்று ஆரிய அரசரோடு தமிழரசர் பொருதபோரும் உண்டால் எனின்; முரணிய நிலையில் யாரோடும் போர் நிகழ்தலியல்பே என்க. தமிழரசர் தம்முள் முரணிப்பொருத போர்த்தொகைகள் எண்ணில வாதலான் இவ்வுண்மையுணர்க. வடவாரியராகிய அகத்தியர் தென்றிசை நொய்ம்மை தீர எய்திவளம்படுத்தினர் என்ற தமிழ்க்கதையும் (புறப்பொருள் வெண்பா மாலைப்பாயிரம், முதலியன பார்க்க) அவர் இராக்கதரை இத்தென்னாட்டு வாராது விலக்கினரென்ற வரலாறும் "தென்னவற் பெயரிய துன்னருந்துப்பிற்கடவுள்" (மதுரைக்காஞ்சி) வடக்கண் மேருவை அடுத்துள்ள நாவன் மரத்தடியில் வதிந்த இந்நாவலந் தீவக் கடவுளாகிய சம்புத்தெய்வம், இம்மாநில மடந்தைக்கு அரக்கரால் வருந்துயர் கேட்டுத் தென்றிசைப் பெயர்ந்துவந்து, சோழர் ஊரில் வீற்றிருந்து அரக்கர்க்குப் பகையாக நோற்றனள் என்பதும் அத்தெய்வத்தால் அவ்வூர் சம்பாபதி எனப்பெயர் சிறந்ததென்பதும் "மணிமேகலைப் பதிகமும் பிறவும் இவ்வொற் றுமையை வலியுறுத்து விளங்குதல் தெளிக *. இளங்கோ வடிகள் வடதிக்கைப் "புண்ணியதிசை" (இந்திர விழவு-94) என்பர். நற்றமிழ் மக்கள் "நாவலோ" (நாவலோவென வழைக் கும் நாளோதை. முத்தொள்.) என்பதைத் தம் வீரவார்த்தை யாகப் போற்றியிசைத்தல்,

"நாவலிட் டுழிதர்கின்றோ நமன்றமர் தலைகண்மீதே"

(திருமாலை.)

---

* மஹாபாரத அநுசாசனிகபருவத்து (52-ஆம் அத்தியாயம் மொழிபெயர்ப்பு) அஷ்டாவக்ரோபாக்யானத்தில் மணிமேகலை யுட்போல வடதிசைத் தேவதை முதியவளாகக் கூறப்பட் டிருத்தல் காண்க. "தொன்மூதாட்டி" என்பது மணிமேகலை (பதிகம்).

என்னுந் திருமாலையிற் காண்க. இவை வடவிமயம் முதலாகத் தென்னங் குமரிவரையுள்ள பெருநாட்டை யொன்ருகக் கருதி யொழுகிய நிலையைக் காட்டுமென்க. சம்பாபதி அரக்கர்க்குப் பகையாக நோற்றுத் தெற்கணிருந்தனள் என்னுநற்றமிழ் வரலாறு இத்தென்றமிழர் அரக்கரல்லர் என்பதையும், வடவாரியரொடு பகைத்த கொள்கையுடையரல்லர் என்பதையும் தெளிவித்தல் உணர்க. வடவாரியர் தம்முட்பகைத்த பாரதப்போரில் இருபடை முதியர்க்குஞ் சோறுவரையாதிட்டுச் சேரனொருவன் "பெருஞ் சோற்றுதியன் சேரலாதன்" (புறம் 2) எனப்பெயர் சிறந்தான் என்பதும், தென்னாட்டுப் பாண்டியகுலமுஞ் சோழர் குலமும் முறையே வடவாரிய நூல்களிற்கண்ட சந்திரன் வழியும் ஞாயிற்றுவழியுமாகக் கொள்ளலும் அவ்வாறே நல்லிசைப்புலவருடன்பட்டுப் பாடுதலும் இக்கருத்திற்கே இயைதல் காண்க.

"மாலைத் திங்கள் வழியோன்" (சிலப். நீர்ப்படை. 138)

எனப் பாண்டியனும்,

"பகல் வெய்யோன்" (ஷை. கானல்வரி.)

எனச் சோழனுங் கூறப்படுவர். இவ்வேந்தர் இந்திரவிழவெடுத்தல் மதுரைக்காஞ்சி, சிலப்பதிகாரம், மணிமேகலை நூல்களிற் கேட்கப்படுதலானும் இவர் அரக்கராகாமை யினிது தெளியலாம். தமிழர் அவுணர் ஆகாரென்பது அவர் பண்டை வரலாற்றானும் இனிதுணரலாம். தமிழ் காக்கும் மூவருள் ஒருவனாகிய சோழன் அவுணருடைய தூங்கெயிலையெறிந்த செய்தி புறப்பாட்டினும் (39) சிறுபாணாற்றுப் படையினும் (79-82), சிலப்பதிகாரத்தினும் (27-29), மணிமேகலையினும் (1-4) தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அசுரர் முதல்வனாகிய ஸுகேசன் என்பானுக்குச் சிவபிரானார் ஆகாயத்துச் செல்லக்கூடிய நகரத்தைப் பார்வதியின் பெருவிருப்பிற்கிணங்கிக் கொடுத்தார்.

**पुरमाकाशगं प्रायत् पार्वत्या प्रियकाम्यया**

என்பது இராமாயணம் உத்தரகாண்டத்து நான்காஞ் சர்க்கத்துக்கண்டது. இத்தூங்கெயில் சிவபிரான் எறிந்த மூவெயிலின் வேறென்பது,

"நான் அவ்வரக்கரைக் கொல்லேன்
அவர் என்னாற் கொல்லப்படார்" (ஸர்க்கம் 6. ச்லோ. 10)

எனச் சிவபிரான் அருளுதலான் அறியப்படும். சோழன் எறிந்த தூங்கெயில் அவுணருடையதேயாதல்,

"திறல்விளங் கவுணர் தூங்கெயி லெறிந்த
விறல்மிகு முரசின் வெல்போர்ச் சோழன்"

(தொல், கள. 11. நச். உரைமேற்கோள்)

என்பதனாற் றெளியப்பட்டது. ஸுகேசன் மக்களாகிய மாலி, மாலியவான், ஸுமாலி என்னு மூவரும் மயன் என்னுந் தெய்வத் தச்சனைக்கொண்டு இலங்கையில் அரண்மனையமைத்து வதிந்தனர் என்பதும் உத்தரகாண்டத்துக் கண்டசெய்தியாகும். மணிமேகலையுள்ளே மலயத்தருந்தவன் (அகத்தியன்)சோழன் மூதூர்ப்பண்பு மேம்பட்டு விளங்கவேண்டி உரைப்பத் தூங்கெயிலெறிந்த சோழன், விண்ணவர் தலைவன் விழாவைத் தொடங்கினான் என்பது கேட்கப்படுதலான் இத்தூங்கெயில் இந்திரனுக்குப் பகையாயினாருடையது என்றறியலாகும். இவற்றாற் றூங்கெயிலெறிந்த சோழன் தேவரை வழிபடுபவனல்லது அசுரரைச் சாரானென்றறியலாம்.

"பலர்புகழ் மூதூர்ப் பண்புமேம் படீஇய
ஓங்குயர் மலயத் தருந்தவ னுரைப்பத்
தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன்
விண்ணவர் தலைவனை வணங்கி முன்னின்று
மண்ணகத் தென்றன் வான்பதி தன்னுள்
மேலோர் விழைய விழாக்கோ ளெடுத்த
நாலேழ் நாளினு நன்கினி துறைகென
அமரர் தலைவ னங்கது நேர்ந்தது" (மணி. 1)

என்பது காண்க. சிலப்பதிகாரம் கடலாடு காதையிற் கூறிய புகார் நகராண்ட முசுகுந்த சோழன் அவுணரை வென்று அமராபதி காத்தான் என்பதும், அவனே தூங்கெயிலெறிந்தான் என்பதும்,

"வீங்குநீர் வேலி யுலகாண்டு விண்ணவர்கோன்
ஓங்கரணங் காத்த வுரவோன்யா ரம்மானை
ஓங்கரணங் காத்த வுரவோ னுயர்விசும்பிற்
றூங்கெயில் மூன்றெறிந்த சோழன்கா ணம்மானை"

(சிலப். வாழ்த்து)

என்பதனாலறியலாம். இதனாலிவர் அசுரரைச் சார்ந்தவராகாமை இனிதுணரலாம். பகைத்தாரை ஒறுக்கவேண்டி அவரரண்

அழிக்கப் புக்கவிடத்தும் பழந்தமிழ் வேந்தன் "ஆவு மாவியற் பார்ப்பன மாக்களும், பெண்டிரும் பிணியுடையீரும் பேணித் தென்புலம் வாழ்நர்க் கருங்கடனிறுக்கும், பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும், எம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மினென், றறத்தாறு நுவலும் பூட்கை மறத்தின்" (புறம் -9) என்பதனால் ஆவும் அந்தணரும் பெண்டிரும் முதலாகிய தீங்கு செய்யத்தகாத சாதிகளை ஆண்டு நின்றும் அகற்றவேண்டிப் பேர்தருக எனப் புகறலும் அங்ஙனம் பேர்தருதற்கு அறிவில்லாத ஆவினைக் களவினாற்றானே ஏவிக்கொணர்ந்து பாதுகாத்தலும் (தொல். புலத். 2. நச்) நூல்களிற் கேட்கப்படுதலான், ஆவினையும் அந்தணரையும் பெண்டிரையும் வஞ்சித்து வருத்தும் அரக்கர்வழியினர் இவராகாரென்பது ஒருதலையாம்.

மநுநாலுடையார் மிலேச்சமொழி பேசினும் ஆரியம் பேசினும் சாதிநான்கிற்கும் புறம்பாயவர் தஸ்யுக்கள்* என(10-45) எண்ணப்படுவர் என்று தெளியவுரைத்தலான் ஆரியத்தின் வேறாகிய மொழி பேசினாலும் தமிழர் "வேற்றுமை தெரிந்த நாற்பால்" (புறம்-183) என்பது முதலியவற்றாற் சாதிக்குட்படுதலால் எக்காலத்தும் அசுரராகிய தஸ்யுக்களாகாரென்க.

பாரதராசசூயக பருவத்து வியாசர் "திராவிடர் காமதேனுவின் பால்மடியிலிருந்துண்டானவர்" (I. 175-6683) எனக்கூறுதலும் ஈண்டைக்கு நோக்கிக்கொள்க. இதனானும் இவர் இனியராதலல்லது இன்னாராகாமை யுணரலாம். "பாலேய் தமிழர்" (திருவாய்மொழி) என்றார் பெரியாரும். அரக்கரையும் வான்வகையினரிற் சேர்த்தல் வழக்கென்பது,

"காந்தருவர் தாரகைகள் காணப் பசாசகண
மேந்துபுகழ் மேய விராக்கதரோ—டாய்ந்ததிறற்
போகா வியல்புடைய போகபூமி யோருடனே
யாகாய வாசிகளா வார்"

(சிலப். இந்திர விழ. 176. உரை.)

என்ற வெண்பாவா னறியலாம்.

---

* मुखबाहूरुपज्जानां या लोके जातयो बहिः ।
म्लेच्छवाचश्चार्यवाचः सर्वे ते दस्यवस्मृताः ॥

# தமிழர் கந்தருவ வழக்கினர் என்பது

இனி அசுரரெல்லாம் வானவர் வகையில் ஒருதிறத்தாரென்பது அவ்வடநூலார்க்கு ஒத்த கொள்கையாகும். அமரரைப் பதினெண்கணமாக வகுத்துரைப்பர். இதனை,

"அப்பிறை, பதினெண்கணனும் ஏத்தவும் படுமே"

என்னும் புறப்பாட்டுக் கடவுள் வாழ்த்து அடியானும், அதற்குப் பழையவுரைகாரர் கூறியவுரையானும் உணரலாம். இப்பதினெண் வகையினருள்ளே தேவர்க்குப் பகைமைபூண்ட அசுரர் எனத் தம்மைக் கூறிக்கொள்வதில் தமிழருக்குக் கிடைக்கும் பேறு இஃதென்று தெரிகிலேன். தேவர்க்குச் சார்பாகிய கொள்கையே இவர் உடையரென்றும் அவுணர்க்கு இத்தமிழர் பகைவரே யாவரென்றும் மேலேகாட்டியவற்றால் நன்கு தெளிவாகும். இப்பதினெண் கணங்களைத் தேவரும், அசுரரும், முனிவரும், கின்னரரும், கிம்புருடரும், கருடரும், இயக்கரும், இராக்கதரும், கந்தருவரும், சித்தரும், சாரணரும், வித்தியாதரரும், நாகரும், பூதமும், வேதாளமும், தாராகணமும், ஆகாசவாசிகளும், போகபூமியோரும் எனப்பகுப்பர். இவரெல்லாம் மக்கள் வகையினரென்றும், பல பல பகுப்பாகச் சிறப்பித்துப் பெயர் வழங்கப்பெற்றன ரென்றுங் கருதுவாருண்டு. இவர்களைப்பற்றிய சரிதங்கள் நூல்களில் ஆங்காங்குக் கேட்கப்படுமாற்றால் இவ்வுண்மை வலியுறும். இவருள் தமிழர் யாவர் சார்பினராவர் என்பதே ஈண்டு ஆராயப்புகுவதாகும். இப்பதினெண் கணங்களுள், கந்தருவர் கொள்கையைத் தமிழர் உடன்பட்டு மிகப்பழைய நூல்கள் வழங்கலால், இவரை அக்கந்தருவர் சார்பினரென்று கூறுதல் பொருத்தமுடைத்தாகும்.

இனிக் கந்தருவர் என்னுஞ் சொற்கு மணத்தை அடைந்தவரென்று வடநூலார் பொருள் கூறுவர், * இம்மணமென்னுஞ்

* 'ஓ பூமியே நின்பாலெழுந்ததும் கந்தருவரும் அப்ஸரஸ்ஸுகளும் பங்கிட்டுக் கொண்டதுமான நறுமணத்தால் என்னை மணமுறச்செய்'

Translation from the Hymns of the Atharva Veda Edited by Max muller (X. 25).

சொல் தமிழில் மூக்காலுணரும் நறுநாற்றத்திற்கும், ஆண் பெண் இருபாலார் கல்யாணத்திற்கும் வழங்கப்படும், இவ்வாறு ஒரு சொல்லே இவ்விரு பொருளில் வழக்குப் பெற்றது. கல்யாணத்தில் மிகுதியும் நறு நாற்றத்தை இவர் பயின்று வந்த தன்மையாலென்று எளிதில் உணரலாகும். இவ்வாறே,

"பசுநனை நறுவீப் பரூஉப்பர லுறைப்ப
மணமனை கமழுங் கானந்

துணையி ரோதியென் றோழியும் வருமே" (அகம்-107)

எனக் கமழ்தலுக்கு மணமனையினையும்,

"வதுவை நாற்றம் புதுவது கஞல" (அகம். 25)

என்புழி வதுவை நாற்றமெனக் கல்யாண மணத்தினையுங் கூறுதல் காண்க.

"இருவே மாய்ந்த மன்ற லிதுவென" (குறிஞ்சிப். 21)

எனவும்,

"மன்றல் வேங்கைக்கீ ழிருந்து
மணநயந் தனனம் மலைகிழ வோற்கே" (கலித். 41)

எனவும் மன்றல் நறு நாற்றத்திற்கும் கல்யாணத்திற்கும் பொருள்படுவது விளங்கும்.

"கடவு ளாயினு மாக
மடவை மன்ற வாழிய முருகே" (நற்றி. 34)

என முருகக்கடவுளுக்கும்,

"முருகமர்பூமுரண்கிடக்கை" (பட்டினப். 37)

என நறுமணத்திற்கும் முருகு என்னுஞ் சொல் கொள்ளப் படுவதைக் காண்க. இது தெய்வத்தினையும் நறுநாற்றப் பெயரான் வழங்கியது குறிக்கும். முருகக்கடவுளை வழிபடுதற்கண் அவன் ஆவேசித்து ஆடுதலை வெறியாடலென்றும், வெறியாட்டென்றும், தொல்காப்பிய முதலிய தொன்னூல்களின் வழங்குதலான் இதன் உண்மையை அறியலாம். வெறி என்பது கமழ்

மணத்திற்கும் தெய்வ ஆவேசத்திற்கும் (அணங்கேறுதல்) பெய ரென்பது தமிழ் வல்லாரறிவர்.

> " வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன் "
>
> (தொல். புறத். 5)

எனவும்,

> " வெறியாட்டு "
>
> (தொல். புறத். 5)

எனவும்,

வருதல் கொண்டு அறியலாம். வெறி—முருகேறுதல் ; அதனை) யறிந்த சிறப்பினையுடைய வேலன் என்க.

> " வாணுதல்
> தான்முருகு மெய்ந்நிறீஇத் தாமம் புறந்திளைப்ப
> வேன்முருகற் காடும் வெறி " (புறப். வெ. மாலை 1. 21

இங்ஙனமே முருகு என்னுஞ்சொல் நறுமணத்திற்கும் தெய் வத்திற்கும் ஒப்ப வழங்குவதாகும். " புடையெலாந் தெய்வங் கமழும் " (59) என்பதனால் ஐந்திணையைம்பதின்கண் நறுமணங் கமழ்தலைத் தெய்வங் கமழ்தலாகக் கூறுதல் காண்க. இத் தெய்வப் பெயரால் நறுமணத்தை எவ்வளவு உயர்ந்ததாக இத் தமிழர் கருதியுள்ளாரென்பது எளிதில் அறியலாம். நான் மறையும் கடவுளை,

> " எல்லா மணமும் எல்லாச்சுவையும் "

என்று கூறுதல் காணலாம்.

> " பூவினுள் நாற்றநீ " (பரிபாடல் 3)

என்பது இவர், நிலத்திணை, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என நான்காகப் பகுத்துக் கொண்டது ஒழுக்கம் பற்றியதென்ப ரேனும் அவ்வந் நிலத்துச் சிறந்த நறுமணமலர் பற்றியுமா மென்று நன்கறியலாம்.

> " நெல்லொடு
> நாழி கொண்ட நறுவீ முல்லை
> யரும்பவி ழலரி தூஉய் " (முல்லைப். 8-10)

என்றமையாற் காடுறை உலகிற்கு முல்லைப்பூச் சிறந்ததாக லானும்,

" கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே " (குறுந். 3)

என்றவழி மைவரை உலகிற்குக் குறிஞ்சிப்பூச் சிறந்ததாக லானும்,

" வராஅ லருந்திய சிறுசிரன் மருதின்
மூழ்சினை யுறங்குந் தண்டுறை யூரன் " (அகம். 286)

என்றவழித் தீம்புனல் உலகிற்கு மருதம் சிறந்ததாகலானும்

" பாசடை நிவந்த கணைக்கா னெய்தல்
இனமீ னிருங்கழி யோத மல்குதொறுங்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும் " (குறுந். 9)

என்றவழிப் பெருமணல் உலகிற்கு நெய்தல் சிறந்ததாக லானும், இந்நிலங்களை இவ்வாறு குறியிட்டார் என்று கொள்ளப்படுமென்க.

இவ்வாறு " மாயோன் மேய " என்னுஞ் சூத்திர உரையில் உரையாசிரியர் இளம்பூரணர் கூறியவாற்றானறியலாம். இவ்வாறே போரிலும் தமிழர் நறுமலரையேனும் நறுந்தழையையேனுஞ் சூடி மகிழ்தல், புறத்திணையிலும், நிரைகவர்தல் முதலாகப் பல பகுதிக்கும், வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை என வரும் பெயர்களான் அறியலாகும். தமிழ் மூவேந்தருக்கும்,

" போந்தை வேம்பே ஆர் " (தொல். புறத். 5)

என அடையாளத்தார் கூறுமாற்றானும் இஃது அறியலாகும். வான்மீகி பகவான் தென்னாட்டவர் போரிற் பூச்சூடுதலை எடுத்துக்காட்டினார். * இவர் கலியாணத்தில் மாலையிடுதலையே தலைமையாகக் கருதுவர், அன்புடையாரை உச்சிமோந்து தழுவுவதும் மாலையிடுதலும் இவர்க்கு இயல்பு.

மாலை யேந்திய பெண்டிரு மக்களும் "
(தொல். கற்பியல். 5.)

என்ப.

---

* ராவ்ஸாகிப் பண்டிதர் மு. இராகவையங்கார் பொருளதிகார ஆராய்ச்சி (வான். இராமா. அயோத். சருக். 93)

பூப்பிலும் செம்பூச் சூடிச் சென்றறிவித்தலானும் இவர் நறுமலரை எவ்வளவு வகையாகப் பாராட்டினரென்பது எளிதிலறியலாம். இவையெல்லாம் தமிழர் கந்தருவரொப்ப மணத்தை அடைந்தவர் என்னும் பெயர்க்குப் பெரிதும் இயைபுடையராதல் காட்டும்.

இனிக் கந்தருவர், மெல்லிய மொழியில் விருப்பமிக்கவரென்றும் இசை வல்லவரென்றும், யாழோர் என்றுங் கூறப்படுதலைத் தமிழ் நூல்களிற் பலவிடத்துங் காணலாம். திருமுருகாற்றுப் படையில்,

" நல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மென்மொழி மேவல ரின்னரம் புளர " (141—42)

என்பதற்கு நச்சினார்க்கினியர் " ஈரமுடைய நெஞ்சாலே எக்காலமும் மெல்லிய வார்த்தை சொல்லுதலைப் பொருந்திய கந்தருவர் இனிய நரம்பை வாசிக்க " என உரைத்தார். இதன்கண், மென்மொழி மேவலர் என்று கந்தருவரைக் கூறுதல் காணலாம். தமிழர், க-ச-ட-த-ப-ற என்னும் எழுத்துக்களுக்கு மேலும் அதிக வல்லோசைப்பட்ட எழுத்துக்களை உடன் படாமையால் மென்மொழியாளரேயாவர். இவர் இசையைச் சிறப்பித்துப் பாராட்டுதல் முல்லை முதலிய ஐந்திணைமாக்கட்கும் யாழும் பறையும் பண்ணும் வகுத்துக்கொண்டு வழங்குமாற்றால் நன்கு அறியலாம். காடோ, மலையோ, கடலோ, நீர்வறந்த பாலையோ யாண்டும் இசையிசைத்து மகிழ்தல் இத்தமிழர் இயல்பென்பது பன்னூலானும் அறிந்தது. இவர் விலங்குகளை வயப்படுத்துக் கொள்ளுமிடத்தும் இவ்விசையையே பெருந்துணையாகக் கொண்டனர் என்பது,

" கால்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல்
யாழ்வரைத் தங்கி யாங்கு " (கலி.-2)

எனவும்,

கொடிச்சி, பெருவரை மருங்கிற் குறிஞ்சி பாடக்,
குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது,
படாஅப் பைங்கண் பாடுபெற் றொய்யென,
மறம்புகல் மழகளி றுறங்கு நாடன் " (அகம். 102)

எனவும்,

> "அசுணங் கொல்பவர் கைபோ னன்றும்
> இன்பமுந் துன்பமும் உடைத்தே" (நற்றிணை. 304)

எனவும் வரும் சங்கவாக்கால் அறியலாம்.

இவர் கொள்கையையும், இவர் பண்டைக்குடி வகையையும் நன்குணர்ந்த தொல்லாசிரியர் மேற்கூறிய பதினெண்கணங் களின்வேறு பிரித்து "யாழோர்கூட்டம்" எனவும், "துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பு" எனவும் "யாழோர்மேன" எனவும், "கந்தருவ வழக்கம்" (இறை, களவி. 1) எனவும் கூறிச் செல்லுமாற்றால் இவ்வுண்மை நன்குணரலாகும். இவர் கந்தருவ வழக்கத்தைத் தம் உலகியற்குக்கொண்டு கூறினர் என்பது.

> "இன்றமி ழியற்கை யின்பம்" (சிந்தா. 2063)

என்னுஞ் சிந்தாமணி உரையில் நச்சினார்க்கினியர் "இனிய தமிழ் கூறிய இயற்கைப் புணர்ச்சியாகிய இன்பம்" என உரைத்துச் "சுட்டி ஒருவர் பெயர் கொள்ளப்படுதலின் உலகி யல் வழக்கான காந்தருவமாம்" என விளக்கியவாற்றானறிக. இவர் இயல்பே கந்தருவர் இயல்பென முன்னூல்கள் துணிந்த தன்றி அசுரர் இயல்பென்று யாண்டுந் துணியாமை காண்க. இவர் உலகியலும் கந்தருவர் இயலும் ஒன்றுதலானன்றே உலகியற் கந்தருவம் என்று உரையாளர் கூறினராவர். இவர் கந்தருவமும் அந்தணர் அருமறை மன்றலெட்டனுள் ஒன்றெனப் பதும் இக்கருத்தை வலியுறுத்தும்.

வேதத்தை உலகிற்கு விரித்து நல்லிசை விளக்கும் வைதிகப் புலவரை நோக்கி இதன் சிறப்புக் கேண்மினென்று இக் கந்தருவத்தைக் கூறிய நல்லிசைப் புலவரும் தமிழிலுண்டு. இதனைப் பரிபாடலில்,

> "நான்மறை விரித்து நல்லிசை விளக்கும்
> வாய்மொழிப் புலவிர் கேண்மின் சிறந்தது
> ..................................................
> தள்ளாப் பொருளியல்பில் தண்டமிழாய் வந்திலார்
> கொள்ளாரிக் குன்று பயன்" (9, 12-13, 25-26)

என வந்தவிடத்துப் பரிமேலழகர்,

"அதனால் இக்கற்பிற் போல தலைவர் நீங்குதலறியாத களவிற் புணர்ச்சியையுடைய மகளிர் அவரொடு மாறுகொண்டு துனிக்கும் குற்றமுடையரல்லார் இப்புணர்ச்சியை வேண்டி நின்ற பொருளிலக்கணத்தையுடைய தமிழை ஆராயாத தலைவர் களவொழுக்கத்தைக் கொள்ளமாட்டார்"

எனக் கூறிய உரையால் அறிக.

இதனால் இக்கந்தருவ வழக்கமே முன்னை மறையோர் வழக்கமாயிருந்ததென்றும், நாளடைவில் பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணமென்றுங் கண்டு கொள்க. இவ்வுண்மையை ஆண்டுப் பேராசிரியர் கந்தருவ வழக்கம் மறையோர் ஒழுகிய நெறியாகலான்,

"மறையோராறு என்றான் என்பது" எனக் கூறினார். இதனாலன்றோ ஆசிரியர் தொல்காப்பியனார்,

"இன்பமும் பொருளு மறனு மென்றாங்
கன்பொடு புணர்ந்த வைந்திணை மருங்கிற்
காமக் கூட்டங் காணுங் காலை
மறையோர் தேஎத்து மன்றல் லெட்டனுட்
டுறையமை நல்யாழ்த் துணைமையோ ரியல்பே"

(தொல். களவி.. 1)

எனச் சூத்திரம் வகுத்தார். கந்தருவமாவது ஒத்தகுலனும், குணனும், அழகும், அறிவும், பருவமும் உடையார் யாருமில் ஒரு சிறைக்கண் அன்புமீதூரத்தாமே புணர்ந்து ஒழுகும் ஒழுக்கம். என்னை ?

"ஒத்த குலத்தார் தமியராய் யோரிடத்துத்
தத்தமிற் கண்டதம் மனமொ—னுய்த்திட
வந்தர மின்றிப் புணர்வ ததுவரோ
கந்தருவ மென்ற கருத்து"

எனவும்,

"முற்செய் வினையது முறையா வுண்மையி
னொத்த விருவரு முள்ளக நெகிழ்ந்து

காட்சி யையந் தெரிதல் தேற்றலென
நான்கிறந் தவட்கு நாணு மடனும்
அச்சமும் பயிர்ப்பு மவற்கு
முயிர்த்தகத் தடக்கிய
அறிவு நிறைவு மோர்ப்புந் தேற்றமு
மறைய வவர்க்கு மாண்டதோ ரிடத்தின்
மெய்யுறு வகையு முள்ளல்ல துடம்புறப் படாத்
தமிழியல் வழக்கமெனத்
தன்னன்பு மிகைபெருகிய
களவெனப் படுவது கந்தருவ மணமே"

என்றார் அவிநயனார்.

என யாப்பருங் கலவிருத்தி மேற்கோளில் வருவதூஉம் காண்க,

அசுரர் இயல்புடையவரை நல்யாழ்த் துணைமையோர் இயல்பினரென்று தொல்காப்பியனார் கூறுவாரோ என்று அறிஞர்களே ஆராய்ந்து கொள்வாராகுக. மறையோர் மன்றலெட்டனுள் ஆசுரமும் உளதாகவும் தமிழர் அசுர ரியல்பினராகாமையான் அதனை விலக்கிக் கந்தருவரியல்பினராதலான் அவர் மணமே இவர்க்கு ஆசிரியர் உடன்பட்டதனால் இவ்வுண்மை வலியுறும். துணைமையோர் என்பதற்கு நச்சினார்க்கினியர் பிரிவின்மையோர் என உரை கூறினார். இவர் ஆணும் பெண்ணுமாய்ப் பிரியாது எப்போதும் இரட்டையாய் இயங்கு மியல்பினர் என்பது பற்றி. " கந்தருவ மிதுனம் " என்பது வடநூல் வழக்கு.

வான்வாழ் கணங்களுள் ஒருவர் கண் தம் குடித் தலைமையை வைத்து வழங்குவது உலகின் பலநாட்டுப் பன்மொழியாளருக்கும் இயல்பே யாம். அங்ஙனம் தமிழரைப்பற்றி அவர் நூல் கொண்டு உள்ளவாறு ஆராயப்புக்கால் இவர் அசுரர் வகையினராகாது கந்தருவர் வகையினர் என்பதற்கே பல சான்றுகள் கிடைப்பனவென்று மேற்காட்டியவற்றால் தெரியலாம். இதற்கேற்பவே தென்னாட்டில் கந்தருவர் இராவணனால் துன்புறுத்தப்பட்டனரென்று கூறுதலும் காணலாம். வான்மீகம் பால காண்டத்து,

"சோலையில் விளையாட வரும் கந்தருவரையும், அரமங்கையரையும் பாவமேயில்லாத முனிவோரையும் பாதகனை இராவணன் வருத்துவான்" என வழங்கியவாற்றான் அறியலாம். இராவணன் கந்தருவருக்குப் பகைஞன் என்பது இதனால் நன்கு விளங்கும்.

ऋषयश्च ततस्तेन गन्धर्वाप्सरसस्तथा ।
क्रीडन्तो नन्दनवने क्रूरेण किल हिंसिताः ॥

(வான்மீகி. பாலகாண். ஸர் 15 ஸ்லோ, 22)

அகத்தியர் இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்துத் தென்னாட்டிற் புகாதவாறு செய்தனர் என்ற தமிழ்க் கதையையும் நூல்களிற் காணலாம்.

'தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற்
றொன்முது கடவுட் பின்னர் மேய
வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந"

(மதுரைக்காஞ்சி. 40-42)

என்பதற்கு நச்சினார்க்கினியர், "இராவணனைத் தமிழ்நாட்டை யாளாதபடி போக்கின கிட்டுதற்கரிய வலியினையுடைய பழைமை முதிர்ந்த அகத்தியன்" என்றும், தொல்காப்பியப் பாயிர வுரையில், அவர் "பொதியிலின் கண்ணிருந்து இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து, இராக்கதரை ஆண்டு இயங்காமை விலக்கி" என்றும், கூறலானும் விளங்கும். இதனால் இராவணன் தென்னாட்டினருக்குப் பகைஞனாதல் உணரலாம். 'மெய் சொல்லா விராவணனை மேலோடி ஈடழித்துப், பொய் சொல்லா துயிர் போனான் புள்ளிருக்கு வேளூரே' எனத் தேவாரத்துள் தெய்வத் தமிழ்ப் பெரியார் இவனைப் பழித்தல் காண்க. இவனுட்பட்டாரை 'மாயஞ் செய்வாளவுணர்' (சிலப். வேட்டுவ.) என்ப. இத்தீய குணங்கள் பழந்தமிழர்க் கியையாமை நூல்களிற் கண்டுகொள்க. அகத்தியர் கந்தருவத்தாற் பிணித்தார் என்பது இசையாற் பிணித்தார் என்றவாறாம். தீங்கிழைக்குந் தீய வுள்ளத்தானாகிய இராவணன் அகத்தியர் முற்போந்து ஒரு கற்பாறையிற் றங்கியபோது, அகத்தியர் அக்கல்லுருகப் பாடி அதனைக் குழைவித்து, அக்குழைந்த கற்சேற்றிலே அவன் உடற்பொறை அமிழும்படி செய்தவளவில், தம் இசையை

நிறுத்தக் கற்பாறை இறுகி அவன் பிணிப்புண்டானாகப் பின் அகத்தியரை இரந்து மீண்டும் கல்லுருகப் பாடப்பெற்று உருகிய நிலையிலே புறம்போந்து வணங்கிப் போயினான் என்பர்.

அகத்தியர் தென்னாடு புக்குத் தமிழில் இயலும் இசையும் நாடகமுமாகப் பிரிக்கக்கூடிய தமிழ் ஒரு தொகுதியாக வழங்கப் படுதலைக் கண்டு, அதைத் தம் பேரறிவால் ஆராய்ந்து, பகுத்தெடுத்துத் தனித்தனி இலக்கணஞ் செய்தனரென்று, நினைக்கத் தகும். ஒரு நாடு இயலினும், இசையினும், நாடகத்தினும் சிறந்துகொண்ட இலக்கியப் பகுதிகளை உடையது கண்டு இவை அமைந்திருக்கும் முறைமைக்கு இலக்கணம் அமைத்தார் என்பதல்லது, இயல் இசை நாடகங்களில் இலக்கியங்களையும் அவரே உண்டுபண்ணினாரென்று கூறுதல் இயையாது. இந்நாட்டில் எல்லாச் செய்யுளும் நன்றிசைத்தற்குரிய இசைப்பாட்டாயிருத்தலே இக்கருத்தை வலியுறுத்தும்.

இத் தமிழ்நாடு முழுதும் கந்தருவர்க்குரிய இசையே மலிந்ததென்பதற்கும், இவர் பாடலெல்லாம் இசையளவைக்கொண்டு யாக்கப்பட்டன என்பதற்கும் அறிகுறியாக எத்துணையோ நற்சான்றுகள் உள்ளன. கந்துகவரி, அம்மானைவரி, ஊசல்வரி குரவைப்பாட்டு முதலிய விளையாடற் பாடல்களானும், பிழைக்காணம் (பிணைப்பாட்டு) முதலிய இரங்கற் பாடல்களானும், இத்தமிழர் இன்பத்தையும் துன்பத்தையும் இசையான் வெளியிடும் இயல்பினரென்று உணரலாம். இவையல்லாமல்,

"ஏற்றப் பாட்டும் இறவைப் பாட்டும்
காவடிப் பாட்டும் கப்பற் பாட்டும்
படையி னெழுச்சியும் பள்ளி யெழுச்சியும்
சிந்தமுஞ் சந்தமுந் திருத்தா லாட்டும்
கல்லுளிப் பாட்டுங் கவணெறி பாட்டும்
பாவைப் பாட்டும் பலகறைப் பாட்டும்
மறத்தியர் பாட்டுங் குறத்தியர் பாட்டும்
பள்ளுப் பாட்டும் பலகடைத் திறப்பும்
வள்ளைப் பாட்டும் பிள்ளைப் பாட்டும்
கறத்தற் காயர் இறத்துரை பாட்டும்
பொருத வேந்தர் விருதுப் பாட்டும்
கனுலப் பாட்டும் காதற் பாட்டும்"

என்றிவை முதலா வெத்துணையோ பல இசைப்பாடல்கள் இக்காலத்தும் ஆங்காங்கு வழங்குதல் காணலாம். இவற்றாற் பண்டைக்காலத்து இத்தமிழ்நாட்டு இசைச்சுவை யாண்டும் மலிந்து வழங்கியதென்று உய்த்துணரத்தகும். இங்ஙனமே "அழுகையும் தொழுகையும் அசதி யாடலும், ஏத்து மிழிப்பும் இரத்தலுமெல்லாம், பாட்டாய் வரலிந் நாட்டின் வழக்கே" எனக் கண்டறியலாம். இவையன்றி உலகியலறிவுறுத்தும் அளவிறந்த பழமொழிகளெல்லாம் செய்யுட்குரிய இசையைத் தழுவி மோனையும் எதுகையும் முற்றப் பெற்றுச் சில சீர்களாலாய உரைப் பாட்டடிகளாக இந்நாட்டில் நெடுங்காலமாக வழங்குதலும் ஆராய்ந்து கொள்க. இவ்வாறு பலதொழில் மாந்தரும், இனிய ஓசையும் நன்பொருளும் நிறைந்த பாடல்களையே தமக்கு இளைப்பாற்றும் வாயிலாகக் கொண்டு சிறந்தது இத்தென்னு டென்று நன்குணரலாம். நாடாண்ட அரசரும் இசையையே மிகுத்துப் பாராட்டி வளர்த்தனர் என்பது தமிழ் நூல்களிற் கேட்கப்படுவதொன்று. பாண்டியருள் சாரகுமாரன் என்பவனுக்கு இசையறிவுறுத்தற்குச் சிகண்டி என்னும் அருந்தவ முனிவர் செய்தது இசை நுணுக்கம் என்னும் நூலென்பர் இதனை,

"தேவவிருடியாகிய குறுமுனிபாற் கேட்ட மாணக்கர் பன்னிருவருட் சிகண்டி என்னும் அருந்தவமுனி இடைச்சங்கத்து அநாகுலனென்னுந் தெய்வப் பாண்டியன் தேரொடு விசும்பு செல்வோன், திலோத்தமை என்னுந் தெய்வமகளைக்கண்டு தேரிற் கூடினவிடத்துச் சனித்தானைத் தேவரும் முனிவரும் சரியாநிற்கத் தோன்றினமையிற் சாரகுமாரன் என, அப்பெயர் பெற்ற குமாரன் இசையறிதற்குச் செய்த இசை நுணுக்கமும்" எனவும், "பாண்டியன் மதிவாணனார் செய்த முதனூல்களி லுள்ள வசைக் கூத்திற்கு மறுதலையாகிய புகழ்க் கூத்தியன்ற "மதிவாணர் நாடகத் தமிழ்நூல்" எனவும் அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்தில் உரைச் சிறப்புப் பாயிரத்துக் கூறுவதால் அறிக. பாண்டியர் இசை வளர்த்தது கூடலின் ஆய்ந்த "ஏழிசைச் சூழல்" எனத் திருச்சிற்றம்பலக் கோவையாரின் வருதலானும் அறியலாம். முத்தமிழின் இசைத் தமிழென ஒன்றைத் தனியே பாண்டியர் வளர்த்தனரென்பதும் ஈண்டைக்கேற்ப நோக்கிக்கொள்க. மூவேந்தரும், இசைப்பாணர்,

விறலியர் கோடியர்க்கு வழங்கிய பெருங்கொடைகள் நிரம்பிய பழைய தமிழ்ப் பாடல்களானும் இதனுண்மை உணரலாம். பாண்டியர் அரியணையின் பெயர் "இசையளவு கண்டான்" எனச் சாசனங்கள் கூறுவதும் இக்கருத்தை வலியுறுத்தும். இவையெல்லாம் படித்தாராய்ந்த தொல்லாசிரியர் இத்தமிழரைக் கந்தருவ வழக்கினரென்று துணிந்தனர் என்க.

இவற்றால் இத்தமிழர் அசுரர் வகையினர் ஆகாரென்றும், கந்தருவ வகையினரே ஆவரென்றும் துணிந்துகொள்க. ஒழுக்க வழக்கங்களில் ஒற்றுமை நலங்கண்டு தானே, ஒருவரை இன்னவகையினரென்று துணியவேண்டும். இங்ஙனம் பன்னூல்களையுந் துணையாகக்கொண்டு ஆராயுமிடத்து இவர் யாழோர் வகையினரென்றே இனிது கொள்ளப்படுமென்க. யாழ் என்பது இசையின் நுணுக்கங்களைத் தப்பாது உணர்த்தும் நுண்ணிய பல்லுறுப்பும் அமைந்த இனிய கருவி என்பதும், அஃது ஒருநாளில் உண்டாக்கப்பட்டதில்லை என்பதும், எத்துணையோ ஆண்டுகள் நுணுகி முயன்று யாக்கப்படவேண்டிய அரிய பெரிய இசைக் கருவியென்பதும் பலரும் தெரிவர். இவ்யாழ்த் திறத்தைப் பன்னிலத்தும் பரப்பிக்கொண்ட தமிழ் நாட்டிற்கு இயல்பாகவே இசையின்கண் ஒரு பெருவிருப்பும் ஆராய்ச்சியும் பண்டே இருந்திருக்கவேண்டுமென்பது நினைக்கத்தகும். இவர் வங்கியம் என்னும் இசைக்குழல் ஊது கருவியை வண்டுகள் துளைத்த மூங்கிற்றுளை வழியிற் காற்றுப் புக்கியங்குதலால் உண்டாம் இன்னோசையைத் தம் செவி நுட்பத்தாலுணர்ந்து அமைத்து வழங்கினர் என்பது, அகப்பாட்டில் "ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கிற் கோடை யவ்வழி குழலிசை யாக" (82) எனவும், "ஆடமைத் தும்பி குயின்ற, அகலா அந்துளை கோடை முகத்தலின்,......ஆய்க்குழற் பாணியின்......இசைக்கும்" (225) எனவும் வருவனவற்றானுய்த்துணரலாகும். இவ்வாறே யாழென்னும் விரலிசைக்கருவியையும் தங்கள் விசித்து வலைத்த வில்நாண் ஓசையடியாகவுணர்ந்து அமைத்து இசை வளர்க்கத் தொடங்கினர் என்பது "செந்நித் தோட்ட கருந்துளைக் குழலின், இன்றீம் பாலை முனையிற் குமிழின், புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின், வில் யாழிசைக்கும் விரலெறி குறிஞ்சி" (பெரும்பாண். 179-182) எனவரும் அடிகளானும் உய்த்துணர

லாகும். இந்த யாழ் வளைவுடையதேயென்பது, "வணர் கோட்டுச் சீறியாழ்" (புறம். 155) எனவும் "யாழ்கோடு" (குறள். 279) எனவும் வருதலானறியலாம். இவ்வாருய குழலும் வளைந்த யாழுமே கீழ்கடல் நாட்டுச் சம்பா (Champa) முதலிய இடங்களிற் கிடைத்த சிலையுருவங்களிற் காணக்கிடைத்தலால் இத்தென்னுட்டவர் நாகரீகம் சேய்மைக்கணுள்ள அக்கடல் நாட்டும் புக்கு விளங்கியதுணரத்தகும். இவ்வுண்மையைப் படத்திற் காண்க.

இனி,

"கந்தருவ மென்பது கசடறக் கிளப்பிற்
செந்துறை வெண்டுறை எனவிரு வகைத்தே

அவற்றுள் செந்துறை என்பது பாடற்கேற்பது. வெண்டுறை என்பது ஆடற் கேற்பது. என்னை?

"செந்துறை யென்பது ஒலிகுறித் தற்றே"

"வெண்டுறை யென்பது கூத்தின் மேற்றே"

என ஆடல் பாடல்களைக் கந்தருவமெனத் தமிழர் பாராட்டிப் பகுத்துக்கொண்டு அதற்கேற்ற பெற்றியாகச் செந்துறையினும் வெண்டுறையினும் செய்யுள் அமைத்துக்கொண்ட சிறப்பும் இத்தென்னுட்டிற்கே உரியது. தேவபாணியினும் கந்தருவ மார்க்கத்தையே தம் செய்யுளிற் கொள்ளுதல் "இவை மூன்றும் தாழம்பட்டவோசையும் முடுகியலுமாய் ஒரு பொருண்மேல் மூன்றடுக்கிக் கந்தருவ மார்க்கத்தான் இடை மடக்கிய தேவபாணித் தாழிசைக் கொச்சக வொருபோகு" (சிந். 2563 உரை.) என நச்சினர்க்கினியர் எழுதலான் அறியலாம். இனி இன்பப் பகுதியினும் சுட்டியொருவர் பெயர் கொண்ட உலகியல் வழக்கான காந்தருவத்தை (சிந். 2063) இவர் பண்டைத் தொட்டுடையர் என்பது முத்தொள்ளாயிரத்து வரும்புறத்திணைக் கைக்கிளைச் செய்யுட்களில் மூவேந்தர் பெயர் குறித்து வெளிப்பட வருதலான் நன்கறியலாம்.

இயக்கர்கள் தென்னுட்டில் இராவணற்கு முன்னிருந்தனர் என்றும், அவரையும் அவர் தலைவனை குபேரனையும் இராவ

ணன் வடக்கண் ஓட்டினன் என்றும் உத்தர ராமாயணம் கூறும். தமிழர்கள் கந்தருவர், இயக்கர் என்பவரை அதிக வேற்றுமையில்லாது ஒரு வகுப்பினராகக் கருதுவரென்பது,

"கந்தருவர் இயக்கர் யாழோர் காந்தருவர்"

எனப் பிங்கல நூலார் கூறுதலான் உணரலாம். கந்தருவர் தலைவன் சித்திரரதன் என்பது ஸ்ரீகீதையில் விபூதி அத்தியாயத்திற் கண்டது. "கந்தருவருக்குள் சித்திரரதன் என்ப" गन्धर्वाणां चित्ररथः இச் சித்திரரதன் என்னும் பெயர் தமிழ் நாடாண்ட சோழரில் முன்னோன் ஒருவனுக்கு உண்டென்றும், அவன் வழியினர் பலர் இச்சித்திரப் பெயரைத் தம் பெயர் முற்பட இணைத்து வழங்கினர் என்றும் திருவாலங்காட்டு ராஜேந்திர சோழன் I சாஸனத்தால் நன்கு விளங்கும்.

ஓவியச் சேனன் சித்திரசேனனுதலும் அவன் கந்தருவனுதலும் சிலப்பதிகாரம் கடலாடு காதையில் (188. பக்.) அடியார்க்கு நல்லார் உரையான் அறிக. தமிழ்நாட்டில் ஓவியரென்ற ஒரு குடியினர் உண்டென்றும், அவர் தலைவருள் ஒருவன் நல்லியக்கோடனென்றும், சிறுபாணாற்றுப் படையால் தெரிவதை ஈண்டைக்கு ஏற்ப நினைக்க. நல்லியக்கோடன் என்னும் பெயர் நல்வாத்திய கோஷத்தாற் போந்ததென்பது எளிதில் உணரத்தகும். இவன் குடி முன்னோராகிய ஓவியர், குபேரன் இலங்கையாண்ட பொழுது அவனுடன் இருந்தனரோ என்று நினைத்தற்கும் இடனுண்டு. இவ்வோவியர் தமிழ்நாட்டில் தமக்கென வகுத்துக் கொண்ட ஊர் பழைய இலங்கையைக் கருவாக வைத்துக் கட்டிய "நன்மாவிலங்கை" என்ப. இதனை,

"தொன்மா விலங்கைக் கருவொடு பெயரிய
நன்மா விலங்கை மன்ன ருள்ளும்
மறுவின்றி விளங்கிய வடுவில் வாய்வாள்
உறுபுலித் துப்பி னோவியர் பெருமகன்"

(அடி 119-122)

எனச் சிறுபாணாற்றின் வருதலான் அறியலாம். இவ்வோவியர் இன்ன வகையினர் என்பது இதனாலும் உய்த்துணரத்தகும்.

இக்குடியினன் ஒய்மான் என்பான். ஒய் - சித்திரம்; சீனப்பகுதி ஆமாய்மொழி. இவையெல்லாம் இத்தமிழர் இசைவன்மையினும் ஓவிய வன்மையினும் நகரமைக்கும் வன்மையினும் பண்டே எத்துணைச் சிறந்தனர் என்பதை உலகந் தெளியக் காட்டாமலிரா என்க.

வேங்கடத்திற்குத் தெற்கணுள்ள தமிழ்நாட்டில் அயிரைமலையாகிய ஆனைமலைப் புறத்துக் காவல் பூண்ட வெங்கானாட்டு நம்பாடியார் தம்மைக் கந்தருவர்க்கும் அப்ஸரஸுப் பெண்டிர்க்கும் உண்டான நன்மக்களாகக் கூறிக்கொள்ளுதல் கேட்கப்படுகின்றது. இங்ஙனம் அப்ஸரஸ்ஸ்திரீ வழியினர் என்பது தெரிய இக்குடிவழியிற் பெண்டிர் அப்பிச்சி என வழக்குப்பெறுவர் என்ப.* இவ்வரிய வரலாறு தென்னாட்டுக் கந்தருவர் வழியினர் உண்டு என்பதை நன்கு வலியுறுத்தல் காண்க.

வியாஸபாரதம் "அமிர்தமும், பார்ப்பனரும், ஆவும், கந்தர்வரும், அப்ஸரஸுக்களும், கபிலை என்பவள்பால் (காசிபருக்கு) உண்டாதல் தொன்றுதொட்டுக் கேட்கப்பட்டது,'. (1-65) எனக் கூறுதலான், ஆவுக்கும் ஆனியற் பார்ப்பன மக்கட்கும் கந்தர்வர்க்கும் உள்ள பழைய தொடர்பு உய்த்துணரலாகும்.

---

* The Venganad Nampatis belonged to the family of Periyandamukkil Kilakka Nampiti, who was the Naduvali of Eduttaranad and the Nampiti of the Western half of Kuttanad or Ponnani. They claim descent from the Gandharva, who. says the tradition, guarded the southern and the northern ghats Their ladies are called Appichies, a corruption of the Sanskrit Apsara-stri.

The Zamorins of Calicut by K. V. Krishna Aiyar, p. 133-134.)

# தமிழர் கொள்கைகள்.

அறிவென்பது கொள்ளுதற்குந் தள்ளுதற்கும் உரிய நன்றையுந் தீதையும் நன்கு பகுத்துணர்வதேயாகும்.

"தீதொரீஇ, நன்றின்பா லுய்ப்ப தறிவு"

(குறள். அறிவுடைமை 2)

என்றார் திருவள்ளுவர். உலகிற்கும் தனக்கும் நன்மை செய்வன இவையென்றும், தீமை செய்வன இவையென்றும் இவ்வறிவாற் பகுத்துத் தெளிந்து நன்மை செய்வனவற்றைப் புகழ்ந்து நன்றி பாராட்டி அவற்றிற்குத் தெய்வத் தன்மையைக் கற்பித்து வழி படுதலும், தீமை செய்வனவற்றை இகழ்ந்து வெறுத்துக் கடிதலும், மக்கள் உள்ளத்தின் பாங்கிற்குப் பொருந்த நிகழ்வன வாகும். இம்முறையில் ஆரியர், நிலம், நீர், தீ, கால், விண் என்பன தமக்கு நன்று பயன்படுதலை யறிந்து அவற்றைத் தெய்வமாக வழிபட்டவாறு பழமையான இருக்குவேத முதலிய வைகளில் நன்கு தெளியலாம். இவற்றில், நிலத்தை எல்லாம் பிறத்தற்கு இடமாதல் பற்றிப் பெண் தெய்வமாகக் கூறுதல் அம்மறை வழக்காகும். "ப்ருதிவீ மாதர மிமாம்" என்ப. அவ்வாறே நீரினை ஓர் கடவுள் வடிவாகக் கொண்டு அதை அளிப்பவனை இந்திரன், வருணன் எனக்கொள்வதும் அம்மறைக்கு ஒத்ததேயாம். பெருநீரான கடலை வருணன் கோயிலாக அவர் கொள்வர். எல்லாவற்றையுந் தெறும் அங்கியஞ் செல்வனை அக்நிபகவான் என்பர். காற்றினை வாயுபகவான் என்பர். ஆகாயம் மிக நுண்ணியதாய்ப் புலப்படாமை பற்றி ஒரு பெருங் கடவுளாகவே உபசரிப்பர். உலகிற்கு ஒளியாய் இருள் நீக்கிப் பெரிதும் பயனளித்து இயங்கும் ஞாயிற்றைப் புகழ்ந்து தொழுவதும் அவர்க்கியல்பு. இவ்வாறே திங்களையும் விண்மீன்களையும் ஒளிவிட்டு உலவுதல் கருதித் தெய்வமாக வழிபடுதலும் அவர் நூல்களிற் கண்டதே.

உலகத்தில் ஆண் பெண் அன்பாற் கூடி மகவினை உண்டாக்குவதற்கு ஓர் தெய்வத்துணை வேண்டுமென்று கொண்டு அத்தெய்வம் காமன் என்று வைத்து அவனை வழிபடுவதும் அவர் நூலிற் கண்டதேயாம். இவ்வாறு செல்வத்திற்கு ஓர்

தெய்வம் இன்றியமையாதெனக் கொண்டு அத் தேவதையை ஸ்ரீ (திருமகள்) எனவும், கல்விக்கு ஓர் தனிக் கடவுள் வேண்டு மென்று கொண்டு அத் தேவதையை வாணி, புலமா மகள் எனவும், எல்லாத் தீங்கிற்கும் ஒரு தெய்வம் வேண்டு மென்று கொண்டு அத்தேவதையை ஜ்யேஷ்டாதேவி மூதேவி யெனவும், வெற்றிக்கு ஓர் தெய்வம் வேண்டுமென்றுகொண்டு அத்தேவதையைத் துர்க்கை, கொற்றவை எனவும் அவர்க்கு உடன்பாடாகும். உடலினின்று உயிரைப் பிரித்தற்கும் ஒரு தெய்வம் வேண்டி அக்கடவுளை யமன், காலன் என்பதும் அவர் நூல்களிற் காணலாம். இவ்வாறு வேத வழக்கொடுபட்ட கடவுட் கூட்டமனைத்தும் சிறிதும் வேறுபாடின்றிப் பண்டைத் தமிழ் நூல்களிற் போற்றி வழங்கப்படுதல் அறிஞர் தெளிந்தது. இத்தெய்வக் கொள்கைகள் அனைத்தும் தமிழருக்கும் ஆரியருக்கும் இன்ன காலத்திற்றான் ஒற்றுமைப்பட்டதென்று துணிவது இக்காலத்தார்க்கு இயல்வதன்று. இவையன்றி மலையை ஆண்பாலாகக் கூறுதலும், அதன்கண் உண்டாகும் ஆற்றைப் பெண்பாலாகக் கூறுதலும், அவ்வாறு புகுங்கடலை ஆண்பாலாகக் கூறுதலும் இருமொழி யாளருக்கும் ஒத்தனவே யாகும்.

இருக்குவேதம் மக்களை "பஞ்சஜநா:" எனவும், "பஞ்ச க்ஷிதய:" எனவும் பகுத்த முறை தமிழர் ஐந்திணை மக்களுக்கும் ஒத்தபடி உய்த்துணர்ந்துகொள்க. ஆண்டு வடநூலுரை காரர்கள் ஒரு நெறியின்றிப் பலபடியாக வேறு வேறு பொருள் கூறினும் மிகப் பழமையாகத் தமிழில் அடிபட்டு வந்த ஐந்திணை மக்களையே இந்நாவலந் தீவின் இயல்பு கருதிய பண்டை ஆரியர் உடன்பட்டுக் குறித்தனர் என்பதே நன்கு பொருந்துவதாகும். அவர் நானிலப் பகுப்பு உடன் பட்டமை கிரிதுர்க்கம், வன துர்க்கம், ஜல துர்க்கம், மரு துர்க்கம் எனப் பகுத்துக் கூறுமாற் றான் நன்கறியலாம். திருவள்ளுவனாரும்,

> "மணிநீரு மண்ணு மலையு மணிநிழற்
> காடு முடைய தரண்." (குறள். 742)

ஈண்டு மண்-மருதநிலம் என்பர் பரிமேலழகர்: அரண் மருதநிலம் உடைத்தாதல் "நாடுகண்டன்ன கணைதுஞ்சு விலங்கல்"

(பதிற்றுப்பத்து. 16) என்புழி "நெடுநாட்பட அடைமதிற் பட்ட காலத்தே விளைத்துக்கோடற்கு வயலுங் குளமும் உளவாகச் சமைத்து வைத்தமையால் கண்டார்க்கு நாடு கண்டாற் போன்ற . . . மதில்" எனப் பழைய வுரைகாரர் கூறுதலான் உணரலாம்.

பாலைக்கு நிலம் இல்லையென்றது அதன்கண் வெயில் தெறுதலால் ஓரிடத்தே நிலைபெற்றுத் தங்குதல் கூடாமைபற்றி ஆண்டு அரண்செய்து வாழ்தல் இல்லையென்று காட்டியதென்று எளிதில் உய்த்துணர்ந்துகொள்ளலாம். அப்பாலையில் வதிவோர் நீரூறும் இடங்கள்தோறுஞ் சென்று வதியு மியல்பினரன்றி ஓரிடத்து நிலை பேறிலர் என்று காட்டியவாறும். சுனை ஊற்று வாய்த்துழிச் சிற்றரண் கோலி வாழ்தலும் இவர்க்கியல்பாகும். "தவலருஞ் சிறப்பினைந்நிலம் பெறுமே" (தொல். பொருள் கள. (15) என்பதனால் ஆசிரியர் ஐந்து நிலனும் உடன்பட்டுக் கூறுதலுணரலாம். அப்பாலை நிலத்தவரையும் திணைமக்களிற் சேர்த்து ஐவகையினராக எண்ணிக்கொள்ளல் தமிழ் வழக்கே யென்பது,

> "ஏனோர் பாங்கினு மெண்ணுங் காலை
> யானவகைய திணைநிலைப் பெயரே" (அகத். 22)

என்னுந் தொல்காப்பியப் பொருளதிகாரச் சூத்திர உரையில், பாலைக்கு மக்கட் பெயர் எயினர், எயிற்றியர் என்பன; தலை மக்கள் பெயர் மீளி, விடலை என்பன; என உரையாசிரியர் கூறிய வாற்றானுணரலாம். "ஐம்பாற்றிணையுங் கவினி" என்பது மதுரைக்காஞ்சி (326.). இருக்குவேதத்துப்பல்லிடத்தும் "பஞ்ச க்ஷிதி" "பஞ்சபூமா" என ஐந்து நிலவகை கூறப்படுதல் காணலாம்.

यं उषासः पथ्या जनानां
पञ्चक्षितीर् मानुषीर् बोधयन्ति

(அஷ். 5. அத். 5. வர்க்கம் 26.)

என வந்துள்ளது. இதன் பொருள் ஐவகை நிலத்துள்ளனவாகிய மக்கட் பிறப்பினைத் * துயிலுணர்த்திக்கொண்டு உயிர்

கள் செல்வழியில் விடியலர்னது ஒளி விடுகின்றது என்பதாம். இதன்கண் பஞ்சக்ஷிதி என்பது ஐவகை நிலம் எ-று. ஈண்டு நிலத்துயிர்கட் காயிற்று. பஞ்ச பமா என்பது ரிக்வேதத் (5—5—14) தில் வந்தது.

**पञ्चक्षितीनां वसु** (அஷ். 2. அத். 4. வர். 19. ரிக். 3.) என்பது ஐவகை நிலச்செல்வம் எ-று.

இவ்வேத வழக்கின் உண்மைப் பொருளைப் பண்டே உணர்ந்த தமிழாசிரியர் தம் நூல்களில் இவ்வேதத் தொடர்க்குப்பொருள் கூறுவார் போன்று, ஐவகை நிலப்பாகுபாடுகொண்டனர் என்றுய்த்துணரத்தகும். அறங்கரை நாவின் நான்மறை முற்றிய அதங்கோட்டாசாற் கரிறபத்தெரித்த நூல் வழக்கு இஃதாக லானும் இது வேதத்தோடொத்த கொள்கையே யாமென்க. இவ்வருமைத் தமிழாசிரியர் கருத்தை உணர்தற்கு வாய்க்காத வடமொழி உரை யாசிரியர்கள் ஈண்டு வேறு வேறு கூறிச் செல்வர். மேற்றிசை யாசிரியர்கள் இவர்கள் உரையை உடன் படாமை அடிக் குறிப்பிற் காண்க. §

---

* "ஓ பூமியே இறத்தற்குரிய ஐவகைமக்களும் உனக்குரிய வர்களே. அவர்கள் மீது, உதிக்குங் கதிரவன் தனது கிரணங் களால் அழியா ஒளியை வீசுகின்றான்" என்பது அதர்வ வேதம்.

(Translation of hymns of the Atharva Veda—X. 15)

தமது இருப்பிடத்திற்கேற்பப் பல்வேறு மொழிகளையும் வழக்கங்களையும் மேற்கொண்டுள்ள மக்களைத் தன்னிடங் கொண்ட பூமி.

Translation of the Hymns of the Rigveda.—Edited by Maxmuller. (X. 45)

ஐவகை மக்களும் வசிக்கப்பெற்ற இந்தப் பூமி.

(Translation of the Hymns of Rigveda.—Edited by Maxmuller. X. 42.)

§ "Pancajana. Who are meant by the five is very uncertain. Not one of these explanations can be regarded as probable.' (Keith. Rig Veda Brahmanas. p. 463.)

Roth and Geldner say that all the people of the Earth are meant.

3-வது அஷ்டகம் இரண்டாவது அத்தியாயத்தில் चतस्रः) நான்கு வருணங் கூறியதன் மேலும் 'பஞ்ச க்ஷிதி' என்று ஐவகை நிலங் கூறுவதால் தமிழாசிரியர் கருத்தே வேதக் கருத்தாதல் தெரியலாம். இந்நிலத்திற்கு ஆரியர் கூறிய தெய்வங்கள் வேத வழக்கொடுபட்ட மூர்த்திகளாதல் பலருமறிந்தது.

இனி, இவ்வைந்து நிலத்தவரை வேதம் (ரிக்வேதம் III, 24 ; 3) பஞ்சக் குஷ்ட்யர் என்பதனால் ஐந்துவகைக் கிருஷி (தொழில்) உடையவராகவுங் கூறும். ஐந்து நிலத்தவர்க்கும் தனித் தனித்தொழில் கூறுதல் தமிழிலக்கணங்களிற் கண்டது. இவ் வேதங்கூறிய கிருஷி யென்ற சொல்லையே மொழிபெயர்த்துக் கொண்டு பாலை நிலத்தவர் தொழிலைக் களவேர் வாழ்க்கை என வழங்குதலும் காண்க. வில்லேருழவு, சொல்லேருழவு என்னும் வழக்குகளும் நினைக. 'களவுழவு' (அகம். 91) என்பது அகப்பாட்டு. ஈண்டுக் களவாகிய கிருஷி என்று பொருள்படுதல் காண்க.

இனித் தமிழர் பூதமைந்து உடன்பட்டது தொல். பொருள். மரபியல் (சூத். 87),

> " நிலம்நீர் தீவளி விசும்போ டைந்துங்
> கலந்த மயக்கம் உலகம் "

என்பதனானறிக. அவற்றினுள் நிலத்தினைப் பெண் தெய்வமாகக் கூறுதல்,

> " நிலனென்னு நல்லாள " (திருக்குறள். உழவு. 10)
> " மாநில மடந்தை " (சிறுபாண். 1 ; மணிமே. பதிகம்)

என்பவற்றிற் காண்க. நீரையும் நீர்க்குக் காரணமாகிய ஞாயிற்றையும் போற்றுதல்

> " எல்லா வுயிர்க்கும் ஏமமாகிய நீர் "
> (புறம். கடவுள் வாழ்த்து.)

எனவும்,

> ' மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும் "
> (சிலப். மங்கலவாழ்.)

எனவும் வருவனவற்றால் அறியலாம். குறவரும், மழை வேண்டுங் காலத்துப் பெய்வித்தற்கும் வேண்டாக் காலத்து ஒழித்தற்கும் கடவுட்குப் பலி தூவிப் பேணுதல்,

"மலைவான் கொள்கென வுயர்பலி தூஉய்
மாரி யான்று மழைமேக் குயர்கெனக்
கடவுட் பேணிய குறவர்" (புறம். 143)

என்பதனானும் அதன் உரையானும் உணரலாம். இதற்காக இந்திரனை வழிபடுதலை,

"வேந்தன் மேய தீம்புன லுலகமும்" (தொல். அகத். 5) என்பதனாலும், இவனுக்கு விழவு எடுத்தல் சிலப்பதிகாரம் மணிமேகலைகளிற் கூறப்படுதலாலும் உணரலாம். மழையில்லாத போது அதை வேண்டிச் "சசிதேவனை வழிபடுக" என்பது சாணக்கிய நீதி.

"தீயினுட் டெறல் நீ" (பரிபாடல். 3)

என்றும்,

"மூன்றி னுணருந் தீயு நீயே" (பரிபா. 23)

என்றும் வருதலால் தீ போற்றப்படுதல் தமிழர்க்கு உடன்பாடாம். அன்றியும்,

"அடுதீ யல்லது சுடுதீ யறியாது
இருமருந்து விளைக்கு நன்னாட்டுப் பொருநன்" (புறம். 70)

என்பதனால் தங்கள் உணவு அடுதற்குரிய தீயைச் சுடுதீயென்னாது வேறோர் நன்பெயர் கொடுத்து அடுதீயெனப் பாகுபடுத்திப் பாராட்டுதலும் அறிவின் பயனேயாம். சிலப்பதிகாரம் வஞ்சின மாலையில்,

"எரியங்கி வானவன்" (49)

எனவும் வருதல் காண்க.

"இரண்டி னுணரும் வளியும் நீயே" (பரிபா. 3)

என வருதலான் காற்றைக் கடவுளாகத் தமிழர் நினைத்தல் உணரத்தகும்.

" நளியிரு முந்நீர் நாவா யோட்டி
வளிதொழி லாண்ட வுரவோன் மருக." * (66)

எனப் புறப்பாட்டில் வருதலையும், அதற்குப் பழைய வுரைகாரர் " நீர் செறிந்த பெரிய கடலின் கண்ணே மரக்கலத்தை யோட்டிப் போர் செய்தற்குக் காற்றின்றி நாவாயோடாதாக, ஆண்டு வளிச்செல்வனை யழைத்து ஏவல்கொண்ட வலியோன் மரபினுள்ளவனே "

என வுரைத்தலையும் ஈண்டைக்கு நோக்கிக்கொள்க. ஈண்டுவளி காற்றுமட்டிலாகாது வாயுபகவன் என்பது வளிச் செல்வன் என்பதனாற் றெளிக.

" ஒன்றனிற் போற்றிய விசும்பு நீயே " (பரிபா. 13)

என்புழி விசும்பு கடவுளாகக் கூறப்படுதல் காண்க.

"உலர் புகழ் ஞாயிறு " (திருமுருகு. 2)

" முந்நீர் மீமிசைப் பலர்தொழத் தோன்றி
யேமுற விளங்கிய சுடர் " (நற். 273)

---

* மந்திரத்தாற் காற்றை யழைத்து நாவாய் இயக்கும் செய்தி செங்கடல் இடையேயுள்ள சுகோத்ரத் தீவில் உள்ளார் கண்ணும் உண்டு என்று பிறர் கூறுவர்.

The Hurranis were celebrated astrologers and we learn from Marco Polo that the Sokotrans had a similar reputation. He says :— " And you must know in this island (Sokotra) there are best enchanters in the world. It is true that their archbishop forbids the practice to the best of his ability, but it is all to no purpose, for they insist that their fore-fathers followed it and so must they also. I will give a sample of their enchantments. Thus if a ship be sailing fast with a fair wind and a strong, they will raise a contrary wind and compel her to turn back. In fact they make the wind blow as they list and produce great tempests and disasters; and other rich sorceries they perform which it will be better to say nothing about in our book.
(Indian Antiquary Vol. 19, 1890, pp. 196-7)

" தயங்குதிரைப் பெருங்கட லுலகுதொழத் தோன்றி
வயங்குகதிர் விரிந்த வுருகெழு மண்டிலம் "
(அகம். 263)

" ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும் "
(சிலப். மங்கலவாழ்.)

" உலகுதொழு மண்டிலம் " (சிலப், 14)

என ஞாயிறு போற்றப்படுதல் தெளிக.

" தொழுதுகாண் பிறையிற் றோன்றி " (குறுந். 178)

" பலர் தொழச்
செவ்வாய் வானத் தையெனத் தோன்றி
யின்னும் பிறந்தன்று பிறையே " (குறுந். 302)

" ஒள்ளிழை மகளிர் உயர்பிறை தொழூஉம்
புல்லென் மாலை " (அகம். 239)

என்பவற்றாற் றிங்கள் தொழப்படுதல் காண்க.

" பிறை தொழு கென்றல் "

என்ற துறையுந் தமிழிலே உண்டு.

" வடமீன்போற் றொழுதேத்த " (கலித். 1-22)

வடமீன் - அருந்ததி.

" சாலி யொரு மீன் " (சிலப். 1-51)

" பன்மீன் றனையொடு பாற்கதிர் பரப்பி "
(சிலப். 13, 17)

" அறுமீன் சேரும் " (அகம். 141)

அறுமீன் - உரோகிணி.

என வருவனவற்றான் இவர் விண்மீன் றொழுதல் துணியலாம்.

மகவுண்டாவதற்குக் காரணமாக ஆண் பெண் இருபாலார்க்குள் நல்லன்பை விளைக்குந் தெய்வம் காமன் எனப்படுவன். இக்கடவுள் தமிழர்க்குமாதல்:

"பருவரலும் பைதலுங் காணான்கொல் காமன்
ஒருவர்க ணின்றொழுகு வான்" (திருக்குறள். 1197)

"படையிடுவான் மற்கண்டாய் காமன் மடையடும்
பாலொடு கோட்டம் புகின்" (கலித். 106)

என வருடமிங்களிற் கண்டு கொள்க. இக்கடவுளை வேள் என்ற பெயரால் பண்டுதொட்டே வழங்கி இவர் வழிபடுதல் காண்க. வேள் என்பது தமிழ்ப் பழம் பெயராதல் காண்க. ஆரியர் காமன் என்பதுபோலவே இவரும் இருவரையும் வேட்கச் செய்பவன் என்னும் பொருளில் வினைமுதற் பெயராக வைத்து வேளென வழங்கியதுங் காண்க.

ஆரியர்க்குந் தமிழர்க்குமுள்ள கருத்து ஒற்றுமை இப்பெயரால் நன்கு விளங்கும். இதனின் வேறுபடுத்தி முருகக் கடவுளைச் செவ்வேளெனவும் நெடுவேளெனவும் வழங்குவதையுங் காண்க.

மாயோன், மால் என்பன ஆரியர் விஷ்ணு என வணங்கிய கடவுட்குத் தமிழர் வழங்கிய பெயர்களாம். விஷ்ணு-எங்கும் நிறைந்தவன் என்ப; இவர் இறைவன் என்பதும் இப்பொருட்டு. இறுத்தல் - தங்குதல். சிலப். நாடுகாண். அடி 184. அடியார்க்கு நல்லார் உரைபார்க்க.

"மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பிற்
றாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்" (தொல். புறத். 5)

எனத் தொல்காப்பியனார் கூறுதலால் அறிக. விஷ்ணு அம்சம் இல்லாதவன் உலகிற்குத் தலைவன் ஆகான் என வடநூல் வழங்கியதற் கொப்பத் தொல்காப்பியனார் பூவை நிலையென்னுந் துறையால் பூபதிகளை மாயோனுக்குள்ள மன்பெருஞ் சிறப்பிற் றாவா விழுப்புகழையிட்டுப் புகழ்ந்துரைக்கலாமென்று உடன்பட்டதுங் காண்க. இவ்வாறே செல்வத்திற்குத் தெய்வம் திரு

எனப்படுதலும் வறுமைக்குத் தெய்வம் முகடி எனப் படுதலும் காண்க.

" மடியுளாண் மாமுகடி யென்ப மடியிலான்
தாளுளா டாமரையி னாள் " (குறள். 617)

" விட்டோரை விடா-அள் திருவே " (புறம். 358)

என வழங்கலான் அறிக : " சேட்டை தன் மடியகத்துச் செல்வம்பார்த் திருக்கின் றீரே " (தொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலை, 10) என்பதனாற்றிருவிற்கு மூத்தவள் வழிபாடு சங்க காலத்திற்குப் பின்னும் இந்நாட்டு நிகழ்தல் புலனும் : " நல சேட்டைக் குலக்கொடியே " (திருக்கோவையார்-235) என்புழிப் பேராசிரியர் சேட்டையாகிய தெய்வத்தின் நல்ல கொடியே " எனவுரைப்பாருமுளர் என்று கூறுதலுங் காண்க. சொல்லைத் தெய்வமாகக் கொள்ளல் " காலமுலகம் " என்னுந் தொல்காப்பியச் சொல்லதிகாரச் சூத்திரத்துச் " சொல் " நாமகள் எனச் சேனாவரையர் உரைத்தது கொண்டுணர்க. மணிமேகலையில்,

" சிந்தா விளக்கு " (13,106)

எனவும்,

" சிந்தா தேவி செழுங்கலை நியமத்து
நந்தா விளக்கே நாமிசைப் பாவாய்
வானோர் தலைவி மண்ணோர் முதல்வி " (ஷ. 17-19)

எனவும் புலமாமகள் போற்றப் படுவதையும் காண்க. உடலினின்று உயிரைப் பிரிக்குந் தெய்வத்தைக் ' காலன் ' என்பது புறப்பாட்டிற் (240) கண்டது.

" கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலின்
ஆற்ற றலைப்பட்ட வர்க்கு " (குறள். 269)

எனத் திருவள்ளுவர் குறிப்பதையும் உணர்க. வெற்றியை அளிக்குந் துர்க்கையைக் கொற்றவை என்று குறித்தல்,

" மறங்கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த
கொற்றவை நிலையு மத்திணைப் புறனே "

(தொல். பொருள். புறத். 3)

" பொதுயற பொருப்பன் குலமுதற் கிழத்தி "
(சிலப். கட்டுரை. 12, 13.)

என வருவதிற் காண்க. இனிக் " கேள்விகேட்டுப் படிவமொடி யாது, வேள்வி வேட்டனை யுயர்ந்தோ ருவப்ப.......... வீறுசால் புதல்வற் பெற்றனை " (பதிற்றுப்பத்து. 74) என் புழிக் கேள்வி கேட்டு முனிவர்க்கும், வேள்வி வேட்டுத் தேவர்க் கும், புதல்வற் பெற்றுப் பிதிரர்க்கும் கடன்றீர்த்தவாறு வேத வழக்கொடு பொருந்தக் கூறுதலுங் காண்க.

இனித் தொல்காப்பியனார்,

" மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க் காகிய காலமு முண்டே "

(தொல். கற்பியல். 3)

எனவும்,

" பரத்தை வாயி னால்வர்க்கு முரித்தே "
(ஷை. பொருளியல். 30)

எனவும்,

" அந்த ணாளர்க் குரியவு மரசர்க்
கொன்றிய வரூஉம் பொருளுமா ருளவே "
(ஷை. மரபியல். 72)

எனவும்,

" வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை "
(ஷை. ஷை. 77)

எனவும்,

" வேளாண் மாந்தர்க் குழுது ணல்ல
தில்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி "
(ஷை. ஷை. 80)

என்வும்,

நான்கு சாதியுந் தொகுத்தும் வகுத்தும் ஓதிய இவ்விலக்கணத்திற் கியையவே,

> " வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங்
> கீழ்ப்பா லொருவன் கற்பின்
> மேற்பா லொருவனு மவன்கட் படுமே "
>
> (புறம் 183)

என நல்லிசைப் புலவர் தெளியப் பாடியதனானும் தமிழர் ஆரியருடைய நான்கு வருணம் உடன்பட்டமை நன்கு காணலாம்.

தொல்காப்பியனார் சாதியைப் பிறப்பு என்னுஞ் சொல்லால் விளங்க உரைத்தார்.

> " பிறப்பே குடிமை " (மெய்ப்பாட். 25)
> " நாடு மூரு மில்லுங் குடியும்
> " பிறப்புஞ் சிறப்பும் " (களவியல். 23)

என வருமிடங்களிற் கண்டுகொள்ளலாம். ஈண்டு இல்லினுங் குடியினும் வேறாகப் பிறப்பு ஓதுதல் காண்க. நீர் வாழ் பிறப்பும் என்ன வேண்டிய இடத்து இவ்வாசிரியர்,

> " நீர்வாழ் சாதியும் " (தொல். மரபியல். 93)

எனக் கூறிக் காட்டுதலால் இவ்வுண்மை தெளியலாம். இவ்வாசிரியர்,

> " பேணுதகு சிறப்பிற் பார்ப்பான் " (தொல். செய். 198)

என இப்பார்ப்பன மகனைச் சிறப்பித்தலான் இவ்விலக்கண நெறியே தமிழ் நெறியாதல் நன்குணரலாகும். இதனானன்றே இத்தமிழ் நாட்டு நற்றாயர் பார்ப்பார் ஓதிச் சிறப்பெய்துக என்று விரும்புவாராயினர் என்க. இதனைப்

> " பகைவர் புல்லார்க பார்ப்பார் ஓதுக
> எனவேட் டோளே யாயே " (ஐங்குறு. 4)

எனப் பாடுதலா னறியலாம்.

"அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்" (குறள், 560)

என்றது பார்ப்பார் ஓதுக என்று வேட்டதற் கியைய நின்று அந்தணர் நூன் மறப்பது உலகிற்குப் பெருங் கேடாகும் என னுங் கொள்கையை விளக்கி நிற்றல் அறிக.

"ஆர்புனை தெரியனின் முன்னோ ரெல்லாம்
பார்ப்பார் நோவன செய்யலர்" (புறம். 43)

(இது சோழர் நோக்கிற்று) என்பதனாலும்,
"பார்ப்பார்க் கல்லது பணிபறி யலையே" (பதிற்று. 63)

(இது சேரனை நோக்கிற்று) என்பதனாலும்,

"இறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த
நான்மறை முனிவ ரேந்துகை யெதிரே" (புறம். 6)

(இது பாண்டியனை நோக்கிற்று) என்பதனாலும், தமிழ் மூவேந்தரும் பார்ப்பனர் பால் வணங்கி யொழுகியவாறு தெரிய லாம். புறத்திணையில், பார்ப்பனவாகை முதலியன கூறுதலும் காண்க.

"பார்ப்பன வாகைசூடி" (சிலப். கட்டுரை. 72)

"பார்ப்பான் பாங்கன்" (தொல். செய். 190)

என்புழிப் பார்ப்பானும் பாங்கனேயாகவும் அவனை வேறுபடுத்தி முதற்கண் வைத்தது அவன் உயர்ந்த குலத்துத் தோழனுதல் பற்றியென்பது இளம்பூரணவடிகள் கருத்து. பார்ப்பான் உயர்ந்த குலத்துத் தோழன். பாங்கன் ஒத்த குலத்தானும் இழிந்த குலத்தானுமாகிய தோழன் என அவர் விளக்குவர்.

இனி உயர்ந்தோர் இழிந்தோரை ஒருவியொழுகுதல்,

"கண்ணிற் காண நண்ணுவழி யிருந்தும்

..........................................................

கடவு ணண்ணிய பாலோர் போல
ஒரீஇயொழுகு மென்னைக்குப் பரியலன்" (குறுந். 203)

என உவமித்தலாற் றெளியலாம்.

" தோணி யியக்குவான் றொல்லை வருணத்துக்
காணிற் கடைப்பட்டா னென்றிகழார் "

(நாலடியார். 136)

என்பதும் நினைக.

" இழி பிறப்பாளன் (புறநானூறு. 170)

" புலைய " (ஷை. 287)

" இழிசினன் " (ஷை. 289)

" பார்ப்பான் பிறப்பு " (குறள். 134)

" மேற் பிறந்தார் " (குறள். 409)

" கீழ்ப்பிறந்தார் " (ஷை. ஷை.)

என வருவனவுங் காண்க. இவற்றிற்கியைய இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்து நால்வகைச் சாதிப் பூதமும் (அழற்படுகாதை) கூறுதலையு நோக்கிக் கொள்க. 'நாற்பாற் பூதமும் பாற்பாற் பெயர' என்ப.

நான்கு வருணத்தவரும் வேறு வேறு தெரு வகுத்து வதிந்தனர் என்பது 'பால்வேறு தெரிந்த நால்வேறு தெருவும்' என (சிலப். அழற்படு. 110) வருதலான் அறியலாம். ஐங்குறுநாற்றுள் " நம்மூர்ப் பார்ப்பனக் குறுமகப் போலத் தாமும் குடுமித் தலையமன்ற ........ மாவே " (ஐங்குறு. 202) என்பதனால் இவர் பார்ப்பாருடன் ஒரூரில் வதிதல் உணரலாம்.

இனி இவர்,

" பாஅல் புளிப்பினும் பக லிருளினும்
நாஅல் வேத நெறி திரியினும்
திரியாச் சுற்றமொடு " (புறம். 1)

எனவும்,

"பார்ப்பன மகனே பார்ப்பன மகனே
.............................................
எழுதாக் கற்பி னின்சொ லுள்ளும்
பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின்
மருந்து முளவோ மயலோ விதுவே" (குறுந். 156)

எனவுங் கூறுதலான் வேதம் நெறிதிரியா இயல்பின தென்பதும் அஃது எழுதப்படாத சுருதியென்பதும் உடன்படுதல் காணலாம். அந்தணரை "நான் மறை முதல்வர்" (புறம் 26) என்பதனுல் அவர் ஓதுவித்தற் சிறப்பினை உடன்பட்டனராவர். "மறைநாவோசையல்லது யாவதும் மணிநா வோசை கேட்டது மிலனே" என்பது பாண்டியனைக் குறித்தது (சிலப். கட்டுரை).

இங்ஙனம் வேதத்தைச் சிறப்பித்துக் கொண்டவாற்ருல் இவர் அவ்வேதநெறி பிறழாத ஒழுக்கினர் என்பதும், அவ் வேதம் போற்றி வழிபட்டுய்ந்தவரென்பதும் நன்கு தெளியலாம். இவர் பிரமன், மாயோன், முக்கண்ணன், முருகன், இந்திரன், வருணன் முதலிய வைதிக தெய்வங்களுக்குப் பிரதிமை யமைத்துக் கோயிலில் வழிபட்டவாறு,

"மேவிய சிறப்பி னேனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையாற்
பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்
இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே"
(தொல். அகத் 28)

என்புழித் தேவர் படிமைகளுக்கு இழைக்கப்பட்ட பூசையும் விழவும் அழியாது காத்தற்கும் தலைவன் பிரிதல் கூறுதலான் அறியலாம். ஈண்டுப் படிமை பிரதிமா என்பர் இளம்பூரணர். பிரமனை உலகியற்றியான் என்பர் திருவள்ளுவர் (1062). இக் கோயில்களிற் பூசை வேளைகளில் வேதமும் தமிழியற்றுதிகளும் ஏத்தப்பட்டன என்பது,

"புரியுறு நரம்பு மியலும் புணர்ந்து
சுருதியும் பூவுஞ் சுடருங் கூடி

எரியுரு ககிலோ டாரமுங் கமழும்
செருவேற் ருணைச் செல்வ" (பரிபாடல். 18, 51)

என்பதனுனறியலாம். ஈண்டு இயலுஞ் சுருதியும் என்பதற்கு உரையாளர் பரிமேலழகர் "புலவர் பாடிய தமிழ்பாட்டுக்களும் வேத ஒலியும்" எனப் பொருள் கூறுதல் காண்க. இவ்வரிய பரிபாடலான் ஆரியமுஞ் செந்தமிழும் இத்தென்னுட்டு ஒருங்கி யைந்து தெய்வத் திருமுன்னர் வழங்கப்பெற்று வாழ்ந்துயர்ந்த பண்டைச் சிறப்பு உய்த்துணரலாகும். வண்டமிழ் மறையோற்கு (சிலப். கட்டுரை) என்ப.

இனி இந் நல்லுலகம் நிலைப்பது நன்மக்கட் பேற்ருனுதலான், அந்நன்மக்களைப் பெற்ருர் துறக்கம் பெறுவரென்ற கொள்கையே யுடன்பட்டு, அப்பேற்றிற்கே அறக்கிழத்தியை மணந்து இல்லறம் போற்றல் இவர் கருத்தென்பது,

" இம்மை யுலகத் திசையொடும் விளங்கி
மறுமை யுலகமு மறுவின் றெய்துப
செறுநரும் விழையுஞ் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்மலோரெனப்
பல்லோர் கூறிய பழமொழி யெல்லாம்
வாயே யாகுதல் வாய்த்தனந் தோழி" (அகம். 66)

என்பதனுற் றெளியலாம்.

" நான் வித்திடும் தந்தை "

अहं बीजप्रदः पिता

(கீதை. 14, 4)

என ஸ்ரீ கீதையிற் கடவுள் கூறிய முறையிலே அவனையே பேணி மகப்பேறடைதலும் இவர் கருத்தென்பது,

" கருவயி றுறுகெனக் கடம்படு வோரும்" (பரிபாடல். 8)
எனவும்,

"குன்றக் குறவன் கடவுட் பேணி
யிரந்தனன் பெற்ற வெல்வளைக் குறுமகள்"

(ஐங்குறு. 257)

எனவும் வருவனவற்றால் அறியலாம். தொல்காப்பியனார் கற்பியலில்,

"அந்தமில் சிறப்பின் மக" (கற்பியல். 6)

எனச் சிறப்பித்தலும் ஈண்டைக்கு நோக்கத்தகும். இவர் மக்கட்குக் காப்பாகக் கருதி இருபெரு தெய்வங்களின் படைகளையும் பூணாகப் பூட்டுதல், மருதக் கலியுள் 'எறியாவாளும் எற்று மழுவுஞ் செறீயக்கட்டி' என்பதனாலும் மணிமேகலையுள் 'ஐம்படைத்தாலி ........ குறுநடைப் புதல்வர்க்கு' என்பதனாலும் அறியலாம்.

இனி, இவர் அகத்திணையில் வைத்து, ஒத்த தலைவனுந் தலைவியும் தம்முள் ஒத்த அன்பினால் இயைவதாகக் கூறும் காமக் கூட்டமும்,

"மறையோர் தேஎத்து மன்ற லெட்டனுள்"

(தொல். களவி, 1)

ஒன்று என்றலும், இது பெற்று வளர்த்தெடுத்த தந்தை தாயார் முதலியோரை மறைத்துத் தாமே கூடி ஒழுகுவதாயினும் அந்தக்,

"காமப் புணர்ச்சியும் .........
மறையென மொழிதல் மறையோ ராறே"

(தொல். செய். 186)

என்று வேத வழக்கொடுபடுத்தலும் காணலாம். "மறையோர் ஆறு" என்பது "மறையோர் ஒழுகிய நெறி" என்றார் பேராசிரியர் நச்சினார்க்கினியர். "கந்தருவருக்கு மறையோ ரோதிய நெறி" என்றார். இளம்பூரணவடிகள் "வேதமறிவோர் நெறி" என்றார். இக்களவு மணம் விரைவில் வெளிப்பட்டோ வெளிப்படாமலோ வேள்வியாசான் வேட்பித்த அங்கி

யங்கடவுண் முன்னர்க் கரணத்திற் (மந்திரச் சடங்கினல்) பல்லோர் அறிய நன்கு நிறைவேறவேண்டிய இன்றியமையாமை யுடைமையால், இதனை வேதம் உடன்பட்ட உலகியல் மணம் எனக்கொள்வர் நச்சினார்க்கினியர். அவர் களவியல் முதற் சூத்திர வுரைக்கண் "இது உலகியல் எனப்படும். உலகத்து மன்றலாவது குறவர் கொடுப்பதற்கு முன்னர் ஒருவற்கும் ஒருத்திக்கும் கண்ணு மனமுந் தம்முள் இயைவதேயென வேதமுங் கூறிற்றாதலின்" என விளக்கிச் செல்லுதலா னுணரலாம். "தந்தையானவன் தன் அபிப்பிராயத்தை விட்டுக் கன்னிகை விரும்பினவரனுக்கு அந்த வரனால் விரும்பப்பட்ட கன்னிகையைக் கொடுக்கலாம். இதைத் தருமமான காந்தர்வ விவாகமென்று வேதமறிந்தோர் சொல்கின்றனர்" (பாரத மொழிபெயர்ப்பு அநுசாசனப் பர்வம் 79 அத்.) என்பதனால் இவர் கூற்றின் உண்மை நன்குணரலாம். வதூவரர் மனமுங் கண்ணுமொத்தல் ஆபஸ்தம்பத்திற்கண்டது. இங்ஙனந் தலைவன் தலைவியர் கண்ணு மனமுந் தம்முள் ஒத்தபின்னர் வேட்கை தணியாது நின்று, கரணத்தோடு வரைந்து மெய்யுற்றுக் கூடு வதே தலையாயதென்றும், உள்ளப் புணர்ச்சிப் பின்னர் மெய்யுறு புணர்ச்சியுமெய்தி, அது வெளிப்படாமலே விரைந்து, கரணத் தொடு வரைவது இடையாயதென்றும், பாங்கற்குந் தோழிக்கும் வெளிப்பட்ட பின்னர்க் கரணத்தொடு வரைவது கடையாய தென்றும் நல்லாசிரியர் கருதுவர். இவ்வுண்மை களவியல் முதற் சூத்திர வுரைக்கண் இளம்பூரண அடிகள்,

"ஒரு கூட்டமும் நிகழாது ஆண்டு வந்து அடை வேட்கை யிருவர்க்குந் தணியாது நின்று வரைந்தெய்தலும் ஒன்று. இவ் வகையினான் இக்களவொழுக்கம் மூவகைப்படும்."

என உரைத்ததனால் உய்த்துணரப்படும். உள்ளப் புணர்ச்சி மட்டிலுடையதும், பிறரறியாத மெய்யுறு புணர்ச்சியுடையதும், பாங்கனுந் தோழியும் அறிந்த மெய்யுறு புணர்ச்சியுடையதும் என இக்களவொழுக்கம் மூன்றாதல் காண்க.

"பேயு மறியா மறையமை புணர்ச்சி" (அகம். 62) என்பது பிறர் யாருமறியாமற் புணர்தல் ஆதல் காண்க. நச்சினார்க்கினி யரும் "களவு வெளிப்பட்ட பின்னராயினும், அது வெளிப்

படாமையாயினும், உள்ளப் புணர்ச்சி நிகழ்ந்த வழியாயினும் வரைதல் அக்களவின் வழியதாதலின், (தொல். கற்பியல். 1) என விளக்குதல் கண்டு கொள்க. இம்மூன்றனுள் உள்ளப் புணர்ச்சி நிகழ்ந்த அளவிலே கரணத்தொடு வதுவை முடித்து மெய்யுறு புணர்ச்சி யெய்தல் எவ்வித வஞ்சமும் பிழையும் இல்லாமையாலே தலைசிறந்ததாதல் நன்குணரலாகும்.

இதுவே ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்தாதல் களவியலிலே தலைவன், தலைவியின் உள்ளம் தன் உள்ளம்போல் வேட்கை மீதூர்தலை அவள் கண்ணாற் கண்டபின்னும் களவில் அவளை மெய்யுறுதல் செய்யாமைக்குக் காரணங் காட்டுவாராய்ப் "பெருமையு முரனு மாடூஉ மேன" (தொல். கள. 7) என்று தெரிவித்ததனாலறியலாம். இதற்கு இளம்பூரணவடிகள் பழியும் பாவமும் அஞ்சுதல், அறிவு இவையிரண்டும் ஆண் மகனுக்கு இயல்பு என்றவாறு. இதனானே மேற் சொல்லப்பட்ட தலைமகளது வேட்கைக் குறிப்புக்கண்ட தலைமகன் அந்நிலையே புணர்ச்சியை நினையாது வரைந்து எய்துமென்பது பெறுதும்" என வுரைத்தார். நச்சினார்க்கினியரும் பெருமைப் பகுதியும் வலிமைப் பகுதியுந் தலைவன்கண்ண என்று கூறி "இதனானே உள்ளப் புணர்ச்சியே நிகழ்ந்து வரைந்து கொள்ளும் உலக வழக்கும் மெய்யுறு புணர்ச்சி நிகழ்ந்துழியுங் களவு நீட்டியாது வரைந்து கோடலும், உள்ளம் சென்றுழியெல்லாம் நெகிழ்ந்தோடாது ஆராய்ந்து ஒன்று செய்தலும், மெலிந்த உள்ளத்தாளையும் தோன்றாமல் மறைத்தலும், தீவினையாற்றிய பகுதியிற் சென்ற உள்ளம் மீட்டலும், தலைவற்குரிய என்று கொள்க" என்றார். இங்ஙனந் தலைவன் மெய்யுறாமைக்குக் காரணங் காட்டிய ஆசிரியர் களவிலே தலைவியும் மெய்யுறுதல் இசையாமைக்குக் காரணங் கூறுவாராய் "அச்சமு நாணுமடனுமுந் துறுத்த நிச்சமும் பெண்பாற்குரிய வென்ப" (கள. 8) என்று தெரிவித்தல் காண்க.

ஈண்டு இளம்பூரணவடிகள் வேட்கையுற்றுழியும் அச்சத்தானாதல் நாணானாதல் மடத்தானாதல் புணர்ச்சிக்கிசையாது நின்று வரைந்தெய்தல் வேண்டுமென்பது போந்தது என்றார். நச்சினார்க்கினியர் "இவற்றானே புணர்ச்சி, பின்னர்ப் பெறுதுமெனத் தலைவனைப் போல ஆற்றுவாளாயிற்று" என்று கூறி

இச்சூத்திரமிரண்டும் நாடக வழக்கன்றிப் பெரும்பான்மை உல கியல் வழக்குக் கூறினவாகக் கொள்வர். இவற்றானே இத்தமி ழுலகத்தார் மேற்கொண்ட பழைய உயர்ந்த மணமுறையிஃ தென்று நன்கு துணியலாம்.

இத்தமிழ்நெறி வழக்கமெல்லாம் வடித்துணர்ந்த கம்பநாடர் சீதாபிராட்டியார்க்குஞ் சீராம மூர்த்திக்கும் உண்டாகிய காதல் கூறப்புக்கு,

" அண்ணலு நோக்கினா னவளு நோக்கினாள் "

(கம்பரா. மிதிலைக். 35)

எனவும்,

" இருவரு மாறிப்புக் கிதய மெய்தினார் " (ஷை 37)

எனவும்,

" ஒருங்கிய விரண்டுடற் குயிரொன் றாயினார்" (ஷை 38) எனவும், பாடி, மெய்யுறு புணர்ச்சியில்லாமல் உள்ளப் புணர்ச்சிமட்டிற் கொண்டு அப்பாற் கரணத்தொடு வதுவையின் மணத்தல் சொற்றதனால், வேதங்கூறிய உள்ளப்புணர்ச்சி நிகழ்ந்தவழிக் கரணத்தொடு வரைதலே தலையாயினதென்பது அவர்தங் கருத்தாக உணரலாம். திருத்தக்கதேவர் சிந்தா மணியுள்,

" இன்றமி ழியற்கை யின்பம்,
நிலைபெற நெறியிற் றுய்த்தார் நிகர்தமக் கிலாத நீரார்"

(சுரமஞ்சரி. 69)

என்பதனால் மெய்யுறுபுணர்ச்சி கூறி அப்பால்,

" நாட்கடி மாலையாற்கு நங்கையை நல்கினானே " (ஷை 84) என்பதனாற் கரணத்தொடு மணப்பது காட்டினார். பண்டைத் தமிழர் கருத்தால் இவ்விரண்டனுள் உயர்ந்ததின்னதென்பது ஈண்டாராயத்தக்கது.

இக்களவின் வாழ்க்கை இருதிங்களைக் கடவாதாயினும், அதற்குள் மெய்யுறு புணர்ச்சியாற் கருவயிறு வாய்க்காத

முறையை இருவரையும் புணர்த்த தெய்வமே செய்தருளவேண்டியதாதல் உணர்க. கருவாய்த்தாற் களவு வெளிப்படுதல் காணுக. பேற்றுக்குள் உயர்ந்ததும் இருமையும் பயப்பதும் உலக நிலை பெறுதற்கின்றியமையாததும், ஆசிரியர்,

" அந்தமில் சிறப்பின்மக " (தொல். கற்பியல். 6)

என்று சிறப்பித்ததும் ஆகிய மக்கட் பேற்றிற்குக் காரணமாகிய கருவயிறு வாய்ப்பதை வேண்டாமையானும், பெற்றோரை வஞ்சித் தொழுகலானும், புணர்ந்தபின் உள்ள மெய்வேறுபாட்டால் அயலார் உய்த்துணர்ந்து இகழ்தற்குக் காரணமாகலானும், இம்மெய்யுறு புணர்ச்சியையுடைய களவொழுக்கத்தைப் பழியோடு வரூஉ மின்பம் எனவும், இதனைச் சான்றோர் விரும்பார் எனவும், கரணத்தொடுகொண்டு இல்லறம் பூண்டு புணர்தற்குரிய வதுவையே பழமை தொட்டுவரும் குற்றமற்ற மணமுறையெனவும், நல்லிசைப்புலவர் தெளியக்காட்டி உள்ளனர் என்க. இவ்வுண்மையைக்,

" கழிபெருங் காதல ராயினுஞ் சான்றோர்
பழியோடு வரூஉ மின்பம் வெஃகார்
வரையின்எவனோ வான்றோய் வெற்ப
கணக்கலை யிருக்குங் கடியிவர் சிலம்பின்
மணப்பருங்காமம் புணர்ந்தமை யறியார்
தோன்றியன் மரபின் மன்று லயரப்
பெண்கோ ளொழுக்கங் கண்கொள நோக்கி "

(அகம். 112)

என்பதனால் நன்கறியலாம். பல நூலாசிரியர்க்கும் இதுவே உடன்பாடாதல் சாத்தனார் உடன் வாழ்ந்த இளங்கோவடிகள் புணர்ச்சிக்குரிய குறிஞ்சியிலே வைத்துக் குன்றக் குரவையுள்,

"நிலையுயர் கடவுணின் னிணையடி தொழுதேம்
பலரறி மணமவர் படுகுவ ரெனவே"

எனவும்,

" அறுமுக வொருவனின் னடியிணை தொழுதேம்
துறைமிசை நினதிரு திருவடி தொடுநர்
பெறுகநன் மணம்விடு பிழைமண மெனவே "

(சிலப். குன்ற.)

எனவுங் கூறிக் கடவுளே நின் திருவடி தொடுவார் (தொட்டுச் சூளுறுவார்) பலரறிந்த நன் மணம் பெறுவாராகுக என்றும், அவர்க்குக் களவாகிய பிழைபட்ட மணத்தை விடுப்பாயாக என்றும், நின் இணையடி தொழுதேம் என்றும் தமிழ் நாட்டுக் குன்றக் குறவர் வேண்டுதலை அழகுபெறப்பாடியவாற்ருனன்கு தெளியலாம். இந்நல்லாசிரியர் பிழை மணம் என்று தெளியக் கூறியதனை உட்கொண்டு உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர்,

" அந்தரத் தெழுதிய வெழுத்தின் மான
வந்த குற்றம் வழிகெட வொழுகலும் "

(தொல். கற்பியல். 5)

என்பதற்கு,

" களவுக் காலத்துண்டாகிய பாவம் ஆகாயத் தெழுதிய எழுத்து, வழி கெடுமாறு போல வழிகெடும்படி பிராயச்சித்தஞ் செய்து ஒழுகுதற்கண்ணும்" என உரைத்துப்,

" பொய்யற்ற கேள்வியாற் புரையோரைப் படர்ந்து நீ
மையற்ற படிவத்தான் " (கலித். 15)

என்பதை உதாரணமுங் காட்டிச் சேறல் காணலாம். இதனுல் இது பழியொடு வரூஉ மின்பமாதலும் சான்ருேர் வெஃகாமையுந் தெளியலாம்.

குன்றக் குரவையுட் களவொழுக்கத்துக்குரிய வெறியாடல் முதலியவற்றையுங் கூறிக்காட்டிய இளங்கோவடிகள் தாம் எடுத்துக் கொண்ட கதைக்குத் தலைவியும், தொழத்தகு கற்புடையாட்டியும், அருந்தவத் தமிழ்ப் பெண்ணணங்கும் ஆகிய கண்ணகியார் திருமணத்தைக் களவே யில்லாத கற்பின் வைத்து,

"சாலி யொருமீன் தகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலஞ் செய்வது காண்பார்க ணோன்பென்னை"

(மங்கல வாழ்த்து)

எனப் பாடியருளுதலாற் பண்டைத் தமிழர் மறைவழி காட்டிய கரணவதுவையை எத்துணை யுயர்வாகக் கருதினர் என்பது புலனாகும். ஈண்டுக் கூறிய மாமுது பார்ப்பான் ஒத்த புரோகிதர் தமிழ்ப் பெருந்தலைவர்க் குண்மை, பதிற்றுப்பத்து 7-9 ஆம்பத்துப் பதிகங்களிற் "புரோசு மயக்கி" என்ற இடங்களானுணரலாம். ஈண்டுப் பழையவுரைகாரர் "புரோசு மயக்கி" எல்றது தன் புரோகிதனினும் தான் அறநெறி யறிந்தென்றவாறு என விளக்கியது காண்க, தமிழ் அகத்திணையிலுள்ள களவொழுக்கம் இஃதென்று ஆரிய மன்னனுக்குக் குறிஞ்சிப் பாட்டான் அறிவுறுத்திய பொய்யா வாய்மொழிப் புகழ்சால் கபிலர் என்னும் புலவர் பெருமானார் தம் உயிர்த்துணையாகிய வேள் பாரியின் தமிழ்த்துறை போகிய அருமைப் புதல்வியரை,

"யான் கொடுப்பக் கொண்மதி". (புறம். 200)

என விச்சிக்கோவிடம் சென்று கூறுதல் கண்டு பண்டைத் தமிழர் மறை வழிகாட்டிய கரண வதுவையை எவ்வாறுயர்த்திப் போற்றியொழுகினர் என்று நன்கு துணியலாம். இதற்கியையவே இக்கபிலர், குறிஞ்சிக் கலியுள் (3) இக்களவினை "மாயப்புணர்ச்சி" என்றலும் அதற்கு நச்சினார்க்கினியர் பொய்யாகிய களவிற் கூட்டம் என்றுரைத்ததுங் காண்க. குறிஞ்சிப் பாட்டிலே இவர்,

"நேரிறை முன்கைபற்றி நுமர்தர
நாடறி நன்மண மயர்கம் சின்னாள்" (அடி. 231-232)

எனக் கரண வதுவையை நாடறி நன்மணம் ஆகக் கூறிக்காட்டுதலும் உணர்க.

அன்றுதொட்டு இன்றுவரையும் களவிற் கூட்டமில்லாது இக்கரண வதுவையே நற்றமிழ் மக்களிடம் நிகழக் காண்டலும் இங்கு நினைக. கரண வதுவையிற் றிருப்பூட்டிய பின்னே தான் கன்னிப்பெண் மங்கல மடந்தையாதலும் இம்மாங்கலிய சூத்திரம்

மணந்த மகளிர்க் கின்றியமையாததாலுஞ் சங்க நூல்களிற் கண்டனவாம்.

"ஈகை யரிய விழையணி மகளிரொடு" (புறம். 127)

என்பதும், அதற்குப் பழைய உரைகாரர்,

"பிறிதோரணிகலமுமின்றிக் கொடுத்தற்கரிய மங்கலிய சூத்திரத்தை யணிந்த மகளிருடனே"

என உரைத்ததும் நோக்கிக் கொள்க. மங்கலவணி யிழந்தவளைக் 'கழிகல மகடூஉ' (புறம். 261) என்பதனாலும் இம்மங்கலக்கலன் உண்மை யுணரப்படும்.

"மங்கல வணியிற் பிறிதணி மகிழாள்" (சிலப். அந்தி. 50) எனவும்

"மங்கலவணி யெழுந்தது" (சிலப். மங்கல.)
"மாங்கலிய சூத்திரம் வலஞ் செய்தது"

எனவும் வருவனவற்றை இதற்கியையவே கொள்ளப்படும். இவ்வாறு திருப்பூட்டுதல் வழக்குப்பற்றிக் கம்பநாடர்,

"மங்கலக் கழுத்துக்கெல்லாம், தானணியாயபோது
தனக்கணியாது மாதோ" (கம்பரா. கோலங்காண். 7)

எனப்பாடுதலால் இவ்வழக்கம் அவர் காலம்வரைத் தொடர்ந்தது புலனும். அதுவே இன்றுவரை நிகழ்வதும் காண்க. புறப்பாட்டுப் பழையவுரைகாரர்,

"மெல்லிய மகளிரு மிழைகளைந்தனரே" (புறம். 224)
என்புழி இழை அருங்கலவணி என்பர்.

தமிழ் நாட்டு நல்லிசை வாய்ந்த மெல்லியலார் தாம் மிகவும் உயர்வாகக் கருதிய சீரிய ஒழுக்கம் இதுவே என்றற்குப் பழையதோர் உண்மைச் சரிதையும் உண்டு. சோழர்க்குச் சிறந்த புகார்ப் பட்டினத்து வணிககுல மாதாகிய விசாகை யென்னுங் கன்னி தன் அத்தை மகனாகிய தருமதத்தனோடு யாழோர் முறைமை

யாகிய காந்தருவர் மணவினைப்படி ஒத்தொழுகினள் என்று ஊர் முழுதும் பழிகூற நிற்க, அவர் இருவர்க்கும் உள்ளம் ஒத்தலன்றி மெய்யுறு புணர்ச்சி யில்லாமையைக் கந்திற்பாவையால் ஊர்க் கறிவித்து, மைத்துனற்கு மனையாளாக மறுபிறப்பில் ஆவே னென்று கன்னிமாடத்திருந்து நோற்று மூத்ததும், அவ்வாறே தருமதத்தன் தன் மாமன் மகளாகிய விசாகையையல்லது பெண் டிரைப் பேணேனென்று விரதங் கொண்டதும், மணிமேகலையிற் சாத்தனார் மாதவர் வாயில் வைத்துக் கூறுதல் கொண்டு, இந்நற் றமிழ் மக்கள் காந்தருவ நெறியின் மெய்யுறுதலை உயர்வாகக் கருதிலர் என்பதும், உள்ளம் ஒத்தலையே மேலாகப் போற்றிக் கரணத்தொடுவதுவையிற் கூடி இல்லறத் தொழுகுதலையே தலை யாக வேண்டினரென்பதும் நன்கு தெளியலாம். இவ்வரலாற்றை,

"மைத்துனன் முறைமையால் யாழோர் மணவினைக்
கொத்தன ளென்றே யூர்முழு தலரெழப்
புனையா வோவியம் புறம்போந் தென்ன
மனையக நீங்கி வாணுதல் விசாகை
உலக வறவியி னூடுசென் றேறி
யிலகொளிக் கந்தி னெழுதிய பாவாய்!
உலகர் பெரும்பழி யொழிப்பாய் நீயென
மாநக ருள்ளீர் மழைதரு மிவளென
நாவுடைப் பாவை நங்கையை யெடுத்தலும்
...........................................
மைத்துனன் மனையாள் மறுபிறப்பாகுவேன்
இப்பிறப் பிவனொடுங் கூடே னென்றே
...........................................
மற்றவள் கன்னி மாடத் தடைந்தபின்
தருமதத் தனுந்
......................... ...............
விரிதரு பூங்குழல் விசாகையை யல்லது
பெண்டிரைப் பேணே னிப்பிறப் பொழிகென"

(மணிமே. 22, 86-101)

எனவரு மடிகளிற் கண்டு கொள்க. விசாகை இங்ஙனமூத்துத் தன்னொப்பக் கிழமாகிய தருமதத்தனைக் காண நேர்ந்துழி,

"நம்முணு மறிந்தில நம்மை முன்னுள
மம்மர் செய்த வனப்பியாங் கொளித்தன"

(மணிமே. 127, 22, 128)

எனக் கூறுதலான் இவர் மூத்த பின்னர் ஒருவர் ஒருவரறியாத படி மெய்வேறு பட்டனரென்பதும், இவர் இளமைப் பருவத்தே உள்ளம் ஒத்துத் தம்முள் விழைவு கூர்ந்தன ரென்பதும் தெளியலாம்.

தருமதத்தன், ஆசிரியர் தொல்காப்பியனார் தலைமகற்குக் கூறிய பெருமையும் உரனுந்தானுடைமை உலகறிய விரதம் பூண்டு மூத்தனன் என்றும், விசாகை அவ்வாசிரியர் தலைமகட்குக் கூறிய அச்சமும் நாணும் மடனும் உடைமை உலகறிய நோற்று மூத்தன ளென்றும் இவ்வரலாற்றால் நன்கறியலாம். திருத்தக்க தேவரும் சிந்தாமணியுள் "அல்லி சேரணங் கன்னவட் காயிடைப், புல்லி நின்ற நாண்புறப் பட்டது, கல்செய் தோழவன் காமரு பேருணர், வெல்லை நீங்கிற் றியைந்தன ரென்பவே" (பதுமை. 164) என்பதனால் உள்ளப் புணர்ச்சியின் பின்னர்க் களவிலே மெய்யுறுதற்கண் தலைவிக்கு நாணழிதலும், தலைவற்குப் பேருணர்வு நீங்குதலும் கூறுதல் காண்க. இதனால் விசாகை நாணழிந்தா ளெனப்படுதலையும் தருமதத்தன் அறிவு நீங்கினான் எனப்படுதலையும் பழியாகக் கருதி நோற்றவாறு புலனும்.

இவ்வருமைத் தமிழ்ச் சரிதை இளங்கோவடிகள் குன்றக் குரவையுள்ளே,

"திருவடி தொடுநர் பெருக நன்மணம்
விடுபிழை மணமெனவே"

என்று கூறிய நல்லுரைக்கு முழுதும் ஒத்ததாய்ப் பண்டைத் தமிழருடைய மேம்பட்ட மண வொழுக்கத்தை விளக்கி அவியாமணி விளக்குப் போல ஒளிவிடுதல் கண்டு கொள்க. அடிகளும் அவருடன் வாழ்ந்த சாத்தனாரும் முறையே இலக்கணமும் இலக்கியமுங்

கூறுதல் போன்றுள்ள கருத்தொற்றுமை கண்டு இன்புறத் தகும்.

இன்னும் களவொழுக்கம் அச்சமும் வருத்தமும் உண்டாக்குதலும் கரண வதுவையே இவையின்றி இனிது முயங்கற்கொத்துப் பயனளிப்பதும் சான்றோர் பாடல்களிற் பெருகக் காணலாம்,

" வீயினிது கமழுந் துறைவனை
நீயினிது முயங்குமதி காத லோயே"

(ஐங்குறு நூறு. 148)

என்புழிப் பழைய வுரையாளர், " களவொழுக்கத்தின் வினை வறியாது அஞ்சிய வருத்த நீங்க வதுவை கரண வகையான் முடித்த பின்பு தலைமகளைப் பள்ளியிடத்துய்க்குந் தோழி சொல்லியது " என்றெழுதிய நயமான துறை கண்டு இவ்வுண்மை யுணர்க. இதன் கண் இனிது முயங்குதி என்றதனால் களவொழுக்கத்து இனிது முயங்கியதாகாமை காணப்படும்.

இனி அகத்திணை நூல்களிற் களவொழுக்கத்து மெய்யுறு புணர்ச்சியுங் கூறியிருத்தலைக் கண்ட நல்லுரையாளர் பலரும் இவ்வகப் பொருளை உலகியலுடன் நாடகவியலுமாக்கிச் செல்லுதற்கண்ணே கருத்துடையராதல் அவரவர் உரைகளிற் கண்டு கொள்ளலாம்.

இதனாற் றமிழர் உலகியற்கொத்த உயர்ந்த மணவொழுக்கம், உள்ளப் புணர்ச்சியுற்றபின் கரணத்தொடு வரைந்து வாழ்வதே என்று தெளியலாம். புவிபுகழ் புலமை அவிநயனாரும் 'உள்ளல்லதுடம் புறப்படாத் தமிழியல் வழக்கம்' என (யாப்பருங்கல விருத்தியுரையுள், ஒழிபியல்) உலகறியக் கூறியதை முன்னரே எடுத்துக் காட்டியுள்ளேம். களவிற் புணர்ந்த தமிழியல் வழக்கத்தினும், களவிற் புணராது உள்ளம் மட்டும் புணர்ந்த தமிழியல் வழக்கம் உயர்ந்ததாதல் தெளிக.

இனிப் பரிபாடலுள்ளே, குன்றம் பூதனார்,

" காதற் காமம் காமத்துச் சிறந்தது -
விருப்போ ரொத்து மெய்யுறு புணர்ச்சி" (9, 14-15)

என்று கூறி அச்சிறப்பிற்குரிய காரணங் காட்டுவாராய்,

"அகற லறியா வணியிழை நல்லார்
இகறலைக் கொண்டு துனிக்குந் தவறிலரித்
தள்ளாப் பொருளியற்பிற் றண்டமிழாய் வந்திலார்
கொள்ளாரிக் குன்று பயன்." (9)

என்றெடுத்தோதி,

"இக் கற்பிற்போலத் தலைவர் நீங்குதலறியாத களவிற் புணர்ச்சியையுடைய மகளிர் அவரோடு மாறுகொண்டு துனிக்கும் குற்றமுடையரல்லார் இப்புணர்ச்சியை வேண்டுகின்ற பொருளிலக்கணத்தையுடைய தமிழை ஆராயாத தலைவர் களவொழுக்கத்தைக் கொள்ள மாட்டார்"

என்று பொருள் கொள்ளவைத்தவாற்றாற் கரணத்தொடு கூடிய கற்புத் தலைவர் தலைவியரைப் பிரிதலும், தலைவியர் தலைவரோடு துனித்தலும் ஆகிய தவறுடைத்தென்று தெளிவித்தாராலெனிற், கூறுவேன். இதன்கட் கூறப்பட்ட தமிழ்ப் பொருளிலக்கணத்திலே அஃதாவது தொல்காப்பியச் செய்யுளியலிலே,

"காமப் புணர்ச்சியு மிடந்தலைப் படலும்
பாங்கொடு தழாஅலுந் தோழியிற் புணர்வுமென்
றாங்கநால் வகையினு மடைந்த சார்பொடு
மறையென மொழிதல் மறையோராறே" (187)

என்பதனாற் களவு என்னும் அகத்திணைக் கைகோளும் "மறையோராறே" என்று ஆசிரியர் தெற்றெனக் கூறி அப்பாற் கற்பு என்னுங் கைகோளை,

"மறை வெளிப்படுதலுந் தமரிற் பெறுதலும்
இவைமுத லாகிய வியனெறி திரியாது
மலிவும் புலவியு மூடலு முணர்வும்
பிரிவொடு புணர்ந்தது கற்பெனப்படுமே" (188)

என்பதனால் விளக்கினார். இவ்விருவகைக் கைகோளுட் கரணத்தொடு கூடிய கற்பு மறையோர் நெறி என்பதில் விவாதமே யில்லை. ஆசிரியரும்,

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
..........................................
கொடுப்பக் கொள்வதுவே" (கற்பியல். 1)

என்று முன்னரே கூறிக்கொண்டார். ஆசிரியர் மறையோ ராறு என்று காட்டிய களவொழுக்கம் தமிழ் ஆய்வந்திலார் கொள்ளார் என இப்பரிபாடலுடையார் கூறுகின்றார். இதற்குப் பொருளிலக்கணத்தை யுடைய தமிழ் ஆய்ந்தவர் மறையோர் ஆகிய களவொழுக்கத்தைத் தள்ளாது கொள்வர் என்றுதானே பொருள் கொள்ளலாகும். பொருளிலக்கணத்தை யுடைய தமிழை ஆராயாத தலைவர், இது மறையோர் ஆறு என்று அறியமாட்டாமையால் உலகத்துத் தீங்கு பயக்குங் களவினுள் ஒன்றாக நினைந்து இக்கைக்கோளைக் கொள்ளார் என்றார் என்க. மற்று,

"நான்மறை விரித்து நல்லிசை விளக்கும்
வாய்மொழிப் புலவீர் கேண்மின் சிறந்தது" (பரி. 9)

என்று நான்மறைப் புலவரை நோக்கியே இது கூறினாராலெனின், அவரே இவ்வாசிரியர் தமிழில் வைத்துக் கூறும் களவொழுக்கம் தம் வேதத்திற்கும் ஒத்ததாதல் தெரிந்து இக் களவொழுக்கங் கொள்ளாதவரும், தமிழாராயாதவருமாகிய தலைவர்க்கு இது வேதநெறியேயென்று கூறவல்லவர் அம்மறையவரேயாதலான் அவரை விளித்தார் என்று துணியத்தகும், இங்ஙனங் கொள்ளாக்கால் "நான் மறை விரித்து நல்லிசை விளக்கும் வாய்மொழிப் புலவீர்" என்று அவர் சிறப்பெல்லாம் விளக்கி விளித்தது பயனின் றாகுமென்க. நான் மறையும் விரித்து நல்லிசைமை யிஃதென்று விளக்கும் வாய்மை மொழியுடன் புலமையுமுடையீர் நீர் மறையோராறென்னும் இஃதறிந்ததாமன்றோ என்று கருதியழைத்தவாறு மென்க. இதுவே ஆசிரியர் கருத்தாதல் புலவீர் நீவிர் கொள்ளீர் என்றது,

"பொருளியல்பிற் றமிழாய் வந்திலார் கொள்ளார்" எனப் படர்க்கையினுரைத்துத் தம் இனத்துத் தமிழ் ஆராயாத சில தலைவரைக் கூறியதனானுணரலாம்,

மற்றுக் கற்பினுங் களவு உயர்ந்ததெனக் கூறினரெனின் அது பற்றிச் சில வரைவேன். இப்பரிபாடலிற் களவின்கட்

டலைவியரைத் தலைவர் நீங்குதலறியாமை கூறினர். இஃது "அகறலறியா வணியிழை நல்லார்" என்பதற்கு "இக் கற்புப் போலத் தலைவரை நீங்குதலறியாத களவிற் புணர்ச்சியுடைய மகளிர்" என்று உரைகாரர் கூறியதனாலறியலாம். இதனுண் மையைச் சிறிதாராய்வாம்.

களவின் கண்ணே தலைவன் தலைவியைப் பகற்குறியிற் சேர்ந் தானாயின் இரவில் அவளுடன் அவள் மனையிற்புக இயலாமை யால் அவ்விரவெல்லாம் பிரிந்தொழிவன். இரவில் அவளைக் குறி யிடத்து வந்து சேர்ந்தானாயின் பலரறிதற்கஞ்சிப் பகலெல்லாம் பிரிந்தொழிவன். இங்ஙனமன்றி வரைவிடை வைத்துப் பிரிதலும் இக்களவினுண்டு. இங்ஙனம் நிச்சலும் உடனுறைய வியலாது தலைவன் பிரிதலும், சின்னாளேனும் வரை பொருள் தேடப் பிரித லும் உடைய களவினையுடைய மகளிர் தலைவர் அகறலறியாதவர் ஆவாரோ; நோக்கியுணர்க.

> "யாங்குவல் லுநையோ ஓங்கல் வெற்ப
> பசலைபாயப் பிரிவு" (ஐங்குறு. 231)

எனவும்,

> "கனவிற் காணு மிவளே
> நனவிற் காணாணின் மார்பே தெய்யோ" (ஐங்குறு. 234)

எனவும் வருவன களவிற் பிரிவாதலும்,

> "குறுமகள்,
> சேயரி நெடுங்கண் கலுழச்
> சேய்த்தாற் பெருமநீ பிரியு நாடே" (ஐங்குறு. 257)

என்பது களவிலே வரைவிடை வைத்துப் பிரிதலாதலும் நன்கு நோக்கியறிக. இவையன்றிக் களவிற் றலைவனைப் பகலினும் இர வினும் வாரற்க என்று வலியச் சொல்லுதலும் உண்டென்பது,

> "நல்வரை நாட நீவரின்
> மெல்லிய லோருந் தான்வா ழலளே" (அகம். 12)

இது இரவும் பகலும் வாரலென்றது; இஃது, "கிழவோன் தன்னை வாரலென்றலும்" (பொருளியல். 16) என்னும் இலக்கணத்திற்கு இலக்கியமாதல் காண்க. ஊடுதலில்லாளாகவும் களவின்கண் உள்ள கொடுமைகளை யுணர்ந்தன்றோ, தோழியுந் தலைவியும் தலைவனைப் பிரிந்திருக்க உடன்பட்டு வாரல் என்று தாமே சொல்லத் தலைப்பட்டனர். இது வரையத் தூண்டும் அன்புடைமையானன்றே அமைந்தது. இரு திங்கள் அளவைக்குள்ளே நாடோறும் பிரிவும், ஒருவழித் தணத்தலாற் பிரிவும், சேட்படுத்தலாற் பிரிவும், வரைவிடை வைத்துப் பிரிவும், உடன்படுதலாற் களவொழுக்கம் பிரிவில்லதென்று கூறுதலியையாமையான், அகறலறியா அணியிழை நல்லார் என்றது காரியம் பற்றி நெட்டிடை நெடும்போது பிரிதலும் உடைய கற்பினை நோக்கிக் களவினைத் துதிவாதத்தால் மிகுத்ததன்றி வேறன்றுதல் தெளியலாம்.

இனித் துனிக்குந் தவறிலர் என்றதுபற்றி ஆராய்வாம். இப்பரிபாடலுடையார் தலைவனோடு துனித்தலைத் தவறென்றார், "தினையுண் கேழலிரிய" (119) என்னும் நற்றிணையுட் களவினில் நொதுமலர் வரைதல் பற்றித் தலைவனை வரைவுமுடுகுதல் காரணமாக,

"யாவது முயங்கல் பெறுவே னல்லன்
புலவி கொளீஇயர்தன் மலையினும் பெரிதே"

என்ச் சிறைப்புறத்துக் கூறுதல் வருதலான் களவினுள் ஒருவாறு துனித்தலும் உண்மை புலனாகும். மலையினும் பெரிதாகிய புலவி என்றலால் இது முதிர்ந்த கலாமாதல் உணர்க. "தன்வயினுரிமையும் அவன்வயிற் பரத்தமையாகிய அயன்மையும்பற்றித் தலைவி, புலவியுள்ளத்தளாகவும் பெறும் களவினென்பது" (சூத். 20) எனக் களவியலுள் நச்சினார்க்கினியர் கூறியது கொண்டு உணரலாம். இப்பரிபாடலாற் றவறென்று கூறிய துனியைச் சிறப்பித்துத் தெய்வப்புலமைத் திருவள்ளுவனார்

"துனியும் புலவியு மில்லாயிற் காமங்
கனியுங் கருக்காயு மற்று" (குறள். 1306)

எனப் புகழ்தலைக் கண்டு உண்மையுணர்க. துனியின்மையை இகழ்ந்ததனுற்றுனியைப் புகழ்ந்ததாதல் காண்க. இத்தெய்வப் புலவர்,

> "புலத்தலிற் புத்தேணா டுண்டோ நிலத்தொடு
> நீரியைந் தன்னா ரகத்து." (குறள். 1323)

எனக் கூறிக்காட்டிப் புலவியே அமிழ்தமாதலைக் குறிப்பது காண்க. கற்பிற் புலவியை அமிழ்தமாக்கிப் புலவியில்லாத களவிற் காமத்தை ஊழ்த்துச் சுவை கெட்ட கனியாகவும் சுவையெய்திப் பழுக்காத கருக்காயாகவும் இகழ்தலான் இவர் கருத்து நன்கு தெளியலாகும். இவ்வின்பப் புலத்துறையெல்லாம் முற்றப்போயவரும், கற்றறிந்தார் கண்ட கலியைத் தொகுத்தவரும், நெய்தற்கலி யியற்றியவரும் ஆகிய ஆசிரியர் நல்லந்துவனார், இதற்கு முந்திய பரிபாடலில் (8) களவிற் புணர்ச்சியைக்,

> "குறுந்தொடி மகளிர்
> ஆராக் காம மார்பொழிற் பாயல்
> வரையகத் தியைக்கும் வரையா நுகர்ச்சி"
> (பரிபா. 8, 39-41)

எனக் கூறிக் கற்பிற் புணர்ச்சியைக்,

> "முடியா நுகர்ச்சி முற்றாக் காதல்
> அடியோர் மைந்த ரகலத் தகலா
> அலர்ஞெமன் மகன்றி னன்னர்ப் புணர்ச்சி"
> (பரிபா. 8, 42-44)

என்பதனாற் சிறப்பித்தவாறு கண்டு இவ்வுண்மை யுணரலாம். இப்பரிபாடலுள் ஆசிரியர் நல்லந்துவனார் கரணத்தொடு வரையாப் புணர்ச்சியாகிய களவினை மலையிலுள்ள பொழிற்பாயலில் ஆராவின்ப மென்றுகூறி "மலையடியி னுறையும் மகளிர் பூவின் கட்டிரியு மகன்றில் போல மைந்தர் அகலத்தை அகலாத நல்ல புணர்ச்சி" எனக் கற்பினைக் களவினும் மேம்படுத்துக் களவு போலப் பிரிய வேண்டிய இன்றியமையாமையை உடையதன் றென்று தெரிய மகன்றில்போல மைந்தரகலா நல்ல புணர்ச்சி" என்று வேற்றுமை புலப்படக் கூறியது கண்டு உண்மையறிக.

இப்பரிபாடலுள்ளே ஒருவர் களவுப் புணர்ச்சியை **அகறலறி யாப் புணர்ச்சி** எனவும் ஒருவர் கற்பிற் புணர்ச்சியை **அகலா நன்னர்ப் புணர்ச்சி** எனவும் கூறி முரண்படுதல் காண்க. இவ்விரண்டனுள் உண்மையில் அகலா நன்னர்ப் புணர்ச்சி கற்பிற் புணர்ச்சியே என்பதும் மகன்றிலே உவமித்தவாற்றாற் றெளியலாம், இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்துச்,

''சிலம்பு முதலாகச் சென்ற கலனோ
டுலந்தபொரு ளீட்டுத லுற்றேன் - மலர்ந்தசீர்
மாட மதுரை யகத்துச்சென் றென்னோடிங்
கேடலர்கோ தாயெழு கென்றா'' (கனாத்திறம்)

என்பதனாற் கோவலன் பொருண் மேற்செலவின்கண்ணும் தலைவியைப் பிரியாது, உடன்கொடுசேறல் கூறுதல் காண்க.

''முந்நீர் வழக்க மகடூஉவோ டில்லை''

(தொல். அகத். 37)

என்புழி இளம் பூரணர் ''காலிற்பிரிவு தலைமகளை யுடன்கொண்டு பிரியவும் பெறும்'' என்று உரைத்தல் காண்க. கபிலர்

''நாடறி நன்மணம்'' (குறிஞ்சிப்பாட்டு)

எனவும், நல்லந்துவனார்

''நன்னர்ப்புணர்ச்சி'' (பரிபா. 8)

எனவும், இளங்கோவடிகள்

பெறுக நன்மணம்'' (குன்றக் குரவை)

எனவும், கூறுதலான் இம்மூவர்க்கும் களவு நன்மணமாகாதென்பது உடன்பாடாதல் உய்த்துணரலாகும். இவருட் கபிலரும் இளங்கோவடிகளும் களவினை முறையே மாயப் புணர்ச்சி யெனவும் பிழை மணம் எனவும் கூறுதலை முன்னரே காட்டினும்.

மற்றுக் கற்பிற் புணர்ச்சி பிரிவாற் சிறப்பதும் புலவியால் மேம்படுவதும் குன்றம் பூதனார் பரிபாடலிலே உடன்படுதல் ''புலத்தலிற் சிறந்தது கற்பே'' என்பது முதலாகக் கூறியவாற்

ருனறியலாம். களவிற் பிரிவு பெரும்பான்மையும் தலைவியின் தந்தையையும் தமையன்மாரையும் ஊரையும் அஞ்சி நிகழ்தலும், பகலும் இரவும் பிரியாதொழுகும் கற்பின் கண்ணே பிரிவு பிறர்க்கு உதவும் பொருட்டு நிகழ்தலும் நூல்களிற் கண்டு தாழ்வும் உயர்வும் உணர்ந்து கொள்ளலாம். இவ்வினிய உண்மையைப்,

"பல்பூஞ் சேக்கையிற் பகலு நீங்கார்
மனைவயி னிருப்பவர் மன்னே துனைதந்
திரப்போ ரேந்துகை நிறையப் புரப்போர்
புலம்ப லுள்ளமொடு புதுவதந் துவக்கு
மரும்பொருள் வேட்ட மெண்ணி
..............................................
நெடுமா மருங்கின் மலையிறந் தோரே" (அகம். 389)

எனவரும் நக்கீரனார் கூற்றான் நன்கு தெளிக.

இத்துணையுங் கூறியவாற்றாற் குன்றம் பூதனார் ஒன்பதாம் பரிபாடலிற் களவினை மிகுத்துக் கூறியது துதிவாதமாதல் தெளிக. இங்ஙனங் களவினை மேம்படுத்துக்கூறிய இவ்வாசிரியர் களவிற் புணராது கரணத்தொடு மணந்த தெய்வயானையார் திருவடியில் வள்ளியாரைக் களவிற் புணர்ந்த முருகக் கடவுள் தன் திருமுடிதோய வணங்கிய செய்தியைத் தெளிவித்தலும் ஈண்டைக்கு நோக்கிக் கொள்க. இஃது,

இகலி னிகந்தாளை யவ்வே டலைக்கணணி
திருந்தடி தோயத் திறைகொடுப் பானை

(பரிபா. 9, 36-37)

எனப்பாடுகலா னறியலாம்

இவர் பரிபாடலால் இவர் காலத்து இத்தமிழ் நாட்டிற் களவினில் மெய்யுறுதலை உயர்ந்ததாகக் கொள்ளாதார் உண்டு என்பது மட்டில் நன்கு புலங்கொள்ளலாகும். இதற்கேற்பவே,

"வேயெனத் திரண்ட தோள்" (21)

என்றுங் குறிஞ்சிக் கலியுள்

> "இனையன கூற விறைஞ்சுபு நிலநோக்கி
> நினையுபு நெடிதொன்று நினைப்பாள்போன் மற்றாங்கே
> துணையமை தோழியர்க் கமர்த்த கண்ணள்
> மனையாங்குப் பெயர்ந்தாளென் னறிவகப் படுத்தே"

என வருவது கண்டு இளம்பூரணவடிகள்,

"இச் செய்யுள் உள்ளப் புணர்ச்சியுற்ற தலைவன் வரைதல் வேண்டிப் பாங்கற்குரைத்தது" (தொல். களவி. 7) என உரைத்தது காண்க. இவற்றாற் களவில் உள்ளப்புணர்ச்சி யுடன்பட்டு மெய்யுறு புணர்ச்சி யுடன்படாதாரும் அவ்விரண்டும் உடன்படுவாரும் என இருதிறத்தார் இந்நாட்டிருந்தனரென்றும், அவருட் களவில் மெய்யுறு புணர்ச்சி யுடன்படாதாரைக் குறித்து அவரைத் தள்ளாப்பொரு ளியல்பிற் றண்டமிழாய்வந் திலார் என்று குன்றம் பூதனார் கூறினாரென்றுங் கொள்வது தகும். "விடுமிழை மணம்" எனக் கூறிய இளங்கோவடிகள் ஒத்த ஆசிரியரும் மணிமேகலையுட் சாத்தனார் கூறிய தருமதத்தனும் விசாகையு மொத்த தலைவன் தலைவியரும் இத்தென்னாட் டுண்மை கண்டு இக்கொள்கை நன்கு துணியலாகும்.

மற்றுக் களவின்கண் மெய்யுறு புணர்ச்சியைப் பற்றிய இலக்கணங்களும் இலக்கியங்களும் பண்டு தொட்டே தமிழிற் பலவுளவாலெனின்; அவையெல்லாம் உயர்ந்தன என்னாது அங்ஙனம் ஒழுகற்குரியாரும் உண்டாதல் பற்றி அவரை நோக்கி அம்முறையையும் நெறிப்படுத்தினவாமென்று கொள்க. இங்ஙனங் கொள்ளாக்கால் ஒருதலைக் காமமாகிய கைக்கிளை பற்றியும் பொருந்தாக் காமமாகிய பெருந்திணை பற்றியும் இலக்கியமும் இலக்கணமும் பலவாக உண்டாதல் பற்றி அன்பினைந்திணைக்கு ஒவ்வாத அவற்றையும் நன்மணம் இஃதென்று தெளிந்து தமிழ் மக்கள் உடன்பட்டனரென்று கூறவேண்டியதாகுமென்க. இத் துணையுங் கூறியவாற்றால் தலைவன் தலைவியரும் உள்ளம் ஒத்த வழிக் கரணத்தொடு வதுவை புரிதலே உத்தம வதுவையாகக் கருதியொழுகியது புலனாம். இவற்றாற்றமிழ்த் தலைவரது பெருமையும் உரனும் தமிழ்த் தலைவியரது நாணும் நிறையுங் கற்பும் தெளியக் காணலாம்.

இனி இத்தமிழ் நாட்டார், பேரரசர்க்கு அக்காலத்தியல்பாகிய வலிதிற் பற்றும் இராக்கத மணத்தைத் தம்மூரும் உயிரும் தொலையுமளவிலும் எதிர்த்துத் தம்மானங் காத்தொழுகினரென்பது,

"வேம்பு மாரும் போந்தையு மூன்று
மலைந்த சென்னிய ரணிந்த வில்லர்
கொற்ற வேந்தர் வரினுந் தற்றக
வணங்கார்க் கீகுவ னல்லன்
.......................................
ஒரெயின் மன்ன னொருமட மகளே" (புறம். 338)

எனவும்,

"வேந்துகுறை யுறவுங் கொடா அன்
செம்பொறிச் சிலம்பி னிளையோள் தந்தை
.......................................
விளங்கிழைப் பொலிந்த வேளா மெல்லியல்
சுணங்கணி வனமுலை யவளொடு நாளை
மணம்புகு வைக லாகுத லொன்றோ
ஆரம ருழக்கிய மறங்கிளர் முன்பின்
.......................................
வாரா வுலகம் புகுத லொன்றெனப்
படைதொட் டனனே" (ஷை. 341)

எனவும், வருவனவற்றானறியலாம். பேரரசர் நல்கும் பெரும்பொருள் காரணமாக இவர் மகட்கொடை நேர்ந்திலரென்பதும், குலனும் அறிவும் திருவும் இளமையும் பிறவும் ஒத்தார்க்கே நேர்ந்தனர் என்பதும்,

"நலஞ்சால் விழுப்பொருள் பணிந்துவந்து கொடுப்பினும்
புரைய ரல்லோர் வரையல ளிவளெனத்
தந்தையுங் கொடாஅன்" (ஷை. 343)

எனவும்,

"செல்வம் வேண்டார் செருப்புகல் வேண்டி
நிரலல் லோர்க்குத் தரலோ வில்லெனக்
கழிப்பிணிப் பலகையர் கதுவாய் வாளர்" (ஷை. 345)

எனவும் வருவனகொண்டு உணரலாம். வேள்பாரி முடியுடை வேந்தர்க்கு மகண் மறுத்த செய்தியும் (புறம். 109) பெருஞ் சிக்கல் கிழான் மகட் கொடை மறுத்த செய்தியும் (தொல். புறத் 19 இளம்பூரணர் உரை) ஈண்டைக்கு நினைக.

> "வவ்விக் கொளலும் அறனெனக் கண்டன்று"
>
> (குறிஞ்சிக்கலி. 23)

என்றாராயினும்

> "பின்னைய நான்கும் பெருந்திணை பெறுமே"
>
> (தொல். களவியல். 14)

என்பதனால் ஆசிரியர் வவ்விக் கொளும் மணத்தைப் பொருந்தாக் காமத்துச் சேர்த்தது காண்க. நச்சினார்க்கினியர் இது (வவ்விக் கொளல்) தீதாமாதலான் அடியோர் தலைவராக வந்த பெருந்திணை எனக் கூறியொழிவதுங் காண்க. முறைகடந்து மகளிரை வவ்வினவர் ஒறுக்கப்பட்டனரென்பது,

> "கரும்பமல் படப்பைப் பெரும்பெயர்க் கள்ளூர்
> திருநுதற் குறுமக ளணிநலம் வவ்விய
> அறனிலாள னறியே னென்ற
> திறனில் வெஞ்சூ ளறிகரி கடாஅய்
> முறியார் பெருங்கிளை செறியப் பற்றி
> நீறுதலைப் பெய்த ஞான்றை
> வீறுசா லவையத் தார்ப்பினும் பெரிதே" (அகம். 256)

என்பதனால் அறியப்படும். இவ்வருமைப் பாடலான் ஊர்தோறுந் தீயோர் தீமைகண்டு ஒறுப்பதற்குரிய வீறுசாலவைகள் பண்டைத் தமிழகத்திருந்து முறைசெய்தன வென்பது புலனாதலுமுணர்க.

புகார்ப்பட்டினத்துக் ககந்தன் அரசாண்டபோது அவன் தன் புதல்வர் இருவரும் முறைதவறிப் பெண்டிரை விழைந்தது தெரிந்து அவரை வாளால் எறிந்த செய்தியும் மணிமேகலையுட் (காதை. 22) கூறப்பட்டுள்ளது. தமிழரசர் கற்புடை மடந்தையரை எத்துணை மதித்துப் போற்றி யொழுகினர் என்பது கீரந்தை மனைவி பொருட்டுத் தன் கை குறைத்துக் காட்டிய பொற்கைப் பாண்டியன் சரிதையில் நன்கறிந்ததாம். (சிலப். 23)

"கொய்தார மார்பிற் கொழுநன் றணந்தபின்
பெய்வளை யாட்குப் பிறிதில்லை—வெய்ய
வளிமறையு மின்றி வழக்கொழியா வாயில்
நளிமனைக்கு நற்றுணை நாண்" (புறப். வெண். 104)

என்பது ஈண்டைக்கு நினைக. இவற்றால் இத்தமிழ்மக்கள் நல்லொழுக்கம் ஒருவாறுணரலாம்.

இத்தமிழ்மக்கள் கொண்ட மாசுபோகப் புனல் படிதலும் தீது தீரக் கடலாடுதலும் (பட்டினப். 99, 100) வடவாரியர்க்கும் ஒத்தல் காண்க.

இவர் சகுனம் பார்த்தல்,
"நாளும் புள்ளும் பிறவற்றி னிமித்தமும்"

(தொல். புறத். 36)

எனவும்.

"புள்ளுப்புணர்ந் தினிய வாக" (அகம். 136)

எனவும்,

"புள்ளோர்த்து" (அகம். 207)

எனவும் வருவனவற்றானும் உபசுருதியெனப் பெயரிய நற்சொற் கேட்டல் விரிச்சியோர்த்தலானும் (முல்லைப்பாட்டு. 11) அறியலாம்.

இவர் தெய்வத்தின் அவதாரங்களையுடன்பட்டு வழிபடுதல்,

"தாதை யேவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுந்துய ருழந்தோன்
வேத முதல்வற் பயந்தோ னென்பது
நீயறிந் திலையோ நெடுமொழியன்றோ"

(சிலப். ஊர்காண். 46-49)

என்பது முதலாக வந்தவற்றுட் காணலாம். பரிபாடலுட் டிருமாலைப்பற்றிய பாடல்களில் இவ்வுடன்பாடு மிகக் காணலாம். ஆண்டுப்பிறப்பித்தோரிலை (3) என இவ்வவதாரத்தினுண்மைத் தன்மையைப் புலப்படுத்தல் காண்க.

இனி இவர் நிலை நான்கும் உடன்பட்டது,

"படிவ வுண்டிப் பார்ப்பன மகனே" (குறுந். 156)

"பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே" (புறம். 183)

என்பதனாற் பிரமசரியமும்,

"அறவோர்க் களித்தலு மந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலுந்
.................................இழந்த வென்னை"

(சிலப். 16, 71-73)

என்பதனால் இல்லறத்தியல்பும்,

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
யறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியுஞ்
சிறந்தது பயிற்ற லிறந்ததன் பயனே"

(கற்பியல். 51)

என்பதனாற் சபத்னீக வானப்பிரத்தமும்,

"அருளொடு புணர்ந்த வகற்சி யானும்"

(தொல். புறத். 21)

"கட்டி னித்த பாலினானும்" (ஷை. ஷை. 21)

என்பனவற்றால் வீட்டிற்கேதுவாகிய துறவுங் கூறுதலான் அறியலாம்.

"தில்லை யன்ன புல்லென் சடையோ
டள்ளிலைத் தாளி கொய்யு மோனே
இல்வழங்கு மடமயில் பிணிக்குஞ்
சொல்வலை வேட்டுவ னாயினன் முன்னே"

(புறம். 252)

இவ்வழகிய அடிகள் இல்லறத்தொழுகியவன் அப்பாற் றுறவு பூண்டது குறித்தல் காண்க. இவர் வீடுபேர் பிரமசரியத்தைப் புகழ்ந்து பாராட்டியது,

"இளையர் முதிய ரெனுமிருபால் பற்றி
விளையு மறிவென்ன வேண்டா—இளையனாந்
தன்றாதை காம நுகர்தற்குத் தன்காமம்
ஒன்றாது நீத்தா னுளன்"

(தொல். புறத். 21 நச். உரை)

என்னும் பெரும்பொருள் விளக்கப்பாட்டானறியப்படும். வீடுமன் நைட்டிக விரத முறை தென்னாட்டுத் தமிழ்ப் பெருமக்கள் மடாலயங்களில் இன்றைக்கும் போற்றப்படுவதேயாகும்.

இனி இவர் இறந்தார்க்குச் செய்யும் ஈமக் கடன்களும் பிதிரர்க்குச் செய்யும் பிண்டதர்ப்பணமும், கைம்மை நோன்பும், கணவனுடன் மாய்தலும், பிறவும் உடன்பட்டொழுகுதல்,

"அடங்கிய கற்பி னாய்நுதல் மடந்தை
உயர்நிலை யுலக மவன்புக வரிநீ
ரூடு சுளகிற் சீறிட நீக்கி
அழுத லானாக் கண்ணள்" (புறம். 249)

எனவும்

"தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்" (புறம். 9)

எனவும்

"நல்லோள் கணவனொடு நனியழற் புகீஇச்
சொல்லிடை யிட்ட பாலை நிலையும்"

(தொல். புறத். 24)

எனவும்

"நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே" (புறப். 246) (பூதப் பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு தீப்பாய்வாள் சொல்லியது) எனவும், வருவனகொண்டு உணரலாம். நல்லிசைப் புலவர் கணவனுடன் மாய்தலை விலக்கின்கண்ணும் வேண்டுதல்,

"கருங்கட் டாக்கலை பெரும்பிறி துற்றெனக்
கைம்மை யுய்யாக் காமர் மந்தி

கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி
ஓங்குவரை யடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும்"

(குறுந். 69)

என்னும் அருமைப் பாட்டான் உணரலாகும். ஆண்மக்கள் தம் மானங்காத்தும், பரலோகம் வேட்டும், பிராயோபவேச மேற்கொண்டு வடக்கிருத்தல், முறையே,

"புறப்புண் ணாணி வடக்கிருந் தோனே". (புறம். 66)

எனவும்,

"உள்ளாற்றுக் கவலைப் புள்ளி நீழல்
முழூஉ வள்ளூர முணக்கு மள்ள" (புறம். 219)

(இது கோப்பெருஞ் சோழன் வடக்கிருந்தானைக் குறித்தது) எனவும் வருவனகொண்டுணர்க. அரசர் இறக்கும்போது அவர்க்குப் பிராயச்சித்தம் (கழுவாய்) முதலியன வேதம் வல்லாராகிய புரோகிதர் செய்தல் தொன்மை வழக்கு என்பது,

"'மன்னர்
நோய்ப்பாள் விளிந்த யாக்கை தழீஇக்
காதன் மறந்தவர் தீதுமருங் கறுமார்
அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்
திறம்புரி பசும்புற் பரப்பினர் கிடப்பி
மறங்கந் தாக நல்லமர் வீழ்ந்த
நீள்கழன் மறவர் செல்வுழிச் செல்கென
வாள்போழ்ந் தடக்கலு முய்ந்தனர்" (புறம். 93)

என்ற அடிகளான் அறியலாம். இதனை விரசுவர்க்கம் உடன்படலுங் காண்க.

"போரிற் பொருதுவிழூப் புண்ணு னிறவாம
லூரிற் பிணியா லுயிரிழத்தல்—தேரிறைவன்
மாந்தர் குணஞ்செயலின் வைத்தபழ நாற்பாலுள்
வேந்தர் குடிக்கு விலக்கு"

என்ற பாரத நீதியால் இப்பரிகாரம் இன்றியமையாமை யுணரப்படும்.

இதுகாறுந் தொகுத்துக்கூறிய வாற்றாற் பழந்தமிழரொழுக்கம் வேத வழக்கோடு மாறுபடாதியைதல் நன்கு தெளியலாகும், இவ்வுண்மையானன்றே,

"ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்" (தேவாரம்)
எனவும்,

"புல்லாணித்

தென்னன் தமிழை வடமொழியை" (திருமடல்)
எனவும், இருபெருந் தெய்வங்களையும் தெய்வத் தமிழ்ப் பெரியார் வாயாரப் பாடினரென்று துணியலாம். "தென்னாய் வடவாணாய்" (திருநெடுந்தாண்டகம். 10) என்பதும் இக்கருத்தை ஐயமறத் தெளிவித்த லுணரலாம்.

இனித் தமிழர் தம் பெருவீரச் செயலிற் பாராட்டிக் கூறிய செருக்களவேள்வியினியல்பு,

"களவழிந், தேரோர் தோற்றிய வென்றியும்"

(தொல். புறத். 21)

என்புழி நச்சினார்க்கினியர் உரைத்த உரையானும், புறப்பாட்டில்,

"அரசுபட வமருழக்கி
உரைசெல முரசுவவ்வி
முடித்தலை யடுப்பாகப்
புனற்குருதி யுலைக்கொளீஇத்
தொடித்தோட் டுடுப்பிற் றுழந்த வல்சியி
னடுகளம் வேட்ட வடுபோர்ச் செழிய" (புறம். 26)

என வருதலானும் அறிந்ததேயாம். இவ்வரிய வழக்கம் வடநூலார்க்கும் ஒத்ததாதல் மஹாபாரதத்து அநுசாசன பருவத்துச் (192 வடமொழி. V. N. கிருஷ்ணமாச்சாரியார் பதிப்பு)

"செருக்களத்துப் படையெடுத்துப் பொருபவன் பெருவேள்வியைச் செய்து தாயனுயவன். அவன் (தோல்) கேடகம் மான் றோல், வில் தண்டம், தேர் வேள்வி வேதி, கொடி யூபம், பரிவார் தருப்பை, போர்க்கிளர்ச்சி, செருக்கு, சினம் இவை மூத்தீ,

உவகை ச்ருவம், தேர்ப்பாகன் புரோஹிதன், படைகள் வேள்விக்கருவிகள், அம்பு சமித்து, உடல்வேர்வை தேன், மக்கள்தலை புரோடாசம், உதிரம் ஆகுதிநெய், துணிகள் அவிக்கலம், உடல் நிணம் நெய்யொழுக்கு, ஊனுண் பூதங்கள் வேள்வி யந்தணர், அத்தகைய மக்களும் யானை குதிரைகளும் உணவும் குடிநீருமாகும். இறந்த வீரர்களின் அணிகலங்கள் வேள்வி முகவைகள்" என்பன முதலாக வருதலான் நன்கறிந்துகொள்க.

இராஜதரங்கிணி (7, 980-81)யில் யமன் அடுக்களையாகிய போர்க்களத்தில் இம்மாதிரி வேள்வியில் வேதாளத்திற்குத் தசையுணவும், உதிரப் புனலும், ஈந்தது கூறுதல் காணலாம்.

இப்பழைய வழக்கம் பிற்காலத்து வடகோடியிலும் உண்டென்பது இதனால் உணரலாம். இக்கள வேள்வியிற் கூழ் கொடுத்தற்குப் பரணி நாளைக் கொள்ளும் வழக்கமும் 27 நாள்களில் ஒன்றான பரணிக்கு அதிதெய்வம் யமனாதல்பற்றியென்பது துணியத்தகும். ஏர்க்களத்தோடு போர்க்களத்தை உவமித்தோ அன்றி உருவகித்தோ இவர் கூறும் ஒரு முறை, வேத வழக்கொடுபட்டதே யென்பது களம் (खल) என்னுஞ் சொல் கதிரடிக்குந் தரைக்குப் (ரிக்வேதம். 10, 48, 7; நிருக்தம் 3, 10). பெயராம் ஒற்றுமைபற்றியென்று உய்த்துணரலாகும்.

இத்தமிழர் தேரிற் பரியும் அத்திரியும் பூட்டுதலும் சகடத்தில், எருது பூட்டுதலும் வேதவழக்கிற் கண்டனவேயாம்.

> "புரவி வல்விரைந்து பூட்டி
> நெடுந் தேரூர்மதி" (அகம். 244)

எனவும்,

> "கழிச்சுறு வெறிந்த புட்டா ளத்திரி
> நெடுநீ ரிருங்கழிப் பரிமெலிந் தசைஇ" (அகம். 120)

எனவும் தமிழில் வந்தனகொண்டு தேர்பூண்பன இவையென்றுணரலாம். "எருத்தொழுகை" (மாடு பூட்டிய சகடம்) (குறுந்தொகை. 388) என்பதனால் இவர் சகடம் ஈர்க்கப்பூட்டுவது எருது என்பதறியப்படும். தேரிற் குதிரை பூட்டுதல் இருக்கு வேதத்துப் பல்லிடத்துங் காணலாம். (ருக். 10, 33-5) அத்திரி

பூட்டுதல் சாந்தோக்யத்துக் கண்டது (4, 9, 4). வடநூலார் **அச்வதரீ** என்று வழங்கியதைத் தமிழர் அத்திரி எனச் சிதைத்து வழங்கினராவர். சகடம் ஈர்ப்பதுபற்றி எருதினை வேதநூலோர் அருட்வா என வழங்குவர். அருஸ்-சகடம் என்ப. இவற்றாற் சகடமும் தேரும் வேறுவேறாதல் உணரலாம்.

இனிப் படையினை யானை, குதிரை, தேர், வில்லாள் என நான்காக வகுத்தலும், அங்ஙனம் வகை செய்த படையினைப் பல வகைகளாக முனைமுகத்து நிறுவலும் பிறவும் இருதிறத்தார்க்கும் ஒப்பது அறிஞர் தெளிந்தது. "களிறும், மாவும், தேரும், மறவரும் என நான்குடன் மாண்டது" (புறம். 55) என்ப. சதுரங்க பலம் என்பது வடநூல் வழக்கு. தமிழர் போர்த் துணையாகக் கொண்ட பல் கருவிகளுள்ளும் தம் வீர முரசினைத் தெய்வத் தன்மையுடையதாகச் சிறப்பித்துப் பாராட்டும் வழக்கம் வேத வழக்கொடுபட்டதென்பது அதர்வவேதத்திற் போர்த் துந்துபியைப் பற்றி வந்துள்ள மந்திரங்களிற் காணலாம். (5, 20). இது உயர்ந்த மரத்தாற் செய்யப்பட்டு ஆனேற்றின் தோலாற் போர்க்கப்படுவதென்பது அவ்வேதத்திற் கண்டது. சேரலாதன் கடம்பறுத்துச் செய்த முரசத்தால் (கடம்பறுத் தியற்றிய வலம்படு வியன்பணை. பதிற்று. 2, 7) இது மரத்தாலாதல் தெரியலாம்.

"ஓடா நல்லேற் றுரிவை தைஇய
வாடுகொள் முரசம்" (அகம். 334)

என்பதனால் இதற்கு ஆனேற்றின் தோல் போர்ப்பதறியலாம். வேதத்தில் இந்தத் துந்துபியை நோக்கி "விருஷாத்வம்" (நீ ஆனேறு யுள்ளாய்) (அதர்வவேதம். 5, 20, 2) எனக் கூறுதல் காண்க, "தெய்வீம்வா அம்துந்துப" என்புழித் தெய்வமுழக்கம் கூறுதல் (ஷை. 5, 20, 4) காண்க. இதனை வேதத்திற் கூறினாற் போல வேதமந்திரத்தால் வழிபடுதல்,

"முழங்கு மந்திரத்து
அருந்திறன் மரபிற் கடவுட் பேணியர்
..........................................,
னின்றுமுழங்குகுரன் முரசே" (பதிற்று. 30)

என்பதனுல் நன்கறியலாம். ஈண்டு மந்திரமென்பது மறைமொழியாதல்,

"மறைமொழி தானே மந்திர மென்ப"

(தொல். செய்யுளியல் 178)

எனத் தொல்காப்பியனுர் கூறுதலானறிக. "பலிபெறு மூரசம்" (புறம். 362) என்பதனுல் இதற்குப் பலியிடுதல் காண்க. பலி என்பது வேதச் சடங்கு முறையை யுடையதாதல் தெள்ளிது. முரஜா வடமொழியாதலும் அது பாண்டவர் ஐவருள்ளே தருமராசன் கொடியாதலும் ஈண்டைக்கேற்ப நினைக.

இனி ரிக்வேத அதர்வ வேதங்களிற் காணப்படும் வாணு என்ற சொல் கருவியிசையைக் குறிக்குமென்பர் (Ved. Ind. ii, 283). ஆனுல் பிற்பட்ட ஸம்ஹிதைகளிலும் பிராமணத்திலும் மகாவிரதச் சடங்கில் உபயோகிக்கப்படும் நூறு தந்தியை யுடைய யாழைக் குறித்து நிற்பதைக் காணலாம். ரிக்வேதத்தில் யாழ் என்ற இசைக்கருவியின் ஸப்தஸ்வரங்களும் குறிக்கப் படுகின்றன. இவற்றையே சப்த வாணிகள் என்பர். வீணைக்குத் தோல் தைப்பது என்ற வழக்கமும் வேதத்தொடு பட்டதுதான். அம்பணம் மரக்கால் வடிவாக இருப்பதும் வேதவழக்கே.

"கலக நாரதன் கைக்கொள் வீணை
அலகி லம்பண மாகெனச் சபித்து"

என்ற சிலப்பதிகாரக் கடலாடு காதை உரை மேற்கோள் அடிகளால் நாரதர் கைவீணை அம்பணமாதல் உணரலாம். யாழின் நரம்பு ஏழென்பர் வேதநூலுடையார். யாழை நரம்பென்பது "நரம்பின் மறை" (தொல். எழுத். 33) யென்பதனுலும் பரிபாடலில் யாழிசைப்பாரும் என்பதற்கு "நரம்பு உளர்நரும்" (8, 63) என்று குறித்தலானும் அறியலாம். யாழை அதற்கு இன்றியமையாத நரம்பினுற் பெயரிட்டாளுதல் வழக்கமென்பது இவற்ருல் உணரப்படும். பெரும்பாணுற்றுப்படையில்,

"செந்தீத் தோட்ட கருந்துளைக் குழலின்
இன்றீம் பாலை முனையிற் குமிழின்
புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின்
வில்யாழ்"

(அடி. 179-182)

என்பதனால், குமிழங்கொம்பில் மரல்நார் தொடுத்து இடையன் வாசிக்கும் நரம்பின் வில்யாழ் என்று குறித்தல் காண்க. இதனால் யாழ்முறை வில்லின் நரம்பினோசையினின்று முதல் முதல் உண்டாயிற்றென்று உய்த்துணரவும் இடனுண்டு. இதன் நாணுக்கு ஜ்யா என்பது வடமொழிப் பெயராதலால் அதுவே யாஜ் யாழ் என வழங்கிற்றெனக் கொள்ளுதல் ஈண்டைக்கு ஏற்குமென்க. இந்த யாழ் விற்போல் வளைந்ததாதல் முன்னே கூறினம். (பக். 82). இவ்வளைந்த யாழ் வடநாட்டு ஸமுத்ர குப்தன் காசிலும் உண்டு. (See Vincent Smith. Coins in the Indian Museum. p. 96)

இனி வேய்ங் குழலை வடநூலார் நாடி என்பர். மூங்கிலில் வண்டுகள் துளைத்த துளையிற் காற்றுப் புகுந்து இன்னோசை செய்தது கண்டு அவ்வாறே மக்கள் அமைத்துக்கொண்ட நல்லிசைக் கருவியென்பது தமிழர்க்கும் வடமொழியாளர்க்கும் ஏற்றதாம்.

> "ஆடமைக் குயின்ற வவிர்துளை மருங்கிற்
> கோடை யவ்வளி குழலிசை யாக" (அகம். 82)

எனவும்,

> "புதலிவ ராடமைத் தும்பி குயின்ற
> வகலா வந்துளை கோடை முகத்தலி
> னீர்க்கியங் கினநிரைப் பின்றை வார்கோ
> லாய்க்குழற் பாணியி னைதுவந் திசைக்கும்"
>
> (அகம். 225)

எனவும் வருதலால் இஃதியற்கையிற் கண்டதறியப்படும். ரகுவம்சத்தில்,

> "வளிதுளை நிறைந்து கழைமுரல வந்த
> வமிசவிசை"
>
> (ரகுவம்சம் மொழி பெயர்ப்பு. ஸர்க்கம் 2. பாட்டு 12)

என இவ்வாறே கூறுதல் காணலாம். இவ்விசைக் கருவி இந்நாவலந்தீவிற்குப் பொதுவாகிய கருவியே யாமென்பது நேபாளமொழியில் இது Bey என வழங்குதலானறியலாம். அவர் கண்

ணன் ஊதிய குழலைக் கிருஷ்ணபெ என வழங்குவர்; தமிழர் வேய் என்று வழங்கிய இதனை ஆளுவது வம்சியம் என்னும் வடமொழிபற்றியாமெனக் கொள்ளத்தகும். வம்சம்—மூங்கில்: "வஞ்சக் கண்ணுடைச் சிறுகோல்" (நற்றிணை 150) என்பது சங்க வழக்காதல் உணர்க. வேய், வங்கியம் மூங்கிற்குழற்குப் பெயர்கள்.

இனி,

> "மகளிர், துணங்கை நாளும் வந்தன வவ்வரைக்
> கண்பொர மற்றதன் கண்ணவர்
> மண்கொளற் கிவரு மள்ளர் போரே" (குறுந். 364)

என்பதனால் வீரர் தம்முள் மனமொத்து வலி காண்டற்பொருட்டுப் போர்விழா எடுப்பதும் அதனை அடுத்து இளமகளிர்புக்கு ஆடி விளையாடுதலும் உண்டென்றுணரப்படும், இவ்வழக்கம் இருக்குவேத காலந்தொட்டு வழங்குவதென்பது ஸமந, வ்ரா, விஸ் என்னும் வேதச் சொற்களுக்கு ஆராய்ந்து கூறிய பொருள் கணைக்கி இனிதுணரலாகும். (ருக்வேதம். அஷ்டகம். 3 அத். 8. ஸர்க்கம் 11 ஷை 6. 75. 4) ஸமந என்பது வீரர் தம் உள்ள மொத்த பரத்தையைத் தழுவுதற்கும், வீரர் தம் வென்றிகண்டு மகிழ்தற்கும் பெயராமென்பர். வ்ரா என்பது வீரர் திரளுக்கும் மகளிர் திரளுக்கும் பெயரென்பர். Sir Monier Williams என்பவர் வ்ரா என்பது ஊர் கூடி மகிழும் கூட்டத்திற்குப் பெயரென்பர். இதுவே விழா என்னும் தமிழ்ச்சொல்லாயிற்றென்று நன்கு துணியலாம். இவற்றை அடியிற்காட்டிய ஆங்கிலக் குறிப்பானுணர்க. *

* Vra according to Roth means 'troop' in the Rig Veda and Atharvaveda. On the other hand Pischel thinks 'Vra' meant female used either of animals or of women who go to the feass (Samane) or courtezans (Visyas of people or metaphorically the hymns compared with courtezans, these senses are adequate. (Vedic Index. Vol. II. p. 339 of A. A. Macdonnel and A. B. Keith.)

‡ One division of speech referred to is that of the divine (Daivi) and the human manushi. The Brahman is said to know both. The Vratyas are described as speaking the laaguage of the intiated (Dhikshitavek) though not themselves intiated (adhikshita).

இனி இவர் மாயோன் பிறந்த ஓண நன்னாளிற் கொண்டாடும் விழா முதலியனவும் வேத வழக்கொடுபட்டனவேயாம். இவ் விழா ஓண நாளினைப் (சிராவண தினத்தினை)பற்றியதுகொண்டு அவ்வுண்மை உணரலாம். மாயோன் பிறந்த ஓணம் என்பது திருமால் அதிதி வயிற்றில் வாமனனாகத் தோன்றிய சிராவணம் எ-று. சிராவணம் சுரோணம் என வேதத்தில் வழங்கப்படும். (தைத்திரீயப்ராமணம்) அதுவே ஓண மாயிற்றென வுணர்க. "திருவோணத் திருவிழாவில்" என்பது பெரியாழ்வார் திரு வாக்கு.

முடிவாக நாவலந் தீவில் ஆங்காங்கு வதியும் பல்வகை மக் களும் வேறு வேறு மானிட வாக்கினையுடையராயினும் அவ்வெல் லார்க்கும் பொதுவாகிய வேத மொழியாகிய தெய்வ வாக்கையும் அறிந்து அவ்வேத நெறியே யொழுகினர் என்னுங் கருத்தையே இக்கொள்கை யொற்றுமை காட்டுமென்க. இவ்வாறு தெய்வீ, மாநுஷீ என வாக்கிரண்டென்பதும் அவ்விரண்டும் அந்தணன் அறிந்தவனாவன் என்பதும் வேதங் கூறியனவே யாகும். இவ் வுண்மை இருக்கு வேதக் காடக ஸம் ஹிதையிலும் (14, 5) மைத்ராயணி ஸம் ஹிதையிலும் (1, 11, 5) காணலாம். அடி யிற் கண்ட ஆங்கிலக் குறிப்பைப் பார்க்க. ‡ பஞ்சவிம்சப்ராம் மணத்தில் (17—1—9 (விராத்தியர் தீக்ஷிதரல்லாதவராயும் உச்சரித்தற்கரிய மொழியாகிய தீக்ஷிதவாக்கினை எளிதில் மொழி பவராதலைக் (அதுருக்தா:) குறித்துச் சிறப்பிப்பது காண்டலால் இவ்விருமொழிவன்மை பழையதாகிய வேத காலந் தொட்டே இங்கு நிகழ்ந்ததுணரப்படும். வால்மீகர் ஸம்ஸ்க்ருதம், மானு ஷம் எனக் குறித்த மொழிகளும் இவ்வேதங் கூறியனவேயா மென்பது பொருந்தும்.

---

# தாயக்கொள்கை

பண்டைக் காலத்து அறிவு வீற்றிருந்த செறிவுடை மனத்து, வான்றோய் நல்லிசைச் சான்றோர் பலரைத் தந்தலை நகர்க்கட் டொகுத்துப் போற்றித் தமிழாராய்ந்த பெருஞ் சிறப்பாற் றனியே தமிழுடையாரென்று பாண்டிய குலத்தோர் புகழப் படுவரேனும் தமிழ் காத்த பெருமை தென்னாட்டு வேந்தர்க்குப் பொதுமைத்தாமென்பது "தமிழ் கெழு மூவர் காக்குமொழி" (அகப்பாட்டு. 31) எனவும், "வண் புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின், நாற்பெயரெல்லை யகத்தவர் வழங்கும், யாப்பின் வழியது" (தொல்காப்பியம். செய்யுளியல்) எனவும், தொன்மை இலக்கிய விலக்கணங்கள் கூறுதலான் அறியலாம். இம் மூவர் காத்து வளர்த்த பழந்தமிழிலக்கிய விலக்கணங்களிற்றான் இவர் குடிப்பிறப்பு, அரசியல், தாயமுறை. வள்ளன்மை, கொள்கை முதலிய பல வழக்கங்களும் நன்கறியப்படுவனவாம். இத் தொன்னூல்களுட்டொல் காப்பியம் என்னும் பேரிலக்கணமே தமிழர் வழக்கங்களை இனி தெடுத்துக் காட்டற்குத் தலைசிறந்த கருவியாகும்; இத்தொல்காப்பிய நூலுட் கூறப்பட்ட கொள்கை கள் தமிழ் மூவேந்தர்க்கும் அவர் குடி மக்கட்கும் பெரும்பான் மையும் பொதுவாய் நிகழ்ந்தனவேயாகும். இப்பல கொள்கை களுட்டமிழர் தாய முறைமையுமொன்று. தாயம் என்ற சொல் தொல்காப்பியர் காலத்திற்கு முன்னே இத்தமிழ் நாட்டு வழங் கியது என்பது அவர் "தாயத்தினடையா" (பொருளியல். 25) எனக் கூறுதலான் அறியத் தக்கது. தமிழ் நூன் முழுது முணர்ந்து இந்நூற்கு உரை கூறிய உரையாசிரியர் ஈண்டுத் "தாயத்தானெய்துதலாவது தந்தை பொருள் மகற்குறுத" லென்றுரைத்தார், நச்சினார்க்கினியரும் "தாயத்தினடையா— தந்தையுடைய பொருள்களாய் மக்களெய்துதற்குரிய பொருள் களிற் சேராதனவாய்" என உரைத்தார். இவ்விருபேருரை யாளரும் இவ்வாறு ஒருதலையாகக் கூறுதற்குக் காரணம் பண்டைத் தமிழ் நாட்டு வழக்கங்களைக் கூறிய தமிழ்ப் பெரு நூல்களில் மக்கட்டாய முறையல்லது வேறு தாய முறையில்லா மையே என எளிதிலறியலாகும். இத்தொல்காப்பியத்து உலகியல் நடத்தற் கண்ணும் இவ்வுலகத்தை விட்டு வீடு விரும் பிக் காடு புகுந்து துறவுள்ளத்து முயறற்கண்ணும் எழுந்த குத்தி

ரங்களிற்றந்தையரும் தாயரும் மக்களுமே கூறப்படுதலல்லது யாண்டும் மாமனும் உடன் பிறந்தாளும் மருமகனும் கூறப்படாமையால் இவ்விலக்கண நூலாசிரியர் கருத்தொடு படுத்தே இங்ஙனம் உரைகூறினரெனல் நன்கு பொருந்தும். இவ்வாசிரியர்,

"அந்தமில் சிறப்பின்மக" (கற்பியல். 6)
"தந்தையரொப்பர் மக்கள்" (பொருள். கற்பியல். 6)
"சிறந்த புதல்வனை நேராது புலம்பினும்"
(ஷை கற்பியல். 9)
"மாலையேந்திய பெண்டிரு மக்களும்" (ஷை ஷை 5)
"காமஞ்சான்ற கடைக்கோட்காலை
யேமஞ்சான்ற மக்களொடு துவன்றி
யறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியுஞ்
சிறந்தது பயிற்ற லிறந்ததன் பயனே" (ஷை ஷை 5)

என்பன முதலாக் கூறிய சூத்திரப்பகுதிகளை நோக்கி யுண்மை யுணர்க. மகன் பெற்றோர்க்கு அந்தமில் சிறப்பினை யுதவுவன் ஆதல்.

"இம்மை யுலகத் திசையொடும் விளங்கி
மறுமை யுலகமு மறுவின் றெய்துப
செறுநரும் விழையுஞ் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்மலோர்" (அகம். 66)

என்ற நல்லிசைப் புலவர் வாக்கானறியலாம். "தந்தையரொப்பர் மக்கள்............நெருங்கலும்" என்றதற்கு இலக்கியம் மருதக்கலியுள் (21)

"செம்மால், வனப்பெலா நுந்தையை யொப்பினு நுந்தை
நிலைப்பாலு ளொத்த குறியென்வாய்க் கேட்டொத்தி
கன்றிய தெவ்வர்க் கடந்து களங்கொள்ளும்
வென்றிமாட் டொத்தி பெருமமற் றெவ்வாதி
யொன்றினேம் யாமென் றுணர்ந்தாரை நுந்தைபோன்
மென்றோ ணெகிழ விடல்"

எனவும்,

> ''பால்கொள லின்றிப் பகல்போன் முறைக்கொல்காக்
> கோல்செம்மை யொத்தி பெருமமற் றெவ்வாதி
> கால்பொரு பூவிற் கவின்வாட நுந்தைபோற்
> சால்பாய்ந்தார் சாய விடல்''

எனவும்,

வருவனவாகும். இவற்றுட் கோப்பெருந்தேவியாகிய தலைவி தான் பயந்த அருமை யரசிளங்குமரனை நோக்கி நின் தந்தையாகிய செங்கோல் வென்றி வேந்தனை வெற்றிக் குணத்திடத்தும், சாயாதகோல் செவ்விதாக நிகழ்த்தலினும் ஒப்பாயென்றும், அவன் பரத்தமையில் ஒவ்வாய் என்றும் நெருங்கிக் கூறுதல் காணலாம். தந்தையின் வென்றியுஞ் செங்கோலும் புதல்வர்க்கு ஒத்தல் கூறியதனால் ஈண்டுத் தந்தையரசுரிமை அவன் புதல்வற் கெய்துதல் குறித்தது புலனும்.* இது சுட்டியொருவர் பெயர் கொளாப் பெருமையையுடைய அகத்திணைப் பாட்டாதலின் இவ்வேத்துரிமை முறை தமிழ் மூவேந்தர்க்கும் ஒப்புதேயென்று துணியலாம். இதற்கியையவே வினை முடித்து வந்த வேந்தனைத் தலைவியரும் புதல்வரும் மாலையேந்தி யெதிர் கொள்ளுதல் ''மாலையேந்திய பெண்டிரு மக்களும்'' என்பதனாற் கூறினர். இம்மனையில் வாழ்தலை விடுத்துக் காடு புகுதற் கண்ணும் ''மக்களொடுதுவன்றியபின்னே கிழவனுங் கிழத்தியும் வீட்டிற்கு முயறல்'' கூறியது காண்க. ''இமயவரம்பன் தம்பி பல்யானைச் செல் கெழுகுட்டுவன் நெடும்பாரதாயனார் முந்துறக காடு போந்தான்'' எனப் பதிற்றுப் பத்து மூன்றும் பத்துப் பதிகத்தாலறியப்படுதலாற் ''சிறந்தது பயிற்றல்'' எல்லாத் தமிழ் வேந்தர்க்கும் ஒத்தல் தெளியலாம். அரசுரிமை கொள்ளும் வழக்க முதலாக எல்லா வேத்தியல் நெறியினும் இம்மூவேந்தர் தம்முள் வேற்றுமையின்றி ஒரு தன்மையராதலான் இவர்க்கு வேறு வேறு வேத்தியலிலக்கணம் உண்டாகாது பொதுவாகவே நிகழ்ந்ததென்று நினையத்தகும். இதனுண்மையானன்றே

---

* வேத வழக்கிலும் தாயபாகத்துப் பெண்டிர் விலக்கப்பட்டுள்ளனர் என்பது சதபதப்பிராம்மணத்தாலும் (IV 4-2-13) நிருத்தத்தாலும் iii, 4) நன்கறியலாம்.

செங்குட்டுவன் என்னுஞ் சேரகுலத்துதித்தோன் "எம்மோரன்ன வேந்தற்கு" (சிலப். காட்சி. அடி. 95) எனப் பாண்டியனைத் தன்னோடு ஒரு தன்மையனான வேந்தன் எனக் கூறினான். பின்னும்,

"எம்போல் வேந்தர்க் கிகழ்ச்சியுந் தரூஉம்"
(கால்கோள். 12)

எனப் பாண்டியர் சோழ ரிருவரையும் தன்னோடொத்தவராகக் கூறினான். சேரன் படைத்தலைவனான வில்லவன் கோதை அச்செங்குட்டுவனை நோக்கி,

"நம்போல் வேந்தர் நும்மோ டிகலிக்
கொங்கர்செங் களத்துக் கொடுவரிக் கயற்கொடி
பகைப்புறத்துத் தந்தனர்" (சிலப். காட்சி. 152-153)

எனக் கூறினன். புறப்பாட்டில் "தன் போல் வேந்தன் முன்பு குறித்தெறிந்த" என்புழிக் கரிகாற்சோழனும் நெடுஞ்சேரலாதனும் ஒத்தல் கூறினர். இம்மூவேந்தர் பிறந்த குலமும், ஆளுந் திசையும், நாடும், யாறும், மலையும், தலைநகரும், கொடியும், தாரும் வேறு வேறாகவும் இவரைத் தம்முளொத்தவராகக் கூறுதல் தமிழ்நெறிகாக்கும் வழிமுறையுடைய பழங்குடிப்பிறப்பினானும் குடியுங் கூழும் படையும் பிறவுமுடைமையாற் சிறந்த பெருவலி மிக்க கொற்றம் (அரசுரிமை) விறுதலானும் என்று துணியப்படும். இவ்வுண்மையைத் துறவியும் பெருங்கவியரசருமாகிய இளங்கோவடிகள் சிலப்பதிகார நூலின் மூன்று காண்டவிறுதியினும் "முடியுடை வேந்தர் மூவருள்ளுஞ் சோழ குலத்துதித்தோர்" எனவும், "முடியுடை வேந்தர் மூவருள்ளும்...... பாண்டிய குலத்தோர்" எனவும்,

"முடியுடை வேந்தர் மூவ ருள்ளுங்
குடதிசை யாளுங் கொற்றங் குன்றா
வார மார்பிற் சேரகுலத் துதித்தோர்"

எனவுங் குலத்துதித்தலையே பொதுவாக வைத்துக் கூறுதல் கொண்டு நன்கு தெளியலாம். இவற்றிற்கேற்பவே சிறுபாணாற்

றுப்படையிற் "குடபுலங் காவலர் மருமான்" எனவும், "தென் புலங்காவலர் மருமான்" எனவும், "குணபுலங்காவலர் மருமான்" எனவும் கூறினர். ஈண்டு மருமான் என்றது வழித் தோன்றல் என்னும் பொருட்டாதல் மூவரையுங் கூறியதனுன் எளிதிலறியலாம். மேலே "குலத்துதித்தோன்" என்றதற்கு வழித்தோன்றல் என்பதே இயைபுடைத்தாதல் காண்க. இம்மூன்று குலத்தையும் பழங்குடியென்பர் பரிமேலழகர்;

"பழங்குடி, பண்பிற் றலைப்பிரித லின்று" (குறள். 955) என்பதனுரையிற் காண்க. இளங்கோவடிகளும் "மதுரையார் கோமான் றன் றொல்குலமே" எனவும், "வஞ்சியார் கோமான் றன் றொல்குலமே" எனவும் (வாழ்த்து) கூறுதல் ஈண்டைக்கு நோக்கிக்கொள்க. ஈண்டு ஈரிடத்தும் கோமான்குலமே யென்றது கோமான் றன் றொல்குலமே என்ற நயத்தையுஞ் சிந்தித்துக் கொள்க. அரும்பதவுரையாசிரியர்,

"நும்போல் வேந்தர் நும்மோ டிகலி" (சிலப். காட்சி.152) என்புழி "நும்மை யொக்கும் வேந்தர் என்றுன் குலம் பற்றி" என்று விளக்கியதனையும் ஈண்டைக்கு ஏற்ப நோக்கிக்கொள்க. பாண்டியர் சோழரிருவருக்கும் ஒரு குலமுறையும் அவரின் வேருகச் சேரர்க்கு ஒரு குலமுறையும் கொள்வது இவ்வரிய வுரையாளர் கருத்தாகாமை எளிதினுணரலாம். இக் குலங்கள் ஆண்வழி முறையைக் கொண்டாகுவனன்றிப் பெண் வழிமுறையைக்கொண்டாகுவனவல்ல வென்பது இவற்ருனினிதுணரலாம். "திங்கள் வழியோன்" (சிலப். நீர்ப்படை. 138) எனப் பாண்டியனையும், "ஞாயிற்றுச் சோழன்" (ஷை வாழ்த்து. உரைப் பாட்டு) எனச் சோழனையும், இளங்கோவடிகள் வழங்குதல் காண்க. பேராசிரியர் தொல்காப்பிய உவமவியல் "வேறுபட வந்த உவமச்" சூத்திரவுரையில் (32) "வையங்காவலர் வழிமொழிந் தொழுக" என்னும் புறப்பாட்டை (8) எடுத்தோதி விளக்கி, அப்பாட்டுடைத் தலைவனுகிய சேரனை வெஞ்சுடர் வழியிற்றேன்றிய அரசன் எனக் கூறிக் காட்டுதலான் சேரன் அக்கினி குலத்துதித்தவனுதலறியலாம். தோலாமொழித் தேவர் சூளாமணியில் பாண்டியனைத் "தண்சுடரோன் வழி மருகன்" எனக் கூறிச் சேரனைக் "கரபுரத்தார் கோமானிக் கதிர்

வேற்காளை ........எரிகதிரோன் வழி மருகன்'' எனக் கூறினர். பிற்காலத்து வில்லிப்புத்தூராரும் ''செந்தழலோன் மரபாகி யீரேழுலகம் புகழ் சேரன்'' எனப் பாரதத்துட் கூறினர். இவற்ருல் இம்மூவர் குலமும் ஆண் வழி முறையே போற்றுதல் தெரியலாம். இவற்றிற்கேற்பவே சேரன் செங்குட்டுவனை ''எழுமுடி மார்பநீ யேந்திய திகிரி வழிவழிச் சிறக்க வயவாள் வேந்தே'' (சிலப். நடுகல்.) எனவும்,

ஊழி யூழி, வழிவழிச் சீறக்க நின் வலம்படு கொற்றம்''
(ஷை காட்சி. 92)

எனவும், வழிமுறை கெடாது வாழிபாடி வாழ்த்துதல் காணலாம். நின்வலம்படுகொற்றம் என்பது நின் வெற்றியுண்டாகிய அரசுரிமை என்னும் பொருட்டு; அது நின் வழிவழிச் சிறக்க வென்றே வாழ்த்தியதாகக் கொள்க. இவ்வழிவழி தன்னைத் தொட்டுத் தன் புதல்வனைத் தொட்டுவரும் ஆண் வழியேயென்பது ''வழிவழிச் சிறக்கநின் வலம்படு கொற்றம்'' என மதுரைக் காஞ்சியுட் பாண்டியனை வாழ்த்துதலானினிது துணியப்படும், பதிற்றுப் பத்துள் (8) தகடூர் எறிந்த பெருஞ் சேரலிரும் பொறையை,

''வேறுபடு திருவி னின்வழி வாழியர்...........
ஒடுங்கி ரோதி யொண்ணுதல் கருவி
லெண்ணியன் முற்றி யீரறிவு புரிந்து
சால்புஞ் செம்மையு முளப்படப் பிறவுங்
காவற் கமைந்த வரசுதுறை போகிய
வீறுசால் புதல்வற் பெற்றனை'' (பதிற். 74)

எனக் கூறியவாற்ருன் நன்கு தெளியலாகும். இதன்கண் நின் வழி வாழ்தல் வேண்டி உயர்ந்த குணங்களாற் றிருவினும் வேறுபட்ட நின்றேவியாகிய வொண்ணுதல் கருவில், அரசுதுறை போகிய புதல்வற் பெற்றனையென ஐயமறத் தெரிவித்தல் காண்க. பதிற்றுப்பத்துரையாளரும் வேறுபடு திருவின் என்புழி ''இவளுக்குக் கூறிய குணங்களான் அவளின் வேருகிய நின்றேவியெனவும், நின்றேவியாகிய ஒண்ணுத'' லெனவும் விளக்கிச் செல்லுதல் நோக்கிக்கொள்க. இப்பதிற்றுப்பத்துப் பாட்டுள் 'கேள்விகேட்டு, என்பதனுல் முனிவர் கடனையும் ''வேள்வி வேட்டனை'' என்பதனுற் றேவர் கடனையும், 'நின்வழி வாழியர்

......புதல்வற் பெற்றனை, என்பதனாற் பிதிரர் கடனையும் இச் சேரன் தீர்த்தனன் என்பதும் முதற்கண் மக்கட்பேறில்லாது வேதம் வல்லாரைக்கொண்டு அரிய பெரிய வேள்வி வேட்டுத் தன் தேவி கருவிற் றன் வழிவாழப் புதல்வற் பெற்றனனென்ப தும் பரக்கக் கூறி, இவ்வாறு மூன்று கடனும் அருமையிற்றீர்த்த சிறப்பைப் பாராட்டி "அருங்கடனிறுத்த செருப்புகன்முன்ப" என்று விளித்து இவ்வரியவற்றிற்கு மருண்டேனல்லேன் நின்னை நல்வழியொழுகுவித்த நரை மூதாளனை (புரோகிதனை) நின்றவ வொழுக்கத்தானே துறவொழுக்கிலே செல்ல வொழுகுவித் தனை; அவ்வாறு செய்வித்த பேரறிவினையும் பேரொழுக்கத்தி னையும் தெரிந்தியான் மருண்டேன் என்று கூறுதற்கண், இவ் வரசன் இல்லறம் இனிது நடாத்தி மகனொடு துவன்றித் தன் வழிவாழச் செய்துவிட்டுச் சிறந்தது பயிற்றினன் என்பது நன்கு தெளியலாம். இப்பாட்டில் நின்வழி வாழியர்............நின் தேவியாகிய ஒண்ணுதல் கருவில் அரசுதுறை போகிய புதல்வற் பெற்றனை என்பது சேரர் மக்கட்டாய முறைமையை எவ்வித ஐயமுமில்லாமற் றெளிவித்தல் நோக்கிக்கொள்க. இப்பாட்டி லிச்சேரன் மூன்றுகடன் தீர்த்தபடியே செல்வக் கடுங்கோ வாழி யாதன் என்னுஞ் சேரனைக் கபிலர் என்னும் புலவர் பெருமான்,

"கற்பிறை கொண்ட கமழுஞ் சுடர்நுதற்
புரையோள் கணவ பூண்கிளர் மார்ப
......................................
வேள்வியிற் கடவு ளருத்தினை கேள்வி
யுயர்நிலை யுலகத் தையரின் புறுத்தினை
வணங்கிய சாயல் வணங்கா வாண்மை
யிளந்துணைப் புதல்வரின் முதியர்ப் பேணித்
தொல்கட னிறுத்த வெல்போ ரண்ணல்" (பதிற். 70)

என்பதனாற் பாராட்டி விளித்தல் காணலாம். இதன்கண் வேள் வியிற் கடவுளருத்தித் தேவர் கடனையும், கேள்வியின் ஐயரின் புறுத்தி முனிவர் கடனையும், இளந்துணைப் புதல்வரின் முதியர்ப் பேணிப் பிதிரர் கடனையும் தீர்த்தது குறித்துத் "தொல்கட னிறுத்த வெல்போரண்ணல்" எனக் கூறியது காண்க. ஈண்டு முதியர்ப் பேணியென்றது தன் குடியின் மூத்துக் கழிந்த பிதி ராயினாரை யெனவுணர்க.

"மூத்தோர் மூத்தோருய்த்தென" (புறம். 75)

என்னும் புறப்பாட்டு நோக்கி யிதனுண்மையறிக. இப்பதிற் றுப்பத்துட்பிருண்டும்,

"இளந்துணைப் புதல்வர் நல்வளம் பயந்த
.........ஒண்ணுதன் மகளிர்" (பதிற். 57)

என வருதல் காண்க. இதற்குப் பழைய வுரைகாரர் "புதல்வ ராகிய நல்வளம் என இருபெயரொட்டு" என உரை கூறுதலுங் கண்டுகொள்க. இளந்துணை மகார் என்பது இளம் பிள்ளைகளைக் குறித்தல்,

"கடுந்தே றுறுகிளை மொசிந்தன துஞ்சுஞ்
செழுங்கூடு கிளைத்த விளந்துணை மகாரின்
அலந்தனர் பெருமநின் னுடற்றி யோரே" (பதிற். 71)

என்பதனாலறிக. இரவலரிடத்து வணங்கிய மென்மையும் பகை வரிடம் வணங்காவாண்மையும் உடைய இளந்துணைப் புதல்வர் என்று உரை கூறிக்கொள்க, ஐந்தாம் பத்துட் செங்குட்டுவனை,

"வணங்கிய சாயல் வணங்கா வாண்மை
முனைசுடு கனையெரி யெரித்தலிற் பெரிது
மிதழ்கவி னழிந்த மாலையொடு சாந்துபுலர்
பல்பொறி மார்பநின் பெயர்வா ழியரோ" (பதிற். 48)

எனப்பாடுதலின் இவ்விசேடணம் ஆண்மக்கள் விசேடணமாதல் நன்கு தெளிக. இத்துணையுங் கூறிவாற்றால் இச்சேரர் வழி, தந்தையாகிய சேரன் அரசிற்குரிய ஆண்மக்களைப் பெற்றுண் டாம் வழியேயாதல் தெளியலாம். வாழி மதுரையார் கோமான் றன் றொல்குலமே எனவும், வாழி வஞ்சியார் கோமான்றன் றொல்குலமே எனவும் வாழ்த்தின்கண்ணும் பாண்டியர் குலத் தோடொப்ப வைத்து வாழ்த்தப்படுதல் கண்டுகொள்க. நச்சி னார்க்கினியர்க்கும் ஈண்டுப் புதல்வற் பெற்றனை என்பது தன் இராசகுலம் தன் புதல்வனால் வளர்தலையே கருதிற்று மென்பது உடன்பாடாதல் அவர்,

"சீதத்தற்கரசு நாட்டிக், குலந்தரு கோற்ற வேலான்
கொடிநகர் காக்க வென்றான்" (சிந்தாமணி. 2141)

என்புழிக் "குலந்தருதல் புதல்வற் பயந்து மேலுங்குலத்தை வளர்த்தல். தான் அக்கடன் கழித்துப் பொருதுபடக்கருதுத லின் அதற்கு அமைச்ச ருடன்படார் என்று அவரை வினவாது தானே அரசளித்தான்;

> "வீறுசால் புதல்வற் பெற்றனை யிவணர்க்
> கருங்கட னிறுத்த செருப்புகன் முன்ப" (பதிற். 74)

என்றாற்போல" என இப் பதிற்றுப்பத்துப் பகுதியை எடுத்துக் காட்டி விளக்கியவாற்றானறியத் தகும். "நின் வழி வாழியர், அரசுதுறை போகிய புதல்வற் பெற்றதனை" என்புழி நின்வழி யென முன்னிலைப்படுத்துப் பாடப்பட்டவன் சேரன் தகடூ ரெறிந்த பெருஞ்சேர லிரும்பொறையாதலின் பேரரசனாகிய நின் வமிசம் வாழ்தல் வேண்டி அரசு துறை போகிய புதல்வற் பெற்றனை என்று தெளிவித்தது காண்க. அரசன் தன் அரசிற் குப் புதல்வற்பெற்றமையே இது காட்டுதல் அரசு துறை போகிய புதல்வன் என்றதனாலறியலாம். இவ்வாறு அரிசில் கிழார் பாட்டும் கபிலர் பாட்டும், தம்முளொத்து நின்று உண் மைத் தமிழ்த் தாயமுறை இஃதென்று தேற்றுதல் காண்க.

இவற்றிற்குப் பொருந்தவே சேரர் அரசுரிமையைப் பதிற் றுப்பத்துட் **பைதிரம்** எனச் சான்றோர் வழங்கிக் காட்டுவ ரென்க. பைதிரம் என்பது பைத்ரம் என்னும் வடமொழித் திரிபென்றறிக. பைத்ரம் என்பது தந்தையாகிய பிதுர் வழியில் வந்தது என்னும் பொருட்டு. இதனாலிச் சேரராஜ்யம் பைதிரம் எனவும் இவர் பரம்பரை பைதிர பரம்பரை எனவும் நன்குணர்ந்துகொள்க. இவ்வாறு வழங்குதலைப் பதிற்றுப்பத் துள்,

> "உலகத் தோரே பலர்மற் செல்வ
> ரெல்லாருள்ளு நின்னல்லிசை மிகுமே
> வளந்தலை மயங்கிய பைதிரந் திருத்திய
> களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்" (பதிற். 38)

எனவரும் அடிகளிற்கண்டு கொள்க. இப்பைதிரம் உலகத்துள்ள பலர் செல்வர்க்கும் ஒத்தல் இதனாலறியப்படும். இவ்வழக்குச் சேரர்க்கே யன்றிச் சேரரால் வெல்லப்பட்ட சோழர் பாண்டி யர் இராச்சியத்திற்கும் ஒத்தல்,

"நிலங்கண் வாட நாஞ்சில் கடிந்துநீ
வாழ்த லீயா வளனறு பைதிரம்" (பதிற். 19)

என்புழிச் சேரனால் வாழ்வு கொடாது அழிப்புண்ட பிறர் இருவர் இராச்சியத்தையும் "வளனறு பைதிரம்" என்று வழங்கியது கொண்டு தெளியலாகும். சேரரால் வெல்லப்பட்டார்க்கும் சேரர்க்கும் **பைதிரம்** கூறியதனான் தமிழ் மூவரிராச்சியமும் தந்தையர்க்குரியது புதல்வர்க்குறுவதாகும் மக்கட்டாயமேயாதல் நன்கறிந்துகொள்க. சேரர் செல்வம் ஆண்மக்களைப் புணர்ந்தே வருவதென்பது "நினைவரிய பல்புகழார் நின்குலத்துத் தொல்லோர், அனைவரையும் புல்லினா ளன்றே—மனுநூல், புணர்நன் னெறியொழுகும் பூழியநீ யிந்நாள், மணந்த தடமலர் மேன் மாது" (வீரசோழியம் பெருந்தேவனாருரை மேற்கோள் அலங்காரம்.) என்னும் பழைய வெண்பாவான் இனிதறியலாகும். நின் குலத்துத் தொல்லோர் என்பதனைக் "கோமான் றன்றொல்குலமே" என்ற சிலப்பதிகாரத்தோடு ஒப்பு நோக்கியுண்மையுணர்க. பைத்ர—Relating to Paternal side என்பது வடமொழி Apte அகராதி. பைதிரம் நாடு என்று பொருள் கூறுவது ஓரரசற்கு அவன் பிதுர் வழியில் வரும் பூமியாதல் பற்றியென்றுணரத் தகும்; தாயம் என்ற சொல்லினை நாடு என்று கொள்வதும் இக்கருத்தே பற்றியாம் என்றுந் துணிக. தாயம் நாடாதல் மலைபடுகடாத்தில்,

"உயர்ந்த கட்டி லுரும்பில் சுற்றத்
தகன்ற தாயத்து" (அடி. 550-521)

என்புழி நச்சினார்க்கினியர் "உயர்ந்த அரச வுரிமையினையும், கொடுமையில்லாத அமைச்சர் முதலியோரையும் அகன்ற நாட்டினையும்" என்று பொருள் கூறியதனாலறிக. இதனாற் றாயமும் **பைதிரமும்** ஒரு பொருளவாதல் இனிதுணரலாம். மன்னர் அரசுரிமையை நாடு என்றும் கூழென்றும் வழங்குதலையும் ஈண்டைக்கு நினைத்துக்கொள்க. நாடன் என்பது அரசன் பெயர். இவற்றாலித் தமிழ்வேந்தர் செல்வம் மாத்ருக தனம் ஆகாது பைதிர தனமாகிய தாயம் என்று நன்கு தெளிந்து கொள்ளலாம். இப் பைதிரம் பகையரசராற் கொடுக்கப்பட்டு அரசர் பெருங்குடி சீர் குலைந்தபோது அக்குடிக்கட் **பிறந்த**

கோமகன் அத்துளங்கு குடி திருத்தி ஆண் கடனிறுத்த செய்தியை இப்பதிற்றுப் பத்தும் அகப்பாட்டுங் கூறுதலானும் இக்கருத்து வலியுறுதல் காண்க. இதனை,

"மூனை, பனிப்பப் பிறந்து பல்புகழ் வளர்ந்து
..................................................
துளங்குகுடி திருத்திய வளம்படு வென்றிக்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்

(பதிற்றுப் பத்து. நான்காம் பத்துப் பதிகம்)

எனவும்,

" துளங்குகுடி விழுத்திணை திருத்தி முரசுகொண்
டாண்கட னிறுத்தநின் பூண்கிளர் வியன்மார்பு "

(பதிற். 31)

எனவும்,

" துளங்கு குடி திருத்திய வலம்படு வென்றியும் "

(ஷை 37)

எனவும்,

" வலம்படு கொற்றந் தந்த வாய்வாட்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்
இழந்த நாடு தந்தன்ன வளம்பெரிது பெறினும் "

(அகப்பாட்டு. 199)

எனவும் வருவனவற்றானுணர்ந்து கொள்க. இம் மேற்கோள்களாற் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலென்பான் இச்சேரர் குடியிற் பிறந்து தான் பிறத்தற்கு முன்னே இழந்த நாட்டை வென்றுகொண்டு, முன்னே துளங்கிய தன் பைதிரத்தைத் திருத்தி, ஒரு குடியிற் பிறந்த ஆண் மகன் செய்யவேண்டிய கடனைத் தான் தீர்த்து விளங்கினுன் என்று விளங்கக் கிடத்தல் காண்க.

" இடுக்கண்கால் கொன்றிட வீழு மடுத்தூன்று
நல்லா ளிலாத குடி " (குறள். 1030)

என்றார் தேவரும். இச்சேர பரம்பரையரசர் பிறர் குடியிற்பிறந்து இக்குடிக்கு மருகராகப் புகுந்தவராகாது இச்சேரர் குடியிலே

பிறந்தவரே யாவரென்பது, இச் சேரவேந்தனையும் சேரரையும் கூறிய சான்றோர் செய்யுட்களிற் பல்லிடத்தும் "குலத்துதித் தோர்" "குடிப் பிறந்தோர்" "பெருமகன்" "கோமகன்" "இறைமகன்" என வழங்கியன கொண்டு நன்கு தெளியலாம். "சேர குலத்துதித்தோர்" என்பது வஞ்சிக்காண்டக்கட்டுரை. புகார்க் காண்டக் கட்டுரையிற் சோழ குலத் துதித்தோர்" என்று கூறியதனானும் உண்மை தெளியப்படும். ஈண்டுக் குலத்து உதித்தல் குடியிற் பிறத்தலே யன்றிப் புகுவதாகாமை காண்க "மறத்தகை வாய்வாளெங் குடிப் பிறந்தோர்க்கு" என்பது சேரன் செங்குட்டுவன் கூற்று. ஈண்டுச் சேரரெல்லாம் குடிப் பிறந்தோராகக் கூறுதல் காண்க, "மறத்தகை வாய்வாள்" என்ற விசேடணம் ஆண்டலைமை பாராட்டுங் குடிக்கேயியை வதல்லது பெண்டலைமை பாராட்டுங் குடிக்கியையாமை உய்த் துணர்ந்து கொள்க.

"சோழர் குடிக்குரியோ ரொன்பதின்மர்"

(பதிற்று. 5. பதிகம்)

என்புழி எங்ஙனமோ அங்ஙனமே தான் அவரோடொத்த சேரர் குடிக்கும் கொள்ளவேண்டும். வேறுகொள்ளற்கு ஏது இல் லாமை காண்க. பிறர் சேரன் செங்குட்டுவன் சோழற்குப்பிறந்து சேரற்கு மருகனான முறையில் அரசுரிமை யெய்தினன் என்று கொள்ளத் துணிந்தார். இச் செங்குட்டுவன் தன்னோரன்ன பாண்டியற்கு நேர்ந்த துன்பத்தை நினைத்துத் தன் வாயானே,

"மன்பதை காக்கு நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதக வில்லென"

(காட்சிக்காதை. அடி. 103-4)

எனக் கூறியதும்,

"எம்மோரன்ன வேந்தற் குற்ற
செம்மையி னிகந்தசொற் செவிப்புலம் படாமுன்
.............................................
வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது"

(ஷை. 95-9)

எனக் கூறியதும் இவன் மன்பதை காக்கு நன்குடிப் பிறத்தலைத் தெளிவித்தல் காண்க.

' இறைக்குடிப் பிறந்தோர்க் கிழுக்க மின்மை ''

(கட்டுரை. 53)

எனப் பாண்டியர்க்கும் இவ்வாறே குடிப்பிறப்புக் கூறுதல் காண்க. இத்தொடர்ப்பொருள் சேரர்மட்டில் வேறுய்ப் பொருள் படுமென்றற்கு ஓர் குறிப்புமின்மை அறிக. இம்மேற்கோள்கள் மேல்,

'' மறத்தகை நெடுவா ளெங்குடிப் பிறந்தோர்க்குச்
சிறப்பொடு வரூஉஞ் செய்கையோ வன்று ''

(காட்சி. 124-25)

என்று இவனே கூறியதனேடு இயைந்து உண்மை விளக்குதல் காண்க. இவற்றிற்கியையவே,

'' செஞ்சடை வானவ னருளினில் விளங்க
வஞ்சித்தோன்றிய வானவ கேளாய் ''

(கால்கோட் காதை. 98-9)

என்றவிடத்து இவன் வானவவென்று விளிக்கப்படுதல் காணலாம். இதனுல் வானவராகிய சேரர் குடியில் அவ்வானவர் குடி அரசு செலுத்தும் வஞ்சிமாநகர்க்கண்ணே சேரன் செங்குட்டுவன் பிறந்த பிறப்பால் வானவனுதல் நன்குணரலாகும். இதனுன்றே இளங்கோ வடிகள்,

'' வானவர் தோன்றல் வாய்வாட் கோதை '' (காட்சி. 3)

எனவும்,

'' வாடா வஞ்சி வானவர் பெருந்தகை ''

(நீர்ப்படை. 113)

எனவும், கூறினுரென வுணர்க. ஈண்டு வானவர் தோன்றல் என்பது வானவர் குடியிற் றேன்றுதலுடையவன் என்று பொருள்படுதல் காண்க. இது வஞ்சித்தோன்றிய வானவ என்ற விளியோடு செவ்வனம் இயைந்து கருத்தொத்தல் காண்க. இக்கருத்தானன்றே இச்செங்குட்டுவனைப்பல்லிடத்தும்,

"வஞ்சிமுற்றத் திறைமகன் செவ்வி யாங்கணும் பெறாது
(காட்சி. 34-5)

எனவும்,

"அரிமானேந்திய
முறைமுதற் கட்டி லிறைமக னேற"
(கால்கோள். 1-2)

எனவும்,

"கோமகன் கொற்றங் குறைவின் றோங்கி"
(வரந்தரு. 6)

எனவும்,

"கோமக னருதலும் குறையாக் கேள்வி
மாடல னெழுந்து" (நடுகல். 111)

எனவும்,

"கோயி லிருக்கைக் கோமகனேறி" (நீர்ப்படை. 157)
எனவும் வருவனவற்றில் இறைமகன் கோமகன் எனக்கூறி அவன் இராசபுத்திரனாதல் காட்டினார். அடிகள்,

"கோவலன் றீதிலன் கோமகன் பிழைத்தான்"
(நீர்ப்படை. 75)

என்புழிப் பாண்டியனைக் கூறிக்காட்டுதலாற் பாண்டியன் இராசபுத்திரனாதல் போலவே சேரனுமாதல் அவர் கருதினாரென்ப தெளிதிலறியத்தகும்.

"இதுகுறை யென்றன னிறைமகன் றனென்"
(மணிமேகலை 18, 172)

எனச் சோழன் மகன் கூறப்படுதல் காண்க. சிந்தாமணியுட் பலவிடத்தும் சீவகனைக் கோமகன் என்று திருத்தக்கதேவர் வழங்கலும் ஈண்டைக்கேற்ப நோக்கி உண்மையுணர்க. கோமகன்-

இராசபுத்திரன்; இறைமகன் - இராசபுத்திரன் எ-று. சங்கர சோழனுலாவிற்,

"கோமகன், வஞ்சிக்கு மோதை மதோதைக்கும்"

என வந்தது. மணிமேகலையுட் கோமகன் என்பது சோழற்கும் (பாத்திரம் பெற்ற காதை. 48) புத்தருக்கும் (ஷை., 126) வழங்குதல் காணலாம். சோழனும் புத்தரும் இராச புத்திரராதல் தெளிக. இறையென்பது வேந்தற்காதல்,

"ஆரமர் கடக்கும் வேலு மவனிறை
மாவள் ளீகைக் கோதையும்" (புறம். 172)

என்புழி அவன் வேந்தனாகிய கோதையும் என வருதலானறிக. இதனால் இறை மகன் என்பது வேந்தன் மகன் எனப் பொருள் படுதல்தெரியலாம். சேரன்,கோ எனப்படுதல் பதிற்றுப்பத்துள்,

"போர்க்களத் தாடுங் கோவே" (56)

என்பது முதலாக வருதலான் அறிக. இதற்கிணங்கவே செங்குட்டுவன் திருத்தாய் கோமகள் எனப்படுதல் காண்க, இவங் கோவடிகள் சேரன் படை முதலியாகிய வில்லவன் கோதை வாயில் வைத்து,

"கங்கைப் பேர்யாற்றுக் கடும்புன னீத்த
மெங்கோ மகளை யாட்டிய வந்நாள்"

எனக் காட்சிக் காதையிற் (160, 61) கூறினர். அரும்பதவுரைகாரர் ஈண்டு "எங்கோ மகள்" என்றது செங்குட்டுவன் மாதாவை, அவளை இவன் கொண்டு போய்த் தீர்த்த மாட்டின தொருகதை" என்றுரை கூறிக்காட்டினர். இம்மேற்கோளில் "எங்கோ மகள்" என்று சேரன் படைமுதலி வழங்கலான் அவன் குறிப்பொடு படுத்துப் பொருள் கொள்வதன்றி வேறு கூறல் பொருந்தாது. கோமகள் என்பது கோவிற்குப் புதல்வி எனவும் கோவிற்கு மனைவியாகிய கோப்பெண்டு எனவும் பொருள்படும். கோவாகிய மகள் எனக் கூறுதற் கியையாமை காண்க. பிறர் (சேரர்க்கு மருமக்கட்டாயங் கூறினர்) கருத்துப் படி நோக்கின் கோப்பெண்டு என்றுதான் பொருள் கொள்ள

வேண்டும். அவன் "ஞாயிற்றுச் சோழன் மகளீன்ற மைந்தன் செங்குட்டுவன்" என்னும்வாழ்த்துக் காதை யடிகட்குச்சூரிய வங்கிசத்துச் சோழனும் அவன் மனைவியும் ஈன்ற மைந்தனென்று பொருள் கொண்டாராதலான் சேரன் படைமுதலியாகிய வில்லவன் கோதை எங்கோ என்றது சோழனை என்று கருதவேண்டிய தாகும். அவ்வாறு தன் கோவாகிய சேரன் எதிர்நின்று சோழனை எங்கோ என்று ஒரு நாகரீகப் படை முதலி கூறுவானோ என்று அறிஞரே வினவியறிக. செங்குட்டுவன் தந்தையை 'எங்கோ' என்று கருதிக் கூறினையின் அவன் செங்குட்டுவற்குத் தந்தை யும் கோவு மாதலாற் பொருந்தும். வில்லவன் கோதையாகிய படைமுதலி செங்குட்டுவன் தந்தை காலந் தொட்டுப் படை முதன்மை படைத்தவனுதல் பற்றிச் செங்குட்டுவன் தந்தையை "எங்கோ" என்றனெனினுமமையும்.

'செங்கோல் வளைய வுயிர்வாழார் பாண்டியரென்
றேங்கோ முறைநா வியம்ப" (சிலப். வாழ்த்து)

என்புழி வஞ்சி மகளிர் தஞ்சேரனையே எங்கோ என்று கூறுத லானிதனுண்மை இனிதுணரப்படும். இனிக் கோமகன் என்பது "ஞாயிற்றுச் சோழன் மகளீன்ற மைந்தன் செங்குட்டுவன்" (வாழ்த்து) என்பது பற்றிச் சோழன் பயந்த மகள் எனச் செங் குட்டுவன் மாதாவைக் கூறலாகுமெனினும் எங்கோ பயந்த மக ளென்று சேரன் படைமுதலி கூறலாகாமை யுணர்க. எங்கோ செங்குட்டுவனேயாயின் எங்கோத்தாய் என்பதே உரிய வழக் காகுமென்க.

"சிறிய கோத்தாயுங் கொடுமை யிழைப்ப"
என்பர் கம்ப நாடர்.

மற்றுக் கோமகள் என வாழ்த்துக்காதை உரைப்பாட்டு மடையுள் "கோமகள் தன் கோயில் புக்கு" என்பதனுல் அடிகள் கண்ணகியை வழங்கினரெனின் வாழ்த்துக்காதைக்கண் கண்ணகியை "வானவனெங்கோ மகளென்றாள்" எனவும் "தென்னவன் தீதிலன் தேவர்கோன் றன்கோயில், நல்விருந் தாயினு னவன் றன்மகள்" எனவும் கூறிச் செல்லுதலான் அப்பெயரியைபுடைத்தாதல் காண்க. இத்துணையுங் கூறிய

வாற்ருன் ' எங்கோ மகள் ' என வில்லவன் கோதை வழங்கியது எங்கோப் பெண்டு என்னும் பொருளினது என்பதாதல் தெரியலாம். கோமகள் என்பது கோவினின் றுண்டாகிய மகளும் கோவின்கட் புக்க மகளும் ஆம் என்றுணர்க. ஈண்டுக் கோமகள் என்றதனைக் " கடற்காவிரி " (பட்டினப்பாலை. 6) என்புழிப் போலக்கொள்வது பொருந்தும். பெருங்கதையுட் கொங்கு வேளிரும்,

" கையது வீழினுங் கணவ னல்லது
தெய்வ மறியாத் தேர்ந்துணர் காட்சிப்
படிவக் கற்பிற் பலகோ மகளிருள் "

(உஞ்சைக்காண்டம். 36. 256-8)

என இராச பத்தினியரைக் கோமகளிர் என்று வழங்கினர். அரசர் மனைவியைக் கோப்பெண்டு என்பது,

" மாக்கோதை தன் பெருங்கோப் பெண்டு "

(புறம். 245 கொளு.)

" பெருங்கோப் பெண்டும் " (சிலப். காட்சி. 86)

எனவருதலால் உணர்க. சிந்தாமணியுள் " மாமன் மகள் " என்பது மாமன் மனைவிக்கு வந்தது. கிணைவன் மனைவியைக் கிணைமகளெனச் சிறுபாணாற்றுப்படையுங் (136) கூறிற்று. புறப்பாட்டில் (78) " அவர், மாணிழை மகளிர் " என அவர் மனைவியரைக் கூறினர் மருமக்கட்டாயத்துக் கோப்பயந்த மகள் அரசியாகாமையும் அவனுடன் பிறந்தவளே அரசியாதலும் வழக்காதலால் அரசனைப் பயந்தவளைக் கோமகள் என்று வழங்கற்கே இடனில்லாமை ஆராய்ந்துகொள்க. செங்குட்டுவன் தாய் இராச பத்தினியேயாதல் நன்குணர்ந்து கொள்க. இவளை " ஞாயிற்றுச் சோழன் மகள் " (வாழ்த்து) எனக் கூறுதலாலிவள் சோழ வேந்தன் பயந்தமகளு மாதலுணர்க. இது அரசுகட்டிலிற்றுஞ்சிய பாண்டியன் நெடுஞ்செழியன் பத்தினியைக் " குலமுதற்றேவி " (கொலைக் களக்காதை 136) எனவும் " கோப் பெருந்தேவி " (ஷெ. 139) எனவும் கூறுதல் போலக்கொள்ளலாம் ; குலமுதற்றேவி என்பதற்கு அடியார்க்கு நல்லார் " குலப்பிறப்புடைய

பெருந்தேவி" எனப் பொருளுரைத்தார். குலமுதல்—குலப் பிறப்பு. இது பிறந்த குலச்சிறப்புணர்த்தியதாகும், கோப்பெருந் தேவி என்பது புக்ககுலச் சிறப்புணர்த்தியதாம். இக்கருத்தா னன்றே "ஞாயிற்றுச் சோழன் மகள் உலகாண்ட சேரலாதற்கு ஈன்றமைந்தன் செங்குட்டுவன்" (வாழ்த்து) எனச் செங்குட்டு வன் தந்தை தாயார் சிறப்புத் தோன்ற அடிகள் கூறினாரென்க. அவர் கூறியவாறு, "உலகாண்ட சேரலாதற்குத் திகழொளி ஞாயிற்றுச் சோழன் மகளீன்றமைந்தன்-செங்குட்டுவன்" (வாழ்த்து) என்பதாம்.

இச் சிலப்பதிகாரத்தும், பதிற்றுப்பத்துப் பதிகங்களில்சேர வேந்தர் பிறப்பு வரலாறு கூறிய பகுதிகளிலும், இளங்கோவடி களும் பதிற்றுப்பத்துத் தொகுத்த நல்லாசிரியரும் கூறிய பதிகச் சொற்றொடர் வைப்பு முறை நல்லிசைப் புலவர் ஆண்ட தொன் மைத் தமிழ் நெறியேயாகும். இவ்வுண்மையைச் சேரன் செங் குட்டுவற்குக் கண்ணகி வரலாறு கூறியவரும் அச்சேரவேந் தனோடும் அவன் திருத்தம்பியாரிளங்கோவடிகளோடும் பல்காற் பயின்று வதிந்தவரும் அடிகள் பாடிய சிலப்பதிகாரத்தைக்கேட் டவரும் தமிழ் முழுதுணர்ந்தவருமாகிய மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் தாம் பாடிய மணிமேகலை நூலுள், தவத்திறம் பூண்டு தருமங் கேட்ட காதைக்கண்,

"வென்வேற் கிள்ளிக்கு நாகநா டாள்வோன்
தன்மகள் பீலி வளைதான் பயந்த
புனிற்றிளங் குழவி" (மணி. 29. 3—5)

எனக்கூறிய தொடர் நோக்கி இனிது தெளிக. இத்தொடர் முறைக்கும் இளங்கோவடிகள் வாழ்த்துக்காதை உரைப்பாட்டு மடையிற் சேரலாதற்கு ஞாயிற்றுச் சோழன் மகளீன்றமைந்தன் எனச் செங்குட்டுவன் பிறப்புணர்த்திய தொடர் முறைக்கும் எவ்வித வேற்றுமையுமில்லாமை கண்கூடாகக் கண்டு தெளிக. இம்மணிமேகலைத் தொடரை மட்டுங்கொண்டு "வென்வேற்கிள் ளியின் பொருட்டு நாகநாடாள்வோன் றன்னுடைய மனைவி (மகள்) தான் பெற்ற புனிறு தீராத இளமையுடைய மருகக் குழவி" என ஒருவர் பொருள் கூறின் அது,

"நாக நாடு நடுக்கின் றாள்பவன்
வாகை வேலோன் வளைவணன் றேவி
வாச மயிலை வயிற்றுட் டோன்றிய
பீலிவளை யென்போள் பிறந்த வந்நாள்
இரவிகுலத் தொருவ னிணைமுலை தோயக்
கருவொடு வருமெனக் கணியெடுத் துரைத்தனன்"

(மணி 24 அடி 54-59)

(இரவிகுலத் தொருவன் வென்வேற்கிள்ளியாதல் காண்க) எனவும்,

"நாக நன்னா டாள்வோன் றன்மகள்
பீலிவளை யென்பாள் பெண்டிரின் மிக்கோள்
பனிப்பகை வானவன் வழியிற் றோன்றிய
புனிற்றிளங் குழவி" (மணி. 25. அடி. 178-181)

எனவும் மேற்கூறியவற்றோடு மலைந்து உண்மை வரலாறு கெட்டொழிதல் கண்டு கொள்க. பீலிவளை யென்பாள் நாக நாடாள்வோன் மணந்த மகளாகாது பயந்த மகளாதல் இம்மேற்கோள்களிற்றெளியக் கிடத்தல் காண்க. வழக்கினும்,

"உலகாண்ட தயரதற்குக் கேகயன் மகளின் றமைந்தன்
பரதன்"

என்றவழித் தயரதனாகிய மாமனுக்குக் கேகயனும் அவன் மனைவியும் ஈன்ற மகன் மருகப் பரதன் என வேறுபடக் கொள்ளலாகாமை நோக்குக. இங்ஙனம் குவ்வுருபினைத் தந்தை பெயர்க்குக் கொடுத்து இன்னவனுக்கு இன்னவள் ஈன்ற மகன் என்பதே பண்டைத் தமிழ் நெறியென்பது "கடம்பமர் செல்வன் கடிநகர் பேண, மறுமிடற் றண்ணற்கு மாசிலோள் தந்த" என்னும் பரிபாடலையும் (8) அதற்குப் பரிமேலழகர் "மறுமிடற்றண்ணற்கு, மாசிலோள் தந்த கடம்பமர் செல்வன் கடிநகரை வழிபட" என உரைத்தனையும் நோக்கியுணர்க. இப்பரிபாடற்கியையவே சிலப்பதிகாரத்தும் மணிமேகலையுள்ளும் வந்தன நன்குகண்டுகொள்க. பெருங்கதையுள்,

"சேதியர் பெருமகற்கு
அறஞ்சேர் நாவி னவந்திகை திருவயிற்றுத்
. . . . . . . தோன்றிப் பிறந்த நம்பி".

(நரவாணன் 32—35)

"ஒருமகற் கொருத்திகண், மேவரத்தோன்றிய மக்கள்"
(ஷி. வயாக் கேட்டது 12-13)

எனவும்,

"மதிமரு ணெடுங்குடை மறமாச் சேனற்குப்
பதினாறுயிரம் பட்ட மகளிருண்
முதற்பெருந் தேவி திருநா ளீன்ற
மதுக்கமழ் கோதை வாசவதத்தை" (573. 28-31)

எனவும்,

"பிரமசுந் தரனெனும் பெரும்பெயர் முனிவர்க்குப்
பழிப்பில் கற்பிற் பரமசுந் தரியெனும்
விழுத்தகு பத்தினி விரும்பிப் பெற்ற
புத்திரன்" (2. 11. 86-89)

எனவும், சிந்தாமணியுள்,

"கலுழ வேகற்குத் தேவி........தாரணி" (537)
"பாவையைப் பயந்த ஞான்றே" (538)

எனவும் வருவனவற்றால் நன்குதெளிந்து கொள்க. இம்மேற்கோள்களில் மாசிலோள், அவந்திகை, தேவி, பத்தினி முதலியன, நான்கனுருபுள்ள சொல்லோடே இயைந்து பொருள் விளக்குதல் இனிது நோக்குக. நன்னூலில் மயிலைநாதரும்,

தனக்குச் சரியென்ப நல்லாள் தானவற்
கீன்றமைந்தன்" நன்னூல். சூத்திர உரை. 297)

எனமேற்கோள் காட்டினார். மணிமேகலையுள் "இராகுலன்றனக்குப்புக்கேன்" (பீடிகைகண்டு. 46) எனவும் "மனக்கினியாற்கு நீ மகளாயதூஉம்" "(கந்திற்பாவை. 30)எனவும் வருதல்காண்க. இங்குக் காட்டிய பல்லிடத்தும் மணமகனுக்கு மணமகள் என இயைந்து வருதலான் உண்மையுணர்க. "நினக்கிவன் மகனாத் தோன்றியதூஉம்"(மணிமே,கந்திற்) எனவும் "பாடினிக்குப்பாண் மகனும்மே" (புறம். 11) எனவும் மணமகட்கு மணவாளனென்ற பொருளில் வருதல் கண்டுகொள்க. இங்ஙனம் வரலாறு தெளியப் பட்ட பல மேற்கோட்டமிழ்த்தொடர் நெறிமுறையைக்கொண்டு

தானே வரலாறு தெளியப்படாத ஒத்த தொடர்க்குப்பொருள் தேறவேண்டும். நூல்களுள் வரலாற்று முறைகளை நுனித்து நோக்காது ஒரு தொடரிற் கூறிய மகள் என்ற சொல்லொன்றே கொண்டு அச்சொல் மனைவிக்குஞ் சிறுபான்மை வழங்கியதையே துணிந்து "சேரலாதற்கு ஞாயிற்றுச் சோழன் மகளீன்றமைந்தன்" என்புழிச் சோழன் மகள்—சோழன் மனைவி என்று உரை கூறி அதன்மேல் ஒரு கொள்கையைச் சிறப்பியல்பாக ஒரு பேரரசர் குடிக்குத்தாபிக்கப் புகுவதன்கண் உண்டாம் இடர்ப்பாடுகள் மிகப்பலவாகுமென்க. *

பெருங்கதையுள் (2—7), "மறமாச்சேனன் பாவையருள்ளும்" என்ற தொடரை மட்டும் ஒருவர் கொண்டு நோக்கின், "இவன்" பாவையரென்றது மாசேனன் பயந்த மகளிரையோ, மணந்த மகளிரையோ என ஐயுற வேண்டியதேயாகும். அவ்வையத்தைப்பின் "மறமாச்சேனன் பாவையருள்ளும் வாசவதத்தை" என்ற தொடர் நீக்கி இப்பாவையர் அவன் பயந்த மகளிர் எனத்துணிய நிற்பது கண்டுகொள்க. இத்துணிபு கொண்டு "மறமாச்சேனன், ஒண்ணுதற்பாவை"(பெருங். பக்கம். 356). என்புழி ஒண்ணுதற் பாவை பயந்த மகள் என்று உரை கூறப்புகின் அது "ஒண்ணுதற் பாவை யொரு பெருந்தேவி" என்றதனோடு மலைந்து உண்மை வரலாறு கெடுதல் நன்கு நோக்கிக்கொள்க. சிலப்பதிகாரத்திலும் சேரர் பதிற்றுப்பத்துப் பதிகங்களிலும் வரலாறு குறித்த தொடர்கட்கு வரலாறு தெளியப்பட்ட ஒத்த நூற்றொடர் நெறிகொண்டும் வரலாற்றை அவர் நூற்பகுதிகளிற்றெளிந்தும் உண்மைப்பொருள் காண்பதே உரை வல்லவர் கொள்கையா மென்றுணர்க. இந்நெறிமுறை பிழையாது தொன்மைப் பன்னூலும் நன்குணர்ந்த அரும்பதவுரையாசிரியரும், அடியார்க்கு நல்லாரும் "ஞாயிற்றுச் சோழனைச்" சேர

---

* இது முதலாக வரும் பல பண்டைத் தமிழ் நூல் வழக்குகளை நன்கறிய நேராமையால் பிறர் "தமிழிலக்கிய முழுதும் தந்தைக்கு மகன் முறை சுட்டுமிடந்தோறும் இன்னான் சேய் இன்னான் என்ற வாய்ப்பாடே எங்கும் வரும்போது, இயல்புக்கு மாறாகப் பதிற்றுப்பத்துப் பதிகங்கள் மட்டும் வேறோர் தனி முறையாளக் காரணம் வேண்டுமெனக் கண்டேன்" என்பது முதலாகப் பல கூறினர்.

லாதன் மனைவிக்குத் தந்தையாகவே கருதி உரை நடாத்தினா ரென்பது, "அவருள் முந்தியவர் சோழன் மகண்மைந்தனாகிய செங்குட்டுவன்" என விளக்கியதனானும், பிந்தியவர் "சோழன் றன்மக ணற்சோணை யீன்ற மக்களிருவருண் முன்னோன்" எனவும், வேந்தனிருந்துழிச்சார்ந்த நிமித்திகன், "பொன்றிகழுலகஞ் சேர்தி நீ யென்று, சேரலற்குரைத்தவன் மைந்தரை நோக்கி" எனவும் கூறியதனானும் விளங்கக் கிடத்தல் காண்க. அரும்பதவுரைகாரர் "நுந்தைதாணிழலிருந்தோய்" என்னும் வரந்தருகாதைத் தொடரில் "நுந்தையாகிய சேரலாதனிடத்தே நீயிருக்க" எனவுரைத்ததனையும் அதற்கியையவே அடியார்க்கு நல்லார் "சேரலற் குரைத்து அவன் மைந்தரை நோக்கி" என்றதனையும் நோக்குமிடத்து, அவ்விருரையாளரும் சோழனைச் செங்குட்டுவற்குத் தந்தையாக்காது சேரலாதனையே தந்தையாகக் கூறியது புலனாம். இவருரைக் கியையவே மூலமும் "சேரலாதற்குச் சோழன் மகளீன்றமைந்தன்" என, மைந்தன் என்னும் முறைப்பெயர் தந்தையையுந் தாயையும் அவாவுதலான் யார்க்கு மைந்தன் என்பதற்கு விடையாகச் சேரலாதற்கு மைந்தன் எனவும், எத்தாயீன்ற மைந்தன் என்பதற்கு விடையாகச் சோழன் மகளீன்றமைந்தன் எனவும், ஓரிடர்ப்பாடுமின்றிச்சொற்களுக்கு நேர்பொருளே கொள்ள நிற்றல் காண்க. பிறர்க்குஞ் சேரலாதற்கு மைந்தனெனத்தானே இயையவேண்டும். மைந்தனென்னு முறைப்பெயர் கொண்டு சேரலாதனை நேரே தந்தையாக்க இச் சொற்றொடரிடந்தருமா, மைந்தன் என்பதை மருகனென்று நினைத்துக்கொண்டு சொல்லொடு பொருந்தாத அந்நினைப்பிற் கியைக்கவேண்டிச் சேரலாதனை மாமனாக்க இடந்தருமா என்று அறிஞரே வினாவி ஆராய்ந்து துணிக. இளங்கோவடிகள் வரந்தருகாதையுள் "நுந்தை தாணிழலிருந்தோய்" என்று கூறிய விடத்து 'நுந்தை' என்னுஞ் சொல் உள்ளபடியே நுந்தந்தை என்று பொருள் கொள்ள நேரே இடந்தருவதா; சொற்கு இல்லாததும் மைந்தன் என்னும் முறைப்பெயர்க்கும் வரலாற்றுக்கும் பொருந்தாததுமாகிய "நும்மாமன்" என்ற பொருட்கு இடந்தருவதா என்றும் வினாவியறிக. மைந்தன் என்னும் பெயர் ஈன்றதாயையுந் தந்தையையும் அவாவுதலின்றி யமையாததன்றி மாமனையே அங்ஙனம்வேண்டுமா? சேரலாதற்கு மைந்தன் என்பதற்குச் சேரலாதற்கு மருகன் என்று பொருள் கொள்ளுத லெவ்வாற்றானு மியையாததேயாகும். இனி "சேர

லாதன் பொருட்டுச்சோழனும் அவன் மகளெனப்பட்ட மனேவியு மின்றமைந்தன்" என்றுபொருள் கொண்டு கூறலாமெனின்அங்ஙனங் கூறுமிடத்தும் சேரலாதன் மாமனுதற்கும், மைந்தன் மருகனுதற்கும், ஈண்டு மகளெனப்பட்டாள் சேரலாதன் தங்கையாதற்கும் ஒரு குறிப்புமில்லாமை நோக்கிக்கொள்க. "வேந்தன் பொருட்டுத் தந்தையுந் தாயும் தந்தமைந்தன்" எனச் சுனச்சேபன் கதையிலொருவன் வழங்கின் ஆண்டு மைந்தனும் வேந்தனும் மருகனும் மாமனும் ஆகாதவாறு போல ஈண்டுங்கொள்க.

இனிப் பதிற்றுப்பத்துள் "மாந்தரன் மருக" (90), "சேரலன் மருக" (63) என வருதல் நோக்கிக் கோமகன், இறைமகன் பெருமகன் என்ற வழக்கல்லது வேறு மருகன் என்றியாண்டுங் கூறப்படாத செங்குட்டுவனேச்சேரலாதனுகிய மாமனுக்குமருமகனுகி அரசுரிமை யெய்தினனுகத் துணியின் கிள்ளிவளவனேச் "செம்பியர் மருகன்" (புறம். 228) எனக் கூறியதுகொண்டு அச்சோழனும் மாமனுக்கு மருகனுயரசுரிமை யெய்தினுன் என்று ஒருவர் துணிவதே போலுமென்க. அங்ஙனந் துணிந்தாலென்னே யெனின் அது சோழர் குடித் தாயமுறையொடு மலேந்து வரலாறு கெடுமென்க. உருவப்பஃறேரிளஞ்சேட்சென்னி முடியுடைப் பேரரசனுகவும்அவன்புதல்வன்கரிகாற்பெருவளத்தான் அவற்குப்பின்னேமுடியுடைப்பேரரசனுகவும்கூறிய தொன்னூல் வரலாறுகள் பிழைத்தல் காண்க. இவ்வுண்மையைப் பொருநராற்றுப் படையுள்,

"உருவப் பஃறே ரிளேயோன் சிறுவன்
..................................................
தாய்வயிற் றிருந்து தாயமெய்திப்
..................................................
பிறந்துதவழ் கற்றதற் ருெட்டுச் சிறந்தநன்
ளுடுசெகிற் கொண்டு நாடொறும் வளர்ப்ப
..................................................
இருபெரு வேந்தரு மொருகளத் தவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்முட்
கண்ணூர் கண்ணிக் கரிகால் வளவன்" (130-148)

என வருதலான் அறிக. கோப்பெருஞ் சோழன் மக்கண் மேற் சென்றுழிப் புல்லாற்றூர் எயிற்றியனார் பாடிய "மண்டமரட்ட" என்னும் புறப்பாட்டுள் (213)

"பரந்துபடு நல்லிசை யெய்தி மற்றுநீ
யுயர்ந்தோ ருலக மெய்திப் பின்னு
மொழித்த தாய மவர்க்குறித் தன்றே"

என்பதனாற் றந்தையாகிய கோப்பெருஞ் சோழன்றாயம் அவன் உயர்ந்தோருலகமெய்தியபின் அவன்மக்கட்கு அவன் அரசுரிமை உரித்து என்று கூறுதலானும் அவர் குடித்தாயமும் மக்கட்டாய மே யாதலுணர்க. பாண்டியனை மதுரைக் காஞ்சியுள்,

"உலக மாண்ட வுயர்ந்தோர் மருக" (23)

என்றது கொண்டு அப்பாண்டியர் குடிக்கும் மக்கட்டாய முறை யின் வேறாக ஒன்று கூறலாகாமையுந் தேர்ந்துகொள்க. சிலப் பதிகார நீர்ப்படைக் காதைக்கண்,

"மன்பதை காக்கு முறைமுதற் கட்டிலின்
.......................................
மாலைத் திங்கள் வழியோ னேறினன்"

என வருதலானும், மேலே காட்டிய "வழிவழிச் சிறக்க நின் வலம்படு கொற்றம்" என்று பாண்டியற்கு வழங்கிய மதுரைக் காஞ்சியடியானும் இதனுண்மை யாராய்ந்துகொள்க. பாண்டி யன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனை வடமவண் ணக்கன் பேரிசாத்தனார் பாடிய,

"அருவி தாழ்ந்த பெருவரை" (198)

என்னும் புறப்பாட்டில்,

"தண்டமிழ் வரைப்பகங் கொண்டி யாகப்
பணித்துக்கூட் டுண்ணுந் தணிப்பருங் கடுந்திற
னின்னோ ரன்ன நின்புதல்வ ரென்று
மொன்னார் வாட வருங்கலந் தந்துநும்
பொன்னுடை நெடுநகர் நிறைய வைத்தநின்

முன்னோர் போல்கிலர் பெருங்கண் ணோட்டம்
........................................
இவர்பெறும் புதல்வர்க் காண்டொறு நீயும்
புகன்ற செல்வமொடு புகழினிது விளங்கி
நீடுவாழிய நெடுந்தகை"

என வருவதன்கண் நின் புதல்வராகிய இவர் கண்ணோட்டம் நின் முன்னோர் போல்க எனவும் "இவர் பெறும் புதல்வர்க் காண்டொரு நீயும் புகழினிது விளங்கி நீடுவாழிய" எனவும், உண்மையானும், 58-ஆம் புறப்பாட்டில் வெள்ளியம் பலத்துத் துஞ்சிய பெருவழுதியைக் காரிக்கண்ணனார்,

"இவனே, முழுமுத லொரீஇந்த கோளி யாலத்துக்
கொழுநிழ னெடுஞ்சினை வீழ்பொறுத் தாங்குத்
தொல்லோர் மாய்ந்தெனத் துளங்கல் செல்லாது
நல்லிசை முதுகுடி நடுக்கறத் தழீஇ
........................................
செருமான் பஞ்சவ ரேறே"

என ஆலமரத்து வீழினைப் பாண்டியற்குவமை கூறுதலானும்இப் பாண்டியர் தந்தை மகன் பேரர் வழியாகவரும் அரசுரிமையுடைய ரென்றெளிதிலறியப்படும். தந்தைக்கு மகற்கும் ஆலமரத்தை யும் அதன்கட்டோன்றிய வீழினையுமுவமை கூறுதல்,

"தூங்குசிறை வாவலுறை தொன்மரங்க ளென்ன
வோங்குகுல மையவத னுட்பிறந்த வீரர்
தாங்கல் கடனாகும்"

என்னுஞ் சிந்தாமணியானும்,

"சிதலை தினப்பட்ட வால மரத்தை
மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்குக்
குதலைமை தந்தைகட் டோன்றிற்றான் பெற்ற
புதல்வன் மறைப்பக் கெடும்"

என்னும் நாலடியானு முணர்க,

பாண்டியர்க்கும் சேரர்க்கும்தோன்னிலக்கிழமை ஒருபடித் தென்பது சோழனலங் கிள்ளியைக் கோவூர் கிழார்பாடிய,

" கடும்பினடுகல நிறையாக " (32)

என்னும் புறப்பாட்டில் "பூவாவஞ்சியுந் தருகுவன்" "மாட மதுரையுந் தருகுவன்" என்றும் " இத்தண்பணை நாடு தோன்ஸிலக்கிழமை சுட்டின் குயக்குலச் சிறுர் தேர்க்கால்வைத்த பசுமட் குரூஉத் திரள்போல அவன் கருதிய முடிபுடைத்து" என்று தெளியும்படி கூறலானுணரலாகும். வஞ்சியையும் மதுரையையுமுடைய தமிழ்நாட்டின் தொன்னிலக்கிழமை சேரர்க்கும்பாண்டியர்க்குமுரியதாகவும் சோழன் கருதிய முடிபுடைத்தென்றுஇவன் வென்றி கூறினரெனவறிக. தொன்று தொட்டுவரு நிலக்கிழமை இருவர்க்கும் ஒருபடித்தாதலின் வேறுவேறு கூறுராயினர். பாண்டியர்க்கு அரசு துறைபோகிய புதல்வர்ப் பேறும் (புறம். 198) சேரர்க்கு அவர் வழிவாழ அவர் கற்புடைமனைவியர்கருவில் அரசு துறைபோகிய புதல்வர்ப் பேறும் (பதி .74) நூல்கள்விளக்கிக் கூறலான் இவர்க்குத் தொன்னிலக்கிழமை ஒத்த படித்தாதல் எளிதிலறியலாம். களங்காய்க் கண்ணிநார்முடிச் சேரலைப் பதிற்றுப்பத்து நான்காம் பத்துள்,

" துளங்குகுடி விழுத்திணை திருத்தி முரசுகொண்டு
ஆண்கட னிறுத்தநின் பூண்கிளர் வியன்மார்பு "
(பதிற். 31)

எனக் கூறுதலானும் இவ்வுண்மை யுணரலாம். பதிற்றுப் பத்துரைகாரரும் "முனை பனிப்பப் பிறந்து" என்ற பதிகத் தொடர்ப்பொருளையே யுட்கொண்டு "முரசு கொண்டென்றது பயன் கொள்வாரின்மையிற் பண்ணழிந்து கிடந்த பழமுரசினைத் தான் தோன்றி அதன் அழிவு தீர்த்து அதன் பயன்கொண்டு" என்றார். சேரவரசரும் சோழவரசரும் பாண்டியரை யொப்பத் தந்தையர் உரிமையையே பெற்று வாழ்ந்தவர் என்பது இன்னும் விளக்கக் காட்டுவல். தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனை இடைக்குன்றூர்கிழார் பாடிய " வணங்கு தொடைப் பொலிந்த " என்னும் புறப்பாட்டில்,

" எள்ளி வந்த வம்ப மள்ளர்
புல்லென் கண்ணர் புறத்திற் பெயர
வீண்டவ ரடுதலு மொல்லா னண்டவர்
மாணிழை மகளிர் நாணினர் கழியத்

தந்தை தம்மூ ராங்கட்
டெண்கிணை கறங்கச்சென் றாண்டட் டனனே ''
(புறம். 78)

என வருவது காற்றாரறிவர். இதற்குப் பழையவுரைகாரர் '' இகழ்ந்துவந்த நிலையில்லாத வீரர் புறக்கொடுத்த கண்ணராய் நின்றவிடத்து நில்லாது புறத்தேபோக அவரை இப்போர்க் களத்தின் கண்ணே கொன்றிடுதலு முடன்படானாய் அவ்விடத்து அவர் மாட்சிமைப்பட்ட ஆபரணத்தையுடைய மகளிர் நாணினராய் இறந்துபடத் தந்தையருடையவாகிய தங்களூரிடத்துத் தெளிந்த போர்ப் பறையொலிப்பச்சென்று அவ்விடத்தேகொன் றான் '' என்று உரை கூறித் '' தந்தை தம்மூர் என்றதனை ஏவலிளையர் தாய் வயிறுகரிப்ப '' என்றாற் போலக்கொள்க. தந்தை தம்மூர் என்றது தாம் தோற்றிச்செய்த நகரியன்றி உறையூருங் கருவூரும் முதலாகிய ஊர்களை '' என நன்குவிளக்கி னார். பாண்டியன் இருபெரு வேந்தரும் ஐம்பெரு வேளிருமாகிய எழுவருடன் பொருதசெய்தி அகப்பாட்டில் (36)

'' கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழியன்
ஆலங் கானத் தகன்றலை சிவப்பச்
சேரல் செம்பியன் சினங்கெழு திதியன்
போர்வல் யானைப் பொலம்பூ ணெழினி
நாரரி நறவி னெருமை யூரன்
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
இருங்கோ வேண்மா னியறேர்ப் பொருநனென்
றெழுவர் நல்வல மடங்க வொருபகன்
முரசொடு வெண்குடை யகப்படுத் துரைசெலக்
கொன்றுகளம் வேட்ட ஞான்றை ''

என வருமடிகளான் அறியப்படும். மேற்காட்டிய பாடல்களின் கருத்து; இங்ஙனம் ஐம்பெருவேளிர் துணையாகத் தன்னோடு பொருத சேரனையும் சோழனையும் அப்போர்க்களத்தே அவர் நல்வல மடங்கவென்று அவர் துணைப் படையைக்கொன்று களம் வேட்ட பின்னரும், அவர் தந்தையர் தலை நகர்களிலே புக்க அவரையும் அவ்வூர்களிலே அவர் மகளிர் நாணினர்கழிய அட்ட னன் என்றவாறாம். பாண்டியனொடு பொருத '' சேரல் செம்பி யன் '' எனப்பட்ட இருபெரு வேந்தர்க்கும் '' அவர் தந்தையர்

ஊர்'' என்று புதல்வர்க்கும் கருவூரையும் உறையூரையும்உரிமை யாக்குதலான் தந்தையர்க்குரியதுபுதல்வர்க்குறுவதென உரையா சிரியரும் நச்சினார்க்கினியரும் கூறிய தாயமே இச்சேரன் முதலி யோர்க்குத் தொன்றுதொட்டு வழக்காதல் நன்குணரலாம். 'வென்று கலந்தரீஇயர் (53) என்னும் பதிற்றுப்பத்துள் "நின் னிற்றந்த மன்னெயிலல்லது, முன்னும் பின்னுநின் முன்னோ ரோம்பிய, எயின்முகப் படுத்தல்யாவது''என்புழிச்சேரவேந்தன் அப்போதைக்கப்போது படைத்துக்கொண்ட எயில் சூழ் ஊரும் என்றும், அவன் முன்னோரோம்பிய எயில் சூழ் ஊரும் என்றும் வேறு வேறு கூறுதல் காண்க. '' தந்தை தம்மூர் '' என்றதும் '' நின்முன்னோரோம்பிய வெயில் '' என்றதும் ஒன்றுதல் நன்கு நோக்கிக்கொள்க. இதனானும் முன்னோர் தந்தையராதலல்லது மாமன்மாராகார் என்பது காண்க.

'' அவர் தந்தை தம்மூர் '' (புறம். 78)

என்பதற்குப் பழைய வுரைகாரர் கூறியதற் கியையவே, '' சிலையுலாய் நிமிர்ந்து '' என்னும் புறப்பாட்டில் (294) குன்று கெழுநாடுடையனாகிய '' வலிதுஞ்சுதடக்கை வாய்வாட் குட்டு வன் '' என்பான், தான் உண்டாக்கிய '' வெண்குடை '' என்னும் ஊரினனாதலும் அவனுடைய பாடிமிழ் முரசினியறோர்த்தந்தை '' வாடா வஞ்சி'' யென்னும் ஊருடையனாதலும் தெளியப்படுதல் கண்டுகொள்க. ஈண்டுத் தந்தையைப்,

'' பாடிமிழ் முரசினியறோர்த் தந்தை ''

என்றலாற் பேரரசனாதல் தெரியலாம். இவனுக்கு வாடா வஞ்சி யுடைமை கூறுதலான் இவன் சேரனாதல் அறியலாம்.

'' வாடா வஞ்சி வாட்டுநின் பீடுகெழு நோன்றாள் ''
(புறம். 39)

என்புழி வாடா வஞ்சி என்பதற்கு உரைகாரர்.

'' அழியாத கருவூர் ''

எனப் பொருள்கூறியதனானுணர்ந்து கொள்க. குட்டுவன் என் னும் பெயரானும் வலிதுஞ்சுதடக்கை வாய்வாள் எனவும்,

'' வள்ளியனாதல் வையகம் புகழினும் ''

எனவும் வீரமுங் கொடையும் பாராட்டப்படுதலானும் குன்றுகெழு நாடுடைமையானும் இவன் அரசனேயாதல் தெளியலாம்.

"வாய்வாட் குட்டுவன்" (கால்கோள். 246)

என்பது சேரன் செங்குட்டுவற்கு இலங்கோவடிகள் வழங்கிய வழக்காதலுங் காண்க. மற்றுச்சோழியவேனாதி திருக்குட்டுவன் என இவன் பெயர் காணப்படுவதெனிற் கூறுவல்; இவனைப் பாடியவர் கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் என்னும் பெரும்புலவர். இவர் பாடிய சேரவேந்தன்

"குட்டுவன் கோதை" (புறம். 54)

எனப்பெயர் சிறந்தவன். இவரால் பாடப்பட்ட வேறொரு வீரன் சோழிய வேனாதி திருக்கிள்ளி எனப்பெயர் சிறந்தவன்; இதனை 167-ம் புறப்பாட்டான் அறிந்து கொள்க. இதனானிப்புலவர் காலத்துச் சோழிய ஏனாதி யாவான் திருக்கிள்ளி எனப்பட்டவன் என்பது நன்குணரலாம். இது 394-ம் புறப்பாட்டுக் கீழ்க்குறிப்பில் "சோழிய வேனாதி திருக்கிள்ளியைவென்ற அல்லது எறிந்த குட்டுவனை" என்றிருந்தது. திரு என்பதற்குப் பின்னும் குட்டுவன் என்பதற்குமுன்னும் சில சொற்கள் சிதைந்துபோகவெழுதினர் அவற்றைக்குறிக்காது திரு என்பதனைக் குட்டுவன் என்பதனோடு சேர்த்தெழுதியதவறென்று எளிதிலறிந்து கொள்ளலாம். 394-ம் புறப்பாட்டிற்குட்டுவற்குக்கண்ட, "வவிதுஞ்சு தடக்கை" என்ற வீர விசேடணம் 54-ம் புறப்பாட்டிற் குட்டுவன் கோதைக்கும் இப்புலவரே பாடியிருத்தலான் இதனுண்மை வலியுறுதல் காண்க. அன்றியும் 394-ம் புறப்பாட்டில் சோழிய ஏனாதியென்பதற்குச் சிறிதோர் குறிப்பும் மூலத்துட் காணாமையு நினைத்து நோக்குக. இப்புலவராற் பாடப்பட்டவருள் ஒரு சேரனும், ஒரு சோழிய ஏனாதியும் உண்டெனக் கொள்வதல்லது இரண்டு சேரரும் இரண்டு சோழிய ஏனாதியரும் உண்டு எனல் பொருந்தாமை உய்த்துணர்ந்துகொள்க. ஏனாதி படைமுதலிக்குப் பட்டப்பெயர். ஸேநாதி என்பது மருவியதாகும். இவற்றிற் கியையவே சேரமான் வழியினனும் சேரனோடு தாய வழக்கிட்டுப் பொருதவனும் ஆகிய அதியமானும் அவன் மகன் பொகுட்டெழினியும் "அதியர் கோமான்" என நல்லிசைப் புலவரான் வழங்கப்படுதலாற்சேரர் குடியிற்றொந்தி யர் சுரிமை பகற்குறுதல் நன்கறியப்படும்.

இதற்கேற்பவே "நம்பியைச் சாலுந்துணையுங் கழறி" (தகடூர் யாத்திரை) என்று அதியனைச் சேரனுக்குத் தம்பியாகக்கூறுதல் காண்க. (புறத்திரட்டு. 776).
அதியன்,

"ஆர்கலிநறவினதியர் கோமான்" (புறம், 91)

எனப்படுதலும் அவன் மகன் பொகுட்டெழினி,

"மதியார் வெண்குடை யதியர் கோமான்,
கொடும்பூண் எழினி" (புறம். 392)

எனப்படுதலுங் கண்டு இதனுண்மை தெரிக. 96-ம் புறப்பாட்டு அதியன் மகன் பொகுட்டெழினியை ஒளவையார் பாடியது. அதன்கண் "என்னை யிளையோற்கு" என்பதற்குப் பழையவுரைகாரர் "என்னிறைவன் மகன் இளையோனுக்கு என வுரைத்ததனையும் ஈண்டைக் கேற்ப நோக்குக. இவன் முன்னோர் சேர சக்கிரவர்த்திகளே என்பதும், இவன் அச்சேரர் குடியிற்றாயம் பெற்றுமமையானைச் செரு வேட்டனனென்பதும், அத்தாய வழக்கிற்சேரன் மலைநாடு முழுதையும் இவனுக்குக் கொடுப்பவுங் கொள்ளானைப் போர் மலைந்து சேரனாற்கொல்லப்பட்டான் என்பதும் புறப்பாட்டுக்களான் அறிந்தனவாம். இவற்றை,

"அமரர்ப் பேணியு மாவுதி யருத்தியு
மரும்பெறன் மரபிற் கரும்பிவட் டந்து
நீரக விருக்கை யாழி சூட்டிய
தொன்னிலை மரபினின் முன்னோர் போல
வீகையங் கழற்கா லிரும்பனம் புடையற்
பூவார் காவிற் புனிற்றுப்புலா னெடுவே
லெழுபொறி நாட்டத் தெழாஅத் தாயம்
வழுவின் றெய்திய மமையாய் செருவேட்டு" (புறம். 99)

எனவும்,

"நடுகற் பீலி சூட்டி நாரரி
சிறுகலத் துகுப்பவுங் கொள்வன் கொல்லோ
கோடுயர் பிறங்குமலை கெழீஇய
நாடுடன் கொடுப்பவுங் கொள்ளாதோனே" (புறம். 232)

எனவும் வருவன்கண்டு தெளிந்து கொள்க. இவற்றுள் "நீரக விருக்கை ஆழி சூட்டிய தொன்னிலை மரபின் நின் முன்னோர்" (புறம். 99) என்றலால் இவன் முன்னோர் முடியுடைப்பேரரசர் ஆதலும் "பனம் புடையல்" கூறுதலின் அவர் சேர வேந்தராத லும் நன்குணரலாம். "எழுபொறி நாட்டத் தெழாஅத்தாயம்" (புறம். 99) என்பதும் இக்கருத்தையே வலியுறுத்தும். ஏழுவகை அடையாளமிட்ட ஏழுமுடிகளாலாகியதோர் மாலைசேரர்க்கு வழி வழியாகவுண்மை, பதிற்றுப்பத்துள், 14, 16, 40, 45 ஆம் பாடல்க ளானும் சிலப்பதிகாரம் நீர்ப்படைக் காதையானும் அறிந்ததே யாம். 14, 16-ம் பதிற்றுப்பத்துப் பாடல்களால் இவ்வடையாள மாலை இரண்டாம் பத்தில் நெடுஞ் சேரலாதற்குக் கூறல் காண்க" இம்மேற்கோள்கள் வருமாறு ;

"எழுமுடி கெழீஇய திருஞெமரகலத்து"
(பதிற். 14, 16, 40)
"எழுமுடி மார்பி னெய்திய சேரல்" (பதிற். 45)

இதுவே 40-ம் பாடலாற் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரற்குக் கூறப்பட்டது, 45-ம் பாட்டிற் குட்டுவனுக்குக் கூறப் பட்டது. சிலப்பதிகாரத்து,

"எழுமுடி மார்பநீ யேந்திய திகிரி
வழிவழிச் சிறக்க வயவாள் வேந்தே"
(சிலப். நடுகல். 169-70)

எனக் கூறிற்று. இவற்றால் இவ்வெழுபொறி நாட்டம் வங்கிச லாஞ்சனையாதல் நன்கறியலாம். இதை அச்சேரர்க்குச் சிறந்த அரசுரிமையாக வைத்து அக்குடித்தாயமாக, 99-ம் புறப்பாட்டுக் கூறுதல் காண்க. புறப்பாட்டுரைகாரரும் ஷை 99-ம் பாட்டுரை யில் "இவனுக்குப் பனந்தார் கூறியது சேரமாற் குறவாதலின்" என விளக்கினர். சாசனங்கள் பலவும் இவன் வழியினரைச் சேரர் என்றே கூறுவதும் வல்லார் வாய்க்கேட்டுணர்க.

"சேர னதியன் றிருநெடுமால் தென்தகடை
வீரன் விடுகா தழகியான் .....................
செங்கோடு போலச் சிலையைவட திக்களவுங்
கங்கோட வெட்டினன் கல்" இது சிலாசாசனப் பாட்டு.

இதன்கட் "சிலையைக் கல் வெட்டினான்" என்றதனைவிவ் வழியினர்க்கு விற்கொடியுங் கூறுதல் காண்க. இவற்றால் இவ் வதியர் சேரர் வழியினரே என்றும் அவர் மக்கட்டாயமே யுடைய ரென்றும் நன்கு விளங்குதல் காண்க.

இனிச் சிலப்பதிகாரத்துள் வரந்தருகாதைக்கண் இளங் கோவடிகளை நோக்கித் கண்ணகி கூறியவிடத்து,

"வஞ்சி மூதூர் மணிமண்ட பத்திடை
நுந்தை தாணிழ லிருந்தோய்" (173-4)

எனக் கூறியது கற்றாரறிவர். ஆண்டு அரும்பதவுரைகாரர் "நுந்தையாகிய சேரலாதனிடத்தே நீயிருக்க" எனவிளக்கினார். ஈண்டு நுந்தை என்ற சொல்லும் தந்தை என்ற பொருளதென் பது தமிழ் வல்லவரறிந்ததே. 'நும்' என்றது இளங்கோவடி கள் தமையனையும் உளப்படுத்தியென எளிதினிணக்கத்தகும். அவ்விருவர்க்கும் அவன் தந்தையாதலான் 'நுந்தை தாணிழலி லிருந்தோய்' எனக் கூறுதல் பொருந்தும். செங்குட்டுவற்கும் இளங்கோவடிகட்கும் சேரலாதன் (பிறர் நினைக்கின்றபடி) மாமன் ஆயின் அவனை நுந்தையென்று கூறுவது மிகையாகும். நுந்தையென்னுஞ் சொல்லை நும்முன் என்றும் நும்முன் என் னுஞ் சொல்லை நுந்தை யென்றும் பொருள் பண்ணிய விடங் களில் அம்முன்னவன் தாதை வழியினனன்றி வேறு தாய்வழி முறையிலுள்ள மாமனைக் குறிப்பதாகத் தமிழில் ஒரு மேற்கோள் காட்ட வியலுமா ?

"நின் புதல்வர். . .நின் முன்னோர் போல்க" (புறம். 198) என வருமிடத்து நின் தந்தை தந்தையராகிய முன்னோர் என்று பொருள் படுதல் நன்கு நோக்கிக்கொள்க. சிலப்பதிகாரத்துக் கானல்வரியில்,

'கொடுங்கண் வலையா னுயிர்கொள்வா னுந்தை
நெடுங்கண் வலையா னுயிர்கொல்வை மன்னியும்" (18)

என நுந்தையென்பது தந்தைக்கே வழங்கப்பட்டது கண்டு கொள்க. நும் முன் என்ற சொல்லும்" நும்முன்னாகிய தந்தை" (புறம். 174. உரை பார்க்க) எனப்பொருள்படுதலல்லது நுந்தை நும் முன்னோனாகி அம்முன்னோன் மாமனாதல் யாண்டையதோ

தெரிகிலேன். இரப்பான் புரப்பானை "எந்தை வாழியாதனுங்க" (புறம். 175) என்றாற் போலக் கூறிற்றெனின் துறவியடிகள் இரப்பாளனும் அவருக்கு முன்னிலையில் மாமனாகிய சேரலாதன் புரப்பாளனுமாதல் பொருந்துமா ? ஈண்டு இரப்பாளன் கூற்றாகாது கண்ணகி கூற்றாதலுங் காண்க. ஈண்டு எவ்வாற்று மூயன்றாலும் நுந்தையென்ற சொல் துறவிக்கு மாமனை ஒரு போதுங் காட்டாதென்றும் துறவு பூண்டற்கு முன்னிலையிற் றந்தையையே காட்டுமென்றும் ஐயமறத் தெளிந்துகொள்க.

> 'மாநீர் வேலிக் கடம்பெறிந் திமயத்து
> வானவர் மருள மலைவிற் பூட்டிய
> வானவர் தோன்றல்'' (சிலப். காட்சி. 1-3)

என்புழி வானவர் தோன்றல் சேரற்குப் பிறந்த மகன் என்பதே பொருளாதல் காண்க.

> "தோன்றிற் புகழொடு தோன்றுக" (குறள் 236)

என்புழிக்காண்க. ஈண்டுக் கடற்கட்புக்குக் கடம்பெறிதலும் இமயம் விற்பொறித்தலும் சேரலாதன் செயல்களென்பது இரண்டாம் பதிற்றுப்பத்து 4-ஆம் பாட்டினும் அதன் பதிகத்துங்காணலாம். வானவர் தோன்றல் என்பதனைச்சேரலிளங்கோ, என்பது போலக் கொள்க.

> "நுந்தை தந்தைக் கிவன் தந்தைதந்தை" (புறம். 290)

எனச் சான்றோர் வழங்கிக் காட்டுதனோக்கி உண்மையுணர்க. இம்மேற்கோள்ற் றமிழ்வேந்தர் மூவர்க்கும் மக்கட்டாயமே உரியதாதலுந் தெரிந்துகொள்க.

> "நுந்தை தாய நிறைவுற வெய்திய
> வொலியற் கண்ணிப் புலிகடி மாஅல்" (புறம். 202)

என வேளிருள் வேளாகிய இருங்கோவேள் கபிலராற் பாடப்படுதலானும் இவ்வுண்மை இனிதுணரப்படும். இவன் வேளிருள் வேளாதல்,

> "நீயே, வடபான் முனிவன் றடவினுட் டோன்றி
> ........................துவரை யாண்டு

நாற்பத்தொன்பது வழிமுறை வந்த, வேளிருள் வேளே "
(புறம். 201)

என்பதனாலறிக. இம்மேற்கோள்களாற் சேரர் பெண்கொண்ட வேளிர் குடிக்கும் மக்கட்டாயமே என்பது நன்குணரலாகும். முடியுடைவேந்தர் பெண்கொள்ளற்குரியர் வேளிர் என்பது அழுந்தூர் வேளிடை, உருவப்பஃறேரிளஞ் சேட்சென்னி பெண் கோடலும் அவன் மகன் கரிகாலன் நாங்கூர் வேளிடை மகட் கோடலும் கேட்கப்படுமாற்றானறியலாம். " வேள் எனவும் அர செனவும் உரிமை எய்தினோர் முடியுடை வேந்தர்க்கு மகட் கொடைக்குரிய வேளாளராகுப " (தொல். அகத். 30), என நச் சினார்க்கினியர் கூறியதுகொண்டுணர்க. பாரியை வேள் என வும், பறம்பிற்கோமான் எனவும் கூறலானும் அவன்பால் மூன்று வேந்தரும் பெண் கேட்டனர் என்பதனானும் இதனுண்மையுண ரப்படும். செங்குட்டுவன் வேள்விக்கிழத்தி வேண்மாள் என்பத னானும், வெளியன் வேண்மாணல்லினி யீன்ற மகன், வேண் மாளந்துவஞ் செள்ளை யீன்ற மகன் எனச்சேர வரசரைப் பதிற் றுப்பத்துப்பதிகம் கூறுதலானும், சேரர் இவ்வேளிர் குடியிற் பெண் கொண்டது துணியப்படும். கோமகள் என்பது கோமாள் எனவும் கோமகன் என்பது கோமான் எனவும் வழங்குதல்போல வேண்மகள் என்பது வேண்மாள் எனத் தொல்லை வழக்கில்வந்து செய்யுளுக்கு ஆயிற்று எனத்தெளிக. இவ்வெளியன் வேள்மகன் ஆயெயினன் என்பான் "வெளியன் வேண்மான் அயெயினன்" என வழங்கப்படுதல் 208 ஆம் அகப்பாட்டிற் காண்க. பெருங் கதையுள் காசிராசன் புதல்வியாகிய பதுமாபதியை அவள்மணத் தற்கு முன்னே,

" பைந்தொடிக் கோமாள் "
(மகத. கன்னிதடுமாறியது அடி. 33)

என வழங்குதலும், இவளையே மணத்தற்கு முன்னர்ப்

" பதுமா பதியெனும் பைந்தொடிக் கோமகள் "
(3. 5. 27)

என வழங்குதலும் நோக்கி இதனுண்மையுணர்க. மக்கட்டாய முறையுடைய இவ்வேளிர் குடியினன்றி அம்முறையுடையசோழர்

குடியிற் சேரர் பெண்கொண்டது சிலப்பதிகாரத்து வஞ்சின மாலையுள்,

" மன்னன் கரிகால் வளவன் மகள் வஞ்சிக்கோன்
றன்னைப் புனல்கொள்ளத் தான்புனலின் பின்சென்று
.........................................
பொன்னங் கொடிபோலப் போதந்தாள் " (அடி. 11. 15)

என வரும் அடிகளானறியப்படும். இவற்றாற் குறுமுடி வேளிரும் பெருமுடிவேந்தரும் சேரவேந்தர்க்கு மக்கட்கொடைநேர அப்பிறர் குடி மகளிரும் தங்குலத்துதித்த ஆண்மக்களும் தம்முள் வதுவை யியைந்து அவரினின் றுண்டாகிய மகன் மகன் வழியாக வந்ததே சேரகுலம் என்பது தெற்றென விளங்குதல் காண்க. "மன்னன் கரிகால் வளவன் மகள் " என்றதனாற் பிறந்தகுலத்தின் முடியுடைப் பேரரசச்சிறப்பும் " " வஞ்சிக்கோன் " என்றதனாற் புக்ககுலத்தின் முடியுடைப்பேரரசச்சிறப்புங்குறித்தல்தெளிக" இவ்வஞ்சிக்கோன் வழிவழிச் சிறக்கவேண்டுமாயின் இவ்வஞ்சிக் கோன் மணந்த கரிகால் வளவன் மகள் பெறும் மைந்தன் வழியாகத்தான் சிறத்தல் இன்றியமையாததாகும். வஞ்சிக்கோன் றன்னுடன் பிறந்தாளொருத்தி மகன் வழியை " வழிவழிச் சிறக்க " (சிலப். காட்சி. 92) எனக்குறித்தாரெனற்குச் சொல்லுமில்லை மேற்கோளுமில்லையென்று துணிக. உலகு புகழப்பெரும் பேரரசனாக வீற்றிருந்த மன்னன் கரிகால் வளவன் தன் அருமை மகளை அம்மகள் வழியில் அரசு பெருகாது உடன் பிறந்த அரசியின் உரிமைக்குத் தானுள்ளவரை யரசுசெலுத்தித் தன் அறக்கிழத்திக்கும் அவள கட்டோன்றிய தன் மக்கட்கும் அவ்வரசுரிமையிற் சிறிது மியைபில்லையாகும் மருமக்கட்டாயமரபிற்றேக வாழ்க்கையை மட்டுங் கருதி மணத்தற்குக் கொடுப்பனோ என்றறிஞரே வினவி யறிந்து உண்மைதெளிக. மருமக்கட்டாய முறையுடையதாயின் அக்குடியிற்றோற்றஞ் செய்த பெண்ணே அரசியாதலும் அவ்வரசி தன்னை மணந்த பிறன் ஊர்மனையிற் றுன் புகாது மணந்தவன் றன்கட்புக்கு வாழும் உயர் நிலையில் வீற்றிருத்தலும் அவ்வழக்கம் தெரிந்தாரறிந்தன. நாஞ்சினாட்டு அரசுரிமையுடைய அரசியாய்க் கொலுவிருக்குங் கோயிற்கண் ஒரு வகையினு முயர்வில்லாது தன் வழியில் எக்காலத்தும் அர செய்தற்கு முறையே யில்லா"துகழியும் ஒரு மருக வேந்தரைச்

சோழச் சக்கிரவர்த்தி பெற்றகோமகள் மணத்தற்குடன்படுவளா என்பதும் அறிஞரே சிந்தித்து விடை காண்க. ஈண்டு இளங்கோ வடிகள் கரிகால் வளவன் மகள்மணந்தவனை "வஞ்சிக்கோன்" எனக் கூறியதற் கேற்பக் "கடுந்திறலத்தி" என அகப்பாட்டி னும் (293) "பீடுகெழு குரிசில்" எனக் குறுந்தொகையினும் (31) வழங்குதல் காண்க.

இவ்வாறு வஞ்சிக்கோனுகவுள்ள பெருவேந்தன் மணந்த மகளே "குலமகள்" எனப்படுதலும் அவ்வேந்தன் இத்தலைவி யின்பாற்றன்குலம் வளரப் பெருவேள்வி வேட்டு அரசுதுறை போகிய புதல்வர் பெற்றுத் தன் வழிவாழச் செய்தலும் பதிற்றுப் பத்து எட்டாம் பத்துள் "நின்வழிவாழிய, அரசு துறைபோகிய புதல்வர்பெற்றனை" (74) என்புழி நன்கு விளக்கினும். பதிற் றுப்பத்துரைகாரரும் "கோடுறழ்ந்தெடுத்த" (16) என்பத னுரையில் "இதனுற் சொல்லியது, அவன் வென்றிச் சிறப் பும், குலமகளோடு நிகழ்ந்த இன்பச்சிறப்பும்உடன் கூறியவாறு யிற்று" என விளக்கி முடிவு கூறுதலால் வஞ்சிக்கோன் மணந்த மகளே அவ்வஞ்சியார் கோமான் றன் றொல்குலத்தை இடையறவுபடாது காத்துண்டாக்கும் மகளாதல் இனிது தெளி யப்படும். இவ்வஞ்சிக்கோன் மணந்த மகளையே,

"வேள்விக்கிழத்தி" (சிலப். நடுகல். 183)

எனவும் நூல்கள்வழங்குதலானும் பண்டைச்சேரர் கோயிற்கண் இக்குலமகட்குள்ள பெருஞ்சிறப்புணரலாம்.

"செம்மீனனையணின் றொன்னகர்ச் செல்வி" (பதிற். 31) என்புழித் "தொன்னகர்" என்பது இடையறவுபடாது சேர குலத்துதித்தோர் வாழ்தற்குரிய பழைய கோயில் என்றவாறும். அக்கோயிற் செல்வி ஈண்டுக் கூறப்பட்ட நார்முடிச் சேரற்கு மனைவியாதலன்றி உடன் பிறந்தாளாகாமையும் நோக்கிக் கொள்க.

"குலமகள் பயந்த குடிகெழு குமரர்,
நிலமக ணயக்கு நீதிய ராகி"
(பெருங்கதை. உஞ்சைக். 37,75)

என்புழிக் கொங்குவேளிர் வழங்கியவாற்றுற் குலமகள், இவ ளென்று நன்கு தெளிந்துகொள்க. சேரர் வரலாறு பலவுந்தெரி

யக்கிடக்கும் இப்பதிற்றுப்பத்துள்ளும் சிலப்பதிகார வஞ்சிக் காண்டத்தும் சேரன் மனைவியையன்றிச் சேரனுடன் பிறந்தா ளொருத்தியைப் பற்றிச் சிறிதுங் கூறாமை நோக்குக. சோழர் குடியிலும் வேளிர்குடியிலும் பிறந்து, சேரவேந்தரை மணந்து, சேரர் தொன்னகர்ச் செல்வியராய், அச்சேரன் வழிவாழ அரசு துறைபோகியபுதல்வர்ப்பெற்றுக் கோத்தாயாகிய இக்குலமகளிர் மருமக்கட்டாயக் குடியிற் புக்கவராகாமை யாவரும் எளிதிலறிய லாம். இவ்வருமை மகளிர் புக்கு வாழ்ந்த குடி, அரசன் அரசனைப் பெறுங்குடியாமே என்றும், அது தமிழ் நாட்டுப் பல் குடியினுள், தாயமுறையின் வேறுபடாத சேரர் குடியுமாமென்றும் பின்னுந் தெரிவிப்பேன்.

> " குழவி யிறப்பினு மூன்றடி பிறப்பினு
> மாளன் றென்று வாளிற் றப்பார்
>
> ......................................
>
> மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
> தாமிரந் துண்ணு மளவை
> யீன்ம ரோவிவ் வுலகத்தானே " (புறம். 74)

என்பது "சேரமான்கணைக்காலிரும்பொறை சோழன் செங்கணானோடு போர்ப் புறத்துப் பொருது பற்றுக்கோட்பட்டுக் குடவாயிலிற் கோட்டத்துச் சிறையிற் கிடந்து தண்ணீர் தாவென்று பெறாது பெயர்த்துப் பெற்றுக் கைக்கொண்டிருந்து உண்ணான் சொல்லித்துஞ்சிய பாட்டு. இதற்குப் பழையவுரை வருமாறு:— "பிள்ளை யிறந்துபிறப்பினும் தசைத்தடியாகிய மணை பிறப்பினும் அவற்றையும் ஆளல்லவென்று கருதாது வாளோக்குத விற்றவரூர் அரசராயிருக்க, மனவலியின்றி வயிற்றின் கட்டீயை யாற்றவேண்டித்தாமே யிரந்துண்ணும் அளவினையுடையாரை அவ்வரசர் பெறுவார்களோ இவ்வுலகத்தின்கண்" எ-று.

குழவி செத்துப் பிறந்தாலும் ஊன் பிண்டம் பிறந்தாலும் அவற்றையும் ஆண் மகவல்லவென்று நினையாமற் றம் குலமகள் வயிற்றிற்றமக்குண்டாகியகாரணத்தான் தம்மானவீரமேதலையாக்கொண்டு அவற்றையும் வாளாற்போழ்ந்து ஈமக்கடன் முடிக்கு மியல்புடையராகியஅரசர், வயிற்றுத்தீத்தணிதல் ஒன்றேகருதி மனவலியின்றி இரந்துண்டுயிரோம்புதலைச் செய்யும் இராச

புத்திரரைப் பெறுவரோவென்று கருதிக் கூறியவாறு எளிதி லறியலாம். போரில் வாளாற்போழப்பட்டிறவாது ஊனிற்பிணி யானுயிரிழத்தல் வேந்தர் குடிக்கு விலக்கப்பட்டதனுல் ஒருகால் மூத்திறந்தாரையும் குலமுறை மானங்காத்து வாளிற்போழ்ந்து தருப்பையிற் கிடத்தல் வழக்கென்பது,

" பசும்புற் பரப்பினர் கிடப்பி......வாள்போழ்ந்
தடக்கலு முய்ந்தனர் " (புறம். 93)

என்பதனுற் கற்ருரறிவர். அங்ஙனஞ் செய்யும் வாட்சடங்கின்றி இறந்து பிறந்ததற்கும்; ஊன்றடியாகிய மணைக்குஞ் செய்யும் வாளிற்றப்பாராகிய வேந்தர் இவ்வாறிரந்துண்ணுமளவினையுடை யாரைப் பெறுவாரோ என்பதே இதன் கருத்தாகும். இங்ஙனங் கூறியவன் வஞ்சிக் கோவே என்பது இப்போர்ப்புறத்துச் செங்க ணன் வென்றதனைக் களவழியிற் பாடியபொய்கையார் " வஞ்சிக் கோவட்ட களத்து " (களவழி) எனக்கூறுதலான் நன்கறியலா கும். 'வாளிற்றப்பார்' என்பது எழுவாயும் ஈன்மரோ என்பதுபய னிலையுமாக இயைதலான் அரசர் மதுகையின்றி இல்லிரந்துண் பாரை யீனுரென்று தன் மதுகையும் தன் குல மானமும் தன் னரசுரிமையுங் கருதி இவ்வாறு கூறினன் என்பதல்லது வேறு கூறலாகாது. உரைகாரரும் " வாளிற்றப்பார் " என்ற சொற் ருெடர் நோக்கியும் தகுதி நோக்கியும் "வாளோக்குதலிற்றவருர் அரசராயிருக்க " என்று வெளியிட்டார், இது சொற்றவன் சேரன்கணைக்காலிரும் பொறையென்றதனுலும் இவனே வஞ்சிக் கோ எனப்படுதலானும் இவனிங்ஙனம் இரந்துண்ணின் அரசன் ஈன்ற அரசன் யானுகேன் என்று கூறி உண்ணுனயினன் என்றே துணியக் கிடத்தல் காண்க. தந்தை மகவிற்குக் காரண மாதல்பற்றி ஈனுதலாகக் கூறுதல் பண்டை வழக்கே யென்பது பதிற்றுப்பத்து ஏழாம் பத்துப்பதிகத்துள் " ஒரு தந்தை யீன்ற மகள் பொறையன் பெருந்தேவி " என வருதலான் அறிக.

" நுங்கோனுன்னைப் பெறுவதன் முன் " (25, 100)

என மணிமேகலையுள் வருதலானு மறிக. இப்புறப்பாட்டு வஞ்சி வேந்தன் மகன் வஞ்சிவேந்தனை முறையே குறித்தல் நன்கு நோக்கிக் கொள்க. இப் பாட்டில் " ஈன்மரோ " என்ற சொல் அரசர் தம்அரசிற்குரிய மக்களைப் பெறுதற்குத்துணையாவதன்றி

அரசிற்குரியராய் உடன் பிறந்தாள் புதல்வரைக் கொணர்ந்து நிறுவதற்கு எப்படியுந் துணையாகாமை நன்குணர்க. 'ஆளன் றொன்று' என்றதும் ஆண்மகனையே குறித்தல் நன்கு காண்க. 'நல்லாளிலாத குடி' (குறள். 1030) உரை பார்க்க.

இதற்கியையவே மாந்தரஞ்சேரலிரும்பொறையைத்
" தென்குமரி வட பெருங்கல் " (17)

என்னும் புறப்பாட்டில்,

இனிதுருண்ட சுடர்நேமி
முழுதாண்டோர் வழிகாவல "

என விளித்தல் காணலாம். உரைகாரரும் "நில முழுதையும் ஆண்டோரது மரபைக் காத்தவனே" எனவும் விளக்கியுரைத்தார். "ஆண்டோர் மரபு" ஆண்டோருடன் பிறந்தாள் மரபு என்று கொள்ளற்கு ஒரு குறிப்பும் ஈண்டில்லாமை நன்கு நோக்குக. "ஆண்டோர் வழி" என்பதனை "நின்வழி வாழியர் புதல்வற் பெற்றனை" என்னும் பதிற்றுப்பத்திற் கியையவைத்து உண்மை யுணர்ந்துகொள்க. "வாழ்க்கை, வழியெஞ்ச லெஞ் ஞான்றுமில்" (குறள். 44) என்புழிவழி சந்ததிக்கு வருதல் காண்க. "செற்றோரை வழிதபுத்தனன்" (239) எனப் புறப்பாட்டினும் வருதல் காண்க. வழி வாழப் புதல்வர்ப்பெறும்சேரர் பாடல்களில் வழி யென்பது மாமன் மருகனைத் தொடர்ந்து வரும் வழி என்று கொள்ளுதற்காதாரமே யில்லாமை காண்க. கோமகற்குப்புக்க தலைவியை "வழிப்பெருந்தேவி" (4-3-110) என்பதும் தமிழ் வழக்கென்பது பெருங்கதையிற் கொங்குவேளிர் கூறியது கொண்டுணர்க. வழிப்பெருந்தேவி என்பது சந்ததியை யுண்டுபண்ணுதற்குரிய பெருந்தேவி யென்னும்பொருட்டு, தமிழிலக்கியவிலக்கணங்களிலெங்குந் தலைவனூர்க்கட் டலைவிபுக்கு இல்லற நிகழ்த்தி வாழ்தல் கூறுவதல்லது தலைவியூர்க்கட்டலைவன் புக்குவாழ்தல் கூறாமையுங் கண்டுகொள்க. சேரகுலத்து மாந்தரஞ் சேரலிரும்பொறை தொகுப்பித்த ஐங்குறுநூற்றில் "தண்டுறை யூரன் றன்னூர்க், கொண்டனன் செல்கவெனவேட்டேமே" (7) என வருதலானிதனுண்மை யுணர்க. தலைவியே அரசியாயும் தலைவன் அரசனாகாது அவளுடன் உறைந்துதுய்த்து

அவனுயிர்விற்குத் தலைவன் தான் பணிந்தொழுகும் இல்வாழ்க்கைக்கும் யாண்டும் கிழவோனுயர்வும் கிழவோள் பணிவும்வேண்டிய தமிழ் நெறிவழக்கு உடன்பாடாதென்று தெளிக. அரசுத்திரு, தலைவற்கில்லாது அரசிக்கும் அரசியுடன் பிறந்தானுக்கும் எய்தற்குரிய மருமக்கட்டாய முறைமை, அரசனும் அவன் மணந்த அரசியும் செல்வனும் செல்வியும் ஆகி, அவர் பயந்தவன் செல்வ மகனுமாம் தமிழ்நெறிக்குச் சிறிதுமியையாதென்க. தலைவனைச் செல்வனென்பதும்,

"மகன்றா யுயர்புந் றன்னுயர்பாகுஞ், செல்வன்
பணிமொழி யியல்பாகலான்" (தொல். கற்பியல். 33)

என்புழிக் காண்க. ஈண்டு நச்சினார்க்கினியர் "செல்வனென்றார் பன்மக்களையுந் தன்னுணை வழியிலே யிருத்துந் திருவுடைமை பற்றி" என்று விளக்கியதனுனுண்மை யுணர்க. அரசன் மணந்த கற்புடையாட்டியை "நின் தொன்னகர்ச் செல்வி" என்பது முன்னரே சேரர்பதிற்றுப்பத்துளிருப்பது(31)காட்டினேன். "செல்வச் சிறார்" (குறுந்தொகை. 148) எனவும் "செல்வன்" எனவும் வழங்குதல்கொண்டு புதல்வற்கும், புதல்வர்க்குப் புதல்வர்க்கும் ஆதல் உணர்க. "தம் பொருளென்பதம் மக்கள்" (63) என்றார் திருவள்ளுவனாரும். சேரர் கொல்லிமலையில் இவ்வாறு தலைமுறை தலைமுறையாகச் செல்வவுரிமை பெற்றுவரும் செழுங்குடிச் செல்வர் நிறைந்து இரவலர்க் கீந்து வாழ்ந்தனரென்பது "செழுங்குடிச் செல்வர், கலிமகிழ் மேவல ரிரவலர்க்கீயும், சுரும்பார் சோலைப் பெரும் பெயற் கொல்லி" என வரும் பதிற்றுப் பத்தான் (81) அறிக. "கொழுங்குடிச் செல்வர்" என்பதற்கு (மதுரைக்காஞ்சி. 577) "வளவிய குடியிற் பிறந்த செல்வர்" என்றும் "குடிச்செல்வர் என்றார் நான்கு வருணத்தை" என்றும் நச்சினார்க்கினியர் உரை கூறுதல் காண்க.

"ஓங்கு கொல்லிபோ ரடுபொருந" (புறம். 22)

எனச் சேரன் விளிக்கப்படுதலு நோக்குக. அரசனுடன் வாழ்ந்தும் ஒரு சிறப்புமில்லாத அவன் தலைவியையும் அவ்விருவர்க்கும் பிறந்து அரசுரிமையில்லாத புதல்வரையும் இத்தமிழ் நூல்கள்

கூறுமை நன்கு நோக்கிக்கொள்க. பதிற்றுப்பத்துள்ளும் ஆடு கோட்பாட்டுச் சேரலாதனை,

" வீற்றிருங் கொற்றத்துச் செல்வர் செல்வ " (பதிற். 59) எனத் தெளியக் கூறினர். " வீறுடைய பெரிய அரசுரிமைச் செல்வர் செல்வப் புதல்வனே " என்பதே இதன்பொருளென்று கற்றோரறிவர். இவனை " இசை சால் தோன்றல் " (பதிற். 55) எனவும்,

" வெண்கோட்டசைத்த வொண்பூங் குவளையர்
..............................................
கண்ணி கண்ணிய வயவர் பெருமகன் " (டி. 58)

எனவும் வருவனவற்றையும் சுண்டைக்கியைய நோக்கிக் கொள்க. " பனந்தோட்டின்கட்டங்குவித்த குவளையராய்க் கண்ணிக ண்ணிய வயவர்" என்று கொள்க. மேல் " மறவர் தங்கொல்படைத் தரீஇயர் " என்றதனால் இக்கண்ணி கண்ணியவயவர் அம்மறவர் துணையாகப் போர்க்குத் தாமே செல்லும் சேர வேந்தரேயாவர் என்று துணிக. அச்சேரர் பெருமகன் இச்சேரன் எ-று. இக் கொற்றத்துச் செல்வர் செல்வனுக்குச் செல்வப் புதல்வருண்டாயினரென்பது,

" இளந்துணைப் புதல்வர் நல்வளம் பயந்த
வளங்கெழு குடைச்சூ லடங்கிய கொள்கை
யான்ற வறிவிற் றோன்றிய நல்லிசை
யொண்ணுதன் மகளிர் " (பதிற். 57)

என இவற்குப் புதல்வருடைமை கூறுதலான் அறியலாம். உரைகாரரும் " புதல்வராகிய நல்வளம் என இருபெயரொட்டு எனவுரைத்தது காண்க. இதனாற் புதல்வரை நல்ல செல்வமென்று கருதுதல் புலனும். இதனாலிச் சேரர் வழிவழி வாழ்தலிவ்வித மென்று எளிதிற் றெறியலாம்.

இப்பதிற்றுப்பத்து முழுதும் சேரர் வேள்விக் கிழத்தியராகிய தம் கற்புடைய மனைவியருடன் தம் தொன்னகர்க் கணமர்ந்து இல்லற நடத்தல் கூறுதலல்லது உடன்பிறந்தாளொ

ருத்தியை அரசியென்று வைத்து அவள் கோயிற்கண் வீற்றிருப்ப தாகக் கூறுமையு நோக்கிக்கொள்க. இதனாற் பண்டைச் சேர வேந்தர் பிறவேந்தரிடம் பெண் கொண்டு அவரை மணந்து குல மகளிராக வைத்து உரிய சிறப்பெலாஞ் செய்தும், தம்முடன் பிறந்த மகளிரைப் பிறவேந்தர்க்கு மகட்கொடை நேர்ந்து அப்பிற வேந்தர் கோயிற்கட் டமிழ்நெறிமுறை கெடாது அவரைப் புகு வித்தும் வாழ்ந்துவந்தவரென்பது நன்கு புலனும். சேரரைப் பற்றிய பாடல்களில் அரசனுடன் பிறந்தாளைப் பற்றிய ஒரு குறிப்புமில்லாமை யறிஞரே ஆராய்ந்து கொள்வாராகுக. சேரர் பயந்த மகளிர் பிறவேந்தர் ஊர்புக்கு வாழ்ந்து மகப்பேறடைந்து அப்புக்ககுடிக்குத் தாயாதல்இலண்டன்மாநகர்ப்பொருட்காட்சிச் சாலையிலுள்ள சின்னமனூர்ச் செப்பேட்டில் வானவன் மாதேவி பராந்தக பாண்டியனை மணந்து இராசசிங்க பாண்டியனைப்பெற்ற செய்தி கூறுதலான் நன்கறிக. "வானவன் மாதேவி யென்னு மலர் மடந்தை முன் பயந்த மீனவர் கோனி ராசசிங்கன்" என்பது இச்சாசனப் பகுதி. இச் செப்பேட்டின் பழமை சாசன வாராய்ச்சியாளர் துணிந்தது. இப் பழங்காலம் வரை சேரர்குடி யொழுக்கம் தமிழிலக்கணமுறைக்கு மாறுபடாதிருந்ததென்பதை இது நன்கு வலியுறுத்துமென்க. "தன்னூர்க் கொண்டனன் செல்கவென வேட்டோமே" (7) என்பது மாந்தரஞ்சேரல் தொகுப்பித்த ஐங்குறு நூறு. இதனை ஈண்டைக்கு நினைக்க.

இனி மருமக்கட்டாயக்குடி தாயைத் தொட்டுத் தலைமை பெற்று வருவதென்றும் மக்கட்டாயக்குடி தந்தையைத்தொட்டுத் தலைமைபெற்று வருவதென்றும் பலரும் நன்கறிவர். இச்சேர குலம் வேத்துரிமையையுடைய தந்தையையே தொட்டுத் தலைமை பெற்று வருவதென்பதற்கு இன்னுஞ்சில காட்டுவல்.

பதிற்றுப்பத்துள் இரண்டாம் பத்தில் "நிலநீர் விசும்பு" என்னும் 14 ஆம் பாட்டின் கண்,

"வானுறை மகளிர் நலனிகல் கொள்ளும்
வயங்கிழை கரந்த வண்டுபடு கதுப்பி
னொடுங் கீரோதிக் கொடுங்குழை கணவ
பல்களிற்றுத் தொழுதியொடு வெல்கொடி நுடங்கும்
படையே ருழவ பாடினி வேந்தே
யிலங்குமணி மிடைந்த பொலங்கலந் திகிரிக்

கடலக வரைப்பினிப் பொழின்முழு தாண்டநின்
முன்றிணை முதல்வர் போல நின்றுநீ
கெடாஅ நல்லிசை நிலைஇத்
தவாஅ லியரோரிவ் வுலகமோ டுடனே "

என வந்துள்ளது. இதன்கண் உரைகாரர் "கொடுங்குழை கணவ, படையேருழவ, பாடினிவேந்தே நின்குடி முன் முதல்வர்போல நின்று நல்லிசையை நிலைப்பித்து இவ்வுலகத்தோடு கூடக்கெடாதொழிவாயாக எனவினை முடிவுசெய்க" எனவிளக்கி முடித்தார். இதனால் ஈண்டுக் கூறப்பட்ட நெடுஞ் சேரலாதன் என்னுஞ் சேரவேந்தன் உலக முழுதாண்ட முன்னோரைத் தன் குடிக்கு முதல்வராக வுடையன் என்பதும், இவனும் அக்குடி பெருகச் செய்தற்குரிய ஒண்ணுதலி கணவன் என்பதும் கூறுதல் காணலாம். உரைகாரர் "நின் முன்றிணை முதல்வர்" என்பதனை "நின்றிணை முன் முதல்வர்" என்று கொண்டது காண்க. நின்றிணை யென்பது நின்குடி யென்றவாறு. நின் முதல்வரென் றொழியாது நின்குடி முன் முதல்வர் என்றது நினைக்க. அக் குடியை முன்னே முதலும்படி செய்தவர் திகிரியால் இப்பொழின் முழுதாண்டவர் என்பது மேலே கூறியது காண்க. "முன்றிணை முதல்வர்" என்ற இத்தொடர் வழக்கம் எட்டாம்பத்துள் "நின் முன்றிணை முதல்வர்க் கோம்பினருறைந்து" (72) எனத் தன் மனைவியாகிய ஒண்ணுதல் கருவிற் றன்வழிவாழ்தற் பொருட்டு அரசுதுறை போகிய புதல்வனைப் பெருவேள்வி வேட்டுப்பெற்ற பெருஞ்சேரலிரும்பொறைக்கண்ணும் நிகழக் காண்டலால், இச் சேரர்குலம் தந்தையரையே முதல்வராகப் பெற்றுவருதல்ளளிதி லறியத்தகும். ஈண்டும் உரைகாரர் "நின்முன்குடி முதல்வர்க்கு" எனப்பொருள் விளக்குதலுங் காண்க. "முன்றிணை முதல்வர் போலநின்று" (85) என ஒன்பதாம் பத்திலும் வந்தது காண்க.

"நின்
இலங்குகதிர்த் திகிரி நின் முந்திசினோரே" (பதிற். (9)

என்புழி உரைகாரர் "அவன் ஆழ்வினைச் சிறப்பினை அவன் குடி வரலாற்றொடு பகுத்துச் சொல்லியவாறாயிற்று" என வுரைத்த தனையும் நோக்கிக் கொள்க. இவ்வாறு ஆண் குடியர்கக் கூறுத லல்லது பெண் குடியாக யாண்டுங் கூறாமை ஆராய்ந்துகொள்க.

இவற்றிற்கியையவே இமயவரம்பன் றம்பியாகிய பல் யானைச் செல்கெழு குட்டுவனை,

" அமர் துணைத் பிரியாது பாத்துண்டு மாக்கண்
மூத்த யாக்கையொடு பிணியின்று கழிய
ஊழி யுய்த்த வுரவோ ரும்பல் (22)

எனக்கூறுதல் காணலாம். இதன்கண் "அமர் துணைப்பிரியாது" என்பதனால் இவ்வேந்தர் இல்லற நிகழ்த்தற்கட்டம் துணைவியரைப் பிரியாது வாழ்ந்தது குறித்தார். 'பாத்துண்டு' என்பதனால் அவ்வில்லறத்திற்குச் சிறந்த விருந்தோம்பல் குறித்தார். "மூத்தயாக்கையொடு பிணியின்று கழிய ஊழியுய்த்த" என்றதனால், அறனிழுக்காது நெடுங்காலமாண்ட நீதிமுறை குறித்தார். "உரவோர்" என்றதனால் இத்தனைக்கும் இன்றியமையாத நல்லறிவுடைமை குறித்தார். "உரவோரும்பல்" என்றதனால் அத்தகை யறிவுடைப் பேரரசர் வழித்தோன்றியவ என்று விளித்தார் என அறிக. "மகனறிவு தந்தையறிவு" என்ப. திரையர் பாண்டியர்க்கும் "உம்பல்" என்னுஞ் சொல் இப்பொருளிலே வழங்குதல் கற்றோர்பலரும் அறிந்ததேயாதலான் அவ்வும்பலென்பது இச்சேரர் குலத்து மட்டும் வேறு பொருளில் வருமென்று கருதற்கு ஓர் குறிப்புமின்மை நன்குணர்ந்துகொள்க.

" தவிரா வீகைக் கவுரியர் மருக
செயிர்தீர் கற்பிற் சேயிழை கணவ " (புறம். 3)

எனவும்,

" ஒருதாமாகிய வுரவோ ரும்பல் " (ஷை. 18)

எனவும், பாண்டியரைப் பாடுதலான் இவ்வுண்மை யுணர்க.

" உரவோன் உம்பல் " (பெரும்பாண். 182).

என்பது,

சேரவரசர் மருமக்களைப்பாராட்டினரெனற்கு மேற்கோளே அவர் நூலிற் கிடையாமையும் அவர் மக்கட் பேற்றைப் பாராட்டற்கு மேற்கோள்கள் கிடைத்தலும் ஆராய்ந்துகொண்டு இதனுண்மை யுணர்க.

" கொற்றந் திருவி னுரவோ ரும்பல் " (பதிற். 90)
என்று பின்னுங் கூறுதல் காண்க. கொற்றத்திரு—அரசுரிமைச் செல்வம். பல்யானைச் செல்கெழு குட்டுவனை,

" வேயுறழ் பணைத்தோ ளிவளோ
டாயிர வெள்ளம் வாழிய பலவே " (பதிற். 21)

எனவும், சிலப்பதிகாரத்துச் செங்குட்டுவனை,

" வேள்விக் கிழத்தி யிவளொடுங் கூடி
.............................................
யூழியொ டூழி யுலகங் காத்து
நீடுவா ழியரோ நெடுந்தகை " (நடுகல், 183-86)

எனவும் வாழ்த்துதலை ஈண்டைக் கேற்ப நோக்கிக் கொள்க. இல்லறக் கிழத்தியும் அரசனும் அக்குடி பெருக வாழ்த்தப் படுதலல்லது அரசனுடன் பிறந்தாள் வாழ்த்தப்படாமை நினைந்து கொள்க. இச்சேர வேந்தன் மணந்த குலமகளே வேள்விக் கிழத்தியாய் வருஞ் சேர வேந்தர்க்குத் தாயாதல் " எங்கோ மகளை யாட்டியவந்நாள்" என்றுஞ் சிலப்பதிகாரத் தொடர்கொண்டும், எட்டாம் பத்துள் " நின்வழி வாழியர் ஒண்ணுதல் கருவி, லரசு துறைபோகிய புதல்வற்பெற்றனை" என்பதுகொண்டும் உய்த்துணர்ந்துகொள்க. சேரரைப் பற்றிய பலபல பாடல்களிலும் அரசனாகிய தந்தையும் அரசன் மனைவியாகிய தாயும் அவ்விருவர் பெற்ற வேத்துரிமைப் புதல்வரும் கூறப்படுதலல்லது மாமனும், தங்கையும், தங்கை மகனும், தங்கை மகளும் கூறப்படாமை நன்கு நோக்கிக்கொள்க.

" நின்வயின், முழுதுணர்ந் தொழுக்கு நரைமூ தாளனை
வண்மையு மாண்பும் வளனு மெச்சமுந்
தெய்வமும் யாவதுந் தவமுடை யோர்க்கென
வேறுபடு நனந்தலைப் பெயரக்
கூறினை பெருமநின் படிமை யானே " (பதிற். 74)

என்பதனாற் சேரவரசர் பிள்ளைப் பேற்றினைப் பாராட்டுதல் காண்க. " எச்சம் " என்றது பிள்ளைப் பேற்றினை யென்றார் உரைகாரர். எச்சத்தாற் காணப்படும். (குறள் 114)

இவற்ருன் இவர் வழிமுறை ஆண்வழி முறையே என்பது நன்கு தெளியலாகும். இவற்ருெடு பொருந்தவே கச்சிமாநகர் புக்ககாதையுள் மாசாத்துவான் மணிமேகலையை நோக்கிக் கூறிய கூற்றில்,

> " நின்பெருந் தாதைக் கொன்பது வழிமுறை
> முன்ஞேன் கோவலன் மன்னவன் றனக்கு
> நீங்காக் காதற் பாங்க ஞதலின் " (123-125)

என வருதலைக் கற்ருரறிவர். இதன்கண் நின் பெருந்தாதையென்றது மதுரையிற் கொலையுண்ட கோவலனைக் குறித்ததாகும். அவனுக்கு ஒன்பதுவழிமுறை முன்ஞேனும் கோவலன் என்னும் பெயருடையன் என்றும், அம்முன்ஞேனுகிய கோவலன் அம்முற்காலத்து வஞ்சியிலிருந்த சேரவேந்தனுக்குக் காதற்பாங்கனென்றும் இதன்கட் கூறுதல் தெரியலாம். இவ்வடிகளிற் கொலையுண்ட கோவலற்கு ஒன்பது வழிமுறை கூறியது தந்தை மகன் பேரன் முதலிய பிதிர்வழியே யன்றித் தாய் வழிமுறையன்றென்பது கோவலனுக்கு முன்ஞேன் கோவலன் எனக் கூறியதனுனன்கு துணியப்படும். அக்காலத்து வஞ்சியிலிருந்தரசாண்டமன்னவன் மணிமேகலை புக்கபோது வஞ்சியையாளும் மன்னவனுக்கு முன்ஞேன் மன்னவனுகி ஒன்பது தலைமுறையால் முந்தியவனுதலும் உடம்பொடு புணர்த்திக் கூறியவாருெம். இங்ஙனமில்லாது மன்னவன் வழிமுறை சிறுகியும்பெருகியுமிருந்தால் அவற்றிற்குத் தக்கவாறு விளங்கிக்கொள்ள ஏற்ற சொற்பெய்து கூறுவர் என்க. ஒன்பது வழிமுறை முன்ஞேன் கோவலன் எனவும் ஒன்பது வழிமுறை முன்ஞேன் மன்னவன் எனவும் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தவாறிஃதென்க. இப்போது ஆளுஞ் சேரவேந்தனுக்கும் கொலையுண்ட கோவலற்கும் ஒன்பது வழிமுறை யொத்தலானன்றே இவ்வாறு சேர வெடுத்துக் கூறினர். வழிமுறை கோவலனுக்கொருபடியும் மன்னனுக்கு வேறு படியும் ஆயின் இங்ஙனம் சேரவெடுத்தாளப்படுமா என்றுஅறிஞரே விஞவித் தெளிக. கோவலன் வழிமுறையும் மன்னவன் வழிமுறையும் எண்ணினுந் தாயமுறையினும் ஒத்தவாறு இதனுல் எளிதிலறியலாம். வழிமுறையென்ற தொடர் தமிழ்ப்பண்டை நூல்களிற்றந்தை தாய மெய்திய மக்கள் வழியே குறிப்பதென்பது புறப்பாட்டில்,

"உவரா வீகைத் துவரை யாண்டு
நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே"

என்று கபிலர் இருங்கோவேளைப் பாடுதலானறியலாம்.

"நுந்தை தாய நிறைவுற வெய்திய
.................................
நும் போலறிவி னுமரு ளொருவன் (புறம். 202)

என்பதனும் இவ்வேளிர் மக்கட்டாய முறை நன்கறியப்பட்ட தாம். வழிமுறை என்பது ஒருகுலத்துப் பிறந்தாரைக் குறிப்பது,

"பழவினை யாளரை, வழிமுறை மரபிற்றந்
தொழின்முறை நிறீஇ" (பெருங்கதை. 32-84)

என்பதனுனறிக.

"வழிமுறை தீரா விடும்பை தரும்" (குறள். 508).

என்புழியுங் காண்க. ஒருகுடிப் பிறந்து பிறிதோர் குடியுட் புகும் மருமக்கட்டாய முறைமைக்கு இஃதியையாமைதெளிவாரா குக. இதுசேரர் பைதிர வழிமுறைக்கே இயைந்துபிறிதொன்றற் கியையாமை நன்கு நோக்கிக் கொள்க. அடிகள் 'முறைமுதற் கட்டிலிறைமகனேற' (கால்கோள் 2) எனச் செங்குட்டுவனைக் கூறுதல் காண்க. இறைக்கு மகனுன தன்மையால் உரிமை பற்றிக் கட்டிலேறினுன் என்பது தோன்ற உடம்பொடு புணர்த்திக் கூறியது உய்த்துணர்க.

"மன்பதை காக்கும் முறைமுதற் கட்டிலின்
...............................................
மாலைத் திங்கள் வழியோ னேறினன்"
(நீர்ப்படை. 134, 138)

என இவரே பாண்டியனைக் கூறிக்காட்டுதலானுணர்க.

பழந்தமிழ்ப் புலவர் நிகழ்ந்ததை யுள்ளவாறு நன்கெடுத் துரைக்க வல்லவர் என்பதில் ஐயமேயில்லை. சுருங்கச் சொல்லல்

அவர்க்கியல்பேனும் விளங்க வைத்தல் அவர் தலையாய சொல் வன்மையாகும். தந்தையையுந் தாயையும் புதல்வனையும் பலபடியாக விளக்கிப் பாடிய இப் புலவர் பெருமக்கள், உள்ளவாறு தமிழ் நாட்டு நிகழ்ந்த கொள்கையாயின் மருமக்கட்டாயத்திற் கேற்ற சொற்பெய்து கூற வியலாதவரல்லரென்று தெரிந்து கொள்க. பிறவிடத்து மருமகனுக்கு மாமன் தன் தாயத்தை யீந்து அவனை வேந்தனாக்கிய நிகழ்ச்சியை உள்ளவாறு அப்பழம் புலவர் கூறுதலைக் காட்டுவல். பெருங்கதையுள் உதயனன் மாமன் விக்கிரன் என்னும் ஏயர்குல வேந்தன் மகவில்லாதவனாகித் தன் வேத்துரிமையைத் தன் மருமகனாகிய உதயனனுக்குக் கொடுத்த செய்தியை,

> " தாய மெல்லாந் தனக்குரித் தாக
> ஏயர் கொற்ற மிவன்வயிற் கொடுத்துப்
> பெறலரும் பெருந்தவத் துறுபயன் கொள்வலென்
> றுய்ப்புகழ் முனிவனொடு தேவியை யிரந்து
> செருமிகு குருசிறன் மருமகற் றழீஇ
> ...................................
> உதயனனிறையென வறிவரச் சாற்றி "
>
> (அவலந்தீர்த்தது. 11-137)

எனவும்,

> " மாமன் கொண்டுதன் மாநகர்ப் புக்கதூஉம்
> ஏயர்க் கிறையென வியற்றிய வண்ணமும் "
>
> (டி. 156-157)

எனவும் வருவனவற்றால் இவ்வுண்மை யுணர்க. உதயனன் தந்தை யுரிமை பெறுதற்கு முன்னே தன் மாமன் அரசுரிமை பெற்ற வரலாறிதுவாகும். இதனால் மருமக்கட்டாய முறை நெடுங்காலத்திற்கு முன்னே வடநாட்டு நிகழ்ந்ததெனத் தெரியலாம். ஈண்டு முனிவனென்றது ஏயர்குல வேந்தன் விக்கிரன் தந்தையை. இவன் துறவியாய் வனத்தே தவஞ் செய்தலால் முனிவன் என்றார். தேவி என்றது அம்முனிவன் மகளும் தன் தங்கையுமாகிய உதயனன் தாயினை; மருமகனென்றது உதயனனை. மாமன் என்றது ஏயர்குல வேந்தன் விக்கிரனை யென

வறிக. இவ்வாறு தமிழ்நாட்டு வழக்கிற் பண்டைப் புலவர் விளங்கவையாமையால் மருமக்கட்டாயம் தமிழர்க்குக் கூறுதல் அவர் கருத்தன்றென்று நன்கு தெளியலாம்.

இனிப் பாடப்பட்ட சேரவேந்தன் தந்தை சேர வேந்தனே யாதல்,

"இயறேர்த் தந்தை, வாடா வஞ்சி பாடினே னுக"
(புறம். 394)

என்பதை யெடுத்துக் காட்டித் தெளிவித்தேன். பாடப்பட்ட சேரவேந்தன் மனைவியாகிய பெருங்கோப்பெண்டு சேரவேந்தனைப் பெற்ற தாயாதல் எட்டாம் பத்துள்,

"ஒண்ணுதல் கருவிற் புதல்வற் பெற்றனை" (74).

என்பது காட்டி விளக்கினேன். இவ்வாறு அரசனைப் பெற்ற தாயே வாழ்த்தப்படுதல் இரண்டாம் பத்துள்,

"வயிறு பசிகூர வியலன்
வயிறு மாசிலீ யரவ னீன்ற தாயே" (20)

என்பதனாலறியலாம். உரைகாரர் ஈண்டு வயிறுபசிகூர வியலன் ஆதலின் அவனை யீன்றதாய் வயிறு பசித்துவருந்தாமற் றன் பரிகாரமாயுள்ளார்க்கு வேண்டும்பொழுதுகளிலே வேண்டுவன கொடுக்குமவனை யீன்ற காரணத்தால் வயிறு விளங்குவாளாக என்பதே இதன் கருத்தாகும். "தாயைக் குடர்விளக்கஞ் செய்த தாமோதரன்" எனப்பெரியாரும் பணித்தல் காண்க. தாய் வயிறு விளங்குதல் அத்தாய் வயிற்றிலுண்டாகிய இவ்வரசன் வழிவழியாகப் பெருகும் சந்ததியாலென்பது எளிதிலறியலாம். மருமக்கட்டாயமாயின் இவ்வரசனைப் பெற்ற வளவில் அவள் வயிறு விளங்காது இன்னுமொரு பெண் மகவை அவள் பெற்று அவள் வயிற்றில் அரசு வழியை யுண்டுபண்ணுதலால் விளங்கவேண்டுவதென்பது பலருமறிவர். ஈண்டு அவ்வாறு ஓர் பெண்மகவு பெறுதற்குரிய குறிப்பு ஒன்று மில்லாது அவனை ஈன்ற தாய் வயிறு விளங்குக என்றிருப்பது காண்க. அவன் வழியிலே அரசுச் சந்ததியே யில்லாது போகும் ஒருவனை யீன்றதனால் ஒருதாய் வயிறு விளங்குவளா என்று வினவி யறிந்து

கொள்க. ஈண்டு அவன் என்றது இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனை. அவனை ஈன்ற தாய் என்றது உதியஞ்சேரல் மனைவியாகிய வெளியன் வேண்மாணல்லினியை; இதனை,

> " உதியஞ் சேரற்கு, வெளியன் வேண்மா
> ணல்லினி யீன்ற மகன், இமயவரம் பன்னெடுஞ்
> சேரலாதன் எனப் பதிற்றுப்பத்து இரண்டாம்
> பத்துப் பதிகத்துட் கூறலானறியலாம் "

நல்லினி உதியஞ்சேரற் கீன்ற மகன் நெடுஞ்சேரலாதன் என்றே நேராக வியைந்து பொருள் சிறத்தல் காண்க. இதன்கண் உதியஞ் சேரற்குமகனாக உதித்தலான் ஆதன் சேரலாதன் எனப்பட்டான் என்பது 'ஈன்ற மகன் சேரலாதன்' எனவருதலானறியலாம். இதனைச் செங்குட்டுவன் மகன் "குட்டுவன் சேரல்" என்பது போலக் கொள்க. இத் தொடர் முறையே பழந் தமிழ் நெறிமுறை யென்பது முன்னரே பல மேற்கோள்கள் காட்டி விளக்கினேன். பிறர் கூறுமாறு வெளியனும் அவன் மனைவி நல்லினியும் ஈன்ற மகன் சேரலாதன் என்றால் இவ்வரசன் தந்தையுந் தாயும் ஒரு சிறப்புமில்லாத பெயர் மாத்திரையாய்க் கூறப்பட்டவராதல் தெளிந்துகொள்க. இங்ஙனமல்லாது வெளியன் வேண்மாஅளாகிய நல்லினி,

> " மன்னிய பெரும்புகழ் மறுவில் வாய்மொழி
> இன்னிசை முரசினுதியஞ் சேரற்கு
> ஈன்ற மகன் ". (2-ஆம் பத்துப் பதிகம்)

என்றால் தாய் வெளியன்குடியிற்றோன்றிய வேண்மகள் எனவும், இவன் தந்தை முடியுடைப் பேரரசன் எனவும், இனிது கொள்ளக்கிடந்து சேரர் நூல் வரலாற்றோடு பொருந்துவது காண்க. அன்றியும் பதிற்றுப் பத்துப் பதிகங்கள் பலவற்றில் அரசன் தாயைத் தேவியென்றே ஒழிதலும் சிலவற்றில் வெளியன் வேண்மாணல்லினி, சோழன் மணக்கிள்ளி, மையூர் கிழான், வேண்மாளந் துவஞ்செள்ளை எனப் பிறந்த குடிப் பெயரிட்டுக் கூறுதலுங் கண்டுகொள்க. அரசிக்குப் பிறந்த அரசியென்று நல்லிசைப் புலவர் பாடாதிரார் என்க. இத்தாயரெல்லாம் சேரர் குடியினல்லாது பிறர் குடியினிற் பிறந்து "இச்சேரர்" குடியிற் புக்கமகளிரேயாதல் ஏழாம்பத்துப் பதிகத்திற் "பொ

றையன் பெருந்தேவி " என்று இவருளொருத்தியைக் கூறுதலின் அறியலாம். ஒரு தந்தை யீன்ற மகளைப் பொறையன் பெருந் தேவியென வழங்கியது அவள் மணந்த முடியுடைப் பேரரச னாகிய சேரன்,

" அந்துவஞ் சேரலிரும்பொறை " (புறம். 13).

என்று பெயர் சிறத்தலான் எனத்துணியலாம். அந்துவற்கு அவன் பெருந்தேவி யீன்ற மகன் என்பதே கருத்து. அந்துவன் என்பானையே பொறையன் என்று அவன் பெயராற் சுட்டிக்கூறி னர். இவ்வாறு பெயர்ப்பின் பெயர் வந்து சுட்டுவது தமிழ் வழக்கென்பது அறிஞர் அறிந்தது. சீவகசாமி யென்பான் என்ற தன்பின் வானேற நீண்ட புகழான் என்பது வேறொருவனாகாது முன் வந்த சீவகசாமியையே சுட்டினாற்போல இதனையுங் கொள்க. ஈண்டுப் பொறையனும் பெருந் தேவியும் மணந்தீன்ற மகன் செல்வக்கடுங்கோவாழியாதன் என்று கூறலாமெனின் அது பொறையன் (சேரன்) மகன் வாழியாதன் என்பதற்கே பெருந்துணையாய் நிற்றலால் சேரன் மகன் சேரன் என்ற மக்கட் டாயத்தையே நன்கு வலியுறுத்தல் கண்டுகொள்க. சேரரைப் பெற்ற தாயர் யாரும் சேரர் குலத்தே தோற்றமுடையர் என் பதற்கு ஓர் குறிப்பும் நூல்களில்லாமை நன்கு ஆராய்ந்து கொள்க. செங்குட்டுவற்குச் சோழன் " மைத்துனவளவன் " (சிலப். நீர்ப்படை. 118) எனப்படுவனாதலான் செங்குட்டுவன் தாய் சோழகுலத்துதித்தவளாதல் ஒருதலை என்க. வேள்குல முஞ் சோழகுலமும் மக்கட்டாய முறையேகொண்டு நிகழ்தலான், அக்குடியில் ஆண்மக்களைப் புணர்ந்து ஒருத்தி பெறும் மகன் அக் குடி மக்கட்டாய முறைப்படி அந்தந்தச் செல்வமெய்தலன்றி அதை யிழந்துவிட்டுத் தாயின்வழிச் செல்வத்தை யெய்தலும் அச்செல்வ மெய்திய காரணத்தால் தான் பிறந்த குலத்தோர் மைத்துனராதலும் அசம்பாவித மென்பதியான் கூறவேண்டுவ தன்று. சோழன் மகணக்கிள்ளி யென்பது ககரம் விடுபட்டுச் சோழன் மணக்கிள்ளியென ஏடு எழுதினர் தவறெனக் கொள்க. இவ்வாறன்றி " சோழன் மணக்கிள்ளி" என்பதனைச் "சங்கரன், சடையன் " என்றாற் போலக்கொண்டு சோழன் மகள் மணக் கிள்ளி எனினும் இழுக்காது. ' அன்னிமிஞிலி ' என்பது அன்னி என்பவன் மகள் மிஞிலி என்றவாறும். அன்னி ஆண்பாற்

பெயராதல் "திதியனொடு பொருத வன்னிபோல" (126) என வரும் அகப்பாட்டடியான் அறியலாம். இம் மணக்கிள்ளிக்கே "நற்சோணை" என்பதும் பெயரென்று அடியார்க்கு நல்லாருரைப் பகுதியான் அறியப்படுவது. 'சோழன்றன் மகள் நற்சோணை' என்று அவர் பதிகவுரையிற் கூறிக் காட்டுவர். சிலப்பதிகார வாழ்த்தினும் பதிற்றுப் பத்துப் பதிகத்தினும் அடியார்க்கு நல்லாருரையினும் சோழன் மகள் செங்குட்டுவன்றாயென்று கொள்ள நிற்றல் கண்டுகொள்க. நக்கிள்ளி அல்லது மணக்கிள்ளியென்னும் இகரவிறுதிப் பெயரினை மிஞிலி யென்பது போலப் பெண்பாலினும் வரும் பெயராகக் கொள்க. "கொடுங்குழை யன்னி மிஞிலி" (அகம். 196) எனப் பெண்பாலினும் "அடுபோர் மிஞிலி" (அகம். 181) என ஆண்பாலினும் வருதலானுணர்க. சோழன் பெயர் மணக்கிள்ளி யென்றும் அவளீன்ற மைந்தன் செங்குட்டுவன் என்றுங் கொண்டால் கிடைத்த பிற் பதிற்றுப் பத்துப் பதிகங்கள் முற்றும் இன்ன சேரற்கின்ன பெண் ஈன்ற மகன் என்று கூறிய நெறிமுறையின்மாறி இச் செங்குட்டுவன் பிறப்புணர்த்திய தொடர் மட்டும் தாயைக்கூறுதொழிந்தது எடுத்துக்கொண்ட நெறிமுறைக் கியையாதென்க. செங்குட்டுவனுடன் பிறந்த பெருங்கவியரசர் "உலகாண்ட சேரலாதற்கு ஞாயிற்றுச் சோழன் மகளீன்றமைந்தன்" எனத் தன் தந்தையையுந் தாயையுங் கூறுதல் கொண்டு உண்மையுணர்க. பதிகத்தொடரை இளங்கோவடிகள் வாக்கிற்கியைப்பது பொருத்தமாதல் அறிஞர்க் கொப்பது; இதுவே பண்டைத்தமிழ் வழக்கென்பது முன்னரே காட்டி விட்டேன்; இதனால் ஒருவனிருமரபுஞ் சிறத்தல் எளிதினறியலாம்.

இனிப் பதிற்றுப் பத்துப் பதிகங்களில் வந்துள்ள "தேவி" என்ற சொல் மனைவி யென்றே பொருள் கொள்ளுமென்று பிறர் கருதினர். அதன் பொருட்டுச் சில கூறுவல். சின்னமனூர்ச் செப்பேட்டில் "வானவன் மாதேவி" * என்பது சேரன் குடியிற்றோன்றிய பெருந்தேவியெனப் பொருள்படுதலை முன்னரே காட்டினேன். "சேரமான் யானைக் கட்சேய்', என்புழிச் சேர

* "வானவன் மாதேவியென்று மலர் மடந்தை முன்பயந்த
மீனவர் கோனிராஜ சிங்கன்"

என்பது சாசனம்.

மான் என்பது குடியை யுணர்த்துவது போலக்கொள்க. (குறள். 355 பரிமேலழகருரை பார்க்க.) வானவன் மாதேவி-வானவன் குடிப்பெருந்தேவி. பெருங்கதையுள்,

"பெருக்கத் தானைப் பிரச்சோ தனற்குப்
பெருநில மன்னர் திருநகர்ப் பிறந்துதன்
நாட்டுப்பெயர் போறித்த சூட்டுப்பொலி சுடர்நுதற்
றேவியர்க் கெல்லாந் தேவி யாகி
யுடன்முடி கவித்த கடனறி கற்பி
னியற்பெருந் தேவி வயிற்றகத் தியன்ற

வட்டப் பெரும்பூண் வாசவ தத்தை" (2, 4, 8-25;

என்புழித் தேவி யிடைப்பட்டது முதல்வி அல்லது தெய்வப் பெண் என்னும் பொருளில் வந்தது. தேவியர்க்குத் தேவி என்பது மனைவியர்க்கு மனைவி யெனலாகாமை காண்க. பெருங் கதையுள் "கோசல வளநாட்டுக் கோமாற் கிழையாத், தேவி யர்க்கெல்லாந் தேவி" (4, 12, 144,-45) என வருதல் காணக. பின்னுமதன்கண்,

"ஆயபுகழ் முனிவனொடு தேவியை யிரந்து
...................மருமகற்றழீஇ"

என்புழித் தேவி முனிவனுக்கு மகளை யுணர்த்திற்று. சண்டவிக் கிரனுக்குத் தங்கையென்பதைக் குறித்ததெனினும் பொருந்தும். சிந்தாமணியுள்,

"வளர்த்த தாய்க்குச்
சித்திரத்தேவிப்பட்டந் திருமக னல்கினானே" (2657)

என்றலால் இத்தேவி யென்னும் பெயர் முறைப்பெயராகாது, தெய்வப்பெண் என்னும் பட்டப் பெயராதல் தெளியலாம். தேவி தெய்வப்பெண் எனப் பொருள் படுதல்,

"காலை நியமத்துத்தேவி" (மணிமேகலை)
"சிந்தா தேவி செழுங்கலை நியமத்து" (ஷை)

"கமலாசனத்தேவி" "சீதேவி" "மூதேவி" என வருமிடங் களிற் கண்டு கொள்க. மலர்த்தேவி மலரிடந் தோன்றிய தெய்

வப்பெண் எனப் பொருள்படும். பதுமன்றேவி, வானவன்றேவி என்பன பதுமன்கட்டோன்றியதேவி வானவன்கட்டோன்றிய தேவி யெனப் பொருள்படுமென்று கொள்க. "குலமுதற்றேவி" யெனக்கொலைக்களக்காதையில் வருவதற்கு அடியார்க்கு நல்லார் "குலப் பிறப்புடைய பெருந்தேவி" யென வுரைத்ததனை ஈண்டைக்கு நினைக்க. பதுமன்றேவி வானவன்றேவி யென்பனவற்றை 'மலையருவி' யென்பது போலக் கொள்க.

அரசர் புதல்வியரைத் தெய்வமாதர்எனல் பண்டைவழக்கே என்பது,

"வையம் வந்து வாயி னின்றமை
தெய்வ மாதர்க் கிசைமின் சென்றன" (3,5, 67-68)

எனப் பெருங்கதையுள் வருதலானறியலாம். ஈண்டுத் தெய்வ மாதர் என்றது மணவாத கன்னியாகிய பதுமாபதியையென்று நோக்கிக்கொள்க.

பெருங்கதையுள்,

"தலைப்பெருந் தேவியுந் தந்தையுங்கூடிக்
குலப்பெருந் தேவியாக்கோடி" (5, 8, 148-49)

என்புழித் தலைப் பெருந்தேவியெனத் தாய்க்கு வந்தது காண்க. பின்னும் "தற்பயந் தெடுத்த கோப்பெருந் தேவி" என அந் நூலுள் வருதல் காண்க. இத்தேவியர் அரசன் மனைவியர்க்குக் கூறுமிடத்துத் "திருநிலக் கிழமைத் தேவியர்" (மணிமேகலை, 23, 4) எனக்கூறுதல்கொண்டு மாமனுடைய நிலவுரிமையில் லாத தேவியராகாரென்று நன்கு துணிக.

இத்துணையுங் காட்டிய வாற்றால் தேவியென்பது மனைவியேயாமென்று பிறர் துணிந்தது பொருந்தாமை கண்டு கொள்க. இவற்றால் தேவியென்பதற்கு இடநோக்கு வரலாற்றுக்கியையப் பொருள்கொள்ள வேண்டுவதே முறையென்று இனிது தேறலாம். இவ்வாறு வருந்தொடரில் நான்கனுருபு ஈன்ற மகளின் கணவன் பெயரே பெற்று நிகழ்வது,

"வென்வேற் கிள்ளிக்கு நாகநா டாள்வோன்
றன்மகள் பீலி வளைதான் பயந்த—குழவி"

என்னும் மணிமேகலையடியினை யெடுத்துக்காட்டி விளக்கியதனு னறியலாம். இவற்றாற் பதிற்றுப்பத்துப் பதிகங்களில் நான் கனுருபு பெற்றுவரும் பெயர்கள் ஈன்ற மகளின் கணவன் பெயரேயாதல் நன்கு தெரிந்துகொள்க. தேவியென்ற பெயர் நான்கனுருபு பெற்றபெயரோடியைந்து பொருள் தெரிப்பதை முன்னரே காட்டினேன். நான்காம்பத்துப் பதிகத்துள் "சேர லாதற்கு வேள் ஆவிக் கோமான் பதுமன்றேவி யீன்ற மகன்" என்பது சேரலாதற்கு தேவியீன்ற மகன் எ-று. இத்தொடர் பெருங்கதையுள் மேலே காட்டிய "பிரச்சோதனற்கு ...தேவி வயிற்றகத்தியன்ற வாசவதத்தை" என்பது போல வந்துள்ளது கண்டுகொள்க. சேரலாதற்குத் தேவி இக்குடிப் பிறந்தவள் என்று விளக்கவேண்டி. வேளாவிக் கோமான் பதுமன் குடியிற்றோன்ற முடையாள் என்று காட்டிப் பதுமன்றேவி யென்ற வாறும். இவ்வாறே ஆறும் பத்துப்பதிகத்துள்,

"நெடுஞ் சேரலாதற்குத் தேவியீன்ற மகன்"

எனவும் அத்தேவி இன்ன குடியிற்றோற்ற முடையளென்பது வேண்டிவேளாவிக்கோமான் குடித்தேவி என்னுங் கருத்தால் வேளாவிக் கோமான்றேவி என வந்ததெனவும் தெரிந்து கொள்க. ஏழாம்பத்துப் பதிகத்துள் அந்துவற்கு அவன் பெருந் தெவியீன்ற மகன் என்னுங் கருத்தால் அந்துவற்குப் பொறை யன் பெருந்தேவி யீன்ற மகன் என வந்தது. எட்டாம் பத்துப் பதிகத்துள் செல்வக் கடுங்கோவுக்குத் தேவியீன்ற மகன் என வும், அத்தேவி வேளாவிக் கோமான் பதுமன் குடியிற்றோற்ற முடையள் என்னுங் கருத்தாற் பதுமன் றேவியெனப்பட்டன ளெனவும் கொள்க. இவ்வாறு பொருள் கொள்வதே பொருத்த மென்பது 2, 5, 9, ஆம் பத்துப் பதிகங்கள் இனிது காட்டுதல் உய்த்துணர்க. உதியஞ் சேரற்கு நல்லினி யீன்றமகன் என வியைந்து, அந்நல்லினி பிறந்த குடியை விளக்கி, வெளியன் வேண்மாணல்லினி யெனக் கிடத்தலானும், சேரலாதற்கு நக் கிள்ளி யீன்ற மகனென இயைந்து அந்நக்கிள்ளி பிறந்த குடியை விளக்கிச் சோழன் மகள் எனக் கிடத்தலானும் குட்டுவனிரும் பொறைக்கு அந்துவஞ் செள்ளை யீன்றமகன் என வியைந்து அவ்வந்துவஞ் செள்ளை பிறந்த குடியை விளக்கி மையூர்கிழான் வேண்மானந்துவஞ் செள்ளையெனக் கிடத்தலானும் உண்மை

யறிந்துகொள்க. இங்ஙன மியையக் கொள்வதே தமிழ் நூனெறி முறையென்பது மேலே காட்டிய பழைய மேற்கோள் களானும் நான்கனுருபு மாமன் பெயரோடியைந்து ஒருத்தியின் ற மகன் அம்மாமனுக்கு மருகனாதற்கு மேற்கோள்களே கிடையாமையானும் நன்கு துணிக.

இங்ஙனம் தந்தையாண்டு அவன்பின் அவன்மகனுண்டுவந்து நிகழ்ந்த அரசுரிமையின் வேறாய் மாமனுண்டு அவன்பின் மருமகனுண்ட அரசுரிமை இச்சேரர்க்குரியதாகக் கூறின், சேரலாதற்குப்பின் அவன்றம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவன் அரசுரிமையெய்தி ஆண்டதன்பின் அக்குட்டுவற்கு மருமக்களாகிய களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலும், செங்குட்டுவனும், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும் தம் இளையமாமன்பின் அவற்கு மருமக்களாய் அரசுபெற்றவராகவும் அவ்விளைய மாமனைவிடுத்து அவற்கு மூத்தமாமனாகிய சேரலாதன் அரசுரிமையே அவர்பெற்றார், என்பதற்குப் பொருத்தமான காரணங்காட்ட வியலாமை நோக்கிக்கொள்க. சிற்றப்பனுண்டதன்பின் தமப்பனுக்கு மக்கள் முறையில் இவன் ஒரு காலத்தே சேரநாட்டுப் பல்லிடத்தும் அரசெய்தி ஆண்டிருந்தார் என்பது பொருந்திற்றுதல் காண்க.

" நேரிமிழ் சிலம்பி னேரியோனே " (பதிற். 40)

என்பதனாற் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல்நேரிமலையினும்,

" துவ்வா நறவின் சாயினத்தானே " (பதிற். 60.)

என்பதனால் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் நறவூரினும்,

" குஞ்சர வொழுகையிற் கோநகரெதிர்கொள
வஞ்சியுட் புகுந்தனன் செங்குட்டுவனென் "
(சிலப். நீர்ப்படை. 255-56)

என்பதனால் செங்குட்டுவன் வஞ்சிமாநகரினும் அரசாண்டது புலனும். இங்ஙனங் கொள்ளாக்கால் இவர் ஆயுள் அளவை மக்கட்கியல்பாகிய ஆயுளைக்கடந்து வரலாற்று முறையும் இயைபு பெறாது பலவகையினும் இடர்ப்படுதல் கண்டுகொள்க *

* இதனைச் சென்னை லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைத் தமிழ்ப் பண்டிதரும் என் அருமை அம்மான் சேயுமாகிய மு. இராகவையங்காரவர்கள் இனிது விளக்கினர். அவர் ஆராய்ந்தெழுதிய " சேரதாய வழக்கு " என்ற நூலுட் கண்டுகொள்க.

பிற்காலத்துக் கடன்மலைநாட்டிற் குடியேறிய ஒருதிறத்தார் கொண்ட மருமக்கட்டாய் முறையைக் கொங்குமுதல் மேல் கடலளவும் ஆண்ட பண்டைத்தமிழ்ச் சேரர்க்குச் சொல்லப் புகு மிடத்து உண்டாமிடர்ப்பாடுகள் மிகப்பலவாகுமென்க. இம்மரு மக்கட்டாய முறையாற் குடியேறியது தொட்டு இக்கடன் மலை நாடு "நாரிசேரம்" என வழக்குப் பெற்றதாகும். இவ்வுண் மையைக் கன்னடசாசனம் பலவற்றுள்ளும் கன்னட தேயத்தெற் கெல்லை கூறுமிடங்களில் கொங்குசேரம், ஆனைமலை நாரி சேரம் என்று வருதலானறிந்துகொள்க. தமிழிற் சேரலர் என் பதே கேரளர் என மரீஇயிற்றென்பது அறிவாளர் துணிந்தது. சேரல் சேரலர் பெண்பாற்பெயராகாமை நன்குணர்ந்துகொள்க. கேரள புத்திரர் என்ற வழக்கும் நோக்கிக்கொள்க. இச்சேர குலத்தவர் பெயரில் அக்குடி குறித்த பெண் பெயரே நூல் வழக்கிலில்லாமை நோக்கிக்கொள்க. சேரல், சேரன், சேரலன் மாந்தரன், பொறையன், கோதை, பூழியன், குட்டுவன், கொங் கன், குடக்கோ, குடநாடன் என்பன முதலாகப் பல பெயர்கள் ஆண்பாலிலே வழங்குதல் தமிழ் கற்றோர் நன்கறிவர். இப்பெயர் கட்குப் பெண்பாற் பெயர் வழக்கின்மை நூல்களிற் கண்டுணர்க. ஈண்டுக் கோதை ஆண்பாலேயென்பது,

"தண்கடனாடனொண் பூங்கோதை"
(பத்துப்பாட்டு. மதுரை. 524).

எனவும்,

குட்டுவன் கோதை"

எனவும்,

"வாய்வாட் கோதை" (சிலப். 25, 3)

எனவும் வருவன கண்டுதெளிக. அரசுரிமை அக்குடிப் பிறந்த மகளிர்க்கு உளதாயின் அம்மகளரசிக் கேற்றதொரு பெயர் அக் குடியில் வழங்காதிராது என்று துணிக. இவற்றாற் சேரர்குடி யிற் றந்தையுரிமை மகற்குறுவதாதல் நன்கறியலாம். பிறமொழி யிலுங் காணப்படுதல் ஈண்டைக்கியையக் கொள்க.

இனிச் சிலப்பதிகார நடுகற்காதைக் கண்,

'வேந்துவினை முடித்த வேந்துவாள் வலத்துப்
போந்தைக் கண்ணி நின்னூங்கணோர் மருங்கிற்
கடற்கடம் பெறிந்த காவல னாயினும்
விடர்ச்சிலை பொறித்த வேந்த னாயினும்" (136-6)

என்பது முதலாக வருமிடத்துப் பல சேரவேந்தர் கூறப்படுதலும் அவரெல்லாம் "நின்னூங்கணோர்" என்பதனாற்செங்குட்டுவன் குல முன்னோராக வழங்கப்படுதலும் கற்றோர் பலருமறிவர். இம்முன்னோர் மாமன்மாராகிய முன்னோரா, தந்தை தாயராகிய முன்னோரா, என்று வினவியறியப்புகின் இவ்வூங்கணோர் என்னுஞ் சொல் சங்க நூல்களில் எங்ஙனம் வழங்கியுள்ளதென்று தேடிக்கண்டு அக்கண்ட வழக்காற் பொருள் துணிவதே அறிவுக்கொத்ததாகும். 39-ம் புறப்பாட்டிற் குளமுற்றத்துத் துஞ்சியகிள்ளி வளவனைப் பாடியவிடத்து,

" தூங்கெயிலெறிந்த நின்னூங்கணோர் நினைப்பின் "

என்புழிச் சோழர் குடித் தாயமுறைப்படித் தந்தை தந்தையராகிய முன்னுள்ளோர்க்கு வழங்கியது கண்டு சிலப்பதிகார 'ஊங்கணோர்க்கும்' இதுவே பொருள் என்று கொள்வதல்லது வேறு பொருள் கொள்ளற்கு, யாதொரு குறிப்பும் மேற்கோளுமில்லாமை ஆராய்ந்துகொள்க. இப்பொருளே செங்குட்டுவனைக் கோமகன், இறைமகன், எனப் பல்லிடத்துங் கூறுதற் கியைபுடைத்தாதல் நன்குணர்க.

இத்துணையுங் கூறியவாற்றான் தமிழ் மூவேந்தரும் அவர் பெண்கொள்ளற் குரிய வேளிரும் மக்கட்டாய முறைமையராதல் நன்கறியலாம்.

இனித் தொண்டையர் குடிக்கும் இம்முறையே உண்மை தொண்டைமான் இளந்திரையனைப் பாடிய பெரும்பாணாற்றுப் படையுள்,

" முந்நீர் வண்ணன் பிறங்கடை
யுரவோ னும்பல் "

எனவும் " கொண்டியுண்டித் தொண்டையோர் மருக " எனவும் வரும் அடிகளைநோக்கியும் உரைநோக்கியும் துணிந்து கொள்க.

இவனைச் சோழர் குடியிற்றோற்ற முடையனாகக் கூறுதலான் அக்குடி முறைமையே இவற்குமாத லெளிதிலறியலாம். பல படுகடாங்கொண்ட நன்னன்,

" நன்னன் சேய் நன்னன் "

என அந்நூலுட் கூறப்படுதலான் அவன்றாயமுறையும் மக்கட் டாய முறையாதல் துணியலாம். சிறுபாணாற்றுப்படைகொண்ட நல்லியக்கோடனை அந்நூலுள்,

" தாங்கரு மரபிற் றன்னுந்தந்தை
வான்பொரு நெடுவரை வளனும் பாடி "

என்று கூறுதலான் இவன் மக்கட்டாய முறையுடைமை எளிதி லறியலாம். புறநானூற்றில் நாஞ்சில் வள்ளுவனைப் பாடிய பாட்டில்,

" செவ்வரைப் படப்பை நாஞ்சிற் பொருந
சிறுவெள் ளருவிப் பெருங்க லாடனை
நீ வாழியர் நின்றந்தை
தாம் வாழியர் நிற்பயந்திசி னோரே "

எனவருதலான் இவனும் தந்தைக்குரியது மகற் குறுவது என் னுந் தாய முறைக்கு இயைந்தவனாதல் உய்த்துணர்க. அதி கனைக் கூறிய புறப்பாட்டில் (290) " நுந்தை தந்தைக் கிவன் றந்தை தந்தை " என வருதலால் இவன் தாயமுறையும் இஃதே யாதல் தெளியலாம். இவற்றானே மறவர் தாயமுறையும் மக்கட்டாய முறையென்பதறிக, இதனை முன்னரே காட்டி னேன்.

இவற்றாற் சங்கத்தமிழ் நூல்களிற் கண்ட சேர சோழபாண் டியராகிய பெருமுடி வேந்தரும் அவர் பெண் கொளற்குரிய குறு முடி வேளிரும் பலசிற்றரசரும் மக்கட்டாய முறையே உடைய ராதல் ஐயமறத் துணியலாம்.

# அகத்தியர்.

இம்முனிவர் மலையை அடக்கிய காரணத்தால் அகத்தியர் எனப் பெயர்பெற்றனரென்பர். மலை என்றது விந்திய மலையாகும். அம்மலை வடநாட்டார் தென்னாடு புகுதற்குப் பெருந்தடையாக அடவிகள் சூழ்ந்து நெறியின்றியிருந்ததைத் தம் அறிவாலும் வலியாலும் நெறிகண்டு கடந்து இவர் வடநாட்டினின்றும் தென்னாடு புகுந்த சிறப்புப்பற்றி இவ்வாறு மலையை அடக்கினரென்று பெயர் பெற்றனராவர். இவர் புகுந்த காரணத்தால் தென்றிசை ஆகஸ்தியம் எனப் பெயர் பெற்றதென்பர். ஆகஸ்தியம் என்பது அகஸ்தியதிக்கு என்பதாம். ஆகஸ்தியம் என்று தமிழை வழங்குவதும் உண்டு. வடநாட்டினின்று தென்னாட்டிற் குடியேறிய ஆரியருள் இவர் தலைசிறந்தவராதல்பற்றி இவர் பெயரையே இவர் புக்கு வாழ்ந்த தென்றிசைக்கும் இட்டு வழங்கினரென்று உணரத்தகும்.

வான்மீகி இராமாயணத்தால் விந்தியமலைக்குத் தென்பால் பஞ்சவடி (நாசிக்) யடுத்து இம்முனிவர் இருந்த தவச்சாலை உள்ளதென்று கேட்கப்படுகின்றது. (ஆரண்ய காண்டம். 11, 42) மேற்கூறிய இராமாயணம் கிஷ்கிந்தாகாண்டத்தில் தென்கடலோரத்து மலய பருவதத்தை யடுத்து இம்முனிவர் தவச்சாலையுள்ளதென்றும் அறியப்படுகின்றது. (வான். இரா. 5-41. 15-16). "அந்த மலய மலையின் சிகரத்திலே ஆதித்தனுக்குச் சமானமானமிகுந்த ஒளியையுடைய முனிசிரேஷ்டரான அகத்தியரைக் காண்பீர்கள்" என்பதனாலிஃதறியலாம். இவ்விரு தவச்சாலைகளினுங் கூறப்படும் அகத்தியர் ஒருவரோ இருவரோ எனத் துணியலாகாதபடி ஐயம் நிகழ்கின்றது. இவரன்றி இருக்கு வேதத்தில் ஒரு சூக்தத்திற்குக் கருத்தாவாகக் கூறப்பட்ட அகத்தியனார் ஒருவருண்டு. இவர் லோபா முத்திரையை மணந்தவரென்று அவ்வேதத்தால் அறியக்கிடப்பது. இங்ஙனம் பலவாறுகக் கேட்கப்படும் பலர் அகத்தியருள் தமிழர் தமிழ்நூல்களால் உடன்பட்ட அகத்தியர் பொதியிற்கணிருந்த அருந்தவ முனிவரேயென்பது நூல்வல்லார் நன்கறிவர். நக்கீரனார்,

"முரணில் பொதியின் முதற்புத்தேள் வாழி
பரணர் கபிலரும் வாழி—யரனிய

வானந்த வேட்கையான் வேட்கோக் குயக்கோடன்
ஆனந்தஞ் சேர்கசுவா கா."
(தொல். 490. மேற். பேரா. நச்சி.)

"ஆரிய நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்டானைச்—சீரிய
அந்தண் பொதியில் அகத்தியனா ராணையாற்
செந்தமிழே தீர்க்கசுவா கா" (ஷை ஷை)

எனப் பாடுதலால் அறியலாம். சிலப்பதிகாரம் அடைக்கலக் காதைக்கண்,

"மாமறை முதல்வன் மாடல னென்போன்
மாதவ முனிவன் மலைவலம் பூண்டு
குமரியம் பெருந்துறை கொள்கையிற் படிந்து" (13-15)

என இளங்கோவடிகள் கூறுதலானும், மாதவ முனிவன் மலை தென்கடற் பக்கத்ததென்று துணியலாகும். ஆண்டு அடியார்க்கு நல்லார் முனிவன் மலை என்பதற்கு அகத்தியனது பொதியமலை யெனவுரைத்தார். தேவாரத்தும் அகத்தியர்க்குப் பொதியச் சேர்பு நல்கியது கூறப்பட்டுள்ளது;

"சந்தி மூன்றிலுந் தாபர நிறுத்திச்
சகளி செய்திறைஞ் சகத்தியர் தமக்குச்
சிந்து மாமணி யணிதிருப் பொதியிற்
சேர்வு நல்கிய செல்வங்கண் டடைந்தேன்"
(சுந்தரர். திருநின்றியூர். 5)

என்பது காண்க. ஹியூன்ஸாங் என்னுஞ் சீன யாத்திரிகரும்,

"இந்த இராஜ்யத்தின் எல்லையிலிருந்து (காஞ்சியிலிருந்து) 3000 லீ (li) தூரத்தில் மலையகூடம் என்ற தேசம் இருப்பதாகக் கூறுகின்றனர். அது கடற்கரையை அடுத்திருப்பதால் எண்ணிறந்த நவமணிகளைக் கொண்டுள்ளது"

---

Life of Hiouentsang of Shaman Hwinisu—By Beal Trubnors. p. 140

"It is reported that 3000 li or so from the frontiers of this Kingdom is the country Malakuta. As it borders on the sea-coast it is exceedingly abundant in different gems."

என்று தாம் எழுதியுள்ள குறிப்பிற் கூறுகின்றார். சங்கத்து எட்டுத் தொகையுள் ஒன்றாகிய பரிபாடலிலும்,

“ பொதியின் முனிவன் புரைவரைக் கீறி ” (11-11)

என வந்தது. ஈண்டு அகத்தியமீனைப் பொதியின் முனிவன் எனக்கூறுதல்காணலாம். வான்மீகர் கிஷ்கிந்தாகாண்டக்கூற்றும் பிற்காலப் பெருநூல்வழக்கும் முற்காலச் சங்கநூல் வழக்கும் ஒத்தலால் அகத்தியருக்குப்பொதியிலை இருப்பிடமாகப்பொய்யே கற்பித்தனரென்றல் சிறிதும் பொருந்தாமையுணர்க. வெண்பாமாலைப் பாயிரத்தில்,

“ தென்மலை யிருந்த சீர்சான் முனிவரன் ”

என வந்தது. “ மலயத் தருந்தவன் ” என்பது காரிகை. இவையெல்லாம் மாதவ முனிவன் மலை என்ற சிலப்பதிகாரத்துடன் இயைதல் காண்க. இவற்றால், தமிழர் கூறும் வரலாறெல்லாம் பொதியிற்கண்ணுள்ள அகத்தியரைக் குறித்தனவென்றுதெளியலாகும். வீரசோழிய நூல் செய்த புத்தமித்திரனார்,

“ ஆயுங் குணத்தவ லோகிதன் பக்க லகத்தியன்கேட்
டேயும் புவனிக் கியம்பிய தண்டமி ழீங்குரைக்க ”
(வீரசோ. பாயி. 2)

என்பதனால் அகத்தியர் பௌத்த மதத்து அவலோகேச்வரரிடத்துத் தமிழ் கேட்டறிந்தனரென்பர். அவலோகிதர் தமிழறிந்தவர் என்பதற்குரிய ஆதாரம் இதுவேயாகும். போதலகிரியில் அவலோகிதர் தம் பத்தினியாகிய தாரையுடன் உள்ளனர் என்பது பௌத்தநூற் கொள்கையாம். தாராஸூக்தத்தில் ‘போதலகிரி நிவாஸிநி’ என்று அவன் துதிக்கப்பட்டவாறு அவர் காட்டுவர். ஆயினும் அசோக சக்கரவர்த்தி காலம் வரையில் அதாவது கிறிஸ்து பிறத்தற்கு முன்னர் 274 ஆண்டுவரையில் தமிழ் வேந்தருள்ள தென்பக்கத்துப் பௌத்தமதக் கொள்கைகள் புக்கன அல்ல என்பது அவ்வசோக சாசனத்தால் (கெர்நார்க் கல்வெட்டு) அறியக்கிடத்தலான் ஸ்ரீராமமூர்த்தி காலத்துள்ள வைதீகரான அகத்தியர் வரலாற்றொடு அஃதியையாமை தெளியலாம். வான்மீகம் ஆரணிய காண்டம் 12-ஆம் சருக்கத்து 16 முதல் 21 வரையுள்ள சுலோகங்களில் “அவன் (இலக்குமணன்)

அங்கு (அகஸ்தியருடைய சாலையில்) பிரமன் ஸ்தானத்தையும் அக்நியின் ஸ்தானத்தையும், விஷ்ணுவின் ஸ்தானத்தையும். . . . . . . . . .ஸுப்ரமண்யர் ஸ்தானத்தையும் தர்மதேவதையின் ஸ்தானத்தையும் பார்த்தார் ''என்றிருத்தல் காண்க. தமிழிலக்கணஞ் செய்த அகத்தியர் ஸ்ரீராம காலத்து அகத்தியரின் வேருய் மிகப் பிற்பட்டவரெனின், அங்ஙனம் கூறுவது இயைபுடையதாயினும் அவர் வேதவொழுக்கினராவரன்றி வேருகார் என்க. வேத வழக்கொடுபட்டாரெல்லாம் அகத்தியரைச் சிவபிரான்பால் தமிழ் கேட்டறிந்தனரென்றே கூறுவர். இதனைக் கம்பநாடர்,

'' உழக்குமறை நாலினுமு யர்ந்துலக மோதும்
வழக்கினு மதிக்கவினி னும்மரபி னுடி
நிழற்பொலிக ணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கட்
டழற்புரை சுடர்க்கடவு டந்ததமிழ் தந்தான் ''

(ஆரணி. அகத். 41)

என்பதனுற் சிவபிரான் தந்த தமிழிலக்கணத்தையே அகத்தியர் உலகினுக்குத் தந்தார் என்று கூறுதல் காணலாம். சிவபிரான் பாணினிக் குணர்த்தியதும் வடமொழி யிலக்கணத்தையேயாகும். அதுபோல இதனையுங் கொள்க. '' நான்மறையினும் உலகவழக்கினும் கவின்பெற நூலினும் முறைப்பட ஆராய்ந்து கடவுள் தந்த தமிழ் '' என்றதனுலும் அஃது இலக்கணமேயாவதறிக. நான்மறையினுராய்ந்தன ; மொழிக்கு முதற்காரணம் எழுத்தென்றலும், அச்சும் அல்லுமாம். அவற்றின் வேற்றுமையுங்கலப்பும் இயக்கமுங் கருதி அவற்றிற்கு உயிரையும் உடலையும் உவமையாகக்கண்டு அங்ஙனமே குறியிடுதலும், அவற்றிற்குப்பிறப்புவருண முதலிய வுணர்த்தலும், அவற்றிற்கு மாத்திரை காண்டலும், அவற்றிற்சிலவற்றிற்கு அளபெடை (புலுதம்) கோடலும், அறம் பொருள் இன்பப் பகுதிகோடலும், நிலங்கட்குத் தெய்வங்கள் கூறலும், யாழோர் கூட்டமுடன்படலும், அந்தணர் அரசர் வணிகர் வேளாண் பக்கத்தியல்பு காட்டலும், அங்கதம், பிசி, மந்திரம், வாய்மொழிமுதலியனவகுத்தலும், பிறவும் ஆம். உலக வழக்கின் ஆராய்ந்தன ;—இயற்சொல், திரிசொல், செந்தமிழ்ச் சொல், கொடுந்தமிழ்ச் சொல், வடசொல், மரீஇயின சொல், மருவாமுதற்சொல், மங்கலச் சொல், அமங்கலச் சொல், இடக்

கரடக்கு, குழூஉக்குறிச்சொல் முதலியனவும், மரபியலிற் குறித்தனவும் பிறவுமாம்.

மதிக்கவினிறுடியன :—தமிழ் நாட்டுத் தொன்று தொட்டுக் கேள்வியான் வந்த அம்மானை வரி, ஊசல்வரி, குன்றக் குரவை, ஆய்ச்சியர் குரவை, வள்ளைப் பாட்டு, உழத்திப்பாட்டு, குறத்தி பாட்டு, வெறிப்பாட்டு என்பனபோன்றபாடல்கள்பற்றி ஆராய்ந்தனவாம். (மதி-நூல்)

" வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெய ரெல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர் "

(தொல். செய். 79)

என்றது காண்க. அகத்தியனாராற் செய்யப்பட்டன மூன்று தமிழிலக்கணம் என அறியப்படுதலால் இம்மூன்றாகிய இயல், இசை, கூத்து, எனப்பாகுபாடு செய்தற்கேற்றவாறு தமிழ் என்னும் பிண்டப்பொருள் அவர் இலக்கணஞ்செய்வதற்கு முன்னே வளர்ந்து ஒருநாகரிக நிலையில் இருந்ததென்பது நன்கறியலாகும். இதனால், சிவபிரான் தந்த தமிழிலக்கணத்தை முத்தமிழிலக்கணமாகப் பாகுபாடுசெய்து அகத்தியர் தம்மாணாக்கர்க்கு அறிவுறுத்தினரென்று தெளியலாகும். தொல்காப்பியனாரும் அம்மூந்து நூல்கண்டு முறைப்பட வெண்ணிப் புலந்தொகுத்தோராதலால் (பனம் பாரனார்பாயிரம்) அவ்விலக்கணங்களுள் ஒருபகுதியாகிய இயற்றமிழ் இலக்கணத்தை அக்காலத்துமக்கள் அறிவிற்கேற்றவாறு தொகுத்து விளக்கினார் எனக்கொள்ளலாம்.

" தாயிற் சிறந்தன்று நாண்டைய லாருக்கந் நாண்டகைசால்
வேயிற் சிறந்தமென் றோளிதிண் கற்பின் விழுமிதன்றீங்
கோயிற் சிறந்துசிற் றம்பலத் தாடுமெங் கூத்தப்பிரான்
வாயிற் சிறந்த மதியிற் சிறந்த மதிநுதலே " (204)

என்னுந் திருச் சிற்றம்பலக் கோவை உரையில்,

" உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று "

(தொல். களவி. 22)

என்றாராகலின், "வாயிற் சிறந்த மதியிற் சிறந்த" என்பதற்குத் தாய்போல நாண்சிறத்தலும் நாணிலும் கற்புச்சிறத்தலும் ஆகிய இரண்டும் கூத்தப்பிரான் வாயிற் சிறந்த நூல்களிடத்துச் சிறப்புடைய பொருள் என்றுரைப்பினும் அமையும்" என "உயிரினுஞ்சிறந்தன்று நாணே" என்னுந் தொல்காப்பியத்தினை எடுத்தோதி அதனைக் கூத்தப்பிரான் வாயிற்சிறந்த நூலாகக்கொண்டு நாண் சிறத்தலும் கற்புச்சிறத்தலும் இரண்டும் அந்நூற் பொருளெனக் கூறுதற்கு உடன்பட்டதனாற் றெளிந்துகொள்க. இதனாலும் கூத்தப்பிரான் அருளியது இலக்கணமென்பதுணரப்படும். இவர் முத்திறத் தமிழிலக்கணமுஞ் செய்தது பல்லுரைகாரரும் தம் நல்லுரைக் கண்ணே ஆங்காங்கு "அகத்தியம்" எனப்பெயரெடுத்துக் காட்டிய மேற்கோட் சூத்திரங்களால் உணரப்படும். இவற்றை யாப்பருங்கல விருத்தி உரையினும் நன்னூல் மயிலைநாதர் உரையினுங் காணலாம். சிலப்பதிகாரம் அந்திமாலைச்சிறப்புச்செய்காதையில் அடியார்க்கு நல்லார் உரைமேற்கோளாக எடுத்துக் காட்டிய,

"தக்கராக நோதிறங் காந்தார பஞ்சமமே
துக்கங் கழிசோம ராகமே—மிக்கதிறற்
காந்தார மென்றைந்தும் பாலைத் திறமென்றார்
பூந்தா ரகத்தியனார் போந்து"

என்னுஞ் செய்யுளால் அகத்தியனார் இசைத்தமிழிலக்கணம்செய்தது அறியலாம். சிலப்பதிகாரம் அரங்கேற்று காதைக்கண்,

"அவை தாம்,
சாந்திக் கூத்தும் விநோதக் கூத்துமென்
றாய்ந்துற வகுத்தன னகத்தியன் றனே"

"எழுவகைக் கூத்தும் இழிகுலத்தோரை
யாட வகுத்தன னகத்தியன் றனே"

என்பன முதலாகக் காட்டும் மேற்கோள்களால் அகத்தியர் கூத்திலக்கணஞ் செய்தது உணரலாகும். தொல்காப்பியம் உவமவியலில் "நிரனிறுத்தமைந்த" என்னுஞ் சூத்திரவுரையில் (தொல். செய். 91) பேராசிரியர், "அகத்தியனாராற் செய்யப்பட்டமூன்று தமிழினும்" எனக்கூறுதலான் இவர் முத்தமிழிலக்

கணம் செய்தது உண்மையென்று நன்குணரலாகும். இயற்றமிழ் மனப்பாங்கைப்பற்றியதாதலும், இசைத்தமிழ் அஃதுடன் இனிய ஓசையைப் பற்றியதாதலும், கூத்து இவற்றுடன் மெய்யினியக்கம் பற்றியதாதலும் தெளியலாம். இவற்றால் மனம், மொழி மெய் என்னும் மூவகைக் கரணத்தானும் மிக முந்தியகாலத்தே தமிழ் ஆராயப் பெற்று வளர்ந்து இலக்கணவமைதி பெற்று நிரம்பியமை எளிதின்றியலாம். இத்தமிழ் நிலத்து இலக்கியங் கண்டு இலக்கணம் வகுத்தனராவரன்றி வேறாகாமை நினைக.

" இளங்கதிர் ஞாயி றெள்ளுந் தோற்றத்து
விளங்கொளி மேனி விரிசடை யாட்டி
பொன்றிகழ் நெடுவரை யுச்சித் தோன்றித்
தென்றிசைப் பெயர்ந்தவித் தீவத் தெய்வதம்
சாகைச் சம்பு தன்கீழ் நின்று
மாநில மடந்தைக்கு வருந்துயர் கேட்டு
வெந்திற லரக்கர்க்கு வெம்பகை நோற்ற
சம்பு வென்பாள் சம்பா பதியினள்
செங்கதிர்ச் செல்வன் திருக்குலம் விளக்கும்
கஞ்ச வேட்கையிற் காந்தமன் வேண்ட
அமர முனிவ னகத்தியன் றனாது
கரகங் கவிழ்த்த காவிரிப் பாவை
செங்குணக் கொழுகியச் சம்பா பதியயற்
பொங்குநீர்ப் பரப்பொடு பொருந்தித் தோன்ற
வாங்கினி திருந்த வருந்தவ முதியோள் " (1-15)

என மணிமேகலையிற் கதைபொதி பாட்டில் வரும் அடிகளால் வடக்கண் மேருமலையில் சம்பு என்னும் நாவல் மரத்தின் கீழ் நின்ற தவ மூதாட்டியாகிய சம்பு வென்பவள் நிலமகட்கு வருந்துயரத்தைக் கேட்டு, அரக்கர்க்குப் பகையாக நோன்பு பூண்டு சோணாட்டுப் புகார்ப் பட்டினத் திருந்தனள் என்றும், அக்காலத்துச் சூரிய குலத்துக் காந்தன் என்னும் மன்னவன் வேண்ட அமரமுனிவனாகிய அகத்தியன் தனது கரகங் கவிழ்ந்த காரணத்தால் காவிரி யாறாய் நேர் கிழக்கே யொழுக, அது புகாரருகில் வருதல் கண்டு அங்கிருந்த தவமூதாட்டியாகிய சம்பு வெம்பவள் அக்காவேரியை எதிர்கொண்டு வரவேற்றுத் தானிருந்த ஊர்சம்

பாபதி எனத் தன்பெயர் பெற்றதை மாற்றிக் காவிரிப்பூம் பட்டினமெனக் காவிரியாற் பெயர் புனைவித்தனளென்றும் கூறப்பட்டிருத்தல் காணலாம். இதன்கண் மேருமலையிலிருந்த இந்தச் சம்புத்தீவத் தெய்வம் தென்னாடு புக்கு அமர்ந்த வரலாறு ஒருவகையாகக் கூறப்படுவதென்று உய்த்துணரலாகும். இது வடநாட்டார் தென்னாடு புகுந்து வதிந்த செய்தியையே குறிப்பதென்று எளிதில் துணியலாம். இந்நிகழ்ச்சி காவிரியாறு தமிழ்நாட்டில் உண்டாதற்கு முன்னே நிகழ்ந்ததென்பது இவ்வடிகளால் அறியலாகும். காவிரி சோழர்களால் இந்நாட்டில் மலையெறிந்து தரப்பட்டயாறென்பது

"மேக்குயரக்
கொள்ளுங் குடகக் குவடு டறுத்திழியத்
தள்ளுந் திரைப்பொன்னி தந்தோனும்"

(விக்கி. சோழ. உலா)

"கோல்கொன்
றலையெறியுங் காவேரி யாற்றுப் படைக்கு
மலையெறியு மன்னர்க்கு மன்னன்"

(குலோத். சோழ. உலா)

"மூடுகிக்
கரையெறிந்த பொன்னி கடலேழுங் கோப்ப
வரையெறிந்த மன்னர்க்கு மன்னன்"

(இராசராச. உலா)

எனவரும் மூவருலாக்கண்ணிகளால் நன்கறிந்ததாகும். "தாவினல்லிசை" என்னும் புறத்திணையியற் சூத்திரத்துரையில்,

"செய்கை யரிய களவழிப்பா முன்செய்த
பொய்கை யொருவனாற் போந்தரமோ—சைய
மலைச்சிறைதீர் வாட்கண்டன் வெள்ளணிநாள் வாழ்த்திக்
கொலைச்சிறைதீர் வேந்துக் குழாம்" (புறத். 36)

என நச்சினார்க்கினியர் எடுத்துக் காட்டிய வெண்பாவில்,

"சையமலைச் சிறை தீர் வாட்கண்டன்"

னச் சோழன் கூறப்படுதலான் பண்டைச் சோழகுலத் தொருவன் சையமலைத் தடையைத் தீர்த்துக் காவிரிக்குத் தன் வாளால் வழி கண்ட செய்தி உணரப்படும். காவிரி சையத்துத் தோன்றுவதென்பது பலரும் அறிந்தது. இந்நாடு நீர் வளம் படுத்திய செய்தியில் அகத்தியர் தன் கரகத்துக் கங்கை நீரைக் கவிழ்த்து அவ்வாற்று நீரைத் தூயதாக்கிப் பொய்யாது நாளும் பெருகியோடச் செய்தனரென்று நினைத்தலாகும். அகத்திய மீன் உதயமானால் மழை அதிகம் உண்டு என்பதும் சோதிடர் துணிபாகும். இவையெல்லாம் வடநாட்டாருள் ஒருவகையார் அகத்தியர் தலைமையில் தென்னாடு புக்கு இந்நாட்டை வளம் படுத்தற்றொழிலில் உதவினர் என்பது மட்டில் காட்டா தொழியா; அகத்தியர் தங்கரகத்துக் கங்கையைக் காவிரியாறுக் கவிழ்த்தது பரசுராமன் தென்னாடு புகுதற்குச் சிறிது முந்தியதேயாமென்பது மணிமேகலை 22-ஆம் காதையில், காந்தன் என்னும் சோழன் பரசுராமனுக்கு அஞ்சியபோது அகத்தியர் சொற்படி தன் காதற்பரத்தை மகனாகிய ககந்தனைப் புகார் நகரை ஆளுமாறு செய்துவிட்டு மறைந்தொழுகினன் என்று கேட்கப்படுதலான் அறியலாகும்.

அகத்தியர் தென்னாடு போதுகின்றவர் துவராபதிப் போந்து நிலங் கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண் அரசர் பதினெண்மரையும் பதினெண்குடி வேளிருள்ளிட்டாரையும் அருவாளரையுங் கொடுபோந்து காடுகெடுத்து நாடாக்கிப்பொதியிற்கணிருந்து இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து இராக்கதரை ஆண்டு இயங்காமை விலக்கினர் என்று நச்சினார்க்கினியர் தொல்காப்பியப் பாயிர வுரைக்கண் உரைத்தனர், இதனால் துவராபதியிலிருந்த வேளிர் வழியினருள் பலரை அகத்தியர் இத்தென்னாட்டிற் குடியேற்றியது அறியப்படும். இவ்வேளிர் வழியினனாகிய இருங்கோவேளைக் கபிலர் பாடிய புறப்பாட்டில்,

"நீயே, வடபான் முனிவன் றடவினுட் டோன்றிச்
செம்புபுனைந் தியற்றிய சேணெடும் புரிசை
யுவரா வீகைத் துவரை யாண்டு
நாற்பத்தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே" (புறம். 201)

என வருவதன்கண் இவ்வேளிர் குலமுதல்வன் வடபால் முனிவன் தடவினிற்ரோன்ற அவன் வழியில் துவரை நகரை யாண்டு நாற்பத்தொன்பது வழிமுறை வந்த வேளிருட் சிறந்தவனாக இருங்கோவேள் என்னுங் குறுநிலமன்னன் குறிக்கப்பட்டிருத்தல் காணலாம். அகத்தியர் துவராபதியிலிருந்த வேளிரை உடன்கொண்டு தென்னாடு புக்கனரென்று கேட்கப்படுதலால் இவ்விருங்கோவேளுக்கும், முனிவன் தடவிலே தோன்றிய முதல் வேளரசனுக்கும் இடைப்பட்ட ஒருவன் காலத்தே தான் இவர் அவ்வேளிர் குடியைத் தென்னாடு கொண்டுவந்திருக்க வேண்டுமென்று துணியலாம். 'துவரை யாண்டு நாற்பத்தொன்பது வழிமுறை வந்த வேளிர்' என்றதனால் அகத்தியர் வடபால் முனிவன் தடவினிற் றோன்றிய முதல் வேளரசனையே தென்னாடு கொணர்ந்தார் என்று துணிவதற்கு ஏதுவொன்றுமில்லை. "துவரை யாண்டு நாற்பத்தொன்பது வழிமுறை வந்த வேளிருள் வேளே" என்புழி, அநேக தலைமுறைகள் துவராபதியிலே ஆண்டு கழிந்தனவென்றே கொள்ளக் கிடத்தலறிக.

இனி, நன்னூற் பெயரியல் "ஏற்கு மெவ்வகைப் பெயர்க்கும்" என்னுஞ் சூத்திர உரையில், மயிலைநாதரும் சங்கர நமச்சிவாயப் புலவரும் அகத்தியம் என வைத்து மேற்கோள் காட்டியதும், தொல்காப்பியச் சொல்லதிகாரத்து "அதனினியறல்" என்னும் வேற்றுமையியற் சூத்திர வுரையில் சேனாவரையர் எடுத்தாண்டதுமாகிய,

"எழியன் முறைய தெதிர்முக வேற்றுமை
வேறெனை விளம்பான் பெயரது விகாரமென்
றோதிய புலவனு முளனொரு வகையான்
இந்திர னெட்டாம் வேற்றுமை என்றனன்" (13)

என்னுஞ் சூத்திரத்து அகத்தியனார் பாணினியையும் இந்திரனையும் எடுத்தோதி யுள்ளனரென்று பிரயோக விவேக நூலாசிரியர் கருதினர். இதனை "நீர் கொண்ட சென்னி" என்னும் பாட்டுரை நோக்கித் தெளிக. இச்சூத்திரத்தில் "பெயரது விகாரமென், றோதிய புலவனுமுளன்" என்றது பாணினி முனிவரை என்று அவர் கருதினராவர். அவர் கருத்துப்படி நோக்கின் இத்தமிழிலக்கணஞ் செய்த அகத்தியனார் அகத்தியர்

வழியிற் பாணினிக்குப் பிற்பட்டனராவர் என்று துணியலாம். இங்கே பாணினி மதத்தை உடம்படாது வேற்றுமை எட்டென்ற ஐந்திர மதத்தை அகத்தியனார் உடம்பட்டது காணலாம். அவர் உடம்பாடே தொல்காப்பியனார்க்கும் உடம்பாடாதலால், "ஐந்திர நிறைந்த தொல்காப்பியனெனத் தன்பெயர் தோற்றி" என்று பாயிரத்திற் பாராட்டப் பட்டனரென்று கொள்ளலாம். இதற்கேற்பவே தொல்காப்பியனார்,

"வேற்றுமை தாமே ஏழென மொழிப"

என்பதனால், பிறர் மதங்கூறி,

"விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே"

என்னுஞ் சூத்திரத்தால் தந்துணிபுரைத்தாரென்க. இவ்விரண்டு சூத்திரங்களும் மேற் காட்டிய அகத்திய சூத்திரப் பொருளையே தழுவிவந்தவாறு எளிதில் உய்த்துணரலாம். "ஓதிய புலவனும் உளன்" என்றது அகத்தியனார் தங்காலத்தே பாணினி உளனாதல் பற்றி என்று துணிதற்கு இடந்தருகின்றது. இந்திரன் இலக்கணம் தென்னாட்டுப் பயிலப்பட்டு முற்காலத்தே போற்றப்பட்டு வந்ததென்பதற்குச் சான்றுகளும் உண்டு.

"புண்ணிய சரவணம் பொருந்துவிராயின்
விண்ணவர் கோமான் விழுநூல் எய்துவிர்"
(சிலப். காடுகாண். 99-100)

"கப்பத்திந் திரன் காட்டிய நூலின்
மெய்ப்பாட்டியற்கையின் விளங்கக் காணாய்"
(ஷை. ஷை. அடி, 154-5)

எனச் சிலப்பதிகாரத்து வருமிடங்களில் "விண்ணவர் கோமான் விழுநூல்" என்னும் பகுதிக்கு "இந்திரனாற் செய்யப்பட்ட ஐந்திரவியாகரணம் என்னும் இலக்கணம்" எனவும் "இந்திரன் காட்டிய நூல்" என்னும் பகுதிக்கு "இந்திரன் தோற்றுவித்த வியாகரணம்" * எனவும் அடியார்க்கு நல்லார் பொருள் கூறுத

* புத்தமத நூலான அவதான சதகத்தில் சாரிபுத்தன் தனது பதினாறும் ஆண்டில் ஐந்திரம் படித்தான் என்று சொல்லியிருக்கிறது,......... செந்தமிழ். Vol. 26.

லால் உணரலாம். தொல்காப்பியனார் காலத்தே நிரம்ப வழங்கிய இவ்வைந்திர இலக்கணநூல் இளங்கோவடிகள் காலத்து மிகவும் அருகி வழங்கிய தன்மையையும் இவை காட்டுமென்க. "விண்ணவர் கோமான் விழுநூல் எய்துவிர்" என்றதனால் அஃதெய்தற்கரிய நிலையினுண்மை புலனும். ஹியூன்ஸாங் என்னுஞ் சீன யாத்திரிகன் இந்நாவலந்தீவின் வடமொழி யிலக்கண நூல்களைப்பற்றிக் கூறிய இடத்து,

---

"வர்ஷா என்ற ஆசிரியர்க்கு அநேகமாணக்கருண்டு. அவருள் பாணினியும் ஒருவர். இவர் ஒரு மந்தமதி. இதனைக்கண்ட வர்ஷா மனைவி பாணினியை வீட்டை விட்டுத் துரத்திவிட்டார். பாணினியோ இதனை ஆற்ருது சிவபிரானைக் குறித்துத் தவங்கிடந்து வரம்பெற்று எல்லாவற்றையும் அறிந்து காத்யாயனருடன் வாதாடி அவர் ஓதிவந்த ஐந்திர வியாகரணத்தை அழித்தார்" என்று சோமதேவரது கதா சரித் சாகரத்திலே காத்யாயனர் கூறுவதாக ஒரு கதை உண்டு. பிருகத் கதா மஞ்சரியிலும் இப்படி ஒருகதை உண்டு. இது கேவலம் கதை என்றுலும் இதனுற் பாணினீயம் தோன்றிய பிறகு ஐந்திரம் என்ெருரு நாலிருந்து அழிந்துவிட்டதென்பது தெளிவு பெறுகின்றது. (ஷை. ஷை.)

திபேத்திய லாமாவான தாரநாதர் இந்திரவியாகரணத்தைப் பற்றி எழுதும்போது இது பாணினிக்கு முற்பட்டதென்கிறுர். சந்திர வியாகரணமும் பாணினீயமும் ஒன்றென்றும், கலாபமும் ஐந்திரமும் ஒன்றென்றும் அவர் எழுதுகிருர். இவரே ஆதிசேஷன் கதையைச் சொல்லிவிட்டுத் தென்னிந்தியப் பிராமணர் வகுப்பைச் சேர்ந்தவரான சப்தவர்மன் என்பார் முருகக் கடவுளைத் தோத்தரித்து இந்திர வியாகரணம் தமக்கு உதயமாக வேண்டுமென்று விரும்பக் குமாரக் கடவுள் **सिद्धो वर्णसमापनाय** என்று அடியெடுத்துக் கொடுத்ததாயும் மற்றவை யெல்லாந் தாமே அவர் மனத்தில் உதித்ததாயும் ஒரு கதைஎழுதுகிருர். இந்த **सिद्धो वर्णसमापनाय** என்பது கலாபமான காதந்தரத்திலே முதற் சூத்திரமாகும். (செந்தமிழ் ஷை. பக். 60)

**वाग्वै राच्याकुता** என்ற ரிக்வேத சாயன பாஷியத்திலேயும் ஐந்திரத்தைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. (ஷை. ஷை.)

"வைவர்த்த கல்பாரம்பத்தில் ப்ரஹ்ம ராஜாவானவர் வ்யாகரணமென்னும் நாலை முதலில் வெளியிட்டார். அஃது அப்போது நூறு லக்ஷம் சுலோகங்களுடையதாக விருந்தது. பின் வைவர்த்தசித்தனுகல்பாரம்பத்தில் திஷிஷி (Tishish) சக்ரராஜா அதைப்பத்து லக்ஷம் சுலோகமாகச் சுருக்கி யுரைத்தார். அதன் பின் வடநாட்டுக் காந்தாரப்பகுதியில் "சாலாதுர" என்னும் ஊரிற்றோன்றிய ஒரந்தணன் பாணினி ரிஷி என்னும் பெயருடையவன் எண்ணுயிரஞ் சுலோகங்களாக அவற்றைச் சுருக்கி உரைத்தனன். இந்நூலே நிகழ் காலத்து நாவலந் தீவு முழுதும் வழக்குப் பெற்றுளது" என எழுதுதலைக் காணலாம். இதனல் இளங்கோவடிகள் கப்பத்திந்திரன் காட்டிய நூல் என்புழிக் கல்பம் என்றது வைவர்த்த ஷித்தகல்பமாதலும், ஐந்திரம் பாணினியத்துக்கு முற்பட்டதாதலும் நன்கு தெளியலாம். *

இனி இவ்வைந்திர நூலே அருகபரமேஷ்டி யுரைத்த பரமாகமத்தில் ஓர் பகுதியாக விருத்தலைக் காணலாமென்று "கப்பத்திந்திரன் காட்டிய நூலின், மெய்ப்பாட்டியற்கை" என்புழி, "மெய்ப்பாட்டியற்கை பரமாகமம், பரமாகமத்தில் இந்திரன் நூலினைக் காணலாம்" என அரும்பத உரையாசிரியரும்,

"இந்திரன் தோற்றுவித்த வியாகரணத்தினை எம்முடைய அருக குமரன் அருளிச் செய்த பரமாகமங்களிற் காண்கிலையோ" என அடியார்க்கு நல்லாருங்கூறுமாற்ருல் தெளியலாம். அங்ஙனமாயின் இவ்வகை ஜைனக்கொள்கைகளும் வரலாறுகளும் உண்டாகியது ஸ்ரீ வர்த்தமான மஹா வீரஸ்வாமிகள் காலத்தே என்

* பதஞ்சலியார் தம்மாபாடிய நூலிற் கூறிய வாற்ருன் "இந்திரன் பிருகஸ்பதியிடம் ஸம்ஸ்கிருதம் கேட்டனன்" எனக் கருதுவதொன்றன்றி வேறு இந்திரன் இலக்கண நூல் செய்தனன் என்றற்கு ஆதாரம் இப்போது கிடைத்திலது என்பர் இக்காலத்து வடநூல் வல்லார். இந்திரனுக்குப் பிருகற்பதி இவை வழு இவை வழுவில்லன என வடமொழிகளைத் தனித்தனி எடுத்தோதலுற்ருற்குத் தெய்வயாண்டில் ஆயிரம் யாண்டு சென்றது. சென்றும் சொற்கள் முடிந்தில என மாபாடியத்துள் ஆசிரியர் பதஞ்சலியார் எடுத்தோதினுரெனச் சிவஞான முனிவருங் கூறுதலான் இஃதுணர்க.

பது பல ஆராய்ச்சியாளர் துணிபாதலின் † மஹாவீரர் காலமும் புத்தர் காலமும் பெரும்பாலும் ஒத்ததென்றே பலருந் துணிவராதலால் பரமாகமத்திற் கூறியதாகக் கருதப்படும் இவ் இந்திர வியாகரணம் கி. மு. 500க்குப் பெரிதும் முந்தியதாகாது என்று நினைத்துக்கொள்வது பொருத்தமாகும். பாணினியத்தை ஐந்திரவியாகரணத்தின் பின்னதாக வைத்து வழங்கலால் பாணினி காலம் கி. மு. 500க்குப் பிற்பட்டதேயாமல்லது முந்தியதாகாது. இது ஜைநாகமங்களுள் இந்திரவியாகரணம் உள்ளதென்ற உரையாளர் கருத்தைத் தழுவி ஆராய்ந்ததாகும். வேத வழக்கொடுபட்டார் வைவர்த்த வித்தகல்பத்தை எந்தயாண்டில் வைப்பரோ தெரிகிலேம். வடநூல் வியாகரணங்களை முறைப்பட நிறுவுமிடத்து யாஸ்கர், பாணினி, காத்யாயனராகிய வரருசி, மாபாடியகாரராகிய பதஞ்சலி என வரிசைப் படுத்துவது வழக்காகவுள்ளதாதலின் முத்தமிழிலக்கணஞ் செய்த அகத்தியர் வழியில் வந்த அகத்தியனுர் காலம் பாணினிக்கும் காத்தியாயனர்க்கும் இடைப்பட்டதே யாகும், என்று துணிவது பொருத்தமாகும்.

அகத்தியனுர் சூத்திரமென நன்னூலில் மயிலைநாதர் எடுத்தாண்ட மேற்கோள்களை ஆராயுமிடத்து இவர் இலக்கணஞ்செய்யும்போது ஆண்டுத் தமிழில் புத்தகம், சேனை, மாலை, கம்பலம், காலம் முதலிய வடசொற்கள் பயின்றனவென்பதும் கன்னித்தென் கரைக்கட் பழந்தீவமான சிங்களமும், கொல்லங் கூவம் முதலிய எல்லைப் புறத்த நாடுகளும், ஈழம், பல்லவம், கன்னடம், வடுகு, கலிங்கம், தெலுங்கம், கொங்கணம், துளுவம், குடகம், குன்ற முதலிய சையமலையின் இருபுறத்துத் தமிழ்தெரி நிலங்களும், பெரு நிலவாட்சி யரசுமேம்பட்ட முடியுடைத் தமிழ் வேந்தர் மூவரும், குறுநிலக் குடிகள் பன்னிருவரும் நன்னிலையில் இருந்ததும் புலனுகின்றது. இதனுல் அகத்தியர் தமிழிலக்கணஞ்செய்தற்கு முன்னே தமிழர் மிகவுஞ் சிறந்த நாகரிக நிலையில், தம் அரசர் குடைநிழலில் இனிது வாழ்ந்திருந்தனர் என்பது புலனும். இவர் தென்னுடுபுக்குக் காடுகெடுத்து நாடாக்கினர் என நச்சினுர்க்கினியர் தொல்காப்பியப் பாயிரவுரைக்கட் கூறிய வரலாறு அவர் 'தங்குதற்குக் குறித்த ஒரு காட்டுமலைப் பக்கத்து நிகழ்ந்ததாக நினைத்துக்கொள்வது பொருந்திற்றுகும். இதற்கேற்பவே தொல்காப்பியனுரும்,

† Life of Hiouen Tsang Book III-Page 122 (600—664. A. D.)

"வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பி
னாற்பெய ரெல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர்"
(தொல். செய். சூத். 79)

என்பதனால் செய்யுள் மரபிற்கு இலக்கணங்கூறுமிடத்து, "வளமுடைமையாற் புகழ்பெற்ற மூவேந்தர்க்குரிய நாவலந்தண்பொழிலுள் நாற்பெயரெல்லை யகமென்று வரைந்து கொள்ளப்பட்ட தமிழ் நிலத்தவர் நடாத்துகின்ற செய்யுளின் பெயரே தனக்குப் பெயராகவுடைய மேற்கூறிய யாப்பு" என்று விளங்கவைத்ததுங் காண்க. அவர் வழங்கும் யாப்பின் வழியது என்றதனால் அகத்தியனார் முதலியோர் தமிழ் யாப்பினை உண்டு பண்ணினார் ஆகாது அவ்யாப்பிற்கு இலக்கணவமைதி இவ்வென்று தம் நுண்ணறிவாற் கண்டு புலப்படுத்தினரென்று கொள்ளப்படும்.

இதனாலும் தமிழ் மொழி செய்யுள் வழக்கை மிகுதியாகப் பெற்று இயல் இசை கூத்துக்களிற் பயிலப்பட்டு இவ்வளவென்று காலங் குறிக்கப்படாதபடி தொன்றுதொட்டே வளர்ந்து சிறந்தது துணியலாம். லண்டன் பொருட் காட்சிச் சாலையிலுள்ள வேள்விக்குடி சின்னமனூர்ச் செப்பேடுகளில் அகஸ்தியராற் பட்டாபிஷேகம் செய்யப்படும் பாண்டிய வம்சத்தில் மாறவர்மன் அவதரித்தான் எனவும்,

"பொருவருஞ்சீர் அகத்தியனைப் புரோகிதனாகப் பெற்றது ...பாண்டியர் திருக்குலம்"

எனவும்,

"தென்வரைமிசைக் கும்போத்பவனது தீந்தமிழ் செவி கழூவியும்"

எனவும் வருதலால் இவ்வகத்தியர் பாண்டியர் குலத்திற்குப் புரோகிதரெனவும், தமிழாசிரியரெனவும் (புரோகிதர் வடமொழியிற் சடங்கொழுக்கங்களை விதிப்படி கூறி நடாத்துபவர்) அறியப்படும். இதற்கேற்பவே இறையனார் களவியலுரை மேற்கோளிற் கண்ட பாண்டிக்கோவையினும்,

"பண்டகத்தியன் வாய், உரை தரு தீந்தமிழ்
கேட்டோனுசிதன்" (93)

எனப் பாண்டியனைக் கூறுதல் காண்க. இனி,

" ஓங்குயர் மலயத் தருந்தவ னுரைப்பத்
தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன்
விண்ணவர் தலைவனை வணங்கிமுன் னின்று
மண்ணகத் தென்றன் வான்பதி தன்னுள்
மேலோர் விழைய விழாக்கோ ளெடுத்த
நாலேழ் நாளினு நன்கினி துறைகென
அமரர் தலைவனுங்கது நேர்ந்தது
கவராக் கேள்வியோர் கடவா ராகலின் "

(மணி. 1, 1-10.)

என மணிமேகலையுட் சாத்தனார் கூறுதலால், இவர் தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன் கேட்ப ஆண்டுதோறும் இந்திர விழவு புகார் நகரத்து எடுத்து இந்நாவலந் தீவிற்கு ஒரு சாந்தி செய்கவென உரைத்ததும், அச்செம்பியன் காலந்தொட்டு அவ்விந்திர விழா அவ்வூரில் நிகழ்ந்ததும் அறியலாகும். இவற்றால் தமிழ் இலக்கணம் இயற்றியதுமட்டிலன்றி, தமிழ்நாட்டுப் பேரரசருக்கு அறிவூட்டியும் சடங்குகள் வகுத்தும் அவர்க்கு ஒரு பெருந்துணையும் புரோகிதருமாகி இவர் விளங்கினாரென்று உய்த்துணரலாகும். இவர்பால், தம்மொடு போந்த அந்தணர் தமிழுணர்தற் பொருட்டுத் தமிழிலக்கணஞ் செய்தாரென்று கருதிய முன்னையோரு முண்டு.

இதனை,

" அந்தணர்க் காகி யகத்தியன் குனுரை செய்தமும்மைச்
செந்தமிழ்க் காவலன் தென்னம் பொருப்பின் "

(களவியற் காரிகை)

என வருங் களவியற் கோவையானுணர்க. இவர்பால் கல்வி பயின்ற மாணக்கர் பன்னிருவரென்ப. அவர்,

1. தொல்காப்பியர், 2. அதங்கோட்டாசான், 3. துராலிங்கன், 4. செம்பூட்சேஎய், 5. வையாபிகன், 6. வாய்ப்பியன், 7. பனம்பாரன், 8, கழாரம்பன், 9. அவிநயன், 10. காக்கைபாடினி, 11. நத்தத்தன், 12. வாமனன் என்ன இவராவர். இப்பன்னிரு புலவரும் தனித்தனியே அகத்தியர்

செய்த முதனூலினைத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் வழி நூல்கள் செய்தனரெனவும், பன்னிருவர் சேர்ந்து ஒரொருவர் ஒரு படலமாகப் புறத்திணை இலக்கணங்களெல்லாம் அமையப் "பன்னிரு படலம்" என ஒரு நூல் செய்தனரென்றுங்கூறுவர். தொல்காப்பியனார் செய்த நூல் தொல்காப்பியம் எனப்படுவது. இது முழுதும் உள்ளது. அதங்கோட்டாசான் செய்தநூல் இப்போது கிடைத்திலது. இவரைத் தொல்காப்பியப் பாயிரத்து,

> "அறங்கரை நாவி னான்மறை முற்றிய
> அதங்கோட்டாசாற்கு"

எனப் பனம்பாரனார் பாடுதலான் அறமே மொழியும் நாவினால், நான்கு வேதங்களையும் முற்றக்கற்ற பெருந்தகையார் என்று தெரிகிற்பது. இவர் தொல்காப்பியம் அரங்கேறிய அவையிற் றலைமையில் வீற்றிருந்து அதனைக் கேட்டவராவர். துராலிங்கனார் செய்த நூல் ஒன்றுங் கிடைத்திலது. செம்பூட்சேய் செய்த நூல் கூற்றியல் என்ப. (இறையனார் களவியல். 56, உரை) இந்நூல் கிடைத்திலது ; செம்பூட்சேய் என்னும் பெயர்,

> "கொடித்தே ரண்ணல் கொற்கைக் கோமான்
> ஈன்றபுக ழொருவன் செம்பூட் சேஎய்
> என்று நனியறிந்தனர் பலரே"
>
> (வீரசோ. யாப். 12 உரைமேற்கோள்)

என்பதனால் கொற்கைக் கோமானாகிய பாண்டியற்கும் பெயரென்று தெரிகிறது. வையாபிகனார் செய்த நூல் ஒன்றுங் கிடைத்திலது. வாய்ப்பியர் செய்தது வாய்ப்பியம் என்னும் நூலாகும். இந்நூலுள் சிலபல சூத்திரங்களே யாப்பருங்கல விருத்தி உரைகாரர் மேற்கோள் காட்டுகின்றனர். அச்சூத்திரங்களால் இவர் இசைபற்றியும் சூத்திரங்கள் செய்துள்ளனரென்று தெரிகிற்பது. இவற்றை அவர் பெயரால் இதனோடு கோக்கப்பட்டுள்ள சூத்திரங்களிற் கண்டுகொள்க. பனம்பாரனார் செய்த நூல் பனம்பாரமெனப் பெயர்பெறும். யாப்பருங்கல விருத்திகாரர்,

> "அகத்திணை யல்வழி யாங்கதன் மருங்கின்
> வகுத்தன சொற்சீர் வஞ்சியொடு மயங்கும்"
>
> (பக். 118)

என்றார் பனம்பாரனார் என எடுத்து மேற்கோள்காட்டி இவர் பெயர் கூறுதலால் இவர் இலக்கண நூல் செய்தது உணரப் படும்.

"வடவேங்கடம் தென்குமரி" என்று தொடங்குந் தொல் காப்பியச் சிறப்புப் பாயிரத்துரைக்கண் இளம்பூரணர்,

"அவருள் இந்நாற்குப் பாயிரஞ்செய்தார் தன்னோடு ஒருங்கு கற்ற பனம்பாரனார்"

என்று கூறுதலால் இவர் தொல்காப்பியத்துக்குப் பாயிரம் பாடியது தெரிகிற்பது. இனிக் குறுந்தொகையில்,

"ஆர்கலி மிதித்த நீர்நிகழ் சிலம்பில்" (52)

என்னும் பாடல் இவர் பெயரால் கோக்கப்பட்டுள்ளது. இவர் தொல்காப்பியனார் கல்வி யறிவொழுக்கங்களில் பெரிய நன் மதிப்புடையவர் என்பது அவர்க்கு இவர் பாடிய பாயிரத்தால் நன்கு தெரியலாகும்.

"தோன்று தோற்றித் துறைபல முடிப்பினுந்
தான்றற் புகழ்தல் தகுதியன்றே"

"மன்னுடை மன்றத் தோலைத் தூக்கினும்
தன்னுடை யாற்ற லுணரார் இடையினு
மன்னிய வவையிடை வெல்லுறு பொழுதினுந்
தன்னை மறுதலை பழித்த காலையுந்
தன்னைப் புகழ்தலும் தகும் புலவோர்க்கே"

என்னும் நன்னூற் பாயிரச் சூத்திரங்களிரண்டும் பனம்பார மென்று மயிலைநாதர் உரையாற் றெரிகின்றன. கழாரம்பனார் செய்த இலக்கணத்தைப் பற்றி ஒன்றுந் தெரியவில்லை. அவி நயனார் செய்த நூல் அவிநயம் என்பர். இந்நாற் சூத்திரங்கள் மயிலை நாதர் உரையிலும் யாப்பருங்கலவிருத்தி யுரையிலும் எடுத்தாளப்பட்டுள்ளன. மயிலைநாதர் நன்னூலுரையில்,

"அளவறு புலமை யவிநயனார்"
"புவிபுகழ் பெருமை யவிநயனார்"

எனக் கூறுதலான் இவர் அளவறு புலமையும், புவிபுகழ் பெருமையும் உடையரென்பது புலப்படுகின்றது. நன்னூல் பொதுவியல் "பெயர் வினையும்மைசொல்" என்னுஞ் சூத்திரவுரையில் இந்தப்பத்தெச்சமும், புவிபுகழ் புலமை அவிநய நூலின், தண்டலங்கிழவன் தகைவரு நேமி, எண்டிசை நிறைபெய ரிராசபவித்திரப் பல்லவ தரையன் பகர்ச்சியென்றறிக" என மயிலைநாதர் உரைத்தலால் இவர் செய்த அபிநயத்துக்குத் தண்டலங்கிழவன் இராசபவித்திரப் பல்லவதரையன் ஒரு சிறந்த உரை செய்தனன் என்று தெரிகிறது. சிறுகாக்கைபாடினியார் ஒருவர் உளராதலால் பெருங் காக்கை பாடினியார் எனப் பெயர் சிறந்த இவர் செய்த சூத்திரங்களிற் சிலபல யாப்பருங்கல விருத்தியுரையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்னும் பெண்பாற் புலவர் பதிற்றுப்பத்தில் ஆறும் பத்துப் பாடியவராகக் கேட்கப்படுகின்றார். இதனின் வேறு கூறுவாருமுளர். அவர் இவர் வழியினரோ வென்று நினைக்க இப்பெயர் இடந்தருவது. "அல்லதூஉம் அங்ஙனமன்றி வருமாயின் அடிக்கெல்லாம் பொதுவகையாய்த் தலையுறுப்பெனப்படாது எழுத்தும் அசையும்போல யாண்டும் வருவனவெல்லாம் உறுப்பெனப் படுவன வென்றற்கு "இணைநான் முடிபு தன்னான் மேற்றே" என்பதனாற் காக்கை பாடினியார் ஓதியதனை யிலக்கணம் ஈண்டுங் கோடல் வேண்டுமெனின், அஃதே கருத்தாயின் இவர்க்கு மவர் முடிபேபாற்றித்தனை தளையல் வேண்டும். அல்லதூஉம் அவர்க்கு இளையரான காக்கை பாடினியார் தளை கொண்டிலரென்பது இதனாற் பெற்றும். தளைவேண்டினார் பிற்காலத்தோ ராசிரியரென்பது என்னை ?

"வடக்குந் தெற்குங் குடக்குங் குணக்கும்
வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்
றிந்நான் கெல்லை யகவயிற் கிடந்த
நூலதி னுண்மை வாலிதின் விரிப்பின்"

எனக்கூறி வடவேங்கடந் தென்குமரி யெனப் பனம் பாரனார் கூறியவாற்றானே எல்லை கொண்டார் காக்கை பாடினியார். ஒழிந்த காக்கைபாடினியத்து :— "வடதிசை மருங்கின் வடுகு வரம்பாகத் தென்றிசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்" எனத் தென்றிசையுங் கடலெல்லையாகக் கூறப்பட்டதாகலான் அவர்

குமரியாறுள்ள காலத்தாரல்லரென்பதூஉம், குறும்பனை நாடு அவர்க்கு நீக்கல்வேண்டுவ தன்றென்பதூஉம்பெற்றும். பெறவே, அவர் இவரோடு ஒரு சாலை மாணாக்கரல்லரென்பது எல்லார்க்கும் உணரல் வேண்டுமென்பது"

(செய். சூத். 1. உரை)

எனப் பேராசிரியர் உரைத்தவாற்றான் இவர் கடல்கோட்கு முன்னே "காக்கை பாடினியம்" என்ற நூலைச் செய்தனரெனவும் இவர்க்கு இளையவரான சிறுகாக்கை பாடினியார் கடல் கோட்குப் பின்னே சிறு காக்கை பாடினியம் செய்தனர் எனவும் நன்கு தெளியலாம். நத்தத்தனார் செய்தனவாக ஒரு சில சூத்திரங்களே யாப்பருங்கல விருத்தி யுரையிற் காணப்படுகின்றன. அச் சூத்திரங்களும் யாப்பிலக்கணம் பற்றியே வந்தன. வாமனர் செய்த நூல் வாமனம் என்ப. இந்நூலைப் பற்றி இப்போது ஒன்றுந்தெரியவில்லை. சிலப்பதிகார உரைப்பாயிரத்து,

"இனி, தேவ இருடியாகிய குறுமுனிபாற் கேட்ட மாணாக்கர் பன்னிருவருள், சிகண்டியென்னும் அருந்தவமுனி, இடைச்சங்கத்து அநாகுலன் என்னுந் தெய்வப் பாண்டியன் தேரோடு விசும்புசெல்வோன் திலோத்தமை என்னுந் தெய்வ மகளைக் கண்டு தேரிற் கூடினவிடத்துச் சனித்தானைத் தேவரும் மூவரும் சரியா நிற்கத் தோன்றினமையிற் சாரகுமாரனென, அப்பெயர்பெற்ற குமரன் இசையறிவித்தற்குச்செய்த இசை நுணுக்கமும்" என வருதலால் அகத்தியனார் மாணாக்கர் பன்னிருவருள் சிகண்டியாரும் ஒருவரென்பது தெரிகிற்பது. மேலே காட்டிய பன்னிருவருள் ஒருவர்க்குச் சிகண்டி என்பது பெயரென்றும், அவர் இசை நுணுக்கஞ் செய்தவரென்றும், இதனால் அறியக்கிடப்பது. அடியார்க்கு நல்லார் அரங்கேற்றுகாதை யுரையில் "இடைப்பிங்கலை" "கூர்மனிமைப்புவிழி" ஒழிந்ததனஞ் சயன்" என்னும் முதலுடைய மூன்று வெண்பாக்களையெடுத்தோதி இவை இசை நுணுக்கமென்று கூறுவர். இதனால் இந்நூல் வெண்பாவினை தென்றுய்த்துணரலாகும்.

இனி, இப்பன்னிருவரும் சேர்ந்து ஒவ்வொருவர் ஒவ்வொரு படலமாகப் புறப்பொருள் பற்றிச் செய்த இலக்கணநூல் பன்னிரு படலமென்ப ;—

"மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன்
தன்பாற் றண்டமிழ் தாவின் றுணர்ந்த
துன்னருஞ் சீர்த்தித் தொல்காப்பியன் முதற்
பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த
பன்னிரு படலம் பழிப்பின் றுணர்ந்தோன்"

(புறப். வெ. மாலை. சிறப்பு).

என்னும் ஐயனாரிதனார் புறப்பொருள் வெண்பாமாலைப் பாயிரத்தானும், அதற்கு மாகறலூர் கிழான் சாமுண்டி தேவநாயகன்,

"நின்று நிலைத்த நன்மையினையுடைய தேவர்கள் வேண்டிக் கொள்ளப் பொதியின் மலையிலிருந்த அழகமைந்த இருடி தன்னிடத்துக்குளிர்ந்த தமிழை வருத்தமின்றியறிந்த கிட்டுதற்கரிய மிக்க புகழினையுடைய தொல்காப்பியனென்னும் ஆசிரியன் முதலான பன்னிருவரான அறிஞரும் பகுதியில் மிகச் சொன்ன பன்னிரு படலமென்னும் நூலினைக் குற்றமின்றியே யறிந்தோன்" என உரைத்த உரையானும் இவ்வுண்மையுணரலாம். இஃது இங்ஙனமாக "வேந்து விடு முனைஞர்" என்னும் புறத்திணைச் சூத்திர உரையில் இளம்பூரணவடிகள்,

"தன்னுறு தொழிலே வேந்துறு தொழிலென்
றன்ன விருவகைத்தே வெட்சி"

என்னும் பன்னிரு படலத்தை எடுத்தோதி, "அதனால் பன்னிரு படலத்துள் வெட்சிப்படலம் தொல்காப்பியர் கூறினாரென்றல் பொருந்தாது" என உரைத்துள்ளார். இதனால் பன்னிரு படலத்தைப்பற்றி உரையாளர்க்குள் கருத்துவேற்றுமை யிருந்தமை புலனும். யாப்பருங்கல விருத்தியுள் (சூத். 95 பக். 530).

"வாகை பாடாண் டிணையென்ப புறப்பொருளே"

என்றார் தொல்காப்பிய அகத்தியம் உடையார்" எனக் கூறுதலான் அது அகத்தியம் தொல்காப்பியம் இரண்டையுங் கொண்டு கூறிய பின்னூலென்று நினைத்தற்கிடன் தருகின்றது. தொல்காப்பியனாரும் அகத்தியனாரும் சேர்ந்து ஒரு நூல் செய்தார் என்றற்கு ஆதாரமின்மையால் இவ்வாறு கூறப்பட்டது. இவ்வகத்

தியனார் முத்தமிழிலக்கணத்தையும் இயலிசை நாடகம் என்னும் முறையே நிறுவினர் என்பது,

" இனி வழக்கியலும் வழக்கியலாற் செய்யப்பட்ட செய்யுளியலும் பற்றி எழுந்த இலக்கணம் இயற்றமிழ் எனப்படும். அச்செய்யுளின்றி யமையாத இசை இலக்கணம் இசைத் தமிழ் எனப் பெயரெய்தி அவ்வியற்றமிழ்ப் பின்னர் வைக்கப்பட்ட தெனப்படும். இவ்விரண்டன் வழி நிகழ்த்துங் கூத்திலக்கணங் கூறிய நாடகத்தமிழ் அவற்றுப் பின்னர்தாமெனா முறைமை கூறுதலும்" எனப் பேராசிரியர் " ஒத்தகாட்சி " என்னும் மரபியற் சூத்திர உரையில் (மரபி. சூத்தி. 100) எடுத்தோதிய வாற்றானறியப்படும். இவ்வகத்தியரைப் பற்றிக் கேட்கப் படுங் கதைகள் பல. அவற்றினுண்மை எம்மால் அறியப்பட்ட தன்று. இவர் வடமொழிப் பெயர் வழங்கும் கம்போடியா. பாலித் தீவு முதலிய கீழ்கடற்புற நாட்டிடங்களில் மிகுதியாக உள்ளமை யால் இவர் நெடுந்தூரங் கடலையுங்கடந்து சென்று வேற்றுநாட் டார்க்கும் நலமறிவுறுத்தனர் என்று தெரிதலால் இவர் பழங் காலத்துக் கடலையொரு பொருட்படுத்தாது அகத்திட்பத்தாற் கடந்ததைச் சிறப்பித்துக் கடலைக் குடித்தனரென்று முன்னோர் கூறினரோ வென்று நினைத்தற்கிடனுண்டாகின்றது. கல்விக் கடலைக் கரைகண்டார் என்பதற்கு இவ்வாறு சிறப்பிக்கப்பட்டா ரென்பதும் பொருந்தும். அரிவம்சம் பாரதத்தைச் சாரவைத்து வியாசரியற்றிய நூலென்பர். அதன் கண், அகஸ்தியர் குஞ்சர கிரியில் உள்ளனர் என்று கூறியிருத்தல் காணலாம்.* குஞ்சர கிரியிலுள்ள அகஸ்தியர் கோயிலைக் கருவாகக்கொண்டு சாவகநாட் டில் (Java) கி.பி. 7-ம் நூற்றாண்டில் அந்நாட்டரசன் அகத்தியர்க் கொரு கோயிலெடுத்துச் சிறப்பித்தனன் என்று சாவக ஆராய்ச்சியாளர் கூறுவர்.

பிற்காலத் தமிழ்ப்பாடல்களில் இவர் பெரும்பாலுங் குறு முனி என்றே வழங்கப் பெறுகின்றனர். " பூமடந்தையும் புவி மடந்தையும்" என்று தொடங்கும் வீரபாண்டியன் மெய்க்கீர்த்தி யுள்ளும்,

---

* कुञ्जर: पर्वतश्चैव यत्रागस्त्य गृहम्महत्। वैशालरथ्या दुर्धर्षा सपीणा- मालया पुरी ॥

(ஹரிவம்சம். பவிஷ்ய பர்வம் அத். 13)

"திடவாசகக் குறுமுனிபாற்
செந்தமிழ் நூல் தெரிந்தருளி

என வருதல் காணலாம்.

"குறுமுனி குடித்த வேலை" (கம்ப. சுந். கடறு. 15)
"குறுமுனி தானும் புலவன்" (பொய்யாமொழி.)
"தேவ இருடியாகிய குறுமுனி"
(சிலப். அடியார். உரைப்பாயிரம்)

எனப் பலவிடங்களில் வருவதும் நோக்கத்தக்கது. இதற்கு ஆதாரம் புத்த ஜாதக சரிதையினும் காணப் பெறுவது. ஜாதக மாலையில்,

"அவர் ஆகாயத்தின்கண்ணே குறுகிய வடிவிற் பேரொளி வீசும் பிறையை யொப்பத் தம் மேனிவாடக் கடுந்தவம் புரிந்து பெற்ற பேரொளி தோன்ற அங்கு (காரைத்தீவில்) வசித்தார்" என வருதலானறியலாம். இவர் பெயராற் பல பல சித்தவைத்திய நூல்கள் வழங்கப்பெற்று இக்காலத்துள்ளன. அவையெல்லாம் :—சாண்வயிறே சமுத்திரமெல்லாம் வயிறே சண்முடமாடே." (அகத்தியர் பரிபாடை.)

என்றார் போன்ற இக்கால வழக்குச் சொற்களையே மிகவுந் தழுவிப் பயிறலால் அகத்தியர் பெயரையிட்டுப் பிற்காலத்து மருத்துவம் வல்லார் பலர் பாடினர் என்று துணியப்படும். அகத்தியர் பெயரையிட்டது அவர் மருத்துவ முறை அவர் அறிவுறுத்திய நன்முறையாய் வழிவழியாய்க் கேட்கப்பட்டு மருந்தும் பயன் பெற்ற காரணத்தால் என்று துணியலாகும். இவற்றின் உண்மை அகத்தியர் பரிபாஷை முதலிய நூல்களிற் காணலாம்.

இனி அகஸ்தியரைப் பற்றிச் சில பல கதைகள் கேட்கப்படுவன;— அவற்றுள் அகித்த ஜாதகம் ஒன்று. அதில் 'அகித்த' என்பது அகஸ்தியர் என்பதன் மரூஉ மொழி என்பர். இவர் கடுந்தவம் புரிகையில் தன்கண் வந்திருந்த அந்தணனுக்குத் தான் உண்ண வைத்திருந்த சில்லுணவையும் அளித்துத் தாம் பசித்தே காலங்கழித்தனரென்பது அக்கதையிற் றுணிந்த பொருளாகும். புத்தர் அவதாரத்திற்கு முற்பட்ட பல பிறப்பினுள் ஒன்றாகு

லால் இது புத்தர் காலத்துக்கு முற்பட்டதாதல் வேண்டும். இவ்வுண்மை நூல் நெறியால் ஆராய்ந்து தெளிதற்கரியதொன்றாகும். இக்கதையை நம்பிப் புத்த மித்திரனார் வீர சோழியத்தில் அவலோகிதன் பக்கல் இவர் அருந்தமிழ் கேட்டனரென்று இயைத்துரைத்தனர் போலும். அகத்தியர் பொதியிலை யடைதற்கு முன்னே அது அவலோகிதேச்வரர்க்குப் பத்தினியாகிய தாராதேவியின் நிலையமாகவிருந்தது என்பது பௌத்த நூல்களால் அறியக்கிடப்பது. தாராஸூக்தம் என்ற ஒரு புகழ்நூல் அவர் மதத்துண்டு. அதில் தாராதேவியைப் "போதலகிரி நிவாஸிநி" எனப் பரவுதல் காணலாம். இக்கதை கொண்டுதான் வீரசோழியம் செய்த புத்த மித்திரனார் "அவலோகிதன் பக்கத் தகத்தியன்கேட்டியம்பிய தண்டமிழ்" என்றுகூறினரோவென்று நினைத்தற்கிடமுண்டு. தொல்காப்பியப் பாயிரத்தும் நூற்கண்ணும் இவ்வகத்தியர் பெயரே கூறாதிருத்தல் சரித்திர ஆராய்ச்சியிற் கவனிக்கத்தக்கதொன்றாகும். உரைகாரர் பலரும் அறிவன் முதலாக வரும் பெயர்கட்கு அகத்தியனாரே பொருள் என்று கூறுதலும் நினைந்துகொள்ளத்தக்கதாகும். தமிழ் நூல்கள் முத்தமிழிலக்கணஞ் செய்த அகத்தியரை உடன்பட்டிருத்தல் எவ்விதத்தினும் நல்லறிவாளர்க்கு ஏற்பதேயாகும்.

இவ்வகத்தியர் இருக்கு வேதத்திற் கூடப்பட்ட மைத்திராவருணி என்பவரென நி...துதற்கு ஏதுவொன்றுங் காண்கிலேம். மற்று இவரை 'அமரமுனிவன்' என்பது முதலாகக்கூறுவன எல்லாம் வடநூலில் வேதம், இதிகாசம், புராணங்களிற்கேட்கப்படும் அகத்தியசரிதத்தை நெடுங்காலம் பிந்தியவராகிய இவர்க்கு ஏற்றி வழங்கியனவாக நினைப்பது பொருந்தும். ஒன்றோடொன்றெவ்வாக் கால வேற்றுமையில் நிகழ்ந்த பல நிகழ்ச்சிகளை இப்பொதியின் முனிவர்க்கேற்றுதல் சிறிதும் பொருந்தாமைகாண்க. இதனால் வேதகாலந் தொட்டு இறப்பப் பிந்தியகாலம்வரை ஓர் அகத்திய பரம்பரை உண்டென்றும், அவ்வழியினருள் தமிழிலக்கணம் செய்தவரும் ஒருவர் உண்டென்றும், அவர் தொல்காப்பியனார் காலத்தவரென்றும் தமிழ் இலக்கண உரைகாரர் கூற்றால் துணியலாமென்று தெளிக. இவ்வகத்தியர்க்கு முன்னே இத்தமிழ்நாடு இனிய செய்யுளாலும் நல்லவழக்காலும் சிறந்துவிளங்கிற்றென்று கருதுவதே பொருத்தமுடைத்தாகும். தமிழ்ச் செய்யுள் வகையின் பல பெயர்களும் தமிழ் மரபு வழக்குக்களும்

இவருண்டாக்கினரென்றல் சிறிதும் இயையாது. "மரபு" என்பது ஒருவரால் மாற்றருஞ் சிறப்பினது என்பது,

"மாற்றருஞ் சிறப்பின் மரபு"

(தொல். மர. 1.)

எனவருதலான் இனிதறியலாம்.

"வண்புகழ் மூவர்
தண்பொழில் வரைப்பின் . . . . . . அவர்
வழங்கும் யாப்பின் வழியது"

எனச் செய்யுளியலில் அவர் கூறுதலானும் இந்நாட்டுச் செய்யுட் பழமை நன்கு தெளியலாம். முதன்முதல் வடநாட்டினின்று தென்னாடுபுக்க அகத்தியர் வடபால் விந்தியத்தையடுத்தும்தென் பால் மகேந்திரத்தையடுத்தும் வதிதல் கூறிய வான்மீகத்தில் அவரைத் தமிழறிவுடையராகக் கூறுமை ஈண்டைக்கு நினைக் கத்தகும். அநுமானுக்குத் தென்னாட்டு மொழியுணர்ச்சியும் வடமொழி யுணர்ச்சியும் உடன்பட்டுக் கூறும் வான்மீகி முனிவர் அகத்தியரைச் சிறிதுந் தென்மொழி யுணர்ந்தவராகப் புகலாமை பெரிதும் வியப்பைத் தருவதாகும். அவர் தமிழ்நாட்டரசரையும் அவருட் பாண்டியர் தலைநகரையுங் கூறுதல் காண்க.

வியாச பாரதம் சபா பருவத்தில் (பக். 117 முதல்) பாண்டிய நாட்டின் மணலூர்புரத்துக்கு அரசன் மலயத்துவச பாண்டியன் என்றும், அவன் அருச்சுனனுக்கு மாமன் என்றும், இப் பாண்டியன் மகள் சித்திராங்கதை என்றும், இவள் **திராவிட கன்னி** யென்றும், இவளுக்கும் அருச்சுனனுக்கும் பிறந்த புதல்வன் பப்புருவாகனனென்றும் கூறி இந்நாட்டைச் சகதேவன் அடைந்த வரலாறு விரித்ததன்பின், அவன் அகத்தியர்க்கு இருப்பிடமும், தேவர்நாட்டுக்கு ஒத்ததுமாகிய சிறந்த மலயத்தை வலஞ்செய்து தாமிரபர்ணியைக் கடந்து கடற்கரையைச்சேர்ந்து தங்கினனென விளக்குதல் காணலாம். அந்நூலும் அகத்தியரைத் தமிழறிந்தவராகக் கூறாமை நோக்கிக்கொள்க. இவற்றுல் வேதகாலத்து அகத்தியர், இராமாயணகால அகத்தியர், பாரத கால அகத்தியர் எனப் பலராதல் தெளியலாம். இவர் வழியில்,

பாணினிகாலத்தவராய்த் தமிழுணர்ந்தவராய்த் தமிழிலக்கணமுஞ்செய்த அகத்தியர் * ஒருவருண்டு என்பதுதான் இயைவதாகும்.

---

* "வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத் தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்துங் குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகர்"

(காஞ்சிப் பாயிரம்)

என்றார் சிவஞானமுனிவரும், இதன்கண் "அதற்கிணையாத் தென்மொழியைக் குடமுனிக்கு வலியுறுத்தார்" என்று கூறியதைச் சிந்தித்துக் கொள்க.

# அகத்தியச் சூத்திரங்கள்.

மயிலைநாதர், சங்கரநமச்சிவாயர் எடுத்தாண்டவை

1. " பெயரினும் வினையினும் மொழிமுத லடங்கும் "

(மயிலை. பக். 57)

2. " பலவினியைந்தவு மொன்றெனப் படுமே
அடிசில் புத்தகஞ் சேனை யமைந்த
கதவ மாலை கம்பல மனைய "

(சங். பக். 144)

3. " கன்னித் தென்கரைக் கட்பழந் தீவஞ்
சிங்களங் கொல்லங் கூவிள மென்னும்
எல்லையின் புறத்தவு மீழம் பல்லவம்
கன்னடம் வடுகு கலிங்கந் தெலிங்கம்
கொங்கணந் துளுவங் குடகங் குன்றம்
என்பன குடபா லிருபுறச் சையத்
துடனுறைபு பழகுந் தமிழ்திரி நிலங்களும்
முடியுடை மூவரும் இடுநில வாட்சி
யரசுமேம் பட்ட குறுநிலக் குடிகள்
பதின்மரு முடனிருப் பிருவரும் படைத்த
பன்னிரு திசையிற் சொன்னய முடையவும் "

(மயிலை. பக். 178)

4. " ஏழியன் முறைய தெதிர்முக வேற்றுமை
வேறென விளம்பான் பெயர துவிகாரமென்
றோதிய புலவனு முளனொரு வகையான்
இந்திர னெட்டாம் வேற்றுமை யென்றனன் "

(பக். 243 சங்கர.)

5. " வினைநிலை யுரைத்தலும் வினாவிற் கேற்றலும்
பெயர்கொள வருதலும் பெயர்ப்பய னிலையே "

(பக். 246 சங்கர.)

6. " ஆலு மானும் ஓடும் ஓடுவும்
சாலு மூன்றும் வேற்றுமைத் தனுவே
செய்வோன் காரணம் செயத்தகு கருவி
யெய்திய தொழின்முத லியைபுட னதன்பொருள் "

(பக். 251 சங்கர.)

7, " ஆறனுபே யதுவா தவ்வும்
வேறொன் றுரியதைத் தனக்குரிய தையென
இருபாற் கிழமையின் மருவுற வருமே
ஐம்பா லுரிமையும் அதன்றற் கிழமை "

(பக். 256 சங்கர)

8, " வயிர வூசியும் மயன்வினை யிரும்பும்
செயிரறு பொன்னைச் செம்மைசெய் யாணியும்
தமக்கமை கருவியுந் தாமா மவைபோல்
உரைத்திற முணர்த்தலு முரையது தொழிலே "

(பக். 205 சங்கர.)

9. " மற்றுச்சொல் நோக்கா மரபினனைத்து
முற்றி நிற்பன முற்றியன் மொழியே "

(பக். 283)

10. " காலமும் வினையுந் தோன்றிப்பா றொன்றாது
பெயர்கொள் ளும்மது பெயரெச் சம்மே "

(பக். 299)

11. " காலமும் வினையுந் தோன்றிப்பா றொன்றாது
வினைகொள் ளும்மது வினையெச்சம்மே "

(பக். 302)

12. " கண்டுபான் மயங்கு மையக் கிளவி
நின்றோர் வருவோ ரென்றுசொன் னிகழக்
காணு வையமும் பல்லோர் படர்க்கை

(பக். 255)

13. " உலக வழக்கமு மொருமுக் காலமும்
நிலைபெற வுணர்தரு முதுமறை நெறியான் "

(பக். 259)

14. " அசைநிலை யிரண்டினும் பொருண்மொழி மூன்றினும்
இசைநிறை நான்கினு மொருமொழி தொடரும் "

(பக். 269)

15. " காலமொடு கருத வரினு மாரை
மேலைக் கிளவியொடு வேறுபா டின்றே "

(பக். 1286)

## தொல்காப்பியம்

### உரையாசிரியருரை மேற்கோள்

1. " ஆறடி யராகந் தாமே நான்கா
யொரோ வொன்று வீதலு முடையமூ விரண்டடி
யீரடி யாகு மிழிபுக் கெல்லை "
(தொல். செய். 121, உரை மேற்கோள்)

2. " தரவே யெருத்த மராகங் கொச்சகம்
அடக்கியல் வகையோ டைந்துறுப் புடைத்தே "
(தொல். செய். 121, உரை மேற்கோள்)

## நத்தத்தனார் சூத்திரங்கள்

### யாப்பருங்கல விருத்தி

1. " யாப்பெனப் படுவ தியாதென வினவிற்
றாக்குந் தொடையு மடியுமிம் மூன்றும்
நோக்கிற் றென்ப நுணங்கியோரே "

(பக். 18)

2. " பாவென மொழியினுந் தூக்கின் பெயரே "

(பக். 19)

3. " தனிநெடில் தனிக்குறில் ஒற்றொடு வருதலென்
றந்நால் வகைத்தே நேரசை யென்ப "

(பக். 53)

4. " குறிலிணை குறினெடி லொற்றொடு வருதலென்
றந்நால் வகைத்தே நிரையசை யென்ப "

(பக். 53)

5. " நேரீற் றியற்சீர் கலிவயி னிலவே
வஞ்சி மருங்கினு மிறுதியி னிலவே " (பக். 70)

## பனம்பாரனார்

1. " அகத்திணை யல்வழி யாங்கதன் மருங்கின்
வருத்தன சொற்சீர் வஞ்சியொடு மயங்கும் "

2. " வடவேங்கடம் . . . . . . .படிமையோனே "
(தொல். பாயிரம்)

3. " ஆர்கலி மிதித்த " (குறுந்தொகை)

## பன்னிரு படலம்

1. " அகத்திணை மருங்கி னளவு மயங்கி
விதப்ப மற்றவை வேறு வேண்டி
வஞ்சி யடியின் யாத்திலர் வஞ்சி
யகத்திணை மருங்கி னணையுமாறே "
(யாப். வி. பக். 120)

2. " ஆயவகப்புற மையிரண்டு மாயுங்கால்
காந்த ளமர்த்த வீரைந்து மகத்தின் புறமே "

3. " கைக்கிளை யென்பது புறனே "

4. " கைக்கிளை தானே காணுங் காலை
கூட்டமில் கிளவி கைக்கிளை யகப்புறம் "

5. " பெருந்திணைப் பொருளே பொருந்தக் கூறின்
அறத்தி னியன்ற அகத்தொடு புணராத்
திறத்த தென்ப திறனறிந் தோரே "

6. " நிலையா வன்பி னீடா வின்பத்
துலகமலை வெல்லாம் பெருந்திணை யகப்புறம் "

7. " வெட்சி கரந்தை புறனென மொழிப "

8. " வெட்சி முதலாத் தும்பை யீறுச்
செப்பிய வேழும் புறப் பொருளாகும் "

9. " வெட்சியுங் கரந்தையுந் தம்முண்மாறே "

10. " வஞ்சியுங் காஞ்சியுந் தம்முண் மாறே "

11. " உழிஞையு நொச்சியுந் தம் முண்மாறே "

12. " பொருதல் தும்பை புணர்வ தென்ப "
(பக். 529-530)

## வாய்ப்பியம்

### யாப்பருங்கல விருத்தியிற் கண்டவை

1. " வெண்பா முதலா நால்வகைப் பாவும்
எஞ்சா நால்வகை வருணம் போலப்
பாவினத் தியற்கையு மதனோ ரற்றே "

(பக். 208)

" மாவாழ்சுரம், புலிவாழ்சுரம் என்னும் இரண்டு வஞ்சியுரிச்சீரும் உளவாக வைத்து, ஒரு பயனோக்கித் தூஉமணி கெழூஉமணி யென்றன பெடையாக நேர் நடுவாகிய வஞ்சியுரிச்சீர் எடுத்துக் காட்டினார் நற்றத்தனாரும் வாய்ப்பியனாரும் "

(பக். 215)

2. " மன்னவ னென்ப தாசிரியம்
வெண்பா முதலா நால்வகைப் பாவும்
எஞ்சா நாற்பால் வருணர்க் குரிய "

(பக். 340)

3. " பாலை குறிஞ்சி மருதஞ்செவ் வழியென
நால்வகைப் பண்ணா நவின்றனர் புலவர் "

(பக். 526)

4. " அராக நேர்திற முறழம்புக் குறுங்கலி
யாசா னைந்தும் பாலையாழ்த் திறனே "

5. " நைவளங் காந்தாரம் பஞ்சுரம் படுமலை
மருள வியப் பாற்றும்
செந்திற மெட்டுங் குறிஞ்சியாழ்த் திறனே "

6. " நளிர்படு குறிஞ்சி
செந்திற நான்கு மருதயாழ்த் திறனே "

7. " சாதாரி பியந்தை நொந்த திறமே
பெயர் திறம் யாமையாழ்
சாதாரி நான்குஞ் செவ்வழியாழ்த் திறனே "

(பக். 527)

8. " மதுவிரி வாகையும்
பொதுவியற் படலமும் புறமாகும்மே "

(பக். 530)

9. "எப்பொருளேனும் ஒரு பொருள் விளங்கச்
செப்பி நிற்பது பெயர்ச்சொல்லாகும்"

10. "வழுவின் மூவகைக் காலமொடு சிவணித்
தொழில்பட வருவது தொழிற் சொல்லாகும்"

11. சுடுபொன் மருங்கிற் பற்றுசேய்ப்ப
இடைநின் றிசைப்ப திடைச்சொல்லாகும்"
"மருவிய சொல்லொடு மருவாச் சொற்கொணர்ந்
துரிமையோ டியற்றுவ துரிச்சொல்லாகும்"

(பக். 536)

# மாபுராணம்

மாபுராணம் என்பது, பழந்தமிழ் இலக்கண நூலென்பதும் தொல்காப்பியத்துக்கு முற்பட்ட தென்பதும் தொல்காப்பியப் பாயிர வுரைக்கண்,

"முந்து நூல் அகத்தியமும், மாபுராணமும், பூதபுராணமும், இசை நுணுக்கமும்: அவற்றிற் கூறிய இலக்கணங்களாவன, எழுத்துச்சொற்பொருள் யாப்பும், சந்தமும், வழக்கியலும், அரசியலும், அமைச்சியலும், பார்ப்பனவியலும், சோதிடமும், காந்தருவமும், கூத்தும், பிறவுமாம்."

என நச்சினார்க்கினியர் உரைத்தவாற்ருன் அறியப்படுவன. இந்நாற் பெயரால், இத்தமிழ் நாட்டு, வடமொழி வழக்கு மிகவும் இறப்ப முந்தியே பயின்றதென்று உய்த்துணரலாகும். மாபுராணம் என்பது "பெருந் தொன்னூல்" என்ற தமிழ்ப் பெயருக்கு வடமொழிப் பெயராக ஆண்டது போலும். புராணம் என்று பேரிட்டுக்கொண்டு செய்யுளிலக்கண முதலாகப்பல்வகை இலக்கணமுங் கூறுதல் வடநூலார்க்கும் உடன்பாடு. இதனை வடநூல் அக்கினிபுராணத்துட் கண்டுகொள்க. இம்மாபுராணம் பெரும்பான்மை வெண்பாவும், சிறுபான்மை சூத்திரமுமாக இருந்ததென்பது இந்நாற் பெயரால் எடுத்து உரைகாரர் மேற்கோள் காட்டிய பகுதிகளால் விளங்குகின்றது. இந்நூற் பாடலுள்,

"ஒ.நினுர் தொன்னூல் உணர்வுடையோர்"

எனவும்,

"வழுவென மொழிப வாய்மொழிப் புலவர்"

எனவும், வருதலின் இவர்க்கு முன்னரே பல தொன்னூல்கள் உளவென்பதும், அவற்றின்கண் நல்லறிவுடைய வாய்மொழிப் புலவர் பலர் இருந்தனர் என்பதும் அறியக்கிடப்பன. நச்சினார்க்கினியர், அகத்தியம், மாபுராணம், பூத புராணம், இசை நுணுக்கம் என்னும் இவை இன்னின்ன இலக்கணங் கூறுவன என்று தொகுத்தோதியதனுல் இந்நூற்கு முற்படவே இத்தமிழ் நாட்டார் வழங்கிய யாப்பும், சந்தமும், வழக்கியலும், அரசியலும்,

அமைச்சியலும், பார்ப்புனவியலும், சோதிடமும், காந்தருவமும், கூத்தும், பிறவும் மிகப்பயின்று மேம்பட்டனரென்றும், அவர் வழங்கி வந்தன வற்றிற்கு இலக்கணமே இவ்வாசிரியரெல்லாங் கண்டமைத்தனரென்றுங் கொள்ளத்தகும்.

அகத்தியர், இயல், இசை, நாடக முதலிய எல்லாவற்றிற்கும் பரந்து விரிந்த இலக்கணம் அமைத்தாரென்றும், மாபுராணமுடையார் முதலியோர் அவர் கூறியவற்றுள் ஒவ்வோர் பகுதியை யெடுத்துத்தொகை வகை விரியிற் கூறினாரென்றுங் கொள்ளத்தகும். மாபுராணமுடையார் பாட்டுடைத் தலைவன் பெயர்க்கு முன்னும் பெயர்க்கு இடையினும் கால் மாத்திரை யெழுத்தை அசையிற் புணர்ப்பின் வழுவென்று கூறுதலால் இவர் செய்யுட்கு ஆனந்தக் குற்றம் உடன்பட்டனராவர் ;

" தீயினன்ன வொண்செங்காந்தள் "

(மலைபடு. 145)

என்னும் மலைபடு கடாத்து உரையில் " நூற்குற்றங் கூறுகின்ற பத்துவகைக் குற்றத்தே " " தன்னானொரு பொருள் கருதிக்கூறல்" என்னுங் குற்றத்தைப்பின்னுள்ளோர் ஆனந்தக் குற்றம் என்பதொரு குற்றம் என்று நூல்செய்ததன்றி, அகத்தியனாரும் தொல்காப்பியனாரும் இக்குற்றம் கூறாமையின், சான்றோர் செய்யுட்கு இக்குற்றம் உண்டாயினும் கொள்ளார் என மறுக்க" என நச்சினார்க்கினியர் கூறுதலால் அகத்தியனார் உடன்படாத வற்றையும் இவர் உடன்பட்டுத் தனியேயும் பாட்டியல் விதிகளமைத்து இலக்கணங் கூறியுள்ளாரென்றுங் கருதலாகும்.

பூத புராணத்தைப்பற்றி ஒன்றும் இப்போது அறியக் கூடியதில்லை.

" இனிப் பரந்துபட்ட பொருண்மையவாகிய மாபுராணம், பூதபுராணம் என்பன சில்வாழ்நாட் சிற்றறிவின் மாக்கட்கு உபகாரப்படாமையின், தொகுத்துச் செய்யப்பட்டு வழக்கு நூலாகிய தொல்காப்பியம் இடைச்சங்கம் முதலாக இன்றுகாறும் உளதாயிற்றெனக் கொள்க." (தொல். மரபி. 97 பேராசி) எனப்பேராசிரியர் "தொகுத்தல் விரித்தல்" என்னும் மரபியற்

சூத்திரத்து உரையிற் கூறுதலால், மாபுராணமும் பூதபுராண மும் சில்வாழ்நாட் சிற்றறிவின் மாக்கட்கு எளிதில் உபகாரப் படாதபடி எத்துணையோ வகையாற் பரந்துபட்ட பொருளை யுடையனவென்றும், அது பற்றியே தொல்காப்பியனர் தொகுத் துச்செய்து வழங்குவித்தனரென்றுந் தெளியலாம்.

இசை நுணுக்கம் :—இந்நூல் செய்தவர் தேவவிருடியாகிய குறுமுனிவர் மாணாக்கர் பன்னிருவருள் சிகண்டி என்னும் அருந்தவ முனிவர் என்பது மேலே கூறினோம். அநாகுலன் என்னுந் தெய்வப்பாண்டியனுக்கும் திலோத்தமை என்னுந் தெய்வ மகளுக்கும் சனித்த சாரகுமாரன் என்னும் பாண்டியன் இசை யறிதற்பொருட்டு இந்நூல் செய்யப்பட்டதென்று அடி யார்க்கு நல்லார் சிலப்பதிகாரவுரைச் சிறப்புப்பாயிரத்திற் கூறி னார். இந்நூல் அடியார்க்கு நல்லார் காலத்து இறவாது நிலவிய தென்று அவர் உரை நோக்கி உய்த்துணரப்படுவது. இதனை,

"பாரசவ முனிவரில் யாமளேந்திரர் செய்த இந்திரகாளிய மும், அறிவனர் செய்த பஞ்சமரபும், ஆதிவாயிலார் செய்தபரத சேனபதியமும், கடைச்சங்க மிரீஇய பாண்டியருட் கவியரங் கேறிய பாண்டியன் மதிவாணனர் செய்த முதநூல்களிலுள்ள வசைக்கூத்திற்கு மறுதலையாகிய புகழ்க் கூத்தியன்ற மதி வாணர் நாடகத்தமிழ் நூலும் என இவ்வைந்தும் இந்நாடகக் காப்பியக் கருத்தறிந்த நூல்களன்றேனும் ஒரு புடை யொப் புமைகொண்டு முடித்தலைக் கருதிற்று இவ்வுரையெனக் கொள்க."

(சிலப். உரைச்சிறப்புப் பாயிரம்)

என்றதனுல் இஃதுணரலாகும். இசை நுணுக்கமென்று அடி யார்க்கு நல்லார் காட்டும் பாடல்கள் வெண்பா யாப்பாக உண் மையால் இந்நூல் பெரும்பாலும் வெண்பாவாலாயதெனக்கருதப் படும். இந்நூல் காந்தருவமுங் கூத்தும் பற்றி யெழுந்ததாகும். இளங்கோவடிகள் பாடிய கானல்வரி, ஆய்ச்சியர் குரவை, குன் றக் குரவை முதலிய பகுதிகட்கிலக்கணம் இந்நூலிலுள்ள தெனத் தோற்றுகின்றது. இந்நூற்பாடலுள், இடா, பிங்கலை பிராணன், அபானன், உதானன், சமானன், மலன், கூர்மன், நாகன், வியானன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன், ஆன்மா, கந்தருவம் முதலிய வடசொற்கள் பயின்றுள்ளன.

இந்நூலாசிரியர், நாடகத் தமிழ் நூலாகிய பரதம், அகத்திய முதலாவுள்ள தொன்னூல்களைத் துணைக்கொண்டு இந்நூல் செய்தனராவர். "நாடகத்தமிழ் நூலாகிய பரதம், அகத்திய முதலாவுள்ள தொன்னூல்களுமிறந்தன" வென்று அடியார்க்கு நல்லார் கூறுதலான் பரதம் எனப் பெயரிய நாடகத் தமிழ்நூல் ஒன்று முன்னரே இருந்து இறந்ததென்பது நன்குணரலாகும். இப்பரதம் இதற்கு முன்னூலாயின் அப்பெயரை வடமொழியில் நாட்டிய நூல்செய்த பரத முனிவர் பெயரைக் கொண்டு வழங்கியதென்று ஊகிப்பது பொருந்தும். பரத முனிவர் காலம் கி. மு. நான்காம் நூற்றாண்டென்று ஆராய்ச்சியாளர் துணிவர். (Ind. Antiquary, July. பக். 159) இதனால் இவ்விசை நுணுக்கம் அக்காலத்துக்குப் பிற்பட்டதேயாகும். இந்நூலாசிரியர் இசை நுணுக்கஞ் செய்தபின்னரே தொல்காப்பியர் தன் நூலை அரங்கேற்றினராவரென்பது தொல்காப்பியத்துக்கு முந்து நூலில் இசைநுணுக்கத்தையுஞ்சேர்த்து நச்சினார்க்கினியர் கூறுதலான் அறியலாகும். இந்நூல் வரலாற்றால் இசையறிதலைப் பண்டைக் காலத்துத் தமிழரசர் எங்ஙனஞ் சிறப்பித்துப் பாராட்டினர் என்பதும், அவ்விசையினை அருந்தவமுனிவரும் பயின்று நூல்செய்ய வல்லுநராயினரென்பதும் தெளியலாகும்.

## மாபுராணம்

" செய்யுட்க ளோசை சிதையுங்கா லீரளவும்
ஐயப்பா டின்றி யணையுமாம் மைதீரொற்
றின்றியுஞ் செய்யுட் கெடினொற்றை யுண்டாக்கு
குன்றமே லொற்றளஃபுங் கொள் "

(தொல். நான்மர. 6, நச்சி. உரை மேற்கோள்)

(நன். எழுத், 37, மயிலைநா. மேற்கோள்)

" அகத்திணை யகவயி னிற்ப வஞ்சி
சிறப்பில வெளினுஞ் சிலவிடத்துளவே "

(யாப். விரு. பக். 120)

" கழ்நெடி லடியுங் காலெழுத் தசையும்
பெயரயற் புணர்ப்பினும் பெயரிடைப் புணர்ப்பினும்,
வழுவென மொழிய வாய்மொழிப் புலவர் "

(யாப். விரு. பக். 34)

"ஆய்தமு மொற்ரு யடங்கினு மாங்கதனை
ஓதினர் தொன்னூ லுணர்வுடையோர்— நீநியால்
ஒற்ரு யடங்குகினு முன்கால வேற்றுமையாற்
சொற்ருர் மகரச் சுருக்கு"

(யாப். விரு. பக். 34)

"மெய்யென்ற சொல்லானே மிக்க மகரத்தின்
னையு மடங்கு நனியென்னின்—ஐயென்ப
தாவி யெனவடங்கு மஃகிற் றெனின்மகரத்
தேய்விற்கு மஃதே திறம்."

(ஷை.. ஷை.)

## இசை நுணுக்கம்

"இடைபிங் கலையிரண்டு மேறும் பிராணன்
புடைநின் றபானன்மலம் போக்கும்—தடையின்றி
யுண்டனகீ ழாக்கு முதானன் சமானனெங்குங்
கொண்டெறியு மாறிரதக் கூறு."

"கூர்ம னிமைப்புவிழி கோணுகன் விக்கலாம்
பேர்வில் வியானன் பெரிதியக்கும்—போர்மலியும்
கோபங் கிருகரனுங் கோப்பி னுடம்பெரிப்புத்
தேவதத்த னுகுமென்று தேர்"

"ஒழிந்த தனஞ்செயன்பே ரோதி லுயிர்போய்க்
கழிந்தாலும் பின்னுடலைக் கட்டி—யழிந்தழிய
முந்நா ளுதிப்பித்து முன்னியவான் மாவின்றிப்
பின்னு வெடித்துவிடும் பேர்ந்து"

(சிலப். அடியார். உரைமேற். பக் 104)

"செந்துறை வெண்டுறை தேவபா ணியிரண்டும்
வந்தன முத்தகமே வண்ணமே—கந்தருவத்
தாற்றுவரி கானல் விரிமுரண் மண்டிலமாத்
தோற்று மிசையிசைப்பாச் சுட்டு"

(ஷை.. ஷை.. பக். 190)

# தலையாயஓத்து

## முரஞ்சியூர் முடிநாகராயர் பாடல்

" மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலை இய தீயுந்
தீமுரணிய நீருமென்றாங்
கைம்பெரும் பூதத் தியற்கை போலப்
போற்றார்ப் பொறுத்தலுஞ் சூழ்ச்சிய தகலமும்
வலியுந் தெறலு மளியு முடையோய்
நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்து நின்
வெண்டலைப் புணரிக் குடகடற் குளிக்கும்
யாணர் வைப்பினன் னாட்டுப் பொருந
வான வரம்பனை நீயோ பெரும
வலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
யீரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்
பாஅல் புளிப்பினும் பகலிருளினு
நாஅல் வேதநெறி திரியினுந்
திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி
நடுக்கின்றி நிலீஇயரோ வத்தை யடுக்கத்துச்
சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
யந்தி யந்தண ரருங்கட னிறுக்கு
முத்தீ விளக்கிற் றுஞ்சும்
பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே "

(புறம். 1)

திணை, பாடாண்டிணை ; துறை—செவியறிவுறூஉ : வாழ்த்தியலுமாம்.

சேரமான் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதனை முரஞ்சியூர் முடிநாகராயர் பாடியது.

இப்பாடல் பாடிய முரஞ்சியூர் முடிநாகராயர் என்பவர் தலைச்சங்கத்திருந்தவர் என்பது இறையனார் களவியலுரைகாரர் கூறியது. அவ்வுரைகாரர், தலைச்சங்கத்திருந்தார் அகத்தியனாரும், திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும், குன்றமெறிந்த முருகவேளும், முரஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின் கிழவனுமென இத்தொடக்கத்தார்" என்றனர். இதனையே உடன்பட்டு அடியார்க்கு நல்லாரும் அவ்வாறு கூறினார். (சிலப். 8) இத் தலைச்சங்க காலம் முதலூழி யிறுதியென்பது அடியார்க்கு நல்லார் கருத்து. நச்சினார்க்கினியர் ஆதி யூழியின் அந்தத்தே இந்நூல் (தொல்காப்பியம்) செய்யப்பட்டது என்று கூறுதலான் தலைச்சங்கம் இன்னுஞ் சிறிது முந்திய காலத்தது என்பது அவர் கருத்தாகும். தலைச்சங்கத்தார் வரிசையிலீண்டுக் கூறப்பட்ட அகத்தியர்,

"அமரமுனிவன் அகத்தியன்" ஆவர். ஆண்டுக் கூறப்பட்ட பலரும் தேவரேயாக இம்முடி நாகராயர் ஒருவரே மக்கள் வடிவினரென்பது அறியக்கிடப்பது. முரஞ்சியூர் என்று இவர் வதிந்த ஊர்ப்பெயரினைக் கூறுதலான் இதனுண்மை யுய்த்துணரலாகும். மற்றையோர்க்கு ஊர்கூறப்பெறுமை யீண்டுநோக்கிக் கொள்க. ஈண்டுக்கூறிய வரலாறுகள் எங்ஙனமாயினும் இம்முரஞ்சியூர் முடிநாகராயர் என்பவர் மிகவும் இறப்ப முந்திய காலத்தவரென்பது மட்டிற் றுணிதற்கு வாயிலாகும். முடிநாகராயர் என்பது முடியில் நாகவடிவை அணிந்த அரசர் என்று பொருள்படும் என்று கருதுவாருண்டு, இற்றைக்கு மூவாயிரம் நாலாயிரம் வருடங்கட்கு முற்பட்ட பழைய எகிப்தரசர் முடிகளில் இந்நாகவடிவு காணப்படுவது. இந்நாட்டுப்பழைய பாரத காலத்து நாகர்களென்ற ஒருவகையினர் இருந்தனரென்று அந்நூலாற்றெரிவது. நாகர் தலைவன் மகளாகிய உலூபியென்பவளை அருச்சுனன் மணந்தனன் என்ப அந்நாக கன்னியான உலூபி பாண்டியநாட்டு மணலூர்ப் புரத்துப் பாண்டியன் மகளும் அருச்சுனனை முன்னே மணந்தவளுமாகிய சித்திராங்கதைக்குத் துணையாய்த் தோன்றி நிகழ்த்திய செய்திகள் அந்நாலுட்கண்டவை. (அசுவமேதபர்வம். அத்தியாயம் 81, 82, 83). இதனால் தென்னாட்டார்க்கும் நாகர்க்கும் பாண்டவர்க்குமுள்ள தொடர்பு நன்கறியப்படுவதாகும். "வானுரெழிலி"

(பரிபா. திரட்டு) என்னும் பரிபாடலில் நாகத்தின் வருணனை மிகுத்து வந்துள்ளது. அதை யுற்றுநோக்கின் பாண்டிநாட்டு மதுரையை யடுத்து நாகத்திற்கு ஒரு பெருங் கோயிலிருந்தது புலனும். அதன்கண் "இருகேழுத்தி யணிந்தவெருத்தின் வரை கெழு செல்வ னகர்" எனவும்,

"புனையிழைப் பூமுடி நாகர் நகர்"

எனவும் வருதல் காண்க. பூமுடிநாகர் என்பது முடிநாகர் என வழக்குப்பெற்றதோவென ஊகிக்க இடந்தருவது, கடல் மலை நாட்டுப் பெரும்படைப்பு வழியினர் (கொச்சியரசர்) மூத்தவர், இளையவர், பல்லுறுத்தியர், மடத்தின் கிழார் அல்லது முரிஞ்சி யூரர், சாலியூரர் எனப்பட்ட ஐவகையினராவர்; இங்குக்கூறிய முரிஞ்சியூர் இம்முடி நாகராயரூர் ஆகலாம்,

புறநானூற்றுப் பாடலாகிய இப் பாடலில் (புறம் 2) முடி நாகராயர் சேரமான் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதனை நேரே விளித்துப்,

"பாஅல் புளிப்பினும் பக லிருளினும்
நாஅல் வேத நெறி திரியினும்"

மாறுபடாத சுற்றத்தோடு துளக்கமின்றி நிற்பாயாக வென்று கூறிச் செவியறிவுறுத்துப் பொற்கோட்டிமயமும் பொதியமும் போன்று நெடுங்காலம் விளங்கி நிற்பாயாக வென்று வாழ்த்தியது காணலாம். இதனால் இது செவியறி வுறுத்து வாழ்த்தியது உணரப்படும். செவியறிவுறுத்து வாழ்த் துவது முன்னிலைக்கே உரித்தென்பது,

"வாயுறை வாழ்த்தே" (செய்வுளி. 111).

என்னுஞ் சூத்திரத்து,

"முன்னிலைக்கே யுரித்தாயினும் செவியறிவுறூஉவினை ஈற்றுக்கண் வைத்தான்" எனப் பேராசிரியரும்,

"முன்னிலைக்கண் வருமேனும் இன்ன குணத்தையாவாய் எனப் புகழ்பட வாழ்த்திப் பிற்கூறுதல் வேறுபாடுடைமையின் அதன்பின் செவியறிவுறூஉக்கூறி இம்முறையே வைத்தார்"

என நச்சினார்க்கினியருங் கூறுதலானறியலாம். நச்சினார்க்கினியர் இதனை ஓம்படை வாழ்த்தென்றார். (தொல். புறத். 36). அவர் நடுக்கின்றி நிற்பாயென அச்சந்தோன்றக் கூறியதென்பர். இதுவும் முன்னிலையிலே வருதலுணர்க. இதனாற் பெருஞ்சோற்றுதியஞ்சேரலை முன்னிலைப்படுத்து அவன் அப்பேர் பெறுதற்குக் காரணமான பெருஞ்சோறு பயந்த செய்தியானே விசேடித்து விளித்துச் செவியறிவுறுத்தி வாழ்த்தியது இஃதென்று நன்குணரலாம். இது முன்னோன் செய்தியொன்றைப் பின்னொரு சேரனுக்கேற்றி வழங்கியது ஆகாதென்பது பெருஞ்சோற்றுதியன் சேரலாதனைப் பாடியதென்று முன்னோர்தொகையுள் எழுதிவைத்ததற்கேற்பப் பெருஞ்சோறுபயந்த செய்தியே பாடலுட் கூறப்படுதலாலறிந்தது. இதுவே பெயர்க்கேற்ற செய்தியாதல் காண்க. இனி இதன்கட் கூறப்பட்ட பெருஞ்சோறுகொடுத்த செய்தி இவ்வுதியன் சேரலாதன் பாண்டவரைவரொடு நூற்றுவர் பொருதழிந்தபோது அவர்படைக்குவரையாது சோறு வழங்கியதனைச் செவ்வனங் குறிப்பதாகும். இதுவே,

"அலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
யீரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்"

என்பதனால் வெளிப்படக் கூறப்பட்டதாகும். நூற்றுவரொழியும் வரையும் இருபடைக்குஞ் சோறு வழங்கியவனாகப் பழைய உரைகாரர் கருதுவர். அது பொருந்தாமை மேலே காட்டுவாம். இப்பாடல் கூறிய தங்குலப் பழஞ்செய்தியை இற்றைக்கு 1800 ஆண்டுகட்கு முற்பட்டவரென்று ஆராய்ச்சியாளர் பலர் துணிந்த இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் (29; வாழ்த்துக்காதை)

"ஓரைவ ரீரைம் பதின்மருடன்றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த சேரன்"

என எடுத்துப் பாராட்டிக் கூறினார். இவற்றால் இவ்வுதியஞ் சேரல் பாண்டியகுலத்து மலையத்துவசன்போலப் பாண்டவர் போர்க்குத் துணையாய்ச் சென்றவன் எனவும், அவர் போரிற் பெருஞ்சோறு வழங்கினனெனவும் அதனாற் பெருஞ்சோற்றுதி

யன் எனப் பெயர்பெற்றனெனவும் தெரியலாம். பாரதப்போர் இற்றைக்கு 3128 ஆண்டுகட்கு முன்பு நிகழ்ந்ததென்பது நல்லாராய்ச்சியாளர் துணிபு. இதனால் இளங்கோவடிகள் கூறும் இப் பெருஞ்சோற்றுதியன் செய்தி அவர்க்கு 1328 ஆண்டுகட்கு முன் நிகழ்ந்ததென்று தெரியலாம். பொய் கலவாது நிகழ்ந்த மெய்ச் சரிதங்களை உள்ளவாறமைத்து இனிய செய்யுளிற்பாடும் பேரறிவாளரும், நல்ல துறவியுமாகிய கவிவேந்தர் இம்முரஞ்சியூர் முடிநாகராயர் பாடலைத்தாம் வழிவழியாய்க் கேட்டுவந்த குலவரலாற்றோடு இனிது பொருந்துதல் கண்டே அதைப் பின்பற்றி இச் செய்தியின் வாய்மை விளக்கினரென்று தெளியலாம். தமிழ் வேந்தருடைய பொய்யில் சரிதங்களைப் பெரும்பாலுந் தம்பாடல் தொறும் எடுத்துப் பாராட்டுதலே தம் வழக்காகக்கொண்ட கடைச்சங்கத்து நல்லிசைப் புலவராகிய மாமூலனாரும்,

" மறப்படைக் குதிரை மாறா மைந்தின்
துறக்க மெய்திய தொய்யா நல்லிசை
முதியர்ப் பேணிய வுதியன் சேரல்
பெருஞ்சோறு கொடுத்த ஞான்றையிரும்பல்
கூளிச் சுற்றங் குழீஇயிருந் தாங்கு " (அகம். 233.)

என்பதனாற் பாராட்டினர். இதன்கண் உதியன்சேரல்

" துறக்க மெய்திய தொய்யா நல்லிசை
முதியர்ப்பேணிய பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை "

என இயையக்கிடத்தலாற் போர்க்களத்து உயிர்துறந்து வீர சுவர்க்கம் எய்தினரும் இவ்வுலகிற் கெடாத நல்லிசையை நிறுத்தினருமாகிய மறப்படைக் குதிரை மாறாமைந்தின் முதியரைப் பேணிப்பெருஞ்சோறு கொடுத்தனன் என்று கொள்ளவைத்தல் காணலாம். இதன்கண் " மறப்படைக்குதிரை மாறாமைந்தின் முதியர் " என்றதும், முடிநாகராயர் பாட்டில்,

" அலங்குளைப் புரவியைவர் "

என்றதும் கருத்தொத்தல் பேணத்தகும். இவ்விரிடத்தும் பாண்டவரைக் குதிரையாற் சிறப்பித்தது அவர்பரிமேதத்துக்கு இந்நாடு சூழவிட்ட குதிரை தென்னாடு போந்தபின் நிகழ்ந்தனபலவும் இத்தமிழ் நாட்டார் அறிந்ததுபற்றி என்று உய்த்

துணரத்தகும். முடிநாகராயர் தருமபுத்திரன் அசுவமேதத்திற்குப் பிந்தியே இப்பாடல் பாடினவராவர். ஈண்டு முதியர் என்றது நட்பிற் பழமையோர் என்னும் பொருட்டு.

"நிதியந் திறையளந்தார் நேராருந் தன்கீழ்
முதிய மென்றுறிமுரண்" (பு. வெ. மா. வஞ்சி. 10)

நேராரும் என்றதனால் ஈண்டு முதுமை நட்பிற்பழமையென்று தெளிக. இம்மாமூலனார் பாட்டைக்கொண்டு முடிநாகராயர் பாடலுக்குப் பொருள் கூறின், ஈரைம் பதின்மரும் பொருது களத்தொழிந்த அளவில் இவ்வுதியஞ்சேரல் ஆண்டிரு படையினு மிறந்தார் பொருட்டுப் பெருஞ்சோறு கொடுத்தான் என்று துணிவதே பொருந்திற்றாகும். "வரையாது கொடுத்தோய்" எனப்புறத்தினும் "போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்தசேரன்" எனச் சிலப்பதிகாரத்தும் வருமிடங்களில், வரையாது, போற்றாது என்றதுபகைநட்பென்றுபாராது இறந்த இரு படைக்கும் வழங்கிய சிறப்பைக் குறித்ததாகும். சிலப்பதிகாரத்திற் "போற்றாது தானளித்தசேரன் என்புழித் தான் என்றது இவ்வுதியஞ் சேரலே கொடுத்தான் என்று தெளியவைத்தவாறும். இருபெரும் படையும் கலகப்பட்டுத் தடுமாறுதற்குரிய பெரும்போர் நிலையில் அவ்விரு படைக்கும் நடுநின்று ஒருவன் சோறுவழங்கினன் எனக் கூறுதற்கண் முட்டுப்பாடு பல வாகுமென்க. இம்முட்டுப்பாடு தீர்ந்து உள்ளவாறு நிகழ்ந்தது இஃதென்று தெளிவிப்பது இம்மாமூலனார் அகப்பாட்டேயாகும். இளங்கோவடிகள் "போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த" என்றது வீரர் இறந்த போர்க்களத்தே இப்பெருஞ்சோறளித்தல் நிகழ்ந்ததாதல்பற்றியென்று துணியலாம். மாமூலனார் இளங்கோவடிகட்கு முற்பட்டவர் என்று நினைத்தற்குச் சான்றுகள் பலவுள்ளன. இதனானும் மாமூலனார் கருத்தையே அடிகள் கருத்துப் பின்பற்றுதல் காணலாம். மாமூலனார் அகப்பாட்டில் "முதியர்ப்பேணிய உதியன் சேரல் பெறுஞ்சோறு கொடுத்தஞான்றை யிரும்பல், கூளிச் சுற்றங் குழீ இயிருந்தாங்கு"

என்பதனால் இவன் இறந்த வீரரைப் பேணி அவர் பொருட்டுப் பெரும்பலிகொடுத்த அக்களத்து அவ்விடத்துக்

கரிய பலபேய்ச்சாதி குழுமியிருந்ததென்று தெரிதலானும் அவ்விடம் இறந்தார் களமாதல் தெரியலாம். ஈண்டுப் பெருஞ் சோறென்றது பல்லோர் பொருட்டும் ஒரு சேர வழங்கிய பெரும்பலியாகிய பிண்டங்களையென அறிக. இதனைப்பிர பூதபலியென்பர் வடநூலார். பிரபூதம் மிக்கிருப்பதென்னும் பொருட்டு, இங்ஙன மிறந்தார்க்கீதல் இத்தென்னாட்டும் வழங் கிற்றென்பது,

" தன்னமர் காதலி புன்மேல் வைத்த
இன்சிறு பிண்டம் யாங்குண்டனன் கொல் "

(புறம். 234)

எனவும்,

" நிலங்கல னாக விலங்குபலி மிசையு
மின்னா வைகல் வாரா முன்னே
செய்ந்நீ முன்னிய வினையே " (புறம். 363)

எனவும் வருமடிகளாற் கண்டுகொள்க.

இறந்தார்க்கு இப்பெருஞ் சோறு படைத்தற் சடங்கு நிகழ்த்தியபின் அதனை ஆண்டுக்குழீஇய கூளிச் சுற்றங்கொள்ள விடுதல் வழக்கேயாம். தமிழ் வீரவேந்தன் வடநாட்டிற் பெரும் போரிலிறந்த வீரரைப் பாராட்டித் தன் பேரன்பினால் அவர் நன்மையின் பொருட்டுச் செய்த பெருங்காரியமாதலின், அதனையே முதலினு மிடையினுங் கடையினுமிருந்த புலவர் பெருமக்கள் பாராட்டிப் பாடினர் என்று நினைக்கத்தகும். சேரர் எல்லாப் புகழினுஞ் சிறந்தவீரப்புகழையே பாராட்டுபவ ரென்பது " மறம் வீங்குபல் புகழ் " என்னும் பதிற்றுப்பத்திற் கண்டது. பின்னர்ச்சேரன் வழியிலே இவன் பெயர்பூண்ட உதியன் சேரல்,

" நாடுகண் ணகற்றிய வுதியஞ் சேரற்
பாடிச் சென்ற பரிசிலர் போல " (அகம். 65)

எனவும்,

" நல்லான் பரப்பிற் குழுமூ ராங்கட்
கொடைக்கட னேன்ற கோடா நெஞ்சி
னுதிய னட்டில் போல " (அகம். 168)

எனவும் வருவனவற்றுட் கேட்கப்படுதலால் அச்சேரனின் இவன் வேருயினனென்பது தோன்றவே பெருஞ் சோற்றுதியன் சேரலென்று புலவரால் வழங்கப்பெற்ருன் என்று தெரிகிற்பது. பிந்திய உதியன் சேரல் யவனர் இந்நாட்டிற்கு வந்த காலத்துக்குப் பிற்பட்டவனுதல் வேண்டுமென்பது அவன் மகனுகிய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனை,

" நயனில் வன்சொல் யவனரைப் " (பதிற். 2 பத்து)

பிணித்தடக்கினனுகக் கூறுதலான் உய்த்துணரலாகும். இனி, இப்பெருஞ் சோறுகொடுத்த செய்தியைப் பாரதப் போர்க்களத்து நிகழ்ந்ததாகக் கொள்ளாது இறப்பப் பிந்திய காலத்து அப்பாரதப்போர்க் கதையை நாடகமாக நிகழ்த்தினர் குழுவிற்கு வரையாது வழங்கியதாகக் கருதி வரைந்தாருமுண்டு. புறப்பாட்டில்,

" அலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருது களத்தொழிய "

என்றதன்கட் சினத்தலும் நிலந்தலைக் கொள்ளலும் பொருது களத்தொழிதலும் ஈரைம்பதின்மர்க்கே உளவாகப் பாரத நூலுட் கூறியபடி கூறுவதல்லது நாடகமென்று குறித்தற்குரிய சொல் யாதும் பெய்யாமை நன்கு நோக்கத்தகும். இது போர்க்கள நாடகமாயின் நூற்றுவரும் ஐவரும் பகைப்புலத்தவராகக் காட்டலும் அவரைச் சூழ்ந்த பதினெட்டக்குரோணிப் படையைத் தோற்றஞ் செய்தலும் எத்துணை யிடர்ப்பட்ட முயற்சியென்று அறிவாளர் சிந்திப்பாராகுக. பாரத கதையில் நாடகமாக நடித்தற்குரிய பகுதிகள் பலபல விருக்க அவற்றையெல்லாம் விடுத்து இப்போர்ப் பகுதியே நடிக்க முயல்வதென்னே ? இவற்ருல் இது பொய்யே கட்டிய நாடகச் செய்தி யன்றென்றும் பாரதர் போர்க்களத்தே இறந்தார் பொருட்டு அன்பால் வழங்கிய பெருஞ்செய்தியே யென்றுந் துணிந்துகொள்க. இளங்கோவடிகளும்,

" ஓரைவ ரீரைம் பதின்ம ருடன்றெழுந்த
போரிற் பெருஞ் சோறு "

என்பதனல் உடன் றெழுந்த போரென்று தெளிவித்ததுங் காண்க. பாரதர் காலத்தே தமிழர் அரசு நிலையிட்டு வாழ்ந்த செய்தியும், அத்தமிழரசரிடம் வடநாட்டரசர் பெண்கொண் டொழுகிய செய்தியும்,

"பூண்டாழ் மார்பிற் பொருப்பிற் கோமான்
பாண்டியன் மடமகள் பணைமுலைச் சாந்தம்
வேறு தொடங்கிய விசய னெஞ்சத்
தாரழ லாற்றுது" (தொல். பொ. 54)

என நச்சினர்க்கினியர் காட்டு மேற்கோளடிகளானறியலாம்.

இப்பாட்டின் நயம் வருமாறு :—

முதற்கண் இப்பாட்டில் நிலனைப் போற்றூர்ப் பொறுத்தற் குவமையாக்கினர். ஈண்டுப் போற்றூர் தன்னை யகழ்வார் என்ற வாறு, "அகழ்வாரைத் தாங்கு நிலம்போல" என வள்ளுவ னர் இக்கருத்தே தழுவிக் கூறுதல் காண்க. நிலனை முற்கூறினர் பல்வகையுயிரையுந் தாங்கிய சிறப்பான். விசும்பு—நிலமுதல் மற்றப் பூதங்கள் பிறத்தற்குரிய முதற்பூத மாதலானும், அதன் கண்ணே எல்லாம் நிலைபெறலானும். "நிலனேந்திய விசும்பு" என்றுர். "நிலத்தினேங்கிய ஆகாயம்" என்பர் உரைகாரர் விசும்பைச்சூழ்ச்சிய தகலத்துக்குவமித்தார். சூழ்ச்சி-ஆராய்ச்சி- சூழ்ச்சி என்பதனல் நுட்பம் புலப்பட நிற்றலால் அகலத்தைக் கூறிக்காட்டினர். "சான்றேர் உசாப்போலுண்டோர் நுசுப்பு" உசா—சூழ்ச்சி. இவ்வாறே உவமையாகிய விசும்பின் நுட்பமும் அகலமும் உணர்க. விசும்புதைவருவளி என்றது வளிவிசும் பிற்பறந்து அதைத் தொட்டுவருகிற சிறப்பானென்க. ஈண்டுக் காற்றினை வலிமைக் குவமையாக்கினர் ; வளிக்கும் வலிக்கும் பொதுத்தன்மை வன்மை என்க. வளித்தலைஇயதீ என்றது அக்காற்றைப் பிறப்பிடமாகக்கொண்ட தீயாதல் பற்றி. தீயைத் தெறலுக்கு உவமையாக்கினர் ; தெறல்—அழித்தல், தீமுரணிய நீரும் என்றது தீயிடைப் பிறந்து அதனை அவிக் கின்ற மாறுபாட்டான் என்க, நிலந்தீநீர் வளி விசும்பு" என் பர் தொல்காப்பியனர்.

பொறுத்தன் முதலிய குணங்களை நோக்கி இவர் நில முத லாக உவமை கூறினரேனும் நிலனேந்தியவிசும்பென்றுவிசும்பின்

றலைமை தோன்றக்கூறி வேதங்கூறியமுறை பிறழாது வைத்துச் செல்லுதலானும். முதலுங்கடையுமிணையுமாறு நிலனும்நீரும் நிறுவலானும் இவர் மறையொடு பிறழா மாண்பினர் என்று துணியலாகும். அந்தியந்தணரருங்கடனிறுக்கு முத்தீ விளக்கினைக் கூறுதலானும், நால்வேதநெறி திரியாது என்று கருதுதலானும் இக்கருத்து வலியுறும். பெருஞ்சோற்றுதியனை ஞாயிறு தோன்றுங் குணகடற்கும் அஞ்ஞாயிறு மறையும் குடகடற்கு மிடைப்பட்ட நல்லவளநாட்டை யுடையனாகக் கூறியுள்ளனர். இப்பெருஞ்சோற்றுதியன்சேரல்பாரதகாலத்து அத்தகையபெருநாடுடையனாகவிருந்த பெருமையை இப்பாட்டு எடுத்துப் புகழ்வதாகும். இதில் இவனை வானவரம்பன் என்பதும் வானத்தை எல்லையாகக்கொண்ட பெருநாடுடைய னென்பதையே குறிக்கும். அரசர் "இவரொடு சினைஇ" என்றது சினவாத ஐவரொடு சினந்து என்றவாறு. ஐவரீரைம்பதின்ம ரென்றது பஞ்சவரினெளிமையும் நூற்றுவர் வலிமையுங் குறித்தது. நிலந்தலைக்கொண்டவென்றது அவர்சிறுமண்ணுங்கொடாது நூற்றுவர் நிலமுழுது முதற்கட் பற்றிக்கொண்டதனைக் குறித்தது. பொலம்பூந்தும்பை என்றது ஈரைம்பதின்மர் பொருதற்குத் தாமுஞ் சூடிக்கன்னன் முதலிய பிறர்க்குஞ் சூட்டியது குறித்தது. தென்னாட்டாரொப்ப வடநாட்டாரும் போர்க்குரிய அடையாளப் பூச்சூடும் வழக்கம் நெடுங்கால முன்னரேயும் உண்டென்பது வான்மீகிமுனிவர் பரத நம்பி கூற்றில் வைத்து, "நம்யுத்த வீரர் மேகங்களைப்போன்ற கறுத்த கேடயங்களுடன், தென்னாட்டாரைப்போலத் தலைக்கணியாகப் பூக்களைச் சூடுகின்றனர்." (அயோத். சர்க் 93.) எனக் கூறுதலான் நன்கறிந்ததொன்று. செல்வச் செருக்காற் பொன்வடிவிலமைத்துச் சூடினரென்று ஈண்டுக் கருதப்படும். இவ்வழக்கந் தமிழ் நாட்டிலுமுண்டு. "பொலம்பூந்தும்பை" என்பது மதுரைக்காஞ்சி. ஈரைம்பதின்மர் என்றது ஐவர்க்குப்பதின்மர் வலியராகவும் அவரினும்ஈரைம்பதின்மராகவும் தெரியவைத்தவாறு. இவ்வழக்கினையே இளங்கோவடிகளும் எடுத்தாளுதல் காண்க. இவரொடு ஈரைம்பதின்மரும் பொருது என்புழி ஒடு ஐவர் உயர்த்தி தோன்ற நின்றது. "ஒருவினையொடுச்சொல்லுயர் பின்வழித்தே" (தொல் சொல்.) என்பதிலக்கணம். ஐவர் பகைகொள்ளலை வேண்டலராகவும் நூற்றுவர் வலியப் பொருததனைக் குறித்தது. இது

பொலம்பூந்தும்பை யென்னுமடையானும் விளங்கும். பதின்மரும் என்புழி உண்மை ஒருவரும் ஒழியாதெஞ்சினரில்லைஎன்பதுகுறித்தது. "களத்தொழியக் கொடுத்தோய்" என்பது களத்தில் ஒழிந்த அளவில் அக்களத்தே கொடுத்தது குறித்தது. "பெருஞ்சோற்று மிகுபதம்" என்புழிப் பெருஞ் சோறாகிய மிக்கவுணவு என்றார். இதன்கட் பெருஞ்சோறே மிகுபதமாகவும் மிகுபதத்தின் வேறாகக் கூறியது அது சடங்கிற்செய்யும் பிரபூதபலி யென்பது குறித்தற்கு. வரையாது என்பது இறந்தநட்டார்க்கே யன்றி ஏதிலர்க்கும் பகைஞர்க்கும் நன்றாக வழங்கியதுகருதிற்று. கொடுத்தோய் என்றார், அவரொன்றுங் கேளாதிருக்க இவனே இரங்கி வழங்கும் உயர்த்தி தோன்ற. பூதத்தியற்கைபோலப் பொறுத்தல் முதலிய ஐந்து முடையோய் என்றது இவை வருந்திக்கொள்வனவல்லவென்றும் நல்லரசர்க்கு இயல்பாகவுள்ளன வென்றும் காட்டியவாறும். பொறுத்தலை முற்கூறினார் பொன்றுந் துணையும் புகழ்விளைப்பதஃதாதலான். "பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ்" (திருக்குறள்) சூழ்ச்சியும் வலியும் பொறாதாரையடக்கற்காவன, இவை மூன்றும் அளியுந்தெறலு மாயடங்குமென்பது குறிக்க அவ்விரண்டையுமீற்றின் கண் வைத்தார். தெறலும் அருளும் நிக்கிரகமும் அநுக்கிரகமுமாதல் உணர்க. "முறைசெய்து காப்பாற்று மன்னவன்" என்னுந் திருக்குறளில் இவ்விரண்டையுமே கருதி முறைசெய்து காப்பாற்றல் மன்னர்க்குக்கூறியது காண்க. நின்கடற்பிறந்த ஞாயிறு நின்கடல் விழுமென்று அமங்கலமாகக் கூறாது குளிக்கும் என்று கூறிய நயம் நினைத்தின்புறத்தகும். அரசர் தேர்ந்துகொண்ட சுற்றத்திற்கு உயர் குணம் திரியாமை இயற்கை என்பதும் அவர் பேரறிவிற்கும் பெருங்கல்விக்கும் அஃதேஒத்ததென்பதும்நன்கு விளங்க இனிமையே இயல்பாகவுடையபாஅல் புளிப்பினும்இவர் இனிமையின் மாறித்தஞ்சொல்லிற் புளிக்கார் என்பதும், இருணீக்கியொளிர்தலையே இயல்பாகவுடைய பகலோன் இருளினும் இவர் தம்மறிவினிருள்படாரென்பதும் உலகிற்குத் திரியா நெறியை விதிக்கின்ற நால் வேதமும் நெறிமாறித்திரியினும் இவர் தம்மொழுக்கின் நெறிதவறுரென்பதுந் தெரியக்கூறியது அறிவாளர் பாராட்டத்தக்கது. பால் புளிப்பினுமென்பது இவர் இன்சொற்பேசுவதல்லது புளிக்கப்பேசாரென்பதைக்குறித்தது. வெறுக்குஞ்சொல் அதனைச்சொல்லும் வாய்க்கே புளிப்பதாதல்,

"வாய் கயப்புற மந்தரை வழங்கிய வெஞ்சொல்"
(கம்பர் மந்தரைசூழ்.)

என்பதனால் உய்த்துணரப்படும். சுவைபற்றிக் கூறியதனானும் இது வாய்பற்றிய சொல்லிற் காதல் எளிதிற் பெறப்படும். இதனால் நயம்படவுரைத்தல் கூறியவாரும். பகலிருளினுமென்பதனால் உளத்திறெட்பங்கூறியவாரும். நால்வேத நெறிதிரியினுமென்பதனாற்றிரியாத உயர் செயல் கூறியவாரும். இங்ஙனம் உரை, உள்ளம், செயல்என்னும் திரிகரணத்தையும்பற்றி இவை போந்தன வென்று துணியத்தகும். முத்தீவிளக்கிற்றுஞ்சும் பொற்கோட்டிமயமும் பொதியமும் போன்றுநடுக்கின்றி நிலியர் என்றது தென்னாட்டும் வடநாட்டும் புகழோங்க மலைபோலச் சலியாது நிற்கவென்று கூறியவாரும். இதனால் இமயமொப்பப் பொதியமு முத்தீ விளக்கம் பெறுதலும், அந்தணருடையதாதலும், அவர் முத்தீவிளக்கினால் மான்பிணைகள் ஊறுசெய்யும் விலங்கினத்துக்கஞ்சாது இரவிற் றுயில்வது போலத் திரியாச்சுற்றமொடு அச்சமின்றி வதிகவென்று செவியறிவுறுத்தலுங் கூறினார். சிறுதலை நவ்விப்பெருங்கண் மாப்பிணை என்றது மான்வடிவினை உள்ளபடி தன் நெஞ்சில் எழுதிக்கொண்ட சிறப்பாற் போந்தது. அந்தணர் அருங்கடனிறுக்கு முத்தீயென்பதில் அருங்கடனென்றது வேறு செல்வ முதலியவற்றாலிறுத்தற்கரிய சிறப்பால். அந்தணரென்றார் அவர் செந்தண்மை தோன்ற. அந்திமாலையில் இமயம் பொற்கோடுடையதாகக் காணப்படுதல் இன்றைக்குமறிந்தது. இவ்வாசிரியர் பொதியத்தையும், பொற்கோட்டிமயத்தையும், ஆண்டு நிகழ்வனவற்றையும் தாம் நேரிற்கண்டு இங்ஙனம் வருணித்தாராவர். இவர் இச்சேரற்குரியனவாகக் கூறிய பொறை, சூழ்ச்சி, வலி, தெறல், அளியென்னுமைந்தும் உலகுண்டாதற்கு ஐம்பெரும் பூதம்போல அவ்வுலகு தாங்கும் அரசர்க்கின்றியமையாதன வென்று கருதிக் கூறினார் என்க. எல்லாச் செல்வமும் அவற்றுற்கு மேலாக இவ்வைம் பெருங்குணமுமுடையனாதலின் அவற்றின்கட் சுற்றமொடு நடுக்கின்றி நின்னாள்கள் நீடுநிற்பனவாகுக என்று இவர் வேண்டினார் என்க. இவ்வரிய பெரிய நயங்கள் பலவுடைமையானும் இதன் பெரும் பழமையானும் பண்டைத் தமிழ்ப்பெரும் புலவர் இவ்வினிய பாடலைப் புறப்பாட்டிற் றலையாகக் கோத்துவைத்தார் என்றுணரத்தகும்.

இனி, 'வரையாது கொடுத்தோய் நடுக்கின்றி நிலீஇயர்' என முன்னிலைக்கண் வியங்கோட் கிளவி பெரும்பான்மை நிகழா தென்றும் சிறுபான்மை வருமென்றும் உரையாசிரியர், சேனா வரையர்முதலியோர் உடன்பட்டு உரைகூறியது இத்தொல்.மை இலக்கிய வழக்குப்பற்றி யென்று உய்த்துணரத் தகும்.

---

# தலையாயஓத்து

## கௌதமனார் பாடல்

மேற்கூறிய அகத்தியர்வரலாற்றால், தமிழுரையாளர் எடுத்தாண்ட இலக்கணஞ்செய்த அகத்தியனார் குமரியாறு கடல் கொண்ட காலத்திற்குச் சிறிதுமுந்தி அடுத்திருந்தவரன்றி வேறு காரெரன்றுந் தெளியலாம். இவ்வகத்தியனார்க்கு முற்பட்டன வென்று கருதப்படு மிலக்கியங்கள் நால்வகையாக இப்போது கிடைப்பனவில்லையேனும் சில செய்யுட்கள் மட்டில் இவர்க்கு முற்பட்டனவென்று நினைத்தற்குரியன உள்ளன. நச்சினார்க்கினியர்,

"அறுவகைப்பட்ட பார்ப்பனப்பக்கமும்" (புறத். சூத். 19)
என்னுஞ் சூத்திரவுரையில்

'இனித் தமிழ்ச் செய்யுட்கண்ணும் இறையனாரும், அகத்தியனாரும், மார்க்கண்டேயனாரும், வான்மீகனாரும், கௌதமனாரும் போல்வார்செய்தன தலையாயஓத்தெனவும் [அகத்தியம்] தொல்காப்பிய முதலிய தமிழ்நூல்களும் இடையாய ஓத்தாமெனவும், இவையெல்லாம் இலக்கணம் எனவுங் கூறுதலால் அகத்தியனார் இலக்கணஞ் செய்தற்குமுன்னே தமிழில்தலையாய ஓத்தாக இலக்கியஞ்செய்தாருண்டென்றுணரக் கிடத்தல் காண்க. இலக்கியங் கண்டு அதற்கிலக்கணம் இயம்பவேண்டுதலான் இஃதறியலாம். இவருள் இறையனாரும் அகத்தியனாரும் இயற்றிய முதலோத்தாகிய இலக்கியப் பாடல்கள் நமக்குக் கிடைத்தில. சில சில இலக்கணச் சூத்திரங்களே இவர்கள் பெயரான் வழங்குவன. "கொங்குதேர் வாழ்க்கை" என்னுங் கடைச்சங்கப் பாடல் இறையனார் பெயரான் வழங்குவது: அதுவும் கடைச்சங்கத்தது. மற்று மார்க்கண்டேயனார், வான்மீகனார், கௌதமனார் போல்வார் இயற்றிய பாடல்கள் புறநானூற்றிற் கோக்கப்பெற்று இந்நாட்டு வழங்குகின்றன. இவற்றுடன் அகத்தியனாருடனிருந்து தமிழாராய்ந்தாராகக் களவியலுரைகாரர் கூறும் முரஞ்சியூர் முடிநாகராயர் பாடலும் தலையாய ஓத்தென்று அடங்கல் வேண்டிக் "கௌதமனாரும் **போல்வார்**" என நச்சினார்க்கினியர் கூறினரென நினைக்கத்தகும். நச்சினார்க்கினியர் கூறுவன

ஆராய்ச்சி முறைமைக்கியையினும் இயையாதாயினும் அவர் தமிழ்த்தலையாயவொத்தெனக் கூறிய இப்பெருந்தகைப் புலவர் பாடல்கள் இறப்ப முந்தியன என்பது மட்டிற்காட்டாதிரா. இக்கருத்திற்கியையவே அப்பாடல்களுட் கௌதமனார் பாடிய புறப்பாட்டும் (366) முரஞ்சியூர் முடிநாகராயர் பாடிய புறப்பாட்டும் (2) பாரத காலத்தனவென்று நினைத்தற்கேற்ற அகச் சான்றுகளுடன் பல வகையிலுஞ் சிறந்து விளங்குதல் அவைவல்லார் நன்கறிவர். இவற்றுட் கௌதமனார் பாடல் வருமாறு

" விழுக்கடிப் பறைந்த முழுக்குரன் முரச
மொழுக்குடை மருங்கி னொருமொழித் தாக
வரவெறி யுருமி னுரறுபு சிலைப்ப
வொருதா மாகிய பெருமை யோரும்
தம்புகழ் நிறீஇச் சென்று மாய்ந்தனரே.
அதனால், அறவோன் மகனே மறவோர் செம்மால்
..............................உரைப்பக் கேண்மதி
நின்னாற்றம் பிறரறியாது
பிறர் கூறிய மொழி தெரியா
ஞாயிற் றெல்லை யாள்வினைக் குதவி
இரவி னெல்லை வருவது நாடி
[illegible] ......................................
[illegible]
செங்கண் மகளிரொடு சிறுதுனி யளைஇ
யங்கட் டேற லாய்கலத் துகுப்பக்
கெடலருந் திருவ........................................
மடை வேண்டுநர்க் கிடையருகா
தவிழ் வேண்டுநர்க் கிடையருளி
விடை வீழ்த்துச் சூடு கிழிப்ப
நீர்நிலை பெருத்த வார்மண லடைகரைக்
காவுதோறும்......................................
மடங்கலுண்மை மாயமோவன்றே " (புறம். 366.)

தருமபுத்திரனைக் கௌதமனார் பாடியது.

[திணை, காஞ்சி. துறை, பெருங்காஞ்சி.]

இதன்கண், விழுக்கடிப்பு சிறந்த குணில். முரசுகடிப்பிடூஉ முதுக்குடிப் பிறந்தோனன்றி வேறியாரானுந் தொட்டடிக்காத விழுப்பம். முழுக்குரல்—வானும் நிலனும் முழுவதும் முரசின் ஒலியாதல். ஒழுக்குடைமருங்கின்—அரசொழுக்கங்களைப்போற்றுதலுடைய சுற்றத்துடன், ஒரு மொழித்தாக—தாம் ஆளும் உலகம் ஒரு மொழியே ஆணையுடையதாக. "ஒரு மொழிவைத் துலகாண்ட" என்பது சிலப்பதிகாரம் (29. வாழ்த்துக் காதை. உரைப்பாட்டுமடை), முரசம் அரவெறி உருமின் உரறுபு சிலைப்ப—முரசு பாம்பை எறியும் இடியேறுபோல உரறிமுழங்க. ஒருதாம் ஆகிய பெருமையோரும்—நின்போலத் தாம் ஒருவரே உல்காள்பவராகிய செயற்கரியசெய்தலை உடையவரும். தம்புகழ் நிறீஇ—தம்புகழுடம்பு நிற்கவைத்து, சென்று மாய்ந்தனரே—பூதவுடம்பு செல்லுதலான் மறைந்தனரேயாயினர். ஏ. தேற்றம் அதனால்—அத்தன்மையுலகியல்பாதலின். அறம்வான் மகனே—தருமபுத்திரனே. மறவோர் செம்மால்—வீரர்க்கு அண்ணலே. உரைப்பக் கேண்மதி—யான் சில சொல்லக் கேட்பாயாக. நின் ஊற்றம் பிறரறியாது—நின்னைத் தாங்கும் வலியிஃதென்று உன்னை ஒழிந்தபிறர் தெரியாமல். பிறர் கூறிய மொழிதெரியா—பிறர் சொற்ற மொழியிக்கருத்திற்றென்று குறிக்கொண்டு. ஞாயிற்றெல்லை ஆள்வினைக்குதவி—ஞாயிற்றையுடைய பகலெல்லையை உலகாளுந் தொழிற்கு உதவலிற் கழித்து. உதவி என்றதனால் தன்பயன் கருதாது பிறர் பயன்கொள்ள ஆளும்வினையே குறித்தார். இரவின் எல்லை வருவது நாடி—இரவினெல்லையில் நாளை எதிர்வது இஃதென்று ஆராய்ந்துகொண்டு. உழவொழி பெரும்பகடு—உழுதொழிலினின்று விடப்பட்ட பெரிய எருது. மக்கள் செயற்கரியது செய்தலாற் பெரும்பகடென்றார். அழி தின்றாங்கு—வைக்கோலைத் தின்றாற்போல. பயிரை உழுது உண்டாக்கியபகடு அப்பயிரின் விளைந்தகதிராகிய பயனெல்லாம் உலகந்துய்க்க நின்று தான் பின்னும் உழுதற்குப்புல்லிய வைக்கோலைத் தின்றாற்போல அரசன் தன் ஆள்வினையின் விளையும் பெரும் பயனையெல்லாம் உலகந் துய்க்க நின்றுதான் பின்னும் ஆள்வினை உதவற்குச் சிறிது சுவைப்பவனாகுக வென்று காட்டியவாறும். செங்கண் மகளிரொடு சிறுதுனி யளைஇ—செய்ய கண்களையுடைய மகளிரொடு சிறுபோழ்து ஊடலிற் கலந்து. ஊடற்கேற்பச் செங்கண் கூறினார். துனிஅளைஇ என்றது புணர்த

லின் ஊடலினிது என்பதுபற்றி (திருவள்ளுவர்), சிறுதுனி என்றார் ஊடியே ஒழியாமைக்கு. தவறின்றி நிகழ்கின்ற ஊடலாதலின் நெடும்போதுநில்லாதென்று பரிமேலழகர் சிறுதுனிக்குப் பொருள் கூறுதல் காண்க. திருவள்ளுவனார் சிறுதுனி என்றதும் இக்கௌதமனார் மொழியே போற்றியதாம். செங்கண்— காமக்களிப்பாற் செய்ய கண் என்பது மமையும். சேந்தொத் திருந்த செழுந்தாமரையன்ன வாட்கண் (சிந். பதிகம்) என்றார் திருத்தக்க தேவரும். மகளிரொடு அளைஇ என்றது அவர் கருத்து முற்றத் தோய்ந்து என்றதாம். அங்கட்டேறல்—உண்டார்க்கு அழகுசெய்யும் கள்தேறல். மயக்கஞ் செய்யுந் தேறலை விலக்கியவாறு. ஆய்கலம்—தேறலுக்கென்று ஆய்ந்து தூய்தாக எடுத்த கிண்ணம். கலத்திமையால் தேறல் திரியாமற் பாதுகாத்தது. உகுப்ப என்றது தேறலுக்குக் குறைவின்மை குறித்தது. கெடலருந் திருவ (த்து)—கொடுத்தும் மடுத்துங்கெடாத வற்றாப் பெருஞ்செல்வத்து. மடைவேண்டுநர்க்கு இடை அருகாது—பான முதலிய மடுத்தலை விரும்பினார்க்கு அமையமறிந்து உதவலிற்குறைவின்றி. அவிழ்வேண்டுநர்க்கு இடைஅருளி—சோறுண்டலை விரும்பினர்க்கு அமையமறிந்து அருடலைச்செய்து. விடைவீழ்த்துச் சூடு கிழிப்ப—ஆட்டுக்கிடாயைக் கொன்று அதன் குட்டிறைச்சியைப் பல்லாற் கிழிப்ப. அவிழ்வேண்டுநர்க்கு அருளி எனக் கூட்டுக. சிறிது அவிழ்வேண்டுநற்கு அவர் வயிறார எதிர் பாராத பெரிதை நல்கல் குறித்தது. நீர்நிலை பெருத்த—நீர் நிலைகளைப் பெருகச்செய்த. வார்மணல் அடைகரை—வார்ந்த மணலால் அடைத்தகரை. கரைக்காவுதோறும்—கரைகளையடுத்த சோலைகடோறும். இதுவும் அரசர் நாடுவளம் படுத்தற்குச் செய்வனவாம். மடங்கலுண்மை மாயமோ வன்றே—காலக்கடவுள் இருப்பது பொய்மையோ வன்று. இவ்வடி இவ்வாறே பின்னுள்ள புறப்பாட்டில் வருதல் காண்க. நின்போற் பெருமையோரும் மாய்ந்தனர். அதனால் அறவோன் மகனே! மறவோர் செம்மால்! யான் உரைப்பக் கேண்மதி! கிடைத்த பொழுதை ஆள்வினைக்குதவி இரவின் எல்லை வருவதுநாடி சிறுதுனியளைஇ வேண்டுநர்க்கு இடையருகாதருளி (க்காண்) என்று கூறியதாகக் கருதுக. அருகாதருளி என்றதனால் அறமும், நீர் பெருத்தவார்மணலடைகரைக்காவு தொறுமெனவும் ஆள்வினைக்குதவி எனவும் கூறியதனால் நாடுவளம் படுத்தி அரசியல் நடாத்

தும் பொருளும், சிறுதுனியளைஇ என்பதனல் இன்பமும், "பெருமையோரும் சென்று மாய்ந்தனர்" அதனல் மடங்க லுண்மை மாயமோ அன்றே" என்று நிலையாமைகூறு முகத் தால் வீட்டுக்கு நிமித்தமுங் கூறினரென்று துணிக. இங்ஙனஞ் சொல்லும் பொருளும் சுவைபெரிது பயக்கும் இவ்வரிய பாடல் சிறிது சிறிது இடையே சிதைவுபட்டிருத்தல் எம்மனேர்க்கு ஆருத்துயர் விளைப்பதாகும்.

முரசம் முழக்குரலோடு பாம்பை எறியுமிடிபோல மிக முழங்கத் தாம் ஒருவராயுலகாண்ட பெருமையையுடைய பேரர சருந் தம் புகழை நிறுவிச்சென்று மறைந்தனர். அதனல் அற வோன் மகனே! மறவோர் செம்மலே! உரைப்பக் கேட்பாயாக. எமன் உண்மை பொய்மையோவன்று எனத் தருமபுத்திரனுக்கு முன்னே யரசர் நிலையாமை கூறி இவ்வுலகத்து நிலையாமை யுரைத்ததாகக் கொள்ளக்கிடப்பது காணலாம். இதன்கண் உன் னைப்போல் முரசு அரவெறியுமிடியேறுபோல முழங்கவாண்ட பெருமையோர் நிலையாது மாய்ந்தனர்என்றதனல், நீயும் அவ்வா ருவையென்று கருதிக்கூறிக் காலத்திற் செய்வன செய்து துய்ப் பன துய்த்து வழங்குவ வழங்கி யறங்கொண்டு போகவென்று கூறியது காண்க. ஈண்டு அறவோன் மகனகிய தருமபுத்திரன் கொடியில் முரசுயர்த்தவனுதலும் இவனெடு பகைத்த துரியோ தனன்கொடியில் அரவுயர்த்தவனுதலும் பாரதத்திற் கண்டு கொள்ளலாம். முரசு அரவெறியுமிடிபோல்முழங்க உலகாண்ட வர் என்பது இத்தருமனுக்கியையவே கருதித்தொடுத்ததாமென் பது கவிநோக்கால் உய்த்துணரத்தகும். இது பிற்காலத்தியாருக் கும் இயையாமையுநோக்கிக்கொள்க. இதின்கண் முரசுயர்த்தப் படுவதும்அரவு எறியப்படுவதுமாகிய கருத்தமைதிபாரதநூலொ டும் பொருந்திப் பெரிதும் வியப்பை விளைவிப்பதொன்று. * இது பெருங் காஞ்சியாதலால்,

"மாற்றருங் கூற்றஞ் சாற்றிய பெருமை"

என்று தொல்காப்பியனர் இலக்கணம் அமைத்தற்கு அவர்கண்டு கொண்ட தொன்மை இலக்கியமாக நினைக்கத்தகும். இவ்விலக்

* அரவுயர்த்தோன் கொடுமையினு முரசுயர்த்தோ யுன தருளுக்கஞ்சினேனே.' (வில்லி. பாரதம். உத்தியோக பருவம்)

கிய நெறியேபற்றிப் பெருங் காஞ்சிக்கு உரையாசிரியர் முதலி யோர் எடுத்துக் காட்டும் " இருங்கடலுடுத்த " என்னும் (363) புறப்பாட்டிலும் இச் செய்யுளுட் போலவே ' நியுங் கேண்மதி மடங்கலுண்மை மாயமுமன்றே ' என முன்னிலைப்படுத்திவருதல் காணலாம்.

" .......................................................... ஈயா
திறுகப் பொதியன்மி னின்றொடு நாளைக்
குறுக வருமரோ கூற்று "

எனவெண்பா மாலையினும் கேட்பாரை முன்னிலைப் படுத்து வருதல் காண்க.

இவற்றால் எத்துணையோ காலத்திற்கு முன்னே இறந்த ஒருவனை முன்னிலைப்படுத்துக் கூறுதற்கு அமைய மொன்றும் ஈண்டில்லாமையுந் தெரிந்த முன்னை யறிஞர் அறவோன் மகனே யென்றதற் கேற்பத் தரும புத்திரனைக் கௌதமனார் பாடிய தென்று ஏட்டில் எழுத்திட்டு வைத்தனரென்று நன்கு தெளிக. இவ்வாறே மாங்குடி மருதனார் தலையாலங் கானத்துச் செரு வென்ற நெடுஞ் செழியற்கு அவனெதிரே நின்று நிலையாமை அறிவுறுத்தலும் மதுரைக்காஞ்சியான் உணர்க. பாரதகாலத்து ஐவர் பாண்டவர்க்கும் தமிழரசருக்கும் பெண் கொடுத்தல், போரின் உதவுதல், பெருஞ்சோறளித்தல் முதலிய பல பல செய்கைகளால் தொடர்புண்டென்று வியாஸ பாரதத்திற் கேட்கப்படுதலாற் றமிழரசர் தம்முறுதுணைச் சுற்றத்துடனும் புலவர்முதலியோருடனும் அப்பாண்டவர்பாற்புக்குக்கலந்துள்ள அமையத்திற் பாண்டியர் புலவராகிய இக்கௌதமனார் தம் புலமைதோன்றத் தருமராஜனுக்கு நிலையாமை அறிவுறுத்தியது இஃதென்று துணியலாம். சித்திராங்கதை யென்பவள் பாண்டிய நாட்டு மணலூர் புரத்திலிருந்த சித்திரவாகனனென்னும் மலயத்துவச பாண்டியன் மகளெனவும் அவளை அருச்சுனன் மணந்தானெனவும் அவ்விருவருக்கும் பப்புருவாகனன் என்பவன் மகனெனவும் பாரதங் கூறுதல் கொண்டு பெண்கொண்ட தொடர்பு அறியப்படும். (ஆதி பருவம் 234 ஆம் அத்தியாயம்) (சபாபருவம் பக். 835, 841) போரில் அருச்சுனனுக்குமாமனாகிய

மலயத்துவச பாண்டியன் பாண்டவர்க்குப் போர்த்துணையாய் நின்று அசுவத்தாமாவுடன் பெரும்போர் நிகழ்த்திப்பட்டசெய்தி (பாரதம், கன்ன பருவம் 56-ம் அத்தியாயம்) பாரதத்திற் கண்டது. சித்திராங்கதையின் மகனாகிய பப்புருவாகனனென்னுந் தமிழரசன் (இவன் மலயத்துவசன் மகளின் மகன்), அசுவமேத யாகத்தில் அந்தணர்க்குச் சோறிடுவலென்று உடன்பட்டது, மேற்படி நூல் அசுவமேத பருவம் 82-ம் அத்தியாயத்திற் காணலாம்.

இவற்றால் வடநாட்டு ஐவர் பாண்டவர்க்குந் தமிழரசர்க்கும் பல்வகையினுந் தொடர்புண்மை நன்கு தேறலாம். இத் தொடர்புண்மையால் இக்கௌதமனார் தருமபுத்திரனுக் கறிவுறுத்திய தென்று நந்தமிழ்ப் பெருமக்கள் துணிந்த இச் செய்யுளின்பழமை நன்கு துணியலாம். முன்னே தமிழ் நாட்டிற் பாரதநாடகம் என ஒன்று வழங்கியதாகவும், அந்நூலின் கதை யமைதிக்கேற்ப இப் பாடலமைந்ததாகவும் அதன் கண் நிலையாமை உணர்த்தும் புலவன் உளனாகவும், அந்நாடகப்புலவன் கூற்று இஃதாகவும் கொள்ளலாமென விதண்டை கூறுவார்க்கு அங்ஙனம் நினைக்கும் நூற் பாடல்களில் ஒன்றேனும் புறநானூற்றிற் கோக்கப்பட்டிலதென்றும், அவ்வவ்வமையங்களில் நிகழ்ந்த செய்தி குறித்துப் பல் புலவர் பாடிய தனிப் பாடல்களே அத்தொகைக்கண் உள்ளன என்றுங் கூறி இதனுண்மை தேற்றுக. இவ்வாசிரியன் வேறுதல் காட்டவே பாலை என்னும் அடை அடுத்துப் பாலைக் கௌதமனாரென இவர் பெயரே புனைந்து விளங்கிய பெரியாரும் இத்தமிழ் நாட்டில் உண்டு. இப்பாலைக் கௌதமனார் இறப்பப் பிந்தியவராவர்.

## வான்மீகியார் பாடல்

" பருதி சூழ்ந்தவிப் பயங்கெழு மாநில
மொருபக லெழுவ ரெய்தி யற்றே
வையமுந் தவமுந் தூக்கிற் றவத்துக்
கையவி யனைத்து மாற்றா தாகலிற்
கைவிட் டனரே காதல ரதனால்
விட்டோரை விடாஅ டிருவே
விடாஅதோ ரிவள் விடப்பட்டோரே "

(புறம். 358)

திணை. காஞ்சி; துறை-மனையறம் துறவறம். (வான்மீகியார்) இவர் பெயர் வான்மீகனாரெனவும் வழங்கப்படு மென்பது,

" அறுவகைப்பட்ட பார்ப்பன பக்கமும் "

(தொல். புறத். 20)

என்பத னுரைக்கணுள்ள வழக்காற் றெரிவது. வடமொழியில் வல்ல முனிவர் பெயர்களைப் பண்டைத் தமிழாசிரியர் புனைந்து விளங்கினர் என்பது செந்தமிழ் நாட்டு நல்லிசைப் புலவர்பெயர் கள் பலகொண்டு தெரியலாம். இனி வடமொழியிலுள்ள வான் மீகி முனிவர் வழியினர் இவராவரென்று கருதுவாருமுண்டு. இவர் தவத்தை மிகவுஞ் சிறப்பித்துக் கூறுதலால் அவ்வொழுக் கத்தைத் தலையாகப் போற்றிய பெருந்தூயரென்று இவரை நினைத்தல் தகும். வான்மீகி முனிவர் உடம்பு புற்றில் மறைய நின்று நெடுநாள் தவஞ்செய்து அதனால் முனிவர் தலைவராய் மேம்பட்டனரென்று கூறும் வடமொழி வரலாற்றிற்கு இவ ரொழுக்கம் மிகவு மியைவது ஈண்டைக்கு நினைக்கத்தக்கது. இவர் பாடலின் கண் " பருதி சூழ்ந்தவிப் பயங்கெழு மாநிலம் " என்றது ஞாயிறு சூழ்தலாற் பயன் கெழுமிய இப்பேருல கென்றவாறு. ஒரு பகலெழுவ ரெய்தியற்றே என்றது இவ்வுலக மொரு பகலிலே ஏழரசரைத் தனக்குத் தலைவராக வெய்திய அத்தன்மைத்து எ-று. இப்பயங்கெழுமா நிலம் பருதி சூழ்ந்த

ஒரு பகலி லென்றாலும் பொருந்தும். எழுவர் என்றது ஒரு பகலளவைக்குள் இறந்த அரசர் ஒருவர் பின் ஒருவராக அர செய்திய எழுவரைக் குறித்தது. எழுவர்—ஒரு குடியினரல் லாத எழுவரெனினு மமையும். இங்ஙனம் நிலையாவியல்பிற் றென்று இனி நிலைத்ததெய்தற்கு வாயில் கூறுகின்றார். முதலிரடிகளானும் யாக்கை நிலையாமையும் செல்வ நிலையாமை யுங் கூறினார். வையமுந் தவமுந் தூக்கின்—உலகினையுந் தவத் தினையுஞ் சீர் தூக்கிப் பார்க்கின், நிலைத்த வீட்டிற்கு வாயிலாகிய தவத்திற்கு நிலையாமையே இயல்பாகவுடையவையங்கடுகத்தனை யும் நிறையாற்றாதாகலிற் காதலர் காதலைக்கைவிட்டனரெனினு மமையும். முன்னே அவ்வையத்திற் காதலுடையவர் தங் காதற்குக் காரணமாகிய வுலகை முற்றத் துறந்தனர். அதனா லென்பது வையமுந் தவமுஞ் சீர் தூக்கிய வதனால் எ-று. விட்டோரை விடா அடிருவே—திருமகள் இவ்வுலகின்பற்றைத் துறந்தவரை விடாது அவர் பாலுறைவள். விடாஅதோரிவள் விடப்பட்டோரே—பற்று விடாதவர் இத்திருமகளாலணுகப் பெறாது கைவிடப்பட்டவரே யாவரென்க. திரு — இறைவ னருட் சத்தியாதலின் பற்றற்றவ: இறைவனருளாற் பற்றப் பட்டவரென்பது, பற்று விடாதார் அருளாற் பற்றப்படாது விடப்பட்டவ ரென்பதுங் கருத்தாதல் கொள்க. இதன் கருத்தையே தழுவிக் குலசேகரப் பெருமாளும்,

> "நீள் செல்வம் வேண்டாதான்
> றன்னையே தான் வேண்டுஞ் செல்வம்"

என்று கூறுதல் காண்க. தவமென்பது உற்றநோய் நோன்ற லும் உயிர்க்குறுகண் செய்யாமையும் என்ப. இப்பாடலால் நிலையா வுலகியலும் நிலைத்த வீட்டியல்புமதனை யெய்தற்குரிய தவவொழுக்கமு மத்தவத்தின் கண் ஒழுகுதற்கு இவ்வுலகைத் துறப்பதும் அங்ஙனந் துறந்தார் இறைவன் அருளைப் பருகி மகிழ்தலுந் துறவாதார் அவ்வருளைப் பெறுதற் கேலாமையு மெனப்பட்ட அரிய பெரிய கொள்கைகள் இத்தமிழ் நாட்டிற் றொல் காப்பியர் காலத்துக்கு முன்னே நன்கு நிலவினவென்று துணியத்தகும். தென்னாட்டுத் தவம் புரியும் நன்மக்கட்கு இலங்கையை யாண்ட இராவணன் தீங்கிழைத்தனன் என்று வடநூல்களிற் கேட்கப்படுதலான் அவன் காலத்துக்கு முன்னே

இத்தமிழ் நன்னிலத்துத் தவவொழுக்கம் நிலவத் தலைப்பட்ட தென்று கொள்ளலாம். தொல்காப்பியனார்,

"நாலிரு வழக்கிற் றாபதப்பக்கமும்"
(தொல். புறத். 20)

எனவும்,

"கிழவனுங் கிழத்தியுஞ் சிறந்தது பயிற்ற
லிறந்ததன் பயனே" (தொல். கற்பு. 51)

எனவுங் கூறுதற்கு முற்பட்டே இப்பெரிய வொழுக்கங்கள் இந் நாட்டு நிலவினவாதல் வேண்டும். திரு என்பது தமிழ்ப் பெயரே யாதலாலிறைவன் அருட் சத்தி யுணர்ச்சியும் இந்நாட்டார்க்கு முந்தியே யாதல் வேண்டும். தமிழர் திருவுடையரிவரென்றுந் திருவிலரிவரென்றும் பகுத்து முன்னரே வழங்கிய முறைமை அறிவாளராற் பாராட்டப்பட்டது. இப்பாடல் இல்வாழ்க்கை யியல்பும் துறவியல்புங் கூறுதலால் மனையறந் துறவற மெனத் துறை கூறப்பட்டது,

"மாநில மொருபக லெழுவ ரெய்தி யற்றே"

என்பது இல்வாழ்க்கை யியல்பு கூறியவாறும்.

## மார்க்கண்டேயனார் பாடல்கள்

" மயங்கிருங் கருவிய விசும்பு முகனாக
வியங்கிய விருசுடர் கண்ணெனப் பெயரிய
வளியிடை வழங்கா வழக்கரு நீத்தம்
வயிரக் குறட்டின் வயங்குமணி யாரத்துப்
பொன்னந் திகிரி முன்சமத் துருட்டிப்
பொருநர்க் காணாச் செருமிகு முன்பின்
முன்னோர் செல்லவுஞ் செல்லா தின்னும்
விலைநலப் பெண்டிரிற் பலமீக் கூற
வுள்ளேன் வாழியர் யானெனப் பன்மா
ணிலமக ளழுத காஞ்சியு
முண்டென வுரைப்பரா லுணர்ந்திசி னோரே "

(புறம். 362.)

திணை : காஞ்சி ; துறை ; பெருங்காஞ்சி..

இம் மார்க்கண்டேயனார் பாடல் தொல்காப்பியனார்க்கு முற்பட்ட தலையாய ஓத்தென்பது முன்னர்க் கூறினோம். இதனால் இது தொல்காப்பியத்துக்கு முந்திய இலக்கியமாதல் தெரியலாம். இவ்வாசிரியர் உலக நிலையாமையை உணர்ந்திசினோர் உரைப்பரென்று ஒருவர்க்கோ பலர்க்கோ அறிவுறுத்தியது இஃதெனக் கொள்ளத்தகும். இப்பாடலில் " மயங்கிருங்கருவிய விசும்பு முகனாக " என்றது உலகு ஆதற்குப் பிற பூதங்களுடன் முதற்கட் கலந்த செழுங்கருவி யாதலையுடைய ஆகாயம் முகமாகக் கொண்டு ;

" நிலந் தீ நீர்வளி விசும்போ டைந்துங்
கலந்த மயக்க முலகம் "

என்பது தொல்காப்பியம் (மரபி. 89). இம்மயக்கத்திற்குப் பெருங்கருவி யாதற்றன்மை விசும்பிடத்ததாதலின் அதனை ஐம்பொறியையு முடைய முகனாகக் கூறினார். இயங்கிய இருசுடர் கண்ணென என்றது நாளுமியங்கின இரு சுடர்களாகிய ஞாயிறுந் திங்களுங் கண்கள் என்று சொல்ல என்றவாறு.

விசும்பு முகனாக இருசுடர் கண்ணென உள்ளேன் யான் என நிலமகளழுத காஞ்சியென வியையும். ஈண்டு நிலமகள் இங்ஙனம் உள்ளேனென்றது நிலனை உடலாகக் கொண்டு முகனெடுத்து இரு கண்ணாற் கீழ் நோக்கித் தன் கண்ணிரவும் பகலும் நிகழ்வன அனைத்தையுங் காணுதல் குறித்தவாறு. உலகென்பது ஆகாயம், இரு சுடர் கீழுள்ள நிலமாகிய ஒருகோளமென்று குறித்தவாறு.

பெயரிய, வளியிடை வழங்கா வழக்கரு நீத்தம்—மலைகளையும் பெயர்த்த காற்றுத் தன்னிடையே வழங்காது நீரில் இயல்பாகச் செல்லற்குரிய மரக்கலங்களும் வழங்குதலில்லாத நீர்ப்பெருக்காகிய கடலென்றவாறு. இப்பெருங் கடலினுந் திகிரியுருட்டி என்க; என்று இவ்வரியது கூறியதனால் நிலத்திற்றிகிரியுருட்டி யென எளியது கூறிற்றிலை. நீந்தத்திகிரியுருட்டி என்க.

வயிரக் குறட்டின் வயங்கு மணியாரத்துடபொன்னந் திகிரி—வயிரத்தாற் செய்த குறடுகளையும், விளங்கு மணியாற் செய்த ஆர்க் கால்களையுமுடைய பொன்னாற் செய்த சக்கரம் எ-று.

முன் சமத்துருட்டி என்றது—முற்பட்ட சமநிலையில் உருளச் செய்து எ-று. சம்—பகை, நட்பு, அல் என்னு முத்திறத்தும் நீதிக் கொத்தபடி யொழுகுதல் சமத்து நீத்தம் உருட்டி எனக் கூறுக. நீத்தம் உருட்டி எனக்கூறுக. நீத்தத்தும் என்னும் உம்மை செய்யுள் விகாரத்தாற் றொக்கது. "முன் சமத்தார்ப்ப" என வரு முல்லைக்கலியில் (முல்லை. 1) சமத்து முன் எனக்கொண்டு நடு நிலத்தின் முன்என நச்சினார்க்கினியர் கூறுதலானுண்மையுணர்க. சமம் போரெனக்கொண்டு அத்தகைய பெரு நீரினும் போர்க்கண் திகிரியை உருளுவித்து என்றாலும் பொருந்தும். இங்ஙனங் கூறின் இது நாவாய்ப்போர் கருதியதாகும். காறு வழங்காத கடலினுந் தன் நாவாயோடும் வண்ணம் காற்றுக்குத் தலைவனை ஏவிக்கரியங்கொண்ட சோழன் ஒருவன் உண்டு. இதனை,

"நளியிரு முந்நீர் நாவாயோட்டி
வளிதொழி லாண்ட உரவோன் மருக" (புறம். 66)

என வருதலானறிக. காற்றில்லாத கடலினும் தன் ஆணை செல்ல ஆண்ட முன்னோர் என்று இவ்வாறல்லாறே கருதினாரெனினும் பொருந்தும். செரு மிகு முன்பின் முன்னோர்—திகிரியைச் சமனிலையில் உருளுவித்தலாற் போர்புரிவாரைக் காணாமற் செருவைக் கடந்த வலியினையுடைய முன்னோர் எ-று. பொருவாரைக் காணாமையாற் செருவினெல்லைக்கப்பாற்பட்ட வலி என்றார். இதனை வடநூலார் யுத்தாதீத பலமென்பர். முன்னோர் என்றது மக்கட்கிறை யென்று வைக்கப்பட்ட பழைய மன்னர் எ-று. அவர் இறைவன் வடிவினுள் ஒருபகுதியினராக நின்று உலகத்தைச் சமநிலையிற் காத்தலின் அவர் நிலமகளாகிய தனக்குக் கணவராதல் தக்கதென்றும், அவர் செல்வவுந் தானுடன்செல்லாது அம்முன்னோர் நலங்களில்லாத பலர் தாமே தம்மை யெடுத்துப் புகழ்ந்து கொள்ளாநிற்கத்தான் அவர்களாற் பற்றப்படுதலின் விலைநலப் பெண்டிர்போல இன்னு முள்ளேன் யான் என நிலமகளழுத காஞ்சி விலைநலப் பெண்டிர் என்றது தம் நலத்தை விலைப்பொருட்டுத் தரும் பெண்டிர் என்க. வாழியர் என்பது இகழ்ச்சி குறித்து வந்தது. பன்மாணிலமகள் என்றது உலகிற்குத் தாயாதற்கேற்ற பல மாட்சிமைகளுமுடைமை குறித்தது. அழுத காஞ்சி என்றது அழுத நிலையாமை எ-று. ஈண்டுக் காஞ்சி பொன்னந் திகிரி யுருட்டிய முன்னோர் காலத்துத் தான் மேம்பட்டு நின்ற நிலை இக்காலத்து மாறி வேறுப் இழிந்தது குறித்தது. அழுத காஞ்சி அழுதற்குக் காரணமாம் காஞ்சி. காஞ்சியும்—உம்மை உயர்வு சிறப்பு. உணர்ந்திலோர் காஞ்சியும் உண்டென வுரைப்ப ரென்க. அறநெறி வழுவாது பாவத்தைக் கடிந்து வீரத்திற் குன்றாது மானத்தைக் கவசமாகவுடைய பழைய சக்ரவர்த்திகளால் ஆளப் பெற்ற யான், இவ்வாறில்லாது பெயர் மாத்திரையில் மன்னராகிய இப்பலர் மீக்கூற இன்னும் யான் உள்ளே னெனப் பன்மாணில மகளழுதல் கூறினார். முன்னோரைப் பலபடியாக நன்கு விசேடித்துக் கூறிப் பின்னோரைப் பலரென்று வாளா வொழிந்தது அவர் தன்னையாளுந் தகுதியின்மை காட்டுதற்கெனத் தெளியம். இறைவன் கூறிலாத (கூறு-அமிசம்) மெல்லியர் கிழவராலால் விலை நலப் பெண்டிரினுள்ளேன் யான் என இழித்துக்கூறி, முன்னோர் செல்வவுஞ் செல்லாமைக்கு மட்டுமன்றிப் பின்னோர் பலரிருத்தற்கும் நிலமகள் அழுததாகக்

கொள்க. முன்பின் முன்னோர் என்றதனாற் பின்னுள்ளோர் மெல்லியரென்பது பெற்றாம். விசும்பு முகனாக இரு சுடர் கண்ணென உள்ளேன்—முன்னுள்ள ஏற்றத்தையும் இம்முகத்திற் கண்கொண்டு பார்த்தே கொண்டுள்ளேன் என்பது குறித்ததாம். யான் வாழியர் என்றது வியங்கோள் தன்மைக்கட்சிறுவரவிற்றாய் வந்தது.

(தொல். வினையி. சூ. 27)

உள்ளேன் யான் என்றது தானே உள்ளாக இப்பலருமிறந்தொழிதலைக் குறித்தது. இவ்வாறு பல்வகை நயங்களும் நிறைந்து அறவொளி பரப்பும் இவ்வரிய வினிய செய்யுள் தலையாய ஓத்தென்று நல்லுரைகாரர் துணிந்ததற் கேற்ப உயர்நிலையில் நிற்பது அறிவாளர் கண்டு இன்புறத்தகும். இனி, இவர் பெயரான் மார்க்கண்டேயனார் காஞ்சியென்ற பெயருடையதோர் நூலிருந்ததென்று நினைக்கும் வண்ணம் யாப்பருங் கலவிருத்திகாரராற் றோலென்பதற்கு உதாரணமாக ஓர் செய்யுட் பகுதி எடுத்தாளப்பட்டுள்ளது. அவ்வுரைகாரர் காட்டுமாறு,

“ மாயிரும் பரப்பகம் புதையப் பாம்பின்
ஆயிர மணிவிளக் கழலுஞ் சேக்கைத்
துணிதரு வெள்ளந் துயிலெடை பெயர்க்கு
மொளியோன் காஞ்சி யெளிதினிற் கூறின்
இம்மை யில்லை மறுமை யில்லை
நன்மை யில்லை தீமை யில்லை
செய்வோ ரில்லை செய்பொரு ளில்லை
யறிவோர் யாரஃ திறுவழி யிறுகென ”

இது மார்க்கண்டேயனார் காஞ்சி. இழுமென் மொழியால் விழுமியது நுவன்றது.”

இவ்வுரையா லிதனுண்மை உணரப்படும். இதன் கண் நிலையாமையே கூறலாற் காஞ்சியெனப் பட்டதென்று கொள்ளலாம்.

“ இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்
பரந்த மொழியா னடிநிமிர்ந் தொழுகினுந்
தோலென மொழிப தொன்னெறிப் புலவர் ”

என்னுந் தொல்காப்பியச் சூத்திர வுரையில் (செய். 238) உரையாசிரியரும் இப்பாடற் பகுதியே எடுத்துக்காட்டினர். இதன் கண் மாயிரும் பரப்பு—பெரியகரிய பரப்பு: இருள் எ-று. மாவு மிருமையுங் கருமைக்குப் பெயர்கள். எங்குங் கருமையாய்ப் பரந்ததென்று மிகுதியான இருளுக்காயிற்று. அகம்—அகலிடம். புதைய—அகலிடம் இருளின் மறைந்த அள வில். பாம்பின் ஆயிரமணி—சேடனுடைய ஆயிரந்தலை மணிகள். விளக்கு அழலும்—விளக்காக நின்று எரியும். சேக்கை—பாயல் என்க. இருளிற் புதைய விளக்கழலுஞ் சேக்கை—என்றது இரவிற் பாயல் கொள்ளுதற் கண் விளக்கு வேண்டுமென்பது நம் முன்னோர் வழக்கு.

“ இறும்பு பட்டிருளிய விட்டருஞ் சிலம்பின்
.......................................
பாம்புமணி .......விளக்கிற் பெறுகுவிர் ”

என வருதலாலறிக. சேக்கைத் துணிதரு வெள்ளம்-சேக்கையை விரித்தற் பொருட்டுத் துணிந்த கடல் வெள்ளம். துயிலெடை பெயர்க்கு மொளியோன்—துயிலெடையை மாற்றும் ஒளியோன். துயிலெடை—துயிலினின்றெழுதல். மாற்றும் ஒளியோன்—இறையோனாகிய திருமால் எ-று. வெள்ளம்—கடல் வெள்ளம். ஆர்கலியாகவும் அங்ஙனம் பேரொலி புரியாது இறைவன் ஆணை யால் ஒலி அவிந்து துயிலெழுதலை மாற்றித் துயிலுதற்கே காரணமாதலா லிங்ஙனங் கூறினார். இறைவன் துயிலுதல் வினையற்ற நிலைக்கடையாள மென்பர். “ ஒரு வினையுமில்லார் போல் உறங்குதியா லுறங்காதாய் ” என்றார் கம்ப நாடர், இவ்வாறு பெரும் பூதங்களுமவனொளியாலவனுக் கியைந் தொழுகு மென்பது கருத்து. ஒளியோன் என்றார் சோதியாகி எல்லாவுலகுந் தொழுவோனாதலின். ஒளியோன் காஞ்சி என்றது ஒளியோன் விதித்த நிலையாமையை எ-று

“ உறங்கு மாயினு மன்னவன் றன்னொளி
கறங்கு தெண்டிரை வையகங் காக்குமால் ”

(செய். 248)

என்று சிந்தாமணியார் பாடுதற்கு “ வெள்ளம் துயிலெடை பெயர்க்கு மொளி ” என்பது மூலமென்று துணியலாம்.

எளிதினிற் கூறின்—எளிதினில் யாவருங் கொள்ளக் கூறின். எ-று. இறைவன் துயிலினும் வெள்ளம் அவனொளியா லொலியவிந்து அவனுக் கிணங்கி நிற்றல் காண்க. இம்மை மறுமை நன்மை தீமை செய்வோர் செய்பொருள் இவையில்லை யாதல் நிலையாமையாலன்றி வேறில்லையென்று காஞ்சியைமிகுத் துக் கூறினர். பொருள்சள் முற்றக் கெடுதலில்லை யெனவும் மாறிமாறித் திரிதலால் நிலையாமையையே யுடையன வெனவுங் கொண்டு அஃதறிவோர் யாரென்றார். அஃதென்றது காஞ்சி யினை. தொல்காப்பியனாரும் "நில்லா வுலகம்" (புறத். 23) என்றதனல் ஒரு நிலையில் நில்லாமை கூறி நிலையாமையே புலப் படுத்தல் காண்க. அஃதறிவோர் யாரென்றது அந்நிலை யாமையை அறிவுறுத்தருளிய இறைவனன்றிவேறு யாரஃதறிவா ரென்றவாறு. இறுவழியிறுகென—பொருள்கள் முடியவேண்டிய விடத்து முடிவனவாகுக என்று சொல்ல எ-று. அண்டபிண்டங் கள் யாவும் அசித்தின் பரிணாமமாதலாலும் அவ்வசித்துகள் இறைவனினின்று காரியப்பட்டுத்தோற்றிப் பல்வகை நிலையாமை யினையுமெய்தி அவன் கண்ணே ஒடுங்குதலாலும் இறுவழி இறுக வென்றார். இப்பாடல் முழுதுங் கிடையாமையால் மேல் ஆராய்தற்கில்லை. இதிற் கண்ட நிலையாமையைக் குறித்தற் குரிய காஞ்சியென்னுங் குறியீடு, இம் மார்க்கண்டேயனார்க்கு முந்தி இத்தமிழ் நாட்டில் வழங்கியதென்பது இச்செய்யுட் பகுதியாலறியப் படுதலாற் றமிழர் உலக நிலையாமையை எவ்வளவு காலத்துக்குமுந்தியே உணர்ந்து தெளிந்தனர் என்பது நன்கு துணியலாகும். நந்தமிழர் தலையாய ஓத்தென்று துணிந்த தற்கியைய இவர் பாடல்கள் பொருளாற் சிறத்தல் அறிஞர் அறிந்துகொள்வாராகுக.

---

# தொல்காப்பியம்

"செய்தானாற் பெயர்பெற்றன அகத்தியம் தொல்காப்பியம் என இவை" என இறையனார் களவியலுரைக் (சூ. 1. உரை) கண் வருதலால் இந்நூலாசிரியர் தொல்காப்பியனார் என்பது நன்கு தெளியப்படுவது. இவராசிரியரை "மிகத்தெளிகேள்வி அகத்தியனார்"

எனவும், இவரை,

"ஒல்காப் பெருமைத் தொல்காப்பியனார்" (மயிலைநாதர்)

எனவும் உரைகாரர் வழங்குவர். இவர் அகத்தியனார் மாணாக்கர் பன்னிருவருள் தலைமை கொண்டவர் என்பது புறப்பொருள் வெண்பாமாலைப் பாயிரத்தானும் பேராசிரியர் மரபியலுரையானும் அறியப்படுவது. "தொல்காப்பியன் எனத் தன் பெயர் தோற்றி" என்பதற்குப் "பழைய காப்பியக் குடியில் உள்ளோன் எனத் தன் பெயரை மாயாமல் நிறுத்தி" என நச்சினார்க்கினியர் பாயிரவுரைக்கண் உரைத்தார். அவர் இவ்வாசிரியரை ஜமதக்னியார் புதல்வர் என்றும் திரணதூமாக்கினி என்னும் இயற்பெயர் உடையவரென்றும் அவ்வுரைக்கட்கூறுதலால் "தொல்காப்பியன் எனத் தன் பெயர்தோற்றி" என்பதற்குத்தான் தோற்றிய குலப்பெயரே தனக்குப்பெயராக உலகத்து மாயாமல் நிறுத்தினான் என்று கருதினராவர். காப்பியக்குடி என்பது வடநூலுள் காவ்ய குலமெனப் பேர் பெறுவதாகும்.

ஒருவன் பிறந்து சிறத்தலாற் அவன் குலம் விளங்குமென்பது நல்லறிவாளர்க்கு உடன்பாடாம். இவற்றால் தொல்காப்பியன் என்பது இவர் குடிபற்றி வழங்கிய பெயரென்றும், திரணதூமாக்கினி என்பது இவர் இயற்பெயர் என்றும் நச்சினார்க்கினியர் கொண்டனர் என்று தெளியலாகும். அந்தணர் அருமறை முதலாக வடமொழியிலுள்ள தொன்னூல்கள் பலவற்றினும் "காவியகுலம்" என்பதோர் பழையகுடிப்பெயர் வழங்கப்படுகின்றமை அம்மொழிவல்லார் நன்கறிப. காவ்யர் கவியின் வழியினரென்ப; இருக்குவேதம், 151, 11 : 83, 5 : 121. 12; VI, 20, 11: கவி சுக்கிரனுக்கு ஒரு பெயர். இவர் பிருகு

மகா ருஷியின் மரபினராதலாற் பார்க்கவர் எனவும் வழங்கப் படுவர். சமதக்கினியும் அவர் புதல்வரும் பிருகுவம்சியராதலான் பார்க்கவர் என்றும், அவரே கவிவம்சியராதலாற் காவியர் என்றும் பெயர் பெறுப. வான்மீகி பகவானும் பாலகாண்டத்துப் பிருகு மகாருஷியின் பத்தினியைக் "காவியமாதா" என்று வழங்கினர். * காவியமாதா என்பது காவியர்க்குத் தாய் என்றவாறு. இதனாற் சமதக்கினி புதல்வரான திரண தூமாக்கினியின் குலம் காவிய குலமாதல் நன்குணரலாம். இது பழமைபற்றி விருத்த காவிய குலமென்று வழங்கப்படுமென்று கருதலாகும். இது தமிழிற் றொல்காப்பியக்குடி என்று வழங்கப்படும். இக் குடியிற் பிறந்து சிறந்ததனாற் குடிப்பெயரே பெயராக வழங்கப் பட்ட தென்க. பனம்பாரனர் கூறியபாயிரத்தும் "தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றி" எனக்கூறுதலாற் றன்பெயர் குலப்பெயரேயாக விளக்கஞ்செய்தான் என்பதே கருத்தாதல் காண்க. ஈண்டுக்குடி என்பது "அடுத்தூன்று நல்லாளிலாத குடி" என்புழிப் போலப் பிறந்த குலத்தை உணர்த்தி வந்தது. இனிக் காப்பியக்குடி என்பது தமிழ் நாட்டதோரூர் (சோனட் டுச் சீகாழிக்கடுத்துள்ளது) என்பாருமுண்டு. அவ்வூரும் காவ்ய குலத்தவர் அல்லது காப்பிய கோத்திரத்தவர் வதிந்த ஊராதல் பற்றி அப்பெயரெய்திற்றென்று தெளியத்தகும். காப்பியர் கோத்திரம் ஒன்று உண்டாலெனின் காப்பிய கோத்திரம் ஜமதக் கினியாருக்கு இயையாமையும் ஸ்ரீவத்ஸ கோத்திரமே அவர்க் கியைதலும் கோத்திர மரபுணர்ந்தார் வாய்க் கேட்டுத் தெளிந்து கொள்க. இதனல் ஜமதக்கினியார் புதல்வராக நச்சினர்க்கினி யர் கூறிய இத்தொல்காப்பியனர் காப்பிய கோத்திரத்தார் ஆகாமையும், (காவியகுலம்) காப்பியக் குடியினராதலுங் கண்டு கொள்க.

"காப்பியத் தொல்குடிக் கவின்பெற வளர்ந்து"

(சிலப். 30. வரந்தரு. 33)

---

विष्णुनापि पुरा राम भृगुपत्नी दृढव्रता ।
अनिन्द्रं लोकमिच्छन्ति काव्यमाता निषूदिता ॥

(வான்மீகி. பால. 25. ஸ்லோ. 20)

என்புழியும் இக்குலத்து வளர்தலேயே குறித்தமைதென்பது பொருந்தும். காப்பியக் குடியென்றது காப்பியத் தொல்குடியென்றதே அஃது ஊரன்மையும், பழையதோர் குலமாதலுங் காட்டுமென்க. ஈண்டுத் தொல்குடி யென்பது தொல் குலத்துக் காவதன்றித் தொல்லூருக்கு ஆகாமை நோக்கிக் கொள்க. நச்சினார்க்கினியர் இவரை ஜமதக்கினி குலத்தவர் என்று மட்டுங் கருதாது அவர் மகனார் எனவும் உரைத்து, இவர்க்கும் இவர் ஆசிரியர் அகத்தியனார்க்கும் பகைமையுண்டாயதெனச் சில வரலாறு கூறுகின்றனர். அதனுண்மை எம்மனோரறிதற்கு மேற்கோளொன்று மிப்போதில்லாமையால், இவர்பெயர்பற்றிய வரை ஜமதக்கினி குலமாகிய காவிய குலத்தவர் என்பதல்லது வேறு துணிவதற்கில்லை. ஒரு குலத்தின் வழிவந்த பின்னவரை அக்குலத்து மிகவும் முற்பட்டுச் சிறந்த தலைவற்கு மகவாக வுரைத்தல் நூல்வழக்கேயாம். அதுபற்றி ஜமதக்கினியர் மகனார் இவரென்று வழக்குண்டாயிற்றென்பதல்லது ஜமதக்கினியார் காலத்தவராக இவரைக் கூறுதற்கண் உண்டாமிடர்ப்பாடுகள் பலவாமென்க. *

நச்சினார்க்கினியர் ஜமதக்கினியார் மகனார் இவரெனக் கொள்வதுடன், இவர் நூல்செய்த காலத்தை ஆதியூழியின் அந்தத்தே நிறுவலுஞ் செய்தனர். அவர் பாயிரவுரைக்கண், "அகத்தியர் சமதக்கினியாருழைச் சென்று அவர்மகனார் திரணதூமாக்கினியாரை வாங்கிக்கொண்டு...பெயர்ந்து" எனவும் கற்பியற் "பொய்யும் வழுவும்" (4) என்ற சூத்திரவுரைக்கண் இவ்வாசிரியர் "ஆதியூழியின் அந்தத்தே இந்நூல் செய்தலின்" எனவுங் கூறுதலான் அவர் துணிபு தெரியலாம். சிலப்பதிகார உரைப்பாயிரத்தில் அடியார்க்கு நல்லார் "இரண்டாம் ஊழியதாகிய கபாடபுரத்தின் இடைச்சங்கத்துத் தொல்காப்பியம் புலப்படுத்திய மாகீர்த்தியாகிய நிலந்தருதிருவிற் பாண்டியன்" எனக்கூறினார். இனி இவரே வேனிற்காதை உரைக்கண் முதலூழி யிறுதிக்கண் தென்மதுரை யகத்துத் தலைச்சங்கத்து

---

* ஜமதக்னியார் பெயர் இருக்குவேதத்தும், இராமாயணத்தும், பாரதத்தும் கேட்கப்படுவதாகும். இந்நூல்கள் ஒரு காலத்தனவாகா. இப்பெயருடையார் ஒருவரல்லர் என்றற்கு இந்நூல்களே சான்றாதல் காண்க,

அகத்தியனார் முதலியோர் இருந்தனர் என்று கூறி, இடைச் சங்கவரலாறு கூறுமடற் குமரியாறு கடல் கொள்ளப்பட்டதற்கு முன்னே நிலந்தரு திருவிற் பாண்டியன் தொல்காப்பியம் புலப் படுத்தி இரீஇயினான் என்பது மட்டிற்றெளியும் வண்ணங்கூறி னார். பேராசிரியரும்,

"வினையினீங்கி" (மரபியல். 94)

என்னுஞ் சூத்திரவுரையின் கண்,

"இவற்றுளெல்லாம் அகத்தியமே முற்காலத்து முதனூ லென்பதும், தொல்காப்பியம் அதன் வழிநூல் என்பதுடம், அது தாஅம் பனம் பாரனார் "வடவேங்கடந் தென்குமரி (தொல். பாயிரம்) எனக் குமரியாற்றினை எல்லையாகக் கூறிப் பாயிரஞ் செய்தமையிற் சகரர் வேள்விக் குதிரை நாடித் தொட்ட கட லகத்துப்பட்டுக் குமரியாறும் பனிநாட்டோடு கெடுவதற்கு முன்னைய தென்பதாஉம்"

எனக் கூறினார்.

களவியலுரைகாரர் "இடைச்சங்கமிருந்தார் அகத்தியனா ரும் தொல்காப்பியனாரும்" எனவுரைத்து "அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்தென்ப. அக்காலத்துப்போலும் பாண்டியன் நாட்டைக் கடல் கொண்டது"

என விளக்கினர். இவ்வுரையாளர் பலருள் நச்சினார்க்கினியர் நீங்கலாக மற்றைய மூவருங் குமரியாறு கடல் கொண்டதற்கு முன்னரே தொல்காப்பியம் அரங்கேறிற்றென்று உடன்படுதல் மேற்குறித்த வரலாற்றாற் காணலாம். பாண்டி நாட்டைக் கடல் கொண்ட காலம் கி. மு. 145 என்பது இலங்கைப் பௌத்த சரித் திரங்களைக்கொண்டு ஆராய்ந்து ஒருவாறு முன்னரே துணியப் பட்டது. இதனால், தொல்காப்பியர் கி. மு. 145-க்குச் சிறிது முற்பட்டவரே யாவரென்பது தெளியலாம்.

இனித் தொல்காப்பியனார்,

"பனையின் முன்னர் அட்டுவரு காலை
நிலையின் றாகு மையென் னுயிரே
யாகாரம் வருத லாவயி னான (உயிர்மயங். 82)

"கொடிமுன் வரினே யையவ ணிற்பக்
கடிநிலை யின்றே வல்லெழுத்து மிகுதி"

(உயிர் மயங். 83)

என வருஞ் சூத்திரங்களாற் பனையென்னுஞ் சொல் முன்னர்க் கொடியென்னுஞ் சொல்வரின், ஐகார மாண்டுக் கெடாது வல்லெழுத்து மிக்கு முடிதல் கூறினார். இது பனைக்கொடியென வருதற்குப் புணர்ச்சி யிலக்கணம் கூறியதென்பது தெள்ளிது. பனைக்கொடி என்பது பனையையுடைய கொடி எனவும், பனையாலாகிய கொடி எனவும் பொருள் கொள்ள நிற்கும், பனைக்கொடியை வடநூலார் தாலகேது வென வழங்குவர். இவ்வாறு பனையைத் தங்கொடியின்கண் உடையார் பலதேவரும் விடுமரும் ஆவரென மகா பாரதத்தால் அறியலாம். இவ்விருவருள் பனைக்கொடியோன் என்ற வழக்குப் பலராமனாகிய நம்பி மூத்த பிரான் கண்ணே மிகுதியாகத் தமிழில் வழங்கல் சங்க நூல் வல்லாரறிவர்.

"அடல்வெந் நாஞ்சிற் பனைக்கொடி யோனும்"

(புறம். 56)

எனப் புறத்திலும்,

"பொலம்பனைக் கொடியோற்கு" (பரி. 2)

எனப் பரிபாடலிலும் வருதல் காணலாம். இதனாற் பனைக்கொடியென்னுஞ் சொற்றொடர் வழக்கு இத்தமிழ் நாட்டில் மிகுதியாகப் பரந்ததன் பின்னேதான் அத்தொடர்க்குப் புணர்ச்சிவிதி கூறினரென்று எளிதிற் கொள்ளத்தகும். பனைக்கொடி என்ற வழக்குப் பாரத காலத்ததாயின் அதற்கு இலக்கணம் விதித்த தொல்காப்பியனார் நச்சினார்க்கினியர் முதலியோர் கூறியபடி ஆதியூழியின் அந்தத்திலோ, இரண்டாம் ஊழியின் தொடக்கத்திலோ இருந்தவர் ஆகார் என்பது எளிதில் உய்த்துணரலாகும். பாரதகாலம் வடநூலார் கருத்துப்படிக் கலியுகத்துக்குச் சிறிது முற்பட்ட மூன்று மூழியின் இறுதியாகும். இதனாற் பனைக்கொடி வழங்கிய காலம் ஆதியூழியின் அந்தமேனும் இரண்டாமூழியின் தொடக்கமேனும் ஆகாமை நன்குணர்ந்து கொள்க. வால்மீக ராமாயண கிஷ்கிந்தா காண்டத்துத் "தாலத்துவசம் பனைக்கொடி ஆதிசேடனால் கிழக்குத் திசையில் நாட்டப்பட்டுள்ளது" (சர்க்கம் 40, 53) என்று கேட்கப்படுவது: பலராமன்

ஆதிசேடன் அவதாரம் என்று கொள்ளுதலான் அவனுக்கு அக் கொடியுண்டாயதெனத் துணியலாம்; இவ்விராமாயணம் பற்றிப் பனைக்கொடியைக் கொள்ளினும் அவ்விருகாலமும் ஆகாமை நோக்குக. இராசபுதனம் உதயபுரி ஸம்ஸ்தானத்திலுள்ள 'நந்தாஸா' என்னுமிடத்திற் கிடைத்த சாசனப் பகுதியிற் கிருதவத்ஸரம் குறிக்கப்படுவதென்றும், அப்பெயர் வழக்குண்டாயது அசோகனுக்குப்பின் அந்தணனு யுலகாண்ட புஷ்யமித்ரனுக்குப் பல்வகையாலும் பொருந்துவதால், அவன் பௌத்தர் முதலியோரை ஒட்டி அசுவமேதஞ் செய்த காலந் தொட்டாகும் என்றும் டாக்டர் பந்தர்க்கர் கூறுவர். (Vide Indian Antiquary, June 1932) இதனுல் கிருதயுகத்தைப் பற்றி ஒரு தலையாகத் துணிதல் அரிதாதல் காண்க.

இனித் தொல்காப்பியனுர்,

"நகையே யழுகை யிளிவரன் மருட்கை
யச்சம் பெருமிதம் வெகுளி யுவகையென்
றப்பா லெட்டே மெய்ப்பா டென்ப"

(தொல். மெய்ப்பாட். 3)

என்னுஞ் சூத்திரத்தால் எண்வகைச் சுவையுடன்பட்டுச் 'சாந்தம்' என்னுஞ் சுவையை இச்சுவைகளோடு சேர்க்காது,

"அப்பா லெட்டே மெய்ப்பா டென்ப"

என வடமொழியாளர் மொழிந்தபடி எடுத்துக் கூறுதல் காணலாம். இவ்வாறு சாந்தம் என்னுஞ் சுவையை உடன்படாது, இவ்வெட்டினையும் சுவையென்று தொகையிட்டு, விரித்து விளக்கியவர் வடமொழியில் நாட்டியநூல் செய்த பரதமுனிவராவர். நகை ஹாஸ்யமெனவும், அழுகை சோகமெனவும், இளிவரல் ஜுகுப்ஸை எனவும், மருட்கை விஸ்மயம் எனவும் அச்சம் பயமெனவும், பெருமிதம் வீரமெனவும், வெகுளி ரௌத்ரமெனவும், உவகை சிருங்காரமெனவும் வடநூலார் கூறுவர். தொல்காப்பியனுர்,

"ஆங்கவை யொருபா லாக வொருபால்
உடைமை யின்புற னடுவுநிலை யருள
றண்மை யடக்கம் வரைத லன்பெனுஅக்
கைம்மிக னலிதல் சூழ்ச்சி வாழ்த்த'

ஞுறுத றுஞ்ச லரற்றுக் கனவெனுஅ
முனித னினைதல் வெரூஉதன் மடிமை
கருத லாராய்ச்சி விரைவுயிர்ப் பெனுஅக்
கையா றிடுக்கண் பொச்சாப்புப் பொருமை
வியர்த்த லைய மிகைநடுக் கெனுஅ
இவையு முளவே யவையலங் கடையே"

(மெய்ப்பாட். 12)

என்னுஞ் சூத்திரத்தாற் பரதமுனிவர் தம் நாட்டிய நூலிற் குறித்த வியபிசாரி பாவமெனப்படும் நிலையில்லாத மெய்ப்பாடு களையே இவர் பெரும்பாலும் மொழிபெயர்த் துணர்த்தினரென் பது இவ்விருநூலிலும் பயிற்சியுடையார் துணியக் கிடப்பது. பரதமுனிவர் நாட்டிய நூலிற் கண்ட பாவங்கள் அந்நூல் ஏழாம் அத்தியாயத்திற் காணலாம். அந்நூலிற் கண்ட மெய்ப்பாடுகள் முப்பத்து மூன்றேன்பது பரத முனிவரே தொகையிட்டுக் கூறிய தாகும். ஈண்டுத் தொல்காப்பியனார் கொண்ட மெய்ப்பாடுகள் இத்துணையென அவரே தொகையிட்டுக் கூறுதொழியினும் மேற் கூறிய எண்வகைச் சுவையையும் நான்கு நான்காகப் பகுத்தோதி யிச் சூத்திர முகத்து,

"ஆங்கவை யொருபாலாக"

என்று எடுத்துரைத்து ஒரு கூறாக இவையுமுளவென்று உடைமை முதல் நடுக்கிறுதியாகப் பலவகை மெய்ப்பாடுகளையும் தொகுத்துக் கூறுதல் காணலாம். பேராசிரியர்,

"ஆங்கவை ஒருபாலாக ஒருபால் இவையுமுளவே"

என்புழி, மேற்கூறிய முப்பத்திரண்டும் ஒரு கூறாகவும் இவை முப்பத்திரண்டும் ஒரு கூறாகவும் உளவென்று உரை கூறிப் போந்தார். பரதமுனிவர் கூறிய ஸ்மிருதியும் விபோதமும் ஒன்றுமெனக் கருதி நினைதலென்பதன் கண்ணடக்கி வடநூல்

* இவ்வாறே காவியப் பிரகாச நூலுடையரும் இம்மெய்ப் பாடுகளையே 4 வது உல்லாஸத்தில் நான்கு சுலோகங்களாற் கூறி முப்பத்து மூன்றெனவே தொகையிடுதல் காண்க. இவற் ருல் இம்மெய்ப்பாடு 32 என்பது வடநூலார்க்கு உடன்பாடன் றென்பது நன்குதெரியலாம்.

கூறிய முப்பத்துமூன்றையே தொல்காப்பியனார் முப்பத்திரண்டெனக்கொண்டாரெனத் துணிதற்கு இடந்தருகின்றது. பேராசிரியர் வடநூலிற் கூறியனவற்றையே இச்சூத்திரத்திற் கண்டவற்றிற்குப் பொருளாகக் கொண்டார் எனக் கூறுதற்கில்லை. தொல்காப்பியனார் தாமே இவற்றைப் படைத்துக் கொண்டு கூறினாரென்றலும் பொருந்தாதாம். தொல்காப்பியனார் நாட்டியநூல் முறைமையினையே இங்கே தமக்கு ஆதாரமாகக்கொண்டு செல்லுதல் பொருளியலுள் "எல்லாம் நாட்டிய மரபின் நெஞ்சு கொளினல்லது, காட்டலாகாப் பொருள வென்ப." (தொல். பொருள். 53)

என நாட்டிய சாஸ்திர மரபினை எடுத்துக் காட்டுதலானும் அதற்கு நச்சினார்க்கினியர் "ஏனையவும் நாடகவழக்கத்தாற் புலனெறி வழக்கஞ்செய்த முறைமையானே நெஞ்சுணர்ந்து கொள்ளினன்றி உலகியல் வழக்கான் ஒருவருக்கொருவர் கட்புலனாகக்காட்டப்படாத பொருளைப் பொருளாகவுடையவென்று கூறுவர் புலவர் எ-று" என விளக்கி யுரைகூறியதனானும் நன்குணர்க. நாட்டிய மரபு என்ற தொடரே இக்கருத்தினை விளக்கி நிற்றல் எளிதிலுணரலாம். உரையாசிரியர் "நாட்டியன் மரபி னுணரி னல்லது" என்று பாடங்கொண்டு "நாட்டின் வழங்குகின்றமரபினானே பொருளை மனத்தினான் உணரினல்லது என்று பொருள் கூறினார். இவர் கூறிய நாட்டின்கண் இயலும் மரபு கண்கூடாகத் தெரிவனவே யாதலின் அவை காட்டலாகாப்பொருளவாதல் இல்லையென்பது கண்டுகொள்க. தொல்காப்பியனார் "நாடக வழக்கினு முலகியல் வழக்கினும் பாடல் சான்றபுலனெறி வழக்கினும் (அகத். 56) என்பதனால் உலகியல் வழக்கினும் வேறாய் நாடகவழக்கினை எடுத்தாளுதலானித னுண்மை யுணரலாம்.

தமிழ் நாட்டிற் பரத நூற்பயிற்சி பண்டைக்காலத்துமிகுதியாக உண்டென்பது, "பாடல்சால் சிறப்பிற் பரதத்தோங்கிய நாடகம்" (மணி 18. உதப 57) எனக் கூலவாணிகள் சாத்தனார் கூறுதலான் அறியலாம். இது பரதநாட்டிய நூலையே குறிப்பதென்பது நன்குணரத் தகும். அடியார்க்கு நல்லார் "நாடகத்தமிழ் நூலாகியபரதம்" எனச்சிலப்பதிகார உரைப் பாயிரத்துக் கூறுதலாற் பரத நூற்கருத்துத் தமிழில் வழங்கப்

பட்டுள்ளமை அறியலாம். இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் அரங்கேற்றுக் காதைக்கண் "நாட்டிய நன்னூல் நன்கு கடைப் பிடித்து" என்று ஈரிடத்துக் கூறியவாற்றானும், அவற்றிற்கு அடியார்க்கு நல்லார் உரைத்தவாற்றானு மிதனுண்மை நன்கு வலியுறுதல் காண்க. தொல்காப்பியனார் "நாட்டிய மரபு" என்றதும் அடிகள் "நாட்டிய நன்னூல்" என்றதும் கருத் தொத்தல் காண்க. இச்சூத்திரத்துள்,

(1) உடைமை என்பது செல்வமென்று கொண்டு அச் செல்வந் தன்னை நினைந்து இன்புறுதற்கேதுவாகிய பற்றுள்ள மென்றார் பேராசிரியர்; இதனை ஔத்சுக்கியம் என்ப. இதனை உடைமைபற்றிய வேட்கை என்பர் வடநூலார். இவ்வேட்கை அதனைப் பாதுகாத்தற் கண்ணு நிகழும்.

(2) இன்புறல் என்பதன்கண் இன்பு வடமொழியில் ஹர்ஷ மெனப்படும்.

(3) நடுநிலை—த்ருதி (Equanimity) என்ப.

(4) அருளல்—அருளால் விளையுந் துக்கமென்பர். இதனை விஷாதமென்ப. பிறர்படர் கண்டுழி இரங்குதலாகும். ஸ்ரீகீதை யில் அருச்சுனன் விஷாதத்தால் அறிக. அவன் அருணிறைந்து வருந்தினன் எனக் கூறுதலான் அறியலாம். (கீதை. 2, 1) மற்றுப் பரதர் கூறிய,

(5) தைன்யம் என்பது தண்மை என்னும் பொருளதாதல் வல்லார் அறிவர். தண்மை என்பதும் தைன்யமென்பதும் எளிமை என்னும் பொருளை உணர்த்தல் காண்க. "தண்பதத் தாற்றானே கெடும்" (குறள். 548) என்பர். பாடமெழுதினர் பிழைப்பாற்றண்மை தன்மையென மாறிற்றென்று நினைத்தல் பொருந்தும். ஈண்டுப் பேராசிரியர் தன்மையெனக்கொண்டு சாதித்தன்மை யென்று பொருள்கூறி, "அவை யாவன பார்ப் பாராயிற் குந்தி மிதித்துக் குறுநடைகொண்டு வந்து தோன்ற லும், அரசராயின் எடுத்த கழுத்தொடும் அடுத்த மார்பொடும் நடந்து சேறலும், இடையராயிற் கோற்கையுங் கொடிமடியுடை யும் விளித்த விளையும் வெண்பல்லுமாகித் தோன்றலுமென்று இன்னோரன்ன வழக்கு நோக்கிக்கொள்க" என்பர். ஈண்டு இவர் எடுத்துக் காட்டியன ஆசாரமல்லது மெய்ப்பாடாகாமை நன்கு நோக்கிக்கொள்க.

(6) அடக்கமென்பது தன்னறிவு அடங்கி யொடுங்குநிலை இதனை நிர்வேதமென்ப. சாந்தத்திற்கேதுவாதலின் வடநூலார் இதனை இங்கிலேயில் சுவைகளில் முன்வைத்தனரென்று கூறுவர். பேராசிரியர் " அடக்கமென்பது, உயர்ந்தோர் முன் அடங்கியொழுகும் ஒழுக்கம், அவை பணிந்த மொழியும் தணிந்த நடையும் தானை மடக்கலும் வாய்ப்புதைத்தலும் முதலாயின ;" எனக் கூறினார். இவை தேசாசாரமல்லது மெய்ப்பாடாகாமை அறிக.

(7) வரைதல் என்பது அவஹித்த மெனப்படும். வெளிப்படுவது புலப்படாது. நீக்கி ஒளித்தல் என்பது

(8) அன்பென்பது சபலதை

(9) கைம்மிகல் என்பது செய்வது நெறியுமுறையுங் கடந்து மிகுதல். இது வெறிகொண்டார் செயலாதலின் உன்மாதத்திற்காயிற்று.

(10) நலிதல், நோயால் வருந்துதலாதலின் வியாதிக்காயிற்று.

(11) சூழ்ச்சி, சுழலுந் தன்மை. சுழற்சி என்றே பொருள் கூறினார் பேராசிரியர். இது, கள் முதலியன உண்டார் செயலாதலின் மதமாயிற்று.

(12) வாழ்த்தல் என்பது பிறரால் வாழ்த்தப்படுதற்குரிய தன்மை. இது மிக் கூற்றமென்பது. இது பெருவலியுள்ள விடத்து நிகழ்வதாதலின் இதனை உக்கிரதை என்பர் வடநூலார்.

(13) நாணுதலென்பது வ்ரீடை எனப்படும்.

(14) துஞ்சல் என்பது நித்திரை.

(15) அரற்றென்பது ஒய்ந்தரற்றுதல் இதனைக் கிலானியென்பர்.

(16) கனவென்பது ஸுப்தமாகும்.

(17) முனிதல் என்பது அமர்ஷமாகும்.

(18) நினைதல் என்பது ஸ்மருதி.

(19) வெரூஉதல் என்பது சங்கையெனப்படும். அச்சத்தால் வந்த வேறுபாட்டைச் சங்காதோஷ மென்பதாலறிக.

(20) மடிமை என்பது ஆலஸ்யம்.

(21) கருதல் சிந்தித்தலாதலின் சிந்தை எனப்படும்.

(22) ஆராய்ச்சி என்பது நன்றுந்தீதும் ஆராய்தலாதலின் மதி என்ப.

(23) விரைவு என்பது ஆவேகமெனப்படும்.

(24) உயிர்ப்பென்பது உயிர்ப்புமட்டிலுள்ள தாய நிலை இதனை ஜடதை என்பர்.

(25) கையாறு என்பது அவ்வுயிர்ப்புமின்றி வினையொழிந்து இறந்த நிலை. இதனை மரணமென்ப. "கையறவுரைத்துக் கைசோர்ந்தன்று" (பு. வெ. 10. சிறப்பிற். 14. கொளு.) என்னும் வெண்பாமாலையால் இதனை அறியலாம். பாட்டியலுட்கையறுநிலை கூறுதலானும் இஃதறியப்படும்.

(26) இடுக்கண் என்பது சிரமமெனப்படும்.

(27) பொச்சாப்பென்பது அபஸ்மாரமெனப்படும். மறதி என்பது பொருள்.

(28) பொருமை என்பது அசூயை எனப்படும்.

(30) ஐயம் என்பது விதர்க்கமெனப்படும். ஒரு பொருண் மேலுண்டாகும் இருவித வுணர்ச்சியால் உண்டாதலின் விதர்க்கமெனப்பட்டது.

(31) மிகை என்பது தன்னை மிக்கு நினைந்திருப்பது. இது கருவமெனப்படும். இது கல்லாமையுஞ் செல்வமுமிளமையுமுதலாக வரும் உள்ள மிகுதியென்பர் பேராசிரியர்.

(32) நடுக்கம் உள்ள நடுக்கமென்பர். இதனைத் திராஸமென்ப. இனித் தொல்காப்பியனார் இச்சூத்திரத்திற் கூறிய இன்புறலென்பதனை இன்பும் உறலுமாகப்பிரித்துக்கொள்ளின்,

(33) உறல் என்பது ஊற்றுணர்ச்சிக்காதலின் அதனையே தொட்டாலுணர்தலாகிய விபோதமெனக் கருதினாரென்று துணியலாம். உறல்-ஊற்றுணர்ச்சி, இன்னுறல் (கலித். 100 குறுந். 314)

"நாற்றத் தோற்றச் சுவையொலி

யுறலாகி நின்ற எம்பான்" (திருவாய்மொழி. 3, 6, 6) என்னுஞ்சடகோபர் திருவாக்கானும் உணரலாம். இப்பரதநூல் உரைசெய்த அபிநவகுப்தாசிரியரும் தொட்டால் உணரும் உணர்ச்சியே உத்போதத்திற்குக் கூறுதல் கண்டுகொள்க.

இனிப் பரதநாட்டிய நூல் கூறிய பத்துவித அவத்தைகளுள் சக்ஷுப்ரீதி என்னுங் காண்டல் வேட்கையை இருவருடைய,

"நாட்ட மிரண்டு மறிவுடம் படுத்தற்குக்
கூட்டி யுரைக்குங் குறிப்புரையாகும்" (களவி. 5)

என்னுஞ்சூத்திரத்தால் எடுத்தோதி, அதன்மேல் நிகழும் அவத்தைகள் ஒன்பதனையும்,

"வேட்கை யொருதலை யுள்ளுதன் மெலிந்
லாக்கஞ் செப்ப னாணுவரை யிறத்த
னோக்குவ வெல்லா மவையே போறன்
மறத்தன் மயக்கஞ் சாக்கா டென்றச்
சிறப்புடை மரபினவை களவென மொழிப" (களவி. 9)

எனத் தொல்காப்பியனார் கூறுதல் காணலாம். இவற்றை மரபு என்றலால் இவை இவர்க்குமுன் நூலோர் வழங்கினவாதல் தெளியலாம். பரதமுனிவர் தசாவத்தைகளை (1) சக்ஷுப்ரீதி (2) அபிலாஷை (3) சிந்தனை (4) உத்வேகம் (5) குணகதா (6) ப்ரலாபம் (7) ஜடதை (8) உன்மாதம் (9) ஜாக்ரதை (10) மரணம் என்பர். இவற்றுள் (1) சக்ஷுப்ரீதி "நாட்ட மிரண்டு" என்னுஞ் சூத்திரத்தாற் கூறினார் (2) அபிலாஷை-ஒருதலை வேட்கை என்பதாம் (3) சிந்தனை-உள்ளுதல் (4) உத்வேகம்-மெலிதல் (5) குணகதா-ஆக்கஞ் செப்பல் (6) ப்ரலாபம்-நாணுவரை யிறத்தல் நாணற்றுப் புலம்பலாயிற்று (7) ஜடதை-மறத்தல் (8) உன்மாதம்-மயக்கம் (9) ஜாக்ரதை-நோக்குவவெல்லாம் அவையே போறல். இதற்கு நச்சினார்க்கினியர், "பிறர் தம்மை நோக்கிய நோக்கெல்லாந் தம்மனத்துக் கரந்து ஒழுகுகின்றவற்றை அறிந்து நோக்குகின்றாரெனத் திரியக்கோடல்" எனக் கூறுதல் காண்க. இஃது அதே நினைவாதலால் நிகழ்வது. (10) மரணம் சாக்காடு. *

இங்ஙனங் கொள்ளுமாற்றான் தொல்காப்பியனார் கூறியனவும் பரத முனிவர் கூறியனவும் முழுதுங் கருத்தொற்றுமைய

* இனி இவற்றையே சக்ஷுப்ரீதி, மனஸ்ஸங்கம், ஸங்கல்ப்பம், ஜாகரம், க்ருசதை, அரதி, ஹ்ரீத்யாகம், உந்மாதம், மூர்ச்சை, மரணம் என்று கூறினாரும் உண்டு.

வாதல் நன்குணரலாகும். பரதமுனிவர் தந்நூற் கருத்து உலகு படைத்த பிரமன் முதலாக வருவதாக நான்முகத்துக் கூறுத லான் அவரும் காந்தருவ வேதத்தை நோக்கி நூல் செய்தன ரென்றே துணியத்தகும். இம் மெய்ப்பாடுகள் பரதமுனிவரால் படைக்கப்பட்டனவென்று கொள்ளுதலும் பொருந்தாதாம். இத னாற் பரதமுனிவர்க்குந் தொல்காப்பியனார்க்கும் பொதுவாக ஓர் முதனூலிருந்து அதன் கருத்துக்களையே இருவருங் கொண்டா ரென்று துணிவதே பொருந்திற்றாகும். தொல்காப்பியனார்க்கு முன்னமே நாடக வழக்குத் தமிழ் நூலில் மலிந்ததென்பது சிகண்டியார் இசைநுணுக்க முதலிய நூல்களானும், அகத்தியர் முத்தமிழ் இலக்கணம் செய்தாரென்றலானும் உய்த்துணரலாம். தொல்காப்பியனார் காந்தருவ வேதமே தமக்கு முந்து நூலாக இம்மெய்ப்பாட்டிற்குக் கொள்கின்றார் என்பது,

" இசையொடு சிவணிய நரம்பின்மறை " (நூன் மரபு.33)

(ஏழிசையொடு பொருந்திய யாழ் நூல் என்பது இதன் பொருள்)

என்பதனானறியலாம். இதன்கண் யாழ்நூலை மறை என்றலால் இவர் காந்தருவ வேதம் உடன்படுதல் காணலாம். அக் காந்தருவ வேதமே பரதமுனிவர்க்குங்கருத்தென்று துணியப்படும். இதனா னும் இத் தொல்காப்பியர் காலம் பிற்பட்டதாகாது பெரிதுமுற் பட்டதாதற்கே இடந்தருவது காணலாம். * இதற்கேற்பவே பரதமுனிவர் தம்நாட்டிய நூலில் (17-48) நாவலந்தீவிற்சிறந்து புகழ்பெற்ற தங் காலத்து மொழிகளைக் கூறியவிடத்துத் தென் மொழியை ஒன்றாக எண்ணுதலால் அவர்க்கு முன்னே தமிழ் வளர்ச்சிபெற்றுவிளங்குதல் அவர்க்குடன்பாடாதல் காணலாம். இங்ஙனங்கொள்ளுதலன்றி இக்காலத்துச்சிலர் துணிகின்றபடித் தொல்காப்பியனார் கிறீஸ்து பிறந்ததன் பின்னுள்ள காலத்தவர்

---

* मागध्यवन्तिजा प्राच्या शूरसेन्यर्धमागधी बाह्लीका दाक्षिणात्याच सप्तभाषाः प्रकीर्तिताः

(நாட்டிய சாஸ்திரம் XVII)

மாகதி, அவந்திஜா, ப்ராச்யை, சூரஸேனி, அர்த்தமாகதி, பாஹ்லீகை, தென்மொழி ஆகிய இவை ஏழு பாஷைகள் எனச் சிறப்புற்றனவாம்.

ஆகாரென்பது, கடல்கோளைப்பற்றிக் கூறியவிடத்துத் தொல்காப்பியனாரைக்குறித்து வரும் பகுதிகளால் நன்கறிந்ததாகும். பழைய உரைகாரராற்றலேயோத்தென்று துணியப்பட்டசிலபல செய்யுள்கட்கும், பாரத காலத்தனவென்றும் கடல்கோளுக்கு முந்தியனவென்றும் தெளியப்படும் சிற்சில செய்யுள்கட்கும், அகத்தியசூத்திரமென முன்னோரெடுத்தாண்ட ஒருசிலசூத்திரங்கட்கும் இவர் செய்த தொல்காப்பியம் பிற்பட்டதென்று கூறலாமல்லது, மற்றுத் தமிழில் இப்போது வழங்குகின்ற பல நூல்கட்கும் முற்பட்டதென்று துணிதற்குச்சான்றுகள் பலவுள்ளன. இவர் செய்யுள் பற்றியும் வழக்குப் பற்றியும் கூறியுள்ள இலக்கணங்களிற் பலவற்றிற்கு இலக்கியங்காட்டுதல் இப்போதுவழங்கும் நூல்களைக்கொண்டு இயலாமையானும், இவர் கூறிய இலக்கணங்களின் வேறாய்ச் சிலசொற்களுங் கொள்கைகளும் இந்நூல்களிற்காணடலானும், இவர் இந்நூற்கெல்லாம்முந்தியவரென்று துணிதல் ஒருதலையாவது. இவர்,

> "அவற்றுள்,
> லளஃகான் முன்னர் யவ்வுந் தோன்றும்"
>
> (எழுத்ததி. நூன்மரபு. 26)

எனக்கூறுதலான் ஒருமொழிக்கண் லகாரப் புள்ளியின்முன்னர் யகரம் வந்து மயங்கிய ஒருமொழி வழக்கு இவர்காலத்து உண்டென்று நன்கு தெளியலாம்; அவை வல்யம், அல்யம் என்றன போன்ற சில சொற்களாகும். இப்போதுள்ள எந்நூற் செய்யுளினும் இவ்வித வழக்குக் காணப்படாமை நோக்கிக்கொள்க. இம்மயக்க விதி ஒருமொழிக் கல்லது புணர்மொழிக்கு ஆகாதென்பது நச்சினார்க்கினியருரை நோக்கித் தெளிக. அவர் இச்சூத்திரவுரைக்கண்,

"இவ்வாசிரியர் நூல் செய்கின்ற காலத்து வினைத்தொகைக் கண்ணும் பண்புத் தொகைக் கண்ணுமின்றி ஒருமொழிக்கண்ணே மயங்குவனவும் உளவாதலின் அவற்றைக்கண்டு இலக்கணங் கூறினார். அவை பின்னர் இறந்தனவென்றுஒழித்து உதாரணமில்லனவற்றிற்கு உதாரணங் காட்டாமற் போதலே நன்றென்று கூறலுமொன்று" என்றுரைத்தவாற்றான் இதனுண்மை உணர்க.

" ஞநமவ வென்னும் புள்ளி முன்னர்
யஃகா னிற்றன் மெய் பெற்றன்றே "

(எழுத்து. நான்மரபு. 27)

என்னும் சூத்திர வுரைக்கண் நச்சிஞர்க்கினியர்,

" இங்ஙனம் ஆசிரியர் சூத்திரஞ் செய்தலின் அக்காலத்து ஒரு மொழியாக வழங்கிய சொற்கள் உளவென்பது பெற்ரும். அவை இக்காலத்து இறந்தன.

இனி, உரையாசிரியர் உரிஞ்யாது, பொருந்யாது, திரும் யாது, தெவ்யாது என இருமொழிக்கண் வருவன உதாரணமாகக் காட்டிஞராலெனின், ஆசிரியர் ஒரு மொழியாமாறு ஈண்டுக்கூறி இருமொழி புணர்தற்குப் புணரியல் என்று வேரோர் இயலுங் கூறி, அதன் கண் மெய்யிறு சொன்முன் மெய்வரு வழியும் (எழுத். 107) " என்று கூறிஞர். கூறிய வழிப்பின்னும்,

" உகரமொடு புணரும் புள்ளியிறுதி "

(எழுத். 163)

என்றும்பிருண்டும் ஈறுகடோறும் எடுத்தோதிப்புணர்ப்பர். ஆதலின் ஈண்டு இருமொழிப் புணர்ச்சி காட்டிற் கூறியது கூறல் என்னுங் குற்றமாம். அதஞல் அவை காட்டுதல் பொருந்தாமை உணர்க " என்று கூறிஞர். இதஞல் தொல்காப்பியஞர் காலத்து வடமொழியில் அஞ்யம், ஸாம்யம், திவ்யம் என்ருற் போன்ற சில மொழிகள் தமிழிலு மிருந்தன வென்றும் பிற் காலத்து அவை இறந்தன வென்றும் கொள்ளத்தகும்.

இவ்வாறே,

" மஃகான் புள்ளிமுன் வவ்வுந்தோன்றும் "

(ஷை. 28)

என்பதஞல் வடமொழியில் ஸம்வாதம் என்ருற்போன்ற சொல் லுந் தமிழில் முற்காலத்து உண்டென்று துணியலாம். இதுவும் இறந்தது. இனி வேய்ஙனம் (மூங்கிலுள்ள இடம்) என்றது போன்ற சில சொல் வழக்குகள் அக்காலத்து உண்டென்பது,

" யரழ வென்னும் புள்ளிமுன்னர்
முதலா கெழுத்து ஙகரமொடு தோன்றும் "

(ஷை. 29)

என்னுஞ் சூத்திரத்தாற் றெரியவருவது. இவ்வித வழக்குகளும் இறந்தன. தொல்காப்பியனார் காலத்து நாய் என்றெழுதுவதை நாஇ எனவும் நம்மவர் எழுதினர் என்பது,

" இகர யகரம் இறுதி விரவும் "

(மொழிமரபு. 58)

என்பதனால் அறியக் கிடப்பது, இதுவும் இறந்தது.

" ஓகார விறுதிக் கொன்னே சாரியை " (உருபி. 180)

என்பதனாற் கோ என்பது கோஒன் என ஒன்சாரியை கொடுத்து எழுதுவது பண்டை வழக்கென்று தெரிவது. இதை அளபெடையுஞ் சாரியையுமாகக் கொள்வது இக்கால வழக்கு.

" பலவற்றிறுதி நீடு மொழியுளவே "

(எழுத். 213)

எனபதனாற் பலாஅஞ், சிலாஅ மென்று பலவுங் கூறுமிடத்து முற்காலத்து வழங்கினர் என்று தெரிவது. இவ்வாறு வருவதற்கு ஒருவர் கூறிய " பலா அஞ்சிலாஅ மென்மனார் புலவர்" என்னுஞ் சூத்திரத்தையே நச்சினார்க்கினியரும்உரையாசிரியரும் உதாரணமாக எடுத்துக் காட்டினர். இதனால் இவ்வழக்கு பண்டைக்காலத்ததென்று தெளியலாம்,

" குறியதன் முன்னரு மோரெழுத்து மொழிக்கும்
அறியத் தோன்று மகரக்கிளவி "

(உயிர்மயங். 226)

என்பதனால் பலா அக்கோடு, அராஅக்குட்டி என்றெழுதுவதே பண்டைய வழக்கென்பது தெரிவது. இவ்விதியை,

" இரவென் கிளவிக் ககரமில்லை "

(உயிர்மயங். 227)

என்பதனால் விலக்குதலும் காண்க. இவையெல்லாம் பண்டை வழக்கேயாம்.

இனி,

" தானும் பேனுங் கோனுமென்னு
மாமுறை யியற்பெயர் திரிபிட னிலவே "

(எழுத். 351)

என்பதனுல், தான்,பேன், கோன் என்பன மக்களியற் பெயராக வழங்கிய காலமு முண்டென்று தெரிவது. இவ்வழக்கு இப்போது தமிழ் நூல்களினில்லாமை பலருமறிவர்.

இனி,

" சகரக் கிளவியு மவற்றோ ரற்றே
அஐ ஔ வெனு மூன்றலங் கடையே "

(எழுத்ததி. மொழிமரபு. 62)

என்பதனுற் சகர வொற்று அ, ஐ, ஔ என்னு மூவுயிரோடுங் கூடி மொழிக்கு முதலில் வழங்கிய சொற்கள் இல்லாத காலத்தவர் தொல்காப்பியனுர் என்பது நன்கறியக் கிடப்பது. சகரம் முதலில் உள்ள தமிழ்ச் சொற்கள் பரிபாடல், பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு முதலிய பெருநூல்களில் வரக்காண்டலாற்ருெல் காப்பியனுர் இவற்றுக்கெல்லா முற்பட்டவரென்று துணியலாம்.

பரிபாடலில்,

" தந்த கள்வன் சமழ்ப்புமுகங் காண்மின் " (20)

என வந்தது. பதிற்றுப்பத்தில்,

" மன்பதை சவட்டுங் கூற்றமென்ப " (84)

என வந்தது.

பத்துப் பாட்டில்,

" பஞ்சாய்க் கோரை பல்லிற் சவட்டி "

(பெரும்பாண். 217)

என வந்தது காணலாம்.

" சந்து நீவிப் புண்முடிந் திடுமின் " (மலைபடு. 393)

என வந்தது.

இனி, ஒரு சாரார், தொல்காப்பியனுர்,

" முன்னிலை சுட்டிய வொருமைக் கிளவி
பன்மையொடு முடியினும் வரைநிலை யின்றே
ஆற்றுப்படை மருங்கிற் போற்றல் வேண்டும் "

(எச்ச. சூ. 46)

என இலக்கணம் வகுத்தது இலக்கியங் கண்டபின் ஆதலின் இதற் கிலக்கியம் கூத்தராற்றுப் படையுள் (மலைபடுகடாம்)

" கலம்பெறு கண்ணுள ரொக்கற் றலைவ "

என நின்ற ஒருமைச் சொற் போய்,

" இரும்பே ரொக்கலொடு பதமிகப் பெறுகுவிர் "

எனப் பன்மைச் சொல்லோடு முடிதலென்று காட்டப்படுதலின், அம்மலைபடுகடாத்திற்குப் பிந்தியவராவரென்று துணிவாருண்டு. தொல்காப்பியனார் செந்தமிழியற்கை சிவணிய நிலத்தொடு முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணிப் புலந்தொகுத்தலால், தமக்கு முன் இத்தமிழ்நாட்டு வழங்கிய தொன்னூல்களில் ஒன்றுகிய ஆற்றுப்படையைக் கண்டு இங்ஙனம் இலக்கணங் கூறினாரென்பதல்லது, இப்பிந்து நூல் கண்டு கூறினர் என்றல் பொருந்தாதாம். இம்மலைபடுகடாம் தொல்காப்பிய னார்க்குப் பிந்திய நூலாதல்,

" சந்து நீவிப் புண்முடிந்திடுமின் " (அடி. 393)

எனச் சகரமெய் அகரம் பெற்று முதலின் வந்தசொல்லை எடுத் தாளுதலின் நன்கறியலாம். நன்னன் சேய் நன்னன் பிற்பட்ட வனுதலுங் கண்டுகொள்க. இங்ஙனந் தொல்காப்பிய இலக்க ணத்தை அடியொற்றிச் செய்யப்பட்ட பின்னூல் இலக்கியமெல் லாம் தொல்காப்பியர் தம் இலக்கணத்திற்குக் கண்ட இலக்கிய மென்று சொல்லப்பட்டால், நெறிமுறையுங் காலமும் வழுவிக் கெடுமென்றுங் கண்டுகொள்க. புறப்பாட்டிற் பாரத காலத்த தென்று தெளியப்படும் முரஞ்சியூர் முடிநாகராயர் பாட்டில்,

" பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்

.........................................

நடுக்கின்றி நிலீஇயரோ வத்தை "

என்பது

" தன்மை முன்னிலை யாயீரிடத்தொடு
மன்னு தாகும் வியங்கோட் கிளவி " (தொல். சொல்.)

என்ற தொல்காப்பியனார் இலக்கணத்தொடு மாறுபடுதலின், அவர் இவ்விலக்கியங் காணுத காலத்தே இலக்கணஞ் செய்தன ராவர் எனக்கொண்டு, முதற் சங்கத்தவரான முரஞ்சியூர் முடி நாகராயருக்கு முற்பட்டவரென்று கூறலும் ஆமென்று துணிக. இங்ஙனம் துணியின் றொல்காப்பியனார் பாரத காலத்தை யடுத் தவராவர் என்று தெளிக. இவையெல்லாங் கண்ட வுரையாளர்

பலரும் இச்சூத்திரத்தின் " மன்னுதாகும்" என்றது கொண்டு சிறு பான்மை இவ்விலக்கணத்திற்கு மாறியும் வரும் என்று பொருள்கூறிப் போந்ததை நோக்கிக்கொள்க. இவர் காலந் துணிதற்கு இவை துணையாதலில்லை யென்பது அறிவாளரே உய்த்துணர்ந்து கொள்வாராகுக.

இனி,

" செய்யுண் மருங்கின் வேட்கை யென்னு
ஐயெ னிறுதி யவாமுன் வரினே
மெய்யொடுங் கெடுத லென்மனார் புலவர்
டகார ணகார மாதல் வேண்டும்." (உயிர் மயங். 86)

என்பதனால் வேட்கை அவா என்னுஞ் சொற்கள் செய்யுண்மருங்கின் வேணவா என ஆகி வழங்குமென்று தொல்காப்பியனார் கூறியது கொண்டு,

" வேணவாத் தீர்த்த விளக்கே வாவென "

(மணிமே. பதிகம்)

என மணிமேகலையுள் வருவதே தொல்காப்பியனார் இலக்கணமென்னின், திருவள்ளுவர் நூற்குப் பிந்தியதெனத் தெளியப் பட்ட மணிமேகலை தொல்காப்பியனார்க்கு முற்பட்டதாகிவிடுதல் கண்டுகொள்க. இவற்றால், தொல்காப்பியனார் தம்மிலக்கணத் திற்குக் கருதிய இலக்கியங்கள் எத்துணையோ பல அவர்க்கு முன்னே இத் தமிழ்நாட்டு வழங்கியன என்றே ஒருதலையாகத் துணியலாம். இவற்றிற்கு ஆதாரமானவை இவர் சூத்திரங் களினின்றே மேலெடுத்துக் காட்டப்படும். ஈண்டு இவர் சமயம் பற்றிச் சில கூறுவாம்.

# தொல்காப்பியனார் சமயம்

இனி இவரது சமயக் கோட்பாடு ஆராயப்படும்.

" நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்துங்
கலந்த மயக்க முலக மாதலின் " (மரபியல். 89)

என மரபியலுட் கூறுதலான் ஐம்பெரும் பூதமுடன்பட்டு அவை பஞ்சீகரண முறையாற் கலந்தது உலகமென்று தெளிய உரைத்தனராவர். இதனால் இவர் நான்குபூதமே உடன்பட்ட பௌத்த சமயத்தராகா ரென்க. இவர் விசும்பை உடன்படாதாரின் வேறென்று தம்மைப் புலப்படுத்தவே விசும்போடைந்துமெனத் தெளியவைத்து எண்ணிட்டு அவ்வளவே பூதமென்று தெரிய உம்மை கொடுத்ததுங் காண்க.

" கால முலக முயிரே யுடம்பே
பால்வரு தெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கள் சொல்லென வரூஉம்
ஆயீ ரைந்தொடு பிறவு மன்ன
ஆவயின் வரூஉங் கிளவி யெல்லாம்
பால்பிரிந் திசையா வுயர்திணை மேன "

(தொல். சொல். கிளவி. 57)

" காலம் என்பது முன்னும் பின்னும் நடுவும் ஆகி என்றும் உள்ளதோர் பொருள். உலகம் என்பது மேலுங் கீழும் நடுவும் ஆகி எல்லாவுயிரும் தோற்றுதற்கு இடமாகிய பொருள். உயிர் என்பது ஜீவன். உடம்பு என்பது மனம் புத்தி அகங்காரமும் பூததன் மாத்திரையுமாகி வினையினாற் கட்டப்பட்டு எல்லாப் பிறப்பிற்கும் உள்ளாகி நிற்பதோர் நுண்ணிய உடம்பு. இதனை மூலப்பகுதியெனினுமாம். பால்வரை தெய்வம் என்பது ஆணும் பெண்ணும் அலியுமாகிய நிலைமையை வரைந்து நிற்கும் பரம் பொருள். வினை என்பது ஊழ். பூதம் என்பது நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் ஆகிய ஐம்பெரும்பூதம். ஞாயிறு என்பது தீத்திரளாய் உலகு விளக்குவது. திங்கள் என்பது நீர்த்திரளாய் உலகிற்கு அருள்செய்வது. சொல் என்பது எழுத்

தினன் இயன்று பொருள் உணர்த்துவது: அச்சொல்வினை னியன்ற மந்திரம் விடம் முதலாயின தீர்த்தலின் தெய்வம் ஆயிற்று. "இந்நூல் செய்தான் வைதிக முனிவன். ஆதலின் சொல் என்பது வேதம் என்று கொள்ளப்படும்" எனத்தெய்வச் சிலையார் கூறியனகொண்டு இவ்வாசிரியர் கொள்கை நன்குணர லாகும். சேனவரையர் பால்வரை தெய்வம் என்பது எல் லார்க்கும் இன்ப துன்பத்துக்குக் காரணமாகிய இருவினையை யும் வகுப்பது என்று உரைகூறித் தெய்வம் செய்தது என்று உதாரணங் காட்டியதுங் காண்க. இதற்கேற்பவே அகத்திணை யியலுட் கருப்பொருள் கூறியவிடத்து அவ்வந்நிலத்துக்கு வழி படுதெய்வம் இவ்வாசிரியர் உடன்படுதல்காணலாம் (அகத். 18) அவ்வந்நிலத்துக்குரிய தெய்வங்களை,

"மாயோன் மேய காடுறை யுலகமுஞ்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்
முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே'

(அகத். 5)

என்னுஞ் சூத்திரத்தாற் கூறிக் காட்டுதலானும் இவர் தெய்வங் கொள்கை தெரியலாம். இந்நிலங்கட்குரிய தெய்வங்கட்கு இந் நில மக்கள் படிமையமைத்து வழிபாடு செய்தனரென்றும் அப் படிமையமைந்த கோயில்களைக் காத்தற்கு அரசர் முதலியோர் தம் மனையைப் பிரிந்துபோதலுண்டென்றும் உரையாசிரியர்,

"மேவிய சிறப்பி னேனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையாற்
பிழைத்தது பிழையா தாதல் வேண்டியு
மிழைத்த வொண்பொருண் முடியவும் பிரிவே"

(பொருள். அகத். 30)

என்னுஞ் சூத்திரத்திலுரை கூறினர். இதனால் இவ்வாசிரியர் தெய்வப்படிமைகளை வைத்து வணங்குதற்கு முடன்பட்டனராவ ரென்று தெரியலாம்.

"எல்லா வுயிர்க்கு மின்ப மென்பது
தானமர்ந்து வரூஉ மேவற் றாகும்" (பொருளி. சூ. 28)

என்னுஞ் சூத்திரத்தால் இவர் உயிர்கள் பலவென்று உடன்பட்டனராவர்.

"சென்ற வுயிரி னின்ற யாக்கை" (புறத். 71)

"தொல்லுயிர் வழங்கிய வவிப்பலி யானும்" (புறத். 21) என்பதனால் இவர் அவ்வுயிரை நித்தியமென்று உடன்பட்டனராவர். "தொல்லுயிர்" என்றதனானே பலபிறவி தோறும் ஓருயிர் உடலிற் புகுந்து வருவதென்பதும் உடன்பட்டனராவர். இவ்வடியானே வீரராயுள்ளார் தாமே தம்முயிரைத் தெய்வத்திற்குப் பலியாக வழங்குதல் கூறினார். இஃது இந்நாட்டு முன்னர் வழங்கியதென்று இதனாலறியலாம்.

"மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க் காகிய காலமு முண்டே" (கற்பி. 3)

என்பதனால் இவர் நான்கு குலம் உடன்பட்டது காணலாம். இதற்கேற்பவே,

"பரத்தை வாயில் நால்வர்க்கு முரித்தே" (பொருளி. 30)

என்பதனால் இவர் நான்கு வருணமும் உடன்படுதல் காணலாம். இவர் மூவரை மேலோரென்றது உபநயனச் சடங்கால் எய்திய பிறப்புயர்வுபற்றியென்று கொள்ளத்தகும். "இருபிறப்பாளர்" என்பது சங்கநூல் வழக்கு (திருமுரு. 182). இதனானே பிரமசரியநிலையும் இவர் உடன்பட்டனராவர். இவர் "நூலேகரகம்" என்னு மரபியற் சூத்திரத்தால் உபநயனச்சடங்கு உடன்படுதல் காணலாம். "கரணத்தினமைந்து முடிந்தகாலை" (கற்பி. 5) என்பதனானும்,

"புரையறந் தெளிதல்" (மெய்ப். 24)

என்பதனானும்,

"தாய்போற் கழறித் தழீஇக் கோட
லாய்மனைக் கிழத்திக்கு முரித்தென மொழிப
கவவொடு மயங்கிய காலை யான" (கற்பி. 32)

என்பதனானும் இவர் இல்லறநிலை உடன்படுதல் காணலாம்.

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
யேமஞ் சான்ற மக்களொடு துவன்றி
யறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியுஞ்
சிறந்தது பயிற்ற லிறந்ததன் பயனே" (கற்பி. 51)

என்பதனால் சிறந்தது பயிற்றும் வானப்பிரத்தநிலை உடன் படுதல் காணலாம்.

> " நாலிரு வழக்கிற் றாபதப் பக்கமும் " (புறத். 20)

என்பதனால் மனைவியை விடுத்துத் தலைவன் தனியே தாபத வொழுக்கம் பூணும் நிலையை உடன்படுதல் அறியலாம்.

> " கட்டினீத்த பாலினானும் " (புறத். 21)
>
> " காம நீத்த பாலினானும் " (புறத். 21)
>
> " அருளொடு புணர்ந்த வகற்சி யானும் " (ஷை. ஷை.)

என்பனவற்றாற் பொருளுங் காமமும் அறத் துறந்து அருளையே துணையாக்கொண்டு இல்லறத்தினின்று அகன்ற சந்நியாச வொழுக்க நிலையை உடன்படுதல் காணலாம். " கட்டினீத்த பாலினான் " என்பதாற் பேரரசர்க்கும் இத்துறவு உடன் பட்டனராவர். " அருளொடு புணர்ந்த வகற்சி " என்று இவர் சந்நியாசத்துக்குக்கூறிய இலக்கணம் அறிவாளர்கண்டு இன்புறத் தக்கதாம். இல்லறத்துள் " காதலி யிழந்த தபுதார நிலையும்" (புறத் 24) என்பதனால் வடநூலார்விதுரன் (Widower) என்று பெயர் குறித்து அவற்கு விதித்த ஒழுக்கங்களை உடன்பட்டன ராவர்.

> " காதல னிழந்த தாபத நிலையும் " (புறத். 24)

என்பதனாற் கணவனையிழந்த மகளுக்கு விதித்த கைம்மை நோன்பினை இவர் உடன்படுதல் காண்க.

> " நல்லோள் கணவனொடு நனியழற் புகீஇச்
> சொல்லிடை யிட்ட பாலை நிலையும் " (புறத். 24)

என்பதனாற் கணவனது பிணவுடம்பை அழலிலிட்டு ஒழித்தற்கு உடன்பட்டனரென்றும் அக்கால நல்லவளாகிய பத்தினி அக் கணவனுடம்போடு தீப்புகுந்து மாய்தற்கு உடன்பட்டனரென் றும் அறியலாம்.

> " [illegible]
> [illegible] " ([illegible])

[illegible] மிடத்து,

"பல்லாற் றானும்,
நில்லா வுலகம் புல்லிய நெறித்தே" (புறத். 23)

என்பதனானும் இவர் உலக நிலையாமை உடன்படுதல் நன்கு காணலாம்.

"மூவா முதலா வுலகம்" (சிந்தா. காப்பு)

என்பதனால் உலகம் நித்தியமென்று உடன்பட்ட ஜைன சமயத்தவர் இவ்வாசிரியரல்லர் என்பது,

"பல்லாற்றானு நில்லா வுலகம்"

என்னுங் கூற்றாலறியலாகும். இவர்,

"அளவிற் கோட லந்தணர் மறைத்தே"
(எழுத். பிறப். 20)

"மறையென மொழிதன் மறையோ ராறே"
(செய்யுளி. 186)

"மறையோர் தேஎத்து மன்ற லெட்டனுள்"
(களவியல். 1)

"மறைமொழி கிளந்த மந்திரத் தான"
(தொல். செய்யுளி. 166)

"அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்" (புறத். 20)

எனக் கூறுதலால் இவர் வேதத்தினையும் அஃது அந்தணர்கண் நிலைபெறுதலையும், அது கூறிய ஒழுக்கங்களையும், வேள்வியையும், அது கூறுமந்திரங்களையும், ஸ்வரங்களையும்உடன்பட்டனராதல் காணலாம். இவர் நான்மறையோதிய தெய்வங்களுள் திருமாலை மாயோனெனவும், முருகக் கடவுளைச் சேயோனெனவும், இந்திரனை வேந்தனெனவும், யமனை,

"மாற்றருங் கூற்றம்" (புறத். 19)

என்பதனாற் கூற்றமெனவும், துர்க்கையை,

"மறங்கடை கூட்டிய, குடிநிலை சிறந்த கொற்றவை நிலை"
(புறத். 4)

என்பதனாற் கொற்றவை எனவுந் தமிழ்ப்பெயரிட்டு இந்நூலுள் வழங்குதலால் இவர்க்கு முன்னே இத்தமிழ்நாட்டு இத்தெய்வங்களை வழிபட்டுப் போற்றல் சிறந்ததென்று துணியலாம்.

"கால முலகம்" (தொல். சொல். இளவி. 58)

என்னுஞ் சூத்திரத்தில் நிலம், பொழுது, பூதம், ஞாயிறு, திங்கள், நாமகள் வடிவாகிய சொல், இவற்றைப் போற்றிப் பாராட்டுதற்கு இவர் உடன்படுதலால், இவர் காலத்துக்கு முன்னே இத்தமிழர் இவற்றையுங் கௌரவித்தனரென்று துணியலாம். இக்கருத்துக் கியையவே மாயோனுக்கு மாஅலென்ற பெயரும், சேயோனுக்கு வேலன், முருகன், வேள் என்ற பெயரும், இந்திரனாகிய வேந்தனுக்கு வானவன் (சிலப். காட்சி. 25) என்ற பெயரும், யமனாகிய கூற்றத்துக்கு மடங்கல், மறலி என்றபெயர்களும், கொற்றவைக்குப் பழையோள், காடுகாள் (காடுகிழாள்) என்ற பெயர்களும் தனித் தமிழ்ச் சொற்களாய் நிகழ்தலின் இத்தெய்வங்கள் வழிபாடும் இந்நாட்டு இறப்ப முந்தியனவென்று கருதலாகும். இத்தெய்வங்களுள் மாயோனை இவ்வாசிரியர் தலைமையாகக்கொள்ளுவர். புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் (தொல். அகத். 14) என்று தாங்கூறிய உரிப்பொருட்குரிய முறையில் வையாது முல்லையை முன் வைத்தது மாயோன் மேய தன்மையாலென்று துணியக் கிடத்தலாலறியலாகும். இதற்கேற்பவே இத்தெய்வங்கட்குரிய படிமைகளைக் காத்தற்குப் பிரிவு கூறியவிடத்தும்,

"மேவிய சிறப்பி னேனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையாற்
பிழைத்தல் பிழையா தாகல் வேண்டியும்
..............................பிரிவே"

(அகத். 28)

எனக் கூறுதலுங் காணலாம். இவற்றிற்குப் பொருந்தவே புறத்திணையியலுள்,

"மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பிற்
றாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்" (புறத். 5)

என்பதனால்மன்பெருஞ் சிறப்பினையும் தாவாவிழுப்புகழினையும், மாயோற் கேற்றிக் கூறுதலுங் காண்க. சிறப்பு, பெருஞ்சிறப்பு, மன் பெருஞ் சிறப்பு எனவும், புகழ், விழுப்புகழ், தாவாவிழுப் புகழ் எனவும், கடை, இடை, முதல் என மூன்று பகுதிப்பட வைத்து இவற்றுள் மாயோன் மேயது முதன்மையது எனத் தெரிய விளக்கி விசேடித்த வாற்றான் இவர் உள்ளக்கருத்து நன்

குணரலாகும். நாடுகாத்தலை மீக்கொண்ட பேரரசர் திருமால மிசமாதற்கு இவ்வாசிரியர் உடன்பட்டனரென்பது இப்பூவை நிலையாற் றுணியப்படும். இவ்விலக்கணத்துக் கியையவே,

"முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்" (குறள். 388)

என்று திருவள்ளுவனார் கூறுதலுங் காண்க. இவர்,

"தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே"

(செய்யுளி. 138)

என்பதனாற் பொதுவாக எல்லாத் தேவரையுங் கூறி உடன்படு தல் காணலாம்.

"அங்கில மருங்கி னறமுத லாகிய
மும்முதற் பொருட்கு முரிய வென்ப" (செய. 106)

என்பதனால் அறமுதலிய உறுதிப் பொருள்கள் நான்கினையும் இவர் உடன்படுதல் காணலாம். ஈண்டு அறமுதலாகியமும்முதற் பொருள் என்பது அறத்தை முதலிலே உடைய மூன்று முதற் பொருள் என்றுகொண்டு நான்கு உறுதிப் பொருளுங் கூறினு ரென்றுரைப்பர். இவற்றால் இத்தொல்காப்பியனார் வேதவழக் கொடுபட்ட நெறியினராதல் ஒருதலை. இவர் கால் கோள், நீர்ப் படை, நடுகல் (புறத். 5) முதலியன கூறுதலால் இவர் இறந்த வீரர்க்குக் கல்நாட்டி அவரைத் தெய்வமாக வழிபடுதற்கு உடன் பட்டனராவர். இதனால் இறந்தவரைப் பிதரராகக்கொண்டு வழிபடும் ஒழுக்கமும் இத்தமிழ் நாட்டு இவர்க்கு முன்னரே யுண்மை உணரலாம்.

# தொல்காப்பியத்திற்கு முந்துநாலுண்மை

தொல்காப்பியத்திற்குப் பாயிரஞ்செய்த பனம்பாரனார்-

" வடவேங்கடந் தென்குமரி

..........................................

பல்புகழ் நிறுத்த படிமை யோனே "

எனக் கூறியதன்கண் வடக்கண் வேங்கடத்துக்குந் தெற்கட் குமரிக்குமிடைப்பட்டது தமிழ்கூறு நல்லுலகம் என்றும், அதன் கண் வழக்குஞ்செய்யுளுமாகத் தமிழ்மொழிவளர்ந்து சிறந்திருந்த தென்றும்,அவ்விரண்டையுமாராயுமுகத்து எழுத்துஞ்சொல்லும் பொருளுமெனப் பாகுபடுத்து, அங்ஙனம் பாகுபடுத்தற்கட் செந் தமிழியல்புகெடாது நிலைபெறுதற்பொருட்டுச்செந்தமிழ் நிலத்து வழங்கிய உலக வழக்கினையும் அந்நிலத்து வழங்கிய முந்துநூல் களையும் ஆராய்ந்து,எழுத்துமுறை, சொல்முறை,பொருள்முறை இவை என்றும் இவற்றுள் வழக்குநெறி செய்யுணெறி இவை யென்றுந் துணிந்து, தொல்காப்பியனார் நூலைத் தொகுத்துக் கூறினாரென்றும், அங்ஙனந் தொகுத்துக்கூறிய நூல் குற்றமற்ற நூலென்றும், இந்நூல் அரங்கேறியது நிலந்தருதிருவிற் பாண்டி யன் அவையத்தென்றும், அவ்வவையத்து இந்நூலைக் கேட்டவன் அதங்கோடென்னும் ஊரிலிருந்த " அறங்கரை நாவி னான்மறை முற்றிய " ஆசான் என்றும், அவ்வாசானுக்குத் தொல்காப்பிய னார் குற்றமறத் தெளித்துக் கூறினார் என்றும், இங்ஙனங்கூறிய தொல்காப்பியர் ஐந்திர விலக்கணம் நிறைந்தவரென்றும் பல் புகழ் நிறுத்தபடிமைய ரென்றும் கூறியுள்ளனர். இதனால், தொல்காப்பினார்க்கு முன்னே தமிழ் நாடு வடவேங்கடந் தென்குமரி இவ்வெல்லைக்குட்பட்ட அளவிற்றாயதென்றும், தமிழ் மொழி வழக்கினுஞ் செய்யுளினுஞ் சிறந்திருந்ததென்றும், எழுத்துஞ் சொல்லும் பொருளும் பற்றி இவர் ஆராய்ந்துகொள் வதற்கு ஏற்ற பெற்றியில் உலக வழக்கும், முந்து நூல்களும் பரந்து கிடந்தனவென்றும், அவற்றை ஐந்திர நிறைந்த தொல் காப்பியனார் தொகுத்துக் கூறினாரென்றுந் தெரியலாம். இதனால் இவர்செய்த தொல்காப்பியம் வழிநூலாதல் துணியப்படும். இத்

தொல்காப்பியத்துட் பனுவல், நூல் எனப்புலவர் யாத்தகட்டுரைகட்குப் பெயராக வழங்கலால் இம்மொழிகள் வடமொழியிலுள்ள தந்த்ரம், ஸூத்ரம் என்பவற்றின் மொழிபெயர்ப்பாமெனக்கொண்டு அவ்வடமொழியுள் தந்த்ரம், ஸூத்ரம் எனப்பல செய்யுள் வகைகள் ஏற்பட்ட பின்னரே இத் தமிழிற் கட்டுரை வகைகள் ஏற்பட்டனவென்று நினைப்பார் உளர். தமிழிற் புலவர் கட்டுரைக்குப் புலம், முறை, செய்யுள், தூக்கு முதலியபெயர்கள் தொன்றுதொட்டே உண்மையால், வடமொழி யுதவியில்லாமலே தனிநிலையில் தமிழ்மொழி புலவர் கட்டுரைகளாற் சிறந்து விளங்கியதென்பது உணரப்படும். நூல் பஞ்சி நூற்ற இழை. இஃது உவமையாற் பெற்ற பெயர். இது ஸூத்ரம், தந்த்ரம் என்பவற்றிற்கும் ஒக்கும். புலம் என்பது அறிவாய் அதனையுணர்த்துங் கட்டுரைக்காயிற்று. இது வேதமென்ற வடமொழியோடொக்கும். "புலமும் பூவனு நாற்றமு நீ" எனவரும் பரிபாடலடியில் வேத மென்னும் வடமொழி உணர்வென்பதாகலானீண்டு அப்பொருள் பற்றி அதற்குப் புலமென்று பெயராயது" எனப் பரிமேலழகர் கூறுதலால் உணர்க. (பரி. 1) இது வேத காலந்தொட்டு அவ்வேதத்தையும் தமிழ் தன் மொழியால் வழங்கியதை உணர்த்தாமலிராது.

புலம் நூற்கு ஆதல் "புலந்தொகுத்தோன்" (தொல்.பாயிரம்); "புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்" என்னுந்தொடர்களாலறியலாம். புலத்துறை நூலின் பல துறைகள். தமிழில் முறை என்பதும் நூற்குப் பெயராகும்.

இனி ஒரு சாரார் தமிழில் நூலுண்டாகிய காலம் எழுத்துக்களைக்கண்டு வரிவடிவில் அவற்றை எழுதிய காலத்திற்குப் பின்னருமென்றுகொண்டு அங்ஙனந் தமிழில் வரிவடிவுண்டாகிய காலம் கி. மு. நான்காம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதேயாமென்பர். இதற்காதாரமாகச் சந்திரகுப்த சக்ரவர்த்தியிடம் யவன வேந்தனினின்றுந் தூதுவந்த மெகாஸ்தினிஸ் என்பவர் "இந்தியாவில் எழுதிய நூல்கள் இல்லையென்றும், இந்தியர் எழுத்தறியாரென்றும் தங்கள் பெயர் பொறிக்கும் வழக்கம் இலரென்றும் கூறின" ரென்பர். இவர்க்குச் சிறிது முந்திய நியார்க்கஸ் என்பு

வர் "அந்தணர் நூல் எழுதப்பட்டதில்லை*" எனக்கூறியுள்ளதைக் காட்டுவர். இவை முழுதும் உண்மையில்லையென்று துணிதற்குச் சில ஈண்டு கூறுவோம். சந்திரகுப்தனை வேந்தனுக்கிய கௌடிலியர் தம் பொருணூலில் ( II 10 ; 71) வேந்தனுணையை எழுதுமுறை கூறுமிடத்து எழுத்தாளன் இலக்கணமும் எழுத்தின் தெளிந்த வடிவும், எழுத்தின் அளவும், அவை படித்தற்கு எளிய நிலையில் அமையவேண்டிய முறையும் விரித்துரைப்பது அந்நூல் வல்லார் அறிவர். இதனுற் சந்திரகுப்த வேந்தன் அவைக்கண்ணே இவ்வாறுஎழுதற்கு ஏற்றபெற்றியில் எழுத்துப்பயிற்சி பண்டுதொட்டே இந்நாட்டு நிகழ்ந்ததென்று துணியலாம். இக்காலத்து எழுத்தாராய்ச்சியாளர் உலகத்திலுள்ள எல்லாஎழுத்திற்கும் பழமையானது சித்திர வெழுத்தென்று துணிவர். இதற்கியைய எழுதல் என்பது சித்திரித்தலுக்கே யுரிய வினையாய்த் தமிழிற் றென்றுதொட்டு வழங்கியது தெரியலாம்.

"எழுதப் படுதலி னெழுத்தே"

(யாப். விருத். மேற். பக். 18)

என்பதனுல் எழுத்தென்பது எழுதல் என்னும் வினையினின்று வந்த பெயரென்று தமிழர் துணிந்தது காணலாம். எழுதல் வினை சித்திரித்தலாயின் எழுத்துச் சித்திரமாதல் நன்குதெளியலாம். இதற்கேற்பவே பரிபாடலிற் சித்திர மண்டபத்தை,

"எழுத்து நிலை..........................."

(பரிபாடல், பக். 141.)

எனக் கூறியிருத்தல் அறியலாம்.

"மணலினெழுதிய பாவை" (பரிபா.)

என்பதையும் இதற்கேற்ப நோக்கிக் கொள்க. கண்ணில் மையிட்டுதற்கும் எழுதல் என்னுஞ் சொலுண்மை,

"எழுதுங்காற் கோல்காணுக் கண்ணே போல்"

(குறள், 1285)

---

* Nearchus (B. C. 325) expressly states that the Brahmin laws were not written. Megasthenes a few years later (B.C. 302) mentions that they had no written books and that they did not know letters or use seals. (Burnell's South Indian Palaeography, Page 1.)

என்பதனாலறியலாகும். வடிவங்களை இவ்வாறு ஓவியமாக அமைத்தெழுதுதல் இன்னகாலத்துத்தான் இத்தமிழ் நாட்டிற் றோன்றிற்றென்று அளந்து கூறுதல் இயலாததாகும். வேந்தர் கொடி பொறித்தலும், மடலேறுந்தலைவன் தலைவியுருவைக் கிழியின் எழுதுதலும் தமிழ்நாட்டுத் தொன்றுதொட்ட வழக்கம். இங்ஙனம் வடிவெழுதி அவ்வடிவின் நிகழ்ந்த பல்வகைச் செயல்களும் எழுதுமிடத்தும் அவ்வச்செய்கைக்குரிய அடையாளங்களை வரைந்துகாட்டப் புகுமிடத்தும் இவ்வெழுத்தடையாளங்களுக்குத் தோற்றுவாய் உண்டாகுமென்று அறிவாளர் உய்த்துணரலாகும். அடையாளம், அடையாள் என்பது தமிழிற் றொன்று தொட்டு வழங்கிய சொற்கள் என்பது தெளியலாம். ஒலிக்கு அடையாளமாக இட்டதே எழுத்தென்பது தெள்ளிது. இவ்வெழுத்துமுறை முதற்கண் ஓவியத்தமைந்து அது நாளடைவிற் சுருங்கிய நிலை வேண்டி வரியெழுத்தாயிற்றென்றல் பொருத்தமேயாகும். இதற்கியையச் சித்திரவெழுத்து என ஒன்று இத்தமிழ் நாட்டுப் பண்டைக் காலத்து உண்டென்பது,

"கண்ணெழுத்துப் படுத்த வெண்ணுப் பல்பொதி"
(சிலப். 5 : 112)

"கண்ணெழுத்துப் படுத்தன கைபுனை சகடமும்"
(சிலப். 26, 136)

என வழங்குதலால் அறியலாம். கண்ணெழுத்தென்பது ஓவிய வடிவில் எழுதிய "எழுத்தடையாளங்களே" ஆதல் "கண்ணெழுத்தாளர்" (சிலப். 26; 170) எனவும் "கண்ணுள் வினைஞர்" (சிலப். 5 : 30) எனவும் ஓவியம் வரைபவரைக்கூறுதலான் அறியலாம். இவற்றால் ஓவிய வினைஞரான கண்ணெழுத்தாளர் உண்டாகிய காலத்தே பல பண்டைப் பொதிகளிற் கண்ணெழுத்தென்று ஓரடையாளமிட்டெழுதும் எழுத்துப்பயின்றது தெளியலாம். எகிப்தியர் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன் ஆண்ட இச்சித்திரவெழுத்திற் கண்வடிவு மிகுதியும் ரகாரத்திற்கு அடையாளமாக வரையப்படுதல் ஈண்டைக்கு நோக்கத்தகும். இவ்வெழுத்தடையாளங்கள் தொல்காப்பியனார்க்கு நெடுங்காலத்துக்கு முன்னரே இத்தமிழ்நாட்டு வழங்கியதாகுமென்பது அவர்,

"உட்பெறு புள்ளி யுருவா கும்மே" (நூன்மரபு 14)

"மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல்" (நூன்மரபு.15)
"எகர வொகரத் தியற்கையு மற்றே" (ஷை 16)

"புள்ளியில்லா வெல்லா மெய்யு
முருவுரு வாகி யகரமோ டுயிர்த்தலு
மேனை யுயிரோ டுருவுதிரிந் துயிர்த்தலு
மாயீ ரியல வுயிர்த்த லாறே" (ஷை 17)

என்று வரிவடிவிற்கு இலக்கணங் கூறுதலால் அறியலாம். இவ்வாறு மனக்கருத்தை எழுத்துக்களால் எழுதியறிவிக்குமுறை இத்தமிழ் நாட்டு இறப்ப முந்திய காலத்தேதொட்டுப் பயின்றதென்பது 'பிறர் அறியாமல் மறையிற் சிலவற்றை ஒருவர் ஒருவர்க்குத் தெரிவிக்குமிடத்து ஆகாயத்திலெழுதிக் காட்டுதல்' உண்டென்று கருதும்படி,

"அந்தரத் தெழுதிய வெழுத்தின் மான"
(தொல். பொருள். 146)

எனத் தொல்காப்பியனார் கூறுதலான் அறியலாம்.

இனித் தமிழ் நாட்டில் இறந்த மறவர்க்குக் கல்லில் உருவகுத்து அவரைத் தெய்வமாக வைத்து வழிபடுதல் இன்ன காலத்து உண்டாயிற்றென்றல் துணியமுடியாத பழமைத்தாகும். இதனைத் தொல்காப்பியனார்,

"காட்சி கால்கோ ணீர்ப்படை நடுகல்
சீர்த்தகு மரபின் பெரும்படை வாழ்த்தலென்
றிருமூன்று வகையிற் கல்லொடு புணர"
(தொல். புறத். 5)

என்பதனால் நன்கெடுத்துக் கூறினர். ஈண்டு இவர் "சீர்த்தகு மரபின்" என்றதனால் இஃது இந்நாட்டு நெடுங்கால வழக்கத்ததாதல் தெரியலாம்.

"நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்
பெயரும் பீடு மெழுதி யதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்" (அகம். 67)

என்பதனால் இக்கல்லில் இறந்த மறவர் பேரும் பீடும் எழுதுதல் கூறுமாற்றால் இதன் உண்மை உணர்க. இறந்த மறவரைப் போற்றி இவ்வெழுத்தியல்பு கூறிய பகுதியை நூன்மரபொன்று

தொல்காப்பியனார் பெயரிட்டாளுதலால் ஒரு நூற்கின்றியமையாத இவ்வெழுத்திலக்கணம் தாம் படைத்துக் கூறியதாகாது இந்நாட்டுத் தொன்றுதொட்டுப் பயின்று வந்த மரபையே கருதித்தாங் கூறுதல் புலப்படுத்தியதாகும். இங்ஙனமே இந் நாலுள் இவர் மரபென்று கூறுவன வெல்லாம் இந்நாட்டுத் தொன்றுதொட்டுப் பயின்ற வழக்கத்தையே குறித்தல் நன் குணரத்தகும்.

இனி,

"அமரர்கண் முடியு மறுவகை யானும்
புரைதீர் காமம் புல்லிய வகையினும்
ஒன்றன் பகுதி யொன்று மென்ப"

(தொல். புறத். 26)

என்னுஞ் சூத்திரத்து அறுவகை என்றது கொடிநிலை, கந்தழி, வள்ளி, ஆற்றுப்படை, பரவல், புகழ்ச்சி என ஆறுமென்பர் உரையாசிரியர். இவர் இங்ஙனங் கூறுதற்குக் காரணம் இவ் வாறனையும் ஐயனாரிதனார் பாடாண் படலத்து ஒருசேர நிறுவியது கொண்டாகும் என எளிதிலுணரலாம். ஐயனாரிதனார் கொடிநிலை என்பது அரி, அயன், அரனென்னு மூவர் கொடியுள் ஒன்றோடு வமித்து வேந்தன் கொடியைப் புகழ்ந்த தென்பர். கந்தழி என்பது திருமால் சோவரணம் அழித்த வெற்றியைச் சிறப்பித்த தென்பர். இவர் பாடாண் படலத்தல்லாமல் உழிஞைப் படலத்துங் கந்தழி கூறி ஆண்டுந் திருமால் சோவரணத்தை அழித்த வீரத்தைச் சொல்லியது என்று கொள்வர். வள்ளி வெறி யென்னுங் கூத்தை ஆடியதென்பர். ஆற்றுப்படை புலவராற்றுப் படையென்று கொண்டு இமை யோருழைப் பெரும் புலவனை ஆற்றுப்படுத்த தென்பர். புகழ் தல் என்பது இன்ன பயன் எய்துதுமென்று தெய்வத்தினடி களைப் பணிந்ததென்பர். பரவுதல் என்பது இறைவனைப் பெரும் பேற்றினை நினைந்து வாழ்த்தி வணங்கியதென்பர். புத்த மித்திரனார் தம் வீர சோழியத்துப்,

"புகழ்ச்சி பரவல் குறிப்புக் கொடிநிலை கந்தழியே
இகழ்ச்சி மலிவள்ளி யென்றிவை யாறு நெறிமுறையில்
திகழ்ச்சி மலிதரு பாடாண் பகுதி"

என்பதனால் இவ்வாறினையுங் கூறுமிடத்து ஐயனாரிதனார் கூறிய ஆறனுள் ஆற்றுப்படையொழிய ஐந்தனையுங் கூறி அவ்வாற்றுப் படை கூறவேண்டிய விடத்துக் குறிப்பு என்று ஒன்று பேரிட்டொழிதல் காணலாம். இவர் ஆற்றுப்படை என்னுது அஃதுள்ள விடத்துக் குறிப்பென்று கூறியது அமரர்கண் முடியு மாறனுக்கும் வகை கூறிய தொல்காப்பியனார் இரு மூன்றாகப் பகுத்துக்கொண்டு பின் மூன்றனைப்,

"பரவலும் புகழ்ச்சியுங் கருதிய பாங்கினு,
முன்னோர் கூறிய குறிப்பினும்" (தொல். புறத். 27)

என்று விதந்து கூறி முதல் மூன்றனைக்,

"கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றுங்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"
(தொல். புறத். 33)

எனப் பகுத்துக்காட்டிய முறைமை பற்றியென்று நன்குணரலாகும். குறிப்பென்பது அவரவர் விரும்பிய காமமென்பது உரையாசிரியர்க்கு உடன்பாடாகும். இதனை,

"நன்மை வேண்டிற் றெய்வத்தை வழிபடும் என்பது"

என வீரசோழிய வுரைகாரர் கருதுவர். குறிப்பு என்பது காமமாதலின் இஷ்ட காமத்தை அடைதற்கு ஆற்றுப்படுத்தலாகவுங் கொண்டார் எனத் துணியலாம். இவ்வுரைகாரர் கொடிநிலையாவது கொடியது தன்மை கூறுவது என்பர். கந்தழியாவது செருவிற்றெட்ப * முடைமை என்பர். வள்ளியாவது முருகவேளைக் குறித்தது. புகழ்ச்சி புகழ்தல் எனவும், பரவல் வாழ்த்தல் எனவுங் கொள்வர். இம்மூவர் கருத்தும் அமரர்கண் முடியும் ஆறனுக்கும் வகை இவையென்று துணியுமிடத்து ஒத்து நிற்றல் காணலாம். நச்சினார்க்கினியர் மட்டும் இவ்வறு வகை முனிவரும் பார்ப்பாரும் ஆனிரையும் மழையு முடியுடை வேந்தரும் உலகுமாமென்பர். அவர், இவைதத்தஞ் சிறப்புவகையான் "அமரர் சாதிப் பால என்றல் வேத முடிபு" எனவுங் கூறுவர். அமரர்கண் முடியு மறுவகையானும் என்பதற்கு அமரர் வாழ்த்தும், அவர்கண் முடியும் அறுவகை வாழ்த்தும்

* திட்ப மெனவுங் கொள்ளலாம்.

ஆசிரியர் கருத்தென்பது அவர் கொள்கை. எங்ஙனமாயினும் அறுவகை என்பது பரவல்,புகழ்ச்சி,குறிப்பு,கொடிநிலை, கந்தழி, வள்ளி என ஆசிரியர் விதந்தோதிய ஆறுமன்றி வேறே ஆறு ஆகாமை அறிவாளரே ஆராய்ந்து கொள்வாராகுக. ஆசிரியர் இவ்வாறனுள் கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற மூன்றனையும் ஒரு கூறாக உடன்படுதல்,

" வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும் "

(தொல். புறத். 33)

என்று அவர் சூத்திரஞ் செய்தவாற்றான் எளிதிலுணரலாகும். " முதலன மூன்று " என்பதற்கு முற்கூறப்பட்டமூன்றென்றே நச்சினார்க்கினியர் உரைகூறிச் செல்லுதல் காண்க. மேற் கூறிய ஆறனுள்ளும் இக்கொடிநிலை முதலிய மூன்றும் முதலனவாகக் கருதப்படாவாயின் முற்கூறப்பட்ட மூன்றென்று கூறுதல் பொருந்தாமை காண்க.

இனி, நச்சினார்க்கினியர் குறிப்பு என்பது அறம் பொருள் இன்பம் பற்றி முன்னோர் கூறிய குறிப்புப் பொருள் என்பர். கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற மூன்றும் " அத்தேவரைப் போல் ஒருவழிப் பிறக்கும் பிறப்பில்லாத தெய்வங்கள் " என்று கொண்டு கொடிநிலை வெஞ்சுடர் மண்டிலமெனவும், கந்தழி ஒரு பற்றுக் கோடின்றி அருவாகித் தானே நிற்குந் தத்துவங் கடந்த பொருள் எனவும், வள்ளி தண்கதிர் மண்டிலம் எனவும் உரை கூறிப் போந்தார். அவர் தேவருள் ஆண் தெய்வமேயன்றிப் பெண் தெய்வமுங் கொடிநிலை கந்தழி வள்ளி யென்புழியடங்கு மென்று கொண்டு திங்கள் பெண்டன்மையுடைமை காட்டுவர். நச்சினார்க்கினியர் கூறிய உரைகொண்டு ஆராயுமிடத்து அறுவகை என்றது முனிவர் முதல் உலகீருக அவர் கூறிய ஆறேயா மென்றும் ஆண்டு அறுவகையுள் அடங்காத அக்கொடிநிலை முதலிய மூன்றும் அவ்வறுவகையுட் சொல்லப்படாதனவாய் வேறேயா மென்றுங் கொள்ளக்கிடப்பது நன்கு தெளியலாம். இங்ஙனமாயின் " கொடிநிலை " என்ற சூத்திரத்து (புறத். 33) " முதலன மூன்றும் " (முற்கூறப்பட்ட மூன்றும்) என்று கூறியதனோடு முரணுதல் காணலாம். இவர் கொடிநிலை முதலிய மூன்றிற்கும் முன்னோர் யாருங் கொள்ளாத பொருள்களை உரை

யாகக் கொள்ளுதலும் ஈண்டைக்கு நினைக்கத்தக்கும். "கொடிநிலை" என்ற சூத்திரத்துள் "வடுவறுசிறப்பின் முதலான மூன்றும், கடவுள் வாழ்த்தொடு கண்ணியவருமே" என்றதனால் இவை கடவுள் வாழ்த்தொடு கருதிச்சாரவைத்து வருதலல்லது கடவுட் பெயராகாமை நன்குணரலாகும். கடவுள் வாழ்த்தொடு என்புழி ஒடு கடவுள் வாழ்த்தின் உயர்பு குறித்துவந்ததாதலின் இவை அக்கடவுளோடு ஒத்ததன்மையன ஆகாமை உய்த்துணரலாகும். "முதலன மூன்றும்" என்றது தொல்காப்பியனார்க்கு முந்து நூலில் இக்கொடிநிலை முதலிய மூன்றும் ஆறனுள் முதற்கண் வைத்திருத்தலைக் குறிப்பது போலும். நச்சினார்க்கினியர் கந்தழி(கந்து + அழி) என்பதற்குப்பற்றுக்கோடு அழிந்ததென்று கருதிக்கொண்டு தத்துவங்கடந்த பொருள் என்று உரை கூறினராவர். பிறர் வள்ளி என்பதற்கு வெறியாடல் என்றது தம் மனத்திற் கருதிக்கொண்டதைப் புகுவித்ததாகக் கொள்வதன்றி ஆசிரியர் கருத்தெனத் துணிதற்கில்லை. "வாடாவள்ளி" என்ற விடத்தும் "வேலன் வெறியாட்டயர்ந்த காந்தள்" (புறத். 5) என்றவிடத்தும் வெறியாடல் கூறியொழிந்தமையால் ஈண்டுங் கூறுவது ஆசிரியர் கருத்தன்மையுணரலாம். * கந்தழி என்பதற்குச் சோவரணமழித்த மாயோன் விறலாகக்காட்டி உழிஞையுட் கந்தழியை வைத்து அவ்வாறே கூறியொழிந்தமையாற் பொருந்தாமை காண்க. இரு முறை சோவரணமழித்தலைக் கூறவேண்டிய ஏது இல்லையென்று தெளியலாம். தொல்காப்பியனார் படிமை வழிபாடு உடன்படலால் அப்படிமைகள் உள்ள கோயிலின் முன்றிலில் நாட்டப்பெற்ற கொடிக்கம்பத்தையும் அக்கம்பத்தின் தலையில் அவ்வத் தெய்வங்கட்கியைந்த ஊர்திகளைக்கிழியின் எழுதிய கொடியையும் அக்கம்பத்தோடு அக்கொடியைப் பிணிக்குங் கயிறாகிய வல்லியையுமே இம்மூன்றும் முறையேகுறிப்பன என்றும், இவற்றை வாழ்த்தலும் அவ்வமரர்கண் முடிவதேயாமென்றும், இங்ஙனம் வாழ்த்தல்கடவுள்வாழ்த்தொடு கருதிவருமென்றுந் துணிவதே இயைபுடைத்தாகும். கொடிநிலை—கொடிக்கம்பம்,

---

* பிற்காலத்து ஆராய்ச்சியாளர் கந்தழி என்பது வேள்வி யூபத்தூணிற் சுற்றிய வைக்கோற்புரியென்று கொண்டு இடர்ப்படுவர். "பகடு அழிதின்றாங்கு" என்புழி அழி வைக்கோற்கு வந்தது.

"கம்பிலிக் கொடிக்கம்ப நட்டதும்"

எனச் சோழர் மெய்க்கீர்த்தியில் வருதலானும், கோயில்தோறு முள்ள கொடிக்கம்பங்களானும், ஆண்டுப் பல்லோருஞ் சென்று வழிபடுதலானும் உண்மை உணரலாம். கந்தழி என்பது கந்தளி என்னும் வடசொற்கண் ளகரம் ழகரமாகத் திரிந்ததாகும். பிரவாளம் பவளம், பவழம் என்பது போலக் கொள்க. கந்தளி அம் மொழியிற் கொடிக்குப் பெயராதல் கேட்டுணர்ந்து கொள்க. வல்லி வள்ளியென மருவி வழங்குவது தெரிந்தது. கொடியேற்றம், கொடியிறக்கம் என்பன இரண்டும் கோயில் விழவுகளின் முதலினு முடிவினும் நிகழ்தலால் இவற்றின் சிறப்பு நன்கு தெளியலாம். "வடுநீங்கு சிறப்பின்மூன்றும்" என இவற்றைக் கூறுதலானும் இவற்றின் உயர்த்தி நன்கு அறியலாகும்.

இச்சூத்திரங்களின் கருத்தோடொத்துத் தெய்வத்திற்கு உறைவிடமாகப் படைவீடுகள் கூறப்படுதலும் அத்தெய்வத்தின்கண் ஆற்றுப் படுத்தலும் அதனைப் பரவலும் புகழ்தலுமேயல்லாமல் "ஓங்கிய-விறற்கொடிவாழிய" (திரு முருகு 38, 39.) எனக் கொடி முதலியன வாழ்த்தப்படுதலும் பிறவும் திருமுருகாற்றுப் படையுட் காணலாம். "புள்ளணி நீள்கொடி புணர்நிலை" (சிலப். 11—136) என்பதுங் காண்க. கொடிக்கம்பத்திற்றெய்வம் நிலை கொள்ளுதல் கந்திற் பாவையைப்பற்றி மணிமேகலை கூறுமாற்றுல் உணர்ந்துகொள்க. பட்டினப்பாலையுள்,

"விழவறு வியலாவணத்து
மையறு சிறப்பிற் றெய்வஞ் சேர்த்திய
மலரணி வாயிற் பலர் தொழு கொடியும்"
(158—160)

என வருதலானும் இதனுண்மையுணர்க. தமிழ் நாட்டிலே பல் ஊர்களிலும் இக்காலத்தும் ஒரு கம்பத்தை நட்டுப் பெருஞ் சோறு படைத்துத் தெய்வம் வாழ்த்திப் பாத்துண்பது "கம்ப சேவை" என்னும் பெயரான் நிகழ்தல் காணலாம்.

"கலிகெழு கடவுள் கந்தங் கைவிடப்,
பலிகண் மாறிய பாழ்படு பொதியில்" (புறம். 52)

என்பதனாற் பொதியில்களிலும் கம்பங்களிற் றெய்வ வழிபாடு நிகழ்ந்தது தெரியலாம். பட்டினப்பாலையுள், "பலர் தொழ

வம்பலர் சேக்குங் கந்துடைப் பொதியில்" என் வருவதையும் ஈண்டைக் கேற்ப நோக்குக. நச்சினார்க்கினியர் ஈண்டுக் கந்து—தெய்வம் உறையும் தறி என்றது காண்க. இக்கந்து இன்னதென்பது பின்னே "பருநிலை நெடுந்தூண்" என்பதனாலும் உணரலாம்.

இனி ஒரு சாரார் * வள்ளுவர் கடவுள் வாழ்த்தொடு பாயிரத்துக் கூறியன கொண்டு கொடிநிலை வான்சிறப்பென்றும், கந்தழி நீத்தார் பெருமை என்றும் வள்ளி அறன்வலியுறுத்தல் என்றுங் கூறுவர் (பொருளதிகார ஆராய்ச்சி. பக். 116—7). இவற்றில் ஏற்பன கொள்க. இத்துணையுங் கூறியவாற்றான் தொல்காப்பியனார் வேத வழக்கொடு பட்டவர் என்பது ஒருதலை.

இனித் தொல்காப்பியனாரைப் பனம்பாரனார் "பல் புகழ் நிறுத்தபடிமையோன்" என்று கூறியதுகொண்டு படிமை என்பது ஜைன சமயத்தினுந் தவவொழுக்கிற்குப் பெயராதல் கண்டு அச்சொல்லானே தொல்காப்பியனார் ஜைன சமயத்தவவொழுக்கம் பூண்டவரென்று துணிந்தாரும் உண்டு. § மிகவும் பழைய சங்கநூலாகிய பதிற்றுப்பத்து எட்டாம் பத்துள் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறையை அரிசில் கிழார் பாடிய,

"கேள்வி கேட்டுப் படிவமொடியாது" என்னும்பாட்டில்

"வேள்வி வேட்டனை யுயர்ந்தோ ருவப்ப" என்றதன்பின்

"அன்னவை மருண்டனெ னல்லே னின்வயின்
முழுதுணர்ந் தொழுக்கு நரைமூ தாளனை
வண்மையு மாண்பும் வளனு மெச்சமுந்
தெய்வமும் யாவதுந் தவமுடை யோர்க்கென
வேறுபடு நனந்தலைப் பெயரக்
கூறினை பெருமநின் படிமை யானே"

என வருவதில் இப்படிமை என்னுஞ் சொல் தவவொழுக்கத்திற்கு வழங்கப்பட்டிருத்தல் காணலாம். இதன் பழைய உரைகாரரும்,

---

* ஸ்ரீமாந் ராவ்சாஹிப் பண்டிதர் மு. இராகவையங்கார்.

§ செந்தமிழ் (Vol. 18) பக்கம் 337.

"செருப்புகன் முன்ப,

வேட்டனை யென்றும் பெற்றனை யென்றும் நீ செய்த யாகங்களாகிய அன்னவையிற்றிற்கு யான் மருண்டேனல்லேன்; நின்னை நல்வழி யொழுகுவித்து நின்ற நரை மூதாளனை நின் படிமையானே இல்லறவொழுக்கினை யொழித்துத் துறவறவொழுக்கிலே செல்ல ஒழுகுவித்தனை; அவ்வாறு செய்வித்த நின் பேரொழுக்கத்தினையும் பேரறிவினையுந் தெரிந்து யான் மருண்டேனென வினை முடிவு செய்க" எனக் கூறினர்.

இவற்றாற் பெருஞ்சேரலிரும்பொறை யாகங்கள் பல செய்தவன் என்றும் தன் படிமையாற்றன்னை ஒழுகுவித்து நின்றநரை மூதாளனாகிய புரோகிதனைத் துறவறத்திலே செல்ல ஒழுகுவித்தவன் என்றும் அவ்வாறு செய்தல் தன் தவவொழுக்கினாலென்றுங் கூறுதல் காணலாம். மூலத்திலும் எல்லாந் தவமுடையோர்க்காமென்று நரை மூதாளனை "நின் படிமையாற் பெயரக் கூறினை" எனக் கூறுதல் காண்க. படிமை என்பது ஒழுக்கத்திற்குப் பெயராய் வருதல் "பண்டை மகளிர் படிமையிற் பிழையாது" (பெருங். 42. கங்கை நீராடியது) என்னும் பெருங்கதையானு மறியலாம்.

இதனால் வேதவழக்கொடுபட்ட தவவொழுக்கமே படிமை என்பதற்குப் பொருளாதல் நன்கு காணலாம். பாயிரத்துள் "பல்புகழ் நிறுத்த படிமையோன்" என்பதன்கண் படிமையும் "கூறினை பெரும நின் படிமையானே" என்பதன்கணுள்ள படிமையும் ஒன்றாதல் எளிதிற்றுணியலாகும்.

இனி உலகத்துயிர்த் தொகுதிகளைப் பொறியுணர்வுபற்றி ஓரறிவுயிர் முதலாக ஐயறிவுயிரிறுதியாகப் பகுப்பது ஜைன நூன் மரபென்றும் அவ்வாறு கூறும் நூலெல்லாம் ஜைனமதக் கோட்பாடுடையனவென்றும் துணிவாருமுண்டு. இவ்வாறு தங்கொள்கைக்கிணங்கக் கூறியவர் ஜைன சமயத்தவராகிய பவணந்தி யாரென்பது அவர் நன்றாலால் அறியக் கிடப்பது. அவர் மக்களை ஐயறிவுடையராகக் கூறுதல்,

"வானவர் மக்க ணரகர் விலங்குபுள்
ஆதிசெவி யறிவோ டையறி வுயிரே" (நன். உரியியல். 8)

என்பதனால் அறியலாம். பவணந்தியார் இச்சூத்திரத்துள் வானவர், நரகர், விலங்கு, புள் முதலியனவும் ஐயறிவுயிரென்று மக்களுக்கொப்பக் கூறுதலாகிய இக்கொள்கை,

"மாவு மாக்களு மையறி வினவே" (மரபி. 32)
"மக்க டாமே யாறறி வுயிரே" (மரபி. 33)

என்ற தொல்காப்பியனார் மதத்திற்கிணங்காமை காணலாம். நன்னூற்கு உரையிட்ட மயிலைநாதரும் "அவர் (தொல்காப்பியனார்) ஆறறிவுயிரும் ஒன்றுண்டென்றாராலோ வெனின் அவர் மனத்தையும் ஒரு பொறியாக்கி, அதனான் உணரு மக்களையும் விலங்கினுள் ஒரு சாரனவற்றையும் ஆறறிவுயிரென்றார். இவர் (பவணந்தியார்) அம்மனக் காரிய மிகுதிக் குறைவாலுள்ள வாசியல்லது அஃதெல்லாவுயிர்க்கும் உண்டென்பார் மதம்பற்றி இவ்வாறு சொன்னாரென்க"

எனத் தொல்காப்பியனார் மதத்தையும் வேறுபடுத்துக் கூறுதல் காணலாம். மனத்தோடு கூட்டிப் பொறி ஆறென்றல் வைதிக மதமே யென்பது,

"மன ஷஷ்டா நீந்த்ரியாணி" (மனத்தொடு இந்திரியங்கள் ஆறு) என ஸ்ரீ கீதையிலும், (15, 7)

"दशमे புருஷேப்ராணா: ஆத்மை காதஶ" (சீவனிடத்தில் இந்திரியங்கள் பத்து : மனம் பதினொன்றாகும்)

என வேதத்திலும் வருதலான் நன்கறியலாம். இவற்றால் இவர் வேத வழக்கொடுபட்டாராதல் காண்க. இத்தொல்காப்பியனார் கொள்கைக்கிணங்கவே வள்ளுவனாரும்,

"கொலைவினையராகிய மாக்கள்" (329) எனவும்,
"வாயுணர்வின் மாக்கள்" (420) எனவும்,
"அறிவறிந்த மக்கள்" (61) எனவும்,
"விலங்கொடு மக்களனையர்" (410) எனவும்,

"மக்களே போல்வர் கயவர்" (1071) எனவும் மாந்தரை ஐயறிவுபற்றியும் ஆறறிவுபற்றியும் வேறுபடவைத்தது காணலாம்.

# தொல்காப்பியங் கூறும் நூல் வகைமை

தொல்காப்பியனார், நூலிற்கும் வழக்கிற்கும் இன்றியமையாத சொற்களின் ஒலி உறுப்புக்களை எழுத்தென்று பெயரிட்டு அவற்றைப் பிறப்பானும் அளவானுந் தனியே இயங்குதலானும் இயக்கப்படுதலானும், ஒலியின் வன்மைமென்மை, சமநிலைகளானும் பலதிறப்படுத்தி அவற்றின் உண்மை நிலைகண்டு விளக்கிய இயல்கள் நூன்மரபென்றும், மொழிமரபென்றும், பிறப்பியல் என்றும் பெயர் பெறும். நூல் மொழியையின்றி அமையாமையானும், மொழி எழுத்தையின்றியமையாமையானும், இவை ஒருவர் ஆக்கியன ஆகாது இந்நாட்டு வழங்கிய மரபு வழிப் பட்ட இலக்கணத்தை உடையன என்றற்கு நூன்மரபு, மொழி மரபு என்று பெயரிட்டு ஆண்டார் என்க. இவ்வாறே மரபு கூறு மிடமெல்லாம் இவர்க்கு இதுவே கருத்தாதல் உணர்க. இவர் வழக்கினுஞ் செய்யுளையே தங்கருத்திற்கொண்டு அதற்குப் பண்டைத் தமிழர் வழங்கிய இலக்கண வரம்பினைத் தம் நுண்ணறிவாற்கண்டு, அப்பழைய செய்யுள் வழக்கு நெறி இகவாமை கருதிக் காக்கின்றாராதலின் அக்கொள்கை புலப்படப் பல்லிடத்துந் தங்கூற்றாற் கூறாது "என்மனார் புலவர்" என்பதுபோல முன்னோரை எடுத்துக் கூறுதல் இவர்க்கு வழக்காகும். இவர்க்கு முன்னிருந்த பெருந்தமிழ்ப் புலவர் பலரும் விழுமிய பொருளோடு ஓசை இன்பத்தையும் முதன்மையாகக் கருதித் தஞ் செய்யுளை ஆக்கியதனைத் தம் நுண்ணிய செவிப் புலனாற் கண்டு, அவற்றின் மாத்திரைகளை அவ்வவ்விட நோக்கி அளந்து, எழுத்துக்களின் ஒலி இன்ன இன்ன அளவிற்றெனப் பகுத்தோதுதல் காணலாம். எழுத்துக்கள் தம் மாத்திரையினளவின் நீடலுங் குறைதலுஞ் செய்யுட்கண் இன்னோசைபற்றி வேண்டப்படுதல் அல்லாமல் இவர் காலத்துக்கு முன்னே சில சொற்களின் முதல் இடை கடைகளிலும், சில சொற்றொடர்களிலும் இயல்பாகவே சிற்சில எழுத்துக்கள் தம் அளவிற் குறைந்து வழங்கப்பட்டனவென்று இவர் குறிப்பது காணலாம். இவர் இகர, உகர, ஐகார, ஔகார

ஆய்த மகரக் குறுக்கங்கள் நோக்கிக் கண்டுகொள்க. இங்ஙனம் ஒலியை நீட்டலுங் குறைத்தலும் வேண்டிய நிலை ஒரு தாய் மொழிக்கு உளதென்று இலக்கணங் கூறப்படின், அத்தாய் மொழி நுணுகிய செவிப்புலனும் தெளிவாய் இசைக்கும் வாய் வன்மையு முடையராற் பேசப்பட்டதுங் கேட்கப்பட்டதுந் தெளியலாம். முந்தை என்னும் சொல்லினும் நுந்தை என்னுஞ் சொல்லினும் உள்ள உகரம் முன்னது முற்றுகரமாகவும், பின்னது குற்றுகரமாகவுமிருக்குமென்று இவ்வெழுத்திலக்கணவரையறையாற்றெரியலாம். இதன் வேற்றுமை ஒலிக்கு மரபு முறை நோக்கி அறிதல் அல்லது வேறு வகையான் உணரல் ஆகாமையின் "மாத்திரை, நுண்ணிதி னுணர்ந்தோர் கண்டவாறே" என்றார். (நூன்மரபு. 7). முற்றுகரத்திற்கு இதழ் குவிதலுங் குற்றுகரத்திற்கு இதழ் அவ்வளவு குவியாமையும் அக்கால வழக்கிற் கண்டுணர்ந்தனவாம்.

இவ்வாறு உயிர்,

"அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலு
முளவென மொழிப விசையொடு சிவணிய
நரம்பின் மறைய வென்மனார் புலவர்"

(தொல். எழுத். 33)

என்பதனால் யாழ் மறைதழுவிய ஓசை இன்பமே பயக்கத்தமிழர் செய்யுளை நடத்தியது புலனாகும். பிறப்பியலுள் இவர் கூறுவன பலவும் வடமொழியில் வேதத்திற்குக் கூறிய நிருக்தத்தையும் பிராதிசாக்கியங்களையும் ஒத்தனவென்று கூறுப. ஒத்த ஒலிகள் ஒரே வகைப் பிறப்புடைய மக்கள்பாற்றோன்றுமிடத்துப்பிறப்பு முறை ஒப்பதேயாமென்க."அளவிற்கோடலந்தணர் மறைத்தே" (தொல். எழுத். 102) என்பதனால் இவர் எழுத்துப் புறத்தே போந்தபின் உள்ள இயல்பாகிய அளவையும், ஒலிக்குறுக்கத்தையும், ஒலி நீட்டத்தையுமன்றி வெளியில் ஒலிக்கப்படாதுஉள்ளே மூலாதாரத்தினின்று எழுதற்குரிய மந்திரவெழுத்துக்கட்கும் அளபறிந்து துணிந்துள்ளனர் என்பது தெளியலாம். வடநூலார் வாக்கிற்கு வருதற்கு முற்பட்ட எழுத்தொலிகளைப் பரா, பச்யந்தி, மத்யமை, வைகரீ எனப்பெயரிட்டு மாத்திரைகூறுவர். இந்நூலாசிரியர்,

" நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப " (செய்யுளி. [illegible])

என்பதனுற்றமிழ் மந்திரம் உடன்படுதல் காண்க.

" பீடுகெழு நங்கை பெரும்பெய ரேத்தி,
வாடா மாமலர் மாரி பெய்தாங்
கமரர்க் கரசன் றமர்வந் தேத்த "

என்னுஞ் சிலப்பதிகாரக் கட்டுரைக் காதைக் கண் "இவள் பெயரைச் சொல்லி மலரைத் தூவி ஏத்தினர், இவள் பெயர் மந்திரோத்தி யாதலால்" என அரும்பதவுரையாசிரியர் கூறுமாற்ருன் இவ்வுண்மை ஒருவாறு துணியலாம்.

" செந்தமிழே தீர்க்க சுவாகா "

என்றநக்கீரர் திருவாக்கை இதற்குக்காட்டலும் உண்டு. தமிழிற் புட்கரனர் செய்த " மந்திர நூல் " ஒன்றுண்டென்பது,

" வச்சிரம் வாவி நிறைமதி முக்கோண
நெற்றிநேர் வாங்கல்வி யங்கறுத்தல்
உட்சக் கரவட்டத் துட்புள்ளி யென்பதே
புட்கரனர் கண்ட புணர்ப்பு "

(யாப். விருத். மேற். பக். 352)

என்பதனுல் அறியலாம். மந்திரத்தை வாய்மொழி யென்பது தமிழ் வழக்கு. இத்தொல்காப்பியனர்க்கு முன்னரே செய்யுட்களும் அவற்றினிலக்கணங்களும் நன்னிலையில்வளர்ந்துஇத்தமிழ் நாட்டுப் பரந்து சிறந்தன என்பதற்குப் பல சான்றுகள் இவர் நூலுள்ளே ஆங்காங்கிருத்தல் காணலாம்.

" பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
யங்கத முதுசொலோ டவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பி
னற்பெய ரெல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனர் புலவர் "

(செய்யுளி. சூ. 79)

என்பதன்கட் டமிழ்நாட்டவர் வழங்கும் யாப்பின் வழியதுஎன்றலால் இவர்க்கு முன்னரே நூல் யாப்பு நிரம்புதல் உணரலாம்.

இந்த யாப்பின் வகையுட்டலே சிறந்துவிளங்கும் வெண்பா என்ப தன் தலையமைப்பை நோக்குங்கால், இஃது எத்துணையோகாலம் செய்யுள் வழக்குப் பல்லாற்ருனும் இந்நாட்டு வளர்ந்ததன்பயன் என்று ஒருவர் துணிந்து கூறலாம். உலகத்தில் உயர்ந்தனவென்று கருதப்படும் பலமொழிகளினுங்காணப்படாத சீரொடுசீர்சேர்தற் கட்டளை யமைத்துக்கொண்ட இவ்வெண்பா வியல்பு பல தேயச் செய்யுளினும் பயின்ற ஒருவர்க்கு வியப்பை விளையாதிராது. இதனுல், தொல்காப்பியர் முதலியோர் புதிதாகக் கட்டியுரைத் தது இவ்யாப்பு ஆகாமையும், இஃது இந்நாட்டுத் தமிழ்வளர்ச்சி யின் உண்டாதலும் அறியலாம். இவ்வாறே அகவல், கலி, வஞ்சி என்பனவுங்கொள்க. இவையெல்லாம் ஓசை வேற்றுமைபற்றியே பகுக்கப்பட்டனவென்பது செப்பல், அகவல், துள்ளல், தூங்கல் என இந்நாற்பாவுக்கும் ஓசை கூறுதலான் உணரலாம். இதுவுந் தமிழர் இசை வன்மையையே குறிக்குமென்க. இவ்வோசை அடிமுழுவதூஉம் ஒருங்கு தழுவி நடக்கச் செய்வதே செய்யுள் என்பது கருத்தாகக் கொள்க. அழைத்துக் கூருது ஒருவற் கொருவர் இயல்பு வகையான் ஒரு பொருண்மையைக் கட்டுரைக் குங்கால் எழுந்த ஓசை செப்பலோசை எனப்படும். ஒருவன் கேட்ப அவற்கு ஒன்று செப்பிக் கூறல்போலாகும். தாம் கருதிய வாறெல்லாம் அழைத்துக் கூறல் அகவல் ஓசை என்ப. அகவல் அழைத்தல். இவ்வகவல் ஓசை களம்பாடு பொருநர் கண்ணும், கட்டுங்கழங்கும் இட்டுரைப்பார்கண்ணும், தம்மின் உறழ்ந்து ரைப்பார் கண்ணும், பூசல் இசைப்பார் கண்ணுங்கேட்கப்படும் என்ப. ஒழுகு நடைத்தின்றி இடையிடை யுயர்ந்து வரும் ஓசை கலிக்குரிய துள்ளலோசையாகும். ஓசை அற்றுவராது ஒரேபடி யாகச்சீர்தொறுந் தூங்கப்படும் ஓசை வஞ்சிக்குரிய தூங்கலோ சையாம். இவ்வோசை வேறுபாடுகளும் அவற்றிற்குரிய பெயர் களும் இவ்வாசிரியர் ஆக்கிக்கொண்டன வல்லாமை புலங்கொள்க. இவ்வாறே இச்செய்யுள் உறுப்புப் பெயர்களும் இவர் ஆக்கியன வல்ல என்றுகொள்க. குட்டம், எருத்து, தரவு, தாழிசை, அடக் கியல், போக்கு, வைப்பு முதலிய பெயர்களை நோக்கிக் கொள்க. இச்செய்யுளால் ஆகிய நூற்ருெகைகள் பல துறையினும் இந்நா ட்டு இவர்க்கு முந்தியே உண்மை இவர் கூறும் நூற்பெயர்களா னறியத்தகும். தனியே வருவது தனிநிலைச்செய்யுள் எனவும் பல தொடர்ந்து வருவது தொடர்நிலைச்செய்யுள் எனவுங் கூறுவர்.

தனி நிலைச் செய்யுளால் திருமுருகாற்றுப்படை முதலியன போலும் எனவும், தொடர் நிலைச் செய்யுள் வேறு வேருக வந்து ஒரு தொகுதிப்பட்டுத் தொகை நிலைச்செய்யுளாதற்குரியஎட்டுத் தொகையிற் பாடல் போல்வன எனவும் இருவகைப்படும். இதன் உண்மையைச் "செய்யுண் மொழியால்" (தொல். செய்யுளி. 236) என்ற சூத்திரவுரையில் நச்சினர்க்கினியர் "அவை வேறுவேருக வந்து ஈண்டியதொகை நிலைச் செய்யுள் என்றுணர்க." "அவை நெடுந்தொகை முதலியதொகை எட்டுமாம்" எனக் கூறியது கொண்டுணர்க. இவற்ருல், பத்துப்பாட்டு தனி நிலைச்செய்யுட் டொகை எனவும் நெடுந்தொகை முதலியன எட்டும் தொகை நிலைச் செய்யுட்டொகை எனவும் வகுத்துக் கொண்டது காணலாம்.

இனி அறம், பொருள், இன்பம் என்னுமிவற்றுள் ஒன்று பற்றியும், பல பற்றியும் வெண்பா என்னும் ஒரு பாவகையிற் பலர் செய்த நூல்கள் பதினெண்கீழ்க் கணக்கெனத் தொகுக்கப் படுதல் காண்க. இங்குக் குறித்த முப்பத்தாறு நூல்களுட் சிற்சில செய்யுட்களல்லது மற்றெல்லாம் இத் தொல்காப்பியனார்க்குப் பிந்தியனவேயாம். இதனுல் இவ்வாசிரியர் கூறும் இலக்கணமெல்லாம் இவர் தமக்கு முந்திய இலக்கியங்களைக் கொண்டுகூறியனவன்றி வேருகா.

"நிலத்தொடு முந்துநூல் கண்டு"

எனப் பாயிரத்துட் கூறியதல்லாமல் இவர்,

"இன்றி யென்னும் வினை . . . . . . . .
தொன்றியன் மருங்கிற் செய்யுளுளுரித்தே"

(உயிர்மயங். 35)

"ஔகார விறுதி . . . . . . .செவ்விதென்ப
சிறந்திசினேரே" (உயிர்மயங். 93)

"முன்னென் கிளவி முன்னர்த் தோன்று
மில்லென் கிளவிமிசை றகர மொற்ற
றேல்லியன் மருங்கின் மரீஇய மரபே"

(புள்ளிமயங். 60)

" வழங்கியன் மருங்கி னுணர்ந்தன ரொழுக்க
னன்மதி நாட்டத் தென்மனர் புலவர் "
(குற்றியலுகரப். 78)

" பிண்டப் பெயரு மாயிய றிரியா
பண்டியன் மருங்கின் மரீஇய மரபே "
(வேற்றுமை மயங். 7)

" இதன திதுவிற் றென்னுங் கிளவியு
மதனைக் கொள்ளும் பொருள்வயி னுறு
........................................
தோன்னெறி மரபின தோன்ற லாறே " (ஷ. 27)

" அளவு நிறையு மவற்றொடு கொள்வழி
யுளவென மொழிப வுணர்ந்திசி னோரே " (ஷ. 34)

" இடை நிலைப் பாட்டே,
தரவகப்பட்ட மரபின வென்ப "
(தொல். செய்யுளி. 134)

" பா நிலை வகையே கொச்சகக் கலியென
நூனவில் புலவர் நுவன்றறைந் தனரே " (ஷ. 155)

" மூன்றுறுப் படக்கிய தன்மைத் தாயிற்
றோன்றுமொழிப் புலவரது பிண்ட மென்ப "
(ஷ. 172)

" காமப் புணர்ச்சியு மிடந்தலைப் பாடும்
...................................
மறையென மொழிதன் மறையோ ராறே " (ஷ. 186)

" பாணன் கூத்தன் விறலி பரத்தை
.......................................
தோன்னெறி மரபிற் கற்பிற் குரியர் " (ஷ. 190)

" அகன்றுபொருள் கிடப்பினு மணுகிய நிலையினு
.......................................
மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின் "
(ஷ. 210)

" இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்
.......................................
தோலென மொழிப தொன்னெறிப் புலவர் "

"சேரி மொழியாற் செவ்விதிற் கிளந்து
.......................................
புலனென மொழிப புலனுணர்ந்தோரே"
(தொல். செய்யுளி. 241)

"ஒன்றறி வதுவே யுற்றறி வதுவே
.......................................
ஆறறி வதுவே யவற்றொடு மனனே
நேரிதி னுணர்ந்தோர் நெறிப்படுத் தினரே"
(தொல். மரபி. 27)

"குரங்கி னேற்றினைக் கடுவ னென்றலும்
.......................................
முடிய வந்த வவ்வழக் குண்மையிற்
கடிய லாகா கடனறிந் தோர்க்கே" (ஷை. 68)

"மரபுநிலை திரியா மாட்சிய வாகி
.......................................
முதலும் வழியுமென நுதலிய நெறியின"
(தொல். மரபி. 93)

"ஒத்த சூத்திர முரைப்பிற்............
.......................................
நூலென மொழிப நுணங்கு மொழிப் புலவர்"
(ஷை. 98)

"மறுதலைக் கடாஅ மாற்றமு.....
.......................................
துணிவொடு நிற்ற லென்மனார் புலவர்" (ஷை. 104)

"ஒத்த காட்சி யுத்திவகை......
.......................................
நுனித்தகு புலவர் கூறிய நூலே" (ஷை. 110)

"தொழிற் பெயர்..................
............என்மனார் வயங்கியோரே" (விளிமரபு. 22)

"சொல்லெனப்படுப..................
..................அறிந்திசினோரே" (பெயரியல். 4)

"செயப்படு பொருளை..............
...............வழக்கியன் மரபே" (வினையியல். 47)

" முதல் கருவுரிப் பொருள் ............

....................................

பாடலுட் பயின்றவை நாடுங் காலை" (அகத்திணை. 3)

" முதலெனப் படுவது...............

...............இயல்புணர்ந்தோரே" (ஷை. 4)

" மாயோன் மேய..................

....................................

சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"

(அகத்திணை. 5)

" திணைமயக்குறுதலும்...............

....................................

புலனன் குணர்ந்த புலமை யோரே" (ஷை. 12)

" வெறியறி சிறப்பின்..............

....................................

சொல்லப் பட்ட வெழுமூன்று துறைத்தே"

(ஷை. புறத். 5)

" முழு முத லரணம்...............

அனைநெறி மரபிற் றாகு மேன்ப" (ஷை. 10)

" மாத்திரை யெழுத்தியல்.......

....................................

வல்லிதிற் கூறி வகுத் துரைத்தனரே"

(தொல். செய்யுளி. 1)

" ஆங்கனம் விரிப்பின்............

பாங்குற வுணர்ந்தோர் பன்னுங் காலை" (ஷை. 51)

" இடையும் வரையார் தொடையுணர் வோரே"

(ஷை. 69)

" நிறையவ ணிற்பி................

...............வாய்மொழிப் புலவர்" (ஷை. 75)

" எழுத்து முதலா.................

....................................

யாப்பென மொழிப யாப்பறி புலவர்" (ஷை. 78)

"நாற்பெய ரெல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர்"
(தொல். செய்யுளி. 79)

"ஒரு சீரிடையிட் டெதுகை.........
...................புலவ ராறே" (ஷ. 98)

"சொல்லிய தொடையொடு.......
..........................
சொல்லியற் புலவரது செந்தொடை யென்ப"
(ஷ. 100)

"மெய் பெறு மரபிற்..........
...................உணர்ந்திசினோரே" (ஷ. 101)

"அவையடக் கியலே
...........வழிமொழிந்தனரே" (ஷ. 113)

எனத் தொல்லாசிரியரை எடுத்தாளுந் தொடர்களான் இவ்வுண்மை உணரலாம். ஈண்டு எடுத்தாளப்பட்டார் பலராகார் என்றும் இவர்க்கு முற்பட்ட அகத்தியனார் ஒருவரே ஆவரென்றுங் கூறின் அது மேற்காட்டிய "தொன்னெறிப் புலவர்" "தொன்று மொழிப் புலவர்" "நாற்பெயரெல்லை யகத்தவர் வழங்கும் யாப்பு" "யாப்பறி புலவர்" "வழங்கியன் மருங்கி னுணர்ந்தனர்"

எனவரும் இவர் கூற்றொடு முரணுதல் காண்க. இவ்வாறு தொன்றியற் புலவரை இவர் உடன்படுதற்கியையவே "தொன்றியன்மருங்கிற் செய்யுள்" எனவும் "தொல்லியன் மருங்கின் மரீஇய மரபு" எனவும், "பண்டியன் மருங்கின் மரீஇய மரபு" எனவும், தொன்னெறி மரபிற் கற்பிற்குரியர்" எனவும், ஆங்காங்குக் கூறுதல் மேலெடுத்துக் காட்டியவற்றுட் கண்டு கொள்க. இப்பண்டைப் புலவர் செய்த நூல் பல வுண்மை "நுனித்தகு புலவர் கூறிய நூலே" "நூல்நவில் புலவர் நுவன்றறைந்தனரே" "புல னன்குணர்ந்த புலமை யோரே"

"வல்லிதிற் கூறி வகுத்துரைத்தனரே"
"நேரிதி னுணர்ந்தோர் நெறிப்படுத் தினரே"
"புலனுணர்ந்தோரே"

எனவரும் தொடர்கள் நோக்கி உய்த்துணர்ந்து கொள்க.

இந்நூல்கள்,

"தொகுத்தல் வகுத்த றொகைவிரி மொழிபெயர்த்
ததர்ப்பட யாத்தலோ டனைமர பினவே" (மரபி. 97)

என்பதனல் முதனூலும், தொகையும், விரியும், தொகைவிரியும், மொழிபெயர்ப்புமாகிய வழிநூலுமாம் என்று துணியலாம். இவற்றுள்,

"வினையி னீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்" (மரபி. 94)

என்பதனல் வேதமும், தாமே தலைவர் ஆவாரும், அத்தலைவரை வழிபட்டுத் தலைவர் ஆயினருஞ் செய்த நூல்களும் முதனூல் என்ப. தாமே தலைவர் ஆயினர் முற்காலத்துத் தமிழ் நூல் செய்திலர் என்பதும், தலைவர் வழிநின்று தலைவராகிய அகத்தியர் செய்தது முதனூல் என்பதும் பேராசிரியர் கொள்கை. முந்து நூல் எனப்பட்டன தமிழில் முற்காலத்து இருந்து வீழ்ந்தன வென்று பிறர் கொள்வது கூறி "அது வேத வழக்கொடு மாறு கொள்வார் இக்காலத்துச் சொல்லினும் இறந்த காலத்துப் பிற பாசண்டிகளும் மூன்று வகைச் சங்கத்து நான்கு வருணத் தொடுபட்ட சான்றோருங் கூறுர்" என்று பேராசிரியர் தங் கருத்து வெளிப்படுப்பர்.

"உயர்ந்தோர்க் குரிய வோத்தி னன" (அகத். 31)

என்னும் அகத்திணைச் சூத்திரத்து "வேதத்தினற் பிறந்த வட நூல்களுந் தமிழ் நூல்களும் அந்தணர், அரசர், வணிகர், உயர்ந்த வேளாளர் இவர்க்குரிய" என்று நச்சினர்க்கினியர் கூறி அவ் வேதத்தின்டியாகத் தோன்றியன அகத்திய முதலாகிய தமிழ் நூல்களென்று வெளிப்படுப்பர். விளம்பி நாகனர் நான்மணிக் கடிகையுள்,

"தொன் மரபின் வேத.........பாட்டுள" (52)

என்பதனற் றமிழில் வேதப்பொருள் பொருந்துவனவாகிய பாடல்கள் உளவென்று உடன்படுதல் காண்க. வழிநூல் இலக்கணங் கூறிய இடத்துத் தொகையும், வகையும், தொகைவிரியும் உடன்பட்டவாற்றுற் றொகுத்தற்கு விரித்தநூலும், விரித்தற்குத் தொகுத்த நூலும், தொகுத்து விரித்தற்கு விரித்துத் தொகுத்த நூலும், முதனூல்களாய்த் தமிழிலிருந்தனவென்று

ஒருதலையாகத் துணியலாம். வழிநூலுண் மொழிபெயர்ப்பு உடன் பட்டவாற்றால் தமிழர் வடநூலில் வேத முதலியவற்றை முதனூலாகக் கொண்டு போற்றினர் என்பதும் நன்குணரலாகும். இதற்கிணங்கவே இத்தொல்காப்பியனார் நெறிகடைப் பிடித் தொழுகிய தெய்வப் புலமைத்திருவள்ளுவனாரும்,

> " வேதப் பொருளை விரகால் விரித்துலகோ
> ரோதத் தமிழா லுரைசெய்தார் "
>
> (திருவள். மாலை. 42)

இதன் கண் " தமிழால் உரை செய்தார் " என்பதால் வேதம் தமிழல்லாத மொழியினுதல் துணியலாம். இவ்வாறு வேதப் பொருள்கள் பல தமிழில் இத் தொல்காப்பியனார்க்கு முன்னரே மொழிபெயர்க்கப்பட்டுள்ளனவென்பது,

> " உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினுஞ்
> செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்றெனத்
> தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு "
>
> (தொல். களவி. 22)

என்புழி உயிரினும் நாண் சிறந்தது ; அந்நாணினுங் குற்றந்தீர்ந்த கற்பினை நன்றென்று மனத்தாற் காணுதல் சிறந்தது என்பது தொல்லோர் கிளவியாகக் கூறியதனாலும், இதனையே ஆளுடையடிகள்,

> " தாயிற் சிறந்தன்று நாண்டைய லாருக்கந் நாண்டகை [சால்
> வேயிற் சிறந்தமென் றோளிதிண் கற்பின் விழுமிதன்றீங்
> கோயிற் சிறந்துசிற் றம்பலத் தாடுமெங் கூத்தப்பிரான்
> வாயிற் சிறந்த மதியிற் சிறந்த மதிநுதலே "
>
> (திருக்கோவை. 104)

என்னுந் திருக்கோவையாரில் எடுத்தோதி இக்கொள்கைகள் கூத்தப்பிரான்வாயிற் சிறந்த நூலிற் (மதியின்) சிறந்தன என வெளிப்படுத்தலானும் இவ்வுண்மை உணரலாம். இன்னும், கற்பியலுள்,

> " தந்தைய ரொப்பர் மக்களென் பதனா
> லந்தமில் சிறப்பின் மகப்பழித்து நெருங்கலும் "
>
> (தொல். கற்பி. 6)

என்புழி "தந்தையரை யொப்பர் என்னும் வேதவிதிபற்றி முடிவில்லாத சிறப்பினையுடைய மகன்" என நச்சினார்க்கினியர் கூறுதலான் வேதக்கருத்துக்கள் தமிழிற் சென்றுதொட்டுப் பயின்றன என்பது துணியலாகும். இவற்றிற்கியையவே,

"உழக்குமறை நாலினு முயர்ந்துலக மோதும்
வழக்கினு மதிக்கவினி னும்மரபி னாடி
நிழற்பொலி கணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கட்
டழற்புரை சுடர்க்கடவு டந்ததமிழ் தந்தான்"

(கம்பரா. அகத்தியப். 41)

எனக் கம்பநாடர் கூறுதல் காணலாம்.

இனி இவர் குறித்த வழிநூல்களை ஆராயுமிடத்து அவற்றின் பெயர்கள் உணரப்படாவாயினும், அவை இன்ன இன்ன வகைமைய என்று துணிதற்கு ஏற்ற கூற்றுக்கள் இவர் சூத்திரங்களுள் ஆங்காங்குப் பயின்றுள்ளன காணலாம். அந்நூல்கள்,

"மரபேதானும்,
நாற்சொல் லியலான் யாப்புவழிப்பட்டன"

(தொல். செய்யுளி. 80)

என்பதனால் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் நால்வகைச் சொற்களையும் அகம் புறம் என இவர் வகுத்துக்கொண்ட பொருள்வகைமையினையுங் கொண்டு, இவர் செய்யுளியலிற் கூறிய செய்யுள் வகைமைக்கு இயையும்படி யாத்தன என்றும், அவை இவர் காலத்தே பலதிறப்பட்டன என்றுந் துணியலாம். அந்நூல் வகைமையுள் மிகவும் பழமைத்தாகக் காணப்படும் பரிபாடல் நூல் இவர் நூல் செய்கின்ற காலத்துக் காமங் கண்ணிய நிலைமைத் தாதலன்றிக் கடைச்சங்க காலத்துப் பரிபாடல் போலக் கடவுள் வாழ்த்து முடையதாயில்லாமை இவர் பரிபாடற்குக் கூறிய இலக்கணம் பற்றி நன்குணரலாகும்.

"கொச்சக மராகஞ் சுரிதக மெருத்தொடு
செப்பிய நான்குந் தனக்குறுப் பாகக்
காமங் கண்ணிய நிலைமைத் தாகும்"

(தொல். செய்யுளி. 121)

இச்சூத்திரத்தான் பரிபாடல் காமப்பொருளைக் கண்ணிய நிலைமைத்தாக வருமென்பதே இவர்க்குடன்பாடாதல் காண்க. இதனால், கடவுள் வாழ்த்துக் கூறிய கடைச்சங்க காலப் பரிபாடற் செய்யுட்டொகை நூலுக்கு இவர் இலக்கணம் முந்தியதாதல் ஒருதலையாம் என்க. இவர் இலக்கணத்தோடு கடைச்சங்க காலத்துப் பரிபாடல் பொருந்தாமை கண்ட பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் "காமங் கண்ணிய" என்புழிக் கண்ணிய என்பதனாற் கடவுள் வாழ்த்து வருமென்றும் அது காமங் கண்ணியே வருமென்றுங் கொண்டார். காமங் கண்ணாத கடவுள் வாழ்த்தும் இப்பரிபாடலுட் காண்டலால் இவர் கருத்தொடு பரிபாடற் பகுதி சில இயையாமை கண்டுகொள்க. காம வகையுளாதலால் மலை விளையாட்டு, புனல் விளையாட்டு, வேறே கூற வேண்டாவென்க. இளம்பூரணர் இச்சூத்திரவுரையில் அறத்தினும் பொருளினும் பரிபாடல் வாராதென்று கொண்டு,

"வாழ்த்தியல் வகையே நாற்பாற்கு முரித்தே"

(தொல். செய்யுளி. 109)

எனச் சிறப்பு வகை ஓதினமையான் நான்கு பாவினும் பரிபாடல் வெண்பா யாப்பிற்றாதல் கடவுள் வாழ்த்தாயும் வரப்பெறும் என்றார். இளம்பூரணர் இப்பரிபாடற்கு எடுத்துக் காட்டிய பழஞ் சூத்திரங்கள் பலவற்றினும் கடவுள் வாழ்த்துக் கூறப்படாமையும் அவர் காட்டிய,

"அதுதான்
மலையே யாறே யூரே யவற்றி
னிலைபெறு மரபி னீங்கா தாகும்".

என்னுஞ் சூத்திரம் காம விளையாட்டிற்கு இடமே கூறுவதும் அவர் உரை நோக்கிக் கண்டுகொள்க. உரைகாரர்கள் கடவுள் வாழ்த்தைக் கடைச் சங்கப் பரிபாடலுட் கண்டு அதற்கிலக்கணம் தொல்காப்பியத்துள் அமைத்தற்குப் பல்வகையானு முயன்று இடர்ப்படுதல் இதனால் உணரலாகும். இவ்வாசிரியர்க்கு இவ்வுரைகாரர் கொள்கை கருத்தாயின் அதற்கேற்றபடி கடவுள் வாழ்த்து என்ற தொடரையும் இப்பரிபாடல் இலக்கணச் சூத்திரங்களிற் பெய்து வைப்பது இயலாததொன்று அன்று என்க. இப்போதுள்ள பரிபாடலுள், காமங் கண்ணாது கடவுள் வாழ்த்தாயே வந்தன,

"ஆயிரம் விரித்த வணங்குடை யருந்தலை"

என்பது முதலிய பாடல்களிற் கண்டுகொள்க.

"ஆயிரம் விரித்த"

என்னும் பாட்டுள்,

"காமரு சுற்றமொ டொருங்கு நின்னடியுறை
யாமியைந் தொன்றுபு வைகலும் பொலிகென
வேமுறு நெஞ்சத்தேம் பரவுதும்
வாய்மொழி முதல்வநின் றாணிழ லெழுதே"

எனக் காமங் கண்ணாது கடவுட் பரவுதலாகவே வருதல் கண்டு கொள்க. தொல்காப்பியனார் இப்பாடற்குப் பிற்பட்டவராயின் தம் இலக்கணத்து இங்ஙனங் காமங் கண்ணாத கடவுள் வாழ்த்து வருதற்கும் இலக்கணம் கூறியே செல்வர் என்க. பரிபாடலுண் மிகப் பயிலாது இக்காமங் கண்ணாத கடவுள் வாழ்த்து அருகிச் சிலவே வருதலான், கால வகையாற் புதியன புகுந்தன இவை யென்று கொள்ளலாம்.

கடவுள் வாழ்த்திற் குறித்த தெய்வங்கள் அவ்வந் நிலங்களில் மக்கள் கோயில் படைத்து வடிவமைத்து வழிபடுங் கடவுளரே என்பது மக்கட்கின்றியமையாத நிலனும் பொழுதும் என இரண்டையே "முதல்" என்று கொண்டு அந்நிலங்களிற் கருப்பொருள்களில் ஒன்றாகத் தெய்வத்தைக் கூறிய அகத்திணையியற் சூத்திரத்தால் (20) உணர்க. இதற்குப் பின்னர்க் கடைச்சங்கத்து நூல் செய்த நக்கீரர் முருகக் கடவுட்குப் படைவீடு பல கூறுதலானும் கோயில் உண்மை உணர்க.

இனி, ஆற்றுப்படை நூல்கள் இவர்க்கு முன்னே உண்டென்பது,

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியு
மாற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கம்"

(தொல். புறத். 36)

எனப் புறத்திணையியலில் வருதலானும்,

"முன்னிலை சுட்டிய வொருமைக் கிளவி
பன்மையொடு முடியினும் வரைநிலை யின்றே
யாற்றுப்படை மருங்கிற் போற்றல் வேண்டும்"

(தொல். எச்சவிய. 66)

என எச்சவியலிற் கூறுதலானும் அறியப்படுவது. மேற்காட்டிய சூத்திரப் பகுதிகளாற் கூத்தர், பாணர், பொருநர், விறலி என்பாரைத் தாம் பெற்ற வளத்தை அறிவுறுத்திச் செல்வ மக்கள் பால் ஆற்றுப்படுத்தலல்லது, புலவர் விரதியரைத் தெய்வங்கள் பால் ஆற்றுப்படுத்தல் கூறுதல் இவர்க்கு முந்திய வழக்கு இல்லை என்று உய்த்துணரலாகும். "முருகாற்றுப்படை என்பதற்கு முருகன்பால் வீடு பெறுதற்குச் சமைந்தான் ஓரிரவலனை ஆற்றுப்படுத்ததென்பது பொருளாகக் கொள்க" என (புறத். 36) நச்சினார்க்கினியர் உரைத்தலான் இம்முருகாற்றுப்படை தொல்காப்பியர் இலக்கணத்துக்குப் பிந்தியதேயாமென்று துணியப்படும். இவ்வாற்றுப்படை முருகக் கடவுள் அருள் பெற்றான் ஒருவன் அருள் பெறாதான் ஒருவனை அக்கடவுள்பால் ஆற்றுப் படுத்தியதாகக் கொள்ளலாம். இதனை ஐயனாரிதனார் வெண்பா மாலையில்,

"வெறிகொ ளறையருவி வேங்கடத்துச் செல்லி
னெறிகொள் படிவத்தோய் நீயும்—பொறிகட்
கிருளீயு ஞாலத் திடரெல்லா நீங்க
வருளீயு மாழி யவன்"

(பு. வெ. மா. 9, 42)

எனக் கூறுதலானும் உணரலாம். இதனுள் "நீயும் இடரெல்லாம்" "நீங்க அருளீயும்" என்றதனால் ஆற்றுப்படுத்தவன் முனும் அருள் பெற்றவனாதல் தெரியலாம். "நெறிகொள் படிவத்தோய்" என்பதனால் ஆற்றுப்படுக்கப்பட்டவன் விரதியனாதல் அறியலாம். நச்சினார்க்கினியர் மேற்படி புறத்திணைச் சூத்திரத்துரையில் "ஆற்றிடைக் காட்சி யுறழத்தோன்றி" என்பதற்கு "இல்லறத்தைவிட்டுத் துறவறமாகிய நெறியிடைத்து நிற்றல் நன்றென்றுங், கண்ட காட்சி தீதென்றும் மாறுபடத் தோன்றுகையினாலே" எனக்கூறி இவ்வாறு வரும் ஆற்றுப் படைக்கு இலக்கணம் இச்சூத்திரப் பகுதியே யென்று வலிந்து துணிவர்.

இனி,

"இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்
பரந்த மொழியா னடிநிமிர்ந் தொழுகினுந்
தோலென மொழிப தொன்மொழிப் புலவர்"

(செய்யுளி. 238)

என்பதனாற் பழைய கதையை இனிய சொற்களாலாகிய செய்யுளில் ஒரு தொடர் நிலைப்படச் செய்த பெரு நூல்கள் இவர்க்கு முன்னமே இத்தமிழில் உண்டென்று உணரப்படுவது. இப்பழங் கதையே உரை நடை கலந்த செய்யுள்களால் ஒரு தொடர்நிலையாகச் செய்யப்படின் தொன்மை என்ற பெயரால் இவர்க்கு முன்னே இந்நாட்டில் வழங்கினரென்று உணரலாம். உரையுஞ் செய்யுளுங் கலந்த நூலைச் சம்பு என்பர் வடநூலார். இஃது அதுபோல்வதாகும். இவற்றால் தமிழில் நெடுங்காலத்திற்கு முன்னே பல பழங்கதைகள் இருந்தனவென்றும், அக்கதைகளைத் தனியே செய்யுளினும், உரையுஞ் செய்யுளுமாகிய வகையினும் வைத்து நூல் செய்தல் வழக்காம் என்பதும் துணியலாம். பிற்காலத்து உண்டாகிய பெருந்தேவனார் பாரதமும், தகடூர் யாத்திரையும் இத்தொன்மை யிலக்கணப்படி செய்யப்பட்டதென்பர். தோல் என்பது வடநூல் வால்மீகி ராமாயணம் போன்ற ஒரு தமிழ்ச் சரிதச் செய்யுள் நூலேயாம். தொன்மை தோல் இவை இரண்டும் உயிரீற்றவாயே வருமென்பர்.

இனி, அறம் பொருள் இன்பங்களை ஒரு சேரவும், தனித் தனியாகவும் வைத்து அவற்றை அடி பல்காத செய்யுட்களில் (வெண்பாவும் வெண்பாவினமும்) பாடிய அம்மை நூல்கள் பல இவர்க்கு முன்னே உண்டென்பது,

"வனப்பியல் தானே வகுக்குங் காலைச்
சின்மென் மொழியாற் றாய பனுவலோ
டம்மை தானே யடிநிமிர் பின்றே" (செய்யுளி. 235)

என வருதலானறியலாம். திருவள்ளுவர் செய்த முப்பால் முதலாக வருங்கீழ்க்கணக்குப் பதினெட்டும் இவ்விலக்கணத்தான் அமைந்தனவாம். இனி,

"விருந்தே தானும்
புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" (செய்யுளி. 239)

என்பதனாற் பழங்கதை யல்லாது தாமே ஒரு கதையைப் புதிதாகப் படைத்துக்கொண்டு அதைச் செய்யுணூலில் யாத்து வழங்குவதும் இவ்விலக்கணத்துக்கு முன்னே உண்டென்று தெரியப்படுவது. இனி,

> "ஞகாரை முதலா னகார வீற்றுப்
> புள்ளி யிறுதி யியைபெனப் படுமே" (செய்யுளி. 240)

என்பதனால் ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள, என்னும் பதினொரு புள்ளியும் தனித்தனி ஈற்றில் வைத்து ஒரு பொருட்டொடர்பிட்டுச் செய்யப்பட்ட பல நூல்கள் இவர்க்குமுன் இருத்தல் அறியலாம். இப்பதினொரு வகைய நூல்களும் இப்போது விழ்ந்தன. இவ்விலக்கண நெறி தழுவி னகரப்புள்ளி ஒன்றையே இறுதியில் வைத்துச் செய்யப்பட்ட பொருட்டொடர்நிலைச் செய்யுள் நூல்கள் சிலப்பதிகாரமும், மணிமேகலையுமாம். இவ்வித நூல்களை இயைபு என்னும் பெயரால் முன்னோர் வழங்கினர் என்பது இவர் சூத்திரத்தால் அறியலாம்.

இவையன்றி இசைச் செய்யுணூலும், நாடகச் செய்யுணூலும் வேறுவேறு கட்டளைகளை யுடையனவாய்ப் பகுக்கப்பட்டு இந்நாட்டில் இவர்க்கு முன்னே வழங்கின என்பது,

> "சேரி மொழியாற் செவ்வி திற்கிளந்
> தோதல் வேண்டாது குறித்தது தோன்றிற்
> புலனென மொழிப புலனுணர்ந் தோரே" (ஷை. 241)

எனவும்,

> "ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத் தடக்காது
> குறளடி முதலா வைந்தடி யொப்பித்
> தோங்கிய மொழியா னுங்ஙன மொழுகி
> னிழைபி னிலக்கண மியைந்த தாகும்" (செய்யுளி. 242)

எனவும் வருஞ் சூத்திரங்களால் அறியப்படுவது. இவற்றுள் இழைபென்று இசையைக் கூறியது: பல சிறு துணுக்குகளாக வுள்ள பஞ்சியை ஒரு சமனிலையில் மெல்லிதாகக் கண்கொளக் காட்டி இழைப்பது போலப் பல ஒலியணுத்திரள்களை ஒரு நெறிப்படுத்திக் குரலால் மெல்லிதாக இழைத்துச் செவியும்மன முங் கவரச் செய்தலினாற் பெயராயிற்றென்றுணரலாம். இவ்வாறே நிகழ்ந்ததொன்றைப் பின்னரும் தம்புலன்கொளத்தோற்

றஞ் செய்தலான் நாடகம் புலன் என்ற பெயர் எய்திற்றென்றும் உணரலாம். இவ்விரு பெயருமே பழந்தமிழர் இசை வன்மையையும், நாடக வன்மையையுங் காட்டுமென்க. நாடகம் என்பது வடமொழிப் பெயராதலும் அதற்குத் தமிழர் வழங்கிய பெயர் புலன் என்பதும் இதனானே உணர்க. இந்நூல்கள் மிகவும் இத் தென்னாட்டில்மலிந்தன என்பது இந்நூல்வல்ல பாணர், கூத்தர், பொருநர், விறலியர் இவரையே நன்குபாராட்டிய நூல்களானும், அவர்க்கு வழங்கிய பெருங்கொடையானும் இனிதுணரலாகும். இத்தகைய பழம் பெருநூல்கள் வீழ்ந்தன என்று கேட்பதே ஒருவர்க்கு ஆருத்துயர் விளைக்கும்.

இனி, எளிதிற் பொருள் தோன்றாது சொற்களால் மறைய வைத்துக் கூர்ந்து நோக்கின் இன்ன பொருளதென்று அறியக் கூடிய வகையில் இக்காலத்துப் பிதிர் (விடுகதை) போன்ற ஒரு வகை நூல் தமிழில் உண்டென்பதும் அது பிசி என்னும் பெயர் பெறுமென்பதும்,

"ஒப்பொடு புணர்ந்த வுவமத் தானுந்
தோன்றுவது கிளந்த துணிவி னானு
மென்றிரு வகைத்தே பிசிவகை நிலையே"

(செய்யுளி. 176)

என்பதனால் அறியப்படுவன. "பிறை கவ்வி மலை நடக்கும்" என்பது யானை என உவமத்தாற் கொள்ளவைத்தலும்,

"நீராடான் பார்ப்பா னிறஞ்செய்யா னீராடி
லூராடு நீரிற்காக் கை"

என்பது நெருப்பெனத் தோன்றுவது கிளந்த துணிவினாற் கொள்ளவைத்தலுங் கண்டுகொள்க. இது பாட்டுவடிவின்றி உரை நடை வடிவில் வருமென்றலும் உண்டு.

இவையன்றிப் பல நீதிகளையும் ஒழுக்கங்களையும் உலகியல் களையும் நன்கமைத்து நெடுநாள் தொட்டுப் பெரியோரால் வழங் கப் பெற்றுவரும் பழமொழிகளை வைத்து அவற்றை விளக்கிக் காட்டிய முதுசொல் நூல்கள் இந்நாட்டில் முன்னரே யுண்மை,

"நுண்மையுஞ் சுருக்கமு மொளியுடை மையு
மென்மையு மென்றிவை விளங்கத் தோன்றிக்

> குறித்த பொருளை முடித்தற்கு வரூஉ
> மேது நுதலிய முதுமொழி யென்ப" (செய்யுளி. 177)

என்பதனுலறியலாம்.

ஒரு நாட்டில் அறிவு வளர்ச்சியிற் கட்டளையில் அமைந்த செய்யுட்கள் யாக்கப்படுதற்கு முன்னே வழக்கின்கண் முது சொல்லே எதுகையோ மோனையோ அமைந்து முற்பட வரும் என்பது அறிவாளர் அறிந்ததொன்று. அதுவே செய்யுளாகிய நறுங்கனிமரம் தழைத்து உதவுதற்கு மூலம் எனக் கொள்வது நன்கு பொருந்தும். இம்முதுசொல் தொல்காப்பியனுர்க்கு முன்னரே நூல்கள் யாத்தற்கு உதவியாய் உள்ளன என்பது இதன் நுட்பமும், சுருக்கமும், ஒளியுடைமையும் விளங்கத்தோன்ற நின்று குறித்த பொருளை ஏதுவால் முடித்தற்கு வருமென்று இம்முதுமொழி யிலக்கணம் இவர் கூறியவாற்ருல் நன்குணரலாம். இதற்குக் காட்டிய பழம் பாடல்,

> " உழுத வுழுத்தஞ்செய் யூர்க்கன்று மேயக்
> கழுதை செவியரிந் தற்ருல்—வழுதியைக்
> கண்டன கண்ணீ ருகுப்பப் பெரும்பணைத்தோள்
> கொண்டன மன்னே பசப்பு "

என்பது. இதன்கட் பின்னடிகளிற் கூறிய பொருளை முன்னடிகளிற் கண்ட பழமொழியால் விளக்கிக் காட்டுதல் கண்டு கொள்க. இவையன்றி,

> " எழுத்தொடுஞ் சொல்லொடும் புணரா தாகிப்
> பொருட் புறத்ததுவே குறிப்புமொழி யென்ப "
> (செய்யுளி. 179)

என்பதனுற் குறிப்பினுற் பொருள் தோன்றி நின்று சொல்லாற் பொருள் தோன்ருவாறு

> " குடத்தலையர் செவ்வாயிற் கொம்பெழுந்தார் கையி
> னடக்கிய மூக்கின ராம் "

என்பது குஞ்சரம் என்ருற்போலச் சொல்லிசைவு என்று சொல்லப்படாது பொருளிசைவென்று பெயர் சொல்லக்கூடிய செய்யுள்கள் அடிவரையறையின்றி யாக்கப்பட்ட சில நூல்களும் இவர்க்குமுன் இருந்தன என்று தெரியலாம். இவையன்றி

இசையையே முதன்மையாகக் கொண்ட பாட்டிடைக் கலந்த பொருளவாகிப் பண்ணத்தியெனப் பெயரிய சில நூல்களும் இருந்தவாறு தெரியலாம். இவைகள் சிற்றிசையும் பேரிசையு முதலாக இசைத் தமிழில் ஓதப்படுவன என்பர் இளம்பூரணர்.

"அதுவே தானும் பிசியொடு மானும்" (செய்யுளி. 181) என்பதன்கண் பண்ணத்தி பிசியோடொக்குமென்று கூறுதலான் இப்பண்ணத்தி அடி நிமிராது சுருங்கிய அளவில் வருமென்று கருதினாராயிற்று.

"கொன்றை வேய்ந்த செல்வனடியை
யென்று மேத்தித் தொழுவோம் யாமே"

இது, பிசியோடொத்த அளவிற்றாகிப் பாலையா ழென்றும் பண்ணுக் கிலக்கணப் பாட்டாகி வருதலிற் பண்ணத்தியாயிற்று, என்பர் இளம்பூரணர். பௌத்தபாலி நூல்களில் இப்பண்ணத்தி என்ற சொல் வழக்கு நன்கு பயின்றுள்ளது. ஆண்டு இவ்விடத் திற் கேற்ற பொருள் இஃதென்று துணிதற்கு வாயிலாக இப் பெயர் வழங்கியுள்ளது. (பண்ணத்தி — The method of determining signification; History of Pali literature, page 345). ஒரு பொருளைப் பலதுறையால் விளக்கும் வாயில் பண்ணத்தி என்பதும் பௌத்த சமயத்தர் கருத்தாம். அறம் ஒன்றேனும் புத்தரும் பல்வகைப்படுத்து அதனையே கூறியுள்ள தைப் பண்ணத்தி முறை என்பர். அவைதாம் "நாலிரண" (செய்யுளி. 165) என்னுஞ் சூத்திரத்திற் றொகுத்துக் கூறியவற் றிற்கு வகுத்து இலக்கணங் கூறி, நிறுத்த முறையின் வேறாய் முன்னே தோற்றுவாய் செய்யாததாய் ஆண்டுக்கூறிய நூல் முதல் குறிப்பீறாகவுள்ள அறுவகைக்கும் இலக்கணங் கூறிய பின்னர், இப்பண்ணத்தி இலக்கணம் தனியே எழுதலால், இஃ தொன்றினை வேறு வைத்துத் தனியே இலக்கணங் கூறுதற் குடன்படாது "அது பிசியொடுமானும்" என்றும், அதனால் இவ்வகை ஆறாயினவன்றி ஏழாயின இல்லை என்றுந் தங் கருத் துப் புலப்படுத்தினாரென்றே நன்கு கொள்ளத்தகும். "பிசி யொடுமானும்" என்பது அடி சுருங்குதற் றன்மையாலென்று உரையாசிரியர் கொண்டார்.

"அடியிகந்து வரினுங் கடிவரை யின்றே"

(செய்யுளி. 183)

எனப் பண்ணத்திக்கு இலக்கணங் கூறுதலான் "பிசியொடு மானும்" என்றது அடிபற்றியதாகாது பொருள் பற்றியதே யாமென்பது துணியலாம். பேராசிரியரும் "பிசியொடும்" என்ற உம்மையாற் "பொருளொடு புணராப் பொய்ம் மொழி யோடும் பொருளொடு புணர்ந்த நகையோடும் (செய். 173) ஒக்கு மென்றுணர்க" என்பதனாற் பாட்டிடைக் கலந்த உரை நடை யென்பது இஃதென்று கொண்டு மேற்கூறிய அறுவகையுள் உரையின் கண்ணடங்குமாறு பொருட் பொருத்தங் கூறுதலும் ஈண்டைக்கு நோக்கிக் கொள்க. இவற்றாற் பண்ணத்தி என்பது மேற்கூறிய ஆறனுள் பொருள் இயைபால் ஒன்றுவதோ அன்றி அவற்றின் வேறாகிய இசைப்பாட்டாவதோ அறிஞரே ஆராய்ந்து கொள்வாராகுக. பேராசிரியர் "மெய்வழக்கில்லாத புறவழக் கினைப் பண்ணத்தியென்ப. இது எழுதும் பயிற்சியில்லாத புற உறுப்புப் பொருள்களைப் பண்ணத்தி என்ப என்பது. அவையா வன :—நாடகச் செய்யுளாகிய பாட்டுமடையும் வஞ்சிப்பாட்டும் மோதிரப்பாட்டும் கடகண்டும் முதலாயின" என்பர்.

இஃது இசைப்பாட்டாயின் இழைபு என்பதன் கண்ணும், நாடகச் செய்யுளாயின் புலன் என்பதன் கண்ணும் அடங்கும் என்று கண்டுகொள்க.

இனி, ஒருவனைப் பழித்தே வைத செய்யுணூல்களும், மகனைத் தாய் வைவதுபோல அன்பாற் பழிகரந்து மொழியுஞ் செய்யுணூல்களும் இருந்தன என்பதும், அவற்றிற்கு முறையே செம்பொருளங்கதம், பழிகரப்பங்கதம் என்பன பெயர்கள் என் பதும் மக்கள் மனப்பாங்கின் இவையும் நிகழ்தற்கு அமயம் பல உண்டாதலால் அவற்றிற்கேற்ப அவ்வகை நூல்கள் பல இருந் தன என்பதும்,

"அங்கதந் தானே யரிறபத் தெரியிற்
செம்பொருள் கரந்த தெனவிரு வகைத்தே"

(செய்யுள். 124)

என்பதனால் அறியப்படும். இனிச் செய்யுணூல்களேயன்றி உரைநடை நூல்களும் நான்கு வகையாகப் பகுப்புண்டு இந்நாட் டில் வழங்கின என்பது,

"பாட்டிடை வைத்த" (ஷை. 173)

என்னுஞ் சூத்திரத்தாலறியப்படுவது. பாட்டுச் சில வந்து உரை பெருகியனவும், பாவேயில்லாது உரையாக வந்தனவும், பொருளொடு புணராப் பொய்மொழியுள்ளனவும், பொருளொடு புணர்ந்த நகைமொழியுள்ளனவும் என உரைநடை நான்கு வகைப்படும் என்று இவர் கூறுவர். "பொய்மொழி" கூறுமிடத்து அஃறிணைப் பொருள்களாகிய வாயிற் பேசும் வலியில்லாத முயலும் நரியும் போல்வன தாமே பேசுவனவாகப் பிற் காலத்துக் கட்டிப்பேசிய பஞ்சதந்திரக்கதைகள் போன்ற நூல்கள் இவர்க்கு முன்னிருந்தன என்று துணியலாம். பிறர் கூறுஞ் 'சிறுகுரீஇ யுரை' இவர்க்கு முந்தியதோ பிந்தியதோ அறிகிலேன். இவர்,

"யான்யாம் நாமென வரூஉம் பெயரும்
.............................................
பாலறி வந்த வுயர்திணைப் பெயரே"

(தொல். சொல். பெயரி, 8)

என்பதனால் யான் முதலிய தன்மைச் சொற்கள் உயர்திணைக்கே வந்து அஃறிணைக்கு வாராமையுடன் பட்டாரேனும், பொருளியலுள் வழுவமைக்குமிடத்து,

"சொல்லா மரபி னவற்றொடு கெழீஇச்
செய்யா மரபிற் றொழிற்படுத் தடக்கியும்"

(பொருளி. 2)

என்பதனால் வார்த்தை சொல்லா முறைமையினையுடையவாகிய புள்ளும் மாவும் முதலியவற்றோடே அவை வார்த்தை கூறுவனவாகப் பொருத்தி அவை செய்தலாற்றாத முறைமையினையுடைய தொழிலினை அவற்றின் மேலேற்றியும் பக்கச் சொல் கூறுதலுண்டென்று விளக்குதலான் இவ்வாசிரியர் கருத்து நன்கறியலாகும். அஃறிணைப் பொருள்கள் பேசியனவாகக் கூறுமிடத்து அவை உயர்திணையவாகக் கருதப்படும் என்பது ஆசிரியர் கருத்தாம் என்க. செய்யுளியலுள்ளும்,

"ஞாயிறு திங்க ளறிவே நாணே
கடலே கானல் விலங்கே மரனே
.............................................

சொல்லுநபோலவுங் கேட்குந போலவும்
சொல்லியாங் கமைய மென்மனார் புலவர் ''
(தொல். செய்யுளி. 201)

என்பதனால் இவ்வழக்கம் தொல்லாசிரியரடிப்பட்டு வந்த தென்று கூறுதல் காண்க. ஒரு நாட்டின் அறிவு வளர்ச்சிக்கு இவ்வாறு கதைகள் வளர்ந்து நிலவுவது இன்றியமையாததே யாதலும் உணர்க. இவையன்றி '' மடன்மா கூறு மிடனுமா ருண்டே '' (களவி. 11) என்பதனால் ஆண்மக்கள் தலைவியரை வேட்டு மடன்மா ஏறுவதாகக் கூறும்-மடல் நூல்களும்,

'' ஊரொடு தோற்ற முரித்தென மொழிப '' (புறத். 30) என்பதனால் உலாப்புறச் செய்யுள் நூல்களும்,

'' குழவி மருங்கினுங் கிழவ தாகும் '' (தொல். புறத். 29) என்பதனாற் பிள்ளைத்தமிழ் நூல்களும் உரைகாரர் உடன்படுவர்.

இவ்வகையால் உரையும் பாட்டுமா யமைந்த நூல்வகைக்கு இயைந்த பொருள் கோடற்கண் தப்பாதுணர்தற்குரிய பொருள் கோள்முறை இவை என்று,

'' நிரனிறை சுண்ண மடிமறி மொழிமாற்
றவைநான் கென்ப மொழிபுண ரியல்பே ''
(தொல். எச்ச. 8)

என்னுஞ் சூத்திரத்தாற் கூறினார். இப்பொருள்கோள் முறைகளுட் கூறிய மொழிமாற்று என்பது,

'' மொழிமாற் றியற்கை
சொன்னிலை மாற்றிப் பொருளெதி ரியைய
முன்னும் பின்னும் கொள்வழிக் கொளாஅல் ''
(எச்ச. 13)

என்பதனால் ஓரடிக்கண் வருமென்பதும் இவர் செய்யுளியலிற் கூறும் மாட்டிலக்கணம் பல செய்யுள்களினும் பல அடிகளின் மேலுங்கீழும் வருமென்பதும் இவர் கருதினரென்று நச்சினார்க் கினியர் கூறுவர். மாட்டிலக்கணம் என்பது,

"அகன்று பொருள் கிடப்பினு மணுகிய நிலையினு
மியன்றுபொருண் முடியத் தந்தன ருணர்த்தன்
மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்"

(செய்யுளி. 210)

எனக் கூறுதலாற் சேய்மைக்கண்ணின்ற சொற்களைப் பொருளியைபு நோக்கி இயைத்து மாட்டிப் பொருள் கொள்ளுதல் என்பது உணரலாம். இவையன்றி உள்ளுறை யுவமப் பொருள்கோளும், இறைச்சியுட் பொருள் கோளும், சிலேடைப் பொருள்கோளும், பொருண்மறையாகிய குழூஉக்குறிப் பொருள்கோளும், பிற்காலத்தார் யூகிபாடை என்று வழங்கும் எழுத்துமறைப் பொருள்கோளும் இவர் உடன்படுவர், "தொன்னெறிமொழி வயி னாகுநவும்" (தொல். எச்ச. 53) என்பது "குன்றேறுமா" (i) குன்று ஏறுமா (ii) குன்று ஏறு ஆமா என்றாற் போலச் சொற்சிலேடையாய் வருவன என்பர் தெய்வச்சிலையார். அவர் மெய்ந்நிலை மயக்கம் பொருட் சிலேடை யென்பர். (எச்ச. 53) மந்திரப் பொருள்வயி னாகுந-பொருள் மறையும் (code words) எழுத்து மறையும் (code letter) ஆவன. இவை இவ்வாறு வழங்குமென்பது இதனிறுதியிலுள்ள எழுத்துமறை யநுபந்தத்திற் கண்டுகொள்க. தெய்வமொழித் தொழிந்த கருப்பொருள்களால் விசேடிக்கப்பட்டவிடத்து எடுத்துக்கொண்ட பொருளின் (விசேடியத்தின்) நிகழ்ச்சிக்கேற்றவாறு விசேடணத்தைஉவமையாகக் கருதவைத்துக் கூறுவதை உள்ளுறை யுவமமென்று கூறுவர். (அகத். 47, 48). இனி, இறைச்சியாவது தலைவியுந்தோழியும் தலைவன் கொடுமை கூறும்வழிக் கருப்பொருள்களின் நிகழ்ச்சிகளைக் கூறுவதாக வைத்து அதன் கட்டாம் கருதிய குறிப்புத் தோன்றும் வண்ணம் தொனியால் பொருட்டன்மை வெளிப்படக் கூறுவ தொன்றாம்.

"இலங்கு மருவித் திலங்கு மருவித்து
வானி னிலங்கு மருவித்தே தானுற்ற
சூள்பேணான் பொய்த்தான் மலை" (கலித். 41)

என்புழிச் சூள்பொய்த்தான் மலை இலங்கு மருவித்தென்று பொய்த்தலுக்கேற்ற பயனுடைத்தாகாமை இறைச்சியாற் கொள்ளவைத்தல் காண்க. தலைவன் கொடுமையினன்றி வன்புறைக் கண்ணும் இவ்விறைச்சி வருமென்பர்.

இவையன்றி வடநாட்டிற் கௌடில்யரும், சுச்ருத வைத்திய நூலாசிரியரும், பௌத்தர் பாலிநூல்களுள் நெத்திப் பிரகரண நூலாசிரியரும் நூற்பொருள்கோடற்கு உபகாரப்பட்டன இவை யென்று முப்பத்திரண்டு உத்தி உடன்பட்டாற்போல, இவரும் "நுதலியதறிதல்" (தொல். மரபி. 110) முதலாக "உய்த்துக் கொண்டுணர்தல்" இறுதியாக உத்தி முப்பத்திரண்டும் இந் நூலிறுதியில் வைத்துக்கூறுவர். இம்முப்பத்திரண்டுஉத்திகளிற் பெரும்பாலன கௌடில்யர் கூறியவற்றோடு ஒத்தலும் அவர் நூற்சிறுதியில் வைத்தாற்போல இவரும் நூற்சிறுதிக்கண்வைத் தலும் நோக்கிக் கொள்க. இவ்வொற்றுமையை இதனுடன் சேர்க்கப்பட்டுள்ள அநுபந்தத்திற்காண்க. இவையன்றி "அக மும் புறமும்" என்னும் பொருட் பாகுபாட்டிற்குரிய இன்பத் துறைகளிலும்,கொடை வீரம் முதலியவற்றிலும்,உற்றுர் இறந்த கையறுநிலையினும், மனமகிழ்தற்குக் காரணமான மங்கலங்களி னும், எல்லாந் துறந்த துறவினும், இன்னும் மக்கள் வாழ்நாளில் நிகழ்ந்த பல்வகை நிகழ்ச்சியினும் எத்துணையோ பல நூல்களு முண்டாயிருந்தனவென்பது இந்நூலுள், அகத்திணை,புறத்திணை பற்றிவருஞ் சூத்திரங்களால் அறியக்கிடப்பது. இவ்விலக்கண நெறிபற்றி எழுந்த கடைச்சங்கவிலக்கியநூல்கள் இனி ஆராயப் படும். அவற்றுள் இவ்விலக்கணமுறை அறியவைத்தலால் வேறு ஆராய்ந்திலேன். இம்மட்டோடு நிறுத்தப் பெறுவதாகும். இவ் வடநூலார்க்கும் இத்தமிழ் நூலாற்கும் உத்திவகையுள் ஒத்த முதனூல் இஃதென்று இன்னுந் துணிதற்கில்லை. "ஐந்திர நிறைந்த தொல்காப்பியன்" எனப்பாயிரங் கூறலான் அவ்வைந் திரத்தேனும் அன்றி அதன் வழித்தாகிய பிறிதொரு நூலினே னும் இவ்வுத்திகள் உள்ளனவோ என்று நினைக்கப்படும். இவற் றுள் உரைசெய் முறையும் இவர்க்குமுன்னுண்டென்றுராலணம்.

## அநுபந்தம்

| | | |
|---|---|---|
| 1. | நுதலியதறிதல் | அதிகரணம் |
| 2. | அதிகார முறைமை | விதானம் |
| 3. | தொகுத்துக்கூறல் | உத்தேசம் |
| 4. | வகுத்து மெய்ந்நிறுத்தல் | நிர்த்தேசம் |

| | | |
|---|---|---|
| 5. | மொழிந்த பொருளோ டொன்ற வவ்வயின்மொழி யாததனை முட்டின்றி முடித்தல் | அருத்தாபத்தி |
| 6. | வாராததனான் வந்தது முடித்தல் | அனுகதாவேஷணம் |
| 7. | வந்தது கொண்டு வாராத துணர்த்தல் | அதிக்ராந்த வேஷணம் |
| 8. | முந்து மொழிந்ததன் றலை தடுமாற்று | அபவர்க்கம் |
| 9. | ஒப்பக்கூறல் | உபமானம் |
| 10. | ஒருதலை மொழிதல் | ஏகாந்தம் |
| 11. | தன்கோட் கூறல் | உபதேசம் |
| 12. | முறை பிறழாமை | பிரசங்கம் |
| 13. | பிறனுடம்பட்டது தானு டம்படுதல் | அனுமதம் |
| 14. | இறந்தது காத்தல் | |
| 15. | எதிரது போற்றல் | |
| 16. | மொழிவா மென்றல் | |
| 17. | கூறிற்றென்றல் | பிரதேசம் |
| 18. | தான்குறியிடுதல் | ஸ்வஸம்ஜ்ஞா |
| 19. | ஒருதலை யன்மை | ஸம்சயம் |
| 20. | முடிந்தது காட்டல் | யோகம் |
| 21. | ஆணைகூறல் | நியோகம் |
| 22. | பல்பொருட் கேட்பி னல்லது கோடல் | விகல்பம் |
| 23. | தொகுத்த மொழியான் வகுத்தனர் கோடல் | ஸமுச்சயம் |
| 24. | மறுதலை சிதைத்துத் தன் துணிபுரைத்தல் | உத்தரபக்ஷம் |
| 25. | பிறன்கோட் கூறல் | பூருவபக்ஷம் |
| 26. | அறியா துடம்படல் | |
| 27. | பொருளிடை யிடுதல் | வியாக்கியானம் |
| 28. | எதிர்பொருளுணர்த்தல் | விபர்யயம் |

29. சொல்லின் எச்சஞ்சொல்லி
யாங்குணர்த்தல் — வாக்கியசேஷம்
30. தந்து புணர்ந்துரைத்தல் — அதிதேசம்
31. ஞாபகங் கூறல் — அபதேசம்
32. உய்த்துக்கொண்டுணர்த்தல் — ஊஹ்யம்.

## (ii) எழுத்துமறை அநுபந்தம்

பார்ப்பார் புருடர் பரியா டிரவிபிறை
யார்ப்பார் மறலிபனை யாடரவம் — சீர்ப்பாவை
கோயில்சொ லாறிறைபேய் கோடலர்தார் காளை கன்னி
ஆய கழுதையெரு தாம்.

| | | | |
|---|---|---|---|
| உயிர் | வருக்கம் | | பார்ப்பார் |
| ககர | ,, | (கந்தருப்பன்) | புருடன் |
| ஙகர | ,, | | பரி |
| சகர | ,, | சை | ஆடு |
| ஞகர | ,, | (ஞாயிறு) | இரவி |
| டகர | ,, | | பிறை |
| ணகர | ,, | | மறலி |
| தகர | ,, | (தாலம்) | பனை |
| நகர | ,, | (நாகம்) | ஆடரவம் |
| பகர | ,, | (பத்மம்) | சீர்ப்பாவை |
| | | | கோயில் (தாமரை) |
| மகர | ,, | | சொல் (நெல்) |
| யகார | ,, | (யாறு) | ஆறு |
| ரகர | ,, | (ராஜன்) | இறை |
| லகர | ,, | (லங்கணி) | பேய் |
| வகர | ,, | (வள்ளி) | கோடலர்தார் (மரம்) |
| ழகர | ,, | | காளை |
| ளகர | ,, | (அவளிவள்) | கன்னி |
| றகர | ,, | | கழுதை |
| னகர | ,, | ஆண் | எருது |

(யாப்பருங் கல விருத்தி மேற்கோள்) (பக். 238)

" கட்டலர் தாமரையு ளேழுங் கடுமான்றேர்க்
கத்திரிய ரைவருங் காயா மரமொன்றும்
பெற்றவிழ்தேர்ந் துண்ணுத பேயே யிருதலையும்
வித்தாத நெல்லி னிறுதியுங் கூட்டியக்கா
லொத்தியைந்த தெம்மூர்ப் பெயர்."

இதன்கண் தாமரை—பகரம் அதில் ஏழு. பெ; க்ஷத்திரியர்—ரகரம், அதில் ஐவர் ரு; மரம்—வகரவருக்கம். அதில் ஒன்று—வ; பேய்—லகர வருக்கம் இவ்வருக்கத்து இருதலை முதலுங் கடையுமாகிய லகர வொற்றும் லகர அகரமும் (ல்ல); நெல்—மகர வருக்கம்—இவ்வருக்கத்திறுதி-ம். இவற்ருற் பெருவல்லம் என்பது ஊர்ப்பெயராதல் காண்க.

## (iii) தொல்காப்பியம் சொல்லதிகாரம் எச்சவியல் (சூ. 47) மேற்கோள்

" மண்ணைச் சுமந்த வன்ருனும் வரதராசன் மகன் ருனும்
எண்ணிய வரகாலி மூன்று மிரண்டு மரமும் ஓர் யாறும்
திண்ணமறிய வல்லார்க்குச் சிவகதியைப் பெறலாமே."

இதனுள் மண்ணைச் சுமந்தவன்—ந; வரதராஜன் மகன். ம; வரகாலி மூன்று—சி; இரண்டு மரம் வா; ஓர் யாறு—ய எனக்கூற, நமசிவாய எனப் பொருளாயிற்று" என்பர் தெய்வச் சிலையார்.

# தொல்காப்பியர் காலத்து வேந்தர்

இனி, தொல்காப்பியனார் காலத்துத் தமிழ் வேந்தரும் இத் தென்னாடு காத்து வளவிய புகழுடன் வாழ்ந்திருந்தனர் என்பது இவர்,

" வண்புகழ் மூவர்
தண்பொழில் வரைப்பி
னாற்பெய ரெல்லை யகத்தவர் "
(பேரெல்லையும் பாடம்) (தொல். செய். 79)

என்பதனாலறியப்படும். இங்குப் பேராசிரியர் நிலத்துக்கு நிழல் செய்யும் நாவலம் பொழிலுட் கொடுத்துப் பெறும் புகழினை யுடைய மூவேந்தர் காக்கும் வரப்பினையுடைய வடவேங்கடந் தென்குமரியிடை நாட்டார் எனக் கருதினார். அவர் நாற்பெய ரெல்லையகம் தமிழ் நாடெனவும், வரைப்பு என்பது நாவலந்தண் பொழிலுள் மூவர் காத்தற்கு வரைந்துகொள்ளப்பட்டதெனவுங் கருதுவர். இவர் ஈண்டு உரையாசிரியர் கருத்தோடு ஒத்துரைத் தனராவர். நச்சினார்க்கினியர் பிறவெல்லாவற்றுக்கும் உடன் பட்டு, நாற்பெயரெல்லையகத்தவர் என்பதற்குமட்டும் மலைமண்ட லம், சோழ மண்டலம், பாண்டிமண்டலம், தொண்டைமண்டலம் என்னும் நான்கு பெயரையுடைய தமிழ் நாட்டார் என்று வேறுரை கூறினார். இவர் தொண்டை மண்டலம் என்று பிரித் துத் தனியே ஒன்று கொண்டது, தொல்காப்பியனார் காலத்தே உளதோ என ஐயுறத்தக்கதாம். தொல்காப்பியனார் புறத்திணை யியலில்,

" உறுபகை
வேந்திடை தெரிதல் வேண்டி யேந்துபுகழ்ப்
போந்தை வேம்பே யாரென வரூஉ
மாபெருந் தானையர் மலைந்த பூவும் " (தொல். புறத். 5)

எனக் கூறிய இடத்துமூவேந்தர் தார்களே கூறிச்செல்லுதலான், இந்த ஐயம்வலியுறுகின்றதுகாண்க. சங்க நூல்களிலே "தொண் டையர்" (அகம். 213, பெரும்பாண். அடி. 454) கூறப்படுதலால்

நச்சினார்க்கினியர் தமிழ் நாட்டாரை நான்கு நாட்டவராகக் கொண்டனர் எனத் தோன்றுகின்றது.

இவர் தொண்டையரைச் சோழர் வழியினரென்று கொள்வர். இது பெரும்பாணாற்றுப் படையுரையுள், திரையனைப் பற்றி அவர் கூறிய வரலாற்றானறியப்படுவது. (பெரும்பாண். 33-35). இதைப்பற்றிப் பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சியுள் விரிவாகக் கூறியுள்ளேன். ஆண்டு நோக்கிக்கொள்க.

தொல்காப்பியனார் காலத்து அருவா நாடாகிப் பின்னர்த் தொண்டையர் ஆட்சியுட்பட்டுத் தொண்டைநாடாகிய நிலப் பகுதி, சேரர், பாண்டியர், சோழர் என்னும் மூவருள் ஒருவருக்குத் திறையளக்குஞ் சிற்றரசரால் ஆளப்பட்டுப் போந்தது என்பது கொள்ளத்தகும். வடவேங்கடந் தென்குமரியாயிடைத் தமிழ் கூறு நல்லுலகத்துச் செந்தமிழ் நாட்டைச் சூழ்ந்த பன்னிரு நாட்டையுங் கூறிய "தென்பாண்டி குட்டம்" என்னும் பழைய வெண்பாவில் "அருவா வதன் வடக்கு" எனக் கூறுதலல்லாமற் றொண்டை நாடென்ற பெயராற் கூறாமையும் காண்க. அகநானூற்றுப் பழையவுரைகாரர்,

"வேங்கடம் பயந்த வெண்கோட் டியானை
மறப்போர்ப் பாண்டியர்" (27)

என்புழி, "வேங்கடம்பயந்த"—"அங்குள்ள அரசர் திறையிட்ட" எனக் கூறுதலும் நோக்கிக் கொள்க. "தொண்டையர்........ வேங்கடத்து" (அகம். 213) என வருமாலெனின் தொண்டையர் வேங்கடம் என்ற வழக்கு தொண்டையர் தனியே சிறந்து மேம்பட்ட காலத்ததாய்த் தொல்காப்பியனார்க்குப் பிந்தியதே யாமென்க.

இத் தொல்காப்பியனார் காலத்துச் சேரசோழ ரிவரெனத் தெரிதல் அரிதாகவுள்ளது. பனம்பாரனார் பாயிரத்தில் இவர் தம் இலக்கண நூலை,

"நிலந்தரு திருவிற் பாண்டிய னவையத்து
அறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட் டாசாற் கரிறபத் தெரித்து"

எனக் கூறியதனால் இவர் காலத்துப் பாண்டியன் நிலந்தரு திருவிற் பாண்டியன் என்பது அறியக்கிடப்பது.

இப்பாண்டியன் அவையத்து இவர் தம்நூலை அரங்கேற்றிய போது,

" போந்தை வேம்பே யாரென வரூஉ
மாபெருந் தானையர் மலைந்த பூவும்" (தொல். புறத். 5)

எனக் கூறிச் சேரர் மாலையை முற்படவைத்துப் பாண்டியர் மாலையை அதன் பின்வைத்து அதன் பின்னர்ச் சோழர் மாலையை வைத்துக் காட்டுதலான், இவர் காலத்துச் சேரர் தமிழ்வேந்தர் மூவருள்ளே தலை சிறந்தாரென உய்த்துணரப்படுவது. தமிழ் அவையோரும் அவையுடைய திருவிற் பாண்டியனும் உடன்பட்டு இங்ஙனங்கூறிய நூலைக் கேட்டதனால் இவ்வுண்மையறியப்படும். இவர் பின்னர்ப் போந்த தமிழ் நல்லாசிரியர் பலரும் இவ்வைப்பு முறையையே உடன்பட்டுக் கூறிக்காட்டுதல் சங்க நூல்களிற் காணலாம். சிறுபாணாற்றுப் படையிற்,

" குடபுலங் காவலர் மருமான்
குட்டுவன் . . . . . . வஞ்சியும்" (சிறுபாண். 47-50)

எனவும்;

" தென்புலங் காவலர் மருமான்
. . . . . . . . . .மதுரையும்" (ஷை. 63-66)

எனவும்,

" குணபுலங் காவலர் மருமான்
. . . . . . . . . .உறந்தையும்" (ஷை. 79-83)

எனவும்,

இம் முறையே வைத்தல் காண்க. புறப்பாட்டுத்தொகுத்தாரும் சேரன்பாட்டு, பாண்டியன்பாட்டு, சோழன்பாட்டு, என்னும் முறையில் முன்னர் வைத்துத் தொகுத்தது காணலாம். சங்கத்துக்குப்பின்னர்ப் புறப்பொருள் வெண்பாமாலை செய்த சேரர்மரபினராகிய ஐயனாரிதனாரும், இத் தொல்காப்பியனார் வைத்த முறையையே கொண்டு,

"வானவன்
போரெதிரிற் போந்தையாம் பூ" (1)

"நெடுவழுதி
யேத்தல் சால் வேம்பி னிணர்" (2)

"காவிரிநாட
னலங்க லமரபூவத் தார்" (3)

எனப் பொதுவியற் படலத்துள் உரைத்தார். இவற்றாற் சேரர் பாண்டியர் சோழர் என்று நிறுவுவதே பண்டைமரபென் றுணரப் படும்.

இருக்கு வேதத்தில் (1—115—116) கேலன் * என்பவ னொருவன் கூறப்படுகின்றான். சாயனர் இவன் அரசனென்றும் இவன் புரோகிதர் அகத்தியர் என்றும் கூறுவர். வியாச பாரதத் தில் ஆதிபர்வத்தில்,

पाण्ड्यकेरल चोलेन्द्राः त्रयस्त्रेताग्नयो यथा ।
आसनेषु विराजन्ते आशामागस्त्य माश्रिताः ॥

(ஸ்வயம்வர பர்வம். பார்த்திபப் பிரக்யாபனம்)

என்புழி அகத்தியதிக்காகிய தென்றிசையின்கண் உள்ள பாண்டி யர், கேரளர், சோளேந்திரர் மூவரும் அவரவர்க்குரியஆசனங்களில் மூன்று தீயைப்போல விளங்குகின்றனர் எனக்கூறுதலான் இவரு டைய தொன்மையுணரப்படும். புறப்பாட்டினும் "சேரமான் மாவெண்கோவும் பாண்டியன் கானப்பேர்தந்த உக்கிரப் பெரு வழுதியும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் ஒருங்கிருந்தாரை" ஔவையார் * பாடியதன்கண், இப்பாரதத் தொடு பொருந்தவைத்து,

"ஒன்றுபுரிந் தடங்கிய விருபிறப் பாளர்
முத்தீப் புரையக் காண்டக விருந்த
கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்திர்" (367)

---

* Vedic Index.

* இப்பழைய வுரைநடையும் தொல்காப்பியனார் முறை மையைத் தழுவி வருதல் காண்க.

எனக் கூறுதல்" காணலாம். அகத்தியரைப் புரோகிதராக வுடைய இருக்கு வேதங்குறித்த கேலன் சேரனவன் என நினைத்தல் தகும். கேலன் கேரளனாகி அவனே சேரனாயினன் போலும். கேரலர் சேரலர் என வருதல் காண்க. சின்னமனூர்ச் செப்பேட்டிற் பாண்டியர் மெய்க்கீர்த்தியில் அகத்தியனைப் புரோகிதனைப் பெற்ற சிறப்புப் பாண்டியர்க்குக் கூறப்பட்டுள்ளது.

மணிமேகலையுள் அகத்தியர் சொல்லியவாறு கேட்டுக் காந்தன் என்னுஞ்சோழன் பரசுராமற்கு ஒளித்தொழுகிய வரலாற்றானும், (22) அவ்வரசன் வேண்ட அகத்தியர் காவிரியுண்டாதற் பொருட்டுத் தம் கரகம் கவிழ்த்த வரலாற்றானும் (பதிகம்.) அறியப்படுதலான், அகத்தியர் தமிழ் வேந்தர் மூவர்க்கும் அறிவுறுத்தும் ஆசிரியர் ஆவர் என நினைத்துக்கொள்ளலாம்.

வான்மீகி ராமாயணத்தில் இம்மூவருங் கூறப்படுதலும் சிறப்பாகப் பாண்டியர் கபாட நகரம் பாராட்டப்படுதலும் பலரும் அறிவர்.

இங்ஙனம் இதிகாசங்களாலும் வேதத்தாலும் சிறப்பிக்கப் படுதனோக்கியே, ஆசிரியர் பரிமேலழகர் இவரைப் படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டுவரும் பழங்குடியினர் (குறள் 955) ஆகக் கருதி யுரைத்தாரென எண்ணுகின்றேன். இவ்வாறு பழங்குடியினராகத் துணியப்பட்ட தமிழ்வேந்தர் மூவருள் இத்தொல்காப்பியப்பாயிரங் குறித்த "நிலந்தரு திருவிற் பாண்டியன்" யாவன் எனின் இவனை யானறிந்தவாறு கூறுவேன். இவன் மூடத்திருமாறன் ஆவனெனக் கடல்கோளைப்பற்றி யான் எழுதியதிற் கூறியுள்ளேன்; பனம்பாரனார் பாடிய நிலந்தரு திருவிற் பாண்டியனை மதுரைக் காஞ்சி பாடிய மாங்குடி மருதனார்,

> "இருபெரு வேந்தரொடு வேளிர் சாயப்
> பொருதவரைச் செருவென்று
> இலங்கருவிய வரைநீந்திச்
> சுரம்போழ்ந்த விகலாற்றல்
> உயர்ந்தோங்கிய விழுச்சிறப்பின்
> நிலந்தந்த பேருதவிப்
> பொலந்தார் மார்பி னெடியோன்" (55—6)

எனக்கூறிய தமையாது,

"நிலந்தரு திருவி னெடியோன் போல
வியப்புஞ் சால்புஞ் செம்மை சான்றோர்
பலர்வாய்ப் புகரறு சிறப்பிற் றோன்றி
அரியதந்து குடியகற்றிப்
பெரியகற் றிசைவிளக்கி

.................................................

மகிழ்ந்தினி துறைமதி பெரும" (763—781)

எனத் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை வாழ்த்திய இடத்து 'நிலந்தரு திருவினெடியோன்போல' இன்ன இன்னவாறு சிறந்த இசை விளக்கி மகிழ்ந்து இனிதாக உறைவாயாக என்று கூறிக்காட்டினர். இவற்றால் இவன் சேரர் சோழர் என்னும் இரு பெரு வேந்தரொடு வேளிர் சாயப் பொருது அவரைச் செருவென்றபின் மேலும் ஊக்கி வரைகளை நீந்திச் சுரம் போழ்ந்த இகலாற்றலுடையவன் என்றும், உயர்ந் தோங்கிய விழுச்சிறப்பினையுடைய நிலந்தந்த பேருதவியை யுடையவன் என்றும், நெடியோன் என்று புகழப்பட்டவன் என் றும், வியப்பும் சால்பும் செம்மையும் உள்ள சான்றோர் பலர் வாய்ப்புகரறு சிறப்பிற் றோன்றியவனென்றும், அரியன தந்த வன் என்றும், குடி பெருக்கியவன் என்றும் அறியக்கிடத்தல் காணலாம். மாங்குடி மருதனார் இங்குக் கூறிய இவன் சிறப் பினையே அழகுபெற வைத்து இளங்கோவடிகள்,

"அடியிற் றன்னள வரசர்க் குணர்த்தி
வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையு மிமயமுங் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன்"

(சிலப். 11, 17—22)

என்பதனாற் கூறினார். இச்சிலப்பதிகாரத்தில் "அடியிற்றன் னள வரசர்க்குணர்த்தி என்பது கடலின் அளவை அடியினாலே இன்ன அளவினது இதுவென்று அரசர்க்குக் காட்டி ; அன்றி அடியினாலே தன் பெருமையை அரசர்க்கு அறிவித்து என்பாருமுளர்"

என அரும்பதவுரைகாரர் உரைத்தார். இதனால் இவன் தன் வேற்படையைக் கடன்மேற் செலவிட்டான் என்றும், தன் அடியளவாற் கடலளவினை அரசர்க்குணர்த்தினன் என்றும், அப்பாற்றன்னாட்டைக் கடல்கொண்டபின் வடதிசையிமயமுங் கங்கையுங் கொண்டு தென்றிசையும் ஆண்டான் என்றுங் கூறுதல் தெளியலாம்.

இவனைப் புறப்பாட்டிற் கூறிய இடத்து,

"எங்கோ வாழிய குடுமி தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவி னெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே" (புறம். 9)

என்றதனால் இவன் பல் யாகசாலை முதுகுடுமிக்கு முற்பட்டவன் என்றும், செந்நீர்ப் பசும்பொன்னைக் கூத்தர்க்கு வழங்கியவன் என்றும், முந்நீர்க் கடற்றெய்வத்திற்கு விழா வெடுத்தவன் என்றும், நெடியோன் என்றும், தன்னால் உளதாக்கப்பட்ட பஃறுளி யாறுடையனா யிருந்தான் என்றும் தெரியலாம். பழைய உரைகாரர், "தங்கோச் செந்நீர் பசும்பொன்" என்பதற்குத் தமது அரசாட்சியினது செவ்விய நீர்மையாற் செய்த பசும்பொன் என்பாரும் உளர்" எனவும்,

"முந்நீர்க்கண் வடிம்பலம்ப நின்றான்
என்ற வியப்பால் நெடியோன் என்றார்
என்ப"

எனவும் தெளிய வுரைத்தார்.

இதனால் இவன் நெறி முறையான அரசாட்சியுடையன் என்றும் தன் ஆட்சியிற் பெரும் பொன் படைத்து வழங்கியவன் என்றும், ஆழி வடிம்பலம்பநின்றான் என்றும் அறியலாம். இளங்கோவடிகள், கடல் கொண்டதன் பின் இவன் இமயமுங் கங்கையுங் கொண்டது கூறாநிற்கவும், அடியார்க்கு நல்லார் "சோழ நாட்டெல்லையில் முத்தூர்க் கூற்றமும் சேரமானாட்டுக் குண்டூர்க் கூற்றமும் என்னும் இவற்றை இழந்த நாட்டிற்காக ஆண்ட தென்னவன்" என இவனையுரைத்தார். எவ்விமிழலையொடு முத்தூறு கொண்டவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்பது,

" எவ்வி
புனலம் புதவின் மிழலையொடு
..........................................
குப்பை நெல்லின் முத்தூறு தந்த
கொற்ற நீள்குடைக் கொடித்தேர்ச் செழிய " (24)

எனப் புறப்பாட்டின் வருதலானறிந்தது. அடியார்க்கு நல்லார் இங்ஙனம் கடல்கொண்ட காலத்து நெடியோனையும், தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனையும் ஓராளாகக் கொண்டது,

" மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
புலியொடு வின்னீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்
தொல்லிசை நட்ட குடியொடு தோன்றி "

(முல்லைக்கலி. 4)

எனக் கலித்தொகையிற் கூறியதுபற்றி யென்று உய்த்துணரத் தகும். இதன்கண் மலிதிரை யூர்ந்த காலத்தை அடுத்துவைத்துச் சோழனுடைய புலிக்கொடியையும் சேரனுடைய விற்கொடியையும் நீக்கித் தன் கயற்கொடியைப் பிறர் நாட்டில் நாட்டிய சிறப்பைக்கூறி நயப்படுத்தியதன்றி முத்தூறு கொண்ட செய்திகூறப் பட்டதே யில்லாமை நோக்கத்தகும். ஈண்டுத் தென்னவன் தொல்லிசை நட்டகுடி என்பதனால் இது மிகப் பழையதோர் செய்தியாதல் நன்கு துணியப்படும். இந்நெடியோனும் நெடுஞ் செழியனும் ஓராளாகாமை, " நெடியோனும்பல் " எனவும்,

" நெடியோன் போல விளங்கி
இனி துறைமதி பெரும "

எனவும் மதுரைக் காஞ்சியில் வருதலான் எளிதினறியலாம்.

இனி இவன் ஆழி வடிம்பலம்ப நின்ற செய்தியைப் பற்றிச் சில கூறுவேன். ஆழி வடிம்பலம்ப நிற்றலாவது கடல்நீர்கால் வடிம்புகளை அலம்புமாறு நிற்பதாகும். இஃதோர் பெருஞ் செயலாகவைத்து இதனைச்சிறப்பிக்கப்படுவது காண்க. இவனைப் பிற்காலக் கவியாகிய புகழேந்தியார்,

" ஆழி வடிம்பலம்ப நின்றானும் அன்றொருகால்
ஏழிசை நூற் சங்கத் திருந்தானும் — நீள்விசும்பில்
நற்றேவர் தூது நடந்தானும் பாரகப்போர்
செற்றானுங் கண்டாயிச் சேய் " (நளவெண்பா. 137)

எனப் பாராட்டினர். இவர், பாரதப்போர் தொடங்கற்கு முன்னே காட்டில் மறைந்தொழுகிய ஐவருள்ளே தருமற்குவியாசர் எடுத்தோதிய நளசரிதத்தின்கண் பாரதப்போர் செற்றானும் என்று கூறியிருக்கமாட்டார். ஆதலான் பாரகப்போர் என்று பாடங் கொண்டேன் என்க. *

ஆழி வடிம்பலம்ப நின்ற பெருஞ் செயலாவது இவன் கடலில் வேற்படையொடு சேய்மைக்கட்சென்று, ஆண்டு நீவத்துத் தன் அடியைப் பதித்து அங்கே நீரலம்பும்படி செய்தவெற்றியையே குறிக்கும். இங்ஙனந் தான் வேற்படையுடன் கடல் கடத்தற்கு அநுகூலமானதுபற்றி அக்கடற்றெய்வத்திற்கு விழா வெடுத்தான் என்று துணியலாம். இதனானே " முந்நீர் விழவின் னெடியோன் " எனப்பட்டானுவன் (புறம். 9). இஃது இவன் உண்டாக்கிய பஃறுளியாறு கடல் கொள்வதற்கு முந்தியதாகும். கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்து முடத்திருமாறனாகியும் அரிய கற்று நல்லிசைப் புலவருடன் வாழ்ந்து அரசரேறும்புலவரேறுமாய் விளங்கினான் என்று நினையலாம். இவன் புலவனுமாதல் இவன் பாடிய நற்றிணைப் பாடல்களான் அறிந்தது. (நற் 105, 228). இறையனார் களவியலுரைகாரர்,

" கவியரங் கேறினார் எழுவர் பாண்டியருள் ஒருவன் சயமா கீர்த்தியனாகிய நிலந்தரு திருவிற் பாண்டியன் றொல்காப்பியம் புலப்படுத்திரீஇயினான் "

எனக் கூறுதலான், இவன் கவியரங்கேறினாருள் ஒருவனாதல் காண்க. இதனானன்றே நல்லிசைப் புலவர் தொகையுள் இவன் செய்யுட்களையுங் கோத்தார் எனவுணரலாம். ''அடியிற்றன்னளவரசர்க்குணர்த்தி '' என்பது முதலாகச் சிலப்பதிகாரம் கூறிய அடிகளால் கடல்கொள்வதன் முன்னும் கடல்கொண்டதன் பின்னும் இருந்த பாண்டியன் ஒருவனேயாதல் தெள்ளிது.

---

* பாரகப்போர்—கரையை யடைந்து செய்யும் போர் ; பாரம் —கரை.

அடியிற் றன்னளவரசர்க் குணர்த்தியவனைப் பகைத்துக் கொடுங்கடல் பஃறுளியாற்றோடு குமரிக் கோடுங் கொண்ட போது அவனே படையெடுத்து இமயமுங் கங்கையுங் கொண்டான் என்று தெளிவித்தது காணலாம். இதற்கேற்பவேகளவியலுரைகாரர் இரண்டாஞ் சங்கம் வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறனீறாக ஐம்பத்தொன்பதின்மரால் காக்கப்பட்டதென்றும், அச்சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்தென்ப, அக்காலத்துப் போலும் பாண்டி நாட்டைக் கடல் கொண்டதென்றும் கூறியிருத்தலும் நோக்கிக்கொள்க. கடைச் சங்கம், கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாகத் தொடங்குதல் ஆண்டே கேட்கப்படுதல் காண்க. இவற்றாற் சிலப்பதிகாரத்தாலறியப்பட்டவனும், தொல்காப்பியப்பாயிரங் கூறியவனுமான திருவிற்பாண்டியனும், கடல் கோளுக்கு முந்தியும் பிந்தியுமிருந்தவனுமாகக் களவியலுரை கூறிய திருமாறனும் ஒருவன் என்று துணியப்படும் என்க.

இனிச் சிலப்பதிகாரத்து அழற்படு காதைக்கண்,

"எண்ணருஞ் சிறப்பின் மன்னரை யோட்டி
மண்ணகங் கொண்டு செங்கோ லோச்சிக்
கொடுந்தொழில் கடிந்து கொற்றங் கொண்டு
நெடும்புகழ் வளர்த்து நானிலம் புரக்கும்
உரைசால் சிறப்பி னெடியோ னன்ன, அரசபூதத்து"

(56—61)

என்புழிப்பழைய அரும்பதவுரைகாரர் நெடியோனைத்திருமாலாகவும் பாண்டியனாகவுங் கருதுதல் நோக்கிக்கொள்க. அவர் உலகளந்தோனை யொத்த பூதம் எனக் கூறிப்பின் "இன்னும் பாண்டியனுடைய கையினிலக்கணம் பூதத்துக்கும் பிடித்தன" என உரைப்பதுங் காண்க. மதுரைக் காஞ்சியில் "இசை விளக்கி" என்றதற்கும்உரைகாரர் பலரும்மாகீர்த்திஎன்றதற்கும் இயைய, ஈண்டு "நெடும்புகழ் வளர்த்து" என்றது காண்க. இதனால் "நிலந்தரு பாண்டியன் எனவும், நிலந்தந்த பேருதவி" எனவும் மேலே மதுரைக் காஞ்சியினும் பிறவிடங்களினுங் குறித்தல், நீரேயுள்ளது நிலனேயில்லை என்று சொல்லப்பட்ட சேய்மைக்

கடலிற் புக்குத் தன் ஆட்சியில் நிலந்தந்த பேருதவியைக்கருதிய தென்பது நன்கு பொருந்தும். அக்கரையில் ஆழி வடிப்பலம்ப நின்ற பெருஞ்செயலால் இவன் வடிம்பலம்ப நின்றானெனவெனக்.

இறையனார் களவியலுரைகாரர், அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர் முதலியோர் இப்பாண்டியனைச் சயமா கீர்த்தியென்றே கூறினர். ஜய என்பது யவத்தீவத்தின் பெயராதல் சாசனம் வல்லவரறிந்தது. இதற் கேற்பவே யவத்திவத்துப் பிற்காலத்துச் சாசனம் ஒன்று மீனலாஞ்சனத்துடன்,

" ஜயநகர ஸுந்தர பாண்டிய தேவா

" जयनकर सुन्दरपाण्डयदेवादीशवरनाम राजाभिषेक ".

எனக் காணப்படுதலால் சயமாகீர்த்தி என்பது ஜயஸ்தானத்து மகா கீர்த்தியன் என்னும் பொருளுடையதே என்று எண்ணுகின்றேன்.

இனி, "அடியிற்றன்னளவரசர்க்குணர்த்தி" எனச்சிலப்பதிகாரத்து இளங்கோவடிகள் கூறிய செய்தி தன் அளவினை அரசர்க்குத் தன் அடிகளால் உணர்த்தியதாகக்கொண்டு, நெடுந்தூரங்கடலிற் சென்று நிலங்கண்டு, அந்நிலத்துத் தன் அடிகளை வைத்து ஆண்டுள்ள கடல் அலம்பும்படி நின்றதேயாம் என எண்ணுகிறேன். பேரரசன் தன் அடிகளைப்பாறையிற்பொறித்து அவற்றை நீரலம்பும்படி வைக்குஞ் செய்தி ஜாவாவில் ஸ்ரீபூர்ண வர்மன் சாசனங்களிற் கேட்கப்படுவது. அச்சாசனங்கள் :—

विक्रान्तस्यावनिपते श्रीमतः पूर्णवर्मणः
तरुमानगरेन्दुस्य विष्णोरि व पदद्वयम् ।

(Ind. Ant. III 355-58.)

ஸ்ரீமானும் பூர்ணவர்மனும் அவனிக்குப் பதியும் அடிவைத்தவனுமாகிய தருமாநகர்த் தலைவனுடைய விஷ்ணு (அடிகளை) ஒத்த இணையடிகள்.

श्रीमान्धाता कृतज्ञो नरपति रसमी
यो पुरादारुमायाम् ।
नाम्ना श्रीपूर्णवर्मा प्रचुररिपुशरा
भेद्य विख्यातवर्मा

तस्येनं पातविभ्रमरि
नगरोत सादनेनित्यदत्तः ।
भक्तागां यां नृपानांवा भवति शुभ करां
शल्य भीतं नृपानां

(Ind. Ant. III 355-58.)

இவற்றுள் முந்தியது யவத் வீபத்துச் சீர் அருடன் யாற்றில் நடுவிலுள்ள பெரும் பாறையில் நீரலம்பு நிலையில் உள்ளது 'மின்னுமொரு சாசனம்.'

जयविशालस्य तारुमेन्दुस्य हस्तिनः ।
रोरावताभरितस्य विभाति तं पदद्वयम् ॥

(*vide* India and Java ; Greater India Series)

இச்சாசனங்களின் காலம் நன்ருகத் தெரிதற் கில்லையாயினும் இவற்றுட் குறித்த ஸ்ரீ பூர்ணவர்மன் முன்னோர் யவத்தீவத்திற்குச் சில தலைமுறைக்கு முன்னமேனும் வந்த இந்தியராக வேண்டுமென்பதுவே சாசன ஆராய்ச்சியாளர் துணிபாம்.

இங்ஙனம் அடிபொறிக்கும் வழக்கம் கடற்றெய்வத்திற்கு விழவெடுத்த நெடியோன் (விக்கிராந்தன்) கடல் கடந்து நிலங் கண்டு அதனைத் தன்னகப் படுத்தித் தன் அடிகளைப்பொறித்தது முதல் ஆண்டுண்டாயிற்றென்று உய்த்துணரலாகும்.

இந்தச்சாசனங்களிற் குறித்த தருமாநகரம் வராஹமிஹிரர் தம் ப்ரகத்ஸம்ஹிதையிற் றென்னுட்டு வைத்து, வைடூரியமும் சங்கும் முத்துமுள்ள இடத்திற்கும் கடலோடிகள் உள்ள இடத்திற்கும் அடுத்துக் கூறிய தர்மபட்டினமாகும் என்பது பலர் கொள்கையாம். பிரமாபுரம் என்பதுபோலத் தரும நகரம் தருமா நகரம் என நீண்டது. அவர் கூறுமாறு,

वैडूर्यशङ्खमुक्तादिवारिचर दर्मपट्टणद्वीपाः ।

என்பதாம். "பாண்டியர் அறத்திற்காக்கும் கொற்கையம் பெருந்துறைமுத்தின்" (அகம். 27) எனவும்,

" முத்துப்படு பரப்பிற் கொற்கை " (நற்றிணை. 29)

எனவும்,

" விறற்போர்ப் பாண்டியன் .....
கொற்கை முன்றுறை
அவிர்கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து "
(அகம். 201)

எனவும் பழைய நூல்கள் கூறலாற் சங்கும் முத்தும் உடைய இடம் பாண்டியர் அறத்திற் காக்கும் கொற்கை யாதலறிக. தருமபட்டினம் என்பது கன்னியாகுமரிக்குப் பத்துமைல் வடக்கணுள்ள தென்பாரு முண்டு. (J. R. A. Malayan History, Vol. XIII, Page, 20).

இவ்வாறு பெருங்கடலகத்து நிலங்கொண்ட செய்தி மதுரைக் காஞ்சியுள்,

" வானியைந்த விருமுந்நீர்ப்
பேஎநிலைஇய விரும்பவ்வத்துக்
கொடும்புணரி விலங்குபோழக்
கடுங்காலொடு கரைசேர
நெடுங்கொடிமிசை யிதையெடுத்
தின்னிசைய முரசுமுழங்கப்
பொன்மலிந்த விழுப்பண்ட
நாடார நன்கிழிதரு
மாடியற் பெருநாவாய்
மழைமுற்றிய மலைபுரையத்
துறைமுற்றிய துளங்கிருக்கைத்
தெண்கடற் குண்டகழிச்
சீர்சான்ற வுயர்நெல்லின்
ஊர்கொண்ட வுயர்கொற்றவ " (75—88)

என வருமிடத்திற் கூறப்படுதல் காண்க. வானியைந்த இருமுந்நீர்—நிலனியையாது எங்கும் வானம் இயைந்து தோற்றும் பேராழி. இரு முந்நீராகிய பவ்வத்து என்றுணர்க. பேஎநிலைஇய இரும்பவ்வம் என்பது அச்சம் நிலைத்த பெருங் கடல் எ-று. கொடும்புணரி விலங்கு போழ—கொடிய அலைகளை யூடறுத்துச் செல்ல.

இவற்றால் ஈண்டுக்கூறிய உயர் நெல்லினூர் பெருங் கடலகத்துள்ளது கூறினர். கரை சேர்தற்கு இன்றியமையாதகடிய காற்றைக் கடுங்கால் என்றார். நெடுங்கொடி—அவரவர்க்குரிய கொடிகள். இதை—கப்பற்பாய். கப்பல் புறப்படும்போதும் புகும்போதும் முரசு முழங்குதல் பண்டைவழக்கு. பொன் மலிந் தவிழுப் பண்டம்—பொன்னைத் தந்துகொள்ளற்குரிய சிறந்த பண்டங்கள் : இதனால் அவ்வூரிற் பொன் கொள்ளச் சிறந்தபண்டங்களுடன் வங்கம் வருதல் குறித்தார். நாடார—அவ்வூருள்ள நாடு நிறையவுண்ண. நன் கிழிதரும் நாவாய்—நன்கு இறங்கும் நாவாய்கள். துறை முற்றிய—துறையிற் சூழ்ந்த; துளங்கிருக்கை—அடிக்கடி வந்து போதலால் அசையும் இருக்கை என்றார். தெண்கடற் குண்டகழியூர்—தெள்ளிய கடலே ஆழமான அகழியாகவுள்ள ஊர் எ-று. இதனாற் றீவத்துள்ளவூர் எ-று. "கடல் சூழிலங்கை" (சிலப். வாழ்த்து) என்புழித் தீவம் என்று கூறுவிடினும் கடல்சூழ்தலாற்றீவம் என்று குறித்ததுபோல ஈண்டும் கொள்ளப்படும். உயர் நெல்லின் ஊர் யவபுரி எ-று. உயர்நெல்—யவம். நெல்லின் பெயர் சாலி, யவம் என்பர் பிங்கல நூலார். இதன்கண் இருமுந்நீ ரிரும்பவ்வத்துத் தெண்கடற் குண்டகழி உயர் நெல்லினூர் என்றும், அது கொடும்புணரிவிலங்குபோழச் செல்லத்தக்கதென்றும் கூறியது, இது சேய்மைக்கட் கடலகத்துள்ளது என்பது தெரியும் பொருட்டாம்.

சூரிய சித்தாந்தம் என்னும் நூலிற் பூமிக்குக் கிழக்கில் பத்ராச்வ பாக நிலத்தில் (கீழ்த்திசை நிலத்தில்) பொன்னலாகிய கோட்டையும் வாயிலுமுடைய யவகோடி நகரம் உள்ளதெனக் கூறுதல் காண்க. இங்ஙனம் பொன்னிறை தீவம் (ஸ்வர்ணத்வீபம்) ஆதலாற் பொன் மலிந்த விழுப்பண்டம் உடைய நாவாய்கள் இழிதரும் துறையுடைமை இவ்வூர்க்குக் கூறினரெனவறிக.

தாலமி என்னும் மேற்றிசை ஆசிரியர் யவத் தீவம் பொன்னிறைந்ததென்று கூறுதலும் அறிக. சாலிபால வர்மன் என்பது* இந்நாட்டரசன் விருதென்பர். சாலி வாகனன் என்று பண்டு தொட்டுவரும் பெருவழக்கும் சாலியிலுள்ள குதிரைகளை வாகன

* G. E. Gerini's Researches on Ptolemy's Geography p 543.

மாகக் கொண்டவன் என்னும் பொருளதாம். சாலியினின்று பெற்ற வாகன. முடையவன் என்பதும் ஆம்.

நச்சினார்க்கினியர் தாம் வழிவழியாகக் கேட்டறிந்தபடியே உயர் நெல்லினூரைச்சாலியூரென்றார். G. E. Gerini எழுதிய Further India என்னும் நூலில் (பக். 646) யவத் தீவத்தின் தலைநகரை மதுரை என்றும், அதன் கடற்றுறைப் பட்டினம் இதற்கு நான்கு மைல் அளவில் சாரி (Sarhi) என்னும் பெயரினுள்ளதென்றும் எழுதியுள்ளனர். "யவத் தீவராஜன் மாறசீலு என்பவன் (1270—75) மாலிக் உல் சாலி என முடிகுடி முஸ்லீம் ஆயினான்" (பக். 644) என அவர் எழுதலான் அந்நாட்டுச் சீர் சான்ற நெல்லினூர் சாலியூராதலும் அது கடற்றுறைப் பட்டினம் ஆதலும் துணியப்படும்.

ஈண்டு மிகப் பிற்பட்ட காலத்தும் இந்நாட்டை வென்று கொண்டமாறன்பெயரும் அவன்மதுரையும் (ஸ¬மதுரா) பாண்டியர் நூலிற் குறித்த சாலியூருஞ் சேரவருதலான், இந்நாடுமுதலிற் றென்னாட்டுப்பாண்டியராலேகொள்ளப்பட்டதாக நன்குதெளியலாம். சாரி எனவும் வழங்குவது ரகாரம் லகாரம் இரண்டும் வேற்றுமையில்லாமல் ஒலிப்பது பற்றி என்றுணரலாம். சாலி என வழங்குதல் அவர் நூலிலே காண்க. இம்மதுரைக் காஞ்சியிற் குறித்த கீழ்கடற் பொலந்தீவங்கொண்ட சிறப்பு நெடுஞ்செழியற்குக் கூறியதாலெனின் அஃது அவன் முன்னோர் பெருஞ்செயலை அவன் மரபில் வந்தவனுக் கேற்றி வழங்கியதே யாமென்க. "வெண்டலைப் புணரிவீசிக் கிடந்த பொற்றீவிற்ருகி" எனச் சிந்தாமணியில் (1184) வருதலான் பொற்றீவு கடல் சூழ்ந்த நிலமாவதை ஈண்டைக் கேற்ப நோக்குக. மதுரைக் காஞ்சியில் முன்னரும் இவ்வாறே,

"தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற்
றொன்முது கடவுட் பின்னர் மேய
வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந" (40-42)

என முன்னோன் புகழை இவனுக் கேற்றிக் கூறுதல் காண்க. இவ்வாறே,

"மறைமுது முதல்வன் பின்னர் மேய
பொறையுயர் பொதியிற் பொருப்பன்" (சிலப். 12)

என ஆரியப்படை தந்த நெடுஞ்செழியனைக் கூறுதலான் இவ்வுண்மை உணரலாம். இத்தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை "நெடியோனும்பல்" என்று இதன் பொருட்டே மதுரைக் காஞ்சியில் முற்படக் கூறிக்கொண்டாராவர். இது நெடியோன் செயலாதல்,

"அடியிற்றன்னள வரசர்க்குணர்த்தி" எனவருஞ்சிலப்பதிகார அடிகளால் அறியப்பட்டதாம். சிலப்பதிகாரம் உடையார் கடல்கோளுக்குப் பின்னரும் இவன் வடநாட்டுப் புக்கு இமயமுங் கங்கையுங் கொண்டானென்று கூறுதல் காண்க. இதனால் இவன் படையெடுத்துப் பிறநாடு கொள்ளும் படை வலியும் மன வலியும் இனிதுடைய பேரரசன் என்று கொள்ளலாம். இவன் பொன்படு தீவங் கொண்ட சிறப்பையே போற்றி இவன் சயமா கீர்த்தி எனவும், நெடியோன் எனவும் புகழப் பெற்றனனென நினைக்கத்தகும். சய என்பது யவத்தீவத்திற்குப் பெயராதல் காண்க. தேவர்க்கும் அசுரர்க்கும் இடையிற்புக்கு ஒருவீர் ஒருவீர் ஒறுப்பல் என்று சயமா கீர்த்தி கூறியதாக இறையனார் களவியலுரைகாரர் எழுதுவதும் இந்நிலத்து நிகழ்ந்ததேயாமென நினைக்கின்றேன். தம்மைத் தேவலோகத்தவராகச்சொல்லும் பழைய சீனர்களுக்கும் இத்தீவத்திலுள்ள காடுவாழ்நர்க்கும் நேர்ந்த போரில் இவன் இடைப்புக்குச் செய்த செயலையே இது குறிக்குமென்க. சீனரை வானவர் என்பதும் காடுவாழ்நரை அசுரர் என்பதும் வழக்கு. இல்லையேற் றேவாசுரர் யுத்தத்திலிவன் புக்கது கூறுதல் இயையாதெனவறிக. இவன் வென்று கொண்டபிறநாடு மலய (Sumatra) என இன்றுவரைவழங்குதலும் இவனுடையபொதியப்பொருப்பாகிய மலயம் பற்றியதாகும். மலய மாதவன் என்பது பொதியப் பொருப்பிலுள்ள அகத்தியனாதல் உணர்க. மதுரை என்பது கீழ்கடலகத்து யவத்தீவத்தையடுத்து இப்போதுள்ள தீவு ஆகும். மதுரைத்தீவமும் யவத்தீவமும் முன்னே ஒன்றாயிருந்த தென்ப. யவத்தீவத்தையடுத்து மதுரை என்றசிறுதீவும் உள்ளதுகாண்க. சங்ககாலத்து இத்தீவத்துடன் கடலில் வங்கத்தால் போக்குவரத்துண்மை குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை எருக்காட்டூர்த்தாயங் கண்ணனார்,

"வலம்படு தீவிற் பொலம்பூண் வளவன்" (புறம். 397)

எனக் கூறுதலான் நன்கு தெளியலாவது. நீவிற்பொலம்—நீவின் கண்ணுள்ளபொன். இப்பொன்னலாகிய பூண்களுடைமை வளவனுக்கு உரைத்தார். வலம்படு தீவு என்றார் எய்தற்கரிய செய்மையும் காவல்வன்மையும் உடைமைபற்றியென்க. இத்தீவாகிய சாவக நாட்டுடன் தமிழ் நிலைபெற்ற மதுரைக்குப் போக்குவரத்துள்ள தென்பது மணிமேகலையுட் பாத்திர மரபு கூறிய காதைக்கண்,

> "மாநீர் வங்கம் வந்தோர் வணங்கிச்
> சாவக நன்னாட்டுத் தண்பெயல் மறுத்தலின்
> ஊனுயிர் மடிந்த துரவோ யென்றலும்" (அடி. 73-75)

என மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் கூறியதனாலறியலாம். சாவகம் தீவுதானென்பது,

> "சாவக மன்னன் றன்னா டடைந்தபின்
> ஆங்கத் தீவம்விட் டருந்தவன் வடிவாய்ப்
> பூங்கொடி வஞ்சி மாகர் புகுவை"

(கந்திற்பாவை வருவதுரைத்த காதை 89-91)

என அவரே தீவம் எனக் கூறுதலான் அறிந்தது. "காழகத் தாக்கமும்" என்னும் பட்டினப் பாலைக்கு நச்சினார்க்கினியர், "கடாரத்திலுண்டான நுகரும் பொருள்களும்" என்று உரை கூறியது தமிழ்த் தென்னாட்டார் கீழ்கடற்றீவ நாட்டிற்குக் கலத்திற் சென்று வந்ததனைக் காட்டுமென்க.

இதற்கேற்ப யவத்தீவத்து மீனன் காப்பு என்னுமிடத்து இன்றுமுள்ள மலையரிடம் தம் முன்னோர்கள் இந்தியாவினின்று வந்ததாகக் கூறும் வழிவழிச் சரிதமுங் கேட்கப்படுவது காண்க. இத்தீவிலுள்ள இடம் மீனன் காப்பு எனப் பெயர் பெற்று நிற்பதே மீனக்கொடியுடைய மீனவர் காவலில் இப்பக்க நிலனிருந்தது புலப்படுத்துமென்க. Gerini என்னும் ஆசிரியர் மலையகுலன் (Meleon Kolan) என்று இத்தீவத்து வழங்குங்குடிப் பெயரை மலையர், சோளர் என்னுந் தென்னாட்டவர் பெயருடன் இயைத்துக் காட்டுவர். பிற்காலத்து எழுதப்பட்ட (Larger Leyden Grant) ராஜ ராஜ கேசரி வர்மன் தன் இருபத்தோராம் ஆண்டு ஆட்சியில் நாகப்பட்டினத்துச் சூளாமணி வர்ம விஹாரம் எனப் பெயரிய பௌத்தாலயத்துக்கு ஊர்கொடுத்த

சாசனத்தும் ஸ்ரீவிஜயாதிபதிக்கு மகரத் துவசமும் ஸ்ரீமாற விஜயோத்துங்கன் என்னும் பெயருங் கூறுதல் காண்க. யவத்தீவத்துப் பல படியாகப் பகுப்புண்ட பெரு நிலப் பெயர்கள் இன்றைக்குப் பாண்டியன், மதியன், புகார், பாண்டியவாஸம், மலையன் கோ, கந்தளி, செம்பூட்சேஎய் என வழங்குதல் காணலாம். கந்தளி என்பது அரசன் கொடியின் பெயர். இச்சொல் "கொடிநிலை கந்தழி வள்ளி" (புறத். 33) என்புழித் தொல்காப்பியனார் கூறியதாம். மதியன்—மதிகுலத்தவன், புகார்—ஆறுபுகும்கடற்றுறை; செம்பூட்சேய் அகத்தியனார் மாணாக்கருளொருவர் பெயராம் (இறையனார். 5. உரை). குறிஞ்சி, செங்கரை என்பன ஆண்டுள்ள குளங்களின் பெயர்கள். இவற்றோடு பொருந்தக் கீழ்கடற் பாகத்துச் சம்பா என்னும் நாட்டிற் கண்ட பழைய சாசனத்து (Vokhan Rock Inscription)

"ப்ரஜாநாம் கருணா...ப்ரதம விஜய
ஸ்ரீமார ராஜகுல...ஸ்ரீமார லோன்
குல नन्दनेन
ஆக்ஞாபதிம் स्वजनस-मद्ये
வாக்யம் ப்ரஜா ஹிதகரம்...கரி
ணோர்வரேண"

எனக் கூறுதல் காணலாம். ஸ்ரீமார ராஜ குலம் என்பது திருமாறனாகிய வேந்தன் குடி எ-று. ஸ்ரீமாரலோன் குலநந்தனன்—திருமாறனாகிய சந்திரகுலத்து மகன் எ-று. லோன் என்பது ஆலோன் என்னும் பெயரின் ஏகதேசமாகும். ஆலோன்—மதி. இவன் பாண்டியர் குல முதல்வனாதல் அறிந்தது.

இச்சாசனத்திற் 'ப்ரஜாநாம் கருணா' என்ற தொடர்ப் பொருளுக் கியைய,

"நிலந்தரு திருவி னிழல்வாய் நேமி
கடம்பூண் டுருட்டுங் கவுரியர்" (சிலப். அடைக்கலக். 1,2)

என்புழி அடியார்க்கு நல்லார், "நிலத்திற்குப் பல திருவினையுந் தரும் அருளாகிய நிழலிடத்தே நின்று நேமியை முறைமையான் மேற்கொண்டு செலுத்தும் பாண்டியர்" எனப் பொருள் கூறியதுங் காண்க. இச்சிறப்பிற்கியைய மேல் அழற்படுகாதையிற்,

" கொடுந்தொழில் கடிந்து கொற்றங் கொண்டு
நெடும்புகழ் வளர்த்து நானிலம் புரக்கும்
உரைசால் சிறப்பி னெடியோன் "

எனப் பாண்டியனைக் கூறினரென்க. கொடுந் தொழில் கடிதல் அருளுடைமையான் ஆம் என்பது தெள்ளிது.

போர்னியோ என்னும் பெருந்தீவில் அகப்பட்ட சாசனத்தில் கோன் துங்கன் என்பவனை அச்வவர்மன் மகனாகிய மூலவர்மனுக்கு மூதாதையாகக் கூறுதல் காணலாம். இது தமிழ்நாட்டுத்தொடர் புடைமையைக் காட்டுமென்க. கோன் தமிழ்ச் சொல்லாதலறிக. இத்தீவில் ஓடும் பேராறு பொருநை என்பது (Porunei). பிற யாறுகள் குடை, பரிதோ, கடுங்கோன் எனப் பெயர் பெறுவன வாம். இவையெல்லாம் தமிழ்ப்பெயரேயாதல் உணர்க.

இங்ஙனம் கீழ்கடற்றீவநாடுகட்கும் இத்தமிழ் நாட்டிற்கும் பலவகையானும் தொடர்புடைமை புலப்படுதலான், நெடியோ னெனப் பல்லிடத்துங் கூறப்பட்ட நிலந்தருதிருவிற் பாண்டியன் அக்கரையிலுள்ள ஆழி, தன்பாதபிம்பத்தை அலம்பும்படி நின்ற வன் ஆகவுணர்தலே பொருந்திய தென்க. இக்காரணத்தானே நெடுந்தூர நிலவுலகுந் தன்னடிக் கீழ்ப்படுத்திய திருவிக்ரமனா கிய நெடியோனை யொப்ப நின்றான் என்பது பற்றி நெடியோன் என்றார் என்க. இவனே ஏழிசை நூற் சங்கத்திருந்தான் என்று புகழேந்தியார் கூறுதலான் இவன் ஏழிசைவளர்த்தவனும், நூல் வளர்த்தவனும், நூற் சங்கம் காத்தவனும், சங்கப் புலவருட னிருந்தவனும் ஆவன் என்க. ஏழிசைச் சங்கம் எனவும் நூற் சங்கம் எனவுங் கொள்ளத்தகும்.

" உயர்மதிற் கூடலி னாய்ந்தவொண் டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோவன்றி
யேழிசைச் சூழல்புக்கோ " (திருக்கோவையார்)

என்றார் ஆளுடைய அடிகளும். 'பாரகப்போர் செற்றானும்' என்பதும் பாரகம்—கரையை அடையும் வங்கம். பாரம்— கரை. சங்க காலத்துச் சிறந்த நாவாய் கொண்டு பெருங்கடற் சென்று வருதலுண்டென்பதும், அது பாண்டிநாட்டார்க்குச் சிறந்ததென்பதும்,

" விழுமிய நாவாய் பெருநீ ரோச்சுநர்
நனந்தலைத் தேளத்து நன்கல னுய்ம்மார்
புணர்ந்துடன் கொணர்ந்த புரவியோ டனைத்தும்
வைக ளூறும் வழிவழி சிறப்ப " (அடி, 321-324)

என மதுரைக்காஞ்சியுள் வருதலானறியப்படும். இதன்கண் விழுமிய நாவாய் என்றார் பிறர் செல்லாத பெருங்கடலிற் சேறல் குறித்து. புணர்ந்துடன் கொணர்ந்த புரவி கீழ்கடலுட்டனவுமாம் மேல்கடலுட்டனவுமாம். பழைய பாண்டியர் கடற் கப்பாலுள்ள நாட்டாருடன் நட்பும் பகையும் பூண்டொழுகிய செய்தி,

" முழங்குகட லேணி மலர்தலை யுலகமோ
டுயர்ந்த தேளத்து விழுமியோர் வரினும்
பகைவர்க் கஞ்சிப் பணிந்தொழு கலையே" (199-201)

என மதுரைக்காஞ்சி கூறுதலானுய்த்தறியலாம். இதன் கண்ணே கடலேணி மலர் தலை யுலகம் என்றது கடலெல்லையிற் பரந்த நிலவுலகமும் அதன்கண் உயர்ந்த தேயங்களும் ஆண்டு விழுமியோரும் உண்டென்று கூறுதல் காண்க.

ஆரியன் (Arrian) என்னும் மேற்றிசையறிஞர் இந்திகா என்னு நூலிலே கப்பற்படையும் அப்படைத் தலைவனும் இந்திய நாட்டுண்மை கூறுதல் காண்க.

(Mcrindle's Ancient India, p. 218)

தொல்காப்பியனார்,

" இருவகைப் பிரிவு நிலைபெறத் தோன்றினும் "

(அகத். 11)

என்பதனாற் கலத்திற் பிரிவு உடன்படுதலும் அதற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர்,

" உலகு கிளர்ந்தன்ன வுருகெழு வங்கம்
புலவுத்திரைப் பெருங்கட னீரிடைப் போழ
இரவு மெல்லையு மசைவின் றாகி
விரைசெல லியற்கை வங்கூ ழாட்டக்
கோடுயர் திணிமண லகன்றுறை நீகான்

மாட வெள்ளெரி மருங்கறிந் தொய்ய
ஆள்வினைப் பிரிந்த காதலர் " (அகம். 255)

என்பதனை உதாரணங் காட்டுதலுங் கண்டுகொள்க: கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி " (புறம் — 182) என்னும் பெயரும் அடையும் இப்பாண்டியர் குடியில் அரசர் பெருமக்கள் கடலிற் சென்றதை நன்கு குறித்தல் காண்க.

மற்று வேள்வி முடித்தலும் யூபநடுதலும் பார்ப்பன ஒழுக்க முறைகளும் அவர் நூல் வழக்குகளும் இக்கீழ் கடல் நாட்டுமிருந்தன கேட்கப்படுமாலெனின், அவையெல்லாம் இந்நாவலந்திவிற்றெற்கணுள்ள தமிழ் நாட்டிற்கும் ஒத்தனவேயாமென்க.

" நசைதர வந்தோர் நசைபிறக் கொழிய
வசைபட வாழ்ந்தோர் பலர்கொல், புரையில்
நற்பனுவல் நால்வேதத்
தருஞ்சீர்த்திப் பெருங்கண்ணுறை
நெய்ம்மலி யாவுதி பொங்கப் பன்மாண்
வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி
யூப நட்ட வியன்களம் பலகொல்
யாபல கொல்லோ பெரும "

(புறம். 15)

எனப் பாண்டியஃ பல் யாகசாலை முதுகுடுமி பாடப்படுதலான் அறிக. அருந்தவ முனிவராகிய அகத்தியர் வழியிற் பெரியோரை வழிபட்டொழுகிய இப்பாண்டியர் குடியில் வேத வழக்கொடு பட்டனவெல்லாம் உளவாதல் எளிதேயாமென்க. அக் கீழ்கடனாட்டும் அகத்தியர் பிம்பவழிபாடு பலவாகக் கேட்கப்படுதலுங் காண்க. இவற்றிற் கேற்பவே பூநன் நாட்டார் (Funan) இக் கீழ்கடனிலத்தைப் பார்ப்பன ஒழுக்கம் போற்றிய ஹாண்டி (பாண்டி) என்னும் அரசன் வந்து கைப்பற்றினனென்று வழி வழிக்கதையாகக் கூறுவர் என்பர். பாண்டியே ஆண்டியாம்; இது பள்ளி என்பதனை ஹள்ளி எனக் கன்னடத்து வழங்குவது போன்றது. வேற்று நாட்டு வழங்கும் இப்பழங்கதையொடு பொருந்தப் பாண்டியர் மரபினை நல்லிசைப் புலவர் (குடபுலவியனார்),

முழங்கு முந்நீர் முழுவதும் வளை இப்
பரந்துபட்ட வியன்ஞாலம்
தாளிற் றந்து தம்புகழ் நிறீஇ
ஒருதா மாகிய வுரவோ ரும்பல்'' (புறம். 18)

என்பதனால் ஏத்தெடுப்பாராயினர் என்க. இதன்கண் முந்நீர் முழுதும் வளைந்து பரந்து கிடந்த அகன்ற பூமியைத் தம்முயற்சியாற்றந்து தம் புகழை நிறுத்தி ஏகாதிபதிகளாகிய வலியோர் வழித்தோன்றினையென்று தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைக் கூறுதல் காண்க. ஈண்டுக் கூறியதையும் முந்நீர் இரும்பவ்வத்துச்சீர் சான்றவுயர் நெல்லினூர் கொண்டவுயர் கொற்றவ என்பதையும் சேரவைத்து நோக்கி ஆராய்ந்து கொள்க. பண்டைக் கபாடபுரத்தில் ஸாகரத்வஜன் என்னும் பாண்டியனிருந்தான் என்று மகாபாரதத் துரோண பருவம் (23) கூறுதலும் ஈண்டைக்கு நினைக: கடலைக் கொடியாக வளைந்தானென்பது அக்கடலாற்றான் பெற்ற சிறப்பினைக் குறித்ததாகும்.

இத்துணையுங் கூறியவாற்றாற் றொல்காப்பியனார் காலத்துப் பாண்டியன் வரலாறு ஒருவாறுணரலாம். இவன் பாடிய பாடல்கள் நற்றிணையின்கணுள்ளன இரண்டாம். அவற்றுள் முன்னது,

'' முளிகொடி வலந்த முள்ளரை யிலவத்
தொளிர்சினை யதிர வீசி விளிபட
வெவ்வளி வழங்கும் வேய்பயின் மருங்கிற்
கடுநடை யானை கன்றொடு வருந்த
நெடுநீ ரற்ற நிழலி லாங்க
ணருஞ்சுரக் கவலைய வென்னாய் நெடுஞ்சேட்
பட்டனை வாழிய நெஞ்சே குட்டுவன்
குடவரைச் சுனைய மாயிதழ்க் குவளை
வண்டுபடு வான்போது கமழு
மஞ்சி லோதி யரும்பட ருறவே'' (நற். 105)

முளிகொடிவலந்த—காய்கின்ற கொடி சுற்றிய; முள்ளரையிலவத்து—அரையில் முள்ளுடைய இலவத்தின். ஒளிர்சினையதிரவீசி—விளங்குங்கொம்பு நடுங்க எறிந்து. விளிபட—ஓசையுண்டாக. வெவ்வளி வழங்கும்—வெய்யகாற்றுச் செல்லும் ஆங்கண் என்க. வேய்பயில் மருங்கில்—மூங்கில்கள் நெருங்கிய

பக்கத்தில், கடுஞ்சூடையால் யானை கன்றொடு வருந்தாநிற்கப்பேய்த் தேரை நீரென்று விரைதலாற் கடுநடை கூறினர். யானை பிடியுங்களிறுமாம். நீரற்ற நிழலில்லாத நெடிய அவ்விடத்து, செல்லற்கு அரிய வழிகள் பலபடியாகக் கவலைப்பட்டன என்று புறப்படுதற்கு முன்னே கருதாய். குட்டுவன்—சேரனது. குடவரைச் சுனைய—கொல்லிக் குடமலையிலுள்ள சுனையிடத்தனவாகிய. மாயிதழ்க்குவளை—கரிய இதழ்களையுடைய குவளையின். வண்டுபடுவான்போது—வண்டுகள் வீழ்கின்ற சிறந்த பூக்கள். கமழும் அஞ்சிலோதி—கமழ்கின்ற அழகிய மெல்லிய அளகத்தையுடையாள். அரும்படருறவே—அரிய துன்பம் அடையவே. நெடுஞ்சேட்பட்டனை—நெடிய சேய்மைக்கண் எய்தினை. நெஞ்சே வாழிய என்றான். இடைச்சுரத்துமீளின் அஞ்சில் ஓதியரும்படருறவேசேட்பட்டனையாவையல்லது வினைமுற்றாமையால் வேறு பயனெய்தினையாகாய் என்று கழறினானும். வாழிய என்றான் அஞ்சிலோதிபாற்சென்று வாழ்வாயாக என்று மனையினுள்ளபோது அருஞ்சுரக்கவலைய என்னாய் என்னை இங்கு நெடுஞ்சேட் படுத்தனை எனினு மமையும்.

"வானவன் கொல்லிக் குடவரை." (அகம். 213)

என்பது காண்க. மற்றது.

"என்னெனப் படுமோ தோழி மின்னுவசி
பதிர்குர லெழிலி முதிர்கடன் றீரக்
கண்டூர்பு விரிந்த கனையிரு ணடுநாட்
பண்பி லாரிடை வரூஉ நந்திறத்
தருளான் கொல்லோ தானே கானவன்
சிறுபுறங் கடுக்கும் பெருங்கை வேழம்
வெறிகொள் சாபத் தெறிகணை வெரீஇ
யழுந்துபட விடரகத் தியம்பு
மெழுந்துவீ ழருவிய மலைகிழ வோனே" என்பது
(நற். 228)

சிறுபுறங் கடுக்கும் பெருங்கை வேழம்—மகளிர் பின்னிவிட்ட சிறுபுறத்தை ஒக்கும் பெரிய கையையுடைய யானை.

"பிடிக்கை யன்ன பின்னுவீழ் சிறுபுறத்துத்,
தொடிக்கை மகடூஉ" (சிறுபாணாற்றுப்படை 191, 192)

எனவருதல் காண்க. கானவன் வெறிகொள் சாபத்தெறிகணை வெரீஇ—குறவனது அச்சங் கொள்ளும் வில்லினின்று எறியப் படும் அம்பிற்கு அஞ்சி. அழுந்துபட—அழுந்துதல்பட ; ஒடுங் காநிற்க. விடரகத்து இயம்பும்—மலைப்பிளப்பில் ஒலிக்கும். எழுந்துவீழருவிய மலைகிழவோன்—உயர்ந்து வீழ்கின்ற அருவியை"யுடைய மலைக்குரிய தலைவன். மின்னுவசிபு—மின்னை வளைத்துக்கொண்டு.அதிர் குரலையுடைய மேகம், முதிர்கடன்றீர—தொன்றுதொட்டுள்ள தன் கடப்பாட்டைச் செய்துதீர. கண்டேர்பு விரிந்த கனையிருணடுநாள்—கண் தூர்ந்து பரவிய செறியிருளில் நாள் நடுவில். பண்பில் ஆரிடைவருஉம்—தீமையையுடைய அரிய வழியிற் களவில் வருவான். நந்திறத்துத்தானே அருளான் கொல்லோ—இவ்வாறு களவே இன்பமாக இடையூறு கருதாமல் வருபவன் நம்மிடத்து ஒருவர் சொல்லாமற்றானுகவே மணந்தருளல் செய்யானோ. சாபம் வடமொழி.

இவற்றுள் முன்னதன்கட்குட்டுவனைக் கூறுதலால் இவ்வேந்தன் காலத்துச் சேரன் குட்டுவன் எனப்பட்டானெனத் தெரிகிற்பது.

" ஒன்னார்,
வடபுல விமயத்து வாங்குவிற் பொறித்த
எழுவுறழ் திணிதோ ளியறேர்க் குட்டுவன் "

(சிறுபாண். 47-49)

என்புழிக்குட்டுவன் குட்டநாட்டையுடையோனென நச்சினார்க்கினியர் பொருள் கூறுவர். இதனால் இவன் பரசிராமன் வருணனை வேண்டி மேற்குத் தொடர்ச்சி மலைக்கப்பாற் பெற்ற நிலப் பகுதியிலுள்ள குட்டநாடுண்டாய பின்னர் அதனை உடையனாயினவன் என உய்த்துணரலாகும். அகப்பாட்டில், (127)

வலம்படு முரசிற் சேரலாதன்
முந்நீ ரோட்டிக் கடம்பறுத் திமயத்து
முன்னோர் மருள வணங்குவிற் பொறித்து
நன்னகர் மாந்தை முற்றத்து "

என மாமூலனார் கூறுதலான், இமயத்து விற்பொறித்தவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்பது அறியக்கிடப்பது. இதன்கண் "முன்னோர்மருள இமயத்துவணங்குவிற்பொறித்து"

என்றதனால் இவனே இமயவிற் பொறித்தவனாகக் கருதப்படுவான்; இமயம்விற்பொறித்தவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனாதல் பதிற்றுப்பத்து இரண்டாம்பத்தால் நன்கறிந்ததாம்; அவன் கண்ணகிக்குக் கோயிலெடுத்த செங்குட்டுவனுக்குப் பல தலைமுறை முற்பட்டவன் என்பது மணிமேகலையுட் கச்சிமாநகர் புக்ககாதையில், "குட்டுவர் பெருந்தகை விடர்ச்சிலை பொறித்த வேந்தன்" எனவும், "நின்பெருந்தாதைக் கொன்பது தலைமுறை முன்னோன் கோவலன் மன்னவன் றனக்கு நீங்காக் காதற்பாங்கன்" எனவும் கூறுதலான் அறிந்தது; இமயவரம்பன் றம்பி பெயரும் குட்டுவனாதல் "போரடுதானைப் பொலந்தார்க்குட்டுவ" என்பதனாலறியலாம். இதனால் திருமாறன் பாடிய குட்டுவன், சேரலாதனுக்கு முந்திய சேரருள் ஒருவனாவனென்க. மதுரைக்காஞ்சியிற் "பல்குட்டுவர் வெல்கோவே" (அடி 105) எனப்பாடுதலான் குட்டநாடுடையார் பலராவர் என்றும் அப்பலருள் குடவரையுடைமை இவனுக்குக் கூறுதலான் இவனே தலையாய சேரனென்றும் கொள்ளலாம்.

முடத்திருமாறன் இவனைப்பாடுதலால் அப்போது இவன் அவற்கு நட்பினனாகக் கருதப்படுவான். கீழ் கடனாட்டுப்பேரக்கு (Perok) என்ற இடத்திற் கிடைத்த இரண்டு முத்திரையில், "ஸ்ரீபதி குட்டஸ்ய" என்ற பெயருடையதொன்று. மற்றொன்று "விஷ்ணுவர்மஸ்ய" என்ற பெயருடையது. பின்னது விஷ்ணுவர்மண; என்றிருக்க வேண்டுவது அப்படி எழுதப்பட்டுள்ளது. இம்முத்திரைகள் நெடியோன் பெயரையுங் குட்டுவன் பெயரையும் உடையனவாதல் வியப்பைத்தருவது. அவை நாவலந்தீவிற் றென்னாட்டெழுத்தாக வடமொழியிலுள்ளன. (J.R.A. Malaya, XIV, 1936) சேரன் என்ற தீவும் அக்கடனாட்டுண்டு.

இனி இத்தொல்காப்பியனார் காலத்துச் சோழன் இவனெனத் துணியலாவதில்லை. அகத்தியனார் காலத்துச் சோழன் காந்தன் என்பதும் அவன் பரசிராமற்குமறைந்தொழுகியவாறும் மணிமேகலையுட் கேட்கப்படுதலான் அவன்வழியிலொருவன்றான் ஆர்புனைந்த சோழன் என்பதே தக்கதாகும். தொல்காப்பியனார் மரபியலில்,

"படையுங் கொடியுங் குடையு முரசும்
நடைநவில் புரவியுங் களிறுந் தேருந்

தாரு முடியு நேர்வன பிறவுந்
தெரிவுகொள் செங்கோ லரசர்க்குரிய (71)

எனக் கூறுதலான் இம்மூவரும் தத்தமக்குரிய படை, கொடி, குடை, முரசு, புரவி, களிறு, தேர். தார், முடி, செங்கோல்முதலியன உடையராய் விளங்கினரென்பது அறியப்படுவது.

" அந்தணாளர்க் கரசுவரை வின்றே " (ஷை. 82)

எனவும்,

"வில்லும் வேலுங் கழலுங் கண்ணியுந்
தாரு மாரமுந் தேரும் வாளும்
மன்பெறு மரபி னேனோர்க்கு முரிய " (ஷை. 83)

எனவும், கூறுதலான் இவர் காலத்து அந்தணரும் அரசியல்பூண்டொழுகினர் என்றும், அரசுபெறுமரபிற் குறுநில மன்னர் பலரிருந்தனர் என்றும் கொள்ளலாம்.

" இருபெரு வேந்தரொடு வேளிர் சாயப்
...........................................
பொருதவரைச் செறுவென்று
நிலந்தந்த பேருதவிப்
பொலந்தார் மார்பி னெடியோன் " (மதுரைக். 55-61)

என இவர் காலத்து நிலந்தரு திருவிற்பாண்டியனைக் கூறுதலான் வேளிராகிய குறுநில மன்னர் பலரிருந்தது புலனும். இவ்வேளிர் அகத்தியனொடு தென்னடுவந்தவராதலால் இவரைத் தொன்முதிர்வேளிர் (புறம். 24) எனப்பல்லிடத்தும் நல்லிசைப் புலவர் கூறிச் செல்வர். பதிற்றுப்பத்துட் பல்லிடத்தும் "வேந்தரும் வேளிரும் " (30, 49, 75, 88) என வருதலுங் காண்க.

# தொல்காப்பியப் பழைமை

இனித் தொல்காப்பியனார்,

" மறைந்த வொழுக்கத் தோரையு நாளுந்
துறந்த வொழுக்கங் கிழவோற் கில்லை "

(தொல். களவி. 44)

என்புழி ஓரை என்னுஞ் சொல்லான் கோள்கள் நிற்கு நிலையி னைக்கூறினார் என்பது கற்றாரறிந்தது. ஓரை ஈண்டுத் தீயகோள் நிலைக்காயிற்று. இந்த ஓரை யென்னுஞ் சொல் ஹோரா என்னும்யவன மொழியின் றிரிபுஎன்பது பலர்கொள்கையாம். கோள் நிலையைக் குறித்த இச்சொல் வழக்கினை இந்நூலுட்காண்டலால் இச்சொல்லைத் தம் நூலில் எடுத்தாண்டவராஹமிஹிரர் காலத்திற்கு அஃதாவது கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிற்குத் தொல்காப்பியனார் பிற்பட்டவராவர் என்று கருதினாரும் உண்டு. *

இச்சொல்லினை அஹோராத்ரம் என்னும் வடமொழித் தொடரின் முதலுமீறுங்கடையுமொழித் துண்டாகிய தென்பாருமுண்டு. இஃது யவனமொழியென்றே கொள்ளினும் மொழி வழக்குண்டாகிய காலம் இறப்பப் பிந்தியது என்று கொள்ள வேண்டியதில்லையாம். கடலிற் கலத்திற் சென்றுவருதலால்தென்னாட்டவர்க்கு யவனருடன் தொடர்பு கிறீஸ்து பிறத்தற்கு எத்துணையோ முந்திய நாள் தொட்டதாகும். இந்நாவலந் தீவிற்கு யவனத் தொடர்பு அலெக்சாந்தர் படையெடுப்புத் தொட்டுண்டாயதென்பதில் ஐயமேயில்லை. சந்திரகுப்த வேந்தன் அவைக்களத்து யவனாசிரியன் மெகாஸ்தினிஸ் போந்தமர்ந்தது பலரும் அறிந்தது. யவனர் இந்தியாவின் வடமேற்குப் பாகத்து அரசு நிலையிட்ட செய்தியும் நன்கறிந்ததாம். இந்த யவனர் வளநாட்டைத் தொல்காப்பியனார் குறித்த பேரரசர் மூவருள்போர்தைத் தாரினனாகிய சேரன் ஆண்டது,

---

* Journal of the Royal Asiatic Society, 1924, p. 665

"வன்சொல் யவனர் வளநா டாண்டு
பொன்படு நெடுவரை புகுந்தோ னாயினும்"
(சிலப். நடுகற். 141—42)

எனவும்,

"வன்சொல் யவனர் வளநாடு வன்பெருங்கல்
.........செருவிற் கயற்புலியான்"
(சிலப். வாழ்த்து. ஊசல்வரி)

எனவுங் கூறுதலான் அறிஞர் அறிவர். யவனர் இத்தென்னாட்டிற்குக் கலத்தில் வரவும் போக்கும் உடையராதல்,

"சேரலர்,
சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினைமா ணன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி" (அகம். 149)

என வருதலான் அறிந்தது. இவ்வாறு யவனருடன் தமிழரசரும் தமிழரும் பயிலுதல் கேட்கப்படுதலான் யவனராண்ட ஓரா என்னுங்கோள் நிலைக்குரிய சொல் அவ்யவனர் இந்நாட்டிற் புக்க காலந் தொட்டுண்டாய தென்றற்கண் இழுக்கேயில்லையென்க.

இந்த யவனரை யெடுத்தாண்ட பழைய தமிழ் நூல்கள்,

"வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்" (அடி 61)

எனவரும் முல்லைப்பாட்டும்,

"யவனர் ஓதிம விளக்கின்" (அடி 316-17)

எனவரும் பெரும்பாணாற்றுப்படையும்,

"யவன ரியற்றிய வினைமாண் பாவை" (அடி 101)

எனவரும் நெடுநல் வாடையும்,

"யவனர் தந்த வினைமா ணன்கலம்" (149)

எனவரும் அகப்பாட்டும்,

"யவனர்

நன்கலந் தந்த தண்கமழ் தேறல்" (56)

எனவரும் புறப்பாட்டும்,

" வன்சொல் யவனர்ப் பிணித்து "
எனவரும் பதிற்றுப் பத்துப் (20) பதிகமும்

" வன்சொல் யவனர் வளநா டாண்டு
பொன்படு நெடுவரை புகுந்தோ னாயினும் "
(சிலப். நடுகற். 141-142)

எனவும்,

" வன்சொல் யவனர் வளநாடு வன்பெருங்கல்
தென்குமரி யாண்ட செருவிற் கயற்புலியான் "

எனவும் வரும் சிலப்பதிகாரமும் (வாழ்த்துக்காதை)

" யவனத் தச்சரும் "
(சிறைக்கோட்ட மறக்கோட்டமாக்கிய காதை (108)

எனவரும் மணிமேகலையும் ஆகும். இவற்றால் பழைய தமிழ் மக்களுக்கு யவனருடன் உள்ளபலவகைத்தொடர்பும் இனிதறியலாம். இத்தமிழ் மூவேந்தரும் வேளிரும் யவனரும் பண்டு தொட்டேபயின்ற தொடர்புடையரென்பது அசோகசாசனங்கள் (Girnar, Strabo, Goati Kaslan, Manschea என்னுமிடங்களிலுள்ளன) பலவற்றில்,

" சோள பாண்டிய ஸதியபுத்ர, கேரளபுத்ர
தாமப் பண்ணி, சந்தியாகோநாம யோநராஜ "

எனவரும் தொடரால் நன்கறிந்ததாம்.

(Ind. Antiquary, Vol. XLVIII, பக்கம் 24 பார்க்க).

அசோகன் காலத்து இந்நாவலந்தீவின் வடக்கண் ஒரு பகுதியிலிருந்த யவனராஜன் துஷஸ்பா என்பவன் ஆவன். (ஷை Vol. VII, பக்கம் 20-ம், ஷை XXII, பக்கம் 195-ம் பார்க்க,)

இனிப் பாண்டவருள் யுதிஷ்டிரன் தந்தைக்கு நண்பனாகிய பகதத்தன் என்பவன் யவனராஜன் என்பது ஆதிபர்வம்வல்லவர் அறிவர்.

இத்துணையுங் கூறியவாற்றால் யவனருடைய ேஹாரா என்னுமொழி பண்டே தமிழிற்றிரிந்து திசைச் சொல்லாய் வழங்கற்குத் தடையில்லாமை அறிக. சங்க நூல்களையுடைய எட்டுத் தொகையுள் ஒன்றாகியபரிபாடல்,

'தள்ளாப் பொருளியல்பிற் றண்டமிழாய் வந்திலார்
கொள்ளாரிக் குன்று பயன்"

என்பதனுல் இத்தொல்காப்பியனுர் பொருளிலக்கணத்தை எடுத்தாளுதல் காணலாம். ஈண்டுப் பொருளியல்பிற்றமிழ் என்பதற்கு உரையாளர் பரிமேலழகர் "பொருளிலக்கணத்தையுடைய தமிழை" என உரை கூறியது நோக்கிக்கொள்ளலாம். இறையனுர் களவியலுரைகாரர் இதற்கேற்பவே கடைச் சங்கத்தாருக்கு நூலாயிற்றுத் தொல்காப்பியம் என்றுரைத்தலும் தெளியலாம்.

"ஐந்திர நிறைந்த தொல்காப்பியன்"

எனப் பாயிரத்துக் கூறலான், இத்தொல்காப்பியனுர் காலத்தே ஐந்திரவியாகரண வுணர்ச்சி சிறந்ததாக மதிக்கப்பட்டதென நினைதல் தகும். பரணர் பாடிய ஐந்தாம் பத்துக்கொண்ட செங்குட்டுவன் தம்பியாகிய இளங்கோவடிகள்காலத்தே இவ்வைந்திர வியாகரணம் வழக்கற்று அருகியதென்பதும், அவர் காடுகாண் காதைக்கண்,

"புண்ணிய சரவணம் பொருந்துவி ராயின்
விண்ணவர் கோமான் விழுநூ லெய்துவிர்" (98-99)

எனவும்,

"கப்பத் திந்திரன் காட்டிய நூலின்
மெய்ப்பாட் டியற்கையின்விளங்கக் காணுய்" (154-155)

எனவும் கூறுதலான் அறியப்படும். இதனுல் ஐந்திரம் வழங்கிய காலத்திற்கும் ஐந்திரம் அருகிய காலத்திற்கும் இடையிட்ட காலம் பேரளவினதேயாக வேண்டப்படுமாதலானும்தொல்காப்பியனுர் காலம் பிந்தியதாகாது என்று ஒரு தலையாகக் கொள்க. இதற்குப் பொருந்தவே,

"வேந்தனும் வேந்து கெடும்" (குறள் 899)

என்புழி இந்திரனும் அரசுகெடும் என்று திருவள்ளுவனுரும் தொல்காப்பியனுர் "வேந்தன் மேயதீம்புன லுலகம்" எனக் கூறியதையே தழுவிக் கூறியது காண்க. இவற்றல் தொல்காப்பியத்தின் பழைமை நன்குணரப்படும் என்க.

# அநுபந்தம்

## ஒப்புமை மொழிகள்

### 1. ஸோமாலி

Ad - அது
An - நான்
Abba - தந்தை
Abban - காப்பவன்
Absi - அச்சம்
Absila - அச்சமில்லா
Ād - வலிமை ; தசை
Ādi - வெள்ளாடு
Agṭi - அடி [கால்]
Ahḍi - அட்டிக்கொடுத்தல் [oath]
Ahal - அகனுள்
Ahīr - ஈறு
Ahri - அறி
Aiya - பெரியாரைக் குறிக்குஞ் சொல்
Alaal - அழுதல்
Amar - அமர்தல்
An - இல்லையாதல் [எதிர்மறை] ஆன்றல்
An - அது
An - அநு
Ār - அறுகு [சிங்கம்]
As - ஆழ் [to bury]
Awwai - பாட்டி ; ஔவை
Ayar - விளையாட்டு [அயர்தல்]
Badki - பாதி
Bāh - போ
Bahi - பசி
Bāh - திரிந்தபால்
Bari - பரிதல் [to beg]
Baris - அரிசி
Baru - பருமை
Bās - பாழ்
Beir - பயிர்
Perri - பிற்றை [morrow]
Bihi - ஈ [to give]
Boli - பொலிசை [booty]
Born - பொந்து
Buḍai - புடைத்தல்
Boor - பொறை [மலை]
Dahar - தகர்த்தல்
Dalal - தழல் [ஒளி]
Dalo - துளை
Damai - சமை [complete]
Ushbu - உப்பு
Al-har - அளறு
Dari - தரி
Dean - தீம் [இனிது]
Diptan - தித்தன் [வலியன்]
Dikri - [திகிரிப்புதர்] [bamboo bush]
Duni - திணை [world]
Erai - இரைச்சல்
Eri - எறிதல்
Fol - பல்

Gael - கேள் [Relations]
Godi - கோடி [Border]
Gudıhi - குடியுள் [inside]
Gūn - கூன்
Hāḍal - பேச்சு
Hārad - ஆராட்டம் [தாகம்]
Hēl - ஏல் [to acquire]
Hel - நிலா
Hur - உருப்பம் [heat]
Hal - கள்
Hān - பசுங்கன்று
Hanan - அணத்தல் [lifting]
Haul - ஊழ் [will or word of God]
Huḍa - உடை
Huḍ - ஒற்றை
Kāb-பாதக்காப்பு [sandals]
Kādi - சிறுநீர் [urine]
Kāl - காலம்
Eib - இப்பர் [buying]
Ido - இடை [sheep]
Imo - வருதல் [வந்திமோ]
Idal - மிடல் [வலி]
Maḍa - மண்டை [head]
Markāb - மரக்காயர்
*Mayai* - மழை
Nāg - பெண் [நாகு]
Wāan - நல்லது
*Wehel* - வேள் [God]
Wēl - வேள் [வேட்கோவர்]
Yān - நான்
Yā - என்
Yāb - வியப்பு
Yēlo - ஏல்

2. எகிப்துத் தொன்மொழி

## Egyptian

Pth - புதவம் [door]
Qebh - கொப்புளித்தல்
Sāṭ - சாடுதல்
Mer - மருவுதல்
Stā - தா [to bring]
Xeper - பெறு
Xat - சட்டகம் [body]
Atf - அப்பா
Sēru - சேரன் [prince]
Usaru - உறழ் [power]
Hru - இன்று [day]
Tā - இடம்
Enu - எண்ணு
Ahu - ஆ [oxen]
Hemt - பெண்டு
Mūṭ - தாய் [மூது]
Heṭ - வீடு
Mesu - மழலை
Sti - தீம் [Sweet]
Aut - ஆடுமாடு
Seṭam - சடங்கு
Qenau - கணவன் [to embrace]
Kā - காளை [bull]
Xaṭ - அகடு [வயிறு]
Xeps - சப்பை [thigh]
Mū - தண்ணீர் [கொண்மூ]
Ādi - முதல்வன் [prince]
Her - தலைவன், ஏறு
Aṇ - ஆணை

Xā - சேய் [son]
Behez - பசு
Āh - கன்று
Bī - ஈ [flea]
Ur - உறு [great]
Teṭṭa - தேற்றம் [everlasting]
Seps - செப்பம்
Qem - கருமை [கருங்கொம் மெனல்]
Senti - சேந்தி [களஞ்சியம்]
Per - புரை [house]
Āu - அம்பு [see ஆவம்]
Ūral - chariot - ஊர்தி
An - ஆன்ற [not]
Pehṭ - பெற்றி [strength]
Ter - தெறு [to destroy]
Xai - சாய் [to defeat]
Uer - உயிர்
Am - அம்மம் [to eat]
Ī - வருகை [to come] வந்தீ
Per - பெயர்தல் [to come out]
Aq - வகு
Sāāt - சாதுக்கள்
Baṭ - வட [North]
Mena - மன்னை - சாவு [மன்னைக்காஞ்சி]
Nāṭ - நாடு
Xeṇṭ - செண்டு [throne]
Sāṭu - சாத்து [strange people]
Tennu - எண்ணு
Yōr - ஆறு
Nā - நான்
An - [அவன்] வந்தனன்
Heru - ஏறு [upper]
Heṇṭu - ஒன்று
Nā - me
Theru - எல்லை, தெரு
Ten - பெருமை, அழகு
Āuṭaṭan - ஆடவன்
Nāiṭ - நாடு
Tamu - மக்கள்
*Manbit* - படைமக்கள் மன்பதை. [பதிற்று. 40] [மன்பது. பரிபாடல். 15.]
Xaṭ - சாத்து [companies]
Āru - வகை
Xuṭ - கூடிடம் [horizon]
Hai - ஐ, தலைவன் [husband]
*Sennabum* - யானைக்கொம்பு Sen பல், இபம் - யானை
Sāt - சாடு
Hetep - எடுப்பு [offering]
Sem - செம்மல் [leader]
Chefṭa - செற்றார் [enemies]
Hena - ஒடுப்பொருள். எனு [and]
Ret - இரட்டை
Men - மன்னுதல்
Una - one
Aas - அழுக்கறுத்தல்
Āuv - ஔவை
Ām - காட்டுப்பசு

### 3. Amharic

Tincal - முயல் [hare]
Bis - பிழை
Ukkul உக்கல் [அரை]
Tinụ - திண் [hard]

Gotara - கொட்டாரம் [granary]
Dūr - காடு, தூறு
Tiru - தூய்மை [clearness]
Kunju - குஞ்சம் [tuft]
Woḍḍaqa - ஒட்டகை
Worye - உறை
Inguḍai - ஈன்குடை [ஆம்பி]
Irub - இருப்பு
Mēda - மேடை [plain]
Mulu - முழு
Qolam - கோலம் [painting]
Miṭ - மிடி [pain]
Ambal - அம்பலகாரன் [officer]
Kazzih - கழிதல்
Bizu - விழு [much]
Qalakkala - கலக்கல்
Misa - ஊண் [மிசை]
Quella - கொல்லை
Quoha - கூகை
Byeṭ - வீடு
Bāraḍ - பாராட்டு
Tirye - திறை [grain as one kind of tribute]
Monna - மொண்ணை [fool]

Maḍḍ - மடுத்தல் [food]
Tanad - தணத்தல்
Fyenta - பந்து
Afkara - அக்கறை [love]
Gwhoṭ - கோடு
Iṭu - அட்டு [சிறிது]
Eṇ - என்
Ibāb - பாப்பு

## 4. Assyrian

Nāru - ஞாறு, யாறு
Tā - தருகை
Qaṭ - கட்டுதல்
Kī - வேறு
Ketat - கெட்டது.
Bāi - பேய்
Baq - பாக்கு
Ush - அழு
Aār - ஆர்த்தல்
Akeṭu - அகடு, வயிற்றுணவு
Aṭu - அடுதல்
Kēs - கேள்
An - ஆண்
Na - அந்த [சிறப்பு]
Hemtu - பெண்டு
Sēr - சேரன் [prince]
Ah - எருது
Ena - ஒடு
Fāt - பாடு
Hru - இன்று [day.]
Bāru - பார்ப்பான் [seer]
Ennem - இன்னும்
Pelu - வெல்லுதல் [to win]
Seru - வயல், செறு
Amalu - அமலை [word]
Sīru - சீர்த்தல் [exalted]
Bēl - வேள் [God]
Pahatu - பற்று [district]
Bītu - வீடு
Mūt - தாயார் [மூது]

## 5. Swahili

Mwane - மகன்
Kanji - கஞ்சி
Nōvu - கெடுதி
Kitanḍa - கட்டில்
Vema - வெம்மை [kindness]
Lelam - ஏலம் [auction]
Milumbe - விளம்பு
Mila - விழா
Mote - மொத்தம்
Ninyī - நீ
Nīl - நீலம்
Paku - பகுத்தல்
Pembe - கொம்பு
Penḍaku - விரும்புதல்
Pole - போல
*Tamu* - தமிழ் [sweetness]
Tulli - துள்ளு [distress]
Twahaku - தூக்கு
Una - உன்னுடைய
Vole - அயல்
Yāyā - ஆயா
Zari - சரி [gold thread]
Bahari - வாரி [see]
Banḍari - பந்தல்
Deni - தனிசு, கடன்
Ki - small

## 6. Pahlavi

A - அது, இது.
Jāḍ - சாடுதல்
Do - இரண்டு
De - தெய்வ சக்தி
Yasht - ஒற்றை
Esh - விழி
Keshte - இட்டி
Han - அல் - [another]
Khavna - கனை
Kho - சக்தி [power]
Vehram - வெற்றி
Ab - அப்பா
Khire - கிறி [confounded]
Adari - அதரி [below]
Aruḍ - அருள்
Mūṭ - இறத்தல்
Aed - எய்துதல்
Men - மன்னுதல்
Mena - சாகச்செய்தல்
Mes - மழு
Nā - நான்
Nekh - நெகிழ்தல்
Ra - பகல் [day]
Ru - உருள்தல்
Hebṭ - ஏடு

## 7. Persian & Arabic

Alaru - துன்பம்
Imbruz - இன்று
Ummi - ஊமை
*Ambāram* - களஞ்சியம்
Ḅāḅā - தந்தை
Benarṭ - பிணை [சிறுவர்]
Bū - மணம்
Buyut - வீடு
Bish - விழு [much]
Ṭāṇ - மனிதன்

Tanga - தங்கம் [a small coin]
Tira - இரா
Juṇd - தண்டு
Chār - ஞார், ஞால், நாலு
Chushṭi - சுட்டி [activity]
Hisiṇ - எயில்
Hilm - இழும் [mildness]
Hiṭah - இடம்
Khān - கோன்
Khasin - கனிச்சி
Khatbu - கடி [wedding]
Khall - காடி [vinegar]
Gulāt - நட்பு
Khūn - ஊன் [blood]
Dil - தில் [desire]
Tumbal - வால் [தும்பு]
Zābh - சாவு
Sāz - யாழ்
Sīr - சுவர்
Shir - சீர்
Tīb - மணம்
Arsh - அரசு
Urafa - உரவோன்
Irk - வேர்
Fuzal - பூசல் [idle talk]
Khasand - கசண்டு
Mohrabad - முறைப்பாடு
Mihi - மீ [greatness]
Nā - நம்முடைய
Nāj - நா [வாயுள்]
Nāz - ஞாழ் [agony]
Nāṇ - நான்
Nāiyar - ஞாயிறு
Niv - நீவு
Walid - வழுதி
Wiḍa - விடை [farewell]
Wāyil - காரணம்
Wāf - வருகை
Wail - வெல்வி
Waih - வா
Hazar - ஆயிரம்
Hawwa - அவர்
Huya - புயம்
Yād - யாது [memory]
Yarmand - அருமந்த
Yāz - ஆள்
Yazha - ஏழை
Yarogha - இறகுபேனா [reed for writing]

## 3. Amoy

Bek, Shi - வெட்சி [secret business]
Khansiu - எதிர்த்துக் காத்தல்
Khansiu - உரக்க ஒலித்தல்
Noachi - நொச்சி, தடுத்தல்
Ulin - [u - besiege ; lin சுழலுதல்]
Tumba - தரைமட்டமாக் குதல்]
Vanj - செலவு [see Stein Rajatarangini I. 45 [W. Punjab usage]
Bagā - வாகை (வடமொழி)
Kuyin - மேகம் [Kwhi மிக்ககறுப்பு] [in - புகை, நீராவி]
Mang - மங்கை [alliance]
Chuin - சுணங்கன்